இந்தியக் கல்வியின் இன்றைய பிரச்சினைகள்

முதல் பகுதி

பொதுப் பிரச்சினைகள்

PART I

CURRENT PROBLEMS IN INDIAN EDUCATION

GENERAL PROBLEMS

என். கே. பால்ராஜ்

தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—869

இந்தியக் கல்வியின் இன்றைய பிரச்சினைகள்

முதல் பகுதி

பொதுப் பிரச்சினைகள்

ஆசிரியர்
என். கே. பால்ராஜ், எம்.ஏ., எம்.எட்.,டி.ஏ.,
டி.ஜி.சி., டி.பி.எம்., ஏ.எம்.ஐ.எஸ்.டி.,
கல்வியியல் உதவிப்பேராசிரியர்,
ஆசிரியர் கல்லூரி,
சைதாப்பேட்டை,
சென்னை.

தமிழ் நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

First Edition, October—1980
Number of Copies—1000

T.N.T.B.S. (C.P.) No. 869

© Government of Tamilnadu

CURRENT PROBLEM IN INDIAN EDUCATION—1 GENERAL PROBLEMS

N. K. PAUL RAJ

Price Rs. 13-00

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by:
Caxton Press,
(C. Coomarasawmy Naidu & Sons.,)
62, Chinnathambi Street, Madras-1

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969 ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்துள்ள நூலாசிரியர்களின் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைக் காமராசர் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

அரசியல், இயற்பியல், உளவியல், கணிதவியல், கல்வியியல், சட்டவியல், தாவரவியல், புவியியல், புள்ளியியல், பொருளியல், பொறியியல், மருத்துவவியல், மெய்ப்பொருளியல், வணிகவியல், வரலாற்றியல், வானியல், விலங்கியல், வேதியியல் முதலிய பல துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான இந்தியக் கல்வியின் இன்றையப் பிரச்சினைகள்—I. பொதுப் பிரச்சினைகள் என்னும் இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 869 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 904 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு, கல்வி, சமூகநலஅமைச்சகத்தின், 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயிலவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக!

செ. அரங்கநாயகம்

பொருளடக்கம்

பக்கம்

1. கல்வி அமைப்பு மற்றும் கல்வி நோக்கங்கள் ... 1

கல்வி அமைப்பின் தோற்றம்—இந்திய மாநிலங்களில் காணப்படும் கல்வி அமைப்பு—பள்ளிக்கல்வி அமைப்பு—செகண்டரிக் கல்விக் குழு (1952—1953)—செகண்டரிக் கல்விக்குழுவின் பரிந்துரைப்படி கல்வி ஏணி—கொத்தாரிக் கல்விக் குழு (1964—1966)—கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகளின்படி கல்வி ஏணி—பள்ளி வகுப்புகளின் ஒத்தநிலை I—X (1965—1966)—கல்விநிலைகள்-பெயரிடும் முறைகள்—பல்வேறு கல்வி நிலைகளின் நோக்கங்களும் பண்புகளும் — டாக்டர் ஈஸ்வர்பாய் படேல் குழுவின் அறிக்கை (ஜூலை - நவம்பர், 1977) — டாக்டர் ஆதிசேசையா குழுவின் அறிக்கை (அக்டோபர், 1977—பிப்ரவரி, 1978)—சமுதாயப்பயனுள்ள ஆக்கப்பணிகள்—பள்ளிகள் இணைப்புத் திட்டம் (School Complex)—கல்லூரிகள் இணைப்புத் திட்டம் (College Complex).

2. சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புகள் ... 37

சமூக மதிப்புகள்—அறநெறி மதிப்புகள் — ஒழுக்க வளர்ச்சிக்கான பயிற்சி—ஆன்மிக மதிப்புகள்—சமயக் கல்வி — திரு. ஸ்ரீ பிரகாசா குழுவின் பரிந்துரைகள் — டாக்டர் இராதாகிருஷ்ணன் குழுவின் பரிந்துரைகள்—கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகள்.

3. சமமான கல்வி வாய்ப்புகள் ... 49

இருபகுதிகளில் ஏற்றத்தாழ்வுகள் — குடியாட்சியின் நலன் சமுதாய நீதியின் இன்றியமையாமை — கல்வி வாய்ப்புகள் கிட்டாமலிருத்தலுக்குப் பல காரணங்கள்—ஏற்றதாழ்வுகள் நீக்க கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகள்—எல்லாக் கல்வியும் இலவசக் கல்வி — இலவச உணவு — படிப்புதவிப்பணம் வழங்குதல் — பாடநூல்

வங்கிகள் (Book Bank)—எல்லோர்க்கும் தரமான கல்வி அளிக்க பொதுப்பள்ளிகள் (Common Schools) நிறுவுதல் — ஊனமுற்றோரின் கல்விக்காகத் தனிக்கவனம் — பெண் ஆண் கல்வி ஏற்றத்தாழ்வு — போக்குவரத்துச் சலுகைகள்—இலவச மருத்துவ வசதிகள்.

4. மொழிப் பிரச்சினை ... 55

மொழிப்பிரச்சினைக் காரணங்கள் — செகண்டரிக் கல்விக் குழுவின் கருத்துகள் — மத்தியக் கல்வி ஆலோசனைக் குழு—கொத்தாரிக் கல்விக் குழு—மத்திய அரசின் தீர்மானம் — ஐந்தாண்டுத் திட்டங்களும் மொழிகளின் வளர்ச்சியும்—தமிழ்நாட்டின் இருமொழித் திட்டம்—பயிற்றுமொழி—தமிழ்நாட்டில் பயிற்றுமொழி—மொழிகள் பயிலல்-அயல் நாடுகளில் காணப்படும் நிலை.

5. கல்வி ஏற்பாடு ... 67

கல்வி ஏற்பாடும் மாற்றங்களும்—கல்வி ஏற்பாட்டினை உருவாக்குதல்—அடிப்படைக் கோட்பாடுகளைத் தெளிவு படுத்துவதற்கான கருத்துகள் — முக்கிய கூறுகள் — வகைகள் — பள்ளிப்பாடங்களின் பயன்கள் — மாறுபடாக் கூறுகளும், மாறுபடும் கூறுகளும் — பல்வேறு நிலைகளில் பொதுவாக இடம்பெற வேண்டிய பாடங்களும் செயல்களும் — பல்வேறு பாடங்களைக் கற்பதால் எழக்கூடிய பயன்கள்—சுதந்திரத்திற்கு முன்பிருந்த கல்வியின் குறைபாடுகள்—உயர்செகண்டரிக் கல்வி நிலைக்கான கல்வி ஏற்பாடு — வேலை அனுபவங்கள் — தரத்தை உயர்த்தலும் சிறப்பாக்கலும்.

6. கல்விக் கருவிகள் ... 92

பாடநூல்கள் — பாடநூல்கள் வெளியீட்டுப் பொறுப்பினை அரசு மேற்கொள்ளல்—நூலகங்கள்—பள்ளி நூலகங்களினால் மாணவர்கள் பெறும் பயன்கள் — நூலகத்தின் நிருவாக அமைப்பு—நூலகங்கள்பற்றி பல்கலைக்கழகக் கல்விக்குழு—நூலகங்கள்பற்றி செகண்டரிக்கல்விக்குழு—நூலக அறிவுரைக் குழு — நூலகங்கள்பற்றிக் கொத்தாரிக் கல்விக்குழு (*1948—49*) — கேள்வி-காட்சித் துணைக் கருவிகள் — வரைபடத் துணைக் கருவிகள் — காட்சிப் பலகைகள்—முப்பரிமாணத் துணைக் கருவிகள்—புறத்

தெறி துணைக் கருவிகள்—கேள்வித் துணைக் கருவிகள் —செயல் துணைக் கருவிகள் — துணைக் கருவிகளின் குறைகளும் அவற்றைத் தீர்க்கும் வழிகளும் — கற்றலின் அனுபவத்தை விளக்கும் படம் — ஆய்வகம்.

7. ஆசிரியர்—மாணவர் தொடர்பு மற்றும் மாணாக்கர் அமைதியின்மை ... 127

ஆசிரியர்-மாணவர் தொடர்பு—முற்காலப் பள்ளியில், பண்டைய இந்தியக் கல்வியில், பண்டைய தமிழரது கல்வியில் பௌத்த கல்வி ஆகிய கல்வி முறைகளில் உள்ள தொடர்பு—தொடர்பில் விளையும் பயனுள்ள கல்வி — விரும்பத்தக்க முறையில் ஆசிரியர்-மாணவர் தொடர்பு — மாணவர் அமைதியின்மை-பின்னமைந்த காரணங்கள்—சுதந்திரமும் கட்டுப்பாடும்.

8. பெண்கள் கல்வி மற்றும் இருபால் கூட்டுக் கல்வி ... 149

பண்டைய இந்தியாவில் பெண்கள் கல்வி—டாக்டர் இராதாகிருஷ்ணன் (*1948—49*), டாக்டர் ஏ.எல். முதலியார் (*1952—53*), ஹன்சா மேத்தா (*1962*), பக்தவத்சலம் (*1963*), டாக்டர் கொத்தாரிக் கல்விக்குழு (*1964—1966*), டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ் (*1977*) ஆகிய இவர்களின் தனித்தனி கல்விக் குழுவின் பரிந்துரைகள் — உயர்கல்வி பெறப் பெண்களை ஊக்குவித்தல்—கல்வி ஏற்பாடு மற்றும் கற்பித்தல் —பயிற்றுமொழி—வாழ்க்கைத் தொழிலுக்கான கல்வி—வசதிகளைப் பெருக்க வேண்டிய தேவை — இருபால் கூட்டுக்கல்வி — பண்டை இந்தியாவில் கூட்டுக்கல்வி — இந்திய மாநிலங்களில்-வெளிநாடுகளில் கூட்டுக்கல்வி — உயர்நிலைப்பள்ளி—உயர்கல்வி நிலையில் கூட்டுக்கல்வி — கூட்டுக் கல்விக்குழு கருத்துகள் — கல்விக்கு ஆதரவான கருத்துகள்—செகண்டரிக் கல்விக் குழுவின் கருத்துகள்-கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துகள்—கூட்டுக் கல்வி வெற்றிபெறச் சில வழிகள்.

9. ஊனமுற்றோர் கல்வி ... 175

ஊனமுற்றோர் வகை — உடற்குறைபாடுள்ளோர்க்கான கல்வி — பார்வையற்றோர், செவிகேளாதவர், ஊமையர், கைகால் ஊனமுற்றோர், பேச்சுக்குறைபாடுடையோர் ஆகியோரின் கல்வி — தமிழ்நாட்டில் குறைபாடுள்ளோர்க்கான கல்வி — உளக் குறை

பாடுள்ளோர்க்கான கல்வி—சமூகக் குறைபாடுள்ளோர்க் கான கல்வி—கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துகள்.

10. பல்துறைப் பாடங்கள் மற்றும் பல்நோக்குப் பள்ளிகள்... 190

பல்துறைப் பாடங்கள், பல்நோக்கப் பள்ளிகள் தேவை—டாக்டர் ஏ..எல். முதலியார் கல்விக்குழு—விவசாயப் பல்தொழில் பள்ளிகள்—கொத்தாரிக் கல்விக் குழு—செகண்டரிக் கல்வி நிலைகளில் தொழிற்கல்வி—பகுதிநேரத் தொழிற்கல்வி — உயர்கல்வியில் தொழிற் கல்வி — அனைத்துலகக் கல்விக் குழுவின் (*1972*) கருத்துகள் — விவசாயக் கல்வி — பொறியில் தொழில் நுட்பக் கல்வி—வாணிபக் கல்வி—வழிகாட்டுதல் மற்றும் அறிவுரை பகர்தல்—முற்கால—இன்றைய பள்ளிகளில்—கல்வியில் வழிகாட்டல்—தொழில் தேர்வில் வழிகாட்டல் —வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதில் வழி காட்டல்.

11. மதிப்பீடு மற்றும் தேர்வுகள் ... 224

தேர்வுகளின் தேவையும் முக்கியத்துவமும்—தேர்வு களின் நோக்கங்கள்—மதிப்பீட்டின்அடிப்படைக் கோலங் கள் — மதிப்பீட்டின் பயன்கள் — சிறந்த மதிப்பீட்டு முறையின் பண்புகள் — ஏற்புடைமையின் வகைகள் — நம்பகத்தன்மை — மதிப்பீட்டில் எழும் நிர்வாகப் பிரச்சி னைகள் — மதிப்பீட்டுத் திட்டத்தினை உருவாக்கிச் செயற்படுத்துவதில் நான்கு முக்கிய கூறுகள் — மதிப் பெண்களும் தரச்சின்னங்களும் — பண்டைய தேர்வு களும் இன்றைய மதிப்பீட்டு முறைகளும் — கல்வியில் மதிப்பீட்டின் பரப்பு — பள்ளித் தேர்வுகளும் இன்றைய மதிப்பீட்டு முறைகளும் — தேர்வு முறையின் குறைபாடு கள் — தேர்வு முறையில் சீர்திருத்தங்கள் —புதுமுறைத் தேர்வுகள் — இப் புதுமுறையில் உள்ள சில குறைகள் — புதுமுறைத் தேர்வு வகைகள் — புதுமுறைச் சோதனை களைத் தயாரிப்பதற்கான திட்டமிடல்—பள்ளித்தேர்வில் கட்டுரைத்தேர்வு—பள்ளித்தேர்வுகளில் பழையமுறைச் சோதனைகளும் புதுமுறைச் சோதனைகளும்—மாணாக்கன் தேர்ச்சி பற்றிய பதிவேடுகள் — மதிப்பெண் பட்டியல் — தேர்ச்சி அறிக்கைகள் — திரள் பதிவுகள் — ஆச்சாரிய நரேந்திரதேவ், டாக்டர் இராதாகிருஷ்ணன், டாக்டர் முதலியார், டாக்டர் கொத்தாரி, பல்கலைக்கழக

மானியக்குழு ஆகியோரின் கல்விக்குழுக்கள் — அக, புறத் தேர்வு — வினாவங்கி — செமஸ்டர்முறை — சிறப்புக் கூறுகள்.

12. தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி, மற்றும் புதிய கல்வி அமைப்பு ... 268

தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சியும் செலவிடுதலும் — தொடக்கக்கல்வி—நண்பகல் உணவுத்திட்டம்—இலவசப் புத்தகங்கள் வழங்குதல்—உயர்நிலைப் பள்ளிக்கல்வி— அறிவியல் கல்வி — விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி — சாரண-சாரணியர் இயக்கம் — நடமாடும் மருத்துவ வண்டிகள் — படிப்பு உதவித் தொகைகள் — பள்ளிச்சீரமைப்பு இயக்கம் — ஆசிரியர்களை ஊக்கு வித்தல்—ஆசிரியர் இல்லங்கள் — முதியோர்கல்வி மற்றும் பள்ளி சாராக்கல்வி — நேரு இளைஞர் நிலையங்கள் — மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்குழு — தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் — கல்லூரிக்கல்வி— தன்னுரிமைக் கல்லூரிகள்—தொடர்கல்வி — படிப்புதவித் தொகை—தேசிய மாணவர் படை—தேசியப் பணித் திட்டம் — தொழில்நுட்பக் கல்வி—தமிழகத்தில் புதிய கல்வி அமைப்பு —

மேற்கோள் நூல்கள் ... 288

கலைச் சொற்கள் ... 291

1. கல்வி அமைப்பு மற்றும் கல்வி நோக்கங்கள்

நமது நாட்டின் எதிர்காலம் நம் பள்ளிகளின் வகுப்பறைகளில் நிர்ணயிக்கப்படுகிறது எனக் கூறுவது மிகையாகாது. சமூக மறுமலர்ச்சி, சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்குக் கல்வி ஓர் இன்றியமையாத கருவியாகும். நாட்டின் சமூக, பொருளாதார மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஒரு வலுமிக்க சாதனமாக அமைதல் வேண்டும். கல்வி பெறுதல் எல்லோருக்கும் ஓர் அடிப்படை உரிமையாகும். மானிட வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை கல்வி கற்றல் தொடர்ந்து நிகழ்கிறது. இன்றைய சமுதாயங்களின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக முறைப்பட்ட கல்வி கருதப்படுகிறது. இம் முறைப்பட்ட கல்வி ஒரு குழந்தையின் ஆறாவது வயதினில் தொடங்குகிறது. அதன்பின், குழந்தையின் கல்விக்காலம் பொதுவாக நாட்டின் கல்வி அமைப்பினைப் (Educational Structure) பொறுத்து அமைவதாகும். இக் கல்வி அமைப்பு நாட்டுக்கு நாடு வேறுபடும். சில சமயங்களில், இந்தியா போன்ற நாடுகளில் இக் கல்வி அமைப்பு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடக்கூடும். ஒவ்வொரு நாடும் தனது கல்வி அமைப்பினை உருவாக்கிக்கொள்கிறது. சோவியத் ருசியா குறிப்பிட்ட ஒரு கல்வி அமைப்பினை ஏற்றுக் கொண்டுள்ளது. இதனின்றும் வேறுபட்ட ஒரு கல்வி அமைப்பு அமெரிக்காவில் காணப்படுகிறது. நமது நாட்டில் காணப்படும் கல்வி அமைப்புப் பெரும்பாலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட கல்வி அமைப்பினைத் தொடர்ந்து பின்பற்றியதன் விளைவேயாகும். எனவே, நம் நாட்டின் கல்வி அமைப்புப் பெரும்பாலும் இங்கிலாந்தில் காணப்படும் கல்வி அமைப்பினைப் போன்றதேயாகும்.

கல்வி அமைப்பின் தோற்றம்

ஆங்கிலேயர் ஆட்சியில் மெக்காலேயின் (Macaulay, *1835*) குறிப்புகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட கல்வி அமைப்பு உட் அறிக்கையினால் (Wood's Despatch, 1854) முழு உருப்பெற்றது. உட் அறிக்கையில் கல்வி அமைப்பில் மூன்று

முக்கிய நிலைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டன. (1) தொடக்கக் கல்வி நிலை, (2) செகண்டரிக் கல்வி நிலை அல்லது உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலை, (3) பல்கலைக்கழகக் கல்வி நிலை.

உட் அறிக்கையினால் உருவாக்கப்பட்ட இக் கல்வி அமைப்பில் இதற்குப் பின்வந்த கல்விக் குழுக்கள் சிறு மாற்றங்களைப் புகுத்தின. ஆனால் அதில் எவ்வித அடிப்படை மாற்றத்தினையும் இவை செய்யவில்லை. எனவே, உட் அறிக்கையினால் உருவாக்கப்பட்ட கல்வி அமைப்புப் பெரும் மாற்றம் ஏதுமின்றி நம் நாட்டின் கல்வி அமைப்பில் தொடர்ந்து நிலைத்துக் காணப்படுகிறது.

முக்கிய இந்திய மாநிலங்களில் காணப்படும் கல்வி அமைப்பு

பல்வேறு இந்திய மாநிலங்களில் காணப்படும்
வேறுபட்ட கல்வி அமைப்புகள்

மாநிலம்	கல்விக் காலவரை - ஆண்டுகள்						
	தொடக்க நிலை	உயர் தொடக்க நிலை	செகண்டரி நிலை	பி.யு.சி.	உயர் செகண்டரி	பட்டப் படிப்பு	மொத்தம்
அஸ்ஸாம்	5	3	4	1	5	3	16
நாகாலாந்து	5	3	4	1	5	3	16
ஆந்திரப் பிரதேசம்	5	3	3	1	4	3	15
பீகார்	7	—	4	1	—	3	15
குஜராத்	7	—	4	1	—	3	15
மகாராஷ்டிரம்	7	—	4	1	—	3	15
ஜம்மு - காஷ்மீர்	5	3	2	1	3	3	14
பஞ்சாப்	5	3	2	1	3	3	14
அரியானா	5	3	2	1	3	3	14
இமாசலப் பிரதேசம்	5	3	2	1	3	3	14
இராஜஸ்தான்	5	3	2	1	3	3	14
மேற்கு வங்காளம்	5	3	2	1	3	3	14
கேரளம்	4	3	3	2	—	3	15
கருநாடகம்	4	3	3	1	4	3	14
மத்தியப் பிரதேசம்	5	3	—	—	3	3	14
ஒரிசா	5	2	4	1	—	3	15
தமிழ்நாடு	5	3	3	1	—	3	15
உத்தரப் பிரதேசம்	5	3	2	—	2	2	14

குறிப்பு: மொத்தக் கல்விக் காலவரை ஆண்டுகளைக் கணக்கிடும்பொழுது (i) செகண்டரி மற்றும் பி.யு.சி. அல்லது (ii) உயர் செகண்டரி எனப்படும் மேல் நிலைக் கல்வியின் காலவரையினைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

பள்ளிக் கல்வி அமைப்பு

10 ஆண்டுகள் : அரியானா, இமாசலப் பிரதேசம், இராஜஸ்தான், ஜம்மு-காஷ்மீர், கருநாடகம், கேரளம், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம்.

11 ஆண்டுகள்: ஆந்திரப் பிரதேசம், ஒரிசா, குஜராத், பீகார், மகாராஷ்டிரம், *தமிழ்நாடு.

*குறிப்பு: *1978-79* கல்வி ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிலும் *10* ஆண்டுகள் பள்ளிக் கல்வி, *2* ஆண்டுகள் மேல்நிலை அல்லது உயர் செகண்டரிக் கல்வி, *3* ஆண்டுகள் பல்கலைக்கழகக் கல்வி என்னும் அமைப்புப் புகுத்தப்பட்டுள்ளது.

12 ஆண்டுகள்: அஸ்ஸாம், நாகாலாந்து.

செகண்டரிக் கல்விக் குழு (1952—1953)

கல்வியின் அமைப்பு எவ்வாறு இருக்கவேண்டுமென்பது பற்றிய இக் குழுவின் கருத்துகள் பின்வருவனவாம்.

நமது குடியாட்சி சமுதாயத்தில் மக்கள் ஆக்கத் திறனுள்ள சிறந்த குடிமக்களாக வாழத் தேவைப்படும் அறிவும் ஒழுக்கமும் உள்ளோர்களாகவும், நம் நாட்டின் தொழில்வளம், வாழ்க்கை நிலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் பாடுபடக்கூடிய செயல் திறனும் தலைமை தாங்கும் ஆற்றலும் உள்ளோராகவும், நம் நாட்டுப் பண்பாட்டுக்கு ஏற்ற முறையில் சீரிய ஆளுமைப் பண்புகள் வளர்ச்சி பெற உதவும் இலக்கியம், நுண்கலைகள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டவர்களாகவும் வளர, நமது மாணாக்கர்களுக்குப் பயிற்சியளிப்பது இன்றைய கல்வியின் அடிப்படை நோக்கமாக அமையவேண்டும். இதற்கான கல்வி அமைப்புப் பின்வருமாறு இருத்தல்வேண்டும்.

நான்கு அல்லது ஐந்து ஆண்டுத் தொடக்கக் கல்விக்குப்பின் உயர்நிலைப் பள்ளிக்காலம் ஏழு ஆண்டுகளாக இருத்தல் வேண்டும். இவ்வேழு ஆண்டுகளில் முதல் மூன்று ஆண்டுகள் நடுநிலை அல்லது முதுநிலை ஆதாரக் கல்வி நிலை அல்லது ஜூனியர் உயர்நிலைப் பள்ளி எனப்படும். அடுத்த நான்கு ஆண்டுகள் ஹையர் செகண்டரி நிலை எனப்படும் உயர் செகண்டரி வகுப்புகளைக் கொண்டிருக்கும். இன்டர்மீடியட் படிப்பு

முறை நீக்கப்படும். இதன் முதல் ஓராண்டு உயர்நிலைப்பள்ளி நிலையில் சேர்க்கப்பட்டுத் தற்போதுள்ள மூன்று ஆண்டுகள் நான்கு ஆண்டுகள் ஆகும். இப் புதிய நிலை உயர் செகண்டரி நிலை எனப்படும். இன்டர்மீடியட் வகுப்பின் மற்றோர் ஆண்டு பட்டப்படிப்புக்கான தற்போதைய இரண்டு ஆண்டுகளுடன் சேர்க்கப்பட்டுப் பட்டப்படிப்பு மூன்று ஆண்டுகளாக மாற்றி யமைக்கப்படும். தற்போதுள்ள முறைப்படி உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவருவோர் ஓராண்டு புகுமுக வகுப்புக் கல்வி பெறுவர். இதனை முடித்த பின் இவர்கள் பட்டப்படிப்பில் சேரலாம். உயர் செகண்டரி பள்ளிக் கல்வியையோ, புகுமுக வகுப்பையோ முடித்தவர்கள் நேரடியாக உயர் தொழிற்கல்லூரி களில் (Professional Colleges) சேர்த்துக் கொள்ளப்படுவர்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் பல்நோக்குப் பள்ளி களும் (Multi-purpose Schools) இவற்றில் பல்துறைப் பாடங் களுக்கான (Diversified Courses) வாய்ப்புகளும் இருக்கும். பல்துறைப் பாடங்களில் தேர்ச்சி பெற்ற உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்கள் மேலும் சிறப்புப் பயிற்சி பெற, பல்தொழில் நுட்பப் பள்ளிகளிலும் (Polytechnics) தொழில்நுட்ப நிறுவனங் களிலும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். கிராமப் பள்ளிகளில் (Rural Schools) தோட்டக் கலை, குடிசைத் தொழில்கள், கால் நடை வளர்ப்புப் போன்றவற்றிற்கும், முக்கியமாக விவசாயத் திற்கும் முக்கிய இடம் அளிக்கவேண்டும்.

தொழில்நுட்பப் பள்ளிகள் பெருமளவில் தொடங்கப்பட வேண்டும். இவை தனிப்பட்டவையாகவோ, பல்நோக்குப் பள்ளிகளின் பகுதியாகவோ செயற்படலாம். பெரும் நகரங்களின் பல்நோக்குப் பள்ளிகளுக்கு உதவக்கூடிய மையத் தொழில்நுட்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படவேண்டும். தொழில்நுட்பப் பள்ளிகள் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் (Industrial areas) மிகுதி யாகத் தொடங்கப்படவேண்டும். மேலும் இத் தொழில்நிறுவனங் களின் முழு ஒத்துழைப்புடன் இவை செயற்படவேண்டும். தொழில் துறையினரும் வணிகத் துறையினரும் கல்வியாளர் களோடு இணைந்து தொழிற்கல்விக்கான பாடத்திட்டத்தினைத் தயாரித்தல்வேண்டும்.

பொதுப் பள்ளிகள் (Public Schools) தாம் அளித்துவரும் மேற்கத்திய முறைக் கல்விக்குப் பதில் தேசியப் பொதுக் கல்வி யினை அளிக்கவேண்டும். மத்திய அரசும் மாநில அரசும் திறமை மிகுந்த மாணாக்கர்களுக்குப் படிப்புதவித் தொகை அளித்தல் வேண்டும். ஊனமுற்ற குழந்தைகளுக்கு (Handicapped Children)

தனிப் பள்ளிகள் அமைத்தல்வேண்டும், ஆசிரியர் - மாணவர் தொடர்பினை வலுப்படுத்தும் பொருட்டு, தங்கிப்பயிலும் பள்ளிகள் (Residential Schools) தொடங்கப்படவேண்டும். பெண்கள் பள்ளிகள் அதிக எண்ணிக்கையில் நிறுவப்படவேண்டும். தேவைப்படுமாயின் கூட்டுக்கல்வி வசதிகள் அதிகரிக்கப்படலாம். பெண்கள் கல்வியில் மனையியல் போன்ற பாடங்கள் கற்றுத்தரப் படவேண்டும்.

செகண்டரிக் கல்விக் குழுவின் பரிந்துரைப்படி கல்வி ஏணி

வயது	வகுப்பு	படிப்பு - கல்வி நிலைகள்	படிப்பு - கல்வி நிலைகள்	வகுப்பு	பள்ளி வயது
21 20		பட்ட மேற்படிப்பு 2 ஆண்டுகள்	தொழிற்கல்வி 3-5 ஆண்டுகள்		16 15 14 13
19 18 17	III II I	பட்டப் படிப்பு 3 ஆண்டுகள்	முன் தொழிற் கல்வி 1ஆண்டு		12
16		புகுமுக வகுப்புக் கல்வி 1 ஆண்டு	உயர் செகண்டரிக் கல்வி & பல்நோக்குப் பள்ளிகள் 3 ஆண்டுகள்	XI	11
15 14	X IX	உயர்நிலைப் பள்ளிக்கல்வி 2 ஆண்டுகள்		X IX	10 9
13 12 11	VIII VII VI	நடுநிலைப் பள்ளிக் கல்வி 3 ஆண்டுகள்		VIII VII VI	8 7 6
10 9 8 7 6	V IV III II I	தொடக்கக் கல்வி 5 ஆண்டுகள்		V IV III II I	5 4 3 2 1
5 4 3		முன் தொடக்கக் கல்வி 3 ஆண்டுகள்			

கொத்தாரிக் கல்விக் குழு (1964—1966)

நமது நாட்டிற்கான தேசியக் கல்வி அமைப்பு ஒன்றினை உருவாக்குதலில் கருத்தில் கொள்ளப்படவேண்டிய கோட்பாடு

களைக் கொத்தாரிக் கல்விக் குழு தனது அறிக்கையில் தெளிவு படுத்தியுள்ளது.

நமது நாட்டு மக்களின் வாழ்க்கை முறை, தேவைகள், குறிக்கோள்கள் ஆகியவற்றுடன் கல்வி முறை இணைக்கப்பட வேண்டும். இன்றைய கருத்துகள், கண்டுபிடிப்புகள், செயல் முறைகள் போன்றவை நம் நாட்டு மக்களிடையே பரவி, நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் உதவும் வகையில் விஞ்ஞானக் கல்வியும், விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவும் பள்ளிக்கல்வித் திட்டத்தில் நடுவிடம் பெறுதல்வேண்டும். நாளடைவில் பல்கலைக்கழகக் கல்வியின் பல்வேறு துறைகளுக் கான பாடத்திட்டத்திலும் இவை இடம்பெறுதல் இன்றியமை யாததாகும். தேசியக் கல்விக்கான திட்டத்தில் செய்முறைப் பயிற்சி, வேலை அனுபவங்கள், பல்தொழிற் பாடங்கள், தொழிற் கல்வி, தொழில்நுட்பக் கல்வி ஆகியன வலியுறுத்தப்படவேண்டும். உயர்நிலைப் பள்ளிக் கல்வி தொழில் சார்புடையதாக அமைக்கப் படல் (Vocationalization) வேண்டும். கல்வித்தரம் மேலும் உயர வகை செய்யவேண்டும். கல்வி வசதிகள் பெருகி நாட்டு மக்கள் யாவருக்கும் இவை பரவலாகக் கிடைக்கும் வகையில் தேசியக் கல்வித் திட்டம் உருவாக்கப்படவேண்டும். நாட்டில் குறுகிய சாதி, சமய, மொழி, மாநில வேற்றுமைகளை அகற்றி நாட்டு மக்களது உள்ளங்களில் ஒற்றுமையுணர்ச்சியும் ஒருமைப்பாடும் வலுப்பெறும் வகையில் கல்வி அமையவேண்டும். இதற்கு உதவும் வகையில் சமூகப் பணிகள், நாட்டுப் பணிகள் ஆகியவை கல்வியில் வலியுறுத்தப்படவேண்டும்.

நமது நாட்டின் சிறப்புமிக்க எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக் கையைக் கல்வி மக்களிடையே தோற்றுவிக்கவேண்டும். நாட்டின் பல்வேறு பகுதிகளிடையே காணப்படக்கூடிய ஏற்றத்தாழ்வுகளை அகற்றலில் உதவுதல், பிரச்சினைகளை நாட்டின் முழுமையான பொதுநலனின் கோணத்தினின்றும் நாட்டுப் பற்றுடன் அணுகும் மனப்பான்மையை மக்களிடையே தோற்றுவித்தல், மக்களாட்சி நன்கு நடைபெற உதவுதல், நாட்டின் பிற பகுதியினரது வாழ்க்கைமுறை, பண்பாடு ஆகியவற்றின்மீது ஒவ்வொருவருக்கும் மதிப்பு எழ உதவுதல் ஆகியன யாவும் தேசியக் கல்வியின் நோக் கங்களுள் அடங்கும்.

நாட்டுப்பற்று உலகப்பற்றுக்கு முரணானதன்று. உலகப் பற்று எழுவதற்கான தொடக்கக் கட்டமாக இதனைக் கருதுதல் வேண்டும். நாட்டுப்பற்றின் எழுச்சிக்குக் கல்வி உதவுவதுடன் பிற நாடுகளைப் பற்றிய அறிவினையும், மானிட நாகரிக வளர்ச் சியின் வரலாற்றில் பல்வேறு நாடுகளது பங்கு பற்றிய அறி

வினையும் மக்களுக்கு அளித்து, அவர்களிடையே அனைத்துலக மனப்பான்மையையும் வளரச் செய்யவேண்டும்.

சமூகப் பிரச்சினைகளைச் சகிப்புத் தன்மையுடனும் விஞ்ஞான நோக்குடனும் ஆராயும் பண்பினை நம் மக்கள் கல்வியின் வழியே பெறவேண்டும். குடியாட்சி என்பதனை ஓர் அரசியல் முறையென மட்டும் கருதாது, அதனை ஒரு வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மனமுதிர்ச்சியை நாட்டு மக்களிடையே கல்வி வளர்க்க வேண்டும். கல்வி, நாட்டு மக்களிடையே புதுக் கருத்துகளையும் செயல்முறைகளையும் பரவச்செய்து நாட்டினை நவீனமாக்குதலில் துணைபுரிய வேண்டும் என எண்ணும்போது, பண்டைக் காலந்தொட்டே மனித வாழ்க்கையின் அடிப்படைக் குறிக்கோள்களாக இருந்து வந்துள்ள அறப் பண்புகள், ஆன்மிகப் பண்புகள், சமயப் பண்புகள் ஆகியன புறக்கணிக்கப்பட வேண்டுமெனக் கருத லாகாது. இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்ப உலகிலும் மன நிறைவும் முழுமையும் பெற்று வாழ்க்கை நடத்த நல்லொழுக்க ஆன்மிகப் பண்புகளின் வளர்ச்சி இன்றியமையாததாகும். எனவே,நாட்டின் தேசியக் கல்வித் திட்டத்தில் விஞ்ஞானக் கல்வி யுடன் இணைத்த வகையில் சிறந்த நடத்தைப் பண்புகளையும் அறநெறி, ஆன்மிகப் பண்புகளையும் மாணாக்கர்கள் பெற உதவக் கூடிய வாய்ப்புகளும் கட்டாயம் இருத்தல்வேண்டும் என்றும் கொத்தாரிக் கல்விக் குழு குறிப்பிட்டுள்ளது.

கல்வித் தரம் கல்வி அமைப்போடு இணைந்ததாகும். கல்வி அமைப்பில் காணப்படும் பல்வேறு நிலைகள், இவற்றுக்கிடையே காணப்படும் தொடர்பின் தன்மை, இவை ஒவ்வொன்றின் கால அளவு, ஆசிரியர்களது தரம், கல்வித் திட்டத்தின் தன்மை, கற்பித்தல் முறைகளின் இயல்பு, தேர்வு முறையின் அமைப்பு, கட்டடங்கள், கருவிகள் போன்றவற்றின் தன்மை ஆகியன யாவும் கல்வித்தரத்தினைப் பாதிப்பனவாகும். முக்கியமாக, நம் நாட்டைப் பொறுத்தவரை, நாம் பெற்றுள்ள வசதிகளை முழு அளவில் பயன்படுத்துவதன் வழியே கல்வியின் தர உயர்வுக்கு முயலுவது அவசியமானதாகும்.

நாட்டின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி அடிப்படையாகும். விஞ்ஞான அறிவு, தொழில்நுட்பத் திறன், மனித சக்தியினை நன்கு பயன்படுத்துதல் போன்றவற்றைப் பொறுத்தே இன்று ஒரு நாட்டின் முன்னேற்றம் அமையும். எனவே, கல்வி அமைப்பினை நன்கு உருவாக்கிக் கல்வித் தரத்தினை உயர்த்த மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளும் நாட்டின் ஒற்றுமை யினையும் வளர்ச்சியினையும் உறுதியாக்க உதவும். இத்தகைய

ஆக்கமுறைப்பட்ட, நெகிழ்ச்சியுள்ள கல்வி அமைப்பினை நன்கு ஆராய்ந்து உருவாக்குதல் இன்றியமையாததாகும். இந்தியக் கல்வி அமைப்பின் எல்லா நிலைகளையும் பரவலாக ஆராய்ந்து, கல்வி அமைப்பு எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதுபற்றிக் கொத்தாரிக் கல்விக் குழு குறிப்பிட்டுள்ளது. இக் கல்விக் குழு பின் வரும் கல்வி அமைப்பினைப் பரிந்துரை செய்துள்ளது.

1. முன் தொடக்கக் கல்விநிலை (Pre–Primary or Pre–School Stage)

பள்ளிக் கல்விக்கு ஆயத்தமாக இந்நிலை அமையும். இந்நிலை சுமார் 3 ஆண்டுகள் நீடிக்கலாம். எனினும் 5 முதல் 6 வயதுவரை ஓராண்டுக் காலமாகிலும் இருத்தல் விரும்பத்தக்கது. முன் தொடக்கக் கல்வி நிலை கட்டாயமில்லை. ஆனால் இதற்கான வாய்ப்புகளையும், நிதி உதவியையும் அரசு அளிக்கும்.

2. தொடக்கக் கல்விநிலை (Primary Education Stage)

6 வயதில் முறைப்பட்ட கல்வி தொடங்கும். இந்நிலை 7 அல்லது 8 ஆண்டுகள் நீடிக்கலாம். இந்நிலை இரு பிரிவுகளைக் கொண்டதாகும்.

கீழ்த் தொடக்கநிலை (Lower Primary): 4 அல்லது 5 ஆண்டு நீடிக்கும். இதில் 1 முதல் 4—5 வகுப்புகள் வரை காணப்படும்.

உயர் தொடக்கநிலை (Upper Primary): 2அல்லது 3ஆண்டுகள் நீடிக்கும். இதில் 5—6 வகுப்பு முதல் 7—8 வகுப்புகள் வரை காணப்படும். கீழ்த் தொடக்கக் கல்விநிலை 6 வயது முதல் 11 வயது வரையும், உயர் தொடக்கநிலை 11 வயது முதல் 14 வயது வரையும் பொதுவாக நீடிக்கும். கீழ்த்தொடக்கக் கல்வி உடனடியாக இலவசமாக்கப்படவேண்டும் என்றும்,உயர் தொடக்கநிலைக் கல்வி குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் இலவசமாக்கப்படவேண்டுமென்றும் கொத்தாரிக் கல்விக் குழு (1964–66) குறிப்பிட்டுள்ளது. தமிழ்நாடு இந்நிலையினை ஏற்கெனவே எட்டியுள்ளது.

3. உயர்நிலைப் பள்ளிக் கல்விநிலை அல்லது செகண்டரிக் கல்விநிலை (Secondary Education Stage)

இந்நிலை உயர்தொடக்கநிலைக்குப் பிறகு சுமார் 3 ஆண்டுகள் நீடிக்கும். தொழிற் கல்விக்கான (Professional Education) வாய்ப்புகள் பள்ளி மாணாக்கருள் 20%-க்கும், பிறர்க்கு 3 ஆண்டுகள் கீழ் செகண்டரிக் (Lower Secondary) கல்வியும் அளிக்கப்பட வேண்டும். கீழ் செகண்டரிக் கல்வி 2 ஆண்டுகள் அல்லது 3 ஆண்டுகள் பொதுக் கல்விப் படிப்பாகவோ, 1 முதல் 3 ஆண்டுகள் தொழிற் படிப்பாகவோ இருக்கலாம். 8, 9, 10 வகுப்புகள் அடங்கிய செகண்டரிக் கல்வியின் இறுதியில் முதல் புறப் பொதுத் தேர்வு (External Public Examination) நடத்தப்

படவேண்டும். தொடக்கக் கல்வி நிலை முதல் செகண்டரிக் கல்வி நிலை முடியும் வரை 10 ஆண்டுகள் (16 வயது வரை) பொதுக் கல்வி அளிக்கப்படவேண்டும்.

4. உயர் செகண்டரி அல்லது மேல் நிலைக் கல்விநிலை (Higher Secondary Stage)

பள்ளிக் கல்வியின் அடுத்த 2 ஆண்டுகளில் (16 வயது முதல் 18 வயது வரை) உயர் செகண்டரிக் (Higher Secondary) கல்வி அமையும். இக் கட்டத்தில் 2 ஆண்டுகள் பொதுக் கல்வியோ 1 முதல் 3 ஆண்டுகள் நீடிக்கும் தொழிற் படிப்போ இருக்கலாம். பள்ளிக் கல்வியின் உயர் கட்டமான உயர் செகண்டரி நிலையின் இரண்டு ஆண்டுகளில் உயர் செகண்டரிக் கல்வி 50% மாணாக்கர் களுக்கும், தொழிற் கல்வி 50% மாணாக்கர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். நாட்டில் உள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளையும் உயர் செகண்டரிப் பள்ளிகளாக உயர்த்த வேண்டியதில்லை. இவற்றுள் 25% பள்ளிகள் மட்டும் உயர் செகண்டரிப் பள்ளிகள் நிலைக்கு உயர்த்தப்படுதல் போதுமானது.

5. உயர் கல்விநிலை (Higher Education Stage)

இந்நிலையில் 18 வயது முதல் 21 வயது வரை நீடிக்கின்ற மூன்று ஆண்டுகள் பட்டப்படிப்பு அல்லது தொழிற்படிப்பு அதற்கு மேல் 21 வயது முதல் 23 வயது வரை நிகழும் உயர் ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவை அடங்கும்.

தொடக்கப்பள்ளி முதல் வகுப்பில் சேருவதற்கு 6 வயது குறைந்தபட்ச வயதாகும். உயர்நிலைப் பள்ளிகள் இருவகை களாக இருக்கும். 10 ஆண்டுகள் படிப்பைக்கொண்ட உயர்நிலைப் பள்ளிகளும் 11 அல்லது 12 ஆண்டுகள் படிப்புக்கான உயர் செகண்டரிப் பள்ளிகளும் (Higher Secondary Schools) இவ்விரு வகைகளாகும். பத்தாம் வகுப்புக்குப் பின்னர்க் குறிப்பிட்ட ஒரு பாடத்தினைத் தேர்ந்தெடுத்து மாணாக்கர்கள் அதில் ஆழ்ந்த சிறப்புப் பயிற்சி பெறுதலுக்கான வாய்ப்பு இருத்தல் வேண்டும். 10 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பின்னர் முதல் புறப்பொதுத் தேர்வு (External Public Examination) நடத்தப்பட வேண்டும்.

பல்கலைக்கழக உயர் கல்விக்கு முந்திய கல்வி நிலைகள் யாவும் ஒரு முழுமையாகக் கருதப்படவேண்டும். இம் முழுமையை முன் தொடக்க நிலை, கீழ்த்தொடக்க நிலை, உயர் தொடக்க நிலை, கீழ் செகண்டரி நிலை, உயர்செகண்டரி நிலை போன்ற பல் வேறு உட்பிரிவுகளாகப் பிரித்தாலும் இவற்றினிடையே தொடர்பு உள்ளது என்பது மறக்கப்படலாகாது. கீழ்த் தொடக்க நிலை 6

வயது முதல் 11 வயது வரையிலும் உயர் தொடக்கநிலை 11 வயது முதல் 14 வயது வரையிலும் அமையும். தொடக்க நிலைக்குப்பின் 20% மாணாக்கர்களுக்குத் தொழிற்கல்வி மூன்று ஆண்டுகளும், பிறர்க்குப் பொதுக் கல்வியும் அளிக்கப்படும். தொடக்கநிலை முதல் செகண்டரிப் பள்ளியின் இறுதியாண்டுப் பொதுத் தேர்வு வரை 10 ஆண்டுகள் பொதுக்கல்வி அளிப்பது நாடு முழுவதும் மேற்கொள்ளப்படவேண்டும்.

கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகளின்படி கல்வி ஏணி

<table>
<tr><td>23
22</td><td colspan="3">பட்ட மேற்படிப்பு
2 ஆண்டுகள்</td><td>17
16</td></tr>
<tr><td rowspan="2">21
20
19</td><td>தொழில்-உயர்
தொழில் நுட்பக்
கல்வி</td><td colspan="2">பட்டப் படிப்பு</td><td rowspan="2">15
14
13</td></tr>
<tr><td colspan="3">3 ஆண்டுகள்</td></tr>
<tr><td>18
17</td><td>உயர் தொழிற்
கல்வி 50%</td><td>உயர்
செகண்டரிக்
கல்வி
2 ஆண்டுகள்</td><td>பொதுக்
கல்வி 50%</td><td>12
11</td></tr>
<tr><td>16
15</td><td>தொழிற் கல்வி
20%</td><td>கீழ் செகண்டரிக்
கல்வி 2-3
ஆண்டுகள்</td><td>பொதுக் கல்வி
80%</td><td>10
9</td></tr>
<tr><td>14
13
12</td><td colspan="3">உயர் தொடக்கக் கல்வி
2—3 ஆண்டுகள்</td><td>8
7
6</td></tr>
<tr><td>11
10
9
8
7</td><td colspan="3">தொடக்கக் கல்வி
4—5 ஆண்டுகள்</td><td>5
4
3
2
1</td></tr>
<tr><td>6
5
4</td><td colspan="3">முன் தொடக்கக் கல்வி
1—3 ஆண்டுகள்</td><td></td></tr>
<tr><td>வயது</td><td colspan="3">படம்—1</td><td>பள்ளி
வயது</td></tr>
</table>



பள்ளி வகுப்புகளின் ஒத்தநிலை 1-X 1965–66
ஒத்த நிலைகீழ் செகண்டரி நிலை
உயர் தொடக்க நிலை
தொடக்க நிலை
பள்ளிக்கல்வி நிலை
தொடக்கம் முன் தொடக்க நிலை
15
14
13
12
11
10
9
8
7
6
வ
ய
து
X X XI X
IX IX X IX
VIII VIII IX VIII
VII VII VIII VII
VI VI VII VI
V V VI V
IV IV V IV
III III IV III
II II III II
I I II I
B I
A
பள்ளிக் கல்வி இறுதிப் பொதுத் தேர்வு மத்தியப்பிரதேசம் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் டெல்லி ஆகிய பிரதேசங்களில் இப் பொதுத் தேர்வு இல்லை
கொத்தாரிக் கல்விக் குழுவின் பிரேரணைப்படி
1. அஸ்ஸாம்
2. நாகாலாந்து
A & B குழவிக் கல்வி வகுப்புகள்
1. ஜம்மு-காஷ்மீர்
2. கேரளம்
3. மத்தியப்பிரதேசம்
4. கர்நாடகம்
5. பஞ்சாப்
6. இராஜஸ்தான்
7. உத்திரப் பிரதேசம்
8. மேற்கு வங்காளம்
9. அந்தமான், நிக்கோபார்
10. டெல்லி
11. இமாச்சலப் பிரதேசம்
12. திரிபுரா
1. ஆந்திரப் பிரதேசம்
2. பீகார்
3. குஜராத்
4. தமிழ்நாடு
5. மகாராஷ்டிரம்
6. ஒரிசா
7. புதுச்சேரி

படம்—2

கல்விநிலைகள்—பெயரிடும் முறைகள்

கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைப்படி	தற்போதுள்ள நிலைகள் பெயரிடும் முறைகள்
பள்ளிக் கல்வி	
1. முன் தொடக்கக் கல்வி	1. முன் தொடக்க நிலை 2. முன் ஆதாரக் கல்வி நிலை 3. கிண்டர் கார்ட்டன் 4. மாண்டிசோரி
2. தொடக்கக் கல்வி வகுப்புகள் I - VII அல்லது ,, I - VIII	
(அ) கீழ்த் தொடக்கக் கல்வி வகுப்புகள் I - IV அல்லது வகுப்புகள் I - V	1. தொடக்க நிலை 2. கீழ்த் தொடக்க நிலை 3. இளம் நிலை ஆதாரக் கல்வி 4. கீழ் ஆரம்ப நிலை
(ஆ) உயர் தொடக்கக் கல்வி வகுப்புகள் V - VII அல்லது ,, V - VIII	1. நடுநிலைப் பள்ளி 2. இளம் நிலை உயர்நிலைப் பள்ளி. 3. தொடக்க மேல் நிலை 4. முதுநிலை ஆதாரக் கல்வி 5. உயர் ஆரம்பக் கல்வி நிலை
3. செகண்டரிக் கல்வி வகுப்புகள் VIII - XII அல்லது ,, IX - XII	உயர்நிலைப் பள்ளி, உயர் செகண்டரிப் பள்ளி
(அ) கீழ் செகண்டரிக் கல்வி வகுப்புகள் VIII - X ,, IX - X	உயர்நிலைப் பள்ளி
(ஆ) உயர் செகண்டரிக் கல்வி (மேல் நிலைக் கல்வி) வகுப்புகள் XI - XII	XI வகுப்பு அல்லது பி. யு. சி. (உ-ம்.) இராஜஸ்தான் ஜூனியர் கல்லூரிகள் (உ-ம்.) கேரளம். இன்டர்மீடியட் வகுப்பு (உ-ம்.) உத்தரப் பிரதேசம்.

பல்வேறு கல்விநிலைகளின் நோக்கங்களும் பண்புகளும்

1. முன்தொடக்கக் கல்விநிலை

இக் கல்விநிலை முறையான பள்ளிக் கல்விக்கு ஆயத்தமாக அமைகிறது. இதன் நோக்கம் குழந்தைகளிடம் நற்பழக்கங்களைத் தோற்றுவித்து, நல்ல உடலும் உள்ளமும் வளர உதவி, எதிர்காலக் கல்விக்கும், பயனுள்ள வாழ்க்கைக்கும் அவர்களை ஆயத்தப்படுத்தலாகும். தன்னம்பிக்கையை வளர்த்தல், சமுதாய வாழ்க்கையில் தனது பங்கினையும், உரிமைகளையும் உணர்த்தல், அழகுணர்ச்சி பெறுதல் உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை உணர்த்தல், அடிப்படைத் திறன்களைத் தோற்றுவித்தல், சூழ்நிலை பற்றி ஆராய்ந்து அறிவு பெற அவர்களது ஆராய்வூக்கத்தைத் தூண்டுதல் போன்றன இந்நிலையில் வலியுறுத்தப்படவேண்டும்.

முன் தொடக்கக் கல்வி நிலை பற்றிச் சார்ஜென்ட் அறிக்கையிலேயே (1944) குறிப்பிடப்பட்டிருப்பினும், இந் நிலைக்கான கல்வி நம் நாட்டில் இன்னமும் வளர்ச்சியற்ற நிலையிலேயே பெரிதும் காணப்படுகிறது. இந் நிலைமை மாற்றப்பட வேண்டுமென்று கொத்தாரிக் கல்விக் குழு வலியுறுத்தியுள்ளது. மாநில அரசுகள் இந் நிலைக் குழவிக் கல்விக்கு ஏற்பாடுகளைச் செய்வதன் முக்கியத்துவம் பற்றியும் இக்குழு வலியுறுத்தியுள்ளது. 1985-86 ஆண்டுக்குள் 3 வயது முதல் 5 வயது குழந்தைகளில் 5%-க்காவது இத்தகைய கல்வி வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், இதே காலத்துக்குள் 5 முதல் 6 வயது குழந்தைகளில் 50%-க்கு இக் கல்வி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் இக் குழு கூறியுள்ளது. இதற்கு மாநில அரசுகள் போதிய அளவு மானியம் வழங்கலாம். இதன் வளர்ச்சிக்குத் தனியார் நிறுவனங்களது உதவி கோரப்படலாம்.

2. தொடக்கக் கல்விநிலை

பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்கும் அடிப்படையைத் தொடக்கக் கல்வி நிலைநாட்ட வேண்டும். இந்திய அரசியல் சாசனம் 14 வயது வரை எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வியை அரசு அளிக்க வேண்டுமென்று கூறியுள்ளது. இதனை 1960ஆம் ஆண்டிற்குள் சாதிக்க வேண்டுமென்றும் நமது அரசியல் சாசனம் கூறியுள்ளது. ஆனால், பல்வேறு பொருளாதார - சமூகக் காரணங்களின் விளைவாக இதனை நம்மால்

அடைய இயலவில்லை. எனினும் இக்குறிக்கோளைக் கட்டாயம் நாம் அடைந்தே தீரவேண்டும். இதற்கான திட்டங்களை மாவட்ட நிலையில் மாநில அரசுகள் உருவாக்கிச் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கொத்தாரிக் கல்விக் குழு வலியுறுத்தியுள்ளது. இக்கல்வி நிலைக்கான எல்லாக் குழந்தைகளும் கட்டாயமாகத் தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கப்படவேண்டும். இவர்கள் எல்லோரையும் இப் பள்ளிகளில் சேர்த்தபின் பள்ளிக் கல்வி முடிவடைவதற்குமுன் பள்ளியை விட்டு இவர்கள் நீங்கி விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இந் நிலையில் அதிக அளவில் காணப்படும் வீணாதல் (wastage) தவிர்க்கப்பட்டுப் பள்ளிகளில் சேரும் எல்லாக் குழந்தைகளும் 5ஆம் வகுப்பு வரையிலேனும் தொடர்ந்து கல்வி கற்கவும், இவர்களுள் 80% குழந்தைகள் 7ஆம் வகுப்பு வரையிலேனும் தொடர்ந்து கல்வி பயிலவும் ஏற்பாடுகள் செய்யப்படுவது மிகவும் இன்றியமையாததாகும். இந் நிலையில் பெண்களது கல்வியில் அதிகக் கவனம் செலுத்தப்படுவது அவசியம். தொடக்கநிலைக் கல்வி ஏற்பாட்டில் தாய்மொழி, கணிதம், சமூகப்பாடம், இயற்கைப்பாடம், உடல் நலக் கல்வி ஆகியன இடம்பெறவேண்டும். உடற்பயிற்சியில் கூட்டு விளையாட்டுகளும் திறந்தவெளிப் பயிற்சிகளும் இடம் பெற வேண்டும். பொதுவாக, மாணவர்களது தாய்மொழி மாநில மொழியினின்றும் வேறுபட்டிருக்குமானால் ஒரு வகுப்பில் சிறுபான்மைக் குழந்தைகள் 10 பிள்ளைகளோ, பள்ளியில் 40 பிள்ளைகளோ இருப்பின் இவர்களுக்கு இவர்களது தாய்மொழியில் முதல் வகுப்பிலிருந்தே பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப் படவேண்டும். இத்தகையோர் 3ஆவது வகுப்பில் வட்டார அல்லது மாநில மொழியினையும் கற்கத் தொடங்குவர். முதல் இரண்டு வகுப்புகளுக்கு ஒன்றாகவும், மூன்று நான்கு வகுப்புகளுக்கு ஒன்றாகவும் பள்ளித் தேர்வு நடத்துவது போதுமானதாகும். இந் நிலையிலிருந்தே வேலை அனுபவங்கள் கல்வியில் இடம்பெற வேண்டும். வகுப்பறை, பள்ளி ஆகியவற்றைத் துப்புரவாக வைத்துக்கொள்ளல், எளிய சமூக சேவைகள் ஆகியன இடம்பெறவேண்டும். காகித வேலை, களிமண் வேலை, நூல் நூற்றல் போன்றன இந் நிலைக்கான வேலை அனுபவங்களாகும். இத்தகையவை கல்வியின் எல்லா நிலைகளிலும் இன்றியமையாதவையாதலின் ஆதாரக் கல்வி முறை எனத் தனிப்பட்ட ஒரு முறை இருக்கத் தேவையில்லை. ஆக்க வேலைகள், சூழ்நிலைக்கேற்ற செய்தொழில், பள்ளி-சமுதாய இணைப்புப் போன்ற ஆதாரக் கல்வியின் சிறப்புப் பண்புகள் யாவும் கல்வி அமைப்பு முழுவதுமே பரவிக் காணப்பட வேண்டும்.

3. உயர் தொடக்கக் கல்விநிலை

மாணாக்கரது உடல், உளநலம் அவர்களது நல்லொழுக்க வளர்ச்சி, ஆன்மிக வளர்ச்சி ஆக்கத்திறன் வளர்ச்சி போன்றவை இக் கட்டத்தில் வலியுறுத்தப்படவேண்டும். உளவியல் அடிப் படையிலான உடல் வளர்ச்சி, இயல்பூக்கங்கள் மற்றும் மன வெழுச்சிகளைத் தூய்மைப்படுத்தல், மாணாக்கனின் திறமை, விருப்பம், நாட்டம், தேவை ஆகியவற்றிற்கேற்பக் கல்விச் செயல்களை அளித்தல், நாட்டுப்பற்று, நாட்டின் மரபு மற்றும் பண்பாடு ஆகியவற்றின்மேல் பற்று போன்றவற்றினை ஏற்படுத்தல்,நற்குடிமகனின் பண்புகளையும், சேவை மனப்பான் மையையும் வளர்த்தல், உலகப்பற்று,உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்தல், விஞ்ஞான மனப்பான்மையை வளர்த்தல், உடலு ழைப்பின் உயர்வினை உணரச் செய்தல், பயனுள்ள செயல் திட்டங்கள், வேலை அனுபவம் ஆகியவற்றின் மூலம் மாணாக்கர்களை எதிர்கால வாழ்க்கைக்கு ஆயத்தமாக்குதல் போன்றவை யாவும் இந்நிலையில் கல்வியின் நோக்கங்களாகும்.

இந்நிலைக்கான கல்வி ஏற்பாடு மேலும் சிறிது விரிவாக்கப் படும். தாய்மொழியோடு ஆங்கிலம் இந்நிலையில் கற்பிக்கப்படும். விருப்பப்பட்டால் மூன்றாவது ஒரு மொழியினையும் இந்நிலையில் கற்பிக்கலாம். கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல் ஆகிய வற்றின் பல்வேறு தனிப்பிரிவுகள் தனிப்பாடங்களாகக் கற்பிக்கப் படும். ஒழுக்க அறநெறிக்கல்வி, கலை-கைப்பணி ஆகியன இந் நிலையில் இடம்பெறும். சமுதாய வளர்ச்சி, தோட்ட வேலை, நெய்தல், பிரம்புவேலை போன்றன வேலை அனுபவச் செயல் களாக அமையும். திறன்மிக்கோர்க்குத் தர உயர்வுள்ள பாடத் திட்டம் அளிக்கப்படலாம். சமூக - பொருளாதாரக் காரணங் களினால் பொதுக் கல்வியில் தொடர்ந்து ஈடுபட இயலாதவர்க்கு பகுதி நேரத் தொழில் பயிற்சி அளிக்கப்படலாம். உயர் தொடக்கக் கல்வி நிலையிலும் அகத்தேர்வு மட்டுமே காணப்படும். எழுத்துத் தேர்வுடன் வாய்மொழித் தேர்வும் அளிக்கப்படலாம். மாணவர் களுக்கான திரள் பதிவுகள் (Cumulative Records) வைக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், கல்வியின் தரத்தை ஆராய உயர்தொடக்கக் கல்வியின் இறுதி ஆண்டில் மாவட்ட நிலைப் பொதுத் தேர்வு வைக்கலாம். தொடக்கப் பள்ளிகள், பிள்ளைகள் வீடுகளிலிருந்து எளிதில் வந்து போகும்படி அண்மையில் இருக்க வேண்டும். கட்டாயத் தொடக்கக் கல்வித்திட்டம் நமது சமுதா யத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதற்கு முதற் படியாக அமையும். இதனடிப்படையில் சம உரிமைச் சமுதாயம் நம் நாட்டில் ஏற்பட முடியும்.

4. உயர்நிலைப் பள்ளிக் கல்விநிலை அல்லது செகண்டரிக் கல்விநிலை

நம் நாட்டுக் கல்வி அமைப்பில் உயர்நிலைப்பள்ளிக் கல்வி மிகவும் வலுக்குறைந்த பகுதியாக உள்ளதென்று டாக்டர் இராதா கிருஷ்ணன் கல்விக் குழு குறிப்பிட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் நோக்கங்களும், இலக்குகளும் குமரப்பருவத்தினரின் கவர்ச்சிகள், தேவைகள் ஆகியவற்றிற்கேற்பவும் சமூகத்தின் தேவைகளோடு இணைந்த வகையிலும் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். உயர்நிலைப் பள்ளிக் கல்வி எனப்படுவது கல்லூரிக் கல்விக்கு மாணாக்கர்களை ஆயத்தப்படுத்தும் நிலை மட்டுமன்று. தொடக்கக் கல்விக்கும் உயர் கல்விக்குமிடையே காணப்படும் பாலமாக மட்டும் இதனை நாம் கருதுவதும் தவறு. குமரப்பருவத்தினர்க்காக உருவாக்கப்படும் கல்வி நிலையாக இதனை நாம் கருதுதல் வேண்டும். இந்நிலைக்கான கல்வி அமைப்பு முழுமை பெற்று விளங்குவதுடன், மனித வாழ்க்கையின் பல்வேறு முக்கியக் கூறுகளில் ஆர்வம், அவற்றைப்பற்றிய உணர்வு, அவற்றில் பங்குகொள்ளத் தேவைப்படும் செய்திறன்கள் மனித வாழ்க்கையின் சிறப்புமிக்க குறிக்கோள்களின் மதிப்பினையும் நயத்தினையும் பாராட்டும் திறன் போன்றவற்றைக் குமரப்பருவத்தோரிடம் உருவாக்க உதவும் கல்வியாக உயர்நிலைப் பள்ளிக்கல்வி விளங்கவேண்டும். கல்லூரிக் கல்வி பெற வாய்ப்பற்றோர், விருப்பமற்றோர், தகுதியற்றோர் ஆகிய யாவருக்கும் உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலை முழுமை பெற்ற கல்வி நிலையாக அமைதல் வேண்டும்.

நமது இந்தியக் குடியரசின் குறிக்கோள்களையும், தேவைகளையும் நிறைவுசெய்யத் தேவைப்படும் குடிமைப் பண்புகளை மாணாக்கர்களிடம் வளர்க்கவேண்டும். இதற்கென,

1. மக்களாட்சியின் ஒரு நற்குடிமகன் எந்தெந்தப் பொறுப்புக்களை ஏற்க வேண்டியிருக்குமோ, அதற்கேற்றவாறு மாணாக்கரிடம் நற்பண்புகளையும், நற்பழக்கங்களையும், மனப்பான்மைகளையும், நன்னடத்தையையும் வளர்க்கவேண்டும்.

2. பிரிவு மனப்பான்மை, குறுகிய முறையிலான நாட்டுப் பற்று போன்றவைகளை எதிர்த்துப் போரிடத் தேவைப்படும் நெஞ்சுரத்தை வளர்க்கவேண்டும்.

3. விருப்பு வெறுப்பற்ற புறவயச் சிந்தனைக்குத் தேவைப்படும் அறிவியல் நோக்கு, நேர்மையான சிந்தனை, தெளிந்த சிந்தனை போன்றவற்றை வளர்க்கவேண்டும்.

4. பேச்சு, எழுத்து, வெளியீடு போன்றவைகளில் தெளிந்த தன்மை ஏற்படப் பயிற்சி அளிக்க வேண்டும்.

5. கூட்டுறவு மனப்பான்மை, சமூக உணர்வு, சகிப்புத் தன்மை, கட்டுப்பாடு போன்ற அரும் பண்புகளை மாணாக்கர் களிடம் வளர்க்க வேண்டும்.

6. சுயமாகச் சிந்தித்தல், தான் தொடங்காற்றல் (Initiative) அறிவியற் சிந்தனை, தற்கட்டுப்பாடு, தலைமைப் பொறுப் பேற்றல் போன்ற பண்புகளை மாணாக்கர்களிடம் வளர்க்க வேண்டும்.

7. உண்மையான நாட்டுப்பற்றை அவர்களிடம் வளர்க்க வேண்டும்.

8. வாழ்க்கை தொடர்பான தொழில் திறனை மாணாக்கர் களிடம் வளர்க்க வேண்டும்.

9. சமுதாய மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத் தவும் நவீனமாக்கவும் சமூக அறநெறி ஆன்மிக மதிப்புக்களை மாணாக்கர்களிடம் வளர்க்க வேண்டும்.

10. தேசிய உணர்வை (National Consciousness) மாணாக்கர் களிடம் ஏற்படுத்துவது தேவைப்படுவதாகும். மொழி, இலக்கியம் சமயம், தத்துவம், இந்திய வரலாறு, நுண்கலைகள், ஓவியம், சிற்பம், இசை, நாட்டியம், நாடகம் போன்றவற்றின் மூலமாக இவ்வுணர்வை மாணாக்கர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் நோக்கம்: குடியாட்சிப் பண்புகள் நிறைந்த நாட்டின் வருங்கால மக்களை உருவாக்கு தலும், உயர் கல்விக்கோ அல்லது தொழில் நுட்பக் கல்விக்கோ அல்லது ஒரு தொழிலுக்கோ செல்லக்கூடிய தகுதியை மாணாக்கர் களிடையே தோற்றுவித்தலும் ஆகும். இக் கட்டத்தில் எல்லோர்க்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்படுவது மிகவும் இன்றி யமையாததாகும். மேலும், முக்கியமாகப் பெண்களுக்கான கல்வி வாய்ப்புகளில் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இன்று சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மக்கட் பிரிவினரிடையே உள்ள குழந்தைகளுக்கு உயர்நிலைப் பள்ளிக் கல்வி அளிப்பது இன்றியமையாததாகும். உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் விரி வாக்கம் திட்டமிடப்பட்ட முறையில் செயற்படுத்தப்படவேண்டும். செகண்டரிப் பள்ளிகள் சிக்கனமானவையாகவும், திறமையுடன் செயற்படுவனவாகவும் அமைக்கப்பட வேண்டும். உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கட்டத்தின் கீழ்நிலையில் 20% மாணாக்கர்களுக்கும்

உயர்நிலையில் 50% மாணாக்கர்களுக்கும் தொழில் சார்ந்த கல்வி அளிக்கப்படவேண்டும். நம் நாட்டின் வளர்ச்சிக்குத் தேவைப் படக் கூடிய பயிற்சி பெற்ற மனித சக்தியின் அடிப்படையில் உயர் நிலைப் பள்ளிக் கல்வியின் வளர்ச்சிக்கு நன்கு திட்டமிடவேண்டும். தமிழ் நாட்டினைப் பொறுத்தவரை பதினோராம் வகுப்பு வரை யிலான உயர்நிலைப் பள்ளிக் கல்வி முழுமையாக இலவசமாக்கப் பட்டுள்ளது. வேறு சில மாநிலங்களும் தமிழ் நாட்டின் இச் சீரிய எடுத்துக்காட்டினை இன்று பின்பற்ற முற்பட்டுள்ளன.

நம் நாட்டில் தொடக்கக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது போன்று உயர்நிலைப் பள்ளிக் கல்வி கட்டாயமாக்கப்படவில்லை. எல்லோர்க்கும் கட்டாய உயர்நிலைப் பள்ளிக் கல்வி என்னும் கோட்பாட்டினை நாடு முழுவதிலும் செயற்படுத்த முயன்றால் சில சிக்கல்கள் எழக்கூடும். இதே சமயம் உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் வளர்ச்சியினைத் தடுப்பதும் தவறாகும். இந்நிலை மையைச் சமாளிக்கக் கொத்தாரிக் கல்விக்குழு (1964-66) சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. தொடக்கக் கல்வி நிலைக்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிக் கல்விநிலை, உயர் கல்விநிலை ஆகியவற்றில் மாணாக்கர்களைச் சேர்க்கும்போது நான்கு நியதிகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதனை இக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. பொதுமக்களிடையே உயர்நிலைக் கல்விக்குக் காணப்படும் ஆர்வம், மாணாக்கரின் பலதிறப்பட்ட இயற்கைத் திறன்களுக்கு ஏற்ப வாய்ப்புகள் அமைக்கப்படுதலின் இன்றியமையாமை, இந்நிலைக் கல்வியினைத் தரமுள்ள முறை யில் மாணாக்கர்களுக்கு அளிக்கத் தேவைபடும் வசதிகளை சமுதாயம் பெற்றிருத்தல், பல்வேறு தொழில்கள், உயர்தொழில்கள் ஆகியவற்றின் தேவை ஆகியன இந்நியதிகளாகும்.

புதிதாக நிறுவப்படும் உயர்நிலைப் பள்ளிகள் தரமுள்ளனவாக அமைய வேண்டுமென்றும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுச் செயற்பட்டு வரும் உயர்நிலைப் பள்ளிகளின் தரம் மேலும் உயர்த் தப்பட வேண்டுமென்றும் கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட் டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையின் கீழ்வகுப்புகளில், தொடக்கப் பள்ளியில் கற்ற பாடங்களை மாணாக்கர்கள் மேலும் ஆழமாகவும் பரவலாகவும் பயில வேண்டும். மூன்று மொழிகள், கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல் போன்றனவும், உடற் பயிற்சி, கலை,அறநெறிப் பயிற்சி ஆகியனவும் கட்டாயமாக இடம் பெறும். மரவேலை, உலோகவேலை, அச்சுத் தொழில், நூற்பு,

நெய்தல், தையல் வேலைகள், தோட்ட வேலைகள் போன்றன வேலை அனுபவங்களாக அமையும். இவற்றிற்கான தொழிற் கூடங்கள் (workshops) பள்ளிகளில் இருத்தல் வேண்டும். பள்ளிக்கு வெளியேயுள்ள தொழிற்கூடங்கள், விவசாயப் பண்ணைகள் ஆகியவற்றில் இந்நிலை மாணாக்கர்கள் பயிற்சியும், அனுபவமும் பெறுவது விரும்பத்தக்கதாகும். உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் 20% மாணாக்கர்களுக்குப் பொதுக் கல்விக்குப் பதில் தொழிற் பயிற்சி அளிக்க வேண்டும். இதனைத் தொழிற் பயிற்சிப் பள்ளிகளிலும், தொழிற் பள்ளிகளிலும் (Industrial Training Institutes and Technical Schools) அளிக்கலாம். மேலும் சமூக வளர்ச்சிப் பணிகளில் ஒவ்வொரு மாணாக்கனும் ஆண்டுக்குப் பத்து நாட்களேனும் அல்லது இக்கல்விநிலை முழுவதிலும் தொடர்ச்சி யாக முப்பது நாட்களேனும் கட்டாயமாக ஈடுபடல் வேண்டும்.

டாக்டர் ஏ. எல் முதலியார் அவர்களது தலைமையில் செயற் பட்ட செகண்டரிக் கல்விக் குழு (1952 - 53) உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் முக்கிய நோக்கங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப் பிட்டுள்ளது.

1. குடியாட்சிக்கு அடிப்படையாகக் கருதப்படும் நேர் சிந்தனைத் திறன், புதுக் கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்த்து அவற்றுள் உண்மையானவற்றை ஏற்கும் மனப்பான்மை, வெறி யுணர்ச்சியும், சார்பெண்ணங்களுமின்றிச் செயற்படல், பிரச் சினைகளை அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்து மதிப்பிடும் திறன், சகிப்புத்தன்மை, தெளிவான சிந்தனைக்குதவும் தெளிந்த பேச்சு, எழுத்துத் திறன், ஒத்துழைப்பு மனப்பான்மை போன்ற நற்பண்புகளை மாணாக்கர்களிடையே உருவாக்கல் வேண்டும். கல்வி மாணாக்கர்களுக்குக் குடியாட்சி சமுதாயத்தில் வாழப் பயிற்சியளிக்க வேண்டும்.

2. மாணாக்கர்கள் நாட்டுப்பற்றுள்ளோராக வளரப் பயிற்சி யளித்தல் வேண்டும். ஆனால் இந் நாட்டுப்பற்று குறுகிய தன்மை யதாக அமையாமல் உலகப் பற்றுக்கு முதற்படியாக அமைதல் வேண்டும்.

3. மாணாக்கர்களின் பல திறப்பட்ட நாட்டங்கள், கவர்ச்சிகள் போன்றவற்றின் வளர்ச்சிக்கு உதவுவதாக உயர்நிலைப் பள்ளிக் கல்வி செயற்படவேண்டும். உடலுழைப்பின் தேவை, அதன் மேன்மை ஆகியவை பற்றிய உணர்வு எழல், தொழில் திறன் வளர்ச்சி, தொழில் துறைப் பயிற்சி ஆகியனவும் இந் நிலைக்கான கல்வி அமைப்பில் இடம் பெற வேண்டும்.

4. மாணாக்கர்களது ஆளுமையின் இசைந்த வளர்ச்சிக்கு உதவக் கூடிய இசை, கைத்தொழில், ஓவியம், விருப்பச் செயல்கள் போன்றனவும் கல்வி அமைப்பில் காணப்படவேண்டும்.

5. தலைமைப் பண்புகளின் வளர்ச்சிக்கும், பொறுப்புகளை ஏற்றுச் செயற்படுதல் பயிற்சிக்கும் போதிய வாய்ப்புகள் உயர்நிலைப் பள்ளிகளிலேயே மாணாக்கர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். தாம் பிற்காலத்தில் வாழ்க்கை நடத்தப்போகும் சமுதாயங்களின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் தலைமையினை இம் மாணவர்களுக்கு அளிக்கவேண்டும். அதற்கு அவர்களுக்குக் கல்வி உதவவேண்டும்.

டாக்டர் டி. எஸ். கொத்தாரி அவர்களது தலைமையில் செயற்பட்ட கல்விக் குழுவும் (1964 - 66) மேற்குறிப்பிட்ட நோக்கங்களை ஏற்றுள்ளது. இவற்றை மீண்டும் வலியுறுத்தியதுடன் மேலும் சில முக்கிய நோக்கங்களை இக் குழு எடுத்துக் கூறியுள்ளது.

1. விஞ்ஞானக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்.

2. வேலை அனுபவங்களைப் பெறுதல்.

3. செகண்டரிக் கல்வியை மாணாக்கர்களது தொழில் திறன் வளர்ச்சிக்குதவும் வகையில் மாற்றியமைத்தல்.

4. மாணாக்கர்களிடையே மனவெழுச்சி ஒருமைப்பாட்டினை உருவாக்கல்.

5. புதிய அறிவினையும், செய்முறைகளையும் கற்க மாணாக்கர்களுக்கு உதவுதல்.

6. மாணாக்கர்களிடையே சமூக, அறநெறி, ஆன்மிகப் பண்புகளை வளர்த்தல்.

5. உயர் செகண்டரிக் (மேல்நிலை) கல்வி நிலை

செகண்டரிக் கல்வி நிலையில் குறிப்பிட்ட நோக்கங்கள் இந்நிலையில் மேலும் தொடர்ந்து வலியுறுத்தப்பட வேண்டும். பொதுக் கல்வியைப் பொறுத்தவரை அறிவியலிலும் மனிதவியலிலும் மாணாக்கர்கள் பெற்றுள்ள அறிவினை உறுதிப்படுத்துவதாக இக் கல்விநிலை அமையும். இந்நிலையில் இரு மொழிகளும், மூன்று விருப்பப் பாடங்களும் பயிலப்படும். மொத்தப் பள்ளிக் காலத்தில் பாதி விருப்பப் பாடங்களுக்கும், கால் பகுதி மொழிப் பாடங்களுக்கும், கால் பகுதி உடற்பயிற்சி போன்றவற்றுக்கும் செலவிடப்படும். முன்பு உயர்நிலைப் பள்ளிகளில் காணப்பட்ட பல்துறைப் பாடங்கள் தொழிற்பயிற்சி நிலையங்களிலும், பல்

தொழில் நுட்பப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படவேண்டும். உயர் செகண்டரிக் கல்விக்கூடங்களிலும், தொழிற்கூடங்களிலும் வேலை அனுபவப் பயிற்சியும் (Work Experiences) ஆண்டுக்கு *10* நாட்கள் சமூகப் பணி உடலுழைப்பு முகாம்களும் இருக்கும். மேலும், பாடத்திட்டத்தில் சாதாரண மாணுக்கர், மீத்திறனுடையோர் ஆகியோர்க்கான இரு பிரிவுகள் காணப்படும். உயர் செகண்டரிக் கல்வியின் இறுதிப் பொதுத் தேர்வில் மாணாக்கர் பெற்ற மதிப் பெண்கள் மட்டும் குறிப்பிடப்படும். 'வெற்றி' அல்லது 'தோல்வி' எனக் குறிக்கப்படாது.

உயர் செகண்டரிக் கல்விக்கான வாய்ப்புக்கள், நிதிவசதி, இக் கல்விக்கான தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அமைக் கப்படும். எல்லோரும் இக்கல்வி நிலையில் பொதுக்கல்வி பெறத் தேவையில்லை. 50% மாணவர்க்குத் தொழிற்கல்வி வாய்ப்புக்கள் அளிக்கப்படும். தொழிற் கல்விக்குப் பல் தொழில் நுட்பப் பள்ளி களுடன் (Polytechnics) பகுதி நேரப் பயிற்சி, அஞ்சல் வழிப் பயிற்சி போன்ற வாய்ப்புக்களும் பயன்படுத்தப்படவேண்டும். தொழிற் கல்வியில் பொதுச் சுகாதாரம், வாணிபம், தொழில் நிருவாகம் போன்ற புதுத் துறைகளில் பயிற்சியளிக்கப்படுதலும் இன்று அவசியமானதாகும்.

6. உயர் கல்வி நிலை

உயர் கல்வியின் நோக்கங்கள் எவையாக அமைதல் வேண்டும் என்பதுபற்றி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களது தலைமையில் செயற்பட்ட பல்கலைக்கழகக் கல்விக்குழு(*1948-49*) வெளியிட்ட கருத்துகள் நமது கவனத்திற்குரியவையாகும். பொதுக்கல்வி, தொழிற்கல்வி, உயர்தொழிற்கல்வி ஆகியன குடியாட்சி நன்கு இயங்க அடிப்படைகளாக அமைகின்றன. இவை யாவும் உயர்கல்வி என்பதற்குள் அடங்கும். அறிவை மக்களிடையே பரப்புவது, புதிய உண்மைகளைத் தேடிப்பெற இடையறாமல் உழைப்பது, மனித வாழ்க்கையின் ஆதார இலட்சி யங்களை உணர முயல்வது, சமூக வளர்ச்சிக்கு இன்றியமையா தனவாகப் பல்வேறு உயர் தொழில்களுக்கான பயிற்சி வாய்ப்புகளை அமைத்தளிப்பது போன்றன யாவும் உயர் கல்வியின் நோக்கங்களாக அமையும். ஒரு நாட்டின் சிறப்பும், மேன்மையும் அதன் நிலப்பரப்பின் அளவிலோ அது பெற்றுள்ள வசதிகளின் எண்ணிக்கையிலோ அல்லது நாட்டில் பரவிக் காணப்படும் கல்வியின் தரத்திலோ மட்டும் அடங்கியுள்ளன அல்ல. இவை யாவும் இன்றியமையாதவையே எனினும், ஆன்மிக வளர்ச்சியே நாட்டின் சிறப்புக்கு அடிப்படையாகும். இவ்வளர்ச்

சிக்குப் பல்கலைக் கழகங்கள் துணை செய்வனவாக அமைய வேண்டும். பல்கலைக் கழகங்கள் தங்களது பணியினைச் சிறப்பாக ஆற்றி வந்தால் நாடும் மக்களும் நல்வாழ்வு பெறுவது திண்ணம் என்று பண்டித ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டுள்ளார். பல்கலைக் கழகங்கள் மனிதப் பண்புகள், சகிப்புத் தன்மை, சிந்தனைத் திறன், துணிந்து செயலாற்றுதல் உண்மைகளைத் தேடிப் பெற முயலுதல் போன்றவற்றின் சின்னமாகும் என்றும், மனித இனம் தன்னை மேலும் உயர்த்திக்கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகள் யாவற்றுக்கும் பல்கலைக் கழகங்களின் துணை இன்றி யமையாததென்றும் பண்டித நேரு அவர்கள் சிறப்பாகக் குறிப் பிட்டுள்ளார். எனவே, உயர் கல்வியின் நோக்கம் உண்மையான அறிவினை வளர்த்துப் பரப்புதலாகும். நாட்டிற்கான சிறந்த தலைவர்கள், பல்வேறு துறைகளுக்கான வல்லுநர்கள் ஆகியோரை உயர் கல்விநிலையங்களான கல்லூரிகளும், பல்கலைக் கழகங் களும் உருவாக்கித் தரவேண்டும். உயர் கல்விக்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படுவதுடன் தரமும் உயர்த்தப்பட வேண்டும். சமுதாய வாழ்விலும், தனி மனித வாழ்விலும் சமத்துவம் (Equality) சமூக நீதி (Social Justice) போன்றவற்றை மேம்படச் செய்தல் வேண்டும்.

பல்கலைக் கழகங்கள் ஆற்றவேண்டிய பணிகள், உயர் கல்வியின் குறிக்கோள்கள், நோக்கங்கள் ஆகியவை பற்றி டாக்டர் கொத்தாரி அவர்களது தலைமையில் செயற்பட்ட கல்விக் குழு (1964-66) குறிப்பிட்டுள்ள கருத்துக்களாவன: புது அறிவினைத் தேடிப் பெறுதல், புதிய உண்மைகளைச் சிந்தித்து முயன்று கண்டறிதல், இப் புது உண்மைகள், நாட்டில் இன்று எழுந்துள்ள புதுத் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்கனவே நாம் பெற்றுள்ள அறிவினை மீள்நோக்கல், நாட்டின் திறன் மிக்க மாணவ மாணவியருக்கு அவர்களது மீத்திறன் முழுமை பெறத் துணை செய்யும் வாய்ப்புக்களை அமைத்துத் தருதல், நாட்டின் எதிர்காலத் தலைவர்களை உருவாக்குதல், நாட்டின் நலனுக்கும் வளத்துக்கும் இன்றியமையாதனவாக வேளாண்மை, பொறியியல், தொழில்நுட்பம், அறிவியல் துறைகள், மருத்துவம், கலைப்பிரிவுகள் போன்ற துறைகளுக்கான பயிற்சியை இத் துறைகளில் சேர்ந்து பணி புரிய விரும்பும் ஆற்றலும் நாட்டமும் உடைய மாணாக்கர்களுக்கு அளித்தல், சமூகத்தில் நீதிக்கும் நேர்மைக்கும் ஊறு விளைவிக்கும் ஏற்றத் தாழ்வுகளை அகற்றும் வகையில் பயனுள்ள கல்வியினை நாட்டு மக்களிடையே பரப்புதல் போன்றன யாவும் பல்கலைக் கழகங் களின் முக்கியப் பணிகளாகும் என்று கொத்தாரிக் கல்விக்குழு

குறிப்பிட்டுள்ளது. மேலும், பள்ளிக் கல்வியின் வளர்ச்சிக்கும், அதன் தரம் உயர்வதற்கும், பல்கலைக் கழகங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவுதல் வேண்டும். பல்கலைக் கழகங்களுடன் இணைந்த கல்லூரிகளில் சேர்ந்து முழு நேரக் கல்வி கற்க வாய்ப்பற்றோர்க்குப் பகுதி நேரக் கல்வி, கல்லூரிகளில் மாலை நேர வகுப்புக்களை நடத்துதல், அஞ்சல் வழிக்கல்வி போன்றவற்றின் துணைகொண்டு உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதும் நம் நாட்டின் பல்கலைக் கழகங்கள் மேற்கொள்ள வேண்டிய ஒரு பணியாகும். முதியோர் கல்வி வளர்ச்சிக்கு உதவி, நாட்டின் எழுத்தறிவின்மையைப் போக்குவதிலும் பல்கலைக் கழகங்கள் முக்கியப் பங்கினைப் பெற வேண்டும்.

நாட்டின் பல்கலைக் கழகங்களில் சில, குறிப்பிட்ட சில துறைகளில் உயர் மையங்களாக(Advanced Centres)உயர்த்தப்பட வேண்டும். உயர் கல்வியிலும் தாய்மொழி அல்லது வட்டார மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டுமெனினும் பட்டமேற் படிப்புக்கு (Post Graduate Courses) ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கலாம். கல்லூரிகளில் மாணாக்கர்களது உடல் நலம் பேண வசதிகள் இருத்தல் வேண்டும். மாணாக்கர்களது நலனுக்கு உதவும் பல்வேறு பணி அமைப்புகள்(Student Services) உயர் கல்வியின் இன்றியமையாப் பகுதிகளாகும். புதிய மாணவர்களைக் கல்லூரிப் படிப்பு முறைக்கு அறிமுகப்படுத்துதல், மாணவரில்ல வசதிகள், வழிகாட்டுதல், அறிவுரை பகர்தல், மருத்துவ வசதிகள், மாணவர் மன்றங்கள் போன்றன யாவும் இத்தகைய பணி அமைப்புகளாகும். இவை வலுப்படுத்தப்பட்டுப் பரவலாக்கப்படுவது மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இவை மாணவர்களிடையே கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் வளர்த்தலில் துணைபுரியும். கல்லூரிகளிடையேயும், பல்கலைக் கழகங்களுக்கிடையேயும் தொடர்பினை வலுப்படுத்தப் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். ஆசிரியர்—மாணவர் தொடர்பு விரும்பத்தக்க நல்ல முறையில் இருத்தல் வேண்டும். மாணாக்கர் நலனுக்கென ஒரு பேராசிரியரும் (Dean of Student Welfare) தேவை. சமூகப்பணிகள், உடலுழைப்பு முகாம்கள், தேசிய மாணவர் படை ஆகியன வலியுறுத்தப்படும். நம் நாட்டை இப்போது பல புதிய பிரச்சினைகள் எதிர் நோக்கியுள்ளன. இவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிய உணர்வும், அவற்றை நீக்கத் தேவைப்படும் அறிவு, ஆற்றல், மனவுறுதி, நெஞ்சுரம் ஆகியனவும் இப்போது நமது உடனடித் தேவைகளாகும். அவற்றை நமக்களிப்பது பல்கலைக் கழகங்

களின் முக்கியப் பணியாகும். இதேபோது பல்கலைக் கழகங்களது கல்விச் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும்.

7. மாணாக்கர்களைச் சேர்ப்பதற்கான கோட்பாடுகள்

கல்வியின் பல்வேறு நிலைகளில் மாணாக்கர்களைச் சேர்ப்பதற்கான கொள்கையினையும், கோட்பாடுகளையும் கொத்தாரிக் கல்விக் குழு விளக்கியுள்ளது.

1. இக் கொள்கை நாட்டின் மனித சக்திக்கான தேவையுடன் இணைக்கப்படவேண்டும்.

2. முதல் ஏழு ஆண்டுகளுக்கான பொதுக் கல்வி எல்லோர்க்கும் இலவசமாகவும் கட்டாயமாகவும் அளிக்கப்படவேண்டும்.

3. கீழ் செகண்டரிக் கல்வியை எவ்வளவு துரிதமாகப் பரவலாக்க இயலுமோ அவ்வளவு துரிதமாக அது பரவலாக்கப்படவேண்டும்.

4. உயர் செகண்டரி மற்றும் உயர் கல்விக் கட்டங்களில் விருப்பமும் திறனுமுள்ளோர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இவ்வாறு செய்யும்போது நிதி வசதி, நாட்டின் பல்வேறு துறைகளின் எதிர்காலத் தேவைகள், கல்வித்தரம் ஆகியன கருத்தில் கொள்ளப்படவேண்டும். வாணிபம், தொழிற்கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் பயிற்சிக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்படவேண்டும்.

5. எழுத்தறிவின்மையைப் போக்க முதியோர் கல்விக்கும் தொடர் கல்விக்கும் (Adult and Continuing Education) வாய்ப்புகள் அதிகரிக்கப்படவேண்டும்.

6. எல்லோருக்கும் சமமான கல்வி வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும். இதேபோது திறன்மிக்கோரின் சீரிய வளர்ச்சிக்கு அதிக வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும்.

டாக்டர் ஈஸ்வர்பாய் படேல் குழுவின் அறிக்கை (ஜூலை-நவம்பர், 1977)

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம் தயாரித்தளித்த பத்தாண்டுப் பள்ளிப் பாடத்திட்டம், பாடநூல்கள் ஆகியவற்றை மீள்நோக்குவதற்காக, டாக்டர் ஈஸ்வர்பாய் படேல் அவர்கள் தலைமையில் ஒரு குழுவினை 1977ஆம் ஆண்டு ஜூலை

மாதம் மத்தியக் கல்வி அமைச்சர் நியமித்தார். இக்குழுவில் 30 அங்கத்தினர்கள் இருந்தனர். இக் குழுவின் செயல்களில் 150 பாடவல்லுநர்கள் உதவி செய்தனர்.

பின்வரும் பகுதிகளுக்கான கல்வி ஏற்பாட்டினை உருவாக்குவதற்காக 11 பாடக்குழுக்கள் செயற்பட்டன.

1. மொழிப்பாடங்கள், 2. கணிதம், 3. சூழ்நிலை இயல் சார்ந்த பாடங்கள், 4. அறிவியல், 5. வரலாறு, குடிமை இயல், நிலவியல், 6. சமுதாயப் பயனுள்ள ஆக்கப்பணிகள், 7. பொருளியல், 8. சமூகப்புனரமைப்பு, 9. நுண்கலைக்கல்வி, 10. உடற்கல்வி, 11. கால அட்டவணை.

தேசிய வளர்ச்சி இலக்குகளைக் கருத்தில் கொண்டு, தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகத்தினால் உருவாக்கியளிக்கப்பட்ட கல்வி ஏற்பாட்டில் எடுத்துச் சொல்லப்பட்ட குறிக்கோள்களை பாடவாரியாகவும், பல்வேறு நிலைகள்வாரியாகவும் பரிசீலனை செய்த பின்னர், டாக்டர் படேல் குழு பின்வரும் பரிந்துரைகளைச் செய்துள்ளது.

1. கல்வி அமைப்பு

(i) தொடக்கப் பள்ளி வகுப்புகள்: 1—4/5

(ii) நடுநிலைப் பள்ளி வகுப்புகள்: 4/5—7/8

(iii) உயர்நிலைப் பள்ளி வகுப்புகள்: 7/8—10

2. போதனை நேரம்

தொடக்கப் பள்ளி வகுப்புகளில் $2\frac{1}{2}$—3 மணி நேரம் கல்வி போதனை போதுமானதாகும்.

3. வீட்டு வேலை

குழந்தைகளின் விளையாட்டு நேரத்தை வீட்டுவேலை (Home work) பாதிப்பதால் தொடக்கப்பள்ளி வகுப்புகளில் வீட்டு வேலை கொடுத்தல் கூடாது.

4. நெகிழ்ச்சியுள்ள கல்வி ஏற்பாடு

கற்போனின் தேவைகளை நிறை செய்யும் வகையில் கல்வி ஏற்பாடு, கற்றல் முறைகள் ஆகியன நெகிழ்ச்சியுள்ளனவாக அமைதல் வேண்டும்.

5. அடிப்படைப் பாடங்கள்

வட்டாரச் சூழ்நிலைகளின் அடிப்படையில் கல்வி ஏற்பாடு அமைக்கப்படவேண்டும். இதில் குறைந்தபட்ச அளவு அடிப் படைப் பாடங்கள் இடம் பெறவேண்டும்.

6. பாடநூல்கள்

தொடக்கப் பள்ளி நிலையில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு ஆகியவற்றிற்கு மொழிப் பாடநூல்கள் மட்டும் போதுமான தாகும். மற்ற (தொடக்கப்பள்ளி) வகுப்புகளுக்கு மொழிப்பாட நூல், கணித நூல் சூழ்நிலை இயல் சார்ந்த பாடநூல் ஆகியவை போதுமானதாகும்.

7. பாடநூல்கள் தயாரிப்பு

பல்வேறு பாடநூல்களைத் தயாரிக்கும் பொறுப்பினை மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகங்களும், மாநிலப் பாடநூல் நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டும். கல்வி போதனைக் கான துணைப் பொருட்களை உருவாக்கும் பொறுப்பினைத் தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம் மேற்கொள்ள வேண்டும்.

8. ஆசிரியர்களுக்கான கற்பித்தல் வழிகாட்டி நூல்கள்

கற்பித்தல் துணைக் கருவிகள், வழிகாட்டி நூல்கள் ஆகிய வற்றினை தயாரிக்கும்போது 'இணைப்புப் போதனை' என்னும் கோட்பாடு (The Principle of Correlation) கருத்தில் கொள்ளப் படவேண்டும். இவை ஒவ்வொரு வகுப்பிலும் பல்வேறு செயல் களுக்கு உதவும் வகையில் தயாரிக்கப்படவேண்டும்.

9. வேலை அனுபவம்—தொழிற்கல்வி

காந்தியடிகளின் ஆதாரக் கல்வி முறை, கொத்தாரிக் கல்விக் குழுவின் அறிக்கை ஆகியவற்றினால் வலியுறுத்தப்பட்ட 'உடலுழைப்பின் உயர்வு' என்னும் கருத்து நமது கல்வி முறையில் முக்கிய இடம் பெறவேண்டும்.

10. பள்ளிக் கல்வி மற்றும் பள்ளி சாராக் கல்வி

கல்வியில் இவ்விரு முறைகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இவை ஒன்றோடொன்று எதிர்பட்டவையல்ல.

11. சூழ்நிலை சார்ந்த கல்வி

வகுப்பறைகளில் பெறும் கல்வி மட்டும் போதுமான தன்று. சமுதாயம், சூழ்நிலை ஆகியவை குழந்தைகளின்

மனப்பான்மைகள், அறிவு வளர்ச்சி ஆகியவற்றைப் பெரிதும் பாதிக்கின்றன. ஆகவே இவை கல்வி முறையில் முக்கிய இடம் பெற வேண்டும்.

12. கால அட்டவணை

கால அட்டவணை தயாரிப்பதில் நெகிழ்ச்சியற்ற தன்மை இருத்தல் கூடாது. பல்வேறு பாடங்களுக்கான நேரத்தினை ஒதுக்கீடு செய்வதில் நெகிழ்ச்சியான போக்கு இருத்தல்வேண்டும். இதில் ஆசிரியர்களுக்குப் போதுமான சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்.

டாக்டர் ஆதிசேசையா குழுவின் அறிக்கை (அக்டோபர், 1977—பிப்ரவரி, 1978)

புதிய கல்வி அமைப்பில் +2 நிலைக்கான கல்வி ஏற்பாட்டினை மீள்நோக்குவதற்காக டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேசையா அவர்கள் தலைமையில் ஒரு குழுவினை 1977—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மத்தியக் கல்வி அமைச்சர் நியமித்தார். செகண்டரி நிலை, உயர் செகண்டரி நிலை ஆகிய நிலைகளில் கல்வியைத் தொழில் சார்புடையதாக மாற்றி அமைப்பதற்கான திட்டம் ஒன்றினைப் பரிந்துரை செய்யும்படி இக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. இக் குழுவில் 27 அங்கத்தினர்கள் இருந்தனர். இக் குழு நான்கு செயல் அணிகளை நியமித்தது. இக் குழுவின் பரிந்துரைகள் பின்வருமாறு :

1. பாடத் தொகுதிகள்

கல்வியில் பொதுக் கல்வி, தொழிற் கல்வி என இரண்டு பாடத் தொகுதிகள் இருத்தல்வேண்டும். பாடத் துறைகளைத் தேர்ந்தெடுப்பதில் நெகிழ்ச்சியற்ற தன்மை இருத்தல் கூடாது. வட்டாரத் தேவைகள் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

2. தொழிற்கல்வி

வேளாண்மை, கிராமத் தொழில் சார்ந்த தொழில் பாடத் துறைகள் ஆகியவை தொழிற்கல்வியில் இடம் பெறவேண்டும். தொழில் நுட்பக் கல்வியின் பட்டம் மற்றும் 'டிப்ளமா' பெற்றவர்கள், தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று 'சான்றிதழ்' பெற்றவர்கள் ஆகியோர் பல்லாயிரக்கணக்கில் வேலையின்றி இருப்பதால், பொறியியல் மற்றும் தொழிற்கல்வித் துறைகள் பள்ளிக் கல்வியில் இடம் பெறக் கூடாது என இக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது. கிராமப் பகுதிகளை அதிகம் கொண்ட

இந்தியாவில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழிற்கல்வி வலியுறுத்தப்படவேண்டும்.

3. சமுதாயப் பயனுள்ள ஆக்கப்பணிகள்

இவைபற்றி டாக்டர் ஈசுவர்பாய் படேல் குழு தெரிவித்துள்ள கருத்துக்களை டாக்டர் ஆதிசேசையா குழுவும் ஆதரித்துள்ளது.

4. கல்வி ஏற்பாடு

மாணவர்கள் தங்களது தேவைகளுக்கேற்பப் பாடத்துறைகளைத் தேர்ந்தெடுத்துப் பயிலவும், மேலும் அவற்றைத் தொடர்ந்து பயிலவும் வாய்ப்பளிக்கும் வகையில் கல்வி ஏற்பாடு உருவாக்கப்படவேண்டும்.

5. தொழில் பற்றிக் கணக்கெடுப்பு

தொழிற்கல்விப் பாடங்களைத் தொடங்குவதற்கு முன்அவற்றின் தேவைகள், கோரிக்கைகள் ஆகியவைபற்றி ஆய்வுக் கணக்கெடுப்புகள் நடைபெற வேண்டும். வட்டாரம், நகர்ப்பகுதி போன்ற அளவில் இம்மாதிரியான கணக்கெடுப்புகள் நடத்தப்பட்ட பின்னரே தொழிற்கல்விப் பாடங்கள் தொடங்குவது குறித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

6. மேல் உயர்நிலைப் பள்ளிகள்

கிராமப் பகுதிகளில் இளைஞர்களுக்குத் தொழிற்கல்விக்கான வாய்ப்புகள் இல்லையாதலால், மேல் உயர்நிலைப் பள்ளிகள் கிராமப்பகுதிகளில் தொடங்கப்படவேண்டும். இப் பள்ளிகளில் தொழிற்கல்விக்கான வசதிகளும் சாதனங்களும் போதிய அளவில் இருத்தல் வேண்டும்.

7. வசதிகள்

தற்போதுள்ள வசதிகள் முழுமையான அளவில் பயன்படுத்தப் படவேண்டும். தேவையான பகுதிகளில் மாற்றல் முறைகள் (Shift Systems) பின்பற்றப்படலாம்.

8. கீழ் மேல் எளிதியக்கம்

பட்டதாரிகளுக்குப் பதிலாகத் தொழிற்கல்வி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும். உயர் பதவிகளுக்கும் இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருத்தல் வேண்டும். பொதுத் துறை நிறுவனங்கள் இதில் முக்கியப் பங்கினை ஏற்று வழிகாட்டவேண்டும்.

9. தொழில் பயில்நிலை

தொழிற் கல்வியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குத் தொழிற் கூடங்களிலும் நிறுவன அமைப்புகளிலும் தொழில் பயில் நிலை (Apprenticeship) வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

10. தொழிற்கல்வி மன்றங்கள்

தேசியத் தொழிற்கல்வி மன்றம், மாநிலத் தொழிற்கல்வி மன்றங்கள் முதலியன நிறுவப்படல் வேண்டும். தொழிற்கல்வியில் தேர்ச்சியடையும் மாணவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற இம்மன்றங்கள் உதவ வேண்டும்.

11. வட்டார ஆதரவு

சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலுள்ள உள்ளாட்சி நிறுவனங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், சிறுதொழில் மற்றும் வேளாண்மை நிறுவனங்கள் ஆகியன தொழிற்கல்வி அளிப்பதில் உதவி செய்ய முன்வரலாம்.

12. நிதி

தொழிற்கல்விக்கான சாதனங்கள் வாங்குவதற்கெனப் புதிய செலவினங்கள் எவற்றையும் அரசு ஏற்கக்கூடாது. வட்டாரத்திலுள்ள வசதிகளை முழுமையான அளவில் பயன்படுத்த வேண்டும்.

13. ஆசிரியர்கள்

தொழிற்பணியாற்றி வரும் அனுபவமுள்ளவர்களைத் தொழிற் கல்வி புகட்ட ஆசிரியர்களாக நியமிக்கலாம். தேவைப்படுமாயின் பகுதி நேர ஆசிரியர்களை நியமிக்கலாம். தற்போது பட்டமேற்படிப்புத் தகுதியினை வலியுறுத்த வேண்டியதில்லை.

14. பாடநூல்கள்

முன்னுரிமை அடிப்படையில், தொழில் பாடங்களுக்கான பாடநூல்கள் தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். மேல் நாடுகளில் பயன்படுத்தப்பட்டுவரும் தரமான நூல்கள் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுப் பள்ளிகளில் பயன்படுத்தப்படலாம்.

15. அறிவுரை பகர்தல் மற்றும் வேலை வாய்ப்பு

அறிவுரை பகர்தலுக்கும் வேலை வாய்ப்பினைத் தேடித் தருதலுக்கும் அலுவலர்கள் (Counselling and Placement Officers)

நியமிக்கப்பட வேண்டும். கிராமப்பகுதிகளில் 3 அல்லது 4 பள்ளிகளுக்கு ஓர் அலுவலர் நியமிக்கப்படவேண்டும்.

16. நேரம் ஒதுக்கீடு செய்தல்

(i) பொதுக் கல்விப் பாடத் தொகுதி

பாடங்கள்	நேர ஒதுக்கீடு
(அ) மொழிப் பாடங்கள்	15%
(ஆ) சமுதாயப் பயனுள்ள ஆக்கப் பணிகள்	15%
(இ) விருப்பப் பாடங்கள் (மூன்று)	70%

(ii) தொழிற்கல்விப் பாடத் தொகுதி

பாடங்கள்	நேர ஒதுக்கீடு
(அ) மொழிப் பாடங்கள்	15%
(ஆ) பொது அடிப்படைப் பாடங்கள்	15%
(இ) விருப்பப் பாடங்கள்	70%

சமுதாயப் பயனுள்ள ஆக்கப்பணிகள்

கல்வியானது சமுதாயத் தேவைகளுக்கு ஈடு கொடுப்பதாக அமைந்தால் நற்பயன் விளையும். தற்போதுள்ள முறையில் பள்ளி உலகிற்கும், வேலை உலகிற்கும் பெரிய இடைவெளியுள்ளது. இதன் விளைவாக கல்வி முறையில் ஒதுக்கப்பட்ட மாணவர்கள் சமுதாய ஆக்கப்பணிகளில் தோல்வியுறுகின்றனர். இதனால் சமுதாயத்தில் அவர்களின் பயன் கேள்விக்குரியதாகின்றது. நமக்கு அனுபவமும் கற்றலும் அதிகரிக்கத் தற்போதுள்ள கல்விமுறை இந்நாட்டிற்கு வேண்டிய வளரும் தேவைகளை நிறைவேற்றுவதில் குறைவுடையது என்பதை அறிகிறோம்.

மாணவர்களின் கல்வி உயர்வுக்கேற்ப, அவர்கள் வாழ்க்கைச் சூழ்நிலையினின்று அதிகமாக விலகிச் செல்கின்றார்கள். கிராமத்தில் பிறந்த ஒருவன், கல்லூரிக் கல்வி பெற்ற பிறகு, கிராமத்திற்கோ, பெற்றோர்களின் தொழிலுக்கோ உதவியாக இருப்பதில்லை. உடலுழைப்பை இழிவாக நினைக்கின்றான். அவன் நகர்புறப் புதிய வேலைகளை நாடுகின்றான். இவை இந்தியாவில் குறைவாக உள்ளன. கல்லூரிப் படிப்பைத் தவிர மற்றவற்றிற்குத் தகுதியற்றவர்களாக மாணவர்கள் மாறிவிடு

கிறார்கள். ஆகவே, தற்போதையக் கல்விமுறையைப் பற்றிப் பொதுவாக மனநிறைவு இல்லை. அதற்கு மக்கள் வாழ்க்கையுடன் தொடர்பில்லை. அது நன்மைக்குப் பதிலாகத் தீங்கு விளைத்துள்ளது. இதைத் தவிர்க்க வேண்டும்.

உற்பத்தி அல்லது ஆக்கப்பணிகளுடன் கல்வியை இணைத்தல் வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளில் வேலை அனுபவத்தை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக உற்பத்திக்கும், கல்விக்கும் இணைப்பினை ஏற்படுத்த முடியும். மேல் உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடங்களைத் தொடங்குவதன் மூலமாகவும் இணைப்பினை ஏற்படுத்த முடியும்.

படித்தவர்கள் வேலையில் அமர்த்தப்படுவதை அதிகரிக்கத் தற்காலக் கல்வி முறைக்குப் புதிய புத்துணர்வு தேவைப்படுகின்றது. வெறும் ஏட்டுப்படிப்பு வேலை வாய்ப்பினைக் குறைக்கின்றது. கல்வி வசதிகள் அதிகமாகும்போது படித்த இளைஞர்களிடையே வேலையின்மைப் பிரச்சினை அதிகமாக எழும். இப் பிரச்சினையைக் குறைக்க நடவடிக்கை எடுக்காதபோது பிரச்சினையும் அளவில் பெருகும்.

எனவே, பள்ளிகளின் எல்லா நிலைகளிலும் வேலை அனுபவத்தை அறிமுகப்படுத்துவதன் தேவையைக் கல்வியாளர்கள் ஒத்துக்கொள்கின்றனர். 1 முதல் 10 வகுப்பு வரை கற்றலில் வேலை அனுபவம் முக்கியப் பகுதியாகும். கொத்தாரிக் கல்விக் குழு குறிப்பிட்டதைப் போல வேலை அனுபவம் சக்தி வாய்ந்த கல்விக் கருவியாகும். இதனால் மாணவர்களிடையே பொறுப்பான, கடின வேலைகளை மேற்கொள்ளும் பழக்கமும் ஏற்படும். இதனால் தேசிய உற்பத்தி பெருகுவதுடன் சிறந்த சமூக ஒருமைப்பாடும் ஏற்படும்.

பள்ளிக் கல்வியில் எல்லா நிலைகளிலும் வேலை அனுபவம் நடு நாயகமாக விளங்கவேண்டும். அதை அறிவியல், தொழில் நுட்பவியல் ஆகிய துறைகளில் ஒருங்குபெற அமைக்கவேண்டும். மற்றும், வேளாண்மைத் தொழில் துறைகளில் உற்பத்தி பெருகுவதற்கும் ஏற்றதாய் அதை அமைத்தல் வேண்டும். வேலை அனுபவம் என்பது தம் கைகளைப் பயன்படுத்திக் கற்க வாய்ப்பளிப்பதுடன், உலகியல் பொருட்களை உற்று நோக்கிச் செயல்படுத்துவதற்கும், மக்களிடையே நல்ல தொடர்பு கொள்வதற்கும் உதவி செய்வதாய் இருக்க வேண்டும். அது முறைப்படுத்தப்பட்ட உற்பத்தித் தொழில்களில் ஈடுபட வேண்டிய மனநிலைகளைத் தோற்றுவித்துக் கூட்டுறவு முறையில் தொழில்களைச் செய்து

முடிப்பதற்கும், வேலைத் திட்டத்திற்குட்பட்ட எல்லோரையும் சமமாகக் கருதி மானிட ஆன்மா உரிமையோடு சமூகப் பொறுப்பைச் செய்து முடிக்கவும் உதவ வேண்டும்.

அறிவு, திறன், மனப்பான்மை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வேலை அனுபவம் அடிப்படையாக அமைகிறது. மேலும், இது பிற்காலத்தில் உற்பத்திப் பணிகளில் பங்குபெறவும் பயன்படும். உற்பத்தி, பராமரிப்பு, நுண்தொழில் செயல்முறைகள் ஆகிய வற்றையும், மானிட உறவு, அமைப்பு, நிர்வாகம், விற்பனை ஆகியவற்றையும் வேலை அனுபவம் உள்ளடக்கியதாகும். தேர்ந்தெடுக்கும் துறை உள்ளுள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவேண்டும். மேலும், அது மாணவர்கள் திறமையை வளர்ப்பதாகவும் அமையவேண்டும். இது வேலை செய்வதற்குக் கற்பது அன்று. இது வேலையைப் பற்றிய கல்வியாகும். வேலை அனுபவப் பயிற்சி மாணவர்களின் இயற்கை விருப்பத்தையும், பயனுள்ள தொழிலுக்குத் தேவையான குறிப்பிட்ட வகைத் திறன்கள், உடல் ஆற்றல், எவருடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டுமோ அவர்கள்பால் கொள்ளவேண்டிய மனப்பான்மை, பணிகளைச் செய்வதில் தம் பொறுப்பு, கடமைகளை நிறை வேற்றல் ஆகியவற்றையும் கண்டறிய உதவியாக இருக்கும். எனவே, வேலை அனுபவம் பாடத்திட்டம் முழுவதும் பரவி நிறைந்து இருக்கவேண்டும்.

வேலை அனுபவங்கள் பள்ளியையும் வாழ்க்கையையும் இணைக்கின்றன. கல்வியையும் தொழிலையும் தொடர்புபடுத்து கின்றன. உள்ளத்தின் வளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும் சேர்க்கின்றன. ஆக்கச்செயல், உற்பத்திச் செயல்கள் ஆகியன கல்வியில் இடம்பெற உதவுகின்றன. கல்வியின் முக்கியக் குறை பாடு எனப்பட்ட 'வாழ்க்கைத் தொடர்பின்மையை' இவை அகற்ற உதவுகின்றன. பள்ளிகளில் வேலை அனுபவங்களை அளிக்கப் புகுத்தப்படும் செயல்கள் வேளாண்மை, தொழில் நுட்பம், தொழில்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையனவாக இருத்தல் வேண்டும். கல்வி 'தொழில் சார்புடையதாக' மாற்றப் படவேண்டும் என்னும் கருத்தைச் செயலாக்கவும் வேலை அனுப வங்கள் உதவும்.

உடலுழைப்பு, சமுதாயப்பயனுள்ள ஆக்கப்பணிகள், உற் பத்தி ஆகியவற்றிற்குக் கல்வியில் போதிய இடம் அளிக்கப்பட வேண்டும். கல்விமுறையில் வாழ்க்கைத் தொழிலனுபவங்களைப் பெறுதல் ஒரு பகுதியாக அமைதல் வேண்டும். படித்த இளைஞர்

களிடையே வேலையின்மைப் பிரச்சினை அதிகமாக வளர்வ தால், தொழில்தன்மை வாய்ந்த கல்வியைப் பள்ளிகளில் அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகின்றது.

''உற்பத்தியுடன் கல்விக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தும் மற்றொரு திட்டம், இடைநிலைக் கல்விக்கு உறுதியான தொழில் அடிப்படையை அளிப்பதாகும்'' எனக் கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது.

மேலும் இக்குழு குறிப்பிடுவதாவது :

''நாம் வாழும் இத்தகைய சமுதாயத்தில் வரும் ஆண்டு களில் மக்கள் பெருக்கத்துடன் வாழ்வோம். பொதுக் கல்வியை யும், தொழில் கல்வியையும் முழுமையாகப் பிரிப்பது விரும்பத் தகாதது மட்டுமல்ல, முடியாததும் ஆகும். இந்தியாவில் உயர் செகண்டரி நிலையில் தொழில்மயம் இன்றியமையாததாகும்.

சுதந்திரத்திற்குப் பிறகு, தற்காலத் தொழில் நுட்பச் சமுதா யத்தை உருவாக்கி,மக்கள் துயர்துடைக்கும் பணியினை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. பின்அமைப்பை ஏற்கனவே உருவாக்கி யுள்ளது. பெரும்பான்மையான தொழில் நுட்பப் புரட்சியின் நுழை வாயிலில் நாடு உள்ளது. இதனால் மிகுந்த திறமை வாய்ந்த தொழில் நுட்பத்துறையைச் சார்ந்தவர்களுக்குக் கிராக்கி ஏற்படும். சாதாரணக் குடிமக்களும், தன் ஆதாரமுடையவர்களாகவும் தங்க ளுடைய தகுதியையும், நடவடிக்கையையும் தாங்களே உருவாக் குபவர்களாகவும் இருக்கவேண்டும். ஒவ்வொரு குடிமகனும் திறமையும் அறிவும் நிரம்பப் பெற்றவராகத் திகழ்வது இன்றி யமையாததாகும். படைக்கும் தொழிலாளியாகவும், உற்பத்தித் தொழிலாளியாகவும் அவனை உருவாக்க வேண்டும்.

புதிய அமைப்பின் கீழ், மாற்றத்தின் மிகுந்த அழுத்தமானது, கற்றல் உலகிற்கும், வேலை உலகிற்கும் இடையேயுள்ள தடை களைத் தகர்த்தெறிவதாகும். இரண்டிற்கும் இடையே கூடிய வரை தொடர்பை உண்டாக்குவதாகும். இது மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவதாக அமையும்.

கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டபடி, மக்களின் விருப்பத் திற்கும் தேவைக்கும் ஏற்றதாய், அவர்தம் வாழ்க்கையோடு தொடர்புடையதாக்கிக் கல்வியைச் சமுதாயத்தில் ஒரு மாற் றத்தை ஏற்படுத்தும் கருவியாகப் பயன்படுத்த வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. இதற்காகப் பள்ளிப் பாடத்திட்டம் தேசிய ஒருமைப்பாடு, சமூகநீதி, உற்பத்திப் பெருக்கம், சமூகத்தைத்

தற்காலத்திற்குரியதாக ஆக்குதல் ஆகியவற்றோடு கல்வியை இணைப்புடையதாக ஆக்கல் வேண்டும்.

பள்ளிகள் இணைப்புத் திட்டம் (School Complex)

பள்ளிகளின் இணைப்புத் திட்டத்தின் கீழ், ஒரு வட்டாரத்தில் கிடைக்கக்கூடிய கல்வி வசதிகளை அதில் அமைந்துள்ள பள்ளிகள் யாவும் பயன்படுத்திக்கொள்ள முடியும். உயர்நிலைப் பள்ளிகளில் அமைந்துள்ள அறிவியல் ஆய்வுக்கூடங்கள், காட்சிக் கேள்வித் துணைக்கருவிகள், நூலகங்கள் போன்றவை, அவற்றைச் சுற்றி அமைந்துள்ள தொடக்கப்பள்ளிகள், உயர்தொடக்கப் பள்ளிகள் ஆகியவைகளும் பயனுறும் வகையில் அமைவது பரவலான கல்வி முன்னேற்றத்திற்கும், கல்வித்தரம் உயர்வதற்கும் வழி செய்யும்.

இத்திட்டத்தில் பொதுவாக இரண்டு நிலைகள் காணப்படும். முதல் நிலையில் ஒரு வட்டாரத்திலுள்ள தொடக்கப்பள்ளிகளும், உயர் தொடக்கப்பள்ளிகளும் இணைக்கப்படும். இரண்டாவது நிலையில் இவை அவ்வட்டாரத்தின் உயர்நிலைப் பள்ளிகளுடன் இணைக்கப்படும். இவ்விரு நிலைகளின் செயல்களைத் திட்டமிட இரு குழுக்கள் அமைக்கப்படும். தொடக்கப்பள்ளிகள், உயர் தொடக்கப்பள்ளிகள் ஆகியவற்றின் தலைமையாசிரியர்கள் முதற் குழுவின் உறுப்பினர்களாகவும் இவ்வாசிரியர்களுடன், இப்பள்ளிகளுடன் இணைந்த உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியரும் சேர்ந்து இரண்டாவது குழுவின் உறுப்பினர்களாகவும் இருப்பர். இவ்விரு குழுக்களும் ஒவ்வொரு மாதத்திற்கான செயல் திட்டத்தை விவாதித்து முடிவு செய்தல், பல்வேறு பள்ளிகளுக்கு இத்திட்டத்தை நிறைவேற்றத் தேவைப்படும் உதவிகளைச் செய்தல், அவ்வப்போது இத்திட்டங்கள் செயல்படுவதன் விளைவாக அவ்வட்டாரத்திலுள்ள பள்ளிகளின் பொதுவான முன்னேற்றத்தை மதிப்பிடல் ஆகியவற்றில் ஈடுபடும்.

கல்வித் தரம் குறைந்துள்ளது என்று சிலபோது தெரிவிக்கப் படும் குற்றச்சாட்டுக்கு இப்போது ஒவ்வொரு நிலைப் பள்ளி ஆசிரியர்களும் தமக்கு அடுத்த கீழ்நிலையிலுள்ள பள்ளிகளைக் குறை கூறுகின்றனர். இந்நிலை பள்ளிகளின் இணைப்புத் திட்டத்தினால் தவிர்க்கப்படும். ஒரு வட்டாரத்தில் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு, அவ்வட்டாரத்தின் எல்லா நிலைப் பள்ளிகளுமே பொறுப்பாக இத்திட்டத்தின் கீழ் அமைகின்றன.

கல்லூரிகள் இணைப்புத் திட்டம் (College Complex)

கல்லூரிகளின் இணைப்புத் திட்டத்தின் கீழ் கல்லூரிகளில் கிடைக்கக்கூடிய வசதிகளை அருகிலுள்ள மேல் உயர்நிலைப்

பள்ளிகள் பயன்படுத்திக் கொள்ளமுடியும். கல்லூரிகளில் அமைந்துள்ள ஆய்வகக்கூடங்கள், நூலகங்கள் போன்றவை அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளும், மேல் உயர்நிலைப் பள்ளிகளும் பயனுறும் வகையில் அமைவது கல்வி முன்னேற்றத்திற்கும் கல்வித்தரம் உயர்வதற்கும் வழி செய்யும்.

கல்லூரிகள் இணைப்புத்திட்டம், கல்லூரியுடன் அருகிலுள்ள மேல் உயர்நிலைப் பள்ளிகளின் கூட்டுறவை ஏற்படுத்தும். உண்மையில், கல்லூரிகள் தங்களுடைய வசதிகளையும், ஆதாரங்களையும், தாமே முன்வந்து பள்ளிகளுக்கு அளித்து உதவ வேண்டும். கல்லூரி, மேல் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து கருத்துக்களையும், கிடைக்கும் வசதிகளையும், நூலகங்களையும், ஆய்வகங்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அன்றாடப் பிரச்சினைகளுக்குக் கூடியவரை தீர்வு காணவேண்டும்.

இத்திட்டம், நல்ல தொடர்பையும், கூட்டுறவு முயற்சியையும் ஏற்படுத்தி, மேல் உயர்நிலைப் பள்ளிகளின் தரத்தை உயர்த்தும். சிறந்த கல்வி கற்பித்தல், கற்றலில் தர உயர்வு, இரு நிலைகளிலும் ஆசிரியர்களின் கூட்டு முயற்சிகளை ஒன்றுசேர்த்தல் ஆகியவை இத்திட்டத்தால் விளையும் பயன்களாகும்.

குறைந்த படிப்புத் தகுதியுடைய ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி வகுப்புகள் நடத்துவது கல்லூரிகள் இணைப்பின் முக்கியப் பணியாகும். ஆசிரியர்கள் பணியேற்பதற்கு முன் பெற்ற பயிற்சி, தற்போது பல ஆண்டுகளுக்குப்பிறகு நிறையுடையதாக இருக்காது. மேல் உயர்நிலைப்பள்ளி நிலையின் உயர்த்தப்பட்ட பாடத்திட்டம், ஆசிரியர்கள் கல்லூரிகளில் பயிலாத சமீப வளர்ச்சிகளைக் கொண்டதாகும். அதனால், அவர்கள் தற்காலத்திற்கேற்றவாறு, தற்போதைய வளர்ச்சிகளை அறிந்திருக்க வேண்டும். கல்லூரிகளின் இணைப்புத் திட்டத்தின் வாயிலாக அளிக்கப்படும் பணியிடைப் பயிற்சியின் மூலம் இது சாத்தியமாகும். இத்தகைய இணைப்புத்திட்டம் மேலும் விரிவடைந்து மேல் உயர்நிலைப் பள்ளிகளையும், கலைக்கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள் ஆகியவற்றையும் உள்ளடக்கி வளர்ச்சி பெறுவதும் கல்வித்தரத்தை மேலும் உயர்த்தப் பெரிதும் உதவுவதாக அமையும்.

வினாக்கள்

1. கல்வி அமைப்புப் பற்றிய கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகளை ஆராய்க.

2. (அ) தொடக்கக்கல்வி, (ஆ) உயர்நிலைப் பள்ளிக்கல்வி, (இ) பல்கலைக் கல்வி ஆகிய மூன்றினுக்கான கல்வி நோக்கங்கள் பற்றிய கொத்தாரிக் கல்விக்குழுவின் கருத்துக்களை விவரிக்க.

3. பல்கலைக்கழகக் கல்விக் குழுவின் அறிக்கையின்படி, பல்கலைக்கழகக் கல்வியின் நோக்கங்கள் யாவை ?

4. இடைநிலைக் கல்வித்துறையில் (Secondary Stage) நம் கல்வி நோக்கங்கள் எவையாகவிருக்கவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் ?

5. உயர் கல்வி நிலையங்களில் மாணாக்கர்களைத் தேர்ந்தெடுக்க நீவீர் எந்த வழிமுறைகளைக் கையாளுவீர் என்பதைக் கோடிட்டுக் காண்பிக்கவும்.

6. உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் நோக்கம், கல்வி அமைப்பு ஆகியவை பற்றி டாக்டர் முதலியார் கல்விக்குழுவின் பரிந்துரைகள் யாவை ?

7. உயர் செகண்டரி எனப்படும் மேல்நிலைக் கல்வி வகுப்புக்களின் நோக்கங்கள் யாவை ? இவை அடையப் பெறுவதற்கான வழிகளைக் குறிப்பிடுக.

8. கல்வி அமைப்பில் இன்று 'பணி அனுபவம்', மற்றும் சமுதாயப் பயனுள்ள ஆக்கப்பணிகள் (Socially useful productive work) ஆகியன ஏன் வலியுறுத்தப்படுகின்றன ? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

2. சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புக்கள்

பல்வேறு உயிரினங்களுள் மனிதனிடம் மட்டுமே ஒழுக்கப் பண்புகள் காணப்படுகின்றன. கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று மாணாக்கரிடையே சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புக் களைப் பள்ளிச் செயல்களின் வழியே வளர்த்தலாகும். நுண்ணறி வினைக்காட்டிலும் சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புக்களின் வளர்ச்சியே இன்றைய முக்கியத் தேவையாகும். நுண்ணறிவுத் திறன் மிக்க, ஆனால் சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புக்கள் வளர்ச்சி குறைந்த தலைவர்களால் சமூகத்துக்கும் நாட்டுக்கும் தீமையே விளையும். தற்காலத்தில் தனியார் வாழ்விலும், பொது வாழ்விலும் ஒழுக்கக்கேடான நிலை காணப்படுகிறது. சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புக்கள் பெருமளவு புறக்கணிக்கப்படு கின்றன. கல்வி அமைப்பானது நாட்டின் மதிப்புக்கள் பற்றிய மரபை அறிந்து வைத்திருப்பதுடன், பல்வேறு துறைகளில் மாற்றம் ஏற்படும்பொழுது இம்மதிப்புக்கள் குன்றிப்போகாமல் தொடர்ந்து உயர்ந்தனவும் சிறந்தனவுமான குறிக்கோளினடிப்படையில் மக்களது நல்வாழ்விற்காக அவர்களிடம் இம் மதிப்புக்களை வளர்க்கத் துணை செய்யவேண்டும். பள்ளியில் மாணவர்களுக்குச் சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புக்களது வளர்ச்சிக்கான பயிற்சி யளிக்கையில் அவர்களது குடும்பச் சூழ்நிலை, சுற்றுப்புறச் சூழ் நிலை ஆகியவற்றின் முழுத்தன்மையினையும் ஆராய்ந்து அவற்றில் காணப்படக்கூடிய குறுக்கீடுகள், குறைபாடுகள் ஆகிய வற்றைக் கடந்து நல்வளர்ச்சியினை மாணாக்கர் பெறுவதற்கான வாய்ப்புக்களைப் பள்ளி உருவாக்கித் தரவேண்டும். இம் முயற் சியில் பல்வேறு சமூக நிறுவனங்கள் செயற்படுகின்றன என் றாலும், இப்பணியில் முதன்மை இடம் பெறுவன கல்விக்கூடங் களே ஆகும். மாணாக்கரது சூழ்நிலையை உயர்த்திச் சீராக்கி அவர்களிடையே சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புக்களை வளர்க்க உதவும் கருவியாகக் கல்விநிலையம் செயலாற்றுதல் அவசிய மாகும்.

சமூக மதிப்புக்கள்

கல்வியின் விளைவாக மாணாக்கர்கள் பல சமூகப் பண்பு களைப் பெற்று, சமூகவியல்பினை அடைந்து, பிறருடன் ஒன்று

கூடி ஒத்துழைத்துச் செயற்படும் மனப்பான்மையினைப் பெற்று வளர்தல் வேண்டும். சமூகச் சார்புணர்வு, பொதுநலப்பண்பு, கூட்டுறவு மனப்பான்மை, சகிப்புத்தன்மை, கட்டுப்பாடு போன்ற பண்புகள் சமூகப் பண்புகளாகும். தனிமனிதன் சமூகத்தின் ஓர் உறுப்பினனாவான். சமூகத்தில் பிறந்து, அதன் பல நிலையங்களது செல்வாக்குகளுக்குட்பட்டு, அச்சமூகத்திலே தனது வாழ்க்கையினை அவன் நடத்துகிறான். தனி மனிதனது வாழ்வு சமூகத்தின் நல்வாழ்வுடன் பிரிக்கமுடியாதபடி பின்னிக் காணப்படுவதாகும். சமூகத்தின் வளர்ச்சியும், தனி மனிதர்களது வளர்ச்சியும் இணைந்தவையாகும். சமூக நலன்களுக்கு ஒவ்வாத, அவற்றிற்கு அப்பாற்பட்ட நலன்கள் தனிப்பட்டோர்க்கு இருக்க முடியாது. மனித சமூகம் விலங்குகளது கூட்டங்களைப் போன்ற தன்று. கல்வியின் அமைப்பிலும் தன்மையிலும் சமூகம் பெரும் ஆர்வம் கொண்டுள்ளது. கல்வியின் அமைப்பையும், முறைகளையும், சமூகத்தின் கோணத்தினின்றும் நோக்குவதன் அவசியத்தை காந்திஜி, ஜான்டுயி போன்றோர் வலியுறுத்தியுள்ளனர்.

சமூக நலனுக்காகவும், நாட்டு முன்னேற்றத்திற்காகவும், மக்களது நல்வாழ்விற்காகவும் மாணாக்கர்களிடம் சமூக மதிப்புக்களை வளர்த்தல் இன்றியமையாததாகும். சமூகப்பண்புகளின் நல்வளர்ச்சிக்குதவக்கூடிய சூழ்நிலை, அன்பு, பரிவு, ஒத்துழைப்பு, நட்பு ஆகிய பண்புகள் பரவியதாக இருத்தல் வேண்டும். சமூக நல்வாழ்விற்கான நடத்தைமுறைகள், சமூக நல்வாழ்விற்கு இன்றியமையாத சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, ஒத்துழைப்பு மனப்பான்மை போன்ற சமூக மதிப்புக்களைப் பள்ளிக் கல்வியின் விளைவாக மாணவர்கள் பெறுகின்றனர். பள்ளி சிறப்புமிக்க ஒரு முன்மாதிரிச் சமுதாயமாகத் திகழ்வதனால் இத்தகைய வளர்ச்சி நடைபெறுகிறது. தனது மரபு, பாங்கு, பண்பு, சூழ்நிலையின் அமைப்பு போன்றவற்றின் செல்வாக்கினைக்கொண்டும், சிறந்த ஆசிரிய - மாணாக்கர் தொடர்பின் துணைகொண்டும், பல்வேறு பாடங்கள், பாட இணைச்செயல்கள், பாடப்புறச் செயல்கள் ஆகியவற்றின் உதவியோடும், குழுக்கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தியும், குடிமைப் பயிற்சி, சாரணரியக்கம், பாடிவாழ்க்கை, மாணவரில்ல வாழ்க்கை போன்றவற்றின் துணைகொண்டும், பள்ளியானது மாணவர்களிடம் சமூக மதிப்புக்கள் வளர்ச்சிபெற ஆக்கமளிக்கிறது. பரிவு (Sympathy), கருத்தேற்றம் (Suggestion), பின்பற்றல் (Imitation) ஆகியவற்றின் உதவி கொண்டு பள்ளியில் காணப்படும் சமூகப் பிணைப்பினை (Social Cohesion) வலுப்படுத்துதல் மாணாக்கரது சமூக மதிப்புக்களின் வளர்ச்சிக்குத் துணை செய்வதாகும்.

மேலும், கற்றலிலும், விளையாட்டுக்களிலும் பள்ளியில் போட்டி மனப்பான்மையைக் காட்டிலும், ஒத்துழைப்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகியவை வலியுறுத்தப்பட வேண்டும். இவை சமூக மதிப்புக்களை வளர்க்கத் துணை செய்யும்.

மாணாக்கர்களிடம் சிறந்த சமூக மதிப்புக்களை வளர்த்து, சமூகத்தின் நல்ல உறுப்பினர்களாக வாழ, வழிவகுப்பது ஆசிரியர் களது பொறுப்பாகும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்ல வழி காட்டியாகவும், சிறந்த முன்மாதிரியாகவும் விளங்குவது அவசிய மாகும். அவர்கள் ஆசிரியப்பணிக்கான நாட்டமும் திறமையும் பெற்றிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல உடல்நலம், உளநலம், மனவெழுச்சி, முதிர்ச்சி, மனவெழுச்சிச் சமநிலை ஆகியவற் றினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். அவர்கள் இசைந்த முழு வளர்ச்சி பெற்ற ஆளுமையினை உடையவராகவும் இருத்தல் வேண்டும். நேர்மை, தன்னம்பிக்கை, சமுதாயத்தின் எதிர்கால சிறப்பில் முழு நம்பிக்கை கொண்டு செயற்படுதல், ஒருபுறச்சார் பின்மை, நாட்டுப்பற்று, தலைமைப்பண்பு, நல்லொழுக்கம், அன்புடன் பழகுதல், ஒத்துழைப்பு மனப்பான்மை போன்ற பிறர் பின்பற்றுவதற்குரிய, நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். சமுதாயம் ஆசிரியர்களிடம் உயர்ந்த மனப்பான்மைகளை எதிர் பார்க்கிறது. ஆசிரியர் சிறந்த பண்புகளையும், பயனுள்ள சமூக மனப்பான்மைகளையும் தமது நடத்தையிலும், செயல்களிலும் வெளிப்படுத்தினால் தான் மாணாக்கரது சமூக மதிப்புக்களின் வளர்ச்சிக்கு ஆசிரியர் ஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்க இயலும்.

மாணாக்கர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்து, பாடத் தலைப்பு, கட்டுரை போன்றவற்றிற்கான குறிப்புக்கள் தயாரிப்ப திலும், இக்குழுக்களில் சொல்லாடலில் அவர்களுக்குப் பயிற்சி யளிப்பதும் சமூக மதிப்புக்களை வளர்க்க உதவும். பள்ளிப்பாடங் களில் வரலாறு, புவியியல், மொழிப்பாடங்கள், மேலோரது வாழ்க்கைக் குறிப்புக்கள் போன்றன மாணவர்களிடையே சமூகப் பண்புகளை வளர்க்க ஆக்கமளிக்கின்றன.

மாணவர் மன்றக் கூட்டங்கள், மாணவர் பேரவை அமைப்பு ஆகியவற்றின் வாயிலாகப் பள்ளிச்செயல்கள் சமுதாயச் செயல்கள் போன்றவற்றில் பொறுப்புக்களை ஏற்று மாணவர்கள் செயற்படும் பொழுது ஒத்துழைப்பு, பொறுப்புடன் பங்குபெறுதல், பரிவு, கருத் தேற்றம், பின்பற்றல், சகிப்புத்தன்மை முதலிய மதிப்புக்கள் வளர்ச்சியடைகின்றன. வகுப்பறைத் தூய்மை, பள்ளியின்

சுற்றுப்புறத் தூய்மை, பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதி, தோட்டம் அமைத்தல், ஏழை எளியோர்களின் கல்விக்காகப் பொருள்-நிதி திரட்டல், மாணவர் சேமிப்பு வங்கி மற்றும் மாணவர் கூட்டுறவு சங்கம் நடத்தல் ஆகியவற்றின் வழியே மாணாக்கரிடையே சமூக மதிப்புக்கள் படிப்படியாக வளர்ச்சிபெறத் துணை செய்ய வேண்டும்.

தேசத் தலைவர்களின் பிறந்தநாள் விழாக்களை நடத்துதல், உலக உத்தமர்களின் சிறப்பியல்புகளையும், தியாகங்களையும் விளக்குதல் போன்றவற்றால் மாணாக்கரிடையே காணப்படும் சமூக மதிப்புக்கள் மேலும் வளர்ச்சி பெற உதவலாம். குடியரசு தினம், சுதந்திரதினம் போன்ற விழாக்களைக் கொண்டாடுதல் வாயிலாகவும், விளையாட்டுவிழா, ஆண்டுவிழா ஆகியவற்றில் பொறுப்புக்களை ஏற்று பங்கு பெறுதல் வழியேயும் மாணவர் களிடையே சமூக மதிப்புக்கள் வளர உதவலாம். சமூக நற்பணி, மன்றம் சாரணர் இயக்கம் ஆகியவற்றின் வாயிலாகப் பொதுநலப் பண்பு, பிறர்க்கு உதவுதல் ஆகிய மதிப்புக்களும், தேசிய மாணவர் படையின் வழியே ஒழுங்கு, கட்டுப்பாடு, ஒற்றுமை, தியாகம், நாட்டுப்பற்று ஆகிய மதிப்புக்களும் மாணாக்கரிடையே வளர்ச்சி பெற உதவ வேண்டும்.

அறநெறி மதிப்புக்கள்

மாணாக்கரிடையே பரவலாகக் காணப்படும் ஒழுங்கின்மை, அமைதியின்மை ஆகியவற்றைக் கட்டுப்படுத்த அறநெறி மதிப்புக்களில் வளர்ச்சி இன்றியமையாததாகும். "நமது இளைஞர் களிடைய ஒழுங்கு மனப்பான்மையையும் உரம்பெற்ற நல்லொழுக் கத்தினையும் வளர்ப்பதற்கும் அவர்களைச் சுதந்திர பாரதத்தின் நேர்மையும் சிறப்பும் கொண்ட குடிமக்களாக வளர்ப்பதற்கும் அறநெறிக்கல்வி இன்றியமையாததாகும்" என்று திரு ஸ்ரீபிரகாசா அவர்களது தலைமையில் செயற்பட்ட குழு கருத்துத் தெரிவித் துள்ளது.

வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளில் மனிதர்களுக்கு இடையில் எழும் தொடர்பின் அடிப்படையைச் சார்ந்தவை அற நெறி மதிப்புக்களாகும். ஒழுக்கம், நன்னடத்தை, கட்டுப்பாடு, அன்புடைமை, உண்மையுடைமை, நேர்மை, நடுநிலை பிறழாமை போன்றன அறநெறி மதிப்புக்களாகும். கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று மாணாக்கரிடையே நல்லொழுக்க வளர்ச்சிக்கான வாய்புகளை அளித்தலாகும். இது ஒன்றே கல்வி யின் நோக்கமாகும் என்றும் ஹெர்பார்ட் போன்ற கல்வியாளர்கள்

கூறுவர். ஒழுக்க வளர்ச்சியே கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும் என காந்தியடிகள் கூறுகிறார். பண்டைக் காலத்தி லிருந்து இன்றைய நவீன காலம் வரை கல்வியில் ஒழுக்க வளர்ச் சியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. நல்லொழுக் கத்துடன் இணைந்து வலுமிக்க மனவுறுதியும் மாணாக்கரிடையே உருவாக்கப்படவேண்டும். அறப்பண்புகள் ஏற்படக்கூடிய நடை முறை வாய்ப்புகளைப் பள்ளியில் மாணாக்கர்களுக்கு அமைத்துத் தந்து, அவற்றின் மூலம் அவர்களிடையே அறநெறி மதிப்புக் களை வளர்க்க உதவ வேண்டும். அறநெறிக் கல்வி ஒருவனிடம் சுதந்திர உணர்வை வளர்க்கிறது. பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஆகியோரது சிறந்த முன்மாதிரியான நடத்தை மாணாக்கரது அறநெறிக் கல்விக்கு அடிப்படையாகத் தேவைப்படுவதாகும். குடும்பத்தின் செல்வாக்குகள், குடும்பத்திலுள்ள பல்வேறு உறுப் பினர்களது நடத்தை ஆகியன மாணாக்கரது ஒழுக்க வளர்ச்சியில் முக்கியப் பங்கினைப் பெறுவனவாகும். இவற்றுக்கு அடுத்து, குழந்தை நல்லொழுக்கப்பண்புகளைப் பெற அவர்களுக்கு உதவு வதில் பள்ளிச் செல்வாக்கு முக்கியமானது. இச்செல்வாக்கின் விளைவாக, உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோள்களையும், அறக் கருத்துக்களையும் தங்களது உள்ளங்களிலே அமைத்து இவற்றிற் கேற்ற முறையில் நடந்துகொள்ளும் பழக்கத்தை மாணாக்கர் அடைகின்றனர். கல்வியின் வழியே இத்தகைய நல்லொழுக்கப் பழக்கங்களை மாணாக்கர் அடையவேண்டுமென்று சமுதாயம் எதிர்பார்க்கிறது. மாணாக்கரின் ஒழுக்கவளர்ச்சி தனிப்பட்டு நிகழ்வதில்லை. அதன் அறிவு வளர்ச்சி, மனவெழுச்சிகளது வளர்ச்சி, சமூகப் பண்புகளது வளர்ச்சி ஆகியவற்றுடன் இணைந்தே இது நிகழ்வதாகும். நல்லொழுக்கம் பற்றிய போதனையினைக் காட்டிலும், மகிழ்ச்சி பரவிய சிறப்பான குடும்பச் சூழ்நிலையும் பள்ளிச் சூழ்நிலையும் மாணாக்கர்களது நல்லொழுக்க வளர்ச்சிக்கு அதிக அளவு பயனுள்ளவையாகும்.

ஒழுக்க வளர்ச்சிக்கான பயிற்சி

ஏதோ ஓரிரண்டு பாடவேளைகளில் குறிப்பிட்ட சில ஆசிரி யர்களால் மட்டும் அளிக்கப்படும் பயிற்சியன்று. இதில் பள்ளிக் கல்வியின் ஒவ்வொரு பாடத்துக்கும் செயலுக்கும் பங்கு உண்டு. ஒவ்வோர் ஆசிரியரும் இதற்கான பொறுப்பினை ஏற்கவேண்டும். நல்லொழுக்கப் பண்புகளும், அறப்பற்றுகளும் செயற்படுவதற் கான பல வாய்ப்புக்கள் பள்ளியில் மாணாக்கர்களுக்கு அமைத்துத் தரப்படவேண்டும்.

கீழே குறிப்பிட்டுள்ளவை பொதுவாக மாணாக்கர்களது அற நெறி மதிப்புக்கள் வளர்ச்சி பெற உதவுவனவாகும்.

1. பண்புள்ள குடும்பச் செல்வாக்கு, சிறப்பான பள்ளிச் சூழ்நிலை, பள்ளியின் உயர்நிலைப்பட்ட மரபும் பாங்கும். (Tradition and Tore)

2. ஒழுங்குப் பயிற்சியும், ஒழுக்கப்பயிற்சியும் இணைந்தவையாகும். இவற்றில் ஆசிரியர்க்கு உதவக்கூடியவை: (அ) வகுப்பறையின் அன்றாடச் செயல்களைப் பழக்கங்களாக அமைத்தல், (ஆ) மாணாக்கர்களிடம் நேர்மையுடனும், தன்னம்பிக்கையுடனும், அன்பும்-பரிவும் கொண்டும், ஒருபுறச் சார்பின்றியும் நடந்து கொள்ளல், (இ) வகுப்பறையில் கவர்ச்சியுள்ள முறையில் பாடங்களையும், செயல்களையும் அமைத்தல், (ஈ) தமது கட்டளைக்கு விதிவிலக்கின்றி மாணாக்கர்கள் கீழ்ப்படிதலை உறுதி செய்து கொள்ளல், (உ) தேவையுள்ள அளவு பாராட்டுக்களைப் பயன்படுத்துதல், (ஊ) கட்டளைக்கு அச்சப்பட்டு அடங்கி நடத்தல் அல்லது அவற்றைக் காரணமின்றி எதிர்த்தல் ஆகியன இன்றி விதிகளின்பால் நன்மனப்பான்மை மாணாக்கர்களிடம் எழச் செய்தல்.

3. சிறப்புமிக்க நடத்தைக்குதவும் குறிக்கோள்களை மாணாக்கர்கள் உணர உதவும் இலக்கியம், வரலாறு போன்ற பல்வேறு பள்ளிப்பாடங்கள் மேலோரது வாழ்க்கைக் குறிப்புக்கள் ஆகியவற்றின் வழியே மாணாக்கர்களது வளர்ச்சிக்கு உதவுதல்.

4. தமது வாழ்க்கையில் எழக்கூடிய பிரச்சினைகளை அறநெறிகளுக்கு மாறுபடாத வகையில் தீர்ப்பதில் மாணாக்கர்களுக்கு வழிகாட்டுதல்.

5. பள்ளிச் செயல்கள், சமுதாயச் செயல்கள் போன்றவற்றில் பொறுப்புக்களை ஏற்றுச் செயற்பட மாணாக்கர்களுக்குப் பல வாய்ப்புக்கள் அமைத்துத் தருதல்.

6. குடிமைப்பயிற்சி, சாரணரியக்கம் போன்றவற்றுடன் இணைந்துள்ள செயல்கள் வழியே அறப்பண்புகளையும் இவற்றுடன் இணைத்துச் சமூகப் பண்புகளையும் மாணாக்கர்கள் பெற அவர்களுக்கு உதவுதல்.

7. இளம் பருவந்தொட்டே நல்ல அறக்கோட்பாடுகளைப் பற்றிய அறிவும், உணர்வும் மாணாக்கர்களுக்கு அளிக்கப்படல். இளம் பருவந்தொட்டே நல்ல அறப்பழக்கங்கள் மாணாக்கரிடையே உருவாதலில் பெற்றோர்களது ஒத்துழைப்பைப் பெறுதல்.

ஆன்மிக மதிப்புக்கள்

ஆன்மிக மதிப்புக்கள் ஒருவனது உளக் கட்டுப்பாட்டைச் சார்ந்தவையாகும். எளிமை, இரக்கம், தூய்மை, கடவுள்பற்று, புனிதத்தன்மை, பற்றுறுதி, சுயக் கட்டுப்பாடு, அஹிம்சை, அஞ்சாமை, தன்னலமற்ற நோக்கு, பரந்த மனப்பான்மை, பொறுமை, நற்பண்புகளைப் போற்றுதல் போன்றவை இவற்றில் அடங்கும். ஆன்மிக மதிப்புக்கள் வளர நடைமுறை வாய்ப்புகளைப் பள்ளிகளில் மாணாக்கர்களுக்கு அமைத்துத் தருதல்வேண்டும். ஆன்மிகப் பெரியோர்களின் கருத்துக்களை ஒப்பிட்டுப் படிப்பது, இவற்றைச் சார்ந்த உரையாடல், ஆன்மிகத்துறையில் ஈடுபட்டிருந்த மகான்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடுதல், ஆன்மிகப் பெரியோர்களின் பேருரைகளுக்கு ஏற்பாடு செய்தல், ஆன்மிக மதிப்புக்களை விளக்கும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள், பொதுப் பிரார்த்தனைக் கூட்டங்கள் போன்றவை மாணாக்கரிடையே ஆன்மிக மதிப்புகள் வளரப் பெரிதும் உதவும்.

சமயக் கல்வி

அறநெறிக் கல்வியும், சமயக்கல்வியும் பொதுவாக இணைந்தனவாகும். நம் நாட்டின் சமயச்சார்பற்ற அமைப்பில் கல்விக் கூடங்களில் மாணாக்கர்களுக்குச் சமயக்கல்வி அளிப்பதற்கு வழி செய்ய இயலாது. சமயச் சார்பற்றது என்பது சமய நம்பிக்கை அற்றது என்பது அன்று. தனக்கென்று ஒரு குறிப்பிட்ட சமயத்தை வலியுறுத்தாமல் எல்லாச் சமயங்களையும் சமமாகப் பாவித்து நடுநிலையில் நின்று பேணுவதே நமது அரசின் குறிக்கோளாகும். அறநெறி மற்றும் ஆன்மிக மதிப்புக்களைச் சமயத்தின் வாயிலாகத்தான் வளர்க்க இயலும். குறிப்பிட்ட சமயத்துடன் தொடர்புள்ள சமயக்கல்வியை மாணாக்கர்களுக்கு அளிப்பதில் சில பிரச்சினைகள் எழுமென்றாலும் பல சமயங்களுக்கும் பொதுவான சமயக் கருத்துக்களையும், உண்மைகளையும் கற்பிப்பதில் சிக்கல்கள் எழா. இது சமயச் சகிப்புத்தன்மையை மாணாக்கர்களிடையே வளர்ப்பதற்கும் உதவும். உண்மை, எழில், தூய்மை ஆகிய மனித வாழ்க்கையின் அடிப்படை மதிப்புக்களிடம் பற்றினை மாணாக்கர்களிடையே உருவாக்கி இவற்றை எட்ட முயலுமாறு மாணாக்கரைத் தூண்டுவதே உண்மைக் கல்வியின் நோக்கமாக அமையமுடியும். இத்தகைய நோக்கத்தை அடையப் பல முறைகள் இருப்பினும் இவற்றுள் ''சமய உணர்வு'' சிறந்ததாகும் என்னும் கருத்தில் உண்மை உள்ளது. சமய உணர்வின்றி எந்த மாணாக்கனும் முழுமையான கல்வியைப் பெற்றதாக எண்ண முடியாது என்றுகூடக் கூறலாம். மாணாக்கர்களது சமய மனப்பான்மை அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரது

மனப்பான்மைகளின் பிரதிபலிப்பாகவே அமைந்திருக்கும். ஆகவே சமயம் பற்றிய நன்மனப்பான்மைகளை மாணாக்கர் களிடம் உருவாக்குவதற்கு ஏற்றவகையில் இவர்கள் சிறந்த முன்மாதிரிகளாக நடந்து கொள்ள வேண்டும்.

திரு. ஸ்ரீபிரகாசா குழுவின் பரிந்துரைகள்

தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே உண்மை, அழகு, தூய்மை, கடவுள் நம்பிக்கை, பெரியோர்களிடம் பணிந்து நடத்தல், அடக்கம், நேர்மை, விடாமுயற்சி, தற்சார்பு, கருணை, சுற்றுப்புறத் தூய்மை, அஹிம்சை போன்றவற்றை வளர்க்கவேண்டும். இவற்றை வளர்ப்பதற்குரிய வழிமுறைக ளாவன :

1. பள்ளிப் பேரவைக் கூட்டத்தில் ஒருநிமிடம் மௌனமாக இறைவனைப் பிரார்த்தித்தல்.

2. மொழிப்பாடநூலில் சமயப் பெரியோர்கள், ஆன்மிகப் பெரியோர்கள் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகளையும், கருத் துக்களையும் சேர்த்தல்.

3. உலகச் சமயங்களுடன் தொடர்பு கொண்டவற்றைப் படங்கள் மற்றும் காட்சி-கேள்வித் துணைக்கருவிகள் வாயிலாக விளக்குதல்.

4. அறநெறிக் கதைகளின் வழியாக அறநெறிப் போத னைக்காக வாரத்தில் இரு பாடவேளைகளை ஒதுக்குதல்.

5. பல்வேறு பள்ளிச் செயல்களின் வழியே தொண்டு மனப் பான்மையை உண்டாக்குதல்.

6. உடற்பயிற்சி, விளையாட்டுப் போன்றவைகளால் ஒழுக்க வளர்ச்சிக்குத் துணைபுரிதல்.

உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்களிடையே சிந்தனை, பேச்சு, செயல் ஆகியவற்றில் தூய்மை, இலட்சியம் நிறைந்த செயல் களைப் பின்பற்றுதலும் போற்றுதலும், ஆன்மிகப் பெரியோர் களின் வழிநடத்தல், உடல், உள்ளம், அறநெறி, ஆன்மிகத் திறன்களை வளர்த்தல், நாட்டிற்குத் தொண்டு செய்தல், நாட்டின் உற்பத்திப் பெருக்கத்தில் தன் பங்கைச் செய்தல் போன்ற பண்புகளை வளர்க்க வேண்டும். இவற்றை வளர்ப்பதற்குரிய வழிமுறைகளாவன :

1. பள்ளிப்பேரவைக் கூட்டத்தில் இரண்டு நிமிட மௌனத் திற்குப் பின் உலகச் சமயங்களின் புனித நூல்களிலிருந்து சில பகுதிகளைப் படித்தல்.

2. மொழிப்பாடம், வரலாறு போன்ற பாடங்களில் உலகப் பெரும் சமயங்களின் முக்கியக் கருத்துக்களைச் சேர்த்தல்.

3. அறநெறிப் போதனைக்காக வாரத்தில் ஒரு மணி நேரத்தை ஒதுக்குதல்.

4. எல்லாச் சமய விழாக்களையும் மாணாக்கர்கள் யாவரும் சேர்ந்து கொண்டாடுதல். மேலும், அறநெறி மற்றும் ஆன்மிக மதிப்புக்களைப்பற்றிச் சமயப் பெரியோர்களின் பேருரைகளுக்கு ஏற்பாடு செய்தல்.

5. சமூகப்பணி செயல்களின் வழியே உடலுழைப்பினை மதித்தல், நாட்டுப்பற்று, மனித சமுதாயத்தின் மீது அன்பு செலுத்தல் போன்ற பண்புகளை மாணாக்கர்களிடம் தோற்றுவித்தல்.

6. உடற்பயிற்சி, விளையாட்டு ஆகியவற்றில் மாணாக்கர்களைக் கட்டாயமாகப் பங்கேற்கத் தூண்டுதல்.

7. மாணாக்கர்களது பள்ளிச் செயல்களை மதிப்பீடு செய்யும் பொழுது அவர்களது ஒழுக்கம், நடத்தை ஆகியவற்றையும் சேர்த்துக் கணக்கிடுதல்.

உயர்கல்வி நிலையில் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்கும் மாணாக்கர்களது சிந்தனை, மனவெழுச்சி போன்றவை பெரும் மாறுதலடைவதால் அவர்களுக்கு வழி காட்டுதல் இன்றியமையாததாகும். அவர்களது சொந்த முயற்சியினாலேயே பல்வேறு நற்பண்புகளும் ஆன்மிக மதிப்புக்களும் உருவாக்கப்பட வேண்டும். ஆன்மிக வளர்ச்சியே நாட்டின் சிறப்புக்கு அடிப்படையாகும். உயர்ந்த மதிப்புகளுக்கேற்ற ஒரு வாழ்க்கையைச் சமயம் அளிக்க வேண்டும். அறிவு, ஆற்றல், மனவுறுதி, நெஞ்சுரம் ஆகியவற்றை நமக்களிப்பது பல்கலைக் கழகங்களின் முக்கியப் பணியாகும். மாணவர்களிடம் அறநெறி ஆன்மிக மதிப்புக்களை வளர்க்க மேற்பார்வைத்திட்டம் மிகவும் அவசியமானதாகும். இம்மதிப்புக்களை வளர்ப்பதற்குரிய வழி முறைகளாவன:

1. மாணவர்கள் கூடிப் பொதுப் பிரார்த்தனை முடித்த பிறகே பணி தொடங்க வேண்டும்.

2. தேசிய, சமய விழாக்களைத் திட்டமிட்டு மாணவர்களைக் கொண்டாடச் செய்ய வேண்டும்.

3. ஆண்டுக்கு ஒருமுறை சமூகப்பணி முகாம் ஒன்று நடத்த வேண்டும்.

4. ஆன்மிகப் பெரியோர்களான சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், காந்தியடிகள் போன்றோரது படங்கள் கல்லூரிகளிலும், வகுப்பறைகளிலும் வைக்கப்பட வேண்டும். இம் மகான்களின் நல்லுரைகள் ஆங்காங்கு பலகைகளில் எழுதி வைக்கப்பட வேண்டும்.

5. பல சமயங்களிலுள்ள பொதுக் கருத்துக்களையும், அறநெறிக் கருத்துக்களையும் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். சமயங்களின் வரலாறும், சமய ஒப்புமைப்படிப்பும் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும்.

டாக்டர் இராதா கிருஷ்ணன் கல்விக்குழு உயர்கல்வியில் சமயக் கல்வியைச் செயற்படுத்துவதற்குப் பின்வரும் பரிந்துரைகளைக் கொடுத்துள்ளது.

1. சில நிமிடங்கள் மௌனமாகத் தியானம் செய்தல்.

2. முதலாண்டு பட்டப்படிப்பில் புத்தர், கன்பூஷியஸ், ஜோராஸ்டர், ஏசுகிறிஸ்து, சங்கரர், ராமானுஜர், மத்துவர், முகமது, கபீர், குருநானக் போன்ற சமயப் பெரியோர்களது வாழ்க்கை வரலாறுகளைக் கற்றல்.

3. இரண்டாம் ஆண்டில் திருமறை நூல்களிலிருந்து உலகப் பொதுப் பண்புகளைத் தேர்ந்தெடுத்து அறிதல்.

4. மூன்றாம் ஆண்டில் சமயத் தத்துவப் பிரச்சினைகளில் முக்கியமானவற்றைத் தெரிந்து கொள்வதுடன் எல்லாச் சமயங்களிலுமுள்ள பொதுக் கருத்துக்களையும், உண்மைகளையும் கற்றுக்கொள்ளல்.

கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகள்

சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புக்கள் வளர்ச்சிக்கான கல்வி நேரடியாகவும், மறைமுகமாகவும் கொடுக்கப்படவேண்டும். கருத்தேற்றம், பின்பற்றல், சொல்லாடல், சிறந்த போதனை ஆகியவற்றின் உதவிகொண்டு இக்கல்வி அளிக்கப்பட வேண்டும். குடும்பம், பள்ளி ஆகியவற்றில் நிலவும் சூழ்நிலை, ஆசிரியரது முன் மாதிரியான நடத்தை ஆளுமை, பள்ளியில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் வாய்ப்புக்கள் வசதிகள் போன்றன மறைமுகமாக மாணாக்கர்களிடம் இம்மதிப்புக்களை வளர்க்க உதவும். இம் மதிப்புக்கள் அவற்றினின்றும் எழக்கூடிய சீரிய விளைவுகள் ஆகியவை பற்றிய உணர்வு கல்வி ஏற்பாடு முழுதும் பரவிக்காணப் படவேண்டும். இம்மதிப்புக்களின் வளர்ச்சிக்கான பயிற்சி ஏதோ ஓரிரண்டு பாடவேளைகளில் குறிப்பிட்ட சில ஆசிரியர்களால்

மட்டும் அளிக்கப்படுவதன்று. இப்பயிற்சியில் கல்வியின் பிற பாடங்களுக்கும்,செயல்களுக்கும் பங்கு உண்டு. பிற பாடங்களைக் கற்பிக்கும் ஒவ்வோர் ஆசிரியரும் இதற்கான பொறுப்பினை ஏற்க வேண்டும். நேர்மை, தன்னம்பிக்கை, அன்பு, பரிவு, சமூகப் பொறுப்பு போன்ற நற்பண்புகளை மாணாக்கர் பெறுவதற்கான வாய்ப்புக்களையும், சூழ்நிலையையும் உருவாக்கித்தரவேண்டும். பள்ளிப் பாடங்கள், பள்ளிச் செயல்கள் ஆகியவற்றில் சிறப்புமிக்க நடத்தைக்குதவும் குறிக்கோள்கள் காணப்படவேண்டும். பள்ளி வாழ்க்கை, பள்ளியின் பாங்கு, பள்ளியின் சூழ்நிலை ஆகிய வற்றில் அவை பிரதிபலிக்கப்பட வேண்டும். சமூகப்பணிச் செயல்கள், குடிமைப் பயிற்சி, சாரணரியக்கம், பாடி வாழ்க்கை, பள்ளிப் பேரவைக் கூட்டங்கள், குழுச்செயல்கள் வேலை அனுபவம், பாட இணைச் செயல்கள், உலகச் சமயங்களின் விழாக்கள் போன்றவை மாணாக்கர்களிடம் நேர்மை, கட்டுப் பாடு, சமூகப் பொறுப்பு, ஒத்துழைப்பு மனப்பான்மை, சகிப்புத் தன்மை, பிறரை மதித்தல் போன்ற நன்மதிப்புக்கள் வளர்ச்சி பெற உதவும்.

இம்மதிப்புக்களை நேரடியாகவும் மாணாக்கர்களிடம் தோற்று விக்கச் சில முயற்சிகள் அவசியமாகும். சமூக அறநெறி ஆன்மிக மதிப்புக்களைக் கற்பிப்பதற்கென வாரத்திற்கு ஓரிரு பாட வேளைகள் ஒதுக்கலாம். தொடக்கநிலையில் உலகச் சமயங்களி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள், கதைகள் ஆகிய வற்றைப் பயன்படுத்தலாம். உயர்நிலைப்பள்ளி நிலையில் சமூக, அறநெறி ஆன்மிக மதிப்புக்களைப் பற்றிய சொல்லாடல், உரை யாடல் போன்றவை நடத்தலாம். இம்மதிப்புக்கள் பாடத்திட் டத்தோடு இணைந்தும், வாழ்க்கை முறையோடு கலந்தும் மாணாக்கர்களுக்கு கற்பிக்கப்படுவது பயனுள்ளதாகும். அறநெறி மதிப்புக்கள், சமயம் ஆகிய இவை இரண்டும் மிகவும் இணைந் தனவாகும். உலகின் எல்லாச் சமயங்களும் நேர்மை, உண்மை, மற்றவருக்கு மதிப்புக் கொடுத்தல், பெரியோரைப் போற்றுதல், பிராணிகளிடத்து அன்பு காட்டுதல், துன்பப்படுவோரது துயர் துடைத்தல் போன்ற அடிப்படைப் பண்புகளை வலியுறுத்து கின்றன. தொடக்கப் பள்ளி வகுப்புகளில் உலகின் பெரிய சமயங் களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளை நீதிபோதனை வகுப்பு வேளைகளில் ஆசிரியர் எடுத்துக்கூறுவது மிகவும் பயனுள்ளதாகும். உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் உலகின் பெரிய சமயத்தலைவர்களது வாழ்க்கை வரலாறுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு கதைகளைச் சமூகப்பாடம், இலக்கியம் ஆகியவற்றின் வழியே கற்பிக்கலாம். மேலும் உயர்

நிலைப்பள்ளிக் கல்வியின் கடைசி இரண்டாண்டுகளில் உலகச் சமயங்களின் அடிப்படைக் கோட்பாடுகளை மாணாக்கர் பயிலுவதற்கும் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இதற்கான பாட, செயல் திட்டங்களை 'யூனெஸ்கோ' (UNESCO) எனப்படும், ஐக்கிய நாட்டுக் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு வளர்ச்சிப் பிரிவு தீட்டியுள்ளது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

வினாக்கள்

1. மாணாக்கரிடையே சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புக்கள் வளர்ச்சியுற உதவக்கூடிய வழிகளைக் குறிப்பிடுக.

2. நமது பள்ளிகளில் சமயப்போதனை அளிப்பது பற்றிய உங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறவும்.

3. மாணாக்கரது ஒழுக்க-அறநெறி வளர்ச்சிகளுக்கு உதவும் மூன்று வழிகளைக் குறிப்பிடுக.

4. நம் சமயச் சார்பற்ற நாட்டில் சமய, ஆன்மிக, நல்லொழுக்க வளர்ச்சிக்கான வழிவகைகளை இந்தியக் கல்விக்குழு (1964-66) எவ்வாறு அளிக்கலாம் என்று கோடிட்டுக் காண்பிக்கிறது?

5. அறநெறிக்கல்வி, சமயக்கல்வி ஆகியன பற்றிய பல்கலைக் கழகக் கல்விக் குழுவின் பரிந்துரைகள் யாவை?

3. சமமான கல்வி வாய்ப்புகள்

பாரதநாடு பொருளாதாரத் துறையிலும் பண்பாட்டிலும் மேலும் முன்னேறுவதற்கும், நாட்டின் பல்வேறு பகுதியினரை ஒருங்கிணைப்பதற்கும், சமத்துவத்தின் அடிப்படையில் நாட்டில் குடியாட்சியினை வலுப்பெற்றதாகச் செய்வதற்கும் நாட்டின் எல்லாக் குடிமக்களுக்கும் சமமான கல்வி வாய்ப்புகள் அளிக்கப் படுவது (Equalisation of Education opportunities) இன்றியமை யாததாகும். கல்வியில் சம வாய்ப்புகளை எல்லோருக்கும் அளித்தல் குடியாட்சியின் அடிப்படையாகும். இது மக்களது உரிமையாகும். 'சம வாய்ப்புகள்' என்பது நாட்டிலுள்ள எல்லோ ருக்கும் ஒரே வகையான கல்வி என்பதன்று. சாதி, சமயம், மொழி, வட்டாரம், பொருளாதார நிலை, பால் போன்ற வேற்றுமைகளினால் பாதிக்கப்படாமல் ஒவ்வொருவருக்கும் தமது திறனுக்கும், கவர்ச்சிக்கும் ஏற்ப முழுமையான வளர்ச்சி பெறத் தேவையான கல்வி வாய்ப்புகளை அளிப்பதே 'சம வாய்ப்புகள்' என்பதன் உண்மைப் பொருளாகும். தனக்கு முழுப் பயனளிக்கக் கூடிய சிறந்த கல்வி வாய்ப்புகளை ஒவ்வொரு இந்தியக் குழந்தையும் பெற உதவுதலே சம வாய்ப்பு எனப்படும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிடையே கல்வி வாய்ப்புக்கான ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. கல்வியில் ஏற்றத்தாழ்வுகள் பல்வேறு வழிகளில் ஏற்படுகின்றன. தொடக்கக் கல்வி, உயர் நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிக்கல்வி ஆகியவற்றிற்கான வசதி யில்லாத பகுதிகளிலுள்ள பிள்ளைகள், இவ் வசதிகளைப் பெற்றுள்ள பிள்ளைகளைவிடக் குறைந்த கல்வி வாய்ப்புகளையே பெறுகின்றனர். பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றின் கல்வித் தரத்தில் காணப்படும் வேறுபாடும் சமத்துவமின்மையைத் தோற்றுவிக்கக்கூடும். வறுமையின் காரணமாகப் பிள்ளைகள் கல்வி வாய்ப்புகளை ஏற்றுப் பயனடையாத நிலையில் இருக்கக் கூடும். மாணாக்கர்களது குடும்பச் சூழ்நிலையின் வேறுபாடு, அவர்களது கல்வியினைப் பாதித்து அவர்களிடையே சமத்துவ மின்மையை உருவாக்கக்கூடும். இந்திய மக்களில் பெரும் பான்மையினர் ஏழைகளாகவும், சிறுபான்மையினர் செல்வந்தர் களாகவும் இருப்பதால் இவ்விரு பகுதியினரிடையே ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. மாநிலங்களிடையேயும், மாவட்டங்களுக்

கிடையேயும், கிராமங்களுக்கிடையேயும் பல்வேறு காரணங்களால் கல்வி வளர்ச்சி சம்பந்தப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

பாரத சமுதாயத்தைப் பொறுத்தமட்டில் இரு பகுதிகளில் கல்வியில் அதிக அளவு ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன என்று கொத்தாரிக் கல்விக் குழு (1964-66) சுட்டிக் காட்டியுள்ளது.

1. ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலரிடையே பல்வேறு கல்வி நிலைகளிலும், கல்விப் பகுதியிலும் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள்.

2. சமுதாயத்தில் கல்விகற்ற உயர் வகுப்பினர்களுக்கும் அட்டவணை வகுப்பினர், மலைவாழ் ஜாதியினர் ஆகிய பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் இடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள்.

குடியாட்சியின் நலன், சமுதாய நீதியின் இன்றியமையாமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இவ்விரு பிரிவினர்களுக்கு மிடையே சமமான கல்வி வாய்ப்புகளை அமைத்துக் கொடுக்கத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கல்வி வாய்ப்புகள் சமுதாயத்தில் யாவருக்கும் சமமாகக் கிட்டாமலிருத்தலுக்குப் பல காரணங்கள் உள்ளன என்று பல்கலைக்கழகக் கல்விக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. அவற்றில் சில பின்வருமாறு :

1. மாநிலங்களுக்கிடையே பொருளாதார நிலையில் வேறுபாடுகள் காணப்படுவதால் அவற்றின் மாவட்டங்கள், வட்டங்கள் ஆகியவைகளிலும் வேறுபாடுகளும், மாறுபட்ட நிலைகளும் காணப்படுகின்றன.

2. மாநிலங்கள், மாவட்டங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றிற் கிடையே எழுத்தறிவு நிலையில் வேறுபாடுகள் காணப்படு கின்றன.

3. பிற்பட்ட வகுப்பினரிடையே பொதுவாகக் கல்வியின் அவசியத்தை உணராத தன்மையும், குறிப்பாகப் பெண்களது கல்வியில் கவனக்குறைவும் காணப்படுகிறது.

4. மலைவாழ் மக்கள், காடுவாழ் மக்கள் ஆகியவர் களிடையே கல்வி வளர்ச்சி மிகவும் குறைந்து காணப்படுகிறது.

5. குறிப்பிட்ட சில பகுதிகளில் பள்ளிகளில்லாத காரணத் தால் கல்வி வளர்ச்சி குறைந்து காணப்படுகிறது.

6. பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் தேவையான அளவு ஆசிரியைகள் கிடைக்காததால் அப்பகுதிகளில் கல்வி வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது.

7. தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் நிறைந்துள்ள பகுதிகளில் சிறுவயதினரும் தொழிலில் அதிகமாக ஈடுபடுவதால் இப்பகுதிகளிலும் கல்வி வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

கல்வியில் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி, நாட்டில் எல்லோருக்கும் கல்விக்கான சம வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர கொத்தாரிக் கல்விக்குழு (1964-66) கீழ்வரும் பரிந்துரைகளைக் குறிப்பிட்டுள்ளது.

1. எல்லாக் கல்வியும் இலவசமாக அளிக்கப்படும் நிலைமையை நோக்கி முன்னேறுவது நமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

2. இலவசத் தொடக்கக்கல்வி, அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் 7/8ஆம் வகுப்புவரை இலவசக் கல்வி என்பது நமது முதல் குறிக்கோளாக அமையவேண்டும். தமிழ் நாட்டில் புகுமுக வகுப்புவரை இன்று கல்வி இலவசம் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

3. பாடநூல்களும், பிற கல்விப் பொருட்களும் இலவசமாக எல்லாத் தொடக்கப்பள்ளி மாணாக்கர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். கட்டாயக் கல்வியைச் செயற்படுத்துவதில் இது பெரிதும் உதவியாக இருக்கும். பாடப்புத்தகங்களை எல்லோருக்கும் இலவசமாக அளிக்கமுடியாவிட்டாலும் வசதியற்ற ஏழை மாணவர்களுக்காவது இலவசமாக வழங்கவேண்டும்.

4. இலவச உணவு அளிப்பதன் வழியே கல்வியில் தேக்கம், கழிவு ஆகிய பிரச்சினைகள் பெருமளவு தீர்க்கப்பட சாத்தியமாகின்றது. இலவச உணவுத்திட்டம் மாண்புடைய ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் வாயிலாகப் பள்ளிகளில் ஏழை மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க சாத்தியமாகிறது. இது நமது பள்ளிக் குழந்தைகளது உடல்நலத்திற்கும், உளநலத்திற்கும் கல்வி முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக விளங்கும். இலவச மதிய உணவுத்திட்டம் இன்று தமிழ்நாட்டுப் பள்ளிகளில் நன்கு செயற்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சியைத் துரிதப்படுத்தியுள்ளது என்று கூறுவது மிகையாகாது.

5. மாணவர்களிடம் சமத்துவ உணர்வையும், கட்டுப் பாட்டையும் ஏற்படுத்தச் சீருடை முறை உதவுகிறது. தமிழ் நாட்டில் பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஏழைக் குழந்தை களுக்கு இலவசச் சீருடை வழங்குதல் பெரும் வெற்றி கண்டுள்ளது.

6. படிப்புதவிப் பணம் வழங்குதல் பெருமளவில் விரிவாக்கப்படவேண்டும். பண உதவி அளிப்பது உயர் தொடக்கப் பள்ளி நிலையிலிருந்தே தொடங்கவேண்டும். இது உயர்கல்வி நிலைவரை பரவிக் காணப்படவேண்டும். இந்நிலைகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களுள் குறைந்தது 10% மாணாக்கர் களுக்கும், பட்ட மேற்படிப்பில் 20% மாணாக்கர்களுக்கும், தொழிற் கல்வியில் 50% மாணாக்கர்களுக்கும் படிப்புதவிப்பணம் அளிக்கப் படவேண்டும். இவற்றுடன் கடனாகப் படிப்புதவிப்பணம் (Loan-scholarships) அளித்தலும் தேவை. பொருளாதார அடிப்படையில் அளிக்கப்படும் படிப்புதவிப் பணத்துடன் தகுதி (Merit) யின் அடிப்படையிலும் இவை அளிக்கப்பட வேண்டும். தொழிற்கல்வி நிறுவனங்களிலும் இத்தகைய உதவிப்பணம் அளிக்கப்பட வேண்டும்.

7. தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், உயர்கல்வி நிலையங்கள் முதலியவற்றில் பாடநூல் வங்கிகள் (Book Banks) நிறுவப்படுவது விரும்பத்தக்கது. பாடநூல்கள் வாங்குவதற்கு வசதியற்ற மாணாக்கர்களுக்கு இது பெரிதும் பயனுள்ளதாக அமையும்.

8. உயர்நிலைப்பள்ளிக்கல்வி நிலை, உயர்கல்விநிலை ஆகிய வற்றிற்கான விலை குறைந்த தரமான பாடநூல்கள் தயாரிக்கப் பட்டு மாணாக்கர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

9. இப்போது வசதியுள்ள சிலர் தங்களது குழந்தைகளைச் சிறந்த சில பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். இதற்கு ஈடாக எல்லோர்க்கும் தரமான கல்வி அளிக்கும் பொதுப்பள்ளிகள் (Common Schools) நிறுவப்படல் கல்வியில் சம வாய்ப்பினைத் தோற்றுவிக்க உதவும். பொதுப்பள்ளித்திட்டம் வெற்றியுடன் செயற்படப் பல்வேறு பள்ளி ஆசிரியர்களிடையே ஊதிய ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும். எல்லாப் பள்ளிகளது கல்வித் தரமும் சீராக ஒரே நிலைக்கு உயர்த்தப்படுதல் இன்றியமையாத தாகும்.

10. ஊனமுற்றோரின் கல்விக்காகத் தனிக் கவனம் செலுத்த வேண்டும். இவர்களுக்கெனத் தனிக் கல்விநிலையங்களை

ஏற்படுத்திப் பராமரிப்பதோடு பிற கல்விநிலையங்களிலும் இவர்களைச் சேர்த்துக் கல்வி பயில வாய்ப்புகள் அளிக்கலாம். இவர்களுக்குக் கல்வி உதவித்தொகை, இலவசப் போக்குவரத்து வசதி போன்ற சலுகைகள் அளிக்கப்பட வேண்டும்.

11. பெண்கள் கல்விக்கும் ஆண்கள் கல்விக்குமிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைப் பெருமளவு குறைக்க வேண்டும். பெண்கல்விக்கெனத் தனித்திட்டங்கள் வகுக்கப்பட்டு அவற்றிற்கு முன்னுரிமையும் நிதியும் ஒதுக்கப்பட வேண்டும். பெண்களுக்கான வேலை வாய்ப்புகளைப் பற்றியும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

12. போக்குவரத்துச் சலுகைகள் மாணாக்கர்களுக்குச் செய்து தரப்பட வேண்டும். பஸ், ரயில் இணைப்புள்ள இடங்களில் மாணாக்கர்களுக்குக் கட்டணச்சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். இவ்வசதிகள் மேலும் அதிகப்படுத்தப்பட வேண்டும். தனியார் கல்வி நிலையங்களில் மாணாக்கர்களுக்கு எனப் பள்ளி பஸ் வசதிகள், கல்லூரி பஸ் வசதிகள் ஏற்பாடு செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டும். இதற்கென அவசியமாயின் சில சலுகைகளை அரசு அனுமதிக்கலாம்.

13. இலவச மருத்துவ வசதிகள் மாணாக்கர்களின் உடல் நலத்தைப் பேணிக்காப்பதற்கு உதவியாக அமையும். மருத்துவப் பரிசோதனைகள் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் நடைபெறுதல் மாணாக்கர்களின் உடல்நிலையில் காணப்படும் குறைபாடுகள், புலக்குறைபாடுகள் ஆகியவற்றிற்கு ஆரம்பநிலையிலேயே மருத்துவ உதவி செய்வதற்கும், அக்குறைபாடுகளை அவ்வப்போது நீக்குவதற்கும் பெரிதும் உதவி செய்யும். மாணாக்கர்களின் இலவச மருத்துவப் பரிசோதனைகளுக்காகப் பகுதிநேர மருத்துவர் நியமிக்கப்பட வேண்டும்.

14. பிற்பட்ட மக்கள், பழங்குடியினர், ஏழைகள், பெண்கள் ஆகியோரது கல்வியில் சமூகநல அலுவலர்களது உதவியுடன் கல்விப் பிரச்சாரங்கள் செய்தல் வேண்டும். இம்முயற்சிகளினால் இப்பிரிவினர்கள் கல்வி கற்பதில் அக்கறை கொள்ள ஏதுவாகிறது.

வினாக்கள்

1. உயர்நிலைப் பள்ளிக் கல்விக் கட்டத்தில் எல்லோர்க்கும் சமமான கல்வி வாய்ப்புகளை அளிப்பதற்குத் தமிழ்நாடு அரசினால் மேற்கொள்ளப்பட்ட மூன்று முக்கிய நடவடிக்கைகளை ஆராய்க.

2. 'எல்லோர்க்கும் சமமான கல்வி வாய்ப்புகள்' என்னும் கருத்து வெறும் கனவாக நின்றுவிடாமல் நடைமுறைப் பயனுள்ளதாக அமைய என்ன திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன?

3. கல்வித்துறையில் எல்லோருக்கும் சமவாய்ப்புகள் அளிப் பதில் உங்களுடைய மாநில அரசும், மத்திய அரசும் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றன?

4. 'கல்வி வாய்ப்புகளில் சமசந்தர்ப்பம்' என்றால் என்ன? இதனை அடைய மூன்று வழிகளைக் கூறுக.

5. நம் இந்தியாவில் சமமற்ற வாய்ப்புகள் எவ்வகையில் எழுகின்றன? அந்தச் சமமற்ற வாய்ப்புகளை எந்த வகையில் மிகக் குறைவாக்கலாம்?

6. கல்வி வாய்ப்புகளைச் சமமாக்குதல் என்றால் என்ன? இதற்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் எவ்வாறு உதவியுள்ளன?

7. இந்தியாவில் கல்வியில் சமவாய்ப்புகள் அளிப்பதில் உள்ள சிக்கல்கள் யாவை?

4. மொழிப்பிரச்சினை

பிற நாட்டுக் கல்வியில் பொதுவாக மொழிப்பிரச்சினை காணப்படுவதில்லை. மொழிப்பிரச்சினை (The Language Problem) நம் நாட்டின் கல்வி முறையில் மட்டும் ஒரு சிக்கலான பிரச்சினையாக இருந்துவருகிறது. இந்திய மாநிலங்களில் இரு மொழிகள் அல்லது பல மொழிகள் பேசும் மக்கள் வாழ்கின்றனர். நம் நாட்டில் 380 மொழிகள் வழக்கிலுள்ள போதிலும் பெரும்பாலான மக்களால் 14 முக்கிய மொழிகள் பேசப்படுகின்றன. இவை தவிர, ஆங்கில மொழியும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே ஓரளவு பரவிக் காணப்படுகிறது. ஆங்கில மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோரும் நம் நாட்டில் வாழ்கின்றனர்.

கல்வியின் பல்வேறு நிலைகளில் எம் மொழி பயிற்றுமொழி யாகப் பயன்படுத்தப்படவேண்டும்? மாணாக்கர்கள் எத்தனை மொழிகளைக் கற்க வேண்டும்? நம் நாட்டின் பொதுவான நிர்வாகமொழி எனப்படும் இந்திமொழி, அனைத்துலக மொழி எனப்படும் ஆங்கிலம் ஆகியவற்றின் இடம் என்ன? மாணாக்கர்கள் கற்க வேண்டிய மொழிகள் எந்தெந்த வகுப்புகளில் தொடங்கப் பெற வேண்டும்? என்பன போன்ற பல வினாக்களுக்குக் கல்வி வல்லுநர்களும் அரசினரும் விரைவில் எல்லோரும் ஏற்கத் தக்க விடைகளைக் காணாவிடில் இந்தியக் கல்வியில் காணப்படும் மொழிப் பிரச்சினை மேலும் தீவிரமடைந்து அதனால் மாணாக்கர் களது வளர்ச்சி, நாட்டின் முன்னேற்றம் ஆகியவை தடைப்படக் கூடும். கல்வி அமைப்பில் மொழிகளைப் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படும்போது ஐந்து பிரிவுகளிலான மொழிகளின் பங்கு பற்றி முடிவெடுத்தல் வேண்டும். இவை தாய்மொழி, தாய் மொழியல்லாத வட்டார மொழி, மத்திய அரசின் நிர்வாக மொழி, பண்டையப் பண்பாட்டு மொழிகளெனப்படும் வடமொழி, அரபு மொழி, பாரசீகமொழி போன்றவை, தற்கால அனைத்துலக மொழி எனப்படும் ஆங்கிலம் என்பனவாகும். மொழிப் பிரச்சினை மனவெழுச்சிகளின் அடிப்படையிலேயே பொதுவாகப் பலரால் அணுகப்படுவதால் இது பற்றி உணர்ச்சி வயப்பட நேரிட்டு இப் பிரச்சினை பற்றிக் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன.

அதோடு இதன் விளைவாக இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவுமே இதனை மேலும் தீவிரப் படுத்துவனவாகவே முடிகின்றன. மொழிப் பிரச்சினை பொது வாகச் சீரிய சிந்தனையின் அடிப்படையிலேயே அணுகப்பட வேண்டும்.

இந்தியக் கல்விஉலகில் மொழிப்பிரச்சினை கிழக்கிந்தியக் கம்பெனி காலத்திலேயே தொடங்கியது எனக் கூறலாம். 1835 ஆம் ஆண்டில் மெக்காலேயின் குறிப்புகளின் அடிப் படையில் ஆங்கிலம் இந்தியாவில் கல்வியின் பயிற்றுமொழியாக் கப்பட்டது. 'ஆங்கிலமுறைக் கல்வியின் வழியே நமக்கும் நாம் ஆளும் பலகோடி இந்திய மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக அமையக்கூடிய ஒரு வகுப்பினரை இந்தியாவில் உருவாக்க வேண்டும். இவ்வகுப்பினர் இரத்தத்திலும் உடல் வண்ணத் திலும் இந்தியர்களாகயிருப்பர். ஆனால் மனப்பான்மை, கருத் துகள், பழக்கவழக்கங்கள், அறிவு ஆகியவற்றில் ஆங்கிலேயர் களைப் போலிருப்பர்'—என்று மெக்காலே குறிப்பிட்டார். மெக்காலேயின் கல்விக் குறிப்பின் விளைவாக ஆங்கில ஆட்சி யினர் ஆங்கிலம் முக்கிய பயிற்றுமொழியாக வளர்ச்சி பெற முழு மையான ஆதரவினை நல்கினர். இதனால் தாய்மொழிகளது செல்வாக்கும் வளர்ச்சியும் பெரிதும் பாதிக்கப்பட்டன. பின்பு, 1854-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட உட்கல்வி அறிக்கையில் (Wood's Despatch) பயிற்றுமொழி, பிற இந்திய மொழிகள் பயிலுதல் ஆகியவற்றைப் பற்றிப் பின்வரும் கருத்துத் தெரிவிக்கப் பட்டது. 'இந்திய மொழிகள் ஆங்கிலத்துடன் இணைந்து கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இந்திய மொழிகள் புறக்கணிக்கப்படக்கூடாது. ஆங்கிலம் மட்டுமே பயிற்றுமொழி யாயிருக்க வேண்டுமென்பது நியாயமற்றதாகும்.' மேலும் நாட்டின் கல்வி அமைப்பின் அடித்தளமான தொடக்கநிலை நாட்டுப்பள்ளிகளில் தாய்மொழி பயிற்றுமொழியாக இருக்க வேண்டுமென்றும், இதன் மூலம் பொதுமக்களுக்குத் தேவையான நடைமுறைப் பயனுள்ள கல்வியை இவை அவர்களுக்கு அளிப் பதாக அமைய வேண்டும் என்றும் உட் கல்வி அறிக்கை குறிப் பிட்டது.

இந்திய சுதந்திரத்திற்குப் பின் மொழிப் பிரச்சினை பல்வேறு உருக்கொண்டு மிகவும் சிக்கலான பிரச்சினையாகத் தோன்றி யுள்ளது. நாடு சுதந்திரம் பெற்றபின் நாட்டிற்குப் பொது இணைப்பு மொழியாகப் பெரும்பான்மையினரால் பேசப்படும் இந்தி மொழி வலியுறுத்தப்பட்டது. ஆங்கிலத்திற்குப் பதில் அலுவலக மொழியாக இந்திமொழியினைப் பயன்படுத்த வேண்டுமென்ற

இயக்கம் தோன்றியது. இதே போது தாய்மொழி இயக்கங்களும் வலுப்பெற்றன. மொழிப்பிரச்சினையுடன் அரசியலும் இணைந்து கல்வித் திட்டத்தில் இதற்கு ஒரு தீர்வு காண மேற்கொள்ளப் படும் முயற்சிகள் யாவற்றிலும் குறுக்கிடலாயிற்று. சுதந்திர இந்தியாவில் அமைக்கப்பட்ட கல்விக் குழுக்கள் யாவுமே மொழிப் பிரச்சினை பற்றி ஆராய்ந்து கருத்துகளைத் தெரிவித்துள்ளன.

மொழிப் பிரச்சினை பற்றி டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களது தலைமையில் செயற்பட்ட செகண்டரிக் கல்விக் குழுவின் கருத்துகளாவன:—

1. தாய்மொழி அல்லது வட்டாரமொழிதான் உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் இறுதிவரை பயிற்று மொழியாக இருத்தல் வேண்டும். இதே சமயம் சிறுபான்மை மொழியினர்க்கும் அவர்களது தாய்மொழியிலேயே கல்வி பெற வாய்ப்புகள் இருத்தல் இன்றியமையாததாகும்.

2. ஆங்கிலம், இந்தி அல்லது வேறு ஒரு தாய்மொழியல்லாத மொழி தொடக்கக் கல்வி நிலைக்குப் பின் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்படவேண்டும். எந்த இரு மொழிகளும் ஒரே வகுப்பில் தொடங்கப்படல் கூடாது.

3. உயர்நிலைப் பள்ளி நிலைகளிலும், உயர் செகண்டரி நிலையிலும் இரண்டு மொழிகள் கற்கவேண்டும். இவற்றில் ஒன்று தாய்மொழி அல்லது வட்டார மொழி ஆகும்.

4. உயர் நிலைப் பள்ளி நிலையில் மாணாக்கர் கற்க வேண்டிய மொழிகள் :

(அ) தாய்மொழி அல்லது வட்டார மொழி அல்லது தாய்மொழி மற்றும் புராதன மொழி ஆகியவற்றின் கலப்புப் படிப்பு.

(ஆ) பின் வருவனவற்றில் ஏதேனும் ஒரு மொழி :

(i) இந்தி (இந்தி தாய்மொழியாக இல்லாதவர்களுக்கு)

(ii) தொடக்க ஆங்கிலம் (தொடக்க நிலையில் ஆங்கிலம் கல்லாதவர்களுக்கு)

(iii) உயர் ஆங்கிலம் (தொடக்க நிலையில் ஆங்கிலம் கற்றவர்களுக்கு)

(iv) தற்கால இந்தியமொழி (இந்தி தவிர)

(v) தற்கால அயல் நாட்டுமொழி (ஆங்கிலம் தவிர)

(vi) புராதன மொழி

மத்தியக்கல்வி ஆலோசனைக்குழு (Central Advisory Board of Education) பின்னர் 1956ஆம் ஆண்டில் மும்மொழித் திட்டம் (Three Language Formula) ஒன்றினைத் தெரிவித்தது. இத் திட்டத்தின்படி உயர்நிலைப் பள்ளி மாணவன் மற்றப் பாடங் களோடு பின்வரும் மூன்று மொழிகளைக் கற்கவேண்டும்.

1. (அ) தாய்மொழி அல்லது
   (ஆ) வட்டாரமொழி அல்லது
   (இ) தாய்மொழி மற்றும் வட்டார மொழியின் கலப்புப் படிப்பு அல்லது
   (ஈ) வட்டாரமொழி மற்றும் பண்டைய மொழியின் கலப்புப் படிப்பு

2. ஆங்கிலம் அல்லது தற்கால ஐரோப்பிய மொழிகளில் ஏதேனும் ஒன்று.

3. (அ) இந்தி (இந்தி பேசாத பகுதியினருக்கு) அல்லது
   (ஆ) வேறு இந்திய மொழி(இந்தி பேசும் பகுதியினருக்கு)

மும்மொழித் திட்டத்தினைச் செயற்படுத்தலில் நடைமுறைச் சிக்கல்கள் தோன்றியுள்ளன. இவையாவன :

1. பாடத்திட்டத்தில் மொழிப் பாடங்களின் சுமை அதிகரிக்கின்றது.
2. இந்தி பேசும் மாநிலத்தினர் மூன்றாவது மொழியாக வேறோர் இந்திய மொழியினைப் பயில வேண்டுமென்பது தேவையும் பயனும் அற்றதாகத் தோன்றுவது.
3. இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி பற்றிய எதிர்ப்பு மனப்பான்மை இருத்தல்.
4. மும்மொழித் திட்டத்தினை நாடு முழுவதும் செயற் படுத்தப் போதிய நிதி வசதியும், பல்வேறு மொழி ஆசிரியர்களும் கிடைப்பது அரிது.

மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறைச் சிக்கல்களாலும் பிற காரணங்களின் விளைவாகவும் மும்மொழித் திட்டம் நாட்டின் எப் பகுதியினராலும் ஆர்வத்துடனும் ஊக்கத்தோடும் செயற் படுத்தப்படவில்லை.

கொத்தாரிக் கல்விக்குழு மொழிப்பிரச்சினையினை ஆராய்ந்து இது பற்றிய தனது கருத்துகளைக் குறிப்பிட்டுள்ளது. இவை பின்வருமாறு:

1. அலுவலக மொழி அல்லது நிர்வாக மொழி என்னும் முறையில் தாய்மொழிக்கடுத்தபடியான முக்கியத்தொடக்கத்தை இந்திமொழி பெறுகிறது.

2. ஆங்கிலமொழி அறிவு நாட்டுக்குத் தொடர்ந்து தேவைப்படுவதாகும். ஆகவே ஆங்கிலத்தின் பயனைப் புறக்கணிக்கக் கூடாது.

3. மாணவன் மொழியில் அடையும் திறன், கற்பிக்கும் ஆசிரியர்களையும், கற்றலில் செலவிடப்படும் காலத்தையும் சார்ந்தமைவதாகும்.

4. மூன்று மொழிகளை மாணாக்கர் கற்க ஏற்றநிலை கீழ் செகண்டரி நிலையாகும் (வகுப்புகள் VIII to X)

5. கூடுதல் பிறமொழிகள் இரண்டையும் ஒரே வகுப்பில் கற்பிக்கத் தொடங்கக் கூடாது.

6. எந்த ஒரு நிலையிலும் நான்கு மொழிகளை மாணாக்கர்கள் கற்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தக்கூடாது.

7. தேவையும் ஊக்கமும் காணப்படும் பொழுதில் அந்நிலையில், இந்தி அல்லது ஆங்கிலம் கற்றலைத் தொடங்க முற்படலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் ஒவ்வொரு மாணவனும் பின்வரும் மொழிகளைக் கற்கவேண்டும்.

1. தாய்மொழி அல்லது பிராந்தியமொழி.

2. மத்திய அரசின் நிர்வாக மொழியான இந்தி அல்லது இணைப்பு நிர்வாக மொழியான ஆங்கிலம்.

3. மேலே (1) (2) ல் குறிப்பிடப்பட்டவற்றுள் சேராத தற்கால இந்தியமொழிகளில் ஒன்று அல்லது அயல்நாட்டு மொழி. இது பயிற்றுமொழியல்லாத மொழியாக இருத்தல் வேண்டும்.

மாணாக்கர்கள் அவர்களது கல்விக் காலத்தில் தொடக்க நிலையில் தாய்மொழி அல்லது வட்டாரமொழி கற்க வேண்டும். உயர்தொடக்கநிலையில் தாய்மொழி அல்லது வட்டார மொழி

யுடன் நாட்டின் நிர்வாக மொழியான இந்தி அல்லது இணை நிர்வாக மொழியான ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும். செகண்டரி நிலையில் மாணாக்கர்கள் தாய்மொழி அல்லது வட்டார மொழி, நாட்டின் நிர்வாகமொழி அல்லது இணை நிர்வாக மொழி, மேலே குறிப்பிடப்பட்டவற்றுள் சேராத தற்கால இந்திய மொழி அல்லது ஐரோப்பிய மொழி ஆகிய மூன்று மொழிகளைக் கற்க வேண்டும்.

உயர்செகண்டரிநிலையில் இரண்டு மொழிகள் கற்பிக்கப்பட வேண்டும். இவை ஏற்கனவே முன்நிலைகளில் மாணாக்கர்கள் கற்ற ஏதேனும் இரண்டுமொழிகளாக இருக்கலாம்; அல்லது தற்கால இந்திய மொழிகள், தற்கால அயல்நாட்டுமொழிகள், பண்டைய இந்திய மொழிகள், பண்டைய அயல்நாட்டு மொழிகள் ஆகிய மூன்றுமொழிப் பிரிவுகளிலிருந்து ஏதேனும் இரண்டு மொழி களாக இருக்கலாம்.

உயர்கல்வியில் மொழிக் கல்வி கட்டாயமான ஒரு பகுதியாகத் தேவையில்லை.

ஒவ்வொரு மாநிலத்திலும் குறிப்பிட்ட சில பள்ளிகளில் ஆங்கிலம் தவிர பிரெஞ்சுமொழி, ஜெர்மன்மொழி, ருஷியமொழி போன்ற பிற தற்கால நூலகமொழிகளைக் கற்கவும் வாய்ப்புகள் இருக்க வேண்டும். இவற்றில் ஒன்றினை ஆங்கிலம் அல்லது இந்திக்குப் பதில் மாணாக்கர் கற்கலாம். இதேபோல் இந்தி பேசப்படாத பகுதியைச் சார்ந்த மாணாக்கர்கள் தற்கால இந்திய மொழி எதனையும் கற்க வாய்ப்பிருக்க வேண்டும். இந்திமொழி பரவப் பல்வேறு ஆக்கமுறைப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், இதனைக் கற்க விருப்பமில்லாத பகுதிகளில் இந்திமொழி வற்புறுத்தித் திணிக்கப்படக் கூடாது. மாணவன் தாய்மொழியில் போதிய புலமை பெற்ற பின்னரே, குறிப்பாக, ஐந்தாம் வகுப்பிற்குப் பின்னரே, வேறு ஒரு மொழி கற்பிக்கப்பட வேண்டும். வடமொழி, அராபிமொழி போன்றவற்றை எட்டாம் வகுப்பிற்குப்பின் மாணாக்கர்கள் விரும்பினால் கற்கலாம்.

மத்திய அரசின் தீர்மானம்

பயிற்றுமொழி, மொழித்திட்டம் ஆகியவை பற்றித் தோன்றிய கருத்து வேறுபாடுகள் குறித்துத் தேசியக் கல்விக் கொள்கை பற்றிய நாடாளுமன்ற அங்கத்தினர்கள் குழு, மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாடு, மத்தியக்கல்வி ஆலோசனைக்குழு ஆகியவை ஆராய்ந்தன. இதன் விளைவாக மத்திய அரசு பின்வரும் முடிவுகளை எடுத்தது.

1. மும்மொழித் திட்டத்தினைக் கல்வி ஏற்பாட்டில் நடைமுறையில் செயற்படுத்துவது எல்லா மாநில அரசுகளின் பொறுப்பாகும்.

2. மத்தியப் பணியாளர்கள் தேர்வு ஆணைக்குழுவின் தேர்வுகள் யாவும் ஆங்கிலம், இந்தி, இந்திய அரசியலமைப்பின் எட்டாவது சரத்தில் சொல்லப்பட்ட தேசிய மொழிகள் அனைத்திலும் நடத்தப்படும். இதனைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும்.

3. மத்தியப் பணியாளர்கள் தேர்வு ஆணைக் குழுவின் தேர்வுகளில் இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் கட்டாயப் பாடங்களாகும். இந்தியைத் தேர்வுமொழியாகக் கொண்டவர்களுக்கு இந்திய அரசியலமைப்பின் எட்டாவது சரத்தில் சொல்லப்பட்ட தேசிய மொழிகளில் ஏதேனும் ஒன்று கட்டாயப் பாடமாகும்.

4. மேலே சொல்லப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு வழி முறைகளாவன :—

   (அ) ஒவ்வொரு மாநில மொழியும் கூடிய விரைவில் நிர்வாக மொழியாகவும், பல்கலைக் கழக நிலையில் பயிற்றுமொழியாகவும் ஆக்கப்படவேண்டும்.

   (ஆ) பள்ளிகளிலும் பல்கலைக் கழக நிலையிலும் இந்திமொழி கற்பித்தலின் தரம் படிப்படியாக உயர்த்தப்பட வேண்டும்.

   (இ) ஆங்கில மொழியின் நடைமுறைப் பயனைக் கருத்தில் கொண்டு இம்மொழி தொடர்ந்து மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும்.

5. தேசிய மொழிகளின் சீரிய வளர்ச்சிக்கான திட்டம் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும்.

ஐந்தாண்டுத் திட்டங்களும் மொழிகளின் வளர்ச்சியும்

மும்மொழித் திட்டத்தினை நடைமுறையில் செயற்படுத்துவதென மத்திய அரசு முடிவெடுத்துள்ளதன் விளைவாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய மொழிகளின் வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக சுமார் 26 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட

காலத்தில் இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கான விரிவான திட்டம் பல்கலைக் கழக நிலையில் தேவைப்படும் தரமான பாட நூல்களை இந்திய மொழிகளில் தயாரித்தல் போன்றவை துவக்கி வைக்கப்பட்டன. இத் திட்டங்களை மேலும் தொடர்ந்து செயற் படுத்தவும் விரிவுபடுத்தவும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (*1974-1979*) போதுமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் இருமொழித் திட்டம்

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மும்மொழித் திட்டத்திற்குப் பதிலாக தாய்மொழியான தமிழ், தொடர்பு மொழியான ஆங்கிலம் ஆகியவற்றைக் கொண்ட இருமொழித் திட்டம் இப்போது செயற்படுத்தப்பட்டுள்ளது. இதே சமயம் சிறுபான்மை மொழியினர்க்கு அவர்களது தாய்மொழிக் கல்விக்கும், தாய்மொழியிலேயே கல்வி பயில்வதற்கும் வாய்ப்புகள் அரசால் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

பயிற்று மொழி

பள்ளிக் கல்வி நிலையில் ஏற்கனவே தாய்மொழி அல்லது வட்டார மொழி பயிற்று மொழியாக உள்ளது. பள்ளிக் கல்வியில் செகண்டரிக் கல்வியின் இறுதிவரை தாய்மொழி அல்லது வட்டார மொழிதான் பயிற்று மொழியாக இருத்தல் வேண்டும் என்று முதலியார் கல்விக்குழு (*1952-53*) பரிந்துரை செய்தது. இதே போது சிறுபான்மை மொழியினர்க்கும் அவர்களது தாய்மொழியிலேயே கல்வி பெற வாய்ப்புகளும், தனி வசதிகளும் செய்து தரப்பட வேண்டுமென்று இக் குழு வலியுறுத்தியது.

பயிற்றுமொழியைப் பொறுத்தவரை தாய்மொழி அல்லது வட்டாரமொழி உயர் கல்விக் கட்டம் வரை பயிற்று மொழியாக இருக்க வேண்டுமெனக் கொத்தாரிக் கல்விக்குழு (*1964-66*) கருத்துத் தெரிவித்துள்ளது. இதே போது பட்டமேற்படிப்புக்கு ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருத்தல் தேவை. தொழில் நுட்பக் கல்வியில் ஆங்கிலமே பயிற்றுமொழியாகத் தொடர்ந்து இருக்கும். அகில இந்தியக் கல்வி நிலையங்களில் ஆங்கிலமே பயிற்றுமொழியாகத் தொடர்ந்திருக்குமென்று இக் குழு தெரிவித்துள்ளது.

*1967*ஆம் ஆண்டு நடைபெற்ற பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் மாநாட்டில் பயிற்றுமொழிபற்றிப்பின்வரும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

1. தாய்மொழி பயிற்று மொழியாக ஆக்கப்படுவதின் காரணமாக ஆங்கிலம் அறவே புறக்கணிக்கப்படக் கூடாது. ஏனெனில் இம் மொழியின் வழியாகத்தான் வளர்ந்து வரும் பொருளறிவுடன் நேரடித் தொடர்பு கொள்ளச் சாத்தியமாகும்.

2. பிராந்திய மொழியைப் பயிற்று மொழியாக்கும் திட்டம் ஒவ்வொரு கல்விநிலைக்கும் நிறுவனத்திற்கும் பாடத்திற்கும் ஏற்ப மாறுபடவேண்டும். கல்வியின் தரத்தையும் தேசிய ஒற்றுமையையும் கருத்தில் கொண்டு இத்திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

3. பெரிய நகரங்களில் பல்வேறு மொழிகளைப் பேசும் பகுதிகளில் ஆங்கிலம் பயிற்று மொழியாகத் தொடர்ந்து இருக்கலாம்.

4. பட்டப்படிப்புநிலையில் 5 முதல் 10 ஆண்டுகளுக்குள் பிராந்திய மொழியினைப் பயிற்று மொழியாக்கலாம்.

5. பட்டமேற்படிப்புநிலையில் மாணவர்கள் ஆங்கிலத்திலும் பிற வெளிநாட்டு மொழிகளிலுமுள்ள நூல்களையே சார்ந்திருக்க வேண்டியிருப்பதால் இந்நிலையில் ஆங்கிலமே பயிற்று மொழியாக நீடிக்க வேண்டும்.

6. தாய்மொழி அல்லது வட்டாரமொழி பயிற்றுமொழியாவதற்காக இந்திய மொழிகளின் வளர்ச்சிக்குப் பல்வேறு ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும்.

7. இம்மொழிகளில் உயர்கல்விக்கான பல நூல்கள் வெளியிடப்படுவதும் இன்றியமையாததாகும்.

தாய்மொழியே பயிற்று மொழியாக இருத்தல் வேண்டுமென்னும் கருத்து நமக்குப் புதிதல்ல. மகாத்மா காந்தியடிகள், கவிஇரவீந்திரநாத தாகூர் போன்ற தேசத்தலைவர்கள் தாய்மொழிதான் பயிற்று மொழியாக இருத்தல் வேண்டுமென்று வலியுறுத்தி வந்துள்ளனர். இக்கருத்தினைப் பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இக்கருத்து மாணவனின் சீரிய கல்வி வளர்ச்சிக்கும் நடைமுறையில் செயலாற்றுவதற்கும் ஏற்றதாகும்.

தமிழ்நாட்டில் பயிற்றுமொழி

தமிழ் நாட்டில் பயிற்று மொழியைப் பொறுத்தவரை கல்லூரிப் பட்டப் படிப்பு நிலை வரை தமிழ்மொழி பயிற்று மொழியாக்கப்

பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்ட மேற் படிப்பு நிலையில் வரலாறு போன்ற ஓரிரு துறைகளில் தமிழ் பயிற்றுமொழியாகக்கப்பட்டுள்ளது: பிற பாடத்துறைகளிலும் தமிழ் பயிற்றுமொழியாக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. உயர் கல்விப் படிப்புக்கான பல தமிழ் நூல்கள் பல்கலைக் கழகத்தினராலும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் (Tamil Nadu Text Book Society) மூலமாக அரசின ராலும் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய நூல்கள் பல மேலும் வெளியிடப்படவேண்டும். தாய்மொழி பயிற்று மொழியாக அமைந்திருத்தலினால் மாணாக்கர்களது ஆங்கில மொழித் தரம் குறைவது அனுமதிக்கப்படலாகாது. இன்னும் உயர் கல்விக்கு இன்றியமையாத நூலக மொழியாக ஆங்கிலம் விளங்குகிறது. ஆங்கில நூல்களைப் படித்துப் பொருளுணர்ந்து அக் கருத்து களைத் தமிழ்மொழியிலேயே தெளிவாக எடுத்துக் கூறும் திறனை நமது கல்லூரி மாணாக்கர்கள் ஒவ்வொருவரும் பெற்றிருத்தல் வேண்டும். இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாததாகும்.

மொழிகள் பயிலல்—அயல்நாடுகளில் காணப்படும் நிலை

பிரான்ஸ்: எல்லா செகண்டரிப் பள்ளிகளிலும் 11 வயதி லிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் இது கட்டாயப் பாடம் அல்ல. ஒரு மாணாக்கன் விரும்பினால் ஜெர்மன்மொழி, இத்தாலியமொழி, ஸ்பானிஷ்மொழி அல்லது அவன் பயிலும் பள்ளியில் கற்பிக்கப்படுகின்ற ஏதேனும் ஒரு மொழி ஆகியவற்றில் ஒன்றினைத் தேர்ந்தெடுத்துப் பயிலலாம். இலத்தீன் மொழி கல்லாதவர்களுக்கு அயல்நாட்டு மொழி கற்பித்தல் பள்ளிக் கல்வியின் இறுதிவரையில் நடைபெறுகிறது.

ஜப்பான்: பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. செகண்டரிப் பள்ளிக் கல்வியில் ஆங்கிலம் கட்டாயப் பாடம் ஆகும். பல்கலைக்கழக நிலையில் ஆங்கிலம் விருப்பப் பாட மாகும்.

சுவீடன்: செகண்டரிப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் அயல் நாட்டு மொழிகளுள் ஆங்கிலம் முதலிடம் பெறுகிறது. ஐந்தாவது பள்ளி ஆண்டிலிருந்து (11 வயதிலிருந்து) ஆங்கிலம் கற்பிக்கப்படு கிறது. 7ஆவது வகுப்பிலிருந்து ஜெர்மன்மொழி கற்பிக்கப்படுகிறது. உடற்பயிற்சி நிலையத்தில் படிப்பினைத் தொடரவிருப்போர்க்கு இறுதி இரண்டு உயர் வகுப்புகளில் பிரெஞ்சுமொழி கட்டாயப்

பாடமாகும். மொழிப்படிப்புகள் சுவீடன்நாட்டுச் செகண்டரிப் பள்ளிகளில் பல ஆண்டுகள் நடைபெறுகின்றன: ஆங்கிலம்—8 ஆண்டுகள்; ஜெர்மன்மொழி—6 ஆண்டுகள்; பிரெஞ்சுமொழி—5 ஆண்டுகள். பல்கலைக்கழக நிலையில் உயர்படிப்புகள் பெரும் பாலும் ஆங்கிலம், ஜெர்மன் மொழி அல்லது பிரெஞ்சுமொழி ஆகிய வற்றில் உள்ள நூல்களை அடிப்படையாகக் கொண்டே நடை பெறுகின்றன. ஆங்கிலம், ஜெர்மன்மொழி, பிரெஞ்சுமொழி ஆகிய மூன்று மொழிகளையும் சில ஆண்டுகளாவது பயிலாமல் எந்த ஒரு மாணாக்கனும் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுக்குத் தகுதி பெறுதல் இயலாது.

ரஷ்யா: சோவியத் நடுநிலைப் பள்ளிகளிலும் செகண்டரிப் பள்ளிகளிலும் அயல்மொழிப்படிப்புக் கட்டாயப் பாடமாகும். அயல் நாட்டு மொழிகளுள் ஆங்கிலம், ஜெர்மன்மொழி, பிரெஞ்சுமொழி, இத்தாலியமொழி அல்லது ஸ்பானிஷ்மொழி ஆகியன இடம் பெறு கின்றன. ரஷ்யக் குழந்தைகள் தங்களது 3 ஆவது அல்லது 5 ஆவது கல்வி ஆண்டில் அயல்மொழிப் படிப்பைத் தொடங்கு கின்றனர்.

எகிப்து: பிரெஞ்சு மற்றும் ஆங்கில மொழிகள் பள்ளிகளில் கட்டாயப் பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. ஐந்து ஆண்டுகள் பள்ளிக் கல்விக்குப் பின் இவ்விரு அயல்மொழிகளும் கற்பிக்கப்படு கின்றன. செகண்டரிக் கல்வியில் 5 ஆண்டுகள் இம்மொழிப் பாடங்கள் கற்பித்தல் நடைபெறுகின்றது.

இரான்: செகண்டரிப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படு கிறது. ஆனால் இது விருப்பப் பாடமாகும். 6 ஆண்டுகள் தொடக்கக் கல்விக்குப்பின் ரஷ்யமொழி, பிரெஞ்சுமொழி, அராபிக் மொழி ஆகியவற்றோடு ஆங்கிலமும் விருப்பப் பாடமாகத் தொடங் கப்படுகிறது.

பல்வேறு நாடுகளின் செகண்டரிப் பள்ளிக் கல்வி ஏற்பாடு களில் அயல்நாட்டு மொழிகள் பயிலல் இடம்பெற்றிருப்பது மேற் கண்டவற்றினின்றும் தெளிவாகிறது.

வினாக்கள்

1. (அ) நாடு விடுதலை பெற்றபின் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்திய அரசினால் மேற்கொள்ளப் பட்ட பல்வேறு முயற்சிகளைக் குறிப்பிடுக?

(ஆ) இப்பிரச்சினை தீர்க்கப்படும் நிலையில் நாம் உள்ளோமா?

2. 'மும்மொழித் திட்டத்தின்' குறைபாடுகள் யாவை?

3. மும்மொழித்திட்டத்திற்கு கொத்தாரிக் கல்விக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட திருத்தம் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

4. கல்வியில் பயிற்றுமொழி பற்றி முடிவெடுப்பது மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகாது என்று ஏன் பல திறனாய்வாளர்கள் கருதுகின்றனர்?

5. மொழிப்பிரச்சினை ஏன் இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினையெனக் குறிப்பிடப்படுகிறது?

6, கல்வியில் மொழிப் பிரச்சினை என்றால் என்ன? இந்தப் பிரச்சினையில் இந்தியக் கல்விக்குழு (1964-66)வின் பரிந்துரைகள் யாவை? நம் தமிழ் நாட்டில் இந்தப் பிரச்சினை எப்படி அணுகப்பெற்றது? இதை மேம்படுத்துவதற்காக நீவீர் கூறும் வழி முறைகள் யாவை?

5. கல்வி ஏற்பாடு

கல்வியின் இன்றியமையாத முக்கியப் பகுதியாகக் கல்வி ஏற்பாடு (Curriculum) விளங்குகிறது. எந்த ஒரு கல்வித் திட்டத்திலும் கல்வி ஏற்பாடு நடுவிடம் வகிப்பதாக அமையும். இதனை நன்கு திட்டமிட்டு வரையறை செய்யாவிடின் கல்விக்கூடங்கள் நாம் அவற்றிடம் எதிர்பார்க்கும் பயன்களை நமக்கு அளிக்க மாட்டா. எவற்றைக் கற்பிப்பது? என்னும் முக்கிய வினாவுக்கு விடையாகவே கல்வி ஏற்பாடு அமைகிறது. 'எப்படிக் கற்பிப்பது' என்பது பற்றியே பொதுவாக ஆசிரியர்கள் அதிகக் கவனம் செலுத்துவது இயல்பு. மாணவனுக்கு 'எதனைக் கற்பிப்பது' என்பதில் ஆசிரியர்கள் போதிய ஆர்வம் காட்டுவதில்லை எனக் கூறப்படும் குற்றச்சாட்டில் சிறிது உண்மை இருப்பதாகவே தோன்றுகிறது. இக் கருத்தினைப் போக்க, கல்வி ஏற்பாட்டில் ஆசிரியர் ஆர்வம் காட்டுவது தேவைப்படுவதாகும். பள்ளிக் கல்வியால் சமூகத் தொடர்புடைய நோக்கங்களும், தனிப்பட்டோரது நல் வளர்ச்சிக்கான நோக்கங்களும் நிறைவேறுகின்றனவா என்பதும், அவ்வாறு நிறைவேறுகின்றன எனின் எந்த அளவுக்கு அவை நிறைவேறுகின்றன என்பதும் கல்வி ஏற்பாட்டின் அமைப்பினைச் சார்ந்தவையாகும்.

கல்விச் செயல்முறையின் அடிப்படை நோக்கம் தமது சூழ்நிலையுடன் சிறந்த, உயர்நிலைப்பட்ட பொருத்தப்பாட்டினைப் பெற்று உடல் நலத்துடனும், உளநலத்துடனும் மாணாக்கர்கள் வாழ்வதற்கு அவர்களுக்கு உதவுவதாகும். இந் நோக்கத்தினை அடைவதற்கேற்ப மாணாக்கர்களது பல்வேறு ஆற்றல்களும் திறன்களும் முழு வளர்ச்சி பெற்று, இசைந்து செயற்படக் கல்விச் செயல்முறை துணை செய்கிறது. இக் கல்வி இலக்கினையும் இதனோடு இணைந்து காணப்படும் வாழ்க்கை மதிப்புகள், வாழ்க்கை இலட்சியங்கள் ஆகியவற்றையும் எளிதில் அடைவதற்குப் பள்ளிப்பாடங்களும், பள்ளிச் செயல்களும் மாணாக்கர்களுக்கு உதவுகின்றன. இவற்றையே 'கல்வி ஏற்பாடு' என்று நாம் குறிப்பிடுகிறோம்.

முற்காலத்தில் கல்வி ஏற்பாடு என்பது பல பாடங்களின் பட்டியலாகவே காணப்பட்டது. இவற்றைப் படித்து, நெட்டுருச்

செய்து பின்னர் இவற்றை ஆசானிடம் ஒப்புவித்தல் கல்வி என்று கருதப்பட்டது. ஏட்டுக் கல்வி அல்லது புத்தகக் கல்வியே உண்மைக் கல்வியாகவும் கருதப்பட்டது. வகுப்பறைக்கு வெளியே மாணாக்கர்கள் பெறக்கூடிய அனுபவங்கள், அவை எத்துணைச் சிறந்தவையாக இருப்பினும், கல்வி ஏற்பாட்டில் இடம்பெற வேண்டியவையாகக் கருதப்படவில்லை. ஆனால் இன்று, கல்வியின் நோக்கங்கள் விரிவடைந்துள்ளன. கல்விச் செயல்முறையின் தன்மை பற்றிய அறிவு மேலும் தெளிவு பெற்றுள்ளது. இதன் விளைவாக இன்று, கல்வி ஏற்பாடு என்னும் சொல்லுக்குக் கல்வி வல்லுநர்கள் விரிந்த ஒரு பொருள் கொள்கின்றனர். கல்விக்கான முழுமையான வாய்ப்புகள் யாவும் இப்போது கல்வி ஏற்பாடு என்னும் சொல்லால் குறிக்கப் படுகின்றன. வகுப்பறையில் மாணாக்கர்கள் கற்கும் பாடங்கள் மட்டும் கல்வி ஏற்பாடாகிவிடா. நூலகம், ஆய்வகம், செயற்கூடம், விளையாட்டரங்கம் போன்ற இடங்களில் தனித்தோ அல்லது ஆசிரியர்களது துணையுடனோ மாணாக்கர்கள் பெறும் பல்வேறு கற்றல் அனுபவங்களும், ஆசிரியர்—மாணவரிடையே தற்செயலாகவும், முறையாகவும் ஏற்படும் தொடர்பின் விளைவாகத் தோன்றும் அனுபவங்களும் கல்வி ஏற்பாட்டில் அடங்கும்.

கல்வியின் நோக்கங்களை அடைய உதவும் கருவியாகக் கல்வி ஏற்பாடு அமைகிறது. பயனுள்ள பல அனுபவங்களை மாணாக்கர்கள் பெறவும், பயன் தரத்தக்க பல செயல்களில் மாணாக்கர்கள் ஈடுபடவும் முழுமையான வாய்ப்புகளை அமைத்துத் தந்து, மாணாக்கர்களது நடத்தையினையும் பள்ளிகள் மேற்பார்வையிட்டுத் திசைப்படுத்துகின்றன. பாடச் செயல்களுக்கும், பாடப் புறச் செயல்கள் (Extra Curricular activities) எனப்படுவனவற்றிற்கும் இடையே முன்பு இருப்பதாகக் கருதப்பட்ட வேற்றுமைகள் இன்றைய கல்வி முறையில் பெருமளவு மறைந்து போயுள்ளன. பாடப்புறச் செயல்களும் சிறந்த கல்விப் பயனுள்ளவையாதலின் இவை பாட இணைச்செயல்கள் (Co-curricular activities) என்று இன்று குறிக்கப்பட்டுக் கல்வி ஏற்பாட்டின் இன்றியமையாப் பகுதிகளாகவே விளங்குகின்றன. மாணாக்கர்களது வளர்ச்சிக்கான ஒரு சீரிய பாதையை வகுத்து அவர்களது முழுமையான வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு பயனுள்ள அனுபவங்களைக் கல்வி ஏற்பாடு மாணாக்கர்களுக்கு அளிக்கின்றது.

முற்காலக் கல்வி ஏற்பாட்டிற்கும் இன்றைய கல்வி ஏற்பாட்டிற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருப்பதனை

நாம் அறியலாம். முற்காலக்கல்வி ஏற்பாடு சில தனி மனிதர்களது சிந்தனையின் விளைவாகக் காணப்பட்டது. இது பலரது கூட்டு முயற்சிகளின் இறுதிப் பயனாக அமையவில்லை. முறையான வாழ்க்கைத் தத்துவங்கள், கல்வித் தத்துவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கல்வி ஏற்பாடு உருவாக்கப்படவில்லை. கல்விக் குறிக்கோள்கள் தெளிவாகக் கருத்தில் கொள்ளப்பட்டு இவற்றைப் பள்ளிகளில் அடைவதற்கான வழிமுறைகள் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. கல்வி ஏற்பாட்டினை உருவாக்குவதில் சமுதாயத்தின் தேவைகளும், தனிப்பட்டோரது ஆற்றல்கள், கவர்ச்சிகள், தேவைகள் ஆகியனவும் போதிய அளவு கவனத்தில் கொள்ளப்படவில்லை. பல்வேறு பாடத்தலைப்புகளின் முக்கியத்துவம், கற்பித்தல் முறைகள் பற்றிய குறிப்புகள், மேற்கோள் நூல்களைப்பற்றிய விவரங்கள், கல்வியின் விளைவுகளை மதிப்பிட்டறியும் முறைகளைப்பற்றிய குறிப்புகள் போன்றன யாவும் முற்காலக் கல்வி ஏற்பாட்டில் அடங்கிக் காணப்படவில்லை. கல்வி ஏற்பாடு என்பது மாற்றங்கள் தேவைப்படாத ஓர் இறுதியான அமைப்பு என்ற கருத்தும் அக்காலக் கல்வியாளர்களிடையே நிலவியது. ஆனால் இன்று இந்நிலை மாறியுள்ளது. இன்றைய கல்வி ஏற்பாட்டினை உருவாக்குவதில் கல்வியாளர்கள், ஆசிரியர்கள், அரசினர் ஆகியோரின் பெரும் பங்கு உணரப்பட்டுள்ளது. ஆசிரியர்களது கருத்துகளைக் கேட்டறியாமலும் அவர்களது ஒத்துழைப்பை நல்காமலும் உருவாக்கப்படும் கல்வி ஏற்பாடு மிக்க பயனுள்ளதாக அமையாது. ஏனெனில், மாணாக்கர்களது கல்வித்தேவைகள் எவை, இவற்றை எவ்வாறு நிறைவு செய்ய வியலும் என்பன போன்ற வினாக்களுக்குத் தெளிவான விடைகளை ஆசிரியர்களால்தான் அளிக்கவியலும். ஆசிரியச் சமுதாயத்தினரது ஒத்துழைப்பின்றி ஒரு கல்வி ஏற்பாடு உருவாக்கப்பட்டாலும் அதனை நடைமுறையில் செயற்படுத்தப் போகின்றோர் ஆசிரியர்களேயாவர். தங்களைக் கலந்தாராயாமல் உருவாக்கப்பட்ட ஒரு கல்வி ஏற்பாட்டினை ஆசிரியர்கள் முழுமனதுடன் ஏற்றுக்கொள்வது அரிது. இதன்பால் ஆசிரியர்களுக்கு ஆர்வம் காணப்படாது. இக்காரணங்களின் விளைவாக இக்கல்வி ஏற்பாடு பள்ளிகளில் ஆசிரியர்களால் செயற்படுத்தப்படுகையில் எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் கிட்டாமல் பயனற்றுப் போகக்கூடும். ஆதலால் சிறந்த,பயனுள்ள கல்வி ஏற்பாட்டினை உருவாக்குவது, செயற்படுத்தித் திருத்தியமைப்பது போன்றவற்றில் ஆசிரியர்களுக்குப் பெரும்பங்கு அளிக்கப்படுதல் இன்றியமையாததாகும். இதனை இன்று கல்வித்துறையினரும், அரசினரும் நன்கு உணர்ந்துள்ளனர். பயனுள்ள கல்வி ஏற்பாட்டினை உருவாக்குவதில் கல்வியாளர்கள், ஆசிரியர்கள், அரசினர் ஆகியோர் பெரும்

பங்கேற்கின்றனர். கல்வி ஏற்பாட்டினை மாற்றி அமைத்தல், புதுப்பித்தல் போன்ற செயல்களில் ஆசிரிய சமூகத்தினர்களது கருத்துகளுக்கும், ஒத்துழைப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப் படுகின்றது. மேலும், இன்று உருவாக்கப்படும் கல்வி ஏற்பாட்டில் பல புதிய பகுதிகள் இடம்பெற வேண்டியதன் தேவை எழுந் துள்ளது.

சமூகத் தேவைகளையும், சமூக அமைப்பினையும் பிரதி பலிக்கும் காலக் கண்ணாடியாகக் கல்வி அமைகிறதென்றும், கல்வி அமைப்பும், சமூக அமைப்பும் இணைப்பாதைகளில் இயங்கு கின்றன. (Educational and Social Parallelism) என்றும் 'கல்விச் சமூகவியல்' எடுத்துக் கூறுகிறது. சமுதாயத்தின் தேவைகளுடன் கல்வி ஏற்பாட்டின் தன்மை இணைந்ததேயாகும். கல்வி சமூகத் துடன் நெருங்கிய தொடர்புடையது. அதனுடன் இணைந்து வளர்ச்சியுறுகிறது. ஆகவே கல்வி ஏற்பாடு நிலைத்ததன்று. எக்காலத்திற்கும், எந்நிலைக்கும் பொருந்தக்கூடிய முழுமையான ஒரு கல்வி ஏற்பாட்டினை உருவாக்குதல் இயலாததாகும். கல்வி ஏற்பாட்டுப் பிரச்சினைகளுக்கு இறுதியான தீர்வு ஒன்று காண்ப தென்பது இயலாது. சமூகத்தின் அமைப்பு, தேவைகள் ஆகியன காலப்போக்கில் மாறுதல் அடைவதன் விளைவாகக் கல்வி அமைப்பும், கல்வி ஏற்பாடும் தொடர்ந்து மாறுதலடைவது இன்றி யமையாததாகும்.

கல்வி ஏற்பாடும் மாற்றங்களும்

கல்வி ஏற்பாடு காலத்துக்குக்காலம் ஓரளவேனும் மாறுதல் அடைவதற்கான முக்கியக் காரணங்கள் பின்வருமாறு:

1. இன்றையப் பள்ளிகளில் கல்வி பயிலும் சிறுவர் சிறுமியரது சமூகப் பின்னணியில் எழுந்துள்ள மாற்றம் முக்கியமானதொன் றாகும். 'எல்லோருக்கும் கல்வி வாய்ப்புகள்' என்ற குடியாட்சித் தத்துவத்தின் விளைவாக இன்று பள்ளிகளில் சமூகத்தின் எல்லா நிலைகளினின்றும் மாணாக்கர்கள் கல்வி கற்கக் கூடியுள்ளனர். சிறிது காலம் முன் வரை கல்வியானது உயர் குடும்பச் சிறுவர் களுக்கும், தொழில் செய்து பொருளீட்டும் தேவையற்ற ஓய்வு நேரம் மிகுதியாகப் பெற்றுள்ள குடும்பங்களது சிறுவர்களுக்கும் பெரும்பாலும் உதவுவதாக அமைந்திருந்தது. இந் நிலை இன்று வெகுவாக மாறியுள்ளது. இதன் விளைவாகக் கல்வி முறையிலும், கல்வி ஏற்பாட்டில் அடங்கும் பாடங்கள், செயல்கள் ஆகிய வற்றிலும் மாறுதல்கள் எழுந்துள்ளன. இவ்வகையான மாறுதல்கள் தொடர்ந்து எதிர்காலத்திலும் ஏற்படும் என்றே கூறலாம்.

2. சமூகத்தில் அவ்வப்பொழுது எழும் பொருளாதார மாற்றங்கள், அரசியல் மாறுதல்கள் ஆகியவற்றின் விளைவாகவும் கல்வி ஏற்பாட்டில் மாற்றங்கள் எழும். இதற்கு எடுத்துக்காட்டாக, நம் நாடு சுதந்திரம் அடைந்தபின் இந்தியக் கல்வி அமைப்பிலும் முறையிலும் எழுந்துள்ள மாற்றங்களைக் குறிப்பிடலாம்.

3. பல்வேறு அறிவியல் துறைகளிலும், பாடப் பிரிவுகளிலும் புதிய கருத்துகள் எழுவதன் விளைவாகவும், புதுக் கண்டு பிடிப்புகளின் பயனாகவும் அறிவு பெருக்கம் ஏற்பட்டுள்ளது. இப் புதிய கருத்துகளைப் பள்ளிக் கல்வியில் இடம் பெறச் செய்வதற்காகவும் கல்வி ஏற்பாட்டில் மாற்றங்கள் செய்யப்படக்கூடும். நமது நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றிற்காகப் புதிய கருத்துகளுக்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும் கல்வி ஏற்பாட்டில் இடமளிப்பது அவசியமாகும்.

4. புதிய அரசியல் தத்துவங்கள், வாழ்க்கைத் தத்துவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றியுள்ள புதிய கல்வித் தத்துவங்கள் கோட்பாடுகள் போன்றவற்றிற்கு ஏற்பக் கல்வி ஏற்பாட்டில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

5. கல்வி உளவியல், கல்வி சமூகவியல் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள், கற்பித்தல் முறைகளில் தோன்றியுள்ள முன்னேற்றம் ஆகியவற்றிற்கு ஏற்பக் கல்வி ஏற்பாட்டில் மாற்றங்கள் செய்யவேண்டிய தேவை ஏற்படும்.

6. 'எல்லோருக்கும் கல்வி'—'எல்லோருக்கும் கல்வியில் சம வாய்ப்புகள்' போன்ற அரசின் கொள்கைகள், பெற்றோரது கருத்துகள் ஆகியவற்றுக்கேற்பவும் கல்வி ஏற்பாட்டில் சில மாற்றங்கள் செய்யப்படுவதும் உண்டு.

கல்வி ஏற்பாடு நிலைத்ததன்று. அது அவ்வப்போது திருத்தி அமைக்கப் பெறுகின்றது. கல்வி ஏற்பாட்டில் மாற்றங்கள் செய்யப் படுகின்றன என்னும்போது, இம் மாற்றங்களின் விளைவாகப் பழைய கல்வி ஏற்பாடு முழுமையாக ஒதுக்கித் தள்ளப்படுகின்றது என்றோ அல்லது முழுமையும் புதியனவான பாடங்களும், செயல்களும் கல்வி ஏற்பாட்டில் இடம்பெறுகின்றன என்றோ பொருள் கொள்ளக்கூடாது. எந்த ஒரு கல்வி ஏற்பாட்டிலும் எக்காலத்துக்கும் மாணாக்கர்களுக்கும் சமுதாயத்திற்கும் பயன் அளிக்கக் கூடிய பாடங்களும் செயல்களும் தொடர்ந்து இடம்பெற்றுக் காணப்படும். ஆகவே, கல்வி ஏற்பாட்டில் எழும் மாற்றங்களில் பழமையும் புதுமையும் இணைந்து காணப்படும்.

கல்வி ஏற்பாட்டின் தன்மையை உருவாக்குதலில் இரு காரணிகள் முக்கிய பங்கினைப் பெற்றுக் காணப்படுகின்றன. இவை: —

1. கற்போனது இயல்பும் அவனது உடல், உள்ளம் ஆகியவற்றின் தேவைகளும்.

2. கற்போன் வாழும் சமூகத்தின் இன்றையத் தேவைகளும் எதிர்காலத் தேவைகளும்.

கல்வி ஏற்பாட்டின் ஒரு நோக்கம் சமூகத்தின் நற்குடிமக்களாக எதிர்காலத்தில் குழந்தைகள் வளரத் தேவைப்படும் வாய்ப்புகளைக் குறிப்பிடலாகும். எனினும் இந்நோக்கத்தினை அளவுக்கு அதிகமாக வலியுறுத்தல் தவறு. மாணாக்கர்களை அவர்களது பிற்காலச் சமூக வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்தும் களமாக மட்டும் பள்ளி அமைவதன்று. இன்று மகிழ்ச்சியுடன் பயனுள்ள வகையில் தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டு மாணாக்கர்கள் நல்வளர்ச்சி பெற உதவும் களமாகவும் பள்ளி செயற்பட வேண்டும். இவ்விரண்டு நோக்கங்களும் ஒன்றுக்கொன்று எதிர்ப்பட்டவையல்ல. இவை இரண்டையும் ஒருசேர நிறைவேற்றுதல் சாத்தியமானதேயாகும். ஏனெனில், கற்கும் குழந்தைகளது இன்றைய ஆர்வங்கள், கவர்ச்சிகள், தேவைகள் ஆகியவற்றிற்கும், அவர்களது பிற்கால வாழ்க்கைக்குப் பயனுள்ள அனுபவங்களுக்குமிடையேயும் பெருமளவு ஒற்றுமை காணப்படுகிறது. கல்வியின் பலநிலைகளுக்கான கல்வி ஏற்பாடுகள் தனித்தனியே இயங்குபவையல்ல. இவற்றிற்கிடையே தொடர்ச்சியும் ஒருமைப்பாடும் உள்ளன. முன்தொடக்கக் கல்விநிலை, தொடக்கக்கல்விநிலை, செகண்டரிக் கல்விநிலை, உயர்கல்விநிலை ஆகியவற்றிற்கான கல்வி ஏற்பாடுகளும் தொடர்புடையனவாகும்.

கல்வி ஏற்பாட்டினை உருவாக்குதல்

மாணாக்கர்கள் தாம் வாழ்ந்து வளரும் சுற்றுப்புற உலகினோடு சிறப்புமிக்க உயர்நிலைப்பாட்டினைப் பெற உதவுதல் கல்வியின் பொதுப்படையான நோக்கமாக அமைகின்றது. கல்வியின் விளைவாக மாணாக்கர்கள் பெறும் பொருத்தப்பாடு உயர்நிலைப்பட்டதாகும். மேலும் இதன் விளைவாக மாணாக்கர்கள் சுற்றுப்புற உலகினோடு உயர்நிலைப் பொருத்தப்பாட்டினைப் பெறுதலுடன் தமது தேவைகளுக்கு ஏற்ப உலகின் தன்மையினையும் ஓரளவோ, சிலபோது பெருமளவோ தங்களுக்குச் சாதகமாக மாற்றியமைக்கக் கூடிய திறனையும் பெறுகின்றனர். இங்கு உலகு என்பது இயற்கை

உலகு (World of Nature), சமூக உலகு (World of Men), அற உலகு (World of Moral Values) ஆகிய மூன்றையும் குறிப்பதாகும். கல்வி ஏற்பாட்டில் காணப்படும் பாடங்களும் செயல்களும் இவ் வகை உயர்நிலைப் பொருத்தப்பாட்டினை மாணாக்கர்கள் பெற உதவுகின்றன. இவ்வாறு நன்கு உதவக்கூடிய கல்வி ஏற்பாடு சில சீரிய கொள்கைகள் அல்லது உயரிய கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படவேண்டும்.

1. மாணாக்கர்களது தனித்தன்மை, வளர்ச்சி, அவர்களது தேவைகள், சமூகத்தின் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கல்வி ஏற்பாடு உருவாக்கப்படவேண்டும். கல்வி ஏற்பாடு சமுதாய வாழ்க்கையுடன் இணைந்த வகையிலும், சமுதாய வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும். மாணவர்களது ஆளுமையின் இசைந்த வளர்ச்சிக்கு உதவும் வண்ணம் கல்வி ஏற்பாடு அமைக்கப்படவேண்டும். மேலும், நாட்டின் மரபு, வரலாறு அதன் பெருமை, அதன் எதிர்காலம் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டும் கல்வி ஏற்பாடு உருவாக்கப்படவேண்டும். பல்வேறு கல்வி நிலைகளுக்கான கல்வி ஏற்பாடுகளிடையே ஒருமைப்பாடும் தொடர்ச்சியும் இருத்தல் வேண்டும். கல்வி ஏற்பாடு நெகிழ்ச்சியும் இயங்கும் தன்மையும் பெற்றிருத்தல் வேண்டும்.

2. மாணாக்கர்களை அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தல் (Forward Looking Principle) என்பது மற்றொரு முக்கியக் கோட்பாடாகும். மாணாக்கர்கள் பள்ளியில் கற்கும் பாடப் பொருள்களும், ஈடுபடும் செயல்களும், இவற்றின் விளைவாக அவர்கள் பெறும் அனுபவங்களும் அவர்களுக்கு வாழ்க்கையில் உயர்நிலைப் பொருத்தப்பாட்டினைப் பெற உதவுவனவாக அமைதல் வேண்டும். கல்வியின் விளைவாக மாணாக்கர்கள் பெறும் பொருளறிவும், திறன்களும் உலகில் அவ்வப்போது எழும் மாறுதல்களுக்கு ஏற்ற வகையில் அவர்களது நடத்தையை மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய திறனை அவர்களுக்கு அளிப்பனவாக அமைதல் வேண்டும், மாணவர்களது தனித்தன்மை, சமூகப் பண்புகள் ஆகிய இரண்டும் இணைந்து வளர்ச்சிபெறக் கல்வி ஏற்பாடு உதவ வேண்டும். எதிர்கால வாழ்க்கைக்கு மாணாக்கர்களை ஆயத்தம் செய்தல் என்பது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் மகிழ்ச்சியாகச் செலவழிப்பதற்கான பயிற்சியும் அடங்குவதாகும். கைப்பணிகள், பயனுள்ள நூல்களைப் படிக்கும் பழக்கம், ஓவியம், இசை, பிற ஆக்க வேலைகள்

போன்றன இவ்வாயத்தப் பயிற்சிக்கு உதவுவனவாகும். மாணவனின் வளர்ச்சிக்கும், அவனது சமூகவியல்பு பெருகு வதற்கும் துணை செய்யக்கூடிய பொருத்தமான, பயனுள்ள பாடக் கூறுகள் கல்வி ஏற்பாட்டில் இடம் பெறுதல் வேண்டும்.

3. நமது சமூகத்தில் வழிவழியாகத் தொடர்ந்து வரும் பண்பாட்டுக் கூறுகளைப் பேணிக்காத்து (Conservation) அவற்றை இன்றையத் தலைமுறையினருக்கு அளிக்க வழிவகுத்தலும் கல்வி ஏற்பாட்டின் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்றாகும். பண்டைய காலந்தொட்டே சமூகத்தில் தனித்தும் பரவலாகவும் காணப்பட்டு வந்துள்ள பல்வேறு வாழ்க்கை மதிப்புகள் யாவற்றையும் ஒருங்கு திரட்டி, இவற்றைப் பள்ளிப் பாடங்கள், செயல்கள், நேர்தொடர்பு ஆகியவற்றின் மூலம் மாணாக்கர் களுக்கு அறிமுகப்படுத்தும் பணியினைக் கல்வி ஏற்பாடு மேற் கொள்ள வேண்டும். சமூக மரபினை (Social heritage) இன்றையத் தலைமுறையினர்க்கு அளித்தல் கல்வியின் ஒரு முக்கிய நோக்க மாகும். மனித இனத்தின் தொடர்ந்த நல்வாழ்விற்கு அடிப்படை களாக அமையும் அறிவுத் திறன்கள், மனப்பான்மைகள், சமூக அறநெறிப் பண்புகள் போன்றன யாவும் சமூக மரபு எனப்படு வதுள் அடங்கும். சமூக மரபினைப் பாதுகாத்துப் பரப்புவதன் வழியே சமூகத்தின் நிலைத்த தன்மைக்கும், உறுப்பினர் களிடையே ஒருமித்த மனப்பான்மையினையும், பிணைப் பினையும் வலுப்படுத்துவதற்கும் கல்வி உதவுகிறது. மொழி, இலக்கியம், கணிதம், அறிவியல் பண்பாட்டியல் பாடங்கள் (Cultural Subjects) ஆகியன யாவும் சமூக மரபுரிமையைத் தம்முள் தேக்கி வைத்துள்ள பாடங்களாகும். சமூகம். இயங்கும் தன்மை பெற்றது.. இதன் விளைவாகப் புதிய தேவைகள் எழுவதுண்டு. முன்பு எக்காலத்தில் நிகழ்ந்ததைக் காட்டிலும் அதிக வேகத்தில் மாற்றங்கள் இன்றைய உலகில் எழுகின்றன. முன்பு எழுந்திராத முற்றிலும் புதிய பிரச்சினைகள் இனிவரும் ஆண்டுகளில் எழக்கூடும். இவற்றை நம் சந்ததியினர் எதிர்கொண்டு சமாளிக்க வேண்டுமாயின், அவர்களுக்கு எதைக் கற்பிப்பது என்பதுடன் எவ்வாறு கற்பது, எப்படி உற்று நோக்கி உணர்வது, எவ்வாறு பகுத்தாராய்வது போன்றவற்றையும் கற்பிப்பது இன்றியமையாததாகும். ஆகவே சமூக மரபினை ஆராய்ந்து கொள்ளத்தக்கவற்றை மட்டும் கொண்டு, கழிக்க வேண்டியவற்றை ஒதுக்கிக் கல்வி ஏற்பாட்டினை உருவாக்குதல் வேண்டும்.

4. மாணாக்கர்களைப் பிற்கால வாழ்க்கைத் தொழிலுக்கு ஆயத்தம் செய்தலும், கல்வி ஏற்பாட்டினை, அதிலும் முக்கிய

மாகத் தொடக்கக்கல்வி நிலைக்குப் பிற்பட்ட நிலைகளுக்கான கல்வி ஏற்பாட்டினை, உருவாக்குதலில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு கோட்பாடாகும். நம் நாட்டில் மாணாக்கர்களில் பெரும்பான்மையினர் உயர்நிலைப்பள்ளி இறுதியிலேயே கல்வி பயிலுதலை முடித்து ஒரு வாழ்க்கைத் தொழிலை மேற்கொள்ள முற்படுகின்றனர். பள்ளிக் கல்வியினை முடித்த பின்னர், முழு மையாகப் பிறரைச் சார்ந்து வாழாமல் தனது அறிவு, திறன்கள் அனுபவங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வாழ்க்கை நடத்த ஒவ்வொருவருக்கும் கல்வி உதவி செய்வதாக அமைதல் வேண்டும். மேலும் இன்றையத் தொழில் நுட்பச் சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு தொழில்களில் ஈடுபடப் போதிய ஆயத் தமும் பயிற்சியும் பள்ளிக்கல்விக் காலத்திலேயே மாணாக்கர் களுக்கு அளிக்கப்படுவது அவசியமாகும். ஆனால், வாழ்க்கைத் தொழிலுக்கான பயிற்சியளித்தலைக் கல்வி ஏற்பாட்டில் அதிக அளவு வலியுறுத்துவோமாயின், நமது பள்ளிகள் தொழிற்கூடங் களாக மாறிவிடும். ஆகவே, இக்கோட்பாடு முக்கியமான ஒன்றெ னினும் இது ஒன்றே முக்கியமானதாக நாம் கருதுதல்கூடாது. குறிப்பிட்ட வாழ்க்கைத் தொழிலுக்கான அறிமுகத்தையும் அதற் குதவக்கூடிய தொடக்கப் பயிற்சியினையும் உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் ஏற்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

5. மாணாக்கர்களது ஆக்கத்திறன் (Creativity) வளர்ச்சிக் கான பாடங்கள், செயல்கள் ஆகியனவும் கல்வி ஏற்பாட்டில் இடம் பெறவேண்டும். புதியன புனைவதற்கான வாய்ப்புகள் பள்ளியில் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இவ்வாய்ப்புகள் மாணாக் கர்களது தனித்தன்மை (Individuality) வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும். மேலும், இவ்வாய்ப்புகள் எதிர்காலச் சமுதாய வளர்ச் சிக்கும் உதவும். ஆக்கத்திறன் வளர்ச்சி, தனித்தன்மை வளர்ச்சி ஆகியவற்றிற்கான வாய்ப்புகள் கல்வி ஏற்பாட்டில் இல்லாமற் போகுமாயின் பள்ளிக்கல்வியின் வழியே சுவையற்ற, சலிப்பூட்டக்கூடிய ஒருமைப்பாட்டினையே மாணாக்கர்கள் யாவரும் பெறுவர். எனவேதான் ஆக்கச் செயல்களுக்கான வாய்ப்புகளை நமது பள்ளிகளில் இன்று அதிக அளவில் மாணாக் கர்களுக்கு ஏற்படுத்தித் தருவதில் நாம் முனைந்துள்ளோம். செயல்கள், கைப்பணி ஆகியவற்றிற்குக் கல்விஏற்பாட்டில் இன்றி யமையாத பங்கு உண்டு என்பதனை நாம் நன்கு உணர்ந் துள்ளோம். சுதந்திரமாகச் செயற்படுவதிலும் பல்வேறு பொருள் களைப் பயன்படுத்தி ஆக்கவேலைகளில் ஈடுபடுவதிலும் சிறு குழந்தைகளுக்கு இயல்பாகவே விருப்பம் மிகுதி. ஆகவேதான் சிறு குழந்தைகளுக்கான கல்வியில் செயல்கள், கைப்பணி

போன்றன நடுவிடம் பெறுகின்றன. செயல் திட்டங்கள், வேலை அனுபவங்கள் போன்றன ஆக்கவேலைகளில் ஈடுபடும் விருப்பத்தினை நன்கு நிறைவு செய்வனவாம். காந்தியடிகளின் ஆதாரக்கல்வி முறை இவ்விருப்பம் நன்கு நிறைவு பெறுதலில் பெரிதும் உதவுகிறது.

6. பயனுள்ள ஒரு கல்வி ஏற்பாடானது அனுபவங்கள் (Experiences), செயல்கள் (Activities) ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படவேண்டும். பண்டையக் கல்வி ஏற்பாட்டுக்கும் இன்றையக் கல்வி ஏற்பாட்டுக்கும் உள்ள வேறுபாடு பெருமளவு இக் கோட்பாட்டின் விளைவேயாகும். முற்காலப் பள்ளிகள் பொதுவாக மாணாக்கர்கள் பொருளறிவைப் பெறுவதை வலியுறுத்தி வந்தன. இக் காலப் பள்ளிகள் மாணாக்கர்கள் அனுபவங்கள் பெறுவதனை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளன. ஏட்டுக் கல்வி உண்மைக்கல்வி அன்று. உண்மைக் கல்வி மாணாக்கர்களது வாழ்க்கையுடன் இணைந்ததாகவும், அதற்குப் பயன்படக்கூடியதாகவும் இருத்தல்வேண்டும். தனது அனுபவங்கள், தானே ஆர்வத்துடன் செயற்படுதல் ஆகியவற்றின் வழியேதான் ஒருவன் நடைமுறைப் பயனுள்ள அறிவினைப் பெற முடியும். செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், அனுபவத்தின் வழியே கற்றல் போன்ற கல்விக் கருத்துகள் யாவும் இக் கோட்பாட்டின் அடிப்படையில் எழுவனவாம். கல்வி ஏற்பாடு என்பதனை 'கல்வியின் அடிப்படை நோக்கங்களை அடையக்கூடிய பல்வேறு செயல்கள், அனுபவங்கள் ஆகியவற்றின் தொகுப்பு' என்று ரீடர் (Reeder W. G.) என்பார் விளக்குகிறார். பள்ளியில் பயிலும் குழந்தை 'நான் கற்கிறேன்' என்று கூறுவதனைக் காட்டிலும் 'நான் பயனுள்ள அனுபவங்களைப் பெறுகிறேன்' என்று கூறும்போதுதான் உண்மைக் கல்வியினை அது பெறுகிறது எனலாம் என்று இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கல்வியாளர்களில் ஒருவரான ஜான்டூயி கூறுகிறார். கல்வியின் தொடக்க நிலையில் மாணாக்கர்கள் தாங்களே ஆர்வத்துடன் பல்வேறு செயல்களில் ஈடுபட்டு, அவற்றின் விளைவாகப் பல அனுபவங்களைப் பெறுவதன் வழியேதான் சிறந்த கல்வி வளர்ச்சியினையும், முழு ஆளுமை வளர்ச்சியினையும் அவர்களால் பெறவியலும் என்பது மறுக்கமுடியாத ஓர் உண்மையாகும். நமது தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் அவர்களது ஆதாரக் கல்வி முறை இக் கோட்பாட்டினை மையமாகக் கொண்டு எழுந்ததாகும். செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவது தங்களது புலன்களைப் பயன்படுத்திப் பல்வேறு நிலைமைகளை ஆராய்ந்து நேர் அனுபவங்களின் வழியே அவற்றைப்பற்றிய அறிவினைப்

பெறுவது, விளையாட்டுச் செயல்களில் முழு மனத்துடன் பங்கு கொள்வது ஆகியன யாவும் இளம் மாணாக்கர்களது இயற்கையான பண்புகளாகும். இவை மாணாக்கர்களது வளர்ச்சித் தேவைகளை நிறைவு செய்து அவர்களது ஆளுமையின் இசைந்த வளர்ச்சிக்கு உதவுவனவாகும். செயல்களையும், அனுபவங்களையும் இன்று நாம் வலியுறுத்துகிறோம் என்பதன் பொருள் 'கல்வி ஏற்பாடு குழந்தை இயல்பின் அடிப்படையில் அமைக்கப்படுகிறது' என்பதேயாகும்.

7. மாணாக்கர்களிடையே காணப்படும் தனியாள் வேற்றுமைகளைக் கருத்தில்கொண்டு அமைக்கப்பட்டதாகக் கல்வி ஏற்பாடு இருத்தல் வேண்டும். கல்வி ஏற்பாடு பரந்ததாகவும் இருத்தல் தேவை. கல்வி ஏற்பாட்டில் பலதிறப்பட்ட அனுபவங்கள், செயல்கள் ஆகியன இடம் பெற வேண்டும் (Principle of Variety) மாணாக்கர்களில் மீத்திறம் பெற்றோர், சாதாரண அறிவுத் திறனுள்ளோர், மெதுவாகக் கற்போர் ஆகிய பலவகைப்பட்டவர்கள் இருப்பர். இத்தகையவர்களிடம் காணப்படும் தனியாள் வேற்றுமைகளுக்கு ஏற்பப் பல தரமுள்ள வாய்ப்புகளை அளிக்கும் வகையில் கல்வி ஏற்பாடு அமைக்கப்படவேண்டும். பொதுப் படையான அறிவினை எல்லோரும் பெற உதவுவதுடன் மீத்திறம் பெற்றோர் சிறந்த வளர்ச்சியினைப் பெறவும் கல்வி ஏற்பாடு வகை செய்ய வேண்டும். மாணாக்கர்களது ஆற்றலுக்கேற்ப அவர்கள் முன்னேற்றமடைவதனையும், அவர்களது மாறும் தேவைகளுக்கு ஏற்ப அவ்வப்போது கல்வி ஏற்பாடு உருவாக்கப் படுவதனையும் இன்று சில கல்வியாளர்கள் ஆதரிக்கின்றனர்.

கல்வி ஏற்பாட்டின் அடிப்படைக் கோட்பாடுகளைத் தெளிவு படுத்துவதற்கான கருத்துகள்

கல்வி ஏற்பாட்டினை உருவாக்குவதில் சார்டர்ஸ் (W.W.Charters) என்பார் குறிப்பிடும் கருத்துகள் கல்வி ஏற்பாட்டின் அடிப் படைக் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்துவனவாக அமைகின்றன.

1. மனிதனது சமூகவாழ்க்கையின் இயல்பினை ஆராய்ந்து கல்வியின் முக்கியமான இறுதி நோக்கங்கள் எவையாக இருக்க வேண்டுமென்பதனை நிர்ணயித்தல்.

2. இந்நோக்கங்களைக் கல்வியின் குறிகோள்கள், செயல்கள் என்று தொடர்ந்து பகுத்து இவற்றைக் கற்பித்தலுக்கேற்ற அலகுகளாக (Units) அமைத்தல்,

3. இந்த அலகுகளின் முக்கியத்துவத்துக்கு ஏற்ப இவற்றை வரிசைப்படுத்திப் பட்டியல் ஒன்றினை உருவாக்கல்.

4. அடுத்து இக்குறிக்கோள்கள், அனுபவங்கள், செயல்கள் ஆகியவற்றுள் முதியவர்களுக்கு அவ்வளவு முக்கியமில்லாதவையாக இருப்பினும் குழந்தைகளுக்கு மிகவும் கவர்ச்சியுள்ளவையாகவும் முக்கியமானவையாகவும் காணப்படுவனவற்றை இப்பட்டியலின் முதலிடங்களுக்கு உயர்த்தி அமைத்தல்.

5. பள்ளிக் கல்விக்கான குறுகிய காலத்துக்குள் இவற்றுள் எவ்வெவற்றை மாணாக்கர்கள் பள்ளிகளில் கற்கமுடியும். எவ்எவற்றைப் பிற சமூக நிலையங்களது செல்வாக்குகளின்றும் மாணாக்கர்கள் கற்கமுடியும் என்பதனை ஆராய்தல்.

6. பள்ளிக் கல்விக்கான காலத்துக்குள் மாணாக்கர்கள் பள்ளிகளில் கற்கவேண்டியவற்றினைச் சிறந்த முறையில் கற்க உதவும் பயிற்சி முறைகளையும் செயல்களையும் தேடித் தொகுத்தல்.

7. கற்போரது உள இயல்புகளுக்கு ஏற்பக் கற்பித்தலுக்காக இவற்றை வரிசைப்படுத்தி அமைத்துக் கல்வி ஏற்பாட்டினை உருவாக்குதல்.

கல்வி ஏற்பாட்டின் முக்கியக் கூறுகள்

எந்த ஒரு கல்வி ஏற்பாட்டிலும் பின்வரும் முக்கியக் கூறுகள் இருத்தல் வேண்டும்.

1. கல்வி ஏற்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ள இலக்குகளைப் பற்றிய தெளிவான குறிப்பு.

2. இதில் அடங்கும் பாடப்பொருள்களின் விவரம்.

3. இப்பாடப்பொருள்கள் எவ்வாறு ஒருங்கமைக்கப்பட்டுள்ளன என்பதுபற்றியும், இப்பாடங்களுடன் தொடர்புடைய முறைகள், செயல்கள் ஆகியனபற்றியும் குறிப்பு.

4. கல்வி விளைவுகளை மதிப்பிடுதல் பற்றிய குறிப்பு

கல்வி ஏற்பாட்டின் வகைகள்

கல்வி ஏற்பாடு இரண்டு வகைப்படும்

1. பாடப்பொருளைக் கொண்டமைக்கப்பட்ட கல்வி ஏற்பாடு (Subject matter curriculum)

பாடப் பொருளைக் கொண்டமைக்கப்பட்ட கல்வி ஏற்பாடு, பாடப் பொருள்களின் விவரங்கள் இவற்றுடன் இணைந்த திறன்கள் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் உருவாக்கப் பட்டிருக்கும். இவ்வகைக் கல்வி ஏற்பாடு மூன்று முறைகளின் உருவாக்கக் கூடும்.

(அ) தனிப்பாட முறையில், தனிப்பட்ட பாட வேளைகளில் பல்வேறு பாடல்கள் தருக்க முறைப்படி அமைக்கப்பட்டு, தனித் தனியே கற்பிக்கப்படும்.

(ஆ) பாடங்கள் தனித்திராமல், இணைந்த பாடமுறையில், தொடர்புள்ள பாடங்கள் இணைக்கப்பட்டும், ஒவ்வொரு பாடமும் மற்றொன்றுக்கு உதவும் வகையில் பரந்த பாடக்கருத்து முறையில் (Broad field Curriculum) அமைக்கப்பட்டு கற்பிக்கப்படும்.

(இ) பாட அலகுகளின் அடிப்படையிலும் (Unit Curriculum) அமைக்கப்பட்டுக் கற்பிக்கப்படும்.

2. செயல்களை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட கல்வி ஏற்பாடு

செயல்களை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட கல்வி ஏற்பாடு மாணாக்கர்களது இயற்கைத் தேவைகள், ஆக்கச் செயல்கள் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டிருக்கும். செய்து கற்றல் அனுபவங்களினின்றும் கற்றல் ஆகிய கருத்து களின் அடிப்படையில் கல்வி ஏற்பாடு அமைக்கப்படும். இவ் வகைக் கல்வி ஏற்பாடுகளில், பாடப் பொருள் செயல்களாகத் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டு, இச் செயல்களில் பங்கு கொள் வதன் வழியே மாணாக்கர்கள் தேவையான பொருளறிவு, திறன்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றைப் பெறுகின்றனர். உடற் செயல்கள், உளச் செயல்கள் ஆகியன யாவும் செயல்கள் என்னும் சொல்லினுள் அடங்கும். பொருளறிவினைத் திரட்டும் செயல்கள், ஆக்கச் செயல்கள், அமைப்புச் செயல்கள், சமுதாயச் செயல்கள், பொழுதுபோக்குச் செயல்கள் போன்ற யாவற்றிற்கும் இத்தகைய கல்வி ஏற்பாடுகளில் இடம் உண்டு.

பள்ளிப்பாடங்களின் பயன்கள்

கல்வி ஏற்பாட்டில் காணப்படும் பல பாடங்களும் செயல் களும் இவற்றின் பயனைக் (Value) கருதியே அதில் சேர்க்கப்பட் டிருக்கும். பள்ளிப் பாடங்களின் பயன்கள் பொதுவாக இரண்டு

வகைப்படும். 1. நேர்ப்பயன் (Direct Value) 2. மறைமுகப் பயன் (Indirect Value). நேர்ப்பயனை இயல்பான பயன் (Intrinsic Value) என்றும், மறைமுகப் பயனைக் கருவிசார் பயன் (Instrumental Value) என்றும் கல்வியாளர்கள் குறிப்பிடுவர். சில பாடங்களினின்றும் பெறப்படும் அறிவும் திறன்களும் நமது வாழ்க்கைச் செயல்களுக்கும் வாழ்க்கையில் அவ்வப்போது எழக் கூடிய பல நிலைமைகளுக்கும் உடனடியாகப் பயன்படக்கூடிய வையாக இருப்பின் அப் பாடங்கள் நேர்ப்பயனுடையவை எனலாம். சமூகப்பாடம், அறிவியல் போன்றன நேர்ப்பயன் மிக்க உள்ள பாடங்களாகும். இவை போன்ற பாடங்களைப் புரிந்துகொள்ள உதவக்கூடிய இலக்கணம், கணிதம் போன்ற பிற பாடங்கள் மறைமுகப் பயனுள்ளவையாகும்.

கல்வி ஏற்பாட்டின் மாறுபடாக் கூறுகளும், மாறுபடும் கூறுகளும் :

கற்பிக்கப்படும் சில பாடங்களும் செயல்களும் பொதுவாக எல்லா மாணாக்கர்களுக்கும் பயனுள்ளதாகவும் இன்றியமை யாதவையாகவும் (Universal Value) இருக்கக் கூடும். இவற்றைப் பயிலுவதினின்றும் எழும் அனுபவங்கள் மாணாக்கர்களது இன்றைய, எதிர்கால வாழ்க்கைக்கு உறுதுணையாக இருத்தலால் ஒவ்வொரு மாணாக்கனும் இவ்வனுபவங்களைப் பெறுவது அவசிய மாகக் கருதப்படுகிறது. இப் பாடங்கள் கல்வி ஏற்பாட்டின் மாறு படாத அல்லது நிலைத்த கூறுகள் (Curriculum Constants) எனப்படும். இவை அடிப்படையான நேர்ப்பயனுள்ளவை. இவற்றின் தொடர்பின்றி வாழ்க்கையில் நன்கு செயற்படுவது இயலாததாகிவிடும். பேசுதல், வாசித்தல், எழுதுதல், பிறர் பேசுவதைக் கேட்டோ அல்லது நூல்களில் காணப்படும் பொருள்களைப் படித்தோ அவற்றின் பொருள்களைப் புரிந்து கொள்ளுதல் ஆகிய மொழித் தொடர்புடைய ஆற்றல்கள் (Language Skills) அடிப்படைக் கணிதம், பொது அறிவியல் கருத்துகள், உடல் உளநலக் கோட்பாடுகள், சமூக அறநெறிப் பாடங்கள், அழகுணர் ஆற்றலை மாணாக்கர்களிடையே வளர்க்கத் தேவைப்படும் அனுபவங்கள் ஆகியன இத்தகையனவாம். வேறு சில பாடங்களும் அவற்றுடன் இணைந்த செயல்களும் சில சிறப்புக் கல்வி ஏற்பாடுகளில் (Specialized Curricula) மட்டும் காணப்படும். இவற்றை விருப்பப் பாடங்களாக (Electives) மாணாக்கர்கள் தேர்ந்தெடுத்துக் கற்பதற்கான வாய்ப்புகள் பள்ளிகளில் அமைக்கப்பட்டிருக்கும். இவற்றைத் தேவைப் படுவோர் மட்டும் பயிலலாம். எல்லோரும் இவற்றைக் கற்க வேண்டிய தேவையோ, கட்டாயமோ இல்லை. இப் பாடங்கள்

கல்வி ஏற்பாட்டின் மாறுபடும் கூறுகள் (Curriculum Variables) எனப்படும்.

பல்வேறு நிலைகளுக்கான கல்வி ஏற்பாடுகளில் பொதுவாக இடம் பெற வேண்டிய பாடங்களும், செயல்களும்பின் வருமாறு.

மாணாக்கர்களின் உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, அறநெறி சமூகப் பண்புகள் வளர்ச்சி, அழகுணர் ஆற்றல்கள் வளர்ச்சி ஆகியவற்றிற்கு உதவக்கூடிய பாடங்களும் செயல்களும் தொடக்கக் கல்விநிலை முதல் உயர்நிலைப்பள்ளிக் கல்விநிலை வரை கல்வியின் எல்லா நிலைக்குமான கல்வி ஏற்பாடுகளில் இடம் பெறவேண்டும். மாணாக்கரின் இசைந்த ஆளுமை வளர்ச்சிக்கு இவை அவசியமாகும்.

தொடக்கப் பள்ளிக் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு நான்கு வகைப்பட்ட அனுபவங்கள் அவசியமாகும்.

1. தமது புலன்களைப் பயன்படுத்தி, அவற்றின் வழியே பல புலன்காட்சி அனுபவங்களைப் பெறுதல்.

2. ஆசிரியரது வாய்மொழியின் வழியோ, அல்லது எளிய நூல்களைப் படித்தோ பல அடிப்படைக் கருத்துகளைப் பெறுதல்.

3. வாசித்தல், எழுதுதல், கணிதத்திறன் ஆகிய கற்றலுக் கேற்ற அடிப்படைத் திறன்களில் போதிய தேர்ச்சி பெறல்.

4. சமூகப்பண்புகள், சமூகத்திறன்கள் ஆகியவற்றினைப் பெறுதல்.

தொடக்கக் கல்வி ஏற்பாட்டில் இவற்றிற்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும். கல்வி ஏற்பாடு மாணாக்கர்களது உடனடி அனுபவங்களினின்றும் எழுவதாகவும், இணைப்பையும் ஒருமைப் பாட்டையும் பெற்றதாகவும் அமைக்கப்பட வேண்டும். இந் நிலையில் கல்வி ஏற்பாடானது செயல்களைச் சுற்றியே அமைக் கப்படுவது பயனுள்ளதாகும். விளையாட்டு முறைகள், கைப்பணி ஆக்கச் செயல்கள் ஆகியன இந்நிலையில் முக்கிய இடம் பெற வேண்டும். இவற்றுடன் இணைந்த வகையில் எளிய பயனுள்ள அறிவியல் கருத்துகள், இயற்கை நிகழ்ச்சிகளைப்பற்றிய அறிவு, சுற்றுப்புறச் சூழ்நிலைபற்றிய அறிவு போன்றன மாணாக்கர் களுக்குக் கற்பிக்கப்படவேண்டும்.

உயர்நிலைப்பள்ளிக் கல்வி கல்லூரிப் படிப்புக்கு ஆயத்தப் படுத்தும் நிலைமட்டுமன்று. இந்நிலைக்கான கல்வி அமைப்பு

ஒரு முழுமை பெற்று விளங்குதல் வேண்டும். குமரப்பருவத்தோர்க்கான கல்விநிலையாக இது அமைதல் வேண்டும். இந்நிலைக்கான கல்வி ஏற்பாட்டின் வழியே, மனித வாழ்க்கையின் பல்வேறு முக்கியக் கூறுகளில் ஆர்வம், அவற்றைப்பற்றிய அறிவு, அவற்றில் பங்குபெறத் தேவைப்படும், செய்திறன்கள் மனித வாழ்க்கையில் காணப்படும் சிறப்பு மிக்க குறிக்கோள்களின் மதிப்பினையும் நயத்தினையும் பாராட்டிப் பின்பற்றும் ஆற்றல் போன்றவற்றினைக் குமரப்பருவத்தோர் பெறவேண்டும். இந்நிலைக்கான கல்வி ஏற்பாட்டின் வழியே, தாய்மொழியில் ஆழ்ந்த பயிற்சி, கணிதம், பொது அறிவியல் ஆகியவற்றில் சமூகப் பாடங்கள், தனிப்பயிற்சி ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் குமரப் பருவத்தோர்க்கு அளிக்கப்படவேண்டும். கைப்பணிச் செயல்கள், விருப்பச் செயல்கள் ஆகியவற்றிற்கும் கல்வி ஏற்பாடு வழி செய்தல் வேண்டும். உடற்கல்வி, சமூக-அறநெறிப்பண்புகளை வளர்க்கும் பள்ளிச் செயல்கள் ஆகியன இங்கும் கல்வி ஏற்பாட்டில் முக்கிய இடத்தினைப் பெறவேண்டும். கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் உயர்கல்வி பெற வாய்ப்பற்றோர், விருப்பமற்றோர், தகுதியற்றோர் ஆகியோர்க்கு உயர்நிலைப்பள்ளிக் கல்வி முழுப் பயன் அளிக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

பல்வேறு பாடங்களைக் கற்பதால் எழக்கூடிய பயன்கள்

கல்வி ஏற்பாட்டிலுள்ள பல்வேறு பாடங்கள் கல்வியின் இறுதி இலக்குகளை அடைய உதவக்கூடி கருவிகளாக இயங்குகின்றன. இவற்றைக் கற்பதால் எழக்கூடிய பயன்களைக் கல்வியாளர்கள் பலவகையாகக் குறிப்பிடுகின்றனர். இவை, ஆயத்தப்பயன் (Preparatory value), பண்பாட்டுப்பயன் (Cultural Value), சமூகப் பயன் (Social Value), நடைமுறைப்பயன் (Practical or Utilitarian Value), பொருளாதாரப்பயன் (Economic Value), தொழிற்பயன் (Vocational Value), கலைப்பயன் (Aesthetic Value) ஆகியனவாம். சில பாடங்கள் கட்டுப்பாட்டுப்பயன் (Disciplinary Value) மிகுதியாகப் பெற்றிருப்பதாகவும் முன்னர்க் கருதப்பட்டது. ஒவ்வொரு பாடத்திலும் இப்பயன்கள் யாவுமே இருக்கக்கூடும். ஆனால் இவற்றின் அளவு பாடத்துக்குப் பாடம் வேறுபடக்கூடும். ஒரு பாடத்தினின்றும் மாணாக்கர்கள் எப்பயனை எந்த அளவுக்குப் பெறுகின்றனர் என்பது, அதனை எந்த நோக்கத்துடன் எம்முறைகளைக் கொண்டு ஆசிரியர் கற்பிக்கிறார், அவரது கற்பித்தல் திறன்கள் ஆகியவற்றைப் பெருமளவு சார்ந்தமைவதாகும்.

நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு பின்பற்றப்பட்டு வந்த கல்வி ஏற்பாட்டின் குறைபாடுகள்

நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன் நம் பள்ளிகளில் பின்பற்றப்பட்டு வந்த கல்வி ஏற்பாட்டினை ஆராய்ந்து அன்றைய உயர்நிலைப்பள்ளிக் கல்வி ஏற்பாட்டின் பல்வேறு குறைகளை டாக்டர் முதலியார் செகண்டரிக் கல்விக்குழு (1952-53) எடுத்துக்காட்டியுள்ளது. இக்குறைபாடுகளைக் களைந்தாலன்றி உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் தரத்தினை உயர்த்துதல் இயலாதென்பதனையும் அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இக்குறைபாடுகளாவன:

1. அது குறுகிய நோக்கமுடையதாகவும் ஏட்டுப்படிப்பை மட்டும் வலியுறுத்துவதாகவும் இருந்தது. கல்வி பெறும் மாணாக்கர்களது தேவைகளும் கவர்ச்சிகளும் பெருமளவு புறக்கணிக்கப்பட்டன.

2. கல்வி ஏற்பாட்டில் பாடங்களின் சுமையும் நெருக்கமும் தேவைக்கு அதிகமாகக் காணப்பட்டன. மேலும் பல பாடங்கள் கவர்ச்சியற்றனவாகவும், வாழ்க்கைத் தேவைகளுடன் தொடர்பற்றனவாகவும் இருந்தன.

3. நாட்டில் சுதந்திரத்திற்குப்பின் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றுடன் இணைந்த புதிய தேவைகளுக்கு ஏற்ற முறையில் கல்வி ஏற்பாட்டில் எத்தகைய மாற்றங்களும் செய்யப்படவில்லை.

4. மாணாக்கர்களது இன்றையத் தேவைகளுக்குப் போதிய இடம் அளிக்கப்படாமல் அவர்களது எதிர்காலத்துக்காகவே என்ற நிலையும் காணப்பட்டது.

5. வேலை அனுபவங்கள், ஆக்கச் செயல்கள், சிந்தனைத் திறன் வளர்ச்சி ஆகியவற்றுக்கான வாய்ப்புகளும் போதிய அளவுக்கு அமைந்திருக்கவில்லை.

6. மாணாக்கர்களுக்கிடையே காணப்படும் தனியாள் வேற்றுமைகள் கல்வி ஏற்பாட்டில் கருத்தில் கொள்ளப்படவில்லை. எல்லோர்க்கும் ஒரே வகையான கல்வி முறை பின்பற்றப்பட்டது.

7. கல்லூரிக் கல்விக்கு ஆயத்தம் செய்வது என்பது அதன் முக்கிய நோக்கமாக இருந்ததினால் உயர்நிலைப் பள்ளிக் கல்வி

நிலையோடு கல்வியை முடித்துக் கொள்ளும் பெரும்பான்மையான மாணாக்கர்களுக்கு அன்றையக் கல்வி ஏற்பாடு பயனற்றுக் காணப்பட்டது.

8. மாணாக்கர்களது எதிர்கால வாழ்க்கைக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் இன்றியமையாதவைகளான தொழில் நுட்பப் பாடங்கள், வாழ்க்கைத் தொழிலுக்கு உதவக்கூடிய பாடங்கள் போன்றன கல்வி ஏற்பாட்டில் இடம் பெறவில்லை.

9. அதில் புறத்தேர்வுகளின் ஆதிக்கம் மிகுந்து காணப்பட்டது. இதன் விளைவாக வாழ்க்கைத் தொடர்பும் பயனும் அற்று அது காணப்பட்டது.

இக் குறைபாடுகளைக் களைய இன்று முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செகண்டரிக் கல்விக்குழுவின் பரிந்துரைகளின்படி, நடுநிலைப் பள்ளிக் கட்டத்தில் மொழிகள், கணக்கு, பொது அறிவியல், சமூகப்பாடம், கலையும் இசையும், கைப்பணி, உடற்கல்வி ஆகியன கல்வி ஏற்பாட்டில் இடம் பெற வேண்டும். உயர்நிலைப் பள்ளி அல்லது ஹையர் செகண்டரிக் கட்டத்தில் பல்துறைப் பாடங்களுக்கான (Diversified Courses) வாய்ப்புகள் மாணாக்கர்களுக்குத் தரப்படவேண்டும். இவற்றுள் எந்த ஒரு பிரிவை மாணாக்கர்கள் தேர்ந்தெடுத்தாலும் இப் பிரிவுகள் யாவற்றுக்கும் பொதுவாகச் சில மையப் பாடங்கள் (Core Subjects) இருக்கும். மொழிகள் பொது அறிவியல், சமூகப்பாடம், கைப்பணி ஆகியன இவையாகும். பல்துறைப் பாடங்களுள் மனிதவியற் பாடங்கள், அறிவியல் பாடங்கள், தொழில் நுட்பப் பாடங்கள், வணிகவியற் பாடங்கள், வேளாண்மைப் பாடங்கள், நுண்கலைப் பாடங்கள் மனையியல் பாடங்கள் ஆகியன இடம் பெறும். பல்துறைப் பாடங்கள் உயர்நிலைப்பள்ளி அல்லது ஹையர் செகண்டரிப் பள்ளியின் இரண்டாம் ஆண்டில் தொடங்கப் பெற வேண்டும். இன்று வளர்ந்து வரும் நம் நாட்டுத் தேவைகளுக்கு ஏற்பப் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்றுள்ளோர் பலவகைப்பட்ட வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடத் தேவைப்படுகின்றனர். இத்தகையோரை உருவாக்கித் தருவதற்கும் உயர்நிலைப் பள்ளிக் கல்விக் கட்டத்தில் பல்துறைப் பாடங்களுக்கான வாய்ப்புகள் உதவுவனவாம். மேலும், கல்வி என்பது ஏட்டுப் படிப்பு மட்டும்தான் என்னும் தவறான எண்ணத்தை மாற்றவும் உடலுழைப்பின் தேவை, அதன் மேன்மை ஆகியவற்றை மாணாக்கர்கள் உணர்வதற்குப் பல்துறைப் பாடங்கள் உதவி செய்கின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட பல்துறைப் பாடப்

பிரிவுகளுக்கு வாய்ப்புகளுள்ள பள்ளிகள் பல்நோக்குப் பள்ளிகள் எனப்படும். பல்நோக்குப் பள்ளிகள் மாணாக்கர்களுக்குச் சிறப்புத் தொழிற் பயிற்சி யளிக்கும் நிலையங்களாகச் செயற்படாமல் தொழிலுக்கேற்ற மனப்பான்மை, அதற்குதவும் அடிப்படைத் திறன்கள் ஆகியவற்றைத் தருவனவாக அமைகின்றன. ஆனால், பல்தொழிற்பள்ளிகள் தொழில்களுக்கெனச் சிறப்புப் பயிற்சியளிப்பனவாகும். பல்துறைப் பாடங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருத்தலோடு, ஏட்டுக் கல்வியில் குறிப்பிட்ட ஒரு பாடத்தை விருப்பப் பாடமாகத் (Elective Subject) தேர்ந்தெடுத்து அதனை ஆழ்ந்து கற்கவும் உயர்நிலைப் பள்ளி மாணாக்கர் களுக்கு இன்று வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

இந்நிலை இன்று மேலும் மாறிவருகிறது. கல்வி ஏற்பாடு என்பதன் உண்மைப் பொருளினை உணர்ந்து அதற்கேற்ப ஒரு கல்வி ஏற்பாட்டினை உருவாக்கிச் செயற்படுத்த நாட்டில் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முக்கியமாக, கல்வி ஏற்பாடுகள் பற்றி கொத்தாரிக் கல்விக் குழுவின் (*1964-66*) கருத்து களின் அடிப்படையில் எழுந்துள்ள மாற்றங்களும் திருத்தங்களும் இதற்குச் சான்றுகளாகும். நாட்டுக்கு இன்று தேவைப்படும் கல்வி ஏற்பாடுகள் யாவும் ஒருங்கிணைந்த முறையில் அமையவேண்டு மென்பதனையும், கல்வி ஏற்பாட்டின் இரு கூறுகளான பொதுக் கல்வி, குறிப்பிட்ட ஒரு துறையில் சிறப்புப் பயிற்சி பெறுதல் ஆகியன புதிய ஒரு கோணத்தினின்றும் நோக்கப்பட்டு, சீராக்கப் படவேண்டுமென்பதனையும் கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட் டுள்ளது. கொத்தாரிக் கல்விக்குழுவின் பரிந்துரைகளின் அடிப் படையில், தற்போது நம் நாட்டில் பள்ளிக்கல்வி ஏற்பாடுகளில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பத்தாண்டு பொதுக் கல்விக்குப் பின்னரே உயர் செகண்டரிக் கட்டத்தில் பல்துறைப் பாடங்கள், விருப்பப் பாடங்கள் ஆகியவற் றிற்கு வாய்ப்பிருக்க வேண்டும் என்று இக்குழு குறிப்பிட்டுள்ளது. கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களின் முக்கியத்துவத்தை இக்குழு வலியுறுத்தியுள்ளது. இப்பாடங்களைக் கற்பிக்கும் முறைகள் நவீனப்படுத்தப்பட்டு, இப்பாடங்களின் வழியே ஆராய்ச்சி மனப்பான்மை, சிந்தனைத்திறன் ஆகியன மாணாக் கர்களிடையே வளர்க்கப்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்தியுள்ளது. ஐந்தாம் வகுப்பிலிருந்தே மீத்திற மாணாக் கர்களுக்கெனத் தர உயர்வுபெற்ற பாடத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும், இயன்றவரை சாதாரண, சிறந்த மாணாக்கர் களுக்கெனப் பாடத்திட்டம் எட்டாம் வகுப்பிலிருந்து இருநிலை களில் அமைக்கப்பெற வேண்டுமென்றும் இக்குழு கருத்துத்

தெரிவித்துள்ளது. நம் நாட்டின் இன்றைய சமுதாய அமைப்பினைக் கருத்தில் கொண்டு கல்வி ஏற்பாட்டில் வேலை அனுபவங்கள் இடம்பெறுதல் வேண்டுமென்பதனையும் இக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகளின்படி பத்தாண்டுக் கல்விக் காலத்தில் பல்வேறு கல்விநிலைகளுக்கான கல்வி ஏற்பாடுகளில் இடம்பெற வேண்டிய பாடங்களும் செயல்களும் பின்வருவனவாம்.

1. கீழ்த்தொடக்கநிலை (1—4 வகுப்புகள்): தாய்மொழி அல்லது வட்டாரமொழி, கணிதம், சூழ்நிலையினை ஆராய்தல் (அறிவியல் சமூகப்பாடம்), ஆக்கச் செயல்கள், வேலை அனுபவங்களும் சமூகப்பணியும், உடல்நலக்கல்வி ஆகியன.

2. உயர்தொடக்கநிலை (5—7 வகுப்புகள்): இருமொழிகள், கணிதம், அறிவியல், சமூகப்பாடங்கள், கலை, வேலை அனுபவங்களும் சமூகப்பணியும், உடற்கல்வி, அறநெறி ஆன்மீகக் கல்வி.

3. செகண்டரி நிலை (8—10 வகுப்புகள்): மூன்று மொழிகள், கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல், குடிமையியல், கலை, வேலை அனுபவங்களும் சமூகப்பணியும், உடற்கல்வி, அறநெறி ஆன்மீகக் கல்வி.

உயர் செகண்டரிக் கல்வி நிலைக்கான கல்வி ஏற்பாடு

உயர் செகண்டரிக் கல்வி நிலையில் இருமொழிகளும் மூன்று விருப்பப்பாடங்களும் பயிலப்படும். பொதுக்கல்வியைப் பொறுத்தவரை அறிவியலிலும், மனிதவியலிலும் மாணாக்கர்கள் பெற்றுள்ள அறிவினை உறுதிப்படுத்துவதாக அமையும். மொத்தப் பள்ளிக் காலத்தில் கால்பகுதி மொழிப்பாடங்களுக்கும் அரைப்பகுதி விருப்பப் பாடங்களுக்கும், கால்பகுதி உடற்பயிற்சி போன்றவற்றிற்கும் செலவிடப்படும். உயர்செகண்டரிக்கல்வி நிலையங்களிலும் வேலை அனுபவப்பயிற்சி, சமூகப்பணி, உடலுழைப்பு முகாம்கள் ஆகியன இருக்கும். பாடத்திட்டத்தில் சாதாரண (ordinary) மாணாக்கர், திறனுடையோர் (advanced) ஆகியோர்க்கான இரு பிரிவுகள் காணப்படும். எல்லோரும் உயர்செகண்டரிப் பள்ளிகளில் பொதுக் கல்வி பெறத் தேவையில்லை. 50% மாணாக்கர்களுக்குத் தொழிற்கல்வி வாய்ப்புகள் அளிக்கப்படும். தொழிற்கல்வி பல்தொழில் நுட்பப் பள்ளிகளுடன் (Polytechnics) பகுதிநேரப் பயிற்சி,

அஞ்சல் வழியே பயிற்சி போன்ற வாய்ப்புகளும் பயன்படுத்தப்பட வேண்டும். பொதுச் சுகாதாரம், வாணிபம், தொழில் நிர்வாகம் போன்றவற்றிலும் புதிய பயிற்சி வாய்ப்புகள் இன்று தேவைப்படுவனவாகும்.

வேலை அனுபவங்கள் (Work Experiences)

கொத்தாரிக் கல்விக்குழு வலியுறுத்தியுள்ள கல்வி ஏற்பாட்டுச் சீர்திருத்தங்களில் முக்கியமானதொன்று வேலையனுபவமாகும். கல்வியின் தொடக்க நிலை முதல் செகண்டரி நிலை வரையில் வேலை அனுபவங்கள் மாணாக்கர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்று இக் கல்விக் குழு வலியுறுத்தியுள்ளது. கல்வியில் உடலுழைப்பு, செய்திறன்கள், உற்பத்தித்திறன் ஆகியன இடம் பெற வேலை அனுபவங்கள் உதவுகின்றன. அண்ணல் காந்தியடிகளது ஆதாரக் கல்வி முறையில் உடலுழைப்பு, உற்பத்திச் செயல்கள் செய்திறன்கள் ஆகியவற்றிற்குப் போதிய இடம் அளிக்கப்பட்டிருந்தது. கொத்தாரிக் கல்விக்குழு காந்தியடிகளது இக் கருத்துகளைக் கல்வி நிலைகள் எல்லாவற்றுக்கும் உரித்தானவை எனக் கருதி, வேலை அனுபவங்களை வலியுறுத்தியது. வேலை அனுபவங்கள் பள்ளியையும், வாழ்க்கையையும் இணைக்கின்றன. கல்வியையும் தொழிலையும் தொடர்பு படுத்துகின்றன. உடல் வளர்ச்சியையும் உள வளர்ச்சியையும் சேர்க்கின்றன. ஆக்கச் செயல்கள் உற்பத்திச் செயல்கள் ஆகியன கல்வியில் இடம் பெற உதவுகின்றன. பள்ளிக் கல்வியின் முக்கிய குறைபாடு எனப்பட்ட வாழ்க்கைத் தொடர்பின்மையை அகற்ற இவை உதவுகின்றன.

தொடக்கக் கல்வி நிலையில் காகித வேலை, களிமண் வேலை, நூற்பு போன்றன வேலை அனுபவங்களாகும். உயர் தொடக்கக் கல்வி நிலையில் தோட்டவேலை, நெய்தல், பிரம்பு வேலை, எளிய சமூக சேவைகள் போன்றன வேலை அனுபவங்களில் இடம் பெறும். உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் மரவேலை, நெய்தல், அச்சடித்தல், உலோக வேலை போன்றன வேலை அனுபவங்களில் இடம் பெறும். பள்ளிக்கு வெளியிலுள்ள தொழிற்கூடங்களிலும், விவசாயப் பண்ணைகளிலும் இந்நிலை மாணாக்கர்கள் அனுபவமும் பயிற்சியும் பெறுவது விரும்பத்தக்கதாகும். உயர் செகண்டரிக் கல்வி நிலையில் பள்ளிகளிலும் தொழிற்கூடங்களிலும் வேலை அனுபவப் பயிற்சியும் ஆண்டுக்குப் பத்து நாட்கள் சமூகப்பணி—உடலுழைப்பு முகாம்களும் இருக்கும். இவை தவிர ஆக்க வேலைப் பயிற்சி, உற்பத்திச் செயல்கள், சமூகப் பணி, உடலுழைப்பின் சிறப்பு, அறநெறி,

ஆன்மிக மதிப்புகள் ஆகிய ஆதாரக் கல்விக் கருத்துகள் கல்வியின் எல்லா நிலைகளிலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் எனவும் கொத்தாரிக் கல்விக்குழு வலியுறுத்தியுள்ளது. வேலை அனுபவங்களுக்கெனத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய செயல்கள் உள்ளூர் சூழலுக்கு ஏற்ப அமைய வேண்டும் என்று இக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

உயர் கல்வி நிலைக்கான கல்வி ஏற்பாட்டு அமைப்பிற்கான பொதுவான அடிப்படைக் கருத்துகளை டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் செயற்பட்ட பல்கலைக் கழகக் கல்விக்குழு (*1948*) தெரிவித்துள்ளது. இவை :

1. கல்வி ஏற்பாடு என்பது மாணாக்கர் பல்வேறு இடங் களில் பெறும் முழுமையான அனுபவத்தைக் குறிக்கும்.

2. மாணாக்கரின் வயது, திறன், விருப்பம், நாட்டம், ஆளுமைப் பண்புகள் போன்றவற்றின் மாற்றங்களுக்கேற்பக் கல்வி ஏற்பாடு நெகிழ்ச்சியுடையதாகவும், பல்வேறு வகைப்பட்ட தாகவும் இருக்கவேண்டும்.

3. கல்வி ஏற்பாட்டு அமைப்பு சமூக வாழ்க்கையோடு தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும்.

4. கல்வி ஏற்பாட்டுச் செயல்கள் வாழ்க்கைச் செயல்களைச் சார்ந்திருக்க வேண்டும்.

கல்வி ஏற்பாட்டின் தரத்தை உயர்த்துதலும், சிறப்பாக்கலும்

கல்வி ஏற்பாட்டின் தரத்தை உயர்த்துதல், சிறப்பாக்குதல் ஆகியவற்றின் வழியேதான் கல்வியின் தரத்தை உயர்த்திக் காப்பாற்ற இயலும். கல்வி ஏற்பாடு அவ்வப்போது திருத்தி மாற்றியமைக்கப்படுவதோடு அதன் தரமும் காப்பாற்றப்பட வேண்டும். இன்றைய உலகில் அறிவியல் துறைகளிலும் அறிவுத் துறையிலும் ஏற்பட்டுள்ள வியத்தகு வளர்ச்சிகளும் முன்னேற்றமும் நமது கல்வி ஏற்பாட்டில் பிரதிபலிக்கப்படவேண்டும். அப்போது தான் நம் கல்வி ஏற்பாட்டின் தரம் பிற நாடுகளின் கல்வி வளர்ச்சிக்கும் சமமாக இருக்க இயலும். பள்ளி அமைந்திருக்கும் சமுதாயச் சூழ்நிலையின் இயல்புகளுக்கேற்றவாறும் சமுதாயத்தில் பரவலாகக் காணப்படும் தொழில்களோடு இணைந்த வகையிலும் கல்வி ஏற்பாடு அமைக்கப்படவேண்டும். ஆக்க வேலைகளில் ஈடுபடுதல், இவற்றுடன் இணைந்த முறையில் கல்வி ஏற்பாட்டின்

பல்வேறு பாடங்கள் அமைக்கப்படல், பள்ளிக் கல்வி சமுதாயத்துடன் தொடர்பு கொண்டு இயங்குதல் போன்ற அடிப்படைக் கருத்துகள் கல்வியின் எல்லா நிலைகளுக்குமே பொருத்தமானவையாதலின் கல்வி ஏற்பாட்டினை அமைப்பதில் இக் கருத்துகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். திருத்தியமைக்கப்பட்ட கல்வி ஏற்பாட்டினைச் சிறந்த முறையில் பள்ளிகளில் செயற்படுத்தித் தேவைப்படும் பாடநூல்கள், ஆசிரியர்களுக்கான கற்பித்தல் வழிகாட்டிகள், கற்பித்தலுக்கான பிற பாடப் பொருள்கள் ஆகியன தயாரிக்கப்பட்டு உரிய காலத்தில் பள்ளிக்கு அளிக்கப்படவேண்டும். புதிய கல்வி ஏற்பாட்டினைச் செயற்படுத்துவதில் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படவேண்டும். கல்வி ஏற்பாட்டில் பயனுள்ள புதிய கருத்துகளைப் புகுத்திச் சோதனைகள் நடத்துவதற்குப் பள்ளிகளுக்குச் சுதந்திரம் அளிக்கப்படவேண்டும்.

கல்வி வசதிகள் பெருகுவது மட்டும் நமது இலட்சியமன்று. தரமான கல்வியினை அளிப்பதும் நமது நோக்கமாகும். தரமான கல்வியினை அளிப்பதற்குக் கல்வி ஏற்பாட்டினைச் சிறப்பாக்குவது இன்றியமையாததாகும். எனவே கல்வி நோக்கங்களையும், இவற்றோடு இணைந்து காணப்படும் வாழ்க்கை மதிப்புகளையும் அமைப்பதற்கான கருவிகளாக விளங்கும் கல்வி ஏற்பாடுகளைச் சீர்திருத்தி மாற்றியமைக்கவும் புதுப்பிக்கவும் முயற்சிகள் பல மேற்கொள்ளப்படவேண்டும். கல்வி ஏற்பாடுகளின் தரம் உயர்ந்து நாட்டின் வளர்ச்சி தேவைகளுடன் இணைந்து மாணாக்கர்கள் யாவருக்கும் ஒருசேரப் பயனளிக்கக் கூடியதாக அமைய கொத்தாரிக் கல்விக் குழு சில பரிந்துரைகளைச் செய்துள்ளது.

1. கல்வி ஏற்பாட்டின் வளர்ச்சிக்கும், அதன் தரத்தை உயர்த்துவதற்கும் உதவக்கூடிய ஆராய்ச்சிகளைப் பல்கலைக் கழகங்கள், மாநிலக் கல்வி நிறுவனங்கள், ஆசிரியர் கல்லூரிகள் போன்றன உடனடியாக மேற்கொள்ளவேண்டும். இவ் வாராய்ச்சிகளின் அடிப்படையில் கல்வி ஏற்பாடுகள் தரமுள்ளனவாகத் திருத்தியமைக்கப்படவேண்டும். அதோடு, இவற்றிற்கேற்பத் தரமான பாடநூல்களும், பிற கற்பித்தல் பொருள்களும் தயாரிக்கப்பட்டு வழங்கப்படவேண்டும்.

2. திருத்தி அமைக்கப்பட்ட தரமான கல்வி ஏற்பாடுகளை நன்கு செயற்படுத்தத் தேவைப்படும் சிறப்புப் பயிற்சியும், பணியிடைப் பயிற்சியும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

3. தேவைகளுக்கு ஏற்பப் புதிய கல்வி ஏற்பாடுகளை உருவாக்கி அவற்றைச் செயற்படுத்தும் உரிமையும் சுதந்திரமும் சில பள்ளிகளுக்கேனும் அளிக்கப்படவேண்டும். இவ்வுரிமை, முக்கியமாக ஆசிரியர் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் போன்றவற்றோடு இணைந்த முன்மாதிரிப் பள்ளிகளுக்கு அளிக்கப்படுதல் விரும்பத் தக்கதாகும்.

4. பல்வேறு பாடங்களுக்கான தரமான பாடத்திட்டங்களைத் தாமே உருவாக்கி, இவற்றைச் சிறந்த முறையில் செயற்படுத்தி, பிறபள்ளிகளுக்கு வழிகாட்டிகளாக விளங்கப் போதிய வசதிகளைப் பெற்றுள்ள சில பள்ளிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

5. குறிப்பிட்ட ஒரு பாடத்தினைக் கற்பிக்கும் எல்லாப் பள்ளிகளது ஆசிரியர்களும் இணைந்து அப்பாடத்திற்கான சிறப்பாசிரியர்கள் அமைப்பு ஒன்றினை ஏற்படுத்திக் கொள்வது அப்பாடத்திற்கான ஏற்பாட்டினைச் சிறப்பாக்குவதற்குத் தேவைப்படும் புதிய கல்விச் சோதனைகளை ஊக்குவிக்கும்.

6. மாநிலக் கல்வி வாரியங்கள் உயர்நிலைக்கல்வி ஏற்பாட்டைத் தயாரித்து, சிறந்த சாதனங்களையும் தகுதிபெற்ற ஆசிரியர்களையும் பெற்றுள்ள பள்ளிகளில் செயற்படுத்த வேண்டும்.

7. பொறியியல், தொழில்நுட்பக்கல்வி, தொழிற்கல்வி ஆகியவற்றிற்கான கல்வி ஏற்பாடுகள் புதுபிக்கப்படவேண்டும். பல புதிய கருத்துகளும் செயல்முறைகளும் இவற்றில் இடம் பெற வேண்டும்.

வினாக்கள்

1. உயர்நிலைப் பள்ளிக்கான கல்வி ஏற்பாட்டினை (curriculum) செயலுற்றதாகவும் நடைமுறைப் பயன் மிக்கதாகவும் ஆக்க உதவக்கூடிய நான்கு வழிகளைக் குறிப்பிடுக.

2. பள்ளிப்பாடத்திட்டம் பற்றிய கொத்தாரிக் கல்விக் குழுவின் முக்கிய சிபாரிசுகளைச் சுருக்கமாக ஆராய்க.

3. இடைநிலைக் கல்வித் துறையில் (Secondary Stage) நம் கல்வி நோக்கங்கள் எவையாகவிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

4. உயர்நிலைப் பள்ளிக் கல்விக் குழுவின் 'கல்வி ஏற்பாடு' பற்றிய கருத்துகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

5. கல்வியின் எல்லா நிலைகளிலும், சிறந்த மாணவர்களுக்கு ஒரு முன்னோடியான கல்வித்திட்டம் அளிப்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? காரணங்களைக் கூறவும்.

6. உயர்நிலைக் கல்வி ஏற்பாட்டைச் செயலுற்றதாக இயங்க (dynamic) அமைப்பதற்கான வழிகளைச் சுருக்கி எழுதுக.

7. கல்வி ஏற்பாடு என்பது யாது? எந்தக் காலத்துக்கும் பொருந்தக் கூடிய ஒரு கல்வி ஏற்பாட்டினை உருவாக்குவது இயலாது என்று கூறப்படுவதேன்?

8. கல்வி ஏற்பாடு கல்வியின் நோக்கங்களைச் சார்ந்து அமைவதாகும் என்னும் கூற்றினைக் கல்வி வரலாற்றினின்றும் எடுத்துக்காட்டுகளைத் தந்து விளக்குக.

9. சிறந்த கல்வி ஏற்பாட்டினை உருவாக்குதலில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

10. கல்வியில் பணி அனுபவம் (Work-Experience in Education) என்ற கருத்தை விளக்குக.

6. கல்விக் கருவிகள்

பண்டைக் காலந்தொட்டே சில கல்விக் கருவிகள் ஆசிரியருக்குத் துணையாக இருந்து வந்துள்ளன. தெளிவுடன் கற்பிக்கவும், கற்றலில் மாணாக்கர்களின் கவர்ச்சியைத் தூண்டவும், மாணாக்கர்கள் கற்றவற்றை ஒருங்கிணைத்து உள்ளத்தில் இருத்திக்கொள்ளவும், புதிய செய்திகளை உணர்ந்து அறிந்து கொள்ளச் செய்யவும் சில கல்விக்கருவிகள் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக உள்ளன. பாடநூல்கள், நூலகங்கள், கேள்வி-காட்சித் துணைக் கருவிகள், ஆய்வகங்கள் போன்றன இவையாகும்.

பாடநூல்கள்

பண்டைக் காலத்திலிருந்தே கற்பித்தல்-கற்றல் செயல் முறைகளில் முக்கியக் கல்விக் கருவியாகப் பாடநூல் இருந்து வந்துள்ளது. பாடநூல்கள் ஆசிரியர்களுக்குத் துணையாக இருக்க வேண்டுமேயன்றி, ஆசிரியர்கள் அவற்றை மட்டும் முழுமையாக நம்பியிருத்தல் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும். மற்றத் துணைக் கருவிகளைப் பயன்படுத்துவது போன்றே பாடநூல்களையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும். கல்விச் செயல் முறையில் பாடநூல்கள் முழுமையாக ஒதுக்கப்பட்டால் எழுத்து முறையினின்றும் நாம் பெறக்கூடிய நன்மைகளைப் பெற இயலாமற் போகும். பாடநூல்களே தேவையில்லை என்று கருதாமல், அதேபோது பாடநூலை நெட்டுருச் செய்வதுதான் கல்வி என்றும் கருதாமல் அவற்றைக் கற்பித்தலுக்கான துணைக் கருவிகளாக ஆசிரியர்கள் பயன்படுத்துவதே சிறந்ததாகும். பாடநூல்கள் அனுபவங்களின் பதிப்புகளேயாகும். பாடநூல்கள் மறைமுக அனுபவங்களாகும். உயர் வகுப்பு மாணாக்கர்களுக்குக் கல்வி புகட்டுதலில் பாடநூல்களும், சொற்களும் முக்கிய இடம் பெறுவது தவிர்க்க முடியாதது மட்டுமன்று, இவை தேவைப்படுவனவுமாகும். உயர் வகுப்பு மாணவர்கள் நூல்களைப் பயன் படுத்தும் முறைகளை நன்கு அறிதல் வேண்டும். பாடநூல்கள் பயனுள்ள கருத்துகளையும் அனுபவங்களையும் கோவையோடும் முறைப்படியும் ஒருங்கிணைத்து மாணாக்கர்களுக்கு அளிக்கின்றன. பாடநூல்கல் ஆசிரியர்கள், மாணாக்கர்கள் ஆகியோரது

நேரம் வீணாகாமல் தடுக்க உதவுகின்றன. மாணாக்கர்கள் தாங்களாகவே கற்பதற்குப் பாடநூல்கள் உதவுகின்றன. கல்வியின் தரத்தினை ஒரே சீராக்கவும் பாடநூல்கள் உதவுகின்றன.

மாணாக்கர்களது படிப்பாற்றல் வளரப் பாடநூல்கள் உதவுகின்றன. மேலும், பள்ளியில் கற்பிக்கப்பட்ட பாடங்களை வீட்டில் மீண்டும் படித்து அவற்றை நன்கு உணர இவை உதவுகின்றன. பாடநூல்களில் கொடுக்கப்பட்டுள்ள வரைபடங்கள், விளக்கப் படங்கள் ஆகியவற்றின் துணை கொண்டு மாணாக்கர்கள் தெளிந்த அறிவினைப் பெறச் சாத்தியமாகும்.

பாடநூல்கள் நல்ல கல்விக் கருவிகளாகும். பல பாடநூல்களைப் பயன்படுத்துதல், பாடங்களோடு இணைந்த முறையில் படங்கள், மாதிரிப் பொருள்கள், திரைப்படங்கள் போன்றவற்றினையும் பயன்படுத்துதல் முதலியன இன்றியமையாதனவாகும்.

பாடநூல்களில் பொதுவாகச் சில குறைபாடுகள் இருத்தல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாடநூல்கள் நேர் அனுபவங்களைப் போன்று உடனடியாக மாணாக்கர்களுக்குப் பயனளிக்கமாட்டா. இவற்றுக்கு உண்மைப் பொருளுணர்ந்து இவற்றால் தேவையுள்ள பயன்களைப் பெறுவதற்கும் இவற்றிற்கடிப்படையான நேர் அனுபவங்கள் மாணாக்கர்களுக்குத் தேவைப்படுவனவாகும். பாடநூல்களில் காணப்படும் பாடக் கருத்துகள் மிகவும் சுருக்கித் தரப்பட்டிருக்கும். மாணாக்கர்கள் அவற்றைப் படித்து அவற்றின் உண்மைப் பொருளை உணர்ந்து கொள்வர் என்று நாம் உறுதியாகக் கூற முடியாது. பாடநூல்களில் காணப்படும் கருத்துகளைச் 'செயலற்ற கருத்துகள்' என்று ஒயிட்ஹெட் (Whitehead, A. N.) என்பவர் குறிப்பிடுகிறார். சில பாடநூல்களில் பொருள் விளங்காத சொற்கள், தெளிவற்ற நடை ஆகியன இருப்பின் அவற்றினின்றும் மாணாக்கர்கள் பயன் பெற மாட்டார்கள். மேலும், பாடநூல்களைப் படிக்கும்போது அவ்வப்போது மாணாக்கர்களின் உள்ளங்களில் எழக்கூடிய ஐயப்பாடுகளுக்கு அப் பாடநூல்களிலேயே தீர்வு காணக்கூடிய வழிகள் இரா.

நல்ல பாடநூல்கள் பொதுவாகப் பல நற்பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1. பாடநூலாசிரியர்கள் ஆழ்ந்த அறிவும் புலமையும் பெற்றவர்களாகவும், அனுபவம் மிக்க ஆசிரியர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. மாணாக்கர்களது அறிவுநிலை, பொருளுணரும் திறன், கவர்ச்சிகள் ஆகியவற்றுக்கு ஏற்ற வகையில் பாடநூல்கள் எழுதப் படவேண்டும்.

3. மாணவர்களின் வளர்ச்சிப் படிகளுக்கேற்பப் பாடநூல்கள் தரப்படுத்தப்பட்டு இருக்கவேண்டும்.

4. பொருளறிவைச் சார்ந்த செய்திகள் எளிய மொழியில் தெளிவாகவும் முறையாகவும் கூறப்பட்டிருக்க வேண்டும்.

5. ஒருபுறச் சார்பின்றிச் சிறந்த குறிக்கோள்களை வலியுறுத்தும் வகையில் பாடநூல்கள் எழுதப்படவேண்டும்.

6. கீழ் வகுப்புகளுக்கான பாடநூல்கள் உளவியல் முறைப் படியும் உயர் வகுப்புகளுக்கான பாடநூல்கள் தருக்க முறைப் படியும் எழுதப்படவேண்டும்.

7. ஒவ்வொரு பாடத் தலைப்பிலும் வகுப்பின் நிலைக்குத் தேவைப்படும் அளவு பாடக் கருத்துகள் இருத்தல் வேண்டும்.

8. பாடநூல்களில் தேவைப்படும் படங்கள், வரைபடங்கள் விளக்கப்படங்கள் போன்றன இருத்தல் வேண்டும்.

9. பாடநூல்களில் கையாளப் பெறும் எடுத்துக்காட்டுகள், விளக்கங்கள், காரணங்கள் போன்றன மாணாக்கர்களின் அனுபவங் களினின்றும் எழுவனவாக இருத்தல்வேண்டும்.

10. ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதியிலும் பாடச் சுருக்கம், பயிற்சிகள், மேலும் படிப்பதற்கான நூல்களைப் பற்றிய குறிப்பு போன்றனவும் இருத்தல் வேண்டும்.

11. நல்ல பாடநூல்கள் என்பவற்றுள் மேற்கோள் நூல்கள் வெளியீடுகள், மூல நூல்கள் போன்றனவும் அடங்கும்.

12. பாடநூல்கள் தெளிவாகவும், அழகாகவும், அச்சடிக்கப் பட்டு, நன்கு கட்டமைக்கப்பட்டு, மாணாக்கர்களால் சாதாரண மாக வாங்கக்கூடிய விலையில் இருத்தல் வேண்டும்.

டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களது தலைமையில் செயற்பட்ட செகண்டரிக் கல்விக்குழு நல்ல தரமான பாடநூல் களைத் தயாரித்து வெளியிடுவதற்குப் பல கருத்துகளை எடுத்துரைத்துள்ளது.

1. உயர்மட்டப் பாடநூற் குழு ஒன்றினை ஒவ்வொரு மாநிலத் திலும் நிறுவுதல் வேண்டும். இக் குழுவானது உயர்நீதிமன்ற

நீதிபதி ஒருவரைத் தலைவராகவும், கல்வி இயக்குநர், அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு உறுப்பினர் ஒருவர், துணை வேந்தர், ஒரு தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியை இரு கல்வி வல்லுநர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும், கொண்டிருக்கும். இக் குழு சுதந்திரமாகச் செயற்படவேண்டும்.

2. பாடநூல்களின் தரத்தை மதிப்பிடத் தலைசிறந்த அறிஞர்கள் அடங்கிய குழு ஒன்றினை நிறுவுதல் வேண்டும்.

3. மாநில அரசுகள் தாமே நல்ல பாடநூல்களை வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

4. பாடநூல்களை மேலும் பயன் மிக்கனவாக உயர்த்த உதவும் படங்களை வரைதலில் ஓவியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல் வேண்டும். அரசினரே இத்தகைய சிறந்த படங்களின் அச்சுக்கான வார்ப்புகளைப் புத்தகப் பதிப்பாளர்களுக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

5. மொழிப் பாடம் தவிர பிற பாடங்களுக்கு ஒவ்வொரு வகுப்புக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பாடநூல்களைப் பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டும்.

6. பள்ளிகளில் பாடநூல்கள் அடிக்கடி மாற்றப்படுவது தவிர்க்கப்படவேண்டும்.

டாக்டர் டி. எஸ். கொத்தாரி (Dr. D. S. Kothari) அவர்களது தலைமையில் செயற்பட்ட கல்விக்குழு பாடநூல்களின் தரத்தினை உயர்த்துவதற்கும், பயன்மிக்க தரமான பாடநூல்களை வெளியிடுவதற்கும் பின்வரும் கருத்துகளைத் தெரிவித்துள்ளது.

1. சிறந்த பாடநூல்களை உருவாக்கி வெளியிட மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் நிரந்தரமாகச் செயற்படக்கூடிய பாடநூல் அமைப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

2. மத்திய அரசின் கல்வி அமைச்சகம் நாடு முழுவதிலும் பயன்படக் கூடிய சிறந்த பாடநூல்களை வெளியிட வேண்டும். இம் முயற்சி நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு உதவுவதுடன் பல்வேறு மாநிலங்களில் உள்ள பள்ளிகளின் பாடத்தரம் சமமாக இருப்பதற்கும் உதவி செய்யும். தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்குழு (N.C.E.R.T.) இம் முயற்சியில் அதிக அளவில் ஈடுபடுவது விரும்பத்தக்கதாகும்.

4. பாடநூல்களுடன் இணைந்த கற்பித்தலில் ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் துணைநூல்களும் தயாரிக்கப்படவேண்டும்.

5. அரசினால் வெளியிடப்படும் பாடநூல்களின் விலை இலாப-நஷ்ட அடிப்படையிலன்றி வெளியீட்டுச் செலவினை ஈடு செய்யும் அளவிலேயே இருத்தல் வேண்டும்.

6. பாடநூல்கள் மாணாக்கர்களது கூட்டுறவுச் சங்கங்கள் வழியே அவர்களுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும்.

7. நல்ல தரமான பாடநூல்களை எழுதி உருவாக்கித்தர சிறந்த ஆசிரியர்கள், வல்லுநர்கள் ஆகியோர்கள் பயன்படுத்தப் படவேண்டும்.

8. பாடநூல் ஆசிரியர்களுக்கு, அவர்களது உழைப்புக்கு ஏற்ற வண்ணம் தாராளமாக ஊதியம் அளிக்க வேண்டும்.

9. அகில இந்திய வானொலி நிலையங்களின் கல்வி ஒலி பரப்பின் பாடங்களுக்கான துணைக் கற்பித்தல் பொருள்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

10. தேசிய அளவில் கல்வி அமைச்சகத்தினால் அமைக்கப் படும் பாடநூல் வெளியீட்டமைப்பு அறிவியல் நூல்கள், தொழில் நுட்ப நூல்கள் போன்றவற்றை வெளியிடவேண்டும்.

பாடநூல்கள் வெளியீட்டுப் பொறுப்பினை அரசு மேற்கொள்ளல்

பாடநூல்கள் வெளியிடுதல் நாட்டுரிமை ஆக்கப்படுவது சிறந்ததா அல்லது தனியார் நிறுவனங்களின் பொறுப்பில் விடுவது நல்லதா என்ற பிரச்சினையும், கருத்து வேறுபாடும் தோன்றக்கூடும். தேசியப் பொது நலனையும் கல்வி வளர்ச்சித் தேவைகளையும் கருத்தில் கொண்டு இப்பிரச்சினையை அணுகினால், இத்துறையில் அரசு ஈடுபடுவது இன்றியமையாததும் விரும்பத்தக்கதும் ஆகும். இத்துறையில் அரசின் ஈடுபாடு நன்மை பயப்பதாகும். சிறந்த தரமான பாடநூல்களை அரசு வெளியிடுவது தனியார் துறையிலுள்ள பதிப்பாளர்களுக்கு ஒரு முன் மாதிரியாகவும், இத்தகைய நல்ல பாடநூல்களைத் தாமும் வெளியிட அவர்களுக்குத் தூண்டுதலாகவும் அமையும். பாட நூல்கள் அரசினால் வெளியிடப்படுவது இலாபம் பெறும் அடிப் படையில் இல்லாததனால் பாடநூல்கள் நியாய விலையில் மாணாக்கர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புப் பெருகும். கல்லூரிப் பாடநூல்கள் தாய்மொழியில் வெளியிடப்படும் பொறுப்பினை அரசே மேற்கொள்ள வேண்டும். கல்லூரிப் பாடநூல்களைத் தாய்மொழியில் வெளியிட்டால் போதிய இலாபம் கிடைக்காது என்ற காரணத்தினால் தனியார் நிறுவனங்கள் இத்துறையில்

ஈடுபடாமல் வாளாவிருந்துவிடுவர். எனவே, இத்துறையில் அரசு பெருமளவு ஈடுபடுவது இன்றியமையாததாகும்.

பாடநூல்கள் வெளியீடு நாட்டுரிமை ஆக்கப்படுவதால் தனியார் நிறுவனங்களும் தனி மனித முயற்சியும் பாதிக்கப் படலாம். சில சமயங்களில் உள்ளூர்த் தேவைகள், சூழ்நிலை மாற்றம், மாவட்டத் தேவைகள் ஆகியவை புறக்கணிக்கப்பட நேரிடலாம். ஒரு குறிப்பிட்ட தொகை ஊதியத்திற்காகப் புத்தகம் எழுதப்பட்டு அப்புத்தகத்தைத் தயாரித்து வெளியிடுவது புத்த கத்தின் தரத்தைப் பாதிக்கலாம். பாடநூல்கள் வெளியீட்டைப் பொறுத்தமட்டில் அரசுத்துறையும் தனியார்துறையும் இணைந்து செயற்படுதல் உடனடித் தேவையாக அமைகிறது.

மேலும் பள்ளிப் பாடநூல்கள் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக அளிக்கப்பட வேண்டும். மாணாக்கர்களின் கல்வி நலன்களுக்காகப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் புத்தக வங்கிகள் (Book Banks) அமைக்கப்பட வேண்டும். இவற்றோடு பாட நூல்கள் குறைந்த விலைக்கும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். பள்ளிகளில் பழைய பாடநூல்களைச் சேகரித்தும், அவசியமாயின் அவற்றை மீண்டும் கட்டமைப்புச் செய்தும் மாணாக்கர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம்.

தமிழ்நாட்டில் உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலை வரை முக்கியமான பாடங்கள் அனைத்திற்கும் பாடநூல்கள் வெளியிடும் பொறுப்பினை அரசு மேற்கொண்டுள்ளது. இப் பொறுப்பினை 'தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் ஏற்றுப் பணியாற்றி வருகிறது இந் நிறுவனம் தரமான பாடநூல்களைச் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு உருவாக்கி வெளியிடுகின்றது. பள்ளிக் கல்வி நிலை, கல்லூரிக் கல்வி நிலை ஆகியவற்றிற்கான பல பாடநூல்களைத் தமிழ் மொழியில் வெளியிட்டு வருகிறது. மேலும் பல புத்தகங் களைத் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிட்டு வருகிறது. இதுவரை 900-க்கு மேற்பட்ட நூல்களை இந் நிறுவனம் வெளியிட்டுள்ளது. நூலாசிரியர்களுக்குத் தகுந்த முறையில் ஊதியம் அளிக்கப்படுகிறது. பாடநூல்கள் கூட்டுறவு விற்பனை நிலையங்களின் மூலமாகவும், அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் வழியாகவும் மாணாக்கர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

நூலகங்கள்

மாணாக்கர்களது முழுமையான கல்வி வளர்ச்சிக்கு நூலகங்கள் தேவைப்படுகின்றன. அறிவு விரிவடைவதற்கும்,

பொழுதுபோக்கிற்கும், மகிழ்ச்சியடைவதற்கும் பலவகைப்பட்ட நூல்கள் தேவைப்படுகின்றன. இத்தேவைகளை நூலகங்கள் நிறைவு செய்கின்றன. பண்பாடு மானிட நாகரிகம், மெய்யறிவு, அறிவியல், பொறியியல் போன்ற பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள வியத்தகு வளர்ச்சியைப் பாதுகாத்து இன்றையத் தலைமுறையினர்க்கு அளிப்பவை நூலகங்களாகும். கல்வி வளர்ச்சியின் மையமாகவும் ஒரு சக்தி வாய்ந்த கல்விக் கருவியாகவும் நூலகம் விளங்குகின்றது. கற்பித்தல்-கற்றல் செயல் சிறப்பாக நடைபெறுவதற்குப் பாடநூல்கள் மட்டும் போதா. இதற்குப் பலவகைப்பட்டனவும் பல்வேறு பொருள்கள் பற்றியனவும், பல நிலைகளினின்றும் எழுதப்பட்டனவுமாகிய ஏராளமான நூல்கள் அடங்கிய நூலகங்கள் அவசியமாகும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரும் நல்ல நூல்களைப் படிப்பதில் இயல்பாகவே விருப்பமுடையவர்கள். தாமே பல்வேறு நூல்களைப் படிக்கும் பழக்கத்தை மாணாக்கர்களிடம் தோற்றுவிப்பதற்கு நூலகங்கள் பெரிதும் பயன்படுகின்றன. கல்வி நிலையங்கள் மாணாக்கர்களுக்கு அளிக்கக் கூடிய பலவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கது. 'மாணாக்கர்களின் படிக்கும் திறனையும், ஆற்றலையும் சீரிய பயிற்சியின் வழியேயும் நன்முறையில் வழிகாட்டுதல் மூலமாகவும் வளர்ப்பதேயாகும்' என்று மேத்யூ ஆர்னல்டு (Mathew Arnold) என்பவர் குறிப்பிடுகின்றார். பள்ளி நூலகம் மாணாக்கர்களை ஈர்க்கும் வண்ணம் அமைதல் வேண்டுமேயன்றி அவர்களை நூலகத்திலிருந்து விரட்டியடிக்கும் விதத்தில் அது அமையக் கூடாது. நூலகங்களில் பல்வேறு பாடங்கள், பாடத் திட்டங்கள் ஆகியவற்றின் எல்லைகள் அகற்றப்பட்டுப் பரந்த நோக்குடன் வாழ்க்கையில் பல்வேறு நூல்களைப் படித்துப் பயன் பெறுதல் என்ற நற்பழக்கம் ஏற்படுகின்றது. கல்வி நிலையங்களின் பல்வேறு செயல்களுக்கு மையமாகச் செயலரங்கமாக நூலகங்கள் விளங்கவேண்டும். மேலும் கல்வி ஏற்பாட்டின் செயல்கள் யாவும் நூலகங்களிலிருந்து தோன்றும் செயல்களாக அமையவேண்டும். தனிப்பட்ட முறையில் கற்பதற்கும், பல மாணாக்கர்கள் குழுக்களாக ஒரு செயல் திட்டத்தைச் செய்து முடிப்பதற்கும் பாடங்களோடு தொடர்புள்ள பல விருப்பச் செயல்களைத் திறம்பட ஆற்றுவதற்கும் நல்ல நூலகங்கள் இன்றியமையாதன ஆகும். மாணாக்கர்களது அனுபவங்கள், பிரச்சினைகள், வினாக்கள் போன்ற யாவற்றையும் நூலகங்களுக்கு எடுத்துச் சென்று, அங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ள அரிய நூல்களிலிருந்தும் கிடைக்கப் பெறும் கருத்துகளின் அடிப்படையில் விவாதித்துப் புதிய கருத்துகளையும், புதிய அனுபவங்களையும்

மாணாக்கர்கள் பெறுகின்றனர் என்று அமெரிக்கக் கல்வியாளர் ஜான் டூயி குறிப்பிடுகின்றார். நூலகங்களை மாணாக்கர்களது அறிவு வளர்ச்சிக்கான ஆய்வுக் களங்கள் எனக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமானதாகும்.

நூல்களை எப்படிப் படிப்பது என்பதனை மட்டும் மாணவர்களுக்குக் கற்பித்தல் போதுமானதன்று. எதனைப் படிப்பது, எப்படிப்பட்ட நூல்களைப் படிப்பது போன்றவற்றையும் அவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பித்தல் வேண்டும். எனவே, நூலகங்களில் பயன் மிக்க நூல்கள் சேகரித்து வைக்கப்பட வேண்டும். பள்ளிகளுக்குத் தேவைப்படும் இன்றியமையாத கல்விக் கருவிகளில் நூலகங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை ஆகும். சிறந்த முறையில் அமைக்கப்பட்ட நூலகங்கள் கல்விச் செயலுக்கு இன்றியமையாததால் பள்ளிகளில் பொது நூலகமும், தனித்தனி வகுப்பு நூலகங்களும் இருத்தல் வேண்டும்.

பள்ளி நூலகங்களினால் மாணாக்கர்கள் பெறும் பயன்கள் பின் வருமாறு :

1. மாணாக்கர்களது சொற்களஞ்சியத்தை அதிகரிக்கவும், நுண்ணறிவைத் துரிதப்படுத்தவும், கற்பனையைத் தூண்டவும், பொது அறிவினைப் பெருக்கவும் நூலகங்கள் உதவுகின்றன.

2. நூலகங்களிலுள்ள நல்ல நூல்களில் காணப்படும் சீரிய கருத்துகளைப் பற்றிச் சிந்திக்கவும், அதன் விளைவாகப் படிப்பதில் ஆர்வத்தினை வளர்க்கவும் சாத்தியமாகிறது.

3. மாணாக்கர்களது அறிவைப் பெருக்கி, அதனை ஆழ்ந்ததாகச் செய்யவும், பாடப் பொருளறிவுடன் முக்கியமாக மாணாக்கர்களது பிற்கால வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படக்கூடிய பொதுப் பொருளறிவினையும், பின்னணி அறிவினையும் அவர்கள் பெறுவதற்கும் பள்ளி நூலகங்கள் உதவுகின்றன.

4. நூலகங்களிலுள்ள சிறந்த நூல்களைப் படித்தல் மாணாக்கர்களது பிற்கால வாழ்க்கையில் எழக்கூடிய பல நிலைத்த நாட்டங்களை (aptitudes) உருவாக்க உதவுகிறது.

5. படிப்பதில் ஆர்வத்தினையும், ரசித்தல் திறனையும் மாணாக்கர்களிடம் வளர்த்தலில் நூலகங்கள் துணை செய்கின்றன.

6. மாணாக்கர்களது இல்லங்களில் படிப்பதற்குத் தகுதியான நூல்கள் கிடைப்பதில்லை. இக்குறையினைப் பள்ளி நூலகங்கள்

தீர்த்து வைக்கின்றன. மேலும் பயனற்ற, தீமை பயக்கக் கூடிய புத்தகங்களை மாணவர்கள் படித்தலின் சாத்தியக் கூற்றினைக் குறைக்கப் பள்ளி நூலகங்கள் பெரிதும் உதவுகின்றன.

7. நூலகங்களில் மாணாக்கர்கள் கவனத்துடன் நூல்களைப் பயன்படுத்துதல் மாணவர்களிடையே துப்புரவு, சுகாதாரம், பொதுச் சொத்துகளைப் பாதுகாத்தல், ஒழுங்கு, கட்டுப்பாடு, காலந்தவறாமை போன்ற நல்ல பழக்கங்களும் நற்பண்புகளும் வளர்வதற்கு நூலகங்கள் வழி செய்கின்றன.

8. வயது வந்த மாணவர்களின் வேலைப் பொறுப்பினையும், நன்னடத்தையினையும் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் வகுப்பு நூலகங்களின் பொறுப்பில் அவர்களை அமர்த்துவது மாணாக்கர்களிடையே பொறுப்புகளை ஏற்று நடத்துதல், தலைமைப் பண்புகளை வளர்த்தல் போன்றவற்றின் வளர்ச்சிக்கு உதவும்.

9. இன்று முற்போக்குப் பள்ளிகளில் கையாளப் பெறும் தனிக் கற்பித்தல் முறைகளுக்குப் பள்ளி நூலகங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

10. பள்ளி மாணாக்கர்களில் பெரும்பாலோர் தங்களது ஓய்வு நேரத்தினைப் பயனுள்ளதாகச் செலவிட உணர்ந்திருப்பதில்லை. பயனுள்ள நல்ல நூல்களைப் படிப்பது மாணாக்கர்களுக்கு அவர்களது ஓய்வு நேரத்தினைச் சிறப்பாகச் செலவிட உதவும். இதற்குப் பள்ளி நூல்நிலையங்கள் உதவுகின்றன.

11. மாணாக்கர்களது படிக்கும் பழக்கம், படிக்கும் ஆற்றல் ஆகியவற்றை வளர்த்தலில் நூலகங்கள் முக்கிய பங்கு ஏற்கின்றன.

12. பள்ளி நூலகங்களில் காணப்படும் சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புகளையும், உயரிய குறிக்கோள்களையும் வலியுறுத்தும் பயன் மிக்க நூல்களை மாணாக்கர்கள் படிப்பதன் விளைவாக அவர்களிடையே சமூக, அறநெறி, ஆன்மிக மதிப்புகளை வளர்க்கவும், அவற்றைப் பின்பற்றுவதற்குரிய பண்புகளை வளர்க்கவும் நூலகங்கள் உதவுகின்றன.

நூலகத்தின் நிருவாக அமைப்பு

1. பள்ளி நூலகம் அமைதியும், கவர்ச்சியும் நிறைந்த இடத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். நூலகத்தில் நல்ல காற்றோட்ட வசதி, ஒளி வசதி ஆகியவை இருத்தல் வேண்டும். நூலகத்தில் மாணாக்கர்கள் அமர்ந்து படிக்க நன்முறையில்

அமைக்கப்பட்ட நாற்காலிகள், மேஜைகள் போன்றன இருத்தல் வேண்டும். நூலகத்தின் சுவர்களில் இலக்கிய மேதைகள், கல்வி மேதைகள், அறிவியல் மேதைகள் ஆகியோரின் படங்கள், அழகிய இயற்கைக் காட்சிகளின் சித்திரங்கள் போன்றவை வைக்கப்பட்டிருத்தல் நூலகத்தின் சூழ்நிலையானது படித்தல், சிந்தித்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதாக அமையும்.

2. நூலகத்திலுள்ள புத்தகங்கள் கல்வித்துறை, பல்கலைக் கழகம் ஆகியவற்றினால் அனுமதிக்கப்பட்டனவாக இருத்தல் வேண்டும். இவற்றுடன் வார இதழ்கள், மாத இதழ்கள், பருவ இதழ்கள் போன்றனவும் சிறந்த முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டனவாக இருத்தல் வேண்டும். இவை கல்வி பயிலும் மாணாக்கர்களின் வயது வேறுபாடுகள், கவர்ச்சி வேறுபாடுகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்கப் பட்டனவாக இருத்தல் வேண்டும். பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கங்கள், மரபு ஆகியவற்றைச் சுவையுடன் விளக்கக் கூடிய கதைகள், கட்டுரைகள், இலக்கிய நூல்கள், சரிதைகள், சுய சரிதைகள், பயண நூல்கள், நாடகங்கள், நவீனங்கள் ஆகியனவும், விளையாட்டு, பொழுதுபோக்குச் செயல்கள் ஆகியவை பற்றிய நூல்களும், அறிவியல் பற்றிய நூல்கள், அகராதிகள், பேரகராதிகள் போன்றனவும் நூலகத்தில் இருத்தல் வேண்டும். மாணவர்களிடையே உயரிய சிந்தனையைத் தூண்டவல்ல நூல்கள், அவர்களது சமூக அறநெறி ஆன்மிக வளர்ச்சிக்கு உதவக்கூடிய நூல்கள், உயிர்ப்பூட்டும் நூல்கள், மேற்கோள் நூல்கள் ஆகிய யாவும் நூலகத்தில் இடம் பெற வேண்டும்.

3. நூலகத்திலுள்ள நூல்களுடன் பல புதிய நூல்கள் ஒவ்வோர் ஆண்டும் சேர்க்கப்படவேண்டும். இந்நூல்கள் தாய் மொழி, வட்டாரமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைச் சார்ந்தன வாக இருத்தல் வேண்டும். ஆசிரியர்களுக்கென பாடப்பொருள் தொடர்புடைய பல நூல்கள் தமிழ்மொழியிலும், ஆங்கிலத்திலும் நூலகத்தில் இருத்தல் வேண்டும்.

4. நூலகம் மாணாக்கர்களின் சுய கல்விக்குச் சிறப்பிட மாகும். எனவே நூலகத்தில் அவர்கள் தாமே புத்தகங்களைப் பார்த்துத் தேர்ந்தெடுத்துப் பயனுறும் வகையில் திறந்த நுழைவு முறை (Open access system) பின்பற்றுதல் விரும்பத்தக்கதாகும். இம்முறை நன்முறையில் செயற்பட நூலகரின் மேற்பார்வையும், மாணாக்கர்களின் பொறுப்புணர்ச்சியும் இன்றியமையாதனவாகும். வயது வந்த மூத்த மாணாக்கர்கள் நூலகம் நன்கு செயற்பட

நூலகர்க்கு, ஓய்வு நேரங்களிலும், இடைவேளைகளிலும் உதவி செய்யலாம்.

5. நூலகத்தின் வாயிலில் ஓர் அறிவிப்புப் பலகை வைக்கப் பட்டிருக்க வேண்டும். அதில் நூலகத் தொடர்புடைய அறிவிப் புகள், புதிதாக நூலகத்துக்கு வாங்கப்பட்ட நூல்களின் பொருள டக்கங்களின் குறிப்பு, சில சமயங்களில் அவற்றின் மேலட்டைகள் ஆகியவற்றைப் பொருத்தி வைக்க வேண்டும். புதிய நூல்களைப் படிக்க மாணாக்கர்களது ஆர்வத்தினைத் தூண்ட இது பெரிதும் உதவும்.

6. மாணாக்கர்கள் நூலகத்தின் முழுப்பயனைப் பெற வாரத் திற்கு ஓரிரண்டு பாடவேளைகள் நூலகத்திற்காக ஒதுக்கப்பட வேண்டும். மாணாக்கர்கள் பாடத்தொடர்பான நூல்களை மட்டு மன்றி, பிற புத்தகங்களையும் படிக்கத் தூண்ட வேண்டும். வகுப்பு ஆசிரியர்கள் மற்றப் பாட ஆசிரியர்கள், நூலகர் ஆகியோர் மாணாக்கர்கள் விரும்பிப் படிக்கும் நூல்களை அறிந்துகொண்டு அவர்கள் தேர்ந்தெடுத்துப் படிப்பதற்குரிய வேறு நூல்களைப் பற்றிய அறிவுரைகளைக் கூறலாம். நூலகத்தில் மட்டுமன்றி வீட்டிலும் பல நூல்களைப் படிப்பதற்கு மாணாக்கர்கள் ஊக்குவிக் கப்படவேண்டும்.

7. விடுமுறை நாட்களிலும் குறிப்பிட்ட நேரங்களில் நூலகம் திறந்து வைக்கப்படலாம். விடுமுறை நாட்களில் படிக்க விரும்பும் மாணாக்கர்களுக்கு இது பெரிதும் உதவும். மேலும் விடுமுறை நாட்களில் மாணாக்கர்களது பெற்றோர், பிற பொது மக்கள் ஆகியோர் பள்ளி நூலகத்தைப் பயன்படுத்த அனுமதிக் கலாம். இது பள்ளிக்கும் சமுதாயத்திற்குமிடையே நெருங்கிய பிணைப்பினை ஏற்படுத்த உதவும்.

8. பள்ளியிலுள்ள பொது நூலகத்தோடு தனித்தனி வகுப்பு நூலகங்கள் இருக்க வேண்டும். வகுப்பு நூலகத்தில் குறிப்பிட்ட ஒரு வகுப்புக்கான பாடநூல்கள், அவ்வகுப்பு மாணாக்கர்களது கவர்ச்சி, உளமுதிர்ச்சி நிலை ஆகியவற்றிற்கு ஏற்பத் தேர்ந்தெடுக் கப்பட்ட பல்வேறு நூல்கள் ஆகியன வைக்கப்பட்டிருக்க வேண்டும். பொது நூலகத்தின் சிறந்த உறுப்பாக வகுப்புநூலகம் விளங்குதல் வேண்டும். வகுப்பு நூலகங்கள் சம்பந்தப்பட்ட வகுப் பாசிரியர் பொறுப்பில் செயற்படும். வகுப்பு நூலகங்களில் வகுப் பாசிரியர்களது மேற்பார்வையில் மாணாக்கர்கள் நூல்களைப் படித்துப் பயன் பெறுவர்.

9. பள்ளிப் பொதுநூலகத்தில் அல்லது பள்ளி நூலகத்தின் இணையாகப் பல நாளிதழ்கள், வார, மாத, பருவ இதழ்கள் போன்றவற்றைப் படிக்க நல்ல ஒரு படிப்பறை (Reading Room) வசதி செய்து தரப்படவேண்டும்.

10. பள்ளி நூலகக் குறிப்பேடுகள் யாவும் நல்ல முறையில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இது நூலகம் சிறப்பாகச் செயற்பட உதவும். பள்ளி நூலக விதிகள் தெளிவானவையாகவும், எளியனவாகவும், எண்ணிக்கையில் குறைந்தும் இருத்தல் வேண்டும்.

11. பள்ளி நூலகத்தினால் மாணாக்கர்கள் முழுப் பயனைப் பெறுவதற்குப் பயிற்சி பெற்ற நூலகரின் பணி இன்றியமையாத தாகும். நூலகத்தினால் மாணாக்கர்கள் மட்டுமின்றி, ஆசிரியர் களும் நல்ல பயன்களைப் பெறவேண்டுமாயின் பயிற்சி பெற்ற நூலகர் ஒருவர் நூலகத்தினை நிர்வகிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்வது அவசியமாகும்.

12. புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், நூலகத்தினால் மாணாக்கர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்க்கு நற்பயன்களை விளைவிக்கவும், புத்தகக் கண்காட்சிகள் நடத்துதல், நூலக வார விழாக்கள் கொண்டாடுதல் போன்றன பெரிதும் உதவும்.

நூலகங்கள் பற்றிப் பல்கலைக்கழகக் கல்விக்குழு (1948–49) தெரிவித்துள்ள கருத்துகள்

1. பல்கலைக் கழகத்தின் பல்வேறு கல்விச் செயல்களுக்கு முக்கிய கருவியாக நூலகம் விளங்கவேண்டும்.

2. சீரிய முறையில் திட்டமிடப்பட்ட திறந்த நுழைவு முறை நூலகத்தில் நடைமுறையில் செயல்படுத்தப்படவேண்டும்.

3. நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் நூலகம் செயற்பட வேண்டும். வாரத்தில் ஏழு நாட்களிலும், கோடை விடுமுறை முழுவதிலும் நூலகம் செயற்படவேண்டும்.

4. பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளிலுள்ள நூலகங்கள் சீரிய முறையில் பல்கலைக் கழகப் பொது நூலகத் துடன் இணைக்கப்படவேண்டும்.

5. நூலகவியலில் டாக்டர் பட்டப்படிப்புக்கு ஒத்த தகுதி பெற்ற ஒருவர் பல்கலைக் கழகப் பொது நூலகத்தின் நிர்வாகப்

பொறுப்பில் அமர்த்தப்படவேண்டும். இவருக்கு உதவி செய்யப் பல துணை நூலகர்களும், உதவி நூலகர்களும் இருக்க வேண்டும்.

6. மாணாக்கர்களிடையே நூலக மனப்பான்மையைத் தோற்றுவிக்க வேண்டும்.

7. இளம் ஆசிரியர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ 100/- புத்தகங்கள் வாங்குவதற்கு உதவித்தொகையாக வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் இதே அளவு தொகையைப் புத்தகங்கள் வாங்குவதற்குச் செலவிட வேண்டும்.

நூலகங்கள் பற்றிச் செகண்டரிக் கல்விக்குழு தெரிவித்துள்ள கருத்துகள்

1. பள்ளியில் நூலகம் மிகவும் கவர்ச்சியுள்ள இடமாக ஆக்கப்பட வேண்டும்.

2. சிறந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களும் வார, மாத, பருவ இதழ்களும் நூலகத்தில் இருக்க வேண்டும்.

3. நூலகவியலில் உயர் கல்வியும் பயிற்சியும் பெற்ற நூலகர் பொறுப்பில் பள்ளி நூலகம் செயற்பட வேண்டும்.

4. மாணவர்களிடையே படிப்புப் பழக்கத்தைத் தோற்றுவிக்கும் பொறுப்பு நூலகரையும் ஆசிரியர்களையும் சார்ந்ததாகும்.

5. பள்ளிப் பொது நூலகம், வகுப்பு நூலகங்கள், பாட நூலகங்கள் ஆகியவை இணைந்து நன்முறையில் செயற்படவேண்டும்.

6. மாணாக்கர்கள் நூலகங்களில் படிக்கும் புத்தகங்களின் சுருக்கத்தைக் குறிப்புச் சுவடிகளில் எழுதுதல் வேண்டும்.

நூலக அறிவுரைக் குழு (Advisory committee for Libraries 1957)

1. நாடு முழுவதும் நூலகங்கள் நிறுவப்படவேண்டும்.

2. தேசிய நூலகம் (National Library), மாநில, மத்திய நூலகங்கள் (State Central Libraries), மாவட்ட நூலகங்கள், ஊராட்சி ஒன்றிய நூலகங்கள், ஊராட்சி நூலகங்கள் ஆகியவை ஏற்படுத்தப் படவேண்டும்.

3. மாநில நூலகங்களில் குழந்தைகளுக்கான புத்தகங்கள் முதியோர்களுக்கான புத்தகங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு வல்லுநர்கள் இருத்தல் வேண்டும்.

4. நூலகர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கெனத் தேசியப் பயிற்சித் திட்டம் ஒன்று ஏற்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

5. நூலகத்துறையில் பணிபுரிவோர் மாநிலக் கல்வித் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்குச் சமமாகக் கருதப்படல் வேண்டும்.

நூலகங்கள் பற்றிக் கொத்தாரிக் கல்விக்குழு கருத்துகள் தெரிவித்துள்ளது.

1. பள்ளி நூலகங்களையும், பொது நூலகங்களையும் இணைக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

2. முதியோர் கல்விக்கான மையங்களாகவும், விரிவுப்பணி மையங்களாகவும் நூலகங்கள் செயற்பட வேண்டும்.

3. முதியோர் கல்வியைப் பரப்புவதிலும் அதன் தரத்தினை உயர்த்துவதிலும் நூலகங்கள் ஆற்றக்கூடிய பணி மகத்தானதாகும்.

4. புதிதாக எழுத்தறிவு பெற்றுள்ளவர்களுக்குப் பயன்படத் தக்க பல புதிய நூல்கள் நூலகங்களில் இருத்தல் வேண்டும்.

5. மேலும் முதியோர் கல்விக்கான துண்டுத் திரைப்படங்கள் (Film strips), திரைப்படங்கள், நாடாப்பதிவுகள் (Recorded tapes) மற்றும் பயன்படக்கூடிய துணைக்கருவிகள் போன்றவற்றை நூலகங்களில் சேகரித்து வைக்க வேண்டும்.

6. பகுதி நேரப் படிப்பைப் பெற்றுவருபவர்களுக்கு நூலகங்கள் சிறப்பாகப் பயன்படவேண்டும்.

7. அஞ்சல் வழிக் கல்வி பெற்றுவருபவர்களுக்கு நூல்நிலையங்கள் பெரிதும் உதவ வேண்டும்.

8. புத்தகங்களைச் சேர்த்து வைக்கும் கிடங்குகளாக நூலகங்கள் இருத்தல் கூடாது. நூலகப் புத்தகங்கள் நன்முறையில் பயன்படுத்தப்படவேண்டும்.

9. சொற்பொழிவுகள், சொல்லாடல்கள், கவிதைகள், பாராயணப் போட்டிகள், புத்தகக் கண்காட்சிகள் போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்தல், நூலக வார விழாக் கொண்டாடுதல் ஆகியவற்றின் வழியே சமுதாயத்தினைக் கவரக் கூடிய மையமாக நூலகம் செயற்படவேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக டெல்லி பொது நூலகத்தைக் குறிப்பிடலாம். இது பொதுமக்களிடம் புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியதுடன் பண்பாட்டு நிகழ்ச்சிகளின் மையமாகவும் இயங்கி வருகிறது.

10. பள்ளி நூலகங்களும் டெல்லி பொது நூலகத்தைப் போன்றே செயற்படுவதற்குரிய சாத்தியக் கூறுகள் யாவற்றையும் பயன்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டில் பள்ளி நூலகங்கள் தவிரத் தனிப்பட்ட நூலகங்கள், நகராட்சி நூலகங்கள், மாவட்டக் கிளை நூலகங்கள், மாவட்ட மத்திய நூலகங்கள், கன்னிமரா பொது நூலகம், இயங்கும் நூலகங்கள் ஆகியன செயற்பட்டு வருகின்றன.

கல்வி முன்னேற்றத்தின் முக்கிய அடிப்படைகளுள் பள்ளி நூலகம் ஒன்றாகும். பள்ளி நூலக வசதிகளை முழுமையாக மாணாக்கர்கள் பயன்படுத்த வேண்டுமாயின், மாணாக்கர்களும் ஆசிரியர்களும் கல்வியில் நூலகங்களின் சிறப்பான பங்கினை உணரவேண்டும். மாணாக்கர்களிடையே நூலக மனப்பான்மையினைத் தோற்றுவிக்க ஆசிரியர்களும் நூலகரும் இணைந்து செயற்படவேண்டும்.

தமிழ்நாட்டில் இன்று பின்பற்றப்படும் மாணாக்கர்களது முழு நல வளர்ச்சி மதிப்பீட்டு முறையில் அவர்களது நூலகச் செயல்களுக்கும் இடமளிக்கப்பட்டிருப்பது ஈண்டுக்குறிப்பிடத்தக்கதாகும்.

கேள்வி - காட்சித் துணைக் கருவிகள்
(Audio - Visual Aids)

கல்வியில் மாணாக்கர்களது உள்ளத்தை ஈர்க்கக் காட்சிக் கேள்வித் துணைக் கருவிகள் இன்று பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றன. கற்பித்தல் செயலை விரைவுபடுத்தவும், திறம்பட நிறைவேற்றவும் மாணாக்கர்களது கட்புலன், செவிப்புலன் ஆகியவைகளின் அடிப்படையில் பயன்படுத்தும் துணைக்கருவிகளைக் காட்சி-கேள்வித் துணைக் கருவிகள் எனலாம். காட்சி-கேள்விக் கருவிகள் இன்று கல்வியில் சிறப்பிடம் பெற்றுள்ளன. 'நல்லதொரு படம் பத்தாயிரம் சொற்களுக்குச் சமம்; நல்லதொரு திரைப்படம் பத்தாயிரம் படங்களுக்குச் சமம். நல்லதொரு பேசும் படம் அதனினும் மேலானது.' வெறும் சொற்களால் புரியாதது படங்கள், உண்மை அனுபவங்கள் போன்றவற்றைத் திரைப்படக் கருவிமூலம் காட்டும்போது உடனடியாக மாணாக்கர்களுக்குப் புரியும்.

கற்பித்தலில் இன்று பயன்படுத்தப்பட்டு வரும் காட்சி-கேள்வித் துணைக் கருவிகளைப் பொதுவாக ஆறுவகைகளாகப் பிரிக்கலாம்.

I. வரைபடத் துணைக் கருவிகள்

1. புகைப்படங்கள் (Photographs), 2. படங்கள் (Pictures), 3. மின் அட்டைகள் (Flash Cards), 4. சுவரொட்டிகள் (Posters), 5. கருத்துப்படங்கள் (Charts), 6. விளக்கப்படங்கள் (Diagrams), 7. வரை படங்கள் (Graphs), 8. நாட்டுப் படங்கள் (Maps), 9. கேலிச் சித்திரங்கள் (Cartoons), 10. கேளிக்கைச் சித்திரங்கள் (Comics).

II. காட்சிப் பலகைகள் (Display Boards)

1. கரும்பலகைகள் (Black Boards), 2. மென்கம்பளப் பலகை (Flannel Board), 3. அறிவிப்புப் பலகைகள் (Bulletin Boards), 4. காந்தப் பலகைகள் (Magnetic Boards).

III. முப்பரிமாணத் துணைக் கருவிகள் (Three Dimensional aids)

1. மாதிரி உருவங்கள் (Models)
   - (i) பெரிதாக்கப்பட்ட உருவங்கள் (Enlarged Scale Models).
   - (ii) சிறிதாக்கப்பட்ட மாதிரி உருவங்கள் (Reduced Scale Models).
   - (iii) பகுதி மாதிரி உருவங்கள் (Sectional Models)
2. பொருள்கள் (Objects)
3. மாதிரிப் பொருள்கள் (Specimens)
4. பொம்மைகள் (Puppets)
5. இயங்கும் மாதிரி உருவங்கள் (Mobiles)

IV. புறத்தெறி துணைக் கருவிகள் (Projected aids)

1. கல்வித் திரைப்படங்கள் (Educational. Films)
2. திரைப்படத் துண்டுகள் (Film Strips)
3. கண்ணாடித் துண்டுகள் (Slides)

V. கேள்வித் துணைக் கருவிகள்

1. வானொலி (Radio)
2. தொலைக்காட்சி (Television)
3. ஒலிப்பதிவுகள் (Recordings)

VI. செயல் துணைக் கருவிகள் (Activity aids)

1. சிறு தொலைக் கல்விப் பயணங்கள் (Field Trips)
2. செய்து காட்டல் (Demonstrations)
3. நாடகங்கள் நடித்தல் (Dramatics)

மாணாக்கர்கள் அறிந்துகொள்ள வேண்டிய பொருள்களைப் பற்றிய அறிவைப் பெற, அப்பொருள்களிருக்குமிடம் சென்று அறிவு பெறுதலே சாலச் சிறந்தது. ஆனால், அவ்வாறு பொருள்களைச் சென்று காணமுடியாதவிடத்தும், பொருள்களை வகுப்பறைக்குள் கொண்டுவர முடியாதவிடத்தும் மாதிரி உருவங்கள், படங்கள், வரைபடங்கள், விளக்கப்படங்கள், கல்வித்திரைப் படங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற காட்சிக் கேள்வித் துணைக் கருவிகளைப் பயன்படுத்துதல் இன்றியமையாததாகும். நன்கு தேர்ந்தெடுக்கப்பட்டுத் திறம்படப் பயன்படுத்தப்பட்டால் இத்துணைக் கருவிகள் நிலையான பயனுள்ள கவர்ச்சிகளை மாணாக்கர்களிடையே தோற்றுவித்து அவர்களைக் கற்க ஊக்குவிக்கும். இத்துணைக்கருவிகள் கற்றலை எளிதாக்குவனவாகும். ஒவ்வொரு வகையான துணைக்கருவியும் ஒவ்வொரு தனிச் சிறப்பியல்புடன் விளங்குகின்றது.

வரைபடத் துணைக் கருவிகள் :—ஆசிரியர் வகுப்பில் பாடம் கற்பிக்கும்பொழுது உண்மைப் பொருள்களையும், மாதிரி உருவங்களையும் வகுப்பறைக்குள் கொண்டுவந்து காட்ட முடியாத இடங்களில் படங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். பாடப் பொருளைக் கற்பிக்கும்பொழுது வாய்மொழி வழியே வருணிப்பதைவிடப் படத்தைக் காட்டி எடுத்துக் கூறுதல், கருத்துகள் மாணாக்கர் உள்ளங்களில் பதியச் சிறந்த முறையில் உதவுகின்றது. வெளியுலகக் காட்சிகளை வகுப்பறைக்குள் கொண்டு வந்து காட்டுவதற்குப் படங்கள் பெரிதும் பயன்படுகின்றன. படங்களின் அமைப்பும் தோற்றமும் கவர்ச்சியுடையனவாக இருத்தல் வேண்டும். எந்தக் கருத்தை விளக்குவதற்காகப் படங்கள் எழுதப்பட்டனவோ, அந்தக் கருத்தைத் தெளிவாக உணர்த்துவனவாகப் படங்கள் அமைதல் வேண்டும். படங்கள் எச் செய்திகளைக் குறிக்கின்றனவோ, அவைகட்கேற்ற சூழ்நிலையைத் தெளிவாகக் காட்டுவனவாக அமைதல் வேண்டும்.

ஒரு பொருளின் ஒரு பாகத்திற்கும் மற்றொரு பாகத்திற்கும் உள்ள தொடர்பையும், பாகங்களுக்கும் முழுமைக்கும் உள்ள தொடர்பையும் காட்டுவதற்கென அமைந்த படமே விளக்கப்

படம் எனப்படும். ஆசிரியர்கள் விளக்கப்படங்களைப் பயன் படுத்திச் சிக்கலான செய்திகளையும் எளிதாய்க் கற்பிக்கலாம்.

விவரங்களைப் பற்றிய ஒப்புமை அறிவினை மாணாக்கர்கள் பெற வரைபடங்கள் உதவுகின்றன. பலவகை வரைபடங்களை ஆசிரியர் வகுப்பறையில் பயன்படுத்தவேண்டும். வரைபடங்கள் தாமாகவே எவற்றையும் மாணாக்கர்களுக்குக் கற்பிக்க மாட்டா. ஆசிரியரால் இவை பாடக் கருத்துகளுடன் இணைக்கப்பட்டால் தான் பயன் தரும்.

வரலாறு, புவியியல் போன்ற பாடங்கள் கற்பிக்கும்பொழுது நாட்டுப் படங்கள் (Maps) பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டின் பரப்பு, மாநிலங்களின் பரப்பு, தலைநகரங்கள், வரலாற்றுச் சிறப்புடைய ஊர்கள் போன்றவற்றை எடுத்துக்காட்ட வரலாற்றுப் பாடத்தில் நாட்டுப் படங்கள் பயன்படுத்தப் படுகின்றன. நாட்டின் இயற்கையமைப்பு, நதிகள் செல்லும் வழிகள், மலைகள், கடற்கரையோரங்கள், முக்கிய விளை பொருள்கள் அதிக அளவு கிடைக்குமிடங்கள், பெருமழை பெய்யும் பகுதிகள் போன்றவற்றைக் குறித்துக் காட்டப் புவியியல் பாடத்தில் நாட்டுப் படங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தற்காலச் செய்திகளைக் கற்பிக்கும்பொழுதும் நாட்டுப் படங்கள் பயன்படுத்தப்படலாம்.

காட்சிப் பலகைகள் (Display Boards)

வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும்பொழுது அவர் கையாளக் கூடிய துணைக் கருவிகளுள் இன்றியமையாதது கரும்பலகை ஆகும். இது மிகப் பயனுள்ள சிக்கனமான கருவியாக அமைகிறது. ஒவ்வொரு வகுப்பறையிலும் ஆசிரியருக்கு இடப்பக்கத்தில் கரும் பலகை இருத்தல் வேண்டும். ஆசிரியர் கரும்பலகையில் எழுது வதற்காகக் கீழே இறக்கவும், எழுதிய பின்பு மாணாக்கர்கள் அனைவரும் பார்க்கக்கூடிய வகையில் மேலே தூக்கவும் ஏற்ற வகையில் கரும்பலகைகள் அமைதல் வேண்டும். துணியினால் ஆக்கப்பட்டு சுருட்டி வைக்கக்கூடிய கரும்பலகை, எஃகினால் ஆக்கப்பட்ட காந்தப் பலகை (Magnetic Board) போன்றன இன்று வகுப்பறையில் பயன்படுத்தப்படுகின்றன. கரும்பலகையைக் கற்பிக்கப் பயன்படுத்தும் ஒரு கருவியாக எண்ணுவதைவிட, அதனைக் கல்விப் பயன்தரும் துணையாக எண்ணுதல் வேண்டும். கரும்பலகையைத் திறமையாகப் பயன்படுத்து வதன் மூலம் ஆசிரியரது தன்னம்பிக்கையும் அறிவாற்றலும் வெளியாகின்றன. கரும்பலகையில் எழுதும் ஒழுங்கு முறை

ஆசிரியரது கருத்துத் தெளிவைக் காட்டுவதால் மாணாக்கர்கள் அவ்வொழுங்கு முறையினைப் பின்பற்றி நற்பயன் பெறுவர். கரும்பலகைச் சுருக்கம் ஒரு பாடத்தின் வெற்றியைத் தெளிவாக்கும்.

மாணாக்கர்கள் பள்ளியில் அடிக்கடிக் கூடும் இடங்களில் அறிக்கைப் பலகை (Bulletin Board) ஒன்றை வைப்பது பயனுள்ளதாகும். இதில் செய்திகள், அறிக்கைகள், படங்கள் போன்றன பொருத்தப்படவேண்டும். மொழிப் பாடம், கணிதம், அறிவியல் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு மென்மையான கம்பளத்தினால் ஆக்கப்பட்ட மென் கம்பளப் பலகை (Flannel Board) ஒன்றினைப் பயன்படுத்தலாம்.

முப்பரிமாணத் துணைக் கருவிகள்

உண்மைப் பொருள்களை நேரில் சென்று காணமுடியாதவிடத்தும், அவற்றை வகுப்பறைக்குள் கொண்டுவர முடியாதவிடத்தும் மாதிரி உருவங்கள் (Models) ஆசிரியரால் பயன்படுத்தப்படவேண்டும். வகுப்பறைக்குள் கொண்டுவர முடியாத பெரிய பொருள்களுக்குப் பதில் சிறிதாக்கப்பட்ட மாதிரி உருவங்களை (Reduced Scale Models) ஆசிரியர் பயன்படுத்தலாம். மிகச் சிறிய பொருள்களைப் பற்றிக் கற்பிக்கப் பெரிதாக்கப்பட்ட மாதிரி உருவங்களை (Enlarged Scale Models) ஆசிரியர் பயன்படுத்தலாம். பொருள்களின் உட்பகுதிகளின் கூறுகளை மாணாக்கர்களுக்கு விளக்கமாகக் கற்பிப்பதற்குப் பகுதி மாதிரி உருவங்களை (Sectional Models) ஆசிரியர் வகுப்பறையில் பயன்படுத்தலாம். மாதிரி உருவங்களை வகுப்பறையில் ஆசிரியர் எளிதில் கையாளலாம். மாதிரி உருவங்களைக் கொண்டு விளக்கத் தொடங்கி, உண்மைப் பொருள்களை உணரச் செய்வது அவசியமாகும். மாதிரி உருவங்கள் உண்மைப் பொருள்கள் அல்ல என்பதை ஆசிரியர் மறக்கலாகாது. உருவ ஒற்றுமையை மாணாக்கர்கள் உணர மாதிரி உருவங்கள் உதவுதல் கூடும். ஆனால் மாணாக்கர்களிடம் உண்மை உணர்ச்சி, சில மனப்பான்மைகள் ஆகியவற்றைத் தோற்றுவிக்க அவை ஒரு பொழுதும் உதவமாட்டா. மாதிரி உருவங்களைப் பொருள்களின் மாதிரிகளேயென உணர்ந்து போற்றத்தக்க வண்ணம் பயன்படுத்தல் வேண்டும்.

மாணாக்கர்கள் நேரனுபவம் பெற உதவுவதற்கு பொருள்களை (objects) வகுப்பறையில் நேரே மாணாக்கர்கள் பார்க்கும்படி காட்டிக் கற்பித்தல் வேண்டும். மாணாக்கர்கள் பல பொருள்

களைப் பார்த்து, தொட்டுப்பார்த்து தெளிவாக அறிந்து கொள்ளவும், பாடத்தில் ஆர்வத்துடன் ஈடுபடவும் பொருள்கள் பெரிதும் உதவுகின்றன. ஓர் உண்மைப் பொருளை உற்றுநோக்குங்கால், ஒரே நேரத்தில் பல்வேறு புலன்களின் வழியே பெறப்படும் அறிவு உள்ளத்தில் ஆழப்பதிவதாகும். பொருள்களுடன் நேரான தொடர்புண்டாக்கி மாணாக்கர்களின் அறிவை வளர்ப்பது சாலச்சிறந்ததாகும்.

சிறுசிறு பொம்மைகளை (Puppets) உருவாக்கிப் பொருத்தமான ஆடைகளாலும் ஆபரணங்களாலும் அவற்றை அழகுபடுத்தி நாடக உறுப்பினர்களாக்கி நடத்தப்படும் ஆட்டம் பொம்மலாட்டம் எனப்படும். பொது மக்களுக்குக் கல்வியறிவு ஊட்டவும் அவர்கள் கதைகளைக் கண்டு மகிழ்ந்து பொழுதுபோக்கவும் பொம்மலாட்டம் உதவுகின்றது. பண்டைக் காலத்தில் சமயக் கருத்துகளையும், புராணக் கருத்துகளையும் பரப்புவதற்குப் பொம்மலாட்டம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இப் பொம்மலாட்டத்தைப் பள்ளியில் நல்ல கல்விப் பயன்களை அளிக்க வல்ல கதைகளை நடித்துக் காட்டப் பயன்படுத்தலாம்.

புறத்தெறி துணைக் கருவிகள்

மாணாக்கர்களுக்குக் கல்வியளிப்பதற்குத் திரைப்படங்கள் (Films) பெரிதும் பயன்படுகின்றன. கல்விச் செயல் முறைக்கு உதவும் அறிவியல் கண்டுபிடிப்புகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது திரைப்படமாகும். திரைப்படங்கள் கடந்தகாலத்தையும், நிகழ்காலத்தையும் வகுப்பறைக்குள் கொணர உதவுகின்றன. மாணாக்கர்கள் இயற்கை நிகழ்ச்சிகளை நேரே காண்பதற்குத் திரைப்படங்கள் உதவுகின்றன. பருவக் காற்றுகளின் போக்கு நீரோட்டங்கள், அலைகள், பனியாறுகள், எரிமலைகள் போன்ற தலைப்புகளில் புவியியல் பாடம் கற்பிக்கப்படுகின்ற பொழுது அவற்றைப் பற்றிய தெளிவான கருத்துகளைப் பெறத் திரைப்படங்கள் பெரிதும் துணை செய்கின்றன. கண்ணெதிரே காணமுடியாத உள்ளுறுப்புகளில் நடைபெறும் செயல்களைப் படங்களாக வரைந்து அசையும் படமாக்கிக் காட்டலாம். எடுத்துக்காட்டாக, அறிவியல் பாடத்தில் இரத்த ஓட்டம், உணவு செரித்தல், கிருமிகள் பெருகுதல் போன்றவற்றைப் படக்காட்சியில் பார்த்துத் தெளிவாக உணரலாம். செயல்களை எவ்வாறு செய்தல் வேண்டும் என்று கற்பிக்கத் திரைப்படங்கள் பெரிதும் பயன்படும். குறித்த காலத்தில் ஒரு பெரிய வரலாற்றையே படக்காட்சி வாயிலாகப் பார்த்துவிட வாய்ப்புக் கிடைக்கிறது. திரைப்படங்களால் பார்க்க வேண்டிய காட்சியினைக்கவனம் சிதறாமல் மாணாக்கர்கள் காண

வாய்ப்பு மிகுதியாகிறது. தேசத்தலைவர்கள், விடுதலை வீரர்கள், அறிவியல் மேதைகள் ஆகியோரது வரலாறுகளைப் படக்காட்சியில் காட்டலாம். நாட்டுத் தொழில்கள் பற்றியும், வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்களைப் பற்றியும் படங்களாகத் திரையிடலாம். கல்வித்துறையினர் வைத்துள்ள வரலாறு, புவியியல், அறிவியல் போன்ற பாடங்களுக்கு உதவும் திரைப்படங்களைப் பள்ளிகளில் திரையிட்டுக் காட்டலாம். நம் நாட்டுச் செய்திகள், பிறநாட்டுச் செய்திகள் ஆகியவற்றைக் காட்டும் திரைப்படங்கள் கல்வித் தொடர்பான செய்திகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் காட்டும் திரைப்படங்கள் போன்றவற்றைத் திரையிட்டுக் காட்டுவதால் கற்றல் கவர்ச்சியுள்ளதாக உயர்கிறது.

படத்தைத் திரையில் காட்டுவது மட்டும் செய்திகளை மாணாக்கர்களுக்கு உணர்த்தியதாகாது. படம் திரையிடப்பட்ட பின்பு அதன் தொடர் வேலையாக அப்படத்தினைப் பற்றி வகுப்பில் உரையாடல் ஒன்று நடைபெறுதல் வேண்டும். படத்தின் இன்றியமையாக் குறிப்புகள் பற்றி வினாக்கள் கேட்கலாம். இவ்வினாக்கள் மூலம் மாணாக்கர்கள் அறியாதவைகளையும், தவறாக அறிந்தவற்றையும் ஆசிரியர் அறிந்து திருத்தலாம். தாங்கள் அறிந்தவற்றைச் சுருக்கி எழுதச் செய்தல் படம் பார்த்து மாணாக்கர்கள் பெற்ற அறிவைத் தேர்ந்தறிவதற்கு உதவும்.

பல பாடத் தலைப்புகளைப் பற்றிய திரைப்படத்துண்டுகள் (Film strips) இன்று கிடைக்கின்றன. இவற்றை ஆசிரியர் கற்பித்தலுக்குத் துணையாகப் பயன்படுத்துவது கற்பித்தலைக் கவர்ச்சியுள்ளதாக உயர்த்தவும் விளக்கங்களை மேலும் தெளிவுள்ளவையாக ஆக்கவும் உதவும்.

பாடத்திற்குத் தேவையான கண்ணாடித்தழுவங்களை (Slides) வகுப்பில் கற்பித்தலில் தகுந்த முறையில் பயன்படுத்தல் நல்ல கல்விப் பயன்களைத் தரும்.

ஒலியற்ற (Silent), ஒலியுடன் கூடிய (Sound) திரைப்படங்களுக்கெனப் படமெறிகருவி (Projector), திரைப்படத்துண்டுகளுக்கெனத் திரையிடும் கருவி (Film Strip Projector), படங்கள், கண்ணாடித் தழுவங்கள் போன்றவற்றைத் திரைகளில் காட்ட உதவும்-ஒலிப்படக்கருவி ஆகியவை பள்ளிகளில் இன்று பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுடன் ஆசிரியரது தலைக்கு மேல் படமெறிவதற்கான கருவியும் (Overhead Projector) இன்று பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

கேள்வித் துணைக் கருவிகள்

கேள்வித் துணைக் கருவிகளில் வானொலி நடுவிடம் பெறுகின்றது. மாணாக்கர்களுக்கு அறிவு புகட்டுவதற்கு வானொலி உதவுகின்றது. வகுப்பறைக் கற்றலை விரிவுபடுத்தி மாணாக்கர் களது பொது அறிவினை வளர்க்கவும், இது உதவுகின்றது. சுவை மிக்க நிகழ்ச்சிகளை மக்கள் பலரும் ஒரே நேரத்தில் கேட்டு மகிழ வானொலி உதவுகின்றது. காலத்தாலும், தூரத் தாலும் பிரிக்கப்பட்ட சிறந்த தலைவர்களின் குரலொலியை வானொலி வகுப்பறையில் கேட்கத் துணை செய்கின்றது. உலக நிகழ்ச்சிகளைப் பற்றிய நேர்முக வருணனைகள் போன்ற வானொலி நிகழ்ச்சிகள் கற்றல், கற்பித்தல் ஆகியவற்றில் பயன் படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக மாணாக்கர்களது அறிவு இன்றைய நிலைமைகளுடன் இணைக்கப்படுகின்றது. மேலும், நாடகங்கள் இசை போன்ற நிகழ்ச்சிகள் கலைப்பயன் மற்றும் கல்விப் பயன் மிக்கவையாகும். பாடப்புத்தகங்களிலும் பிற இடங்களிலும் காண முடியாத பல புதுமையான செய்திகளை வானொலியில் கல்வி ஒலிபரப்பாக ஒலிபரப்பும்பொழுது அவற்றைப் பள்ளிகளில் மாணாக்கர்கள் கேட்டுப் பயன் பெறலாம். குறிப்பிட்ட துறைகளில் சிறப்புப் பெற்றுள்ளோர்களது கருத்துகளை வானொலி யில் யாவரும் கேட்டுப் பயன் பெறலாம்.

அகில இந்திய வானொலி நிலையங்கள் கல்வி ஒலிபரப்பு களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன. இவற்றினின்று சிறந்த பயன்களை மாணாக்கர்கள் பெற இயலும். மாணவர்களது பொது அறிவு, பாடப் பொருளறிவு, இசை அறிவு, நடிப்புத்திறன், இரசனைத் திறன், பரந்த ஒத்துணர்ச்சி மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தலில் வானொலியின் கல்வி ஒலிபரப்புகள் பேருதவி செய்வனவாக அமைகின்றன. மாணாக்கர்கள் நம் நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளையும் நமது மொழியின் சிறப் பினையும் உணர இவ்வொலிபரப்புகள் பயனுள்ளனவாக அமைகின்றன. மாணாக்கர்களுக்கான வினாடி வினா நிகழ்ச்சி களும் (Quiz Programmes), குழந்தைகளுக்கென்றே ஒலிபரப்பப் படும் சிறுவர் சோலை நிகழ்ச்சிகளும் பெருமளவு கல்விப் பயனுள்ளனவாக அமைகின்றன, பள்ளிகளில் வானொலி மன்றங்களை (Radio Clubs) நிறுவிப் பல பயனுள்ள நிகழ்ச்சிகளை நேரடியாகவோ அல்லது நாடாப் பதிவுக் கருவியில் (Tape Recorder) பதிவு செய்து வைத்தோ மாணாக்கர்கள் கேட்டுப் பயனடையச் செய்யலாம். பள்ளியில் மாணாக்கர்கள் கற்கும் வரலாறு, நிலவியல் போன்ற பாடங்களின் அறிவை அன்றாட

வாழ்க்கையோடும்,அதன் சமூக, பொருளியல் பிரச்சினைகளோடும் தொடர்புறுத்திப் பள்ளிக் கல்வியை மாணாக்கர்கள் உண்மைக் கல்வியாக அமைத்துக்கொள்ள வானொலி ஒலிபரப்புகள் பெரிதும் பயன்படும். வானொலியினைத் தகுந்த முறையில் பயன்படுத்து வதால் சிறந்த கல்விப் பயன்களைப் பெறலாம்.

ஆசிரியர் பள்ளிகளில் கற்பித்தலுக்கு நாடா ஒலிப்பதிவுக் கருவி யினைப் பயன்படுத்தலாம். நாடா ஒலிப்பதிவுக் கருவியின் உதவி கொண்டு முக்கியமான செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் பதிவு செய்துகொண்டு அவற்றைப் பின்னர்த் தேவைப்படும்பொழுது மாணாக்கர்களைக் கேட்கச் செய்யலாம். ஒலிப்பதிவுக் கருவியில் தொடர்ச்சியாக ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேர அளவுக்குப் பேச்சுகளையும், பாடல்களையும் ஒலிப்பதிவு செய்தல் கூடும். தேவையில்லாவிடில் ஒலிப்பதிவு செய்யப்பட்டதை நீக்கி வேறு பேச்சுகளையும், பாடல்களையும் பதிவு செய்யலாம். மாணாக்கர்களுடைய பேச்சுகளை ஒலிப்பதிவு செய்து அவற்றை மீண்டும் கேட்கச் செய்யலாம். மாணாக்கர்கள் தங்களுடைய உச்சரிப்புப் பிழைகளைத் தாமே கேட்டுணர வாய்ப்புக் கிடைக்கும். மற்றும், வானொலியின் வழியே ஒலிபரப்பப்படும் கல்வி நிகழ்ச்சிகளையும், வேறு பல நிகழ்ச்சிகளையும் ஒலிப்பதிவு செய்து தேவைப்படும்போது அவற்றினை மாணாக்கர்கள் மீண்டும் கேட்கச் செய்யவும் ஒலிப்பதிவுக் கருவியினை ஆசிரியர் பயன் படுத்தலாம்.

பள்ளிகளில் இசைத்தட்டுக் கருவியினைப் பயன்படுத்துதல் எளிதானது. சிக்கனமானது. இக்கருவியினைப் பள்ளிகளில் பல வகைகளில் பயன்படுத்தலாம். மொழிப்பாடத்தில் திருத்தமான ஒலிப்பு முறையைக் கேட்டறிந்து கொள்ள இது உதவுகிறது. தாய்மொழியல்லாத ஆங்கிலம் போன்ற பிறமொழிகளை நன்கு பேசக் கற்பதற்கும், பிற மொழிச் சொற்களை நன்கு உச்சரிப்ப தற்கும் இது பெரிதும் பயனுள்ளது. நாட்டு வணக்கப் பாடலைச் சரியான முறையில் பாடவேண்டுமென்பதற்கு இதனைப் பயன் படுத்தலாம். சிறந்த சொற்பொழிவுகளை மீண்டும் மீண்டும் கேட் பதற்குப் பெரிதும் உதவுகின்றது. பாடல்களைக் கற்றுக் கொடுப் பதற்கும், தேர்ந்த இசையில் ஆர்வமூட்டுவதற்கும் இது பயன்படு கின்றது.

இன்று கல்வியில் தொலைக்காட்சிக் கருவி (Television) பரவ லாகப் பயன்படுத்தப்படுகிறது. முடிந்த இணைப்புக் கொண்ட

தொலைக்காட்சி (Closed Circuit Television) மிக்க கல்விப் பயன் உள்ளது. வெளி உலகினை வகுப்பறைக்குள் கொணரும் சாதனமாகத் தொலைக்காட்சி விளங்குகிறது. கருத்துகளை ஒலி, ஒளி ஆகிய இரு வழிகளில் ஒருங்கே பரப்பும் கருவியாக இது அமைகிறது. கற்றலுக்குப் புத்துயிர் ஊட்டும் கருவியாக இது கல்வியாளர்களால் கருதப்படுகிறது. பயனுள்ள பொருள்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றையும், தலைசிறந்த அறிஞர்களது கருத்துகளையும் வகுப்பறைக்குள் கொணரத் தொலைக் காட்சிக் கருவி உதவுகிறது. சிறந்த ஆசிரியர்களுடைய கற்பித் தலைப் பல்வேறு பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் கண்டும் கேட்டும் பயன்பெறவும் தொலைக்காட்சிக் கல்வி நிகழ்ச்சிகள் பெரிதும் உதவுகின்றன. கற்றலில் சிக்கனத்தையும் வேகத் தையும் ஏற்படுத்தத் தொலைக்காட்சிக் கருவி உதவும். கல்வித் திரைப்படங்கள் போன்றே இவற்றுக்கும் திட்டமிடலும் தொடர் வேலையும் தேவை.

செயல் துணைக் கருவிகள்

கற்பித்தலில் பயன்படுத்தப்படும் காட்சி-கேள்வி முறைகளில் (Audio-Visual methods) சிறு தொலைக் கல்விப் பயணங்கள் மிகவும் பயனுள்ளவையாகும். சிறு தொலைக் கல்விப் பயணங்கள் பல நேர் அனுபவங்களை உண்மை நிலைமைகளில் மாணாக்கர் களுக்கு அளிக்கின்றன. இவற்றைப் பள்ளிக்கு வெளியே நடத்தப் படும் வெளிப்புறப் பாடங்கள் (Out-door Lessons) எனக் கொள்ளல் பொருத்தமாகும். வகுப்பறைகளில் சில அனுபவங் களை மாணாக்கர்கள் பெறக்கூடும். வேறு பல பயன் மிக்க அனுபவங்களை அவர்கள் பெறுவதற்கு அவர்கள் சுற்றுப்புறச் சமுதாயத்திற்குச் செல்வது அவசியம். இன்று பள்ளியின் சுற்றுப்புறச் சமுதாயத்தில் சிறு தொலைக் கல்விப் பயணங் களுக்கான பல வாய்ப்புகள் உள்ளன. கோயில்கள், சரித்திரப் புகழ் பெற்ற இடங்கள், இயற்கைக் காட்சிகள், மின்சக்தி உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள், பாங்குகள், நீதிமன்றங்கள், ரெயில் வண்டி நிலையங்கள், விமான நிலையம், கூட்டுறவு நிலை யங்கள், மருத்துவ மனைகள், அரசு அலுவலகங்கள் போன்ற வற்றைப் பார்க்கச் சிறு தொலைக் கல்விப் பயணங்கள் மேற்கொள் ளப்படலாம். இவற்றுள் பயணத்தின்போது பார்க்கவேண்டிய வற்றை மாணாக்கர்களது முதிர்ச்சி நிலை, வளர்ச்சி ஆகியவற் றுக்குத் தக்கவாறு தேர்ந்தெடுக்க வேண்டும். சிறு தொலைக் கல்விப் பயணங்கள் சிறப்பான பயன்களை மாணாக்கர்களுக்கு அளிக்க வேண்டுமாயின் அவற்றை நன்கு திட்டமிடல் வேண்டும்.

நடக்கவிருக்கும் பாடத்தில் ஆர்வத்தைத் தோற்றுவித்தல், கருத்து களையோ செயல்முறைகளையோ விளக்குதல், கற்றபாடத்தை மீள் நோக்குதல், சிறந்த மனப்பான்மைகளை தோற்றுவித்தல், எனப் பயணங்களின் நோக்கங்கள் பலவாக இருக்கும். பயணத்தின் நோக்கம் மாணாக்கர்களுக்குத் தெளிவாக்கப்பட வேண்டும். பயணங்கள் தலைமை ஆசிரியரது அனுமதி யுடனேயே மேற்கொள்ளப்படவேண்டும். பார்க்க வேண்டிய இடம் நிச்சயிக்கப்பட்டபின் அதனைச் சென்று பார்க்க அலுவலர் களது அனுமதி தேவையாயின் அது பெறப்படவேண்டும் பயணத்தினால் பயன் பெற மாணாக்கர்கள் ஆயத்தப்படுத்தப் படுதல் வேண்டும். ஆர்வமூட்டல், பயணத்தின்போது பார்க்க வேண்டியவற்றைக் குறிப்பிடல், தொடர்புள்ளவற்றைப் பார்த்தல், பின்னணி அறிவைப் பெருக்கிக் கொள்ளல் போன்ற யாவும் இதில் அடங்கும். சிறு தொலைக் கல்விப் பயணத்துக்குப்பின் தொடர் வேலையும் (Follow-up Work), தேவைப்படும் பயணத்தைப் பற்றிய உரையாடல், அதைப்பற்றிய கட்டுரை எழுதுதல், அதில் கண்டவற்றைப் பற்றி மேலும் புதிய கருத்து களைப் பெறுதல் போன்ற யாவும் தொடர் வேலையில் அடங்கும். மேலும் பயணத்தின் விளைவுகளை மதிப்பிடுதல் அவசியமாகும்.

தலைமையாசிரியரால் அனுமதிக்கப்பட்டு ஆசிரியர்களால் நன்கு திட்டமிடப்பட்டு, கல்வி ஏற்பாட்டுடன் இணைக்கப்பட்ட சிறு தொலைக் கல்விப் பயணங்கள் காட்சி - கேள்வி முறைகளில் மிக்க சிறப்பானவையாகும். இவற்றால் மாணாக்கர்கள் பெறக் கூடிய பயன்கள் பலவாம்.

1. வகுப்பறைகளில் மாணாக்கர்கள் பெறக்கூடிய அனுபவங் களுக்குத் துணையான வேறு பல அனுபவங்களை அவர்களுக்கு இவை அளித்து அவற்றைச் சிறக்கச் செய்கின்றன. இதன் விளைவாகப் புதிய மனப்பான்மைகள், கவர்ச்சிகள், ஆர்வங்கள் போன்றன அவர்களது உள்ளத்தில் எழுகின்றன.

2. சிறு தொலைக் கல்விப் பயணங்கள் பல பயனுள்ள நேர் அனுபவங்களை மாணாக்கர்களுக்கு அளிக்கின்றன. உண்மை உலகோடு தொடர்பு கொள்ள அவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றன.

3. பள்ளிப் பாடங்களைக் கற்பதில் சிலபோது மாணாக்கர் களிடையே எழக்கூடிய சலிப்பைப் போக்கவும் இவை உதவுகின்றன.

4. திட்டமிடல், செயற்படுத்தல், ஒத்துழைத்தல், பொறுப்பு களை ஏற்று நடத்தல் போன்றவற்றில் பயிற்சியை இப் பயணங்கள் மாணாக்கர்களுக்கு அளிக்கின்றன.

5. 'வாழ்ந்து கற்றல்' என்னும் கோட்பாடு சிறு தொலைக் கல்விப் பயணங்களின் அடிப்படையாகும்.

6. மேலும் இதை ஓய்வு நேரத்தினைப் பயனுள்ள முறையில் செலவிடுவதற்கும் மாணாக்கர்களுக்குப் பயிற்சியளிப் பனவாக அமைகின்றன.

முக்கிய கருத்துகள், செய்முறைகள் ஆகியவை பற்றிக் கண்களால் காணக்கூடிய விளக்கங்களாக (Visualised Explanations) செய்துகாட்டல் (Demonstration) திகழ்கிறது. பாடம் கற்பித்தலுக்கு உதவும் பலவிதத் துணைக் கருவிகளுடன் குறிப் பிட்ட பாடங்களுக்குரிய சிறப்புக் கருவிகளும் செயல்படும் முறையினை விளக்குகின்ற சோதனைக் கருவிகளும் வகுப் பறையில் பயன்படுத்தப்படுகின்றன. கணிதப் பாடத்திற்குத் தேவையான சிறப்புக் கருவிகள், அறிவியல் பாடத்திற்கான பல சோதனைக் கருவிகள், மாணாக்கர்களே தயாரித்த சாதாரணப் பொருள்கள் போன்ற சோதனைக் கருவிகள் செய்து காட்டல் என்பதற்குத் தேவைப்படும். கணித ஆசிரியர், அறிவியல் ஆசிரியர், கலை ஆசிரியர், உச்சரிப்பைக் கற்பிக்கும் மொழி ஆசிரியர் போன்றோர் செய்து காட்டலை வகுப்பில் அடிக்கடி பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும். செய்து காட்டலுக்கு உதவக்கூடிய கரும்பலகை. கருத்துப் படங்கள், தொடர் துண்டுப் படக்கருவி போன்றவற்றையும் ஆசிரியர்கள் பயன்படுத்தலாம். செய்து காட்டல் நன்கு அமையப் போதிய ஆயத்தமும் திட்ட மிடலும் அவசியம். செய்து காட்டல் நல்ல முறையில் ஆசிரியரால் நடத்தப் படவேண்டும். பின்னர் அதன் பயனையும் ஆசிரியர் மதிப்பிடுதல் அவசியமாகும்.

கதைகளையும் நிகழ்ச்சிகளையும் நாடகங்களாக நடித்தல் முறை பண்டைக் காலத்திலிருந்தே கல்வி கற்பிப்பதில் சிறந்த முறையாக இருந்து வந்துள்ளது. காட்சிகளையும் நிகழ்ச்சி களையும் மாணாக்கர்கள் எதிரே காணுவதாக அமைந்தனவே நாடகங்களாகும். மாணாக்கர்களையும் அவ்வகையான நாடகங் களில் பங்கெடுத்துக் கொள்ளச் செய்வதால் நாம் பல கல்விப் பயன்களைப் பெற இயலும். இலக்கியம், வரலாறு போன்ற வற்றில் இவை மிக்க பயனுள்ளவையாகும். பின்பற்றல்,

நடித்தலில் நடுவிடம் பெறுகிறது. மாணாக்கர்களுக்குக் கவர்ச்சியுள்ள, பண்புமிக்க, எளிய நிகழ்ச்சிகளையே நடிப்பதற்கு ஆசிரியர் தேர்ந்தெடுக்க வேண்டும். நாடகப் பாத்திரங்களை மாணாக்கர்கள் ஆராய்ந்து அவர்கள் எவ்வாறு குறிப்பிட்ட சூழ்நிலையில் நடந்து கொள்வார்கள் என்று தாமே முடிவுக்கு வந்து அம் முறையில் அவர்கள் நடிக்க முற்படவேண்டும். நடித்துக்காட்டுதலுக்கான வசனங்களை மாணாக்கர்களே கற்பனையோடு எழுத ஊக்குவிப்பதும் சிறந்தது. இது மாணாக்கர்களிடையே பேச்சுத் திறனையும் ஆக்கத் திறனையும் வளர்க்கும். மாணாக்கர்களின் மொழி வளர்ச்சிக்கும், அவர்களுடைய திறன்கள் வெளிப்படுவதற்கும் நடித்தல் உதவுகின்றது. நடித்தல் முறையினை எல்லா வேலைகளிலும் பயன்படுத்துதல் நல்லதன்று. பாடத் திட்டத்திலிருந்து வகுப்பு நிலைக்கேற்ற பொருத்தமான பாடப் பொருள்களையே தேர்ந்தெடுத்து நடிக்கச் செய்து காட்டுதல் நற்பயனை அளிக்கும். நாடகங்கள் நடித்தல் பொழுதுபோக்காக உதவுவதோடு மாணாக்கர்களுக்குக் கல்விப் பயன் தரத்தக்கதாகவும் விளங்கும் வகையில் அது பயன்படுத்தப் படவேண்டும்.

கல்வியென்பது வாழ்க்கைப் பயனுள்ள அனுபவங்களைப் பெறுதலேயாகும். அவ்வனுபவங்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் பெறலாம். நேரடியாகப் பெறத் தக்க முறைகள், மறைமுகமாகப் பெற உதவும் வழி வகைகள் ஆகிய இருவகை முறைகளுக்கும் கற்பித்தலில் இடமுண்டு. ஒவ்வொரு முறையும், துணைப் பொருளும் எந்த அளவுக்கு அனுபவம் பெற உதவ வல்லது என்பதனை பின்வரும் 'கற்றலின் அனுபவத்தை விளக்கும் படம்' விளக்கிக் காட்டுகின்றது. படத்தின் கீழ்ப் பகுதியில் தொடங்கி மேற்பகுதிக்குச் செல்லச் செல்ல முறைகள் அல்லது பொருள்களின் அனுபவம் தரும் திறன் படிப்படியாகக் குறைவதைக் காணலாம்.

காட்சி - கேள்வித் துணைக் கருவிகளைப் பயன்படுத்துவதில் உள்ள குறைகளும் அவற்றைத் தீர்க்கும் வழிகளும்

1. நம் நாட்டின் கல்வித் திட்டங்களை நிறைவேற்றப் பெருமளவு நிதி தேவைப்படுகிறது. கல்விக்கான செலவினங்களுக்குப் போதிய அளவு நிதி வசதிகள் இல்லாமையால் திரைப் படங்களுக்கான படமெறி கருவி (Projector), தொலைக் காட்சிக் கருவி (Television) போன்ற விலையுயர்ந்த துணைக் கருவிகளை

எல்லாப் பள்ளிகளுக்கும் அரசு வாங்கித் தர இயலாது. மேலும் ஆசிரியரது தலைக்குமேல் படமெறிவதற்கான கருவி (Over head Projector), இசைத்தட்டுக் கருவி (Record Player), நாடா ஒலிப் பதிவுக் கருவி (Tape Recorder), போன்ற காட்சி. கேள்வித் துணைக் கருவிகளையும் எல்லாப் பள்ளிகளுக்கும் வாங்கித்தர இன்றைய நிதி நிலைமையில் இயலாததாகும். இக் குறை யினைத் தீர்க்கப் பின்வரும் வழிமுறைகளை மேற்கொள்ளலாம்.

(அ) பல உள்ளூர்ப் பள்ளிகள் சேர்ந்து துணைக் கருவி களைப் பொதுவில் வாங்கி அவரவர் முறை வரும்போது பயன் படுத்திக் கொள்ளலாம்.

(ஆ) மாவட்ட நிறுவனங்கள், நகரசபை நிறுவனங்கள் ஆகியன இக் கருவிகளை வாங்கி வைத்து அவ்வப்போது பள்ளி களுக்குக் கொடுத்து உதவலாம்.

(இ) கல்வித்துறை, மற்றும் பெரிய கல்வி நிறுவனங்களிட மிருந்து இவற்றைப் பிற பள்ளிகள் கடனாகப் பெற்றுப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

(ஈ) மாதிரிப் படங்கள், விளக்கப் படங்கள் போன்ற மலிவு விலைத் துணைக் கருவிகளைப் பயன்படுத்தலாம்.

2. மத்திய-மாநில அரசுகள், மத்திய காட்சி – கேள்விக் கல்வி மையம் ஆகியவற்றிடம் நல்ல திரைப்பட நூலகமும் காட்சி-கேள்விக் கல்வி பற்றிய பொருட்காட்சியும் இல்லாதது ஒரு பெருங் குறையாகும். இக் குறையினைத் தீர்க்க, மத்திய - மாநில அரசுகள் சிறந்த திரைப்பட நூலகங்களை முக்கியமான இடங் களில் ஏற்படுத்தித் தரவேண்டும். மேலும் இவற்றைப் பயன் படுத்துவதில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

3. சிலபோது ஆசிரியர்கள் பொருத்தமான திரைப்படங் களைத் தேர்ந்தெடுக்காவிடின் கற்பித்தலோடு இவற்றை இணைக்க இயலாது. திரைப்படங்கள் பொழுதுபோக்கிற்காக மட்டுமன்றி, கல்விக்காகவும் பயன்படுத்தப்படவேண்டும் என்ற மனப்போக்கு ஆசிரியர்களுக்கு இருத்தல் வேண்டும்.

4. பல படங்கள் நம் நாட்டின் நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்றவாறு எடுக்கப் படுவதில்லை. மேலும் பல படங்களுக்கான விளக்கங்கள் ஆங்கிலத்திலேயே கொடுக்கப்படுகின்றன. இவை மாற்றி அமைக்கப்படவேண்டும்

கற்றலின் அனுபவத்தை விளக்கும் படம்



குறிப்பு : 1. இப் படம் புலன்களினால் பெறக்கூடிய அனுபவங்களில் தொடங்கி மேலே செல்லச் செல்லக் குறியீடுகள், எழுத்துகள் போன்றவற்றினின்றும் பெறப்படும் அனுபவம் வரை குறிக்கின்றது.

2. அடிப் பகுதியிலுள்ள உண்மை வாழ்க்கை நிகழ்ச்சிகள் போன்றவை சிறு குழந்தைகள் கற்றலுக்கு மிகுந்த பயன் தருவனவாம்.

3. இப் படத்தின் மேல் நிலையிலுள்ள படிகள் முழு வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றவர்களுக்குப் பயன் தருவனவாம்.

5. காட்சி - கேள்விக் கல்வித் துணைக் கருவிகளைப் பயன் படுத்துவதில் ஆசிரியர்களுக்குப் போதிய பயிற்சி இருப்பதில்லை ஆகவே, பயிற்சிக் கல்லூரிகளிலேயே ஆசிரியர் பயிற்சி மாணவர் களுக்கு இக் கருவிகளைப் பயன்படுத்துவதில் போதிய பயிற்சி அளிக்க வேண்டும்.

6. இத் துணைக் கருவிகளைப் பயன்படுத்துவதில் ஆசிரியர் களிடம் அக்கறையின்மை மிகுதியாகக் காணப்படுகின்றது. இக் கருவிகளைப் பயன்படுத்தி அவற்றினின்றும் சிறந்த பயன்களை யும் பெற ஆசிரியரது மனப்பான்மை மாற வேண்டும்.

7. காட்சி - கேள்வித் துணைக் கருவிகளினின்றும் முழுப் பயனைப் பெற இவற்றிற்கான பொருளை நன்கு தேர்ந்தெடுத் தலும், திட்டமிட்டுப் பயன்படுத்துதலும் இன்றியமையாததாகும்.

ஆய்வகம்

சீரிய முறையில் அறிவியல் பாடம் கற்பித்தலுக்குச் சோதனைக் கருவிகள், இடவசதி, இவற்றுடன் இணைந்த பிற வசதிகள் எல்லாம் பொருந்திய நல்லதோர் ஆய்வகம் அவசிய மாகும். செய்முறை உருவாக்கல், அறிவியல் மனப்பான்மை போன்றவற்றை ஏற்படுத்த ஆய்வகம் பெரிதும் துணை செய்கின்றது. ஆய்வகம் அறிவியல் கற்பித்தலின் மையமாக அமைதல் வேண்டும். நல்ல அறிவியல் சூழலில் மாணாக்கர்கள் பல செயல்களில் தாங்களாகவே ஈடுபட்டால்தான் அறிவியல் உண்மைகளைப் பயன்படுத்தும் திறனை அவர்களிடத்து வளர்க்க முடியும்.

மாணவர்கள் உண்மைகளைத் தாமே கண்டுபிடிக்கும் செயலில் ஈடுபடுவதால் அவர்களுடைய ஆய்வூக்கத்திற்கு ஆய்வகம் தகுந்த இடமளிக்கின்றது. மாணாக்கர்களிடையே அறிவியல் ஆராய்ச்சி மனப்பான்மையையும் ஆர்வத்தையும் வளர்க்க ஆய்வகம் பெரிதும் துணை புரிகின்றது. மாணாக்கர்களே உண்மைகளைக் கண்டுபிடிக்கச் செய்து செயல்படுகின்றபொழுது கருவிகளைக் கையாளுவதிலும், சோதனைகள் செய்வதிலும் நல்ல பயிற்சி பெறுவதால் அவர்கள் தன்னம்பிக்கையுடையவரா கின்றனர். நல்லுழைப்புப் பழக்கங்களும் அவர்களிடையே வளர்ச்சி பெறுகின்றன. மாணாக்கர்கள் தாமாகவே செயற் பட்டு உண்மைகளைக் கண்டுபிடித்தறிவதால் அவை மாணாக்கர்

உள்ளங்களில் நன்கு பதிகின்றன. மேற்படிப்புக்கும், நடைமுறை வாழ்க்கைக்கும் அவ்வுண்மைகளை அவர்கள் பயன்படுத்து கின்றனர். சில வேளைகளில் மாணாக்கர்கள் ஒன்றுகூடி ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர். அப்போது அவர்களுடைய சமூகப் பண்புகள் சிறந்து வளர்கின்றன.

நம் நாட்டின் வளர்ச்சிக்குக் கல்வி வளர்ச்சியும், முக்கியமாக அறிவியல் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சியும் அடிப்படையாகும். நமது அறிவியல் கல்வியின் தரத்தைப் பல மேற்கத்திய நாடுகள், ஆசிய நாடுகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது ஓரளவு குறைந்துதான் காணப்படுகிறது. ஆய்வகங்களும் (Laboratories) செயற்கூடங்களும் (Workshops) போதிய அளவில் இல்லாமையே இந் நிலைமைக்கான காரணமாகும். இந் நிலை துரிதமாக மாற்றப்படவேண்டும். அறிவியல் பாடத் திட்டம் உயரும் வகையில் மாற்றப்படவேண்டும். அறிவியல் கல்விக்கான ஆய்வகங்களும் செயலகங்களும் போதிய அளவில் அமைத்துத் தருதல் இன்றியமையாததாகும்.

பள்ளியில் அறிவியல் வகுப்பறையும் ஆய்வகமும் ஒரே இடத்தில் அமைக்கப்படவேண்டும். பல அறிவியல் சோதனைகள் நடத்துவதற்குத் தேவையான சோதனைக் கருவிகள் போதிய அளவில் இருத்தல் இன்றியமையாததாகும். பரிசோதனைகளை நடத்துவதற்கான சோதனைக் கருவிகள் போதிய அளவில் இருந்தும் சரியான இடவசதி அமையாமல் இருந்தாலும் எவ்வித நோக்கத்தையும் நிறைவு செய்ய இயலாது. போதிய அளவு சோதனைக் கருவிகள் சரியான இடவசதி ஆகிய இரண்டும் இருந்தும் இவற்றை ஆசிரியர் பயன்படுத்தாவிடின் இவற்றிற்காகச் செலவிடும் பணம் எவ்வித நோக்கத்தையும் நிறைவு செய்யாமல் வீணாகிவிடும்.

பள்ளிகளில் ஆய்வகக் கட்டடம் கட்டுவதற்கும், பரிசோதனைக் கருவிகள் வாங்குவதற்கும் அரசாங்கம் நிதி உதவி வழங்குகிறது. எனினும் இவற்றைச் சரியாகப் பயன்படுத்த முடிவதில்லை. இதற்கான காரணங்கள் பின்வருமாறு:

1. ஒவ்வொரு பள்ளிக்கும் தேவைப்படும் ஆய்வகச் சாதனைகளைப் பற்றி சம்பந்தப்பட்ட ஆசிரியர்களிடம் கேட்காமலேயே சில நேரங்களில் அலுவலர்கள் ஆய்வகச் சாதனங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு விண்ணப்பித்து விடுவதுண்டு.

2. அரசினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் சில நேரங்களில் எண்ணிக்கையில் குறைவாகவே இருக்கும். இவர்கள் குறைந்த விலைகளைச் சாதனங்களுக்குக் குறித்திருப்பார்கள். பல வேளைகளில் இச்சாதனங்கள் தரத்தில் குறைந்து காணப்படும். சில நேரங்களில் தேவைப்படும் சாதனங்கள் இவர்களிடம் தயாராக இரா. அப்பொழுது இந் நிறுவனங்களிடமுள்ள சாதனங்களையே வாங்கவேண்டியிருக்கும்.

3. ஆய்வகத்திற்குக் கிடைக்கும் அரசு மானியத் தொகை பல சமயங்களில் கல்வி ஆண்டின் இறுதியில் கிடைக்கும் இதனை அந்த ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள்ளாகவே செலவிட வேண்டும். இது போன்ற நேரங்களில் கிடைத்ததை வாங்க வேண்டியதாக உள்ளது.

4. சாதனங்களை அவ்வப்பொழுது செப்பனிடுவதற்குத் தேவைப்படும் நிதி அரசிடமிருந்து போதிய அளவு கிடைக்காத காரணத்தால் பல சாதனங்கள் பயன்படுத்த முடியாத நிலையிலேயே இருக்க நேரிடும்.

மேலும் பெரும்பாலான பள்ளிகளில் ஆய்வகங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. அறிவியல் ஆசிரியர்கள் பொறுப்பில் ஆய்வகங்கள் இருந்தும், சில ஆசிரியர்கள் இவற்றைப் பூட்டி வைத்துவிட்டு ஆய்வகக்குறிக்கோள்கள் நிறைவேறாதவாறு செய்து விடுகின்றனர். வேறு சில ஆசிரியர்கள் சாதனங்களை மட்டும் காட்டுவதுடன் நின்றுவிடுகின்றனர். சில ஆசிரியர்கள் மட்டும் பரிசோதனைகளைச் செய்து காட்டுகின்றனர். ஆனால் இவர்கள் கூட மாணாக்கர்கள் சோதனை செய்து பார்ப்பதை அனுமதிப்பதில்லை. ஆய்வகத்தின் முழுப்பயனைப் பெற வேண்டுமாயின் மாணாக்கர்கள் ஆய்வகத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும். ஆய்வகத்தில் விஞ்ஞானிகளின் படங்கள், பல்வேறு சோதனைகளின் படங்கள் போன்றன சுவர்களில் மாட்டிவைக்கப்படவேண்டும். இவை அங்கு நல்லதொரு சூழ்நிலையைத் தோற்றுவிக்கும்.

தமிழ்நாட்டில் ஆய்வக வசதிகள் இல்லாத பள்ளிகளின் மாணாக்கர்களுக்கு அறிவியல் பரிசோதனைகள் செய்துகாட்டுவதற்கும், செய்முறைப் பயிற்சி அளிப்பதற்கும் நடமாடும் ஆய்வகங்கள் (Mobile Science Laboratories) செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் ஒரு நடமாடும் ஆய்வகம் ஒரு பள்ளித்துணை ஆய்வாளர் (அறிவியல்) பொறுப்பில் உள்ளது.

இவர் கல்வி மாவட்டத்திலுள்ள பள்ளிகளுக்குச் சென்று பரிசோதனைகளைச் செய்து விளக்குகிறார்.

உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான ஆய்வகக் கருவிகளை நாம் அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டியதாக உள்ளது. ஆனால் நாம் எல்லாப் பொருள்களையும் விலை கொடுத்து வாங்க வேண்டியதில்லை. எளிய ஆய்வகச் சாதனங்கள் பலவற்றை ஆசிரியர்களும் மாணாக்கர்களும் பள்ளியில் உள்ள தொழிற்கூடத்திலேயே செய்யலாம். சில கருவிகளைக் குறைந்த செலவில் உள்ளூர்த் தொழிலாளர்களின் உதவியுடன் தயாரிக்கலாம். கண்ணாடிக்குப்பிகள், தகரக் குவளைகள், ரப்பர் துண்டுகள், மின் விளக்குகள் ஆகியவற்றினைப் பயன்படுத்தி மிகக் குறைந்த செலவில் பல எளிய கருவிகளைத் தயாரிக்கலாம்.

இரசாயனப் பொருள்களின் பற்றுக்குறை, ஆய்வகக் கருவிகள் போதிய அளவில் இல்லாமை, இடநெருக்கடி ஆகிய காரணங்களால் எல்லா மாணவர்களும் பரிசோதனைகளைச் செய்ய முடிவதில்லை. விடுமுறை நாட்களில் விருப்பமுள்ள மாணவர்கள் ஆய்வகப் பரிசோதனைகள் செய்து பயன் பெறலாம்.

பள்ளிகளின் இணைப்புத்திட்டம் (School Complex) செயல்பட்டு வரும் மையங்களில் ஆய்வக வசதிகள் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் அப்பகுதியிலுள்ள நடுநிலைப்பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் ஆகியவற்றிலுள்ள மாணாக்கர்களுக்கு அறிவியற் சோதனைகள் பல செய்து காட்டி உதவி புரியலாம்.

பள்ளி ஆய்வக வசதிகளைப் பெருக்குவதற்கு அரசு மானியத்தையே சார்ந்திருக்க வேண்டுமென்பதில்லை. வசதி படைத்த பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரது நன்கொடைகளின் மூலம் ஆய்வக வசதிகளைப் பெருக்கலாம்.

வினாக்கள்

1. காட்சி- கேள்விக் கருவிகளை உயர்நிலைப் பள்ளிகளில் தற்போது பயன்படுத்தலில் எழும் இடர்களையும் சிக்கல்களையும் குறிப்பிட்டு இவற்றைக் களையும் வழிகளையும் கூறுக.
2. பாடநூல்களைத் தயாரித்தல் நாட்டுரிமையாக்குவதில் எழக்கூடிய இடர்களை எவ்வாறு நீக்கலாம் ?

3. பள்ளி நூலகத்தைக் கல்வியின் மையமாக்கும் வழிகள் மூன்றினைக் குறிப்பிடுக.

4. இந்தியாவில் பள்ளிப் பாடநூல்கள் எழுதி வெளியிடுவது அரசுடைமையாக்கப்படுவதினின்றும் எழும் குறைபாடுகள் யாவை?

5. உயர்நிலைப் பள்ளி மாணாக்கர்க்குக் கற்பித்தலில் காட்சித் துணைக் கருவிகளைக் காட்டிலும் கேள்வித் துணைக் கருவிகளை அதிக அளவு பயன்படுத்துவதற்கான நடைமுறை வழிகளைச் சுட்டிக் காட்டுக.

6. நம் பள்ளிகளில் இன்றுள்ள ஆய்வகங்களைச் (Laboratories) சிறந்த முறையில் பயன்படுத்த உதவும் வழிகளைக் குறிப்பிடுக.

7. பள்ளி நிலையில் பாடப்புத்தகங்கள் தேசியமாக்கப் பட்டிருக்கும் இப்போதைய கொள்கையானது தொடர்ந்து செயல்படுத்தப் படவேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? காரணங்கள் கூறவும்.

8. பாடங் கற்பிப்பதில் திரைப்படங்கள் (films) எவ்விதம் பயன்படுகின்றன ?

9. தற்போது பள்ளிகளில் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை எவ்வாறு நன்கு பயன்படுத்த இயலும்?

10. நீவிர் கற்பித்தலுக்குச் சென்ற பள்ளியில் காணப்பட்ட ஆய்வக (Laboratory) வசதிகளைக் குறிப்பிடுக. இவை போதுமானவையா ?

11. ஒரு நல்ல பாடநூலின் பண்புகள் யாவை?

12. காட்சி—கேள்விப் பொருட்களைச் செகண்டரிக் கல்வி நிலையில் பயன்படுத்தலில் இன்று காணப்படும் ஐந்து இடர்ப்பாடுகளைக் குறிப்பிடுக.

13. பள்ளிகளில் நூல்நிலையங்களின் முக்கியத்துவத்தை விளக்குக. மாணாக்கர்களுக்குச் சிறப்பான கல்விப் பயன்களை அளிக்கும் வகையில் பள்ளி நூலகம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும்? மாணாக்கர் களிடையே நூலக மனப்பான்மையை எவ்வாறு தோற்றுவிக்கலாம்.

14. சிறு குறிப்பு வரைக :

(அ) வகுப்புக்கான தனிப்பட்ட நூல்நிலையங்கள்

(ஆ) கல்விப் பயணங்கள்.

15. பள்ளிக்கூடப் போதனைத் திட்டத்தில் நூல்நிலையம் நடு மையமாகச் செயலாற்ற வழிவகைகளைக் கூறவும்.

7. ஆசிரியர்—மாணவர் தொடர்பு மற்றும் மாணாக்கர் அமைதியின்மை

கல்விச் செயல் முறையில் இன்றும் ஆசிரியரது பணி இன்றியமையாததாகும். இதனால்தான் கல்வி பற்றிய மும்முனைக் கொள்கையில் (Tri-Polar Theory) ஆசிரியருக்கு இடம் அளிக்கப் பட்டிருக்கிறது. தங்களது சூழ்நிலையுடன் உயர்நிலைப்பட்ட பொருத்தப்பாட்டினைப் பெற மாணாக்கர்களுக்கு உதவுதல், அவர்களது நல் வளர்ச்சிக்கு உதவுதல் ஆகியன கல்விச்செயல் முறையின் அடிப்படை நோக்கங்களாகும். கல்வி நோக்கங்களையும் குறிக்கோள்களையும் பள்ளியில் நடைமுறையில் செயற்படுத்துவதே ஆசிரியரது பணியாகும். சிறப்பான சூழ்நிலை ஒன்றினைப் பள்ளிக்கு உள்ளும் உருவாக்குவதன் வழியே மாணாக்கர்கள் யாவரும் இசைவு பெற்ற ஆளுமையினை வளர்த்துக்கொள்ளவும், மனிதப் பண்பாட்டின் சிறப்புமிக்க வாழ்க்கை மதிப்புகளை உணர்ந்து அவற்றை அடைவதற்கான முயற்சியினை அவர்கள் மேற்கொள்ளவும் ஆசிரியர் துணை செய்கிறார். மாணாக்கர்களது நல்வளர்ச்சிக்கு அவர்களிடம் ஆசிரியர் பெற்றுள்ள மதிப்பும் செல்வாக்கும் துணைகளாக அமைகின்றன. இம்மதிப்புக்கும் செல்வாக்கிற்கும் ஆசிரியரது வயது, அனுபவம், அறிவு, ஆற்றல்கள், வகித்துவரும் பதவி, பெற்றுள்ள அதிகாரம் போன்றன யாவுமே காரணிகளாக அமைகின்றன. இவை யாவற்றிலும் முக்கியமானது தமது மாணாக்கர்களிடம் அவர் கொண்டுள்ள தொடர்பின் தன்மையேயாகும்.

கல்வியின் இறுதி நோக்கங்களை எய்துவதற்குச் சிறப்பான ஆசிரியர்-மாணாக்கர் தொடர்பு (Teacher - pupil Relationship) இன்றியமையாதது. பயனுள்ளதும் சிறப்பு மிக்கதுமான ஆசிரியர்-மாணாக்கர் உறவு எத் தன்மையதாக இருக்க வேண்டும் என்பதனைச் சொற்களால் எடுத்துக் கூறுவது சிறிது கடினமாகும். வகுப்பறை, பள்ளி ஆகியவற்றில் பரவியுள்ள சூழ்நிலையின் இயல்பிலிருந்து ஆசிரியர்—மாணாக்கர் உறவின் பண்பினை நம்மால் உணர முடியும். நல்ல முறையில் இவ்வுறவு அமைய வேண்டுமாயின் எதிரிடையான இரு தீவிர நிலைகளை இது

தவிர்ப்பதாக அமைதல் வேண்டும். ஆசிரியர் ஆதிக்க மனப் போக்குடன் மாணாக்கர்களிடம் நடந்துகொள்ளக்கூடாது. இதேபோது மாணாக்கர்களது போக்கிற்கு முழுமையாகத் தாம் வளைந்து கொடுப்பதும் கூடாது. ஏனெனில், வெறும் ஆதிக்க மனப்போக்குடன் மாணாக்கர்களிடம் நடந்து கொள்ளும் ஆசிரியருடன் மாணாக்கரது தொடர்பு பயனுள்ளதாக அமையாது. மேலும் மாணாக்கர்களது சொற்படியெல்லாம் ஆசிரியர் செயற்படுவதோ அவர்களது போக்குக்கு ஏற்றபடி முழுமையாகத் தான் வளைந்து கொடுப்பதோ நல்ல ஆசிரியர்-மாணவர் தொடர்பினை உருவாக்க உதவாது. இவ்விரு நிலைகளுக்கும் இடைப்பட்டதாக அது அமைய வேண்டும். மாணாக்கர்களது உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு, பரிவுடன் அவர்களது நடத்தையினைக் கவனித்து,- அவர்களது ஒத்துழைப்பினைப்பெற ஆசிரியர் முயலுதல் வேண்டும். பரிவு நல்லுறவுக்கு ஆதாரமாகும். ஆனால் பரிவு என்பது மனம் போனபடி மாணாக்கர்கள் நடந்து கொள்ள அனுமதித்தல் அன்று. மாணாக்கர்களது பல்வேறு செயல்களுக்குப் பின்னமைந்துள்ள நோக்கங்களையும் ஊக்கிகளையும் ஆசிரியர் உணர முற்படவேண்டும் என்பதே மாணாக்கரிடம் பரிவு எனப்படுவதன் பொருளாகும். இப் பரிவு ஆசிரியரது வலுக்குன்றிய, தன்னம்பிக்கையற்ற நிலைமையினின்றும் எழுவதன்று. அவரது தன்னம்பிக்கை மனவுறுதி, திறமை, ஆர்வம், பொறுப்புணர்ச்சி போன்றவற்றினின்றும் இப் பரிவு எழுவதாகும். இத்தகைய பரிவில் கட்டுப்பாடும் காணப்படும். இது மாணாக்கர்களுக்குக் காப்புணர்ச்சியை (Security) அளித்து, ஆசிரியர்பால் அவர்களது மதிப்பை வளர்த்து, சீரிய ஆசிரியர் - மாணவர் உறவினைத் தோற்றுவிக்கும். இத்தகைய சூழ்நிலை மாணாக்கர்களது இசைந்த நல் வளர்ச்சிக்கும் துணை செய்கின்றது.

கல்வி முறையின் வெற்றி ஆசிரியரது சிறப்பான பண்புகள், மாணாக்கர்களிடம் அவர் கொண்டுள்ள விரும்பத்தக்க நல்ல தொடர்பு போன்றவற்றையும் பெருமளவு சார்ந்து அமைவதாகும். மாணாக்கர்களது ஆளுமையின் இசைந்த நல்வளர்ச்சிக்கு அவர்களுக்கு உதவுவதற்கும், சுற்றுப்புற உலகின் இயல்புகளை மாணாக்கர்களுக்குத் தெளிவுற விளக்கி, அதனுடன் சிறப்பான பொருத்தப்பாட்டினைப் பெற அவர்களுக்கு உதவுவதற்கும் ஆசிரியர் சில முக்கிய பண்புகளையும் அடிப்படைத் திறன்களையும் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றை ஆசிரியர் ஆராய்ந்துணர்வது மாணாக்கர்களுக்குப் பயனுள்ளதாக அமையும். நல்லாசிரியரது சிறந்த பண்புகள் திறம்பட மாணாக்கர்களுக்குக் கற்பித்தலில் அவருக்குத் துணையாக நிற்றலோடு, மாணாக்கர்

களோடு நல்ல தொடர்பினை வளர்த்துக் கொள்வதற்கும் அடிப் படைகளாக அமைகின்றன. போதிய உடல் நலன், உள நலன், இவற்றில் வலிமை, பரந்த பொது அறிவு, மாணாக்கர்களது இயல்புகள், நடத்தை முறைகள், வளர்ச்சிநிலைக்கான தேவைகள், குறிப்பிட்ட வளர்ச்சிநிலையில் பொதுவாகக் காணப் படக்கூடிய பண்புகள் ஆகியன பற்றிய அறிவு, தாம் கற்பிக்கும் பாடப்பொருள் பற்றிய ஆழ்ந்த அறிவு, பாடப்பொருளில் அடங்கிக் காணப்படும் பல்வேறு கருத்துகளை மாணாக்கர்கள் நன்கு புரிந்துகொள்ளும் வகையில் விளக்கிக் கூறத் தேவைப் படும் கற்பித்தல் முறைகளைப் பற்றிய அறிவு இவற்றை வகுப்புச் சூழ்நிலைக்கேற்ப நடைமுறையில் பயன்படுத்தும் திறன், தளரா நோக்கு (Optimism) மகிழ்ச்சியுடனும் தன்னம்பிக்கை யுடனும் செயற்படுதல், மாணாக்கர்களிடம் அன்பும் பரிவும் கொண்டு நடத்தல், நயத்திறன் (Tact), நேர்மை, ஒரு புறச் சாய்வின்மை, நகைச்சுவையுணர்ச்சி, கட்டுப்பாட்டுடனும் மதிப் புடனும் சமுதாயத்தில் நடந்துகொள்வது, நல்லொழுக்கம், சிறப்பான நல்ல ஆளுமை, நல்ல முன்மாதிரியாக விளங்குதல் போன்ற சிறந்த பண்புகள் ஆசிரியருக்குத் தேவைப்படுவனவாம்.

வகுப்பறையில் கற்பித்தல் என்பது ஏதோ ஓர் இயந்திரம் போன்று இயங்கும் பணியன்று. மனிதத் தொடர்புகளின் அடிப் படையிலேயே கற்பிக்கும் செயல் அமைந்து காணப்படுகிறது. இத்தகைய மனிதத் தொடர்புகளினின்றும் எழும் மகிழ்ச்சியும் மனநிறைவுமே ஆசிரியப்பணியின் ஒப்பற்ற, ஈடு இணையற்ற நல்விளைவுகளாகும். இளம் சந்ததியினரான மாணாக்கர்களுடன் சீரான தொடர்பினை உருவாக்கிக் கொள்வதில் ஆர்வமுள்ளோரே ஆசிரியப்பணியில் முழு வெற்றி காண இயலும்.

முற்காலப் பள்ளிகளில் ஆசிரியரது பங்கும் பணியும் இன்று காணப்படுவதினின்றும் வேறுபட்டுக் காணப்பட்டன. முற்காலத்தில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே நிலவிய தொடர்பு குரு-சீடர் உறவுமுறையாகும். ஆசிரியர்கள் சிறந்த கல்விமான்களா கவும், மெய்யறிவாளர்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும், சமுதாயச் சிற்பிகளாகவும் விளங்கினர். ஒழுக்கப்பயிற்சியிலும், சமய நடத் தையிலும் மாணாக்கர்களுக்கு ஆசிரியர் தாமே ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். ஆசிரியர்கள் சமுதாயத்தில் மிகவும் போற்றப்பட்டனர். சமூக நல்வாழ்வுக்கு வழிகாட்டியாகவே அவர்கள் அமைந்தனர். ஆசிரியர்-மாணாக்கர் தொடர்பானது அன்பு, மதிப்பு ஆகிய இரு சிறந்த அடிப்படைகளின் பால் அமைந் திருந்தது. இத்தொடர்பின் மூலம் பல சிறந்த பண்புகளையும்,

மனப்பான்மைகளையும், நடத்தை முறைகளையும் மாணாக்கர்கள் பெற்றனர். அறிவு வளர்ச்சியில் மட்டுமன்றி, ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றிலும் மாணாக்கர்களுக்குச் சிறந்த பயிற்சி அளிக்கப்பட்டது. எளிமையாக வாழ்தல், ஆனால் உயர்ந்த கருத்துகளின்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல் ஆகியன சிறப்பான குறிக்கோள்களாக அமைந்தன.

பண்டைய இந்தியக்கல்வி முறைகளில் ஒன்றான குருகுல முறை கல்வியில் ஆசிரியர் மாணாக்கர் தொடர்பு எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது பற்றித் தெளிவான கருத்துகள் நிலவி வந்தன. மாணாக்கனாக ஒரு சிறுவனை ஏற்றுக்கொண்ட பின் அவனை ஆசிரியர் தமது குடும்பத்துள் ஒருவனாகக் கருதித் தமது மகனிடம் அன்பு செலுத்துவதுபோன்று அவனிடம் அன்பு செலுத்தவேண்டும் (Relationship–Filial in Character). இதே போன்று மாணாக்கனும் ஆசிரியருக்குக் கீழ்ப்படிந்து அவர்க்கான பணிவிடைகள் பலவற்றைச் செய்யவேண்டும். ஆசிரியரது மனைவி, அவரது குடும்பத்திலுள்ள பிற அங்கத்தினர்கள், பிற குடும்பத்தினர் ஆகியோரிடமும் மாணாக்கன் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும். ஆசிரியரும் மாணாக்கர்களிடம் அன்புடன் நடந்துகொள்ள வேண்டும். அவனுக்குக் கற்பிக்கப்பட வேண்டியன யாவற்றையும் முழுமனதுடன் கற்பிக்க வேண்டும். தமது சுய நலன்களுக்காக மாணாக்கனை ஆசிரியர் பயன்படுத்த முயலுவது தவறாகும். நல்லொழுக்க முறைகள், துதிமுறைகள் ஆகியவற்றிலும் மாணாக்கனை ஆசிரியர் பயிற்றுதல் வேண்டும். உடல்நலம், நல்லொழுக்கம், சமய ஒழுங்கு, சமூகத்தில் பணிவுடன் நடத்தல் ஆகியவற்றில் மாணாக்கன் பின்பற்ற வேண்டிய நடைமுறை நியதிகள் குருகுலப்பள்ளி ஆசிரியர்களால் திட்டவட்டமாக முறைப்படுத்தப்பட்டுச் செயலாக்கப்பட்டன. குருகுல முறையில் ஆசிரியர் மிகவும் உயர்நிலையில் வைத்துப் போற்றப்பட்டார். அவரிடம் அச்சங் கலந்த மதிப்புடன் மாணாக்கன் நடந்து கொள்வது வலியுறுத்தப்பட்டது. மாணாக்கன் மட்டுமன்றி ஆசிரியரும் சிறந்த நடத்தையையும் பண்புகளையும் உடையவராகத் திகழ்தல் வலியுறுத்தப்பட்டது. இன்று நம் நாட்டுப் பள்ளிகளில் சிலபோது காணப்படும் ஒழுங்கின்மை, கற்பதில் ஆர்வமின்மை ஆகியவற்றைப் போக்கவும், ஆசிரியர்-மாணவர் தொடர்பினைப் பயனுள்ள முறையில் திருத்தியமைக்கவும், சமூகத்தில் ஆசிரியரது நிலையை உயர்த்தவும் குருகுலப் பள்ளிக் குறிக்கோள்களைப் பள்ளிகளில் பயன்படுத்த முயல்வது உதவும் என்ற கருத்தில் பெருமளவு உண்மையுள்ளது.

பண்டையத் தமிழரது கல்விமுறையில் ஆசிரியர்-மாணவர் தொடர்பின் தன்மை பற்றிய விவரங்கள் ஆங்காங்கு காணப்படு கின்றன. ஆசிரியரது நிலை உயர்ந்து காணப்பட்டது. அவரது சொல்லுக்கு வேந்தரும் கட்டுப்பட்டுக் காணப்பட்டனர். மாணாக் கரது அகக்கண்களைத் திறந்து அறியாமையைப் போக்குபவராக ஆசிரியர் கருதப்பட்டார். மாணாக்கரது இயல்பு பற்றிய உணர்வு, அவர் பால் பரிவு, சிறந்த அறிவு, கடவுள் நம்பிக்கை போன்ற பல பண்புகள் ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்பட்டன. சமுதாயத்தின் தலைவர்களாக ஆசிரியர்கள் கருதப்பட்டனர். ஒழுங்கு, நன் னடத்தை, ஆர்வம், முழுக்கவனம் போன்றன மாணாக்கர் களிடையே வலியுறுத்தப்பட்டன. காலந்தவறாமை, ஆசிரியர் சொல்லுக்கு மகிழ்ச்சியோடு கீழ்ப்படிதல், அறிவுவேட்கை, நல்ல நினைவாற்றல், பணிவு, பண்பாடு போன்றன யாவும் மாணாக்கர் களிடம் காணப்படவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டன. உளப் பயிற்சி, ஒழுக்கப்பயிற்சி ஆகியவற்றோடு உடற்பயிற்சிக்கும் கல்வி அமைப்பில் முக்கிய இடம் அளிக்கப்பட்டது. பரந்து ஆழ்ந்த அறிவு, நிலைகுலையாமை, பொறுமை, கம்பீரம், சகிப்புத் தன்மை, ஆக்கத்திறன் போன்றவற்றைப் பெற்றிருத்தலினால் நிலம், மலை போன்றவற்றிற்கு நல்லாசிரியர் ஒப்பிடப்பட்டார். திட்பமாகவும், ஒருபுறச்சார்பின்றியும் அவர் செயற்பட வேண்டு மாதலின் தராசு போன்றவரெனப்பட்டார். பரிவு, மென்மை யுணர்வு, கவர்ச்சியான ஆளுமை ஆகியன உடையவராதலால் மலர் போன்றவரென்றும் குறிப்பிடப்பட்டார். இத்தகைய ஆசிரியரது தொடர்பின் விளைவாக மாணாக்கன் சிந்தனைச் சுதந்திரமும், ஆய்வுத்திறனும் பெற்று விளங்கவேண்டும். இதனால் நடத்தையில் நல்ல திருப்பங்களும் மாற்றங்களும் எழவேண்டும். மேலும் பண்பாடு, சகிப்புத்தன்மை இன்சொல் பேசுதல், பிறர் பால் பரிவு, நல்லொழுக்கம், சமூகவியல்பு போன்றன மாணாக்கர் களிடம் எழும்.

பௌத்தக் கல்வி முறையில் மாணாக்கர் ஆசிரியர் ஆகிய இரு வரும் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பது பற்றித் திட்ட வட்டமான விதிகள் இருந்தன. தனது ஆசிரியரிடம் மாணாக்கன் மதிப்பும் பக்தியும் கொண்டு ஒழுகுதல் வேண்டும். இதுபோலவே மாணாக்கரிடம் ஆசிரியர் அன்புடனும் பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. பௌத்த விஹாரங்களில் காணப்பட்ட ஆசிரியர்-மாணவர் தொடர்பின் தன்மை குருகுலப்பள்ளிகளில் காணப்பட்டதைப் பெருமளவு ஒத்திருந்தது.

கல்விக்கும், கற்பிக்கும் ஆசிரியருக்கும் முஸ்லிம் சமயத்தின ரிடையே என்றைக்கும் சிறந்த மதிப்புண்டு. இஸ்லாமியப் பள்ளி களில் பணிபுரிந்த ஆசிரியர்கள் சிறந்த அறிவும் நல்லொழுக்கமும் கொண்டவர்களாகவும், சமுதாயத்தினரின் நல்லெண்ணத்தைப் பெற்றவர்களாகவும் இருந்தனர். இப்பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் தொடர்பின் தன்மை பெருமளவு பிராம்மணக் கல்வி முறையில் காணப்பட்டதைப் போன்றே இருந்தது.

பண்டைய இந்தியக் கல்விமுறைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கரது எண்ணிக்கை குறைந்ததாகவே இருந்தது. ஆனால் இன்று கல்வி அறிவு பெறுதல் ஒவ்வொரு குடிமகனது சிறப்புரிமையாகக் கருதப்படுகிறது. கல்வி கற்கும் மாணாக்கரது எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டே போகிறது. இன்றைய இந்தியாவின் சமூக அமைப்புப் பண்டைக் காலத்தின் அமைப்பிலிருந்து பெருமளவு மாறியிருக்கிறது என்பது தெளிவு. இன்றைய கல்விமுறையானது இன்றைய சமூக அமைப்புடன் இணைந்திருத்தல் வேண்டும். இன்று கல்வியின் எல்லாப் பகுதி களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. எனவே, இன்றைய கல்வி முறை இக்காலச் சமூகத் தேவைகளுடனும், இன்று காணப்படும் சமூக அமைப்புடனும் பொருந்தியதாக இருக்க வேண்டும். எனினும் பண்டைய இந்தியக் கல்வி முறைகளில் காணப்பட்ட ஆசிரியர்-மாணவர் தொடர்பின் அடிப்படைக் கருத்துகளில் பல இன்றும் கல்விப்பயனுடையனவாகவே காணப்படுகின்றன என்பதனை மறுப்பதற்கில்லை.

முற்காலத்தில் ஆசிரியருக்கும் மாணாக்கருக்கும் இடையே நிலவியது போன்ற தொடர்பு இக்காலத்தில் இல்லை. இதன் விளைவாக இன்று கல்வி நிலையங்களில் மாணாக்கர்களிடையே அமைதியின்மை, ஒழுங்கின்மை, கட்டுப்பாடின்மை, கற்றலில் ஆர்வமின்மை போன்ற பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. இவை யாவருக்கும் கவலைதரக்கூடியனவாகவும், சர்ச்சைக்குரியன வாகவும் உள்ளன. இந்நிலைக்குப் பல காரணங்கள் கூறப்படு கின்றன.

இன்றைய ஆசிரியர் சமுதாயத்தில் பெரும்பாலோர் இப் பணியில் ஆர்வம் குன்றியவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்கள் மாணாக்கர்களுக்கு நல்ல முன்மாதிரியாக இருப்ப தில்லை. மேலும் பெரும்பாலோர் அதிருப்தி உள்ளவர்களாகவும், இப்பணியில் விருப்பமில்லாதவர்களாகவும், மனமுறிவுற்றவர்களா கவும் காணப்படுகின்றனர் என்று பல சமயங்களில் கருத்துகள்

தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் ஆசிரியர்-மாணவர் தொடர்பானது சரியான ஒரு தொடர்பாக நிலவாமலிருப்பதில் வியப்பில்லை. இந்நிலையினை மாற்றியமைக்க ஆசிரியர்களது தரத்தை உயர்த்துதல் இன்றியமையாததாகும். ஆசிரியத் தொழிலில் உண்மையிலேயே நாட்டமுள்ளோரைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சியளித்தல், நல்ல ஊதியமும் சிறந்த வேலைச் சூழ்நிலையும் அளித்தல் ஆகியவற்றினை மேற்கொள்வதன் மூலம் ஆசிரியர்களது தரத்தை உயர்த்த முற்படலாம்.

தற்கால ஆசிரியர்-மாணவர் தொடர்பானது ஓர் அன்னிய உறவாகத்தான் தென்படுகிறது. மாணாக்கர்கள் மிகக் குறைவாகவே ஆசிரியர்களுடன் தொடர்பு கொள்கின்றனர். அதுவும் பெரும்பாலும் பாடத் தொடர்பானதாகவே உள்ளது. மாணாக்கர்களின் கல்விப் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, சொந்தப் பிரச்சினைகள் ஆகியவை பற்றி ஆசிரியர்கள் அக்கறை கொள்வதில்லை. மாணாக்கர் உள்ளத்தில் ஆசிரியர் பற்றி ஓர் அன்னிய உணர்வே காணப்படுகின்றது. ஆசிரியர்-மாணவர் இடையே நட்பற்ற தன்மையே நிலவுகிறது. இதனால் ஆசிரியர்களுக்கு மாணாக்கர்களிடம் செல்வாக்கு இருப்பதில்லை. ஆசிரியர்களின் முயற்சிகள் யாவும் மாணாக்கர்களிடம் எதிர்ப்புணர்ச்சியையே தோற்றுவிக்கின்றன.

பயனுள்ள கல்வி ஆசிரியர்கள் மாணாக்கர்கள் ஆகியோரிடையே நிலவும் தொடர்பின் அடிப்படையில் அமைவதாகும். இத்தொடர்பின் விளைவாகப் பல்வேறு இன்றியமையாத கல்விப் பயன்களை மாணாக்கர்கள் அடைகின்றனர். நல்லொழுக்கப் பண்புகளைப் பெறுதல், சீரிய மனப்பான்மைகளைப் பெறுதல் ஆகியன ஆசிரியரது சிறப்பான முன்மாதிரியான நடத்தையினின்றுதான் மாணாக்கர்கள் பெற இயலும். வெறும் போதனை மட்டும் இத்துறைகளில் போதிய பலனைத்தராது. சிறப்பான முன்மாதிரியாக ஆசிரியர் விளங்க வேண்டுமென்றால் அவர் நல்லொழுக்கத்தினைப் பெற்றவராகவும், நல்ல ஆளுமையினையுடையவராகவும் இருத்தல் இன்றியமையாததாகும். நல்லாசிரியரது சிறந்த பண்புகள் திறம்பட மாணாக்கர்களுக்குக் கற்பித்தலில் அவருக்குத் துணையாக நிற்றலோடு மாணாக்கர்களோடு நல்ல உறவினை வளர்த்துக் கொள்வதற்கும் அடிப்படைகளாக அமைகின்றன. இன்றும் மாணாக்கர்கள் நல்லாசிரியர்களைப் போற்றி மதிக்கிறார்கள். மாணாக்கர்களது உண்மை மதிப்பினைப் பெற்றிராத ஆசிரியர்களின் சொற்படி அவர்கள் நடக்கக்கூடும்.

இதற்கு இத்தகைய ஆசிரியர்கள் தாமே பொறுப்பேற்கவேண்டும். பரந்த பொருளறிவு, கற்பித்தலில் ஆர்வம், மாணாக்கர்களிடம் அன்பு, அவர்களுடன் ஒருபுறச்சாய்வின்றியும் நேர்மையுடனும் பழகுதல் ஆகியன யாவும் ஆசிரியர்பால் மாணாக்கர்கள் கொண்டுள்ள மதிப்பினை உயர்த்தி, நல்ல ஆசிரியர்-மாணாக்கர் தொடர்பினை உருவாக்க உதவும். மேலும் இதன் விளைவாக ஆசிரியரது மதிப்பு சமூகத்தில் உயரும்.

தற்போது ஆசிரியர்கள் மாணாக்கர்களது இல்லங்களுக்குச் சென்று பார்வையிடுதலோ, மாணாக்கர்கள் ஆசிரியர்களது இல்லங்களுக்குச் செல்வதோ வழக்கமாக இல்லை. இதனால் மாணாக்கர்களது வீட்டுச் சூழ்நிலை, சமூகச் சூழ்நிலை, பொருளாதாரச் சூழ்நிலை ஆகியவற்றைப்பற்றி அறிந்துகொள்ள முடிவதில்லை. இச்சூழ்நிலைகளைப் பற்றித் தெரியாத நிலையில் மாணாக்கர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது மிகவும் சிரமமானதாகும். கற்பித்த பாடத்தில் மாணவர்களுக்குள்ள சிரமங்களை அறிந்து அவற்றை அகற்ற முயலவேண்டும். மாணாக்கர்களின் உடல்நலம் பற்றியும், சொந்தப் பிரச்சினைகள் பற்றியும் ஆசிரியர்கள் அக்கறை கொள்வது அவசியமாகும். மாணாக்கர்களது எதிர்கால வாழ்க்கையிலும் அக்கறை காட்டவேண்டும். இப்பிரச்சினைகள் யாவற்றிலும் அறிவுரை பகரவும் ஆற்றுப்படுத்தவும் வேண்டும். ஆசிரியர்கள் தங்களது சொந்தச் செல்வாக்குகளினாலும் நன்னடத்தை, வாழ்க்கை, ஒழுக்கம், அறநெறி மற்றும் ஆன்மிகப் பண்புகள் ஆகியவற்றாலும் மாணாக்கர்களிடம் சிறந்த நடத்தைக் கோலங்களை உருவாக்கவேண்டும். இதற்கு நெருங்கிய ஆசிரியர்-மாணவர் தொடர்பு தேவை. நல்ல மனப்பான்மைகள், நற்பழக்கங்கள், நல்லொழுக்கம் ஆகியன உள்ளடங்கிய முழுமையான ஆளுமையினை மாணாக்கர் பெற ஆசிரியர் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும் ஆசிரியர்-மாணவர் தொடர்பினை நன்முறையில் வலுவடையச் செய்ய உதவும்.

கல்விமுறையின் வெற்றி கற்பி முறையின் தன்மையினை மட்டும் சார்ந்ததன்று. இது ஆசிரியரது சிறப்பான பண்புகள், மாணாக்கர்களிடம் அவர் கொண்டுள்ள நல்ல தொடர்பு போன்றவற்றையும் பெருமளவு சார்ந்து அமைவதாகும். சிறந்த கற்பித்தல் முறைகள் எனப்படுவனவும் திறனற்ற, ஆர்வமில்லாத ஆசிரியர்களால் கையாளப்பெறும்போது பயனற்றுப்போவதும், பழங்காலக் கற்பித்தல் முறைகளின் உதவி கொண்டும் ஆர்வமிக்க நல்லாசிரியர் சிறந்த கல்விப்பயன் மிக்க விளைவுகளை மாணாக்கர்

களிடையே தோற்றுவித்தலையும் இன்றும் நமது பள்ளிகளில் நாம் காண்கிறோம். எனவே கல்வி அமைப்பின் வெற்றிக்கு நல்ல ஆசிரியர்-மாணாக்கர் தொடர்பு இன்றியமையாததாகும் என்பதனை ஒவ்வோர் ஆசிரியரும் தெளிவாக நினைவில் கொண்டு செயற்பட வேண்டும். ஒரு நல்லாசிரியர் தமது சமூகப் பொறுப்புகளை மறத்தல் கூடாது. சமுதாய வளர்ச்சி, சமுதாய நலன் சமுதாயத்தில் பயனுள்ள மாற்றங்களைத் தோற்றுவித்தல், அதன் தேவைகளை நிறைவு செய்தல் போன்ற யாவும் அவரது பணியில் அடங்கும். இப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்று வதன் விளைவாகவே ஆசிரியரது மதிப்பு சமூகத்தில் உயரும்; பள்ளி-சமூகத் தொடர்புக்கும் துணைசெய்யும். ஆசிரியப்பணியில் உண்மையிலேயே நாட்டமுள்ளோரைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி யளித்தல் பயிற்சியை மேலும் பயனுள்ளதாக்கல், பயிற்சிக்கல்லூரி களின் வாய்ப்புகளை மேலும் சிறப்பாக்கல், நல்ல ஊதியம் அளித்தல், சிறந்த வேலைச் சூழ்நிலையினை அளித்தல், சிறந்த பள்ளி ஆய்வுமுறை ஆகியன ஆசிரியர்களது தரத்தை உயர்த்தப் பெரிதும் உதவுவனவாகும்.

விரும்பத்தக்க ஆசிரியர்-மாணாக்கர் தொடர்பின் அடிப் படையில் மாணாக்கர்களுக்கு நல்வழி காட்டும் முறையாகக் கற்பித்தல் இன்று கருதப்படுகிறது. தமது செல்வாக்கு, கருத் தேற்றத்திறன் போன்றவற்றின் துணை கொண்டு மாணாக்கர் களது வளர்ச்சியினை ஊக்குவிப்பதும், நல்வழிகாட்டி அவர்களை நெறிப்படுத்துவதும் ஆசிரியரது முக்கியப் பணிகளாக அமை கின்றன. தாமே முயன்று தமது செயல்கள், அனுபவங்கள் ஆகியவற்றின் துணை கொண்டு மாணாக்கர் கல்வி பெறுவது இன்று பள்ளிகளில் பெருமளவு வலியுறுத்தப்படுகிறது. கல்விப் பயனுள்ள பல்வேறு அனுபவங்கள் அவர்களிடையே எழவும் உதவக்கூடிய நிலைமைகளையும், வாய்ப்புகளையும் உருவாக்கித் தருவது ஆசிரியரது முக்கியப் பொறுப்பாக இன்று கருதப்படுகிறது. அனுபவ உலகில் பயணம் மேற்கொண்டுள்ள மாணாக்கர்களது வழிகாட்டியாகச் செயற்படுவது ஆசிரியரது பணியாகிறது. இப்பயணத்தின் எல்லா நிலைகளிலுமே வழிகாட்டியாகிய ஆசிரி யரது துணை மாணாக்கர்களுக்குத் தேவைப்படுகிறது.

கற்றலில் ஆசிரியரையே சார்ந்து அவரது துணையினையே நாடும் நிலையினின்றும் மாணாக்கனை விடுவிப்பதே சிறந்த கற்பித்தலின் இறுதி நோக்கமாகும். இதற்கு வெறும் பொருளறி வினைப் புகட்டுவதைக்காட்டிலும் இதனைப் பெற உதவும் முறை

யறிவினை மாணாக்கர்க்கு அளித்தல் ஆசிரியரது பொறுப்பாகும். மாணாக்கரது தன்னம்பிக்கை, தான்தொடங்காற்றல் (Initiative) சிந்தனையிலும் செயலாற்றலிலும் சுதந்திரமாக இயங்குதல், தனது திறன்களில் மதிப்புணர்ச்சி போன்ற பண்புகள் சிறந்த கற்பித்தலின் விளைவாக வளர்ச்சி பெற வேண்டும். இதன் பயனாகச் சுதந்திரமாகத் தானே முயன்று பல்வேறு பாடப் பிரச்சினைகளுக்கு மாணாக்கர்களால் விடை காண இயலும். 'தொடர்ந்து தான் கற்பதற்கு ஆசிரியரது உதவி இனித் தேவையில்லை' என்று ஒரு மாணாக்கன் கூறுவது தனது ஆசிரியருக்கு அவன் அளிக்கக்கூடிய சிறந்த பாராட்டுரையாகும். கற்பித்தலின் தேவையினின்றும் மாணாக்கரை விடுவிப்பது தான் ஆசிரியரது வழிகாட்டும் பணியின் இறுதி நோக்கமாக அமைதல் வேண்டும்.

மாணாக்கர்களது உடல், அறிவு, செய்திறன்கள் நல்லொழுக்கம், அழகுணர்ச்சி, சமூகவியல்பு ஆகிய யாவற்றின் வளர்ச்சிக்கும் ஆசிரியர்—மாணவர் தொடர்பு உதவ வேண்டும். மாணாக்கர்களது வாழ்க்கையில் எழக்கூடிய பல சிக்கல்களையும் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்ள அவர்களுக்கு உதவும் வகையிலும் ஆசிரியர்—மாணவர் தொடர்பு அமைதல் வேண்டும். இன்றைய வாழ்க்கை சிக்கல் மிகுந்தும், பிரச்சினைகள் நிறைந்தும் காணப்படுகிறது. இவற்றை எதிர்த்து வெற்றி கொள்ள மாணாக்கர்களுக்கு ஆசிரியர்களின் தொடர்பு தேவைப்படுகிறது. பல மாணாக்கர்களது குடும்பச் சூழ்நிலையும் அவர்களது சமுதாயச் சூழ்நிலையும் நன்குஅமையாதிருத்தலின் விளைவாக அவர்களது வாழ்க்கையில் பல பிரச்சினைகள் எழுகின்றன. காப்புணர்ச்சியினைப் பெற்றிராமை, அன்பும் பரிவும் இல்லாமை போன்றனவும் மாணாக்கர்களிடையே பொருத்தப்பாடின்மையைத் தோற்றுவித்து, அவர்களது உளநலத்தினைக் கெடுக்கக் கூடும். இதனைத் தவிர்ப்பதற்கு ஆசிரியர்—மாணவர் தொடர்பு பெரிதும் உதவுகிறது. இதில் ஆசிரியரது சிறப்புமிக்க வாழ்க்கையும் மாணாக்கர்களது நலனில் அவர் கொண்டுள்ள அன்பும் பரிவும் முக்கியப் பங்கினைப் பெறுவனவாம். மாணாக்கர்களுக்கு நல்வழி காட்டி அவர்களது நடத்தையினை நெறிப்படுத்தி, அவர்கள் உடல் நலத்துடனும் உளநலத்துடனும் சிறப்பான வளர்ச்சி பெற உதவும் ஆசிரியர் தமது வாழ்க்கையினையும் சிறப்பாக அமைத்துக் கொண்டு நலனுடன் செயலாற்றுதல் இன்றியமையாததாகும் என்பது தெளிவு. சிறந்த ஆசிரியர்-மாணவர் தொடர்பின் பயனாக மாணாக்கர் நல்வளர்ச்சி பெறுவர்; கல்வித்தரம் உயரும்; சமூகமும் சிறப்பான முன்னேற்றத்தினை அடையும்.

மாணவர் அமைதியின்மை

பண்டைய குருகுலப்பள்ளிகள் அழகும் அமைதியும் கொண்ட இயற்கைச் சூழ்நிலையில் அமைந்திருந்தன. கற்றலுக்கேற்ற சூழ் நிலையை ஏற்படுத்தின. முற்காலத்தில் தமிழகத்தில் கணக்காயர் எனப்பட்ட ஆசிரியரது இல்லம் தொடக்கத்தில் பள்ளியாகச் செயற் பட்டது. பின்னர்க் கோயில்களில் பள்ளிகள் நிறுவப்பட்டன. அமைதி, ஒழுங்கு, நன்னடத்தை, முழுக்கவனம் போன்றன மாணாக்கர்களிடையே வலியுறுத்தப்பட்டன. பௌத்தக் கல்வி முறையில் பள்ளிகள் விஹாரங்கள் எனப்படும் பௌத்த மடால யங்களில் நிறுவப்பட்டன. சமயச் சூழ்நிலையில் இப்பள்ளிகள் அமைதியோடு செயற்பட்டன. இஸ்லாமியக் கல்வி முறையில் சமயப் பணிக்காக நிறுவப்பட்ட மசூதிகளுடன் பள்ளிகளும் இணைந்து செயற்பட்டன. தனிப்பட்ட செல்வந்தர்களது இல்லங் களிலும் இத்தகைய சிறு பள்ளிகள் காணப்பட்டன. சீரிய சமயச் சூழ்நிலையில் இப்பள்ளிகள் செயற்பட்டன. எனவே, முற்காலத்தில் செயற்பட்டு வந்த குருகுலப்பள்ளிகள், பௌத்தப் பள்ளிகள், முத்தமிழ்ப் பள்ளிகள், இஸ்லாமியப் பள்ளிகள் ஆகியவை அமைதி யின்மை என்ற பேச்சுக்கே இடமில்லாத நிலையில் சீரும் சிறப் புடனும் செயற்பட்டன.

ஆனால், இன்றையக் கல்வி நிலையங்களில் மாணாக்கர் களிடையே அமைதியின்மை பரவலாகக் காணப்படுகிறது என்னும் கூற்றினைப் பலர் கூறக் கேட்கிறோம். மாணாக்கர்களிடையே குழப்பமான கட்டுப்பாடற்ற நடத்தை காணப்படுவதும், அது சில போது சமூக விரோதமான வன்முறைச் செயல்களில் வெளிப் படுவது சென்ற பல ஆண்டுகளாக ஓரளவு அதிகரித்துள்ளதாகவே தோன்றுகிறது.

இவ்வமைதியின்மைக்குப் பின்னமைந்த காரணிகள் பலவாம்

1. வசதியற்ற பள்ளிகள் மற்றும் வசதி குன்றிய கல்லூரிகள்.
2. கவர்ச்சியற்ற கல்விமுறை.
3. ஆசிரியர்—மாணாக்கர் தொடர்பின்மை.
4. சில ஆசிரியர்களது புலமைக்குறைவு.
5. மாணாக்கர்பால் அவர்கட்கு ஆர்வமின்மை.
6. மாணாக்கர்களது பிரச்சினைகளைப் பரிவுடனும், அதே போது கட்டுப்பாட்டுடனும் அணுகித் தீர்வுகாணும் திறன் பள்ளித் தலைமையாசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் ஆகியோரிடத்தே போதிய அளவு இல்லாமை.

7. அரசியல் கட்சிகள் கல்விநிலையங்களில் ஊடுருவி அவற்றில் பயிலும் மாணாக்கர்களிடையே கட்சித் தொடர்புள்ள அரசியல் சார்பெண்ணங்களைத் தோற்றுவித்து அவர்களிடையே பூசல்களை உண்டாக்குதல்.
8. இன்றைய சமுதாயத்தில் பரவியுள்ள காப்புணர்ச்சியின்மை.
9. குடும்பங்களில் ஒற்றுமைச்சிதைவு.
10. சமய நம்பிக்கையின்மை.
11. சமூகத்தில் வழிகாட்டியாகத் திகழவேண்டிய பெரியோர்கள் தாமே கட்டுப்பாடின்றி நடத்தல்.
12. கீழ்த்தரமான திரைப்படங்கள், பத்திரிக்கைகள் ஆகியவற்றின் செல்வாக்கு.
13. ஆசிரியப்பணியில் அதிருப்தி கொண்டவர்கள், மனமுறிவுற்றவர்கள், விருப்பமற்றவர்கள் போன்றோர் காணப்படுதல்.
14. கல்வியில் மாணாக்கர்களுக்கு அக்கறையும் ஆர்வமும் இல்லாமை.
15. அறநெறி ஆன்மிக மதிப்புகளைப் புறக்கணிக்கும் மனப்போக்கு.
16. சகிப்புத்தன்மையின்மை.
17. பெற்றோர்களின் பொறுப்பற்ற போக்கு.
18. கல்விநிலையங்களுக்கும் சமுதாயத்துக்குமிடையே நெருக்கமான, பயனுள்ள தொடர்பின்மை.
19. மாணாக்கர்களுக்குத் தேவைப்படும் அறிவுரை பகர்தலும், வழிகாட்டலும் இல்லாமை.
20. வாழ்க்கையின் உயர் இலட்சியங்களில் பற்றும் நம்பிக்கையும் இல்லாமை.

நம் நாட்டில் கல்வியின் இன்றையப் பொதுவான நிலையை நாம் நோக்கும் போது ஓரளவு அது சிக்கல் மிகுந்தும், தெளிவு குன்றியும் காணப்படுகிறது. கல்வி அமைப்பில் பல குறைபாடுகள் இருத்தலும், கல்வி முன்னேற்றத்தைத் தடுக்கும் பல குறுக்கீடுகள் இருத்தலும் நமக்குப் புலப்படுகிறது.

பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களிடையே காணப்படும் அமைதியின்மை இன்று நம் நாட்டில் மட்டும் காணப்படும் பிரச்சினையாகத் தோன்றவில்லை. உலகம் முழுவதும் மாணவர்

உலகில் கொந்தளிப்புக் காணப்படுகின்றது. நமது கல்வி நிலையங்களில் அவ்வப்போது சில கொந்தளிப்புகள், இவற்றின் விளைவாக அமைதியின்மை ஆகியன தோன்றுகின்றன. இந்நிலையை அகற்ற முயற்சிகள் மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

அமைதியின்மை அல்லது ஒழுங்கின்மை என்பதற்குக் காரணங்கள் எனக் கூறப்படுவன இப்பிரச்சினையை விளக்க உதவுகின்றனவேயன்றி இதனைத் தீர்க்க உதவுவதில்லை. கல்வியின் எந்தப் பயன்களை மாணாக்கர்கள் பெற்றாலும் அல்லது பெறாவிட்டாலும் கல்வியின் விளைவாகச் சமூக நலனுள்ள பண்பாடுடைய நடத்தையில் ஈடுபட அவர்கள் கற்றிருப்பது முக்கியமாகும். இதற்கான பொறுப்பு கல்வி நிலையங்கள் அல்லது ஆசிரியர்கள் ஆகியவர்களது மட்டுமன்று; இது அரசினர், அரசியல் கட்சிகள், பெற்றோர்கள், சமுதாயத்தின் பிற பகுதியினர் ஆகிய யாவரது பொறுப்பும் ஆகும். மாணாக்கர்களது அமைதியின்மையை முழுமையாக அகற்றத் தேவைப்படும் வழிகளில் பல கல்விநிலையங்களின் முயற்சிக்கு அப்பாற்பட்டவையாகும். எனினும் இப்பிரச்சினையுடன் தொடர்பு கொண்ட கல்விக் காரணிகளை நாம் அகற்ற வேண்டும். கல்வியைக் கவர்ச்சியுள்ளதாக்கி மாணாக்கர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் கற்பித்தலும், பயனுள்ள பல பாடஇணைச் செயல்களுக்குக் கல்விநிலையங்களில் வாய்ப்பு அளித்தலும், மாணாக்கர்களிடையே எழக்கூடிய சிக்கல்களை உடனுக்குடன் பரிவுடன் கவனித்து அவற்றை நீக்க உதவும் வழிகாட்டும் பணியினை கல்விக் கூடங்கள் மேற்கொள்ளுதலும் உடனடியாகச் செய்ய வேண்டிய முயற்சிகளாகும்.

ஒழுங்கான நடத்தையே மனிதப் பண்பாட்டின் சின்னமாகும். ஒழுங்கு என்பதில் கட்டுப்பாடுகளுக்குபட்டு முறைப்பட நடத்தல், விதிகளுக்குக் கீழ்ப்படிதல் போன்ற யாவும் அடங்கும். நமது வாழ்க்கையில் குழப்பத்தைத் தவிர்க்கவும் ஒழுங்கு தேவைப்படுவதாகும். நல்லொழுக்கமும் சமூகத்துடன் இயைந்த நற்குடி மக்களாக வாழத் தேவையான நல்லியல்புகளும் மனப்பான்மைகளும் மாணாக்கர்களிடையே வளர்ச்சி பெற உதவுதலே கல்வியின் குறிக்கோளாகும். இதனை அடைவதில் ஒழுங்கு இன்றியமையாத சாதனமாக அமைகிறது. மாணாக்கர்களிடையே அமைதியான நடத்தை காணப்படாவிடில் ஒரு சிறந்த ஆசிரியராலும் திறம்படக் கற்பிக்க இயலாது. நல்ல ஒழுங்கு நிலையும் சிறந்த கற்பித்தல் ஆற்றலும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாகும். இவ்வாறே ஒழுக்க வளர்ச்சியும் ஒழுங்குநிலையுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

உண்மை ஒழுங்குநிலை (Real Discipline) எனப்படுவது நன்னடத்தையின் அடிப்படையாக அமையும் மனநிலையினைக் குறிப்பதாகும். இத்தகைய ஒழுங்குநிலை புறக்கட்டுப்பாடு களினாலோ, அச்சம், தண்டனை போன்ற காரணிகளின் விளை வாகவோ எழுவதாக இராது. தனக்கும் சமுதாயத்தில் தன்னுடன் வாழும் பிறர்க்கும் நன்மை பயக்கும் என்ற உள்ளுணர்வின் விளைவாகத் தானே விரும்பி மேற்கொள்ளும் கட்டுப்பாடான முறைப்பட்ட நடத்தையே உண்மை ஒழுங்காகும். கல்விநிலை யத்தின் பாங்கினை (Tone) உருவாக்குதலில் மாணாக்கரிடையே நிலவும் ஒழுங்குநிலையானது கல்விநிலையத்தின் சூழ்நிலை முழுவதுமே பரவி அச்சூழ்நிலையின் தன்மையை நிர்ணயிக்கும். உண்மை ஒழுங்கு நிலையினின்று எழும் சிறப்பான நடத்தை கல்வி நிலையத்துக்கு உள்ளே ஆசிரியர்களின் எதிரில் மட்டுமன்றி மாணவரில்லம், விளையாட்டரங்கு, வீடு, பொதுவீதிகள் போன்ற இடங்களிலும் இயல்பாகவும் தெளிவாகவும் மாணாக்கர் களிடையே காணப்படும். இத்தகைய நடத்தை தொடர்ந்து அவர்களுடைய பிற்கால வாழ்க்கையிலும் நற்பழக்கங்களாக உருப் பெற்று அவர்களுக்கு உதவும் மாணாக்கர்களிடையே நன்னடத் தையினையும் ஒழுங்கு மனப்பான்மையினையும் தோற்றுவிப்பதில் பள்ளியின் பாங்கும் (Tone) பள்ளியின் நல்ல மரபும் (good tradition) பெரிதும் உதவுவனவாகும். இவற்றை உருவாக்குவதில் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பள்ளியின் இந்நாள் மற்றும் முன்னாள் மாணாக்கர்கள் ஆகியோரிடம் காணப்படும் நற்பண்பு களும் சிறந்த முன்மாதிரியான நடத்தையும் பங்குபெறும். அமைதியும் கட்டுப்பாடும் உண்மை ஒழுங்குநிலையின் முதற்படி யாகும். ஒழுங்குப் பயிற்சியில் பள்ளி, குடும்பம், சமுதாயம் ஆகிய வற்றிடையே ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். மாணாக்கர் களுக்கு ஒழுங்குப் பயிற்சி அளிக்கும்போது அவர்களிடம் ஆசிரி யர்கள் அன்பும் பரிவும் உடையவராய் இருத்தல் வேண்டும். அவர்களது நல்வளர்ச்சியில் ஆர்வமிக்கோராவர் என்ற எண்ணம் மாணாக்கர்களிடையே எழும் வகையில் ஆசிரியர்கள் இப்பயிற் சியினை அளித்தல் வேண்டும்.

கடந்த பல ஆண்டுகளாக அடிக்கடி வேலைநிறுத்தம் செய்தல், தேர்வு அறைகளிலிருந்து வெளிநடப்புச் செய்தல், கல்வி நிலையங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் போன்ற பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல், ஆசிரியர்கள், பல்கலைக் கழக அலுவலர்கள், காவல்துறையினர் ஆகியோரைத் தாக்குதல் போன்ற பல வன்முறைச் செயல்களில் மாணாக்கர்கள் ஈடுபட்டு

வருகின்றனர். மாணாக்கர்களிடம் காணப்படும் அமைதியின் மைக்கும் பதட்ட நிலைக்கும் மாணாக்கர்களையே முழுவதுமாகப் பொறுப்பாக்க முடியாது. அரசியல் கட்சியினர், பெற்றோர்கள், பாதுகாப்பாளர்கள், ஆசிரியர்கள், கல்விநிலையங்களின் தலைவர்கள் ஆகிய யாவரும் இதற்குப் பொறுப்பாகின்றனர். அரசியல் கட்சியினர் தங்கள் கட்சி நலன், அரசியல் விளம்பரம், மக்களின் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்புதல் போன்ற சுயநலக்காரணங்களுக்காக மாணாக்கர்களைத் தூண்டிவிட்டுப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பெற்றோர்களும் காப்பாளர்களும் தங்களது பிள்ளைகளின் கல்வி பற்றிய அக்கறையின்றியே நடந்து கொள்கின்றனர். கல்வி நிலையங்களில் அமைதியின்மை ஏற்படும்போது கூட இவர்கள் கவலைப்படுவதில்லை. அமைதியின்மைக்குக் காரணமான போராட்டங்களில் தங்கள் பிள்ளைகள் கலந்துகொள்வதைத் தடுக்க எந்தவித முயற்சியும் இவர்கள் எடுத்துக் கொள்வதில்லை. தியாக உணர்வும் பொது வாழ்வில் நேர்மையும் குன்றிக் காணப்படுகின்றன. சுயநலப்போக்கும் நேர்மையற்ற நடத்தையும் ப்ரவலாக இன்றைய சமுதாயத்தில் காணப்படுகின்றன. இந்நாட்டின் பண்டையப் பண்பாடு, வாழ்க்கை மதிப்புகள், வாழ்க்கை நெறிமுறை, உயர் இலட்சியங்கள் ஆகியவற்றில் இன்றைய இளந்தலைமுறையினர்க்கு மதிப்பும் பற்றும் குறைந்தே காணப்படுகின்றன. இவற்றை அவர்கள் போற்றி மதிப்பதில்லை. இத்தகைய நிலைமைக்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள தலைவர்கள் ஆகிய யாவரும் காரணமாகின்றனர். இந்நிலைமையினை மாற்றியமைக்கும் பொறுப்பு கல்வித் துறையில் ஈடுபாடு கொண்ட யாவரையும் சார்ந்ததாகும்.

மேலும் ஆசிரியர்கள் தங்களது மாணக்கர்களின் கல்வி வளர்ச்சியிலும், ஒழுக்க வளர்ச்சியிலும் போதிய அக்கறையோடு செயற்படுவதில்லை. மாணாக்கர்களது எதிர்கால வாழ்க்கைபற்றிக் கவலைப்படுவதில்லை. சில பொது ஆசிரியர்கள் மாணாக்கர்களைக் கல்விக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடும்படி தூண்டிவிடும் அளவுக்குத் தாழ்ந்து விடுகின்றனர். இதனால் கல்வி நிலையங்களில் அமைதி பாதிக்கப்படுகிறது. கல்வியில் ஆர்வமும் வாழ்க்கையில் உயர் இலட்சியங்களும் இருக்கும்பொழுதுதான் மாணாக்கர்களிடம் கட்டுப்பாடும் அமைதியும் ஏற்படும். இதற்கு ஏற்ற வாய்ப்புகளைக் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தித்தருதல் வேண்டும். இதற்கு முதற்படியாகக் கல்விநிலையங்களின்தரம் உயரவேண்டும்.

பெற்றோர்களும் மாணாக்கர்களும் உயர்கல்வியை விரும்புவதற்குக் காரணம் அதன் மூலமாக உடனடியாக வேலை வாய்ப்

பினைப் பெற்றுப் பொருளீட்ட இயலுமென்றும் சமுதாயத்தில் உயர் நிலையைப் பெற முடியுமென்றும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதுதான். ஆனால் இன்றைய நிலைமையில் இவ்விருப்பங்கள் நிறைவேறும்படியாக இல்லை. நம் நாட்டில் கல்வி பெருகப் பெருக வேலையில்லாமை அதிகரித்த வண்ணம் உள்ளது. வேலையில்லாமையால் அல்லல்படுவோரின் எண்ணிக்கை மேலும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. உண்மையாகவே, கல்வியில் ஆர்வமும் அக்கறையும் குன்றியவர்களாகவே மாணாக்கர்கள் காணப்படுகின்றனர். தற்போதுள்ள ஏட்டுக் கல்விமுறை சலிப்பையும் அலுப்பையும் தருவதாக உள்ளது. இது போன்ற நிலைமையின் விளைவாக இளைஞர்களிடையே வாழ்க்கையைப் பற்றிய ஓர் அச்ச உணர்வும் நிராசையும் ஏற்பட்டுக் குழப்பம் விளைகிறது. இதனால் சமுதாயத்தின் நலனும் முன்னேற்றமும் பாதிக்கப்படுகின்றன. எனவே, கல்வியைத் திட்டமிடும்பொழுதே நாட்டின் தேவைகளுக்கும் ஏற்பக் கல்வியை உருவாக்க வேண்டும். வேலை அனுபவங்கள், ஆக்கச் செயல், சமூகப்பணி போன்றவற்றை வலியுறுத்தல், வேலைச் சார்புள்ளதாகக் கல்வியை மாற்றியமைத்தல் (Vocationalization of Education) மனித பலத்தை நாட்டின் வளர்ச்சிக்கு நன்கு உதவும் வகையில் கல்வியினைத் திட்டமிடல், விஞ்ஞான-தொழில்நுட்பக்கல்வியை வலியுறுத்தல் போன்ற முக்கியக் கவனம் பெறவேண்டும். சமூகம் மற்றும் பொருளாதாரக்குறிக்கோளுக்கு ஏற்பவும் கல்வித்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். நகர்ப்புறங்களிலும்கிராமப்புறங்களிலும்தொழில்நுட்பப் பள்ளிகளையும் விவசாயப்பள்ளிகளையும் தொடங்குவதன் மூலம் கல்வியை முற்றிலும் வேலைச்சார்புள்ளதாக மாற்றி அமைக்கலாம். இதனால் கல்வி கற்கும்போதே மாணாக்கர்கள் பொருளீட்டவும் இயலுமாதலால் அவர்களுக்குத் தன்னம்பிக்கை உணர்வும் உழைப்பின் உயர்வைப் பற்றிய நல்லெண்ணமும் ஏற்படும்.

அமைதியின்மைப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகாண்பதோடு கல்விக் குறிக்கோளாக மாணாக்கர்களிடம் விரும்பத்தக்க சமூக நடத்தைகளை ஏற்படுத்த வேண்டும். மேலும் சமூக அறநெறி ஆன்மிக மதிப்புகளின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும். இதற்கு ஒரு குறிப்பிட்ட குழுவினர் பொறுப்பேற்பது பொருத்தமன்று. ஆசிரியர்களோ, மாணவர்களோ, மாநில அரசோ, அரசியல் கட்சிகளோ, பொறுப்பேற்றால் போதாது. சமுதாயத்திலுள்ள ஒவ்வோர் அமைப்பும் இப்பொறுப்பில் பங்கேற்க வேண்டும்,

கல்லூரிகளில் மாணாக்கர்களது உடல் நலம் பேண வசதிகள், கல்லூரிகளிடையேயும் பல்கலைக் கழகங்களிடையேயும் தொடர்புக்கான நிகழ்ச்சிகள், ஆசிரியர்-மாணவர் தொடர்பு, சமூகப்பணி, தேசிய மாணவர்படை, உடலுழைப்பு முகாம்கள், மாணாக்கர்களின் நலனுக்கெனப் பல்கலைக் கழகத்திலும் கல்லூரிகளிலும் மாணவர் நலத்துறைத் தலைவர்கள் (Deans of Student Welfare) நியமிக்கப்படுதல் போன்றன கொத்தாரிக் கல்விக் குழுவினால் வலியுறுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மானியக்குழு மாணாக்கர்களது பிரச்சினைகளைச் சமாளிக்க நான்கு அம்சத்திட்டம் ஒன்றினை அளித்து உள்ளது.

1. மாணாக்கர்களுக்கு அறிவுரை பகர்தல், வழிகாட்டல், வேலைவாய்ப்புகள் பற்றிய விவரங்களை அளிக்கும் அமைப்புகள் வலுப்படுத்தப் படவேண்டும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் மாணவர் நலத்துறைத் தலைவர்களை (Deans of Student Welfare) நியமிக்கவேண்டும்.
2. மாணாக்கர்கள் படிப்பதற்கான வசதிகள், நூல்நிலைய வசதிகள், இருக்கை வசதிகள் முதலியவற்றைப் பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
3. மாணவரில்லம், மருத்துவசதி, ஓய்வுநேரப் பொழுதுபோக்கு வசதிகள் முதலியவற்றை அதிகப்படுத்துவதோடு ஏழை மாணாக்கர்களுக்குப் படிப்புதவியும் அளிக்க வேண்டும்.
4. ஆசிரியர்—மாணவர் தொடர்பு சீராக்கப்படுவதோடு பல்கலைக் கழகத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்துவதில் மாணாக்கர்கள் முக்கியப் பங்கு கொள்ள வேண்டும்.

கல்விச்செயல்களை நன்முறையில் செயற்படுத்துவதில் ஆசிரியர்கள் முக்கியப் பொறுப்பேற்கின்றனர். கல்வி நிர்வாகிகளும் அரசும் ஆசிரியர்களின் பணி நிலைமைகளிலும், வாழ்க்கை நிலைமைகளிலும் முன்னேற்றம் ஏற்பட ஆவன செய்ய வேண்டும்.

மாணவர் சமுதாயத்தில் காணப்படும் அமைதியின்மை பற்றியும், அப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வுகாணல் வேண்டும் என்பது பற்றியும் முன்னாள் பாரதக் குடியரசுத் தலைவரும், தத்துவ மேதையுமான டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களின் பின்வரும் கருத்துக்கள் நமது கவனத்திற்குரியவையாகும்,

"The present day India is passing through a period which is beset with **Value crisis.** This crisis has pervaded all the spheres of value-realization, but it is felt much more deeply in the field of **Education**. It is mirrored in the students community in the form of **aimlessness, indiscipline, unrest, strikes, violence, disobedience** of authority etc. What is needed is to make a philosophical analysis of the problem so as to find out its very roots and to attempt to visualise whether reform in Education, Which is the most important and foundational sphere of value-realization, can bring about its disolution".

Further 'a psychological analysis of the pathological cases will bring home to us as to why vice is due to.'

'To acquire Knowledge is the essence of Education'.

சுதந்திரமும் கட்டுப்பாடும்

சுதந்திரம், கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகியவைபற்றி எதிர்ப்பட்ட கருத்துகளைக் கல்வியாளர்கள் கொண்டிருத்தலை நாம் காண்கிறோம்.

பொதுவாகப் பண்டையக் கல்விமுறை எல்லா நாடுகளிலுமே கட்டுப்பாட்டினையும் ஒழுங்கினையும் முழுமையாக வலியுறுத்துவதாக அமைந்து காணப்பட்டது. ஆனால் இந்நூற்றாண்டில் 'சுதந்திரத்தின் வழியே கல்வி' என்னும் கருத்து அதிகமாக வலியுறுத்தப்படுவதனை நாம் காண்கிறோம். குழந்தைகளுக்குப் பயிற்சியளிப்பதைக் காட்டிலும், சுதந்திரமாக அவர்கள் செயற்பட வாய்ப்பளிப்பதே சிறந்த கல்வி முறை என்னும் கருத்தினை மாண்டிசோரி அம்மையார், ஜான்டூயி, காந்தியடிகள் போன்றோர் வலியுறுத்துகின்றனர். இக்கொள்கையின் அடிப்படையில் பல புதிய கற்பித்தல் முறைகள் இன்று எழுந்துள்ளன.

வாழ்க்கை நன்முறையில் அமைவதற்கு ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவை தேவைப்படுவதாகும். இது போன்றே பள்ளி போன்ற ஒரு சமூக நிலையம் நன்கு செயற்படவும் ஒழுங்கு அடிப்படையாகும். பள்ளியின் ஒழுங்கும் கட்டுப்பாடும் குறைவுபடின் அமைதியின்மை, குழப்பம், காலமும் சக்தியும் பயனின்றி வீணாதல் போன்றவை எழும்.

ஒழுங்கு எனப்படுவதில் சில நியதிகளுக்கும் கட்டுப்பாடு களுக்கும் உட்பட்டு நடத்தல் என்பது அடங்கியுள்ளது. பள்ளி ஒழுங்கு இரு நோக்கங்கள் கொண்டதாகும்.

1. கற்றலுக்கேற்ற சூழ்நிலையைத் தோற்றுவிப்பது.

2. ஒழுங்குநிலையையே ஒரு சிறந்த கல்விச் செயலாக அமைத்து மாணாக்கரிடையே பயனுள்ள மனப்பான்மைகள், பழக்கங்கள் ஆகியவற்றைத் தோற்றுவிப்பது.

ஒழுங்கின் விளைவாக மாணாக்கரது நடத்தையின் தரம் உயர்கிறது. உயர்ந்த நடத்தை பயிற்சியின் விளைவாகப் பழக்கமாகி நிலைபெறுகிறது. ஒரு பள்ளியில் உண்மை ஒழுங்குநிலை காணப்படுமானால் அப் பள்ளி மாணாக்கன் ஒவ்வொருவனும் பள்ளிச் செயல்கள் யாவற்றிலும் தயங்காது, முழுத்திறனுடன் பங்குகொண்டு, பிறருடன் ஒத்துழைத்து, எவராகிலும் முறை தவறி நடந்தால் அதனைத் தானே கண்டித்துத் தனது செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபட்டு நடந்துகொள்வான். பள்ளிச் சூழ்நிலையில் அன்பும் பரிவும் பரவிக் காணப்படும்.

ஒழுங்கு என்பது முறைப்பட்ட நடத்தை எனப்படும் கருத்தைக்காட்டிலும் விரிவான கருத்தாகும். முறைப்பட்ட நடத்தை, ஒழுங்கினைத் தோற்றுவிக்கும் ஒரு கருவியாகும். பள்ளிக் கல்வியின் எல்லாக் கூறுகளின் செல்வாக்கினின்றும் மாணாக்கனிடம் இறுதியில் எழும் விளைவே உண்மை ஒழுங்காகும். உண்மை ஒழுங்கு எனப்படுவது, மாணாக்கரது வெளிப்படை நடத்தையை மட்டும் சார்ந்து அமைவதன்று. அந் நடத்தையின் பின் அமைந்துள்ள மனநிலையையும் சார்ந்து அமைவதாகும். எடுத்த எந்தச் செயலையும் மகிழ்ச்சியுடன் செய்தல் உண்மை ஒழுங்கின் பண்பாகும்.

ஒழுங்கினை நிலைநாட்ட மேற்கொள்ளப்படும் வகுப்பு நிருவாகம் நசுக்குதல் (Repression), பதிவு (Impression), விடுபடல் (Emancipation) ஆகிய மூன்று நிலைகளில் காணப்படக்கூடும் என்று கல்வியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

எல்லாக் காலங்களிலும் முழு அமைதி வகுப்பில் காணப்பட வேண்டுமென்றும், அத்தகைய நிலையினை உடலை வருத்தும் தண்டனைகளின் வழியே தோற்றுவிக்க வேண்டும் என்றும் முற்காலப் பள்ளிகளில் பரவலாகக் காணப்பட்ட நசுக்குதல் முறையினை ஆதரித்தோர் கருதினர்.

பதிவுமுறை நசுக்குதல் முறைக்கு நேர் எதிரானதாகும். தண்டனைகளுக்குப் பதில் ஆசிரியரது செல்வாக்கு ஒழுங்கை உருவாக்கும் கருவியாக இம்முறையில் அமைந்துள்ளது. ஆசிரியரது சிறந்த முன்மாதிரியான நடத்தை, கருத்தேற்றத்தின் துணைகொண்டு நடத்தையை மாணாக்கரது உள்ளத்தில் ஆழப்பதிய வைத்தல், ஆக்கமூட்டும் பள்ளிச் சூழ்நிலையின் செல்வாக்கு ஆகியவை மாணாக்கரிடம் ஒழுங்கை நிலைநாட்ட உதவும் என்பது இம் முறையின் கருத்து ஆகும். அன்பு, மதிப்பு ஆகியவையே ஆசிரியர்-மாணாக்கரது உறவில் காணப்பட வேண்டும் என்றும், இக் கருத்தினை வலியுறுத்துவோர் சுட்டிக் காட்டுகின்றனர். இம் முறையிலும், மாணாக்கரைக்காட்டிலும் ஆசிரியர் உயர்நிலையில் இருந்துகொண்டுதான் செயற்படுகிறார். ஒழுங்குபற்றிய தமது கருத்துகளை அவர் மாணாக்கர் மீது சுமத்துகிறார்; ஆனால் அவர்களை அச்சுறுத்துவதன் மூலம் அன்று; அவர்களது பணிவூக்கத்தைப் பயன்படுத்திச் செயற்படுகிறார்.

விடுபடல்முறை எனப்படுவதில் குழந்தைக்கு முழுச்சுதந்திரம் அளிக்கப்படவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. குழந்தை தனது இயல்பான நடத்தையில் எத்தகைய குறுக்கிடுதலும் இன்றி ஈடுபட அனுமதிக்கப்படவேண்டும். குழந்தையின் இயற்கையான நடத்தையில் ஆசிரியர் குறுக்கிடாமல் இருத்தல் மட்டுமே போதாது. அதனை நெறிப்படுத்தவோ, திசைப் படுத்தவோ முற்படுவதும் தவறு. ஆசிரியர் முழுமையாகப் பின்னணிக்குச் சென்றுவிடுதல் அவசியமாகும்.

உண்மை ஒழுங்கினைப் பள்ளிகளில் நிலைநாட்டுதலில் நசுக்குதல் முறை பயனற்றதாகவே நடைமுறையில் காணப்படுகிறது. சிலபோது வகுப்பறையில் சிறிதளவு தண்டனைக்கு இடமுண்டு என்பதை ஒப்புக்கொண்டாலும், தொடர்ச்சியாகத் தண்டனை முறையைக் கையாளுவது முழுவதும் தீமை பயப்பதாகும் என்பதனைக் கல்வியாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். மேலும், குடியாட்சிப் பண்புக்கு நசுக்குதல், தண்டித்தல் போன்றன எதிரானவையாகும்.

முழுச் சுதந்திரத்தை ஆதாரமாகக்கொண்டு அமையும் விடுபடல் முறை பொதுவாக வகுப்பில் முறைப்பட்ட ஒழுங்கினைத் தோற்றுவிப்பதில்லை. ஆனால், முறைப்பட்ட நடத்தை முக்கியமன்று என்றும், சுதந்திரத்தின் வழியே மாணாக்கர் பெறக்கூடிய

பண்புகளான அச்சமின்றிச் சிந்திக்கும் திறன், செயற்படும் ஆற்றல் ஆகியனவே முக்கியமானவை என்றும் விடுபடல் முறையை ஆதரிப்போர் கூறக்கூடும். பள்ளியில் கட்டுப்பாடுகள் எவையு மில்லாமல், முழுச் சுதந்திரத்தினை மாணாக்கர்களுக்கு அளிப்பது குடியாட்சிச் சமுதாயத்தின் எதிர்கால நலனுக்கு ஏற்றதாகத் தோன்றவில்லை. பிறரது உரிமைகள், நலன்கள் ஆகியவற்றில் குறுக்கிடும் நிலையில் ஒருவனது சுதந்திரம் சிறிதளவு கட்டுப் படுத்தப்படத்தான் வேண்டும் என்பது குடியாட்சியின் தத்து வங்களுள் ஒன்றாகும். மேலும், தங்களது நடத்தைக்குப் பெரிய வர்கள் வழிகாட்டுவதை மாணவர்கள் பெரும்பாலும் வரவேற்கவே செய்கிறார்கள் என்னும் கூற்றில் உண்மை உண்டு என்பதனை நாம் மறுப்பதற்கில்லை.

பதிவு முறையில் ஓரளவு உண்மை உண்டு. தலைசிறந்த பண்பாளர்களின் செல்வாக்கின் விளைவாக அறப் பண்புகள், அறப் பற்றுகள், நன்மனப்பான்மைகள் ஆகியவற்றை நாம் பெறுகிறோம் என்பதை மறுக்கமுடியாது. ஆனால், தாங்கள் தாம் குழந்தைகளை உருவாக்கும் சிற்பிகள் என்று ஆசிரியர் செருக் குடன் நடக்க இம்முறை சிலபோது வழிவகுக்கும் எனப்படுகிறது. மாணவரது சுயத்திறனை வளரவொட்டாமல் முழுமையாகக் கட்டுப்படுத்தி அவர்களை ஆசிரியரது சிறுபதிப்புகளாகவும் இம் முறை செய்துவருகிறது என்றும் கூறப்படுகிறது. மேலும், ஆசிரியர்கள் எல்லோருமே பண்பாட்டில் சிறந்தவர்கள் என்று நிச்சயமாகக் கொள்ளமுடியாது. அவர்களது செல்வாக்கின் விளைவு மாணவர்க்கு நலனளிப்பதாகத்தான் எப்போதும் இருக்கு மென்றும் கூறமுடியாது. ஆசிரியர்களிடம் மாணாக்கர் கொண்டுள்ள மதிப்பினால்தான் அவர்களைப் பின்பற்றுகின்றனர் என்பதன்று. சமூகச்சக்தியின் பிரதிநிதிகளாக ஆசிரியர்கள் பள்ளிகளில் விளங்கு வதால்தான் அவர்களை மாணவர்கள் பின்பற்றுகின்றனர் என்னும் கூற்றிலும் பெருமளவு உண்மை உண்டு என்பதனை நாம் மறுப்பதற்கில்லை.

மேற்சொன்ன மூன்று முறைகளையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது பதிவுமுறை, விடுபடல் முறை ஆகிய இரண்டினுள் ஒன்று அல்லது இவை இரண்டும் இணைந்த ஒரு முறை ஒழுங்கிற்கான சிறந்த முறையாக அமையக்கூடும் என்பது தெளிவாகிறது. ஆசிரியரின் தனிப்பட்ட செல்வாக்கும் முக்கியமானதாகும். ஆசிரியரது வழிகாட்டலின்றிக் கல்வியுமில்லை, ஒழுங்குமில்லை எனலாம். ஒழுங்குப் பயிற்சியின் தொடக்கக் கட்டத்தில் ஆசிரி

யரது அறிவுறுத்தலுக்கு மாணவர் செவிசாய்ப்பது என்ற நிலை காணப்பட்டாலும், சிறிது சிறிதாக ஆசிரியருடன் இணைந்து மாணாக்கரும் தாமாகவே சிறந்த வாழ்க்கைக் குறிக்கோளின் இன்றியமையாமையை உணர்ந்து, அவற்றின்படி தாமாகவே நடந்துகொள்ளும் நிலை எழுமாறு செய்வதே உண்மை ஒழுங்குப் பயிற்சியாகும். தானாகவே இத்தகைய நடத்தைமுறையின் பயனை உணர்ந்து, மாணவன் செயற்படும்போது சுதந்திரம், கட்டுப்பாடு ஆகிய இரண்டும் அவனது நடத்தையில் இணைந்து காணப்படும். தனது கீழ்த்தரமான, சுயநலத் தொடர்புடைய உணர்ச்சிகளைப் பின்பற்றும் சுதந்திரத்தைப் புறக்கணிப்பதன் வழியேதான் உயர்நிலைப்பட்ட உண்மைச் சுதந்திர நிலையை ஒருவன் அடையமுடியும். சுயக்கட்டுப்பாட்டின் வழியே எழும் ஒழுங்கான நடத்தையே உண்மை ஒழுங்காகும். இதற்கான பயிற்சியை அளிப்பது ஆசிரியர்களது பணியாகும்.

வினாக்கள்

1. மாணாக்கரிடையே பெருகிவரும் அமைதியின்மைக்கு ஆசிரியர்கள் காரணமாவர் எனக் கூறப்படுகிறது. இதற்கு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் எந்த அளவுக்குப் பொறுப்பாவர்?
2. ஆசிரியர்-மாணாக்கர் தொடர்பினைச் சீர்குலைக்கும் எம் மூன்று பண்புகள் இன்று சில ஆசிரியர்களிடம் உள்ளன?
3. மாணாக்கரின் கட்டுப்பாடின்மையைத் தவிர்க்க ஆசிரியர்-மாணாக்கர் உறவைப் பள்ளிகளில் எவ்வகையில் முன்னேறச் செய்வீர்?
4. உண்மை ஒழங்குநிலை எனப்படுவதில் சுதந்திரம், கட்டுப்பாடு ஆகியவற்றின் பங்கு யாது? மாணாக்க ரிடையே உண்மை ஒழுங்குநிலையை எவ்வாறு பள்ளிகள் தோற்றுவிக்க இயலும்?
5. ஆசிரியர், மாணாக்கர் ஆகியோரிடையே காணப்படும் தொடர்பு எத்தகையதாக அமைந்திருக்க வேண்டும்?
6. ஆசிரியர்-மாணாக்கர் தொடர்பு ஏன் முக்கியமாகக் கருதப்படுகிறது?

8. பெண்கள் கல்வி மற்றும் இருபால் கூட்டுக் கல்வி

பெண்கள் கல்வி இன்றி ஒரு நாட்டு மக்களைக் கல்வியில் முன்னேற்றம் அடைந்துள்ளோரெனக் கருத இயலாது. 'ஓர் ஆணுக்குக் கல்வி அளிப்பது குடும்பத்தில் ஒருவருக்குக் கல்வி அளிப்பதாகும். ஆனால் ஒரு பெண்ணுக்குக் கல்வி அளிப்பது அக் குடும்பத்திற்கே கல்வி அளிப்பது போலாகும்,' என்று பண்டித ஜவஹர்லால் நேரு கூறுகிறார். குடும்ப வாழ்க்கையை நலமுறச் செய்யவும், குழந்தைகளது ஒழுக்க வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் நல்லதோர் அடித்தளத்தை அமைக்கவும், எழுத்தறிவின்மையைப் போக்கவும் குடும்பநலத் திட்டம் போன்ற சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் வெற்றியடையவும் பெண்கள் கல்வி மிகவும் முக்கியமானதாகும்.

பண்டைய இந்தியாவில் பல்வேறு துறைகளில் பெண்கள் சிறந்து விளங்கினர். வேதகாலத் தொடக்கத்தில் பெண்களுக்கும் கல்விபெறச் சமவாய்ப்புகள் அளிக்கப்பட்டன. கற்றறிந்த பெண்கள் ஆண்களுக்குச் சமமாகச் சிறந்த வல்லுநர்களாகவும் திகழ்ந்தனர். ஆனால் காலப்போக்கில், பிராம்மணக் கல்வி யாளர்கள் பெண்கள் ஆண்களுக்குத் தாழ்ந்தவர்களெனக் கருதத் தொடங்கினர். இதனால் பெண்களது சமூக மதிப்புநிலை குறையத் தொடங்கியது. பெண்கல்வி புறக்கணிக்கப்பட்டது. பௌத்தக் கல்வியில் தொடக்கத்தில் பிக்குணிகளாகப் பணிபுரிய விரும்பும் பெண்களுக்குத் தனிப்பட்ட விகாரப் பள்ளிகள் நிறுவப் பட்டன. சில பெண்கள் சிறந்த பௌத்தத் தத்துவ வல்லு நர்களாகவும் திகழ்ந்தனர். அசோகச் சக்கரவர்த்தியின் மகளான சங்கமித்திரை போன்ற பெண்கள் பௌத்த சமயத்தின் கோட்பாடுகளில் நன்கு கற்றுத் தேர்ந்து கடல் கடந்து சமயப் பிரசாரத்திற்குச் சென்றனர் என்பதனை நாம் அறிவோம். ஆனால் காலப்போக்கில் பௌத்தர்களும் பெண்கள் ஆண்களுக் குத் தாழ்ந்தவர்களெனக் கருதத் தொடங்கினர்.

பெண்களது சமூக மதிப்புநிலை குறையக்குறைய பௌத்தக் கல்வி முறையிலும் பெண்கல்வி புறக்கணிக்கப்படலாயிற்று.

பெண்களது கல்வியில் பௌத்த சமயம் குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொள்ளவில்லை எனலாம். பண்டையத் தமிழர் கல்வி முறையில் பால்வேறுபாடு எதுவுமின்றிக் கல்வி பெறவும், அறிவுத்திறனைக் காட்டவும் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்குத் தமிழ் இலக்கிய-இலக்கண வளர்ச்சி, கணிதம், அறிவியல், மருத்துவம், வானவியல் போன்ற பல்வேறு கலைகளின் வளர்ச்சி ஆகியவற்றில் சமவாய்ப்பளிக்கப்பட்டது. பெண் கல்வியைப் பொறுத்தவரை பண்டைத் தமிழகத்தில் அவர்களுக்குச் சிறந்த வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. அக்காலத்தில் சிறந்து விளங்கிய புலவர்களுள் பல பெண் புலவர்களும் இருந்தனர். பல்வேறு நுண்கலைகளிலும் பெண்கள் பயிற்சி பெற்றுச் சிறந்து விளங்கினர். ஆனால் பிற்காலத்தில் சமுதாயத்தில் பெண்களது நிலை குறைந்ததன் விளைவாகப் பெண்கல்விக்கான வாய்ப்புகள் பெருமளவு இல்லாமற் போயின. முகலாயரின் ஆட்சிக் காலத்தில் பெண்கல்வி புறக்கணிக்கப்பட்டது. பெண்கல்வியை முழுமையாகப் புறக்கணித்தது இஸ்லாமியக் கல்வியின் ஒரு முக்கிய குறைபாடு எனக் கருதப்படுகிறது. ஆங்கிலேயக் கம்பெனியார் பெண்கல்விபற்றி அக்கறை கொள்ளவில்லை. ஆங்கில ஆட்சிக் காலத்தில் பெண்கல்வி பெருமளவு புறக்கணிக்கப்பட்டுக் காணப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெண்கல்விக்கு எவ்வித வசதிகளும் செய்துதரப்படவில்லை. 1854ஆம் ஆண்டில் உட் அறிக்கை பெண்கல்விக்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென வலியுறுத்தியது. ஆனால் அன்றைய அரசினர் இதில் அக்கறை காட்டவில்லை. சென்னை, கல்கத்தா, பம்பாய்ப் பல்கலைக் கழகங்கள் முறையே 1876, 1877, 1883 வரை நுழைவுத் தேர்வு எழுதப் பெண்களை அனுமதிக்கவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதிலும் பெண் கல்வி முன்னேற்றமடையவில்லை என்றே கூறலாம். 19ஆம் நூற்றாண்டில் பெண் கல்விக்கான சமூகவியக்கம் எழுந்தது. இவ் வியக்கம் இராஜாராம் மோகன்ராய், பிரம்மசமாஜம், ஆரியசமாஜம், இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்கம், கிறிஸ்தவப் பாதிரிமாரது பணி, பண்டித ஈசுவர சந்திர வித்தியாசாகரது பணி போன்றவற்றினால் மேலும் மேலும் தீவிரமடைந்தது. எனினும் பெண் கல்வியில் மெதுவான முன்னேற்றமே காணப்பட்டது. ஏழைமை, பழைமைப்பற்று, பெண்கள் குடும்பத்துக்காக வேலை செய்யவேண்டிய நிலை போன்றன இதற்குக் காரணங்களாகும். 1901ஆம் ஆண்டில் பெண்களில் எழுத்தறிவு பெற்றவர்கள் 0.8 விழுக்காடாக இருந்தனர்.

இந்திய சுதந்திரத்திற்குப்பின் (*1947*) நம் தேசியத் தலைவர்கள் பெண் கல்வியின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தினர். இதன் விளைவாக ஐந்தாண்டுத் திட்டங்களில் இதற்கெனத் துணைத் திட்டங்கள் தீட்டப்பட்டு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. அதனால் பெண் கல்வி பன்மடங்கு வளர்ந்துள்ளது. இன்று நம் குடியரசில் பெண்களுக்கும் ஆண்களைப் போன்ற கல்வி வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக்குழுவின் (1948—49) பரிந்துரைகள்

1. ஆண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள எல்லாக் கல்வி வசதிகளையும் பெண்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
2. பெண்களுக்கான கல்வி வாய்ப்புகள் குறைக்கப்படக் கூடாது. அவை மேலும் அதிகரிக்கப்படவேண்டும்.
3. பெண்களுக்குக் கல்வியில் வழிகாட்டல் (Educational-guidance), வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் வழிகாட்டுதல் (Personal guidance) ஆகியவை அளிக்கப்படவேண்டும்.
4. இருபாலாருக்கும் உரிய கல்வி பல ஒத்த பண்புகளையுடையதாக இருத்தல் வேண்டுமென்ற போதிலும் பெண் கல்விக்கெனச் சில மாற்றங்கள் இருக்க வேண்டியது அவசியமாகும்.
5. பெண்கள் சமூகத்தில் தங்களுக்குரிய பணியை ஏற்றுச் செயற்படுவதற்குரிய கல்வியை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.
6. குடும்பப் பொருளாதாரம், குடும்பநிருவாகம் ஆகிய பாடங்களையும் பெண்கள் பயிலுவதற்கான அறிவுரை பகருதல் வேண்டும்.
7. கல்லூரிகளில் கூட்டுக்கல்வி செயற்படும்பொழுது பெண்களிடத்தில் மரியாதையுடனும் சமூகப் பொறுப்புடனும் மாணவர்கள் நடந்து கொள்வது வலியுறுத்தப்பட வேண்டும்.
8. சமமான வேலைக்கு ஆண் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் போன்றே பெண் ஆசிரியர்களுக்கும் ஊதியம் அளிக்கப்படவேண்டும்.

டாக்டர் ஏ.எல்.முதலியார் கல்விக்குழுவின் (1952—53) பரிந்துரைகள்

1. ஆண்களது கல்விக்குச் செய்துதரப்பட்டுள்ள பல வகைப் பட்ட கல்வி வசதிகள் பெண்களது கல்விக்கும் அளிக்கப் படவேண்டும்.
2. பெண்களது கல்வி குடும்பம், சமுதாயம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருத்தல் அவசியம்.
3. குடும்பம், சமுதாயம் ஆகிய இரண்டிற்கும் பெண்கள் ஆற்றவேண்டிய பணியினை நிறைவுறச் செய்யும் வகையில் அவர்களது கல்வி அமையவேண்டும்.
4. மனையியல் (Home science) பாடம் அதிக அளவில் பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கப் படுதல் வேண்டும்.
5. பெண்கள் சேர்ந்து பயிலும் ஆண்களது பள்ளிகளில் தேவையுள்ள இடங்களில் பெண்களுக்கென மனையியல் பாடம் கற்பிக்கப்படவேண்டும்.
6. தேவையுள்ள இடங்களில் பெண்களுக்கான பள்ளிகள் திறக்கப்படவேண்டும்.
7. இருபால் பள்ளிகளில் பெண்களுக்குப் போதிய வசதிகள் செய்து தரப்படவேண்டும்.
8. பெண் ஆசிரியர்கள் நியமித்தல் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
9. சிறந்த தாய்மார்களாக விளங்கி வருங்கால நற்குடி மக்களை உருவாக்கும் பொறுப்பினைச் சீரிய முறையில் செயலாற்றத் தேவைப்படும் பயிற்சியினைப் பெண் களுக்குக் கல்வி நிலையங்கள் அளிக்கவேண்டும்.
10. நாட்டின் சமூகத்தரம் உயரவும், குடும்பத்தின் நல்வாழ்வு பெருகவும் பெண்களது கல்விக்கான வாய்ப்புகள் மேலும் மேலும் அதிகரிக்கப்படவேண்டும்.

ஹன்சா மேத்தா குழுவின் (1962) பரிந்துரைகள்

பெண் கல்விக்கான தேசியக் கல்வி மன்றம் (National Council for Women's Education) ஆண் பெண் ஆகிய இருபால் இனத் தவருக்கான கல்வி ஏற்பாடுகளை வேற்றுமைப்படுத்துதல் பற்றி ஆராய்வதற்காக 1962 ஆம் ஆண்டில் திருமதி ஹன்சா மேத்தா அவர்கள் தலைமையில் ஒரு குழுவினை நியமித்தது. கல்வியின் எல்லா நிலைகளிலும் இருபால் இனத்தவருக்கான கல்வி ஏற்பாடு

களை வேற்றுமைப்படுத்துதல் (Differenciation of curricula for boys and girls at all stages of education) பற்றி இக்குழு ஆராய்ந்து பின்வரும் பரிந்துரைகளைச் செய்தது:

1. தனியாள் வேற்றுமைகள், ஆற்றல்கள், நாட்டங்கள், கவர்ச்சிகள் ஆகியவற்றிற்கு ஏற்பக் கல்வி அமைய வேண்டியிருப்பதால் பாலின அடிப்படையில் கல்வி ஏற்பாடுகளை ஆண்களுக்கெனத் தனிக் கல்வி ஏற்பாடு, பெண்களுக்கெனத் தனிக் கல்வி ஏற்பாடு என்று வேற்று மைப்படுத்துதல் தேவையில்லை.
2. தொடக்கப் பள்ளிகளில் பெண் ஆசிரியர்கள் நியமனம் அதிகரிக்கப்படவேண்டும்.
3. 6—14 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கப்படவேண்டும் என்பது நமது தேசிய இலக்காக அமைந்துள்ளதால் இவ்வயதின ருக்குக் குறைந்தபட்சப் பொதுக் கல்வி அளிப்பது அவசியமாகும். இக் குறைந்தபட்சப் பொதுக் கல்விக் கான கல்வி ஏற்பாடு ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவானதாக இருத்தல்வேண்டும். இப் பொதுவான கல்வி ஏற்பாட்டில் மனையியல் பாடம் மையப் பாடங் களில் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
4. நடுநிலைப் பள்ளிகளில் கைப்பணிக் கல்விக்கு உரிய இடம் அளிக்கப்படவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கைப் பணிகள் கற்பிக்கப்படலாம்.
5. நடுநிலைப் பள்ளிகளில் இருபால் ஆசிரியர்கள் பணியாற் றுவது விரும்பத்தக்கதாகும். ஆண்கள் நடுநிலைப்பள்ளி களில் பெண்கள் சேர்ந்து பயிலுமிடங்களில் பெண் ஆசிரி யர்களும் கட்டாயம் நியமிக்கப்படவேண்டும்.
6. உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் பொதுக் கல்விக்கான பாடங்கள் (General courses), விருப்பப் பாடங்கள், பல் துறைப் பாடங்கள் (Diversified courses), வேலைச்சார் புள்ள பாடங்கள் போன்றன இடம் பெறவேண்டும். பெண் களது தேவைக்கு ஏற்ற பல்துறைப் பாடங்களும் கல்வி ஏற்பாட்டில் இடம் பெறவேண்டும்.
7. நடுநிலைப் பள்ளிக் கல்விநிலை, உயர்நிலைப் பள்ளிக் கல்விநிலை ஆகியவற்றில் பயில்வோருக்குப் பாலினக் கல்வி அளிக்கப்படவேண்டும். பயிற்சி பெற்ற ஆசிரியர் களால் இக் கல்வி அளிக்கப்பட வேண்டும். பயிற்சி

பெற்ற ஆசிரியர்கள் இல்லையெனில் பாலினக் கல்வி அளிக்காமல் இருப்பது நல்லது.

பக்தவத்சலம் கல்விக் குழுவின் (1963) பரிந்துரைகள்.

பெண்களது கல்விக்கான தேசியக் கல்வி மன்றம் (National Council for Women's Education) 1963ஆம் ஆண்டில் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் பெண் கல்விக்கான ஒரு குழுவினை நியமித்தது. இக் குழுவின் பரிந்துரைகள் பின் வருமாறு:

1. அரசு அலுவலர்கள், தனியார் நிறுவனத்தினர், பொது மக்கள் ஆகியோரது முழு ஒத்துழைப்புடன் பெண்கல்வி வளர்ச்சிக்கு எல்லா முயற்சிகளும் உடனடியாக மேற் கொள்ளப்படவேண்டும்.
2. 1976-க்குள் 6 முதல் 11 வயதுள்ள எல்லாப் பெண்குழந்தை களையும், 1981-க்குள் 11 முதல் 14 வயதுள்ள பெண் களையும் பள்ளிகளில் சேர்க்கவேண்டும்.
3. தனியார் பள்ளிகளை நிறுவுதல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு உடலுழைப்பு நல்குதல், கூட்டுக் கல்வியைத் தொடக்கக் கல்வி நிலையில் பரப்புதல், திருமணமான பெண்களைப் பகுதிநேர ஆசிரியர்களாகப் பணியாற்ற ஏற்றுக்கொள்ளல், படித்த பெண்கள்ஆசிரியப் பணியினை மேற்கொள்வதனை மதிக்கும் மனப்பான்மையை வளர்த் தல், கிராமப்பகுதிகளில் ஆசிரியர்களுக்கான குடியிருப்பு வசதிகள் செய்து கொடுத்தல் போன்றவற்றில் பொதுமக் களது நேரடி ஒத்துழைப்பினைப் பெறவேண்டும்.
4. பெண் கல்விக்காகத் தாமாக முன்வந்து பாடுபடும் சமூகசேவை மன்றங்களுக்கு மாணவியர் இல்லங்கள், ஆய்வகங்கள், நூலகங்கள் போன்றவற்றை ஏற்படுத்தித் துணைபுரிய வேண்டும்.
5. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள், கருத்தரங்குகள், வானொலிப் பேச்சுகள், காட்சிக் கேள்வித் துணைக் கருவிகள், செய்தி அறிவிப்புப் பிரசுரங்கள் போன்ற வற்றின் மூலம் பெண் கல்விக்கான நல்லெண்ணத்தைப் பொதுமக்களிடையே தோற்றுவிப்பதில் அரசு முக்கியப் பங்கு கொள்ள வேண்டும்.

6. கூடுமான வரையில், பெண் ஆசிரியர்கள் அவர்களது சொந்தக் கிராமங்கள் அல்லது பக்கத்துக் கிராமங்களில் பணியாற்றும் வண்ணம் நியமனம் செய்யப்படவேண்டும்.
7. பெண் ஆசிரியர்களுக்கு இலவச வீட்டுவசதி, சிறப்பு ஊதியம், போக்குவரத்து வசதிகள் போன்றவை அளிக்கப்பட வேண்டும்.
8. கிராமங்கள், பிற்பட்ட பகுதிகள், மலைப் பகுதிகள் ஆகியவற்றிலிருந்து கல்வி பயில வரும் பெண்களுக்குப் படிப்பு வசதிகளும் படிப்புதவித் தொகையும் அளிக்கப்பட வேண்டும்.
9. சமூக, பொருளாதாரக் காரணங்களால் பகல் நேரக் கல்வி கற்க முடியாமல் கல்வியை இடையிலேயே விட்டுச் சென்ற பெண்களுக்குப் பகுதி நேரத் தொடர்கல்வி வகுப்புகளை நடத்தலாம்.
10. கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் பெண்கள் கல்வி வளர்ச்சிக்காகக் கூட்டுக்கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும்.
11. சமூக முதியோர் கல்வித் திட்டத்தில் பெண்கள் எழுத்தறிவிற்கான கல்வி வகுப்புகள் அதிகரிக்கப்படவேண்டும். முக்கியமாக, கிராமப் பகுதிகளில் பெண்கள் எழுத்தறிவிற்கான கல்வியினைப் பரப்புவதில் கல்வித் துறையும் அரசும் பெரும் பொறுப்பினை ஏற்க வேண்டும்.
12. பெண்களுக்காகத் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களை ஏற்படுத்த வேண்டும்.

டாக்டர் கொத்தாரி கல்விக் குழுவின் (1964—66) பரிந்துரைகள்

1. பெண்கள் கல்வி முக்கியமான ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதப்பட்டுத் தீர்க்கப்படுவது உடனடித் தேவையாகும்.
2. பெண்கள் கல்வி முக்கியமானது. அடுத்த சில ஆண்டுகளில் பல சிறப்பு ஏற்பாடுகளைச் செயற்படுத்தி, ஆண்களது கல்விக்கும் பெண்கள் கல்விக்கும் இடையே இன்று காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைப் பெருமளவு குறைக்க வேண்டும்.
3. இதற்கெனத் தனித் திட்டங்களுக்கு முன்னுரிமையும் நிதியும் ஒதுக்கப்படவேண்டும்.

4. எல்லா நிலைகளிலும் துறைகளிலும் பெண்கல்விக்கு உரிய கவனம் செலுத்தவேண்டும். மைய அரசிலும் மாநில அரசுகளிலும் பெண்கல்வியை மேற்பார்க்கத் தனி நிருவாகப் பிரிவு தேவை.

5. மனையியல் போன்ற சில குறிப்பிட்ட பாடங்கள் மட்டு மன்றிக் கலை, மானிடவியல், அறிவியல், மருத்துவம் முதலிய எல்லாவகைப் பாடங்களையும் பெண்கள் கற்ப தற்கு வாய்ப்புகள் அளிக்கவேண்டும்.

6. பெண்களுக்கான வேலை வாய்ப்புகளைப் பற்றியும் போதிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். பெரும் பாலான பெண்களுக்கு வேலை வாய்ப்பினை ஒட்டிய கல்வி தேவைப்படுகிறது. சமூகப் பணி, ஆசிரியப் பணி, உணவியல், நிருவாக மேற்பார்வை போன்ற பலவற்றில் பணிபுரிவதற்கு ஏற்றவாறு இவர்களை உருவாக்க வேண்டும்.

7. திருமணமான பெண்களுக்குப் பகுதிநேர வேலைவாய்ப்பு களையும், மணமாகாதவர்களுக்கு முழுநேர வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

8. உயர்கல்வி பயிலும் கிராமப்புறத்துப் பெண்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். இவர்களின் எண்ணிக்கை அதி கரிக்கவும், இவர்களின் மிகுதியாகத் தொடர்ந்து கற்கவும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

9. எல்லா நிலைகளிலும் பெண் கல்வியை விரிவுபடுத்து வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் இதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும்.

10. உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கும் படிப்புதவித் தொகை மற்றும் பண உதவி அளிக்கப்படவேண்டும்.

11. இம் மாணவிகளுக்கு வசதிகள் நிறைந்த, ஆனால் சிக்கன மான மாணவியரில்லங்களை ஏற்படுத்தித் தரவேண்டும்.

12. பெண் கல்விக்கான திட்டங்களை உருவாக்குதல் அவற்றைச் செயற்படுத்துதல் ஆகியவற்றில் அரசு அலுவ லர்கள், தனியார் துறை நிறுவனங்கள், சமூக சேவை மன்றங்கள், பொதுமக்கள் ஆகிய எல்லோருடைய ஒத்துழைப்பும் முயற்சியும் அவசியமாகும்.

அடுத்த சில ஆண்டுகளுக்குப் பெண்கள் கல்வி மாபெரும் கல்வித் திட்டமாகக் கருதப்பட்டு, முழுமுயற்சி மேற்கொள்ளப் பட்டு, ஆண்களது கல்விக்கும் பெண்கள் கல்விக்குமிடையே உள்ள சமத்துவமின்மையை விரைவில் நீக்க முனையவேண்டும். இந்தியக் கல்வியின் வளர்ச்சிக்காக, கல்வி விரிவுத் திட்டங்கள் எல்லாவற்றிலும் பெண்கல்விக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். நம் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெண்கள் கல்வி இன்றியமை யாததாகும்.

டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ் குழுவின் (1977) பரிந்துரைகள்

தேசிய வளர்ச்சியில் பெண்களது பணி முக்கியமானதாகும். இந்தியப் பெண்களின் தேவைகளும் பிரச்சினைகளும் பற்பல வாகும். இன்றைய கல்விமுறை எந்த அளவுக்கு இந்தியப் பெண் மணிகளின் கல்வித் தேவைகளை நிறைவு செய்கின்றது? பெண்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் 'பெண்கள் உயர்கல்வியில்' என்னென்ன மாற் றங்கள் செய்யப்படவேண்டும்? இவ்வினாக்களுக்கும் இவற்றோடு இணைந்த பிற வினாக்களுக்கும் விடைகாணும் பொருட்டு, திருமதி டாக்டர் இராஜம்மாள்தேவதாஸ் அவர்கள் தலைமையில் பெண்கள் உயர்கல்விக் குழு (Commission on Higher Education for Women) ஒன்றினை 1977 ஆம் ஆண்டு தொடக்கத்தில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் மால்கம் எஸ். ஆதி சேசையா அவர்கள் நியமித்தார். இக் குழுவில் ஏழு உறுப் பினர்கள் இருந்தனர். இக் குழு 1977ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தனது பணியினைத் தொடங்கியது.

பெண்கள் உயர்கல்வி பற்றிய பிரச்சினைகளைப் பின்வரும் தலைப்புகளின்கீழ் இக் குழு ஆராய்ந்து பரிசீலனை செய்தது:

1. பெண்கள் உயர்கல்வியின் இன்றைய மதிப்புநிலை.
2. பெண்களின் தேவைகளும் பிரச்சினைகளும்.
3. வீடு, சமுதாயம், நாடு ஆகியவற்றில் பெண்களின் பங்கு-பணிகள்.
4. பெண்கள் உயர்கல்வியின் நோக்கங்கள்.
5. உயர்கல்வியில் பெண்களுக்குச் சமநுழைவுரிமை.
6. பெண்கள் உயர்கல்விக்கான கல்வி ஏற்பாடு.
7. பெண்களுக்கெனத் தனிக் கல்லூரிகள் தேவையா?
8. உயர்கல்வியும் பணிபுரியும் பெண்களும்.

9. பெண்கள் உயர்கல்வியும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியும்.
10. உயர்கல்வியில் மனையியல் பாடம்.

இக் குழுவின் பரிந்துரைகள் பின்வருமாறு:

உயர்கல்வி பெறப் பெண்களை ஊக்குவித்தல்

1. பெண்கள் அதிக எண்ணிக்கையில் கல்லூரிகளில் சேர்ந்து பயில உதவும் வகையில் மேல்நிலைப் பள்ளியின் +2 நிலைக்கான பாடங்கள் பயனுள்ளனவாக உருவாக்கப்பட வேண்டும்.
2. மேல்நிலைப் பள்ளிகளில் பெண்கள் தங்கள் தகுதியாற்றல், உள்ளார்ந்த திறன்கள் ஆகியவற்றிற்கு ஏற்பப் பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் பயிலுவதற்கு அறிவுரை பகர்தலும் வழிகாட்டலும் அளிக்கப்பட வேண்டும்.
3. சமுதாயத்தில் பொருளாதார வசதியற்ற, பின்தங்கிய வகுப்பினரைச் சார்ந்த பெண்கள் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயிலுவதனை ஊக்குவித்தல் பொருட்டு, அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் குறைந்த கட்டண வசதிகள் செய்துதரப்படவேண்டும்.
4. தற்போது கல்லூரிகள், கல்லூரி மாணவியரில்லங்கள் ஆகியவற்றில் கட்டணச் செலவுகள் அதிகமாக உள்ளன ஆகவே, மாணவியரில்லங்களில்தனி நபருக்கான மொத்தச் செலவுகள் மாதம் ரூ. 120/-க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். கல்லூரி மாணவியரில்லங்களின் நிருவாகம் பற்றிய தனிப் பயிற்சிக்கான வசதிகள் பல்கலைக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
5. கல்லூரிகளில் பெண்கள் கல்விக்கான மொத்தச் செலவுத் தொகையை ஈடுசெய்யும் வகையில் பெண்களுக்கு உதவிச் சம்பளங்கள், கட்டணச் சலுகைகள் ஆகியன வழங்கப்படவேண்டும்.
6. கிராமப்பகுதிகளிலிருந்து புதிதாகக் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் பெண்களுக்கு அவர்களது ஆங்கில அறிவினை வளர்த்துக் கொள்ளுவதற்கான தனிப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவேண்டும். இப் பயிற்சி வகுப்புகள் முதல் இரண்டு செமஸ்டர்கள் நடத்தப்படலாம்,

7. சமூகப்பணித் திட்டம், தேசியப்பணித் திட்டம் ஆகியவற்றின்கீழ்க் கல்லூரிகளில் சேர விரும்பும் மாணவிகளுக்கு 'நெறிப்படுத்தல்' பயிற்சித் திட்டங்களைச் செயற்படுத்தலாம்.

8. பெண்கள் உயர்கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவைபற்றிப் பொதுமக்கள், பெற்றோர் ஆகியோரின் மனப்பான்மைகளில் விரும்பத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

9. பெண்கள் தங்களுடைய நேர வசதிகளுக்கு ஏற்பக் கல்வி பெற அஞ்சல்வழிக் கல்வி, திறந்தவெளிப் பல்கலைக் கழகக் கல்வி போன்ற வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

10. பகுதிநேரக் கல்வி, தொடர் கல்வி, முறைசாராக் கல்வி போன்ற கல்வி வசதிகளைப் பெண்களுக்கு அளிப்பதில் தனியார் சமூகப் பணிமன்றங்கள் முக்கியப் பங்கினை ஏற்றுச் செயல்பட வேண்டும்.

11. பெண் பட்டதாரிகள் தங்களுடைய அறிவினை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் குறுகிய காலக் கல்வி வகுப்புகளைக் கல்லூரிகள் நடத்துவதற்குப் பல்கலைக்கழகம் அனுமதியளித்தல் வேண்டும். உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பெண்களுக்குச் சமவாய்ப்புகள் அளித்தல்.

12. ஆண்கள் மேற்கொள்ளும் பல்வேறு வாழ்க்கைத் தொழில்கள் பெண்களும் மேற்கொள்ளக்கூடியவையே. பல்வேறு வாழ்க்கைத் தொழில்களை ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் மேற்கொள்ளுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், அரசினர், பல்கலைக்கழகத்தினர், வேலையளிப்போர் ஆகியோர் 50% ஊதிய வேலைகளைப் பெண்களுக்கென ஒதுக்கிவைத்தல் வேண்டும்.

13. பல்வேறு வாழ்க்கைத் தொழில்களுக்கான பயிற்சிப் பாடத்துறைகள் எல்லாவற்றிலும் இராணுவப் பயிற்சி தவிர, 50 : 50 என்ற விகிதத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நுழைவு வசதிகள் செய்துதரப்பட வேண்டும்.

14. பெண்கள் கல்லூரிகளில் ஆண்கள் பணிபுரிதலைத் தடை செய்யும் சென்னைப் பல்கலைக்கழகச் சட்டம் திருத்தம் செய்யப்படவேண்டும்.

15. குடும்ப நல்வாழ்வு என்பது கணவன், மனைவி ஆகிய இருவரது பொறுப்பாகும். தாய்மார்களுக்கு மகப்பேறு விடுப்பு அளிப்பது போன்று, தந்தையர் தாய்மார்களின் மகப்பேறு காலத்தில் வீட்டுப் பொறுப்புகளைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருப்பதால் அந் நாள்களில் தந்தையருக்கும் விடுப்பு அளித்தல் வேண்டும்.

16. பெண்கள் கல்லூரிகளில் ஆண்கள் பணிபுரியவும் ஆண்கள் கல்லூரிகளில் பெண்கள் பணிபுரியவும் எவ்விதத் தடைகளும் இருத்தல் கூடாது.

17. இந்நாள்வரை பெண்களுக்கெனக் கருதப்பட்ட பாடத் துறைகளான மனையியல், இசை, நுண்கலைகள் போன்றவை ஆண்கள் கல்லூரிகளில் உட்பட எல்லாக் கல்லூரிகளிலும் தொடங்கப்படவேண்டும்.

18. பொறியியல், வணிகவியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சட்டம் போன்ற துறைகளில் போதனைக் காகப் பெண்கள் நியமிக்கப்படுதல் அதிகரிக்கப்பட வேண்டும்.

19. இந்திய அரசின் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவினால் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகளில் பெண்கள் கலந்து உதவுவதற்கு ஏற்றவகையில், பட்டதாரிப் பெண்களுக் குத் தனிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவேண்டும். பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு உதவிச் சம்பளத் தொகைகள் தாராளமாக வழங்கப்படவேண்டும்.

20. பெண்கள் கல்லூரிகளில் ஆண்களைச் சேர்ப்பதற்கு அனு மதி, ஆண்கள் கல்லூரிகளில் பெண்களைச் சேர்ப்பதற்கு அனுமதி ஆகியவை கோரப்பட்டால் அனுமதி வழங்க மறுத்தல் கூடாது. ஆண்கள் கல்லூரிகளில் 25% ஆசிரி யர்கள் பெண்களாக இருப்பின், அக் கல்லூரிகளில் பெண் களைச் சேர்ப்பதற்கு அனுமதி கோரப்படின், அனுமதி வழங்க மறுத்தல் கூடாது. கல்லூரிகளில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆண்களும் பெண்களும் சம பங்கு கொள்ள வாய்ப்புகள் அளித்தல் வேண்டும்.

21. குடும்ப வாழ்க்கையின் புனிதத் தன்மையினை நிலை நிறுத்துவதற்கும், வாழ்க்கையின் உயர்மதிப்புகளைப் பேணிப் பாதுகாப்பதற்கும் குடும்ப வாழ்க்கைக் கல்வி, கல்லூரிகளில் மாணவர், மாணவியர் எல்லோருக்கும் அளிக்கப்படவேண்டும்.

கல்வி ஏற்பாடு மற்றும் கற்பித்தல்

22. உயர்கல்வி நிலையில் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலாருக்கும் கல்வி ஏற்பாட்டில் வேறுபாடு தேவையில்லை. எனினும், வேலை அனுபவம், ஊட்டவியல், வீட்டுநிருவாகம், மக்கள்தொகைக்கல்வி, ஒருங்கிணைந்த கிராமவளர்ச்சி, குடும்பவாழ்க்கைக்கல்வி போன்றன இருபாலாருக்கும் கல்வி ஏற்பாட்டில் இடம் பெறவேண்டும்.

23. சுகாதாரம், உடல்நலவியல், ஊட்டவியல், பால்வகைக் கல்வி, குடிமைஇயல், தலைமை மற்றும் அறநெறி மதிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய "ஆளுமை வளர்ச்சி" பற்றிய அடிப்படைக் கல்வி, பட்டப்படிப்பு நிலையில் எல்லா மாணவ மாணவியர்களுக்கும் அளிக்கப்படவேண்டும். வாழ்க்கையில் விரும்பத்தக்க உயர்மதிப்புகளைப் போற்றுதற்கும், அவற்றைப் பின்பற்றி நடப்பதற்கும் இவ்வடிப்படைக் கல்வி அவசியமானதாகும்.

24. பெண்கள் தலைமைப் பொறுப்பேற்பதற்கு அவர்களை உருவாக்கத் தலைமை முடிவு எடுத்தல் போன்றவற்றில் அனுபவங்களைப் பெற வாய்ப்பளித்தல் வேண்டும்.

25. கல்லூரிகளில் கற்பித்தல் என்பது பல்வேறு போதனைச் சாதனங்களைப் பயன்படுத்தல், குறைந்த அளவு போதனை, நெறிப்படுத்தப்பட்ட நூலகப்படிப்பு, கேள்வி காட்சிக் கருவிகளைப் பயன்படுத்தல், வழிகாட்டல் ஆகிய பல்வேறு செயல்களையும் கொண்டதாக அமைதல்வேண்டும். சுய சிந்தனை வளர்ச்சிக்கு உதவும் வகையில் இவை அமைதல் வேண்டும்.

பயிற்றுமொழி

26. தாய்மொழியின் வாயிலாகத்தான் சிறந்த கற்றல் நடைபெற முடியும். மாநில மொழியான தமிழ் மொழியே கல்லூரிநிலையிலும் பயிற்றுமொழியாக இருத்தல் வேண்டும். தமிழில் பயின்றோர்க்கு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற நற்செயல்களால் ஆண்களும் பெண்களும் தமிழில் பயிலுவதனை அரசு ஊக்குவிக்க வேண்டும்.

வாழ்க்கைத் தொழிலுக்கான கல்வி

27. பட்டப்படிப்பு நிலையிலும், பட்டமேற்படிப்பு டிப்ளமா நிலையிலும் வாழ்க்கைத் தொழில் சார்ந்த பல பாடங்கள் கல்லூரிகளில் நடத்தப்பட வேண்டும்.

28. பள்ளிக்கும் வாழ்க்கைக்கும் இடையே காணப்படும் இடைநிலையாக உயர்கல்வி கருதப்படக்கூடாது. படிப்பைப் பாதியில் விட்டுச் செல்வோர்மீது தண்டனைக் கட்டணம் விதிப்பதற்கு, கல்லூரிகளுக்குக் கல்லூரிக் கல்வி இயக்குநரகம் அனுமதி வழங்க வேண்டும்.

29. பட்டதாரிகளின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வதற்காக, பாடக்குழுக்கள், பாடத்திட்டங்களைச் சிறப்பாக்கலும், மாற்றியமைத்தலும் வேண்டும்.

வசதிகளைப் பெருக்க வேண்டிய தேவை

30. அரசு, பல்கலைக் கழகங்கள், தனியார் நிருவாகங்கள் ஆகியன பட்டப்படிப்புநிலையில் மேலும் பல விருப்பப் பாடங்களைத் தொடங்கவேண்டும். பெண்கள் கல்லூரிகளில் பட்டமேற்படிப்பு நிலையில் மேலும் பல புதிய பாடங்களைத் தொடங்கவேண்டும். இதற்காக, அவசியமாயின், மானியம், இணைப்பு ஆகியவற்றிற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட வேண்டும்.

இருபால் கூட்டுக்கல்வி

டாக்டர் முதலியார் கல்விக்குழுவின் கருத்துப்படி இருபால் கூட்டுக்கல்வி (Co-education) என்பது ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக ஒரே கல்வி நிலையத்தில் ஒரே நேரத்தில் கல்வி பயிலுவதாகும். பிரிட்டானிகா கலைக்களஞ்சியத்தின் வரையறைப்படி கூட்டுக்கல்வி என்பது இருபாலாருக்கும் ஒரே மாதிரியான கல்வியை ஒரே நேரத்தில், ஒரே இடத்தில், ஒரே துறையினரால், ஒரே முறைகளைப் பயன்படுத்தி, ஒரே விதியின் கீழ்க் கற்றுத்தருவதாகும். இவ்வரையறை இருபாலாரிடமும் அறிவு வளர்ச்சியில் எவ்வித வேறுபாடும் இல்லை என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் உண்மையில் ஆண்களும் பெண்களும் உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, கவர்ச்சிகள், மனப்பான்மைகள், நன்னடத்தைப் பண்புகள், பொதுநடத்தைக் கோலங்கள் போன்றவற்றில் வேறுபடுகின்றார்கள். குடும்பத்திலும் சமூகத்திலும் இவர்கள் மேற்கொள்ளப்போகும் பொறுப்புகளின் தன்மையும் பங்கும் வேறுபடுகின்றன. எனவே இருபாலாருக்கும் ஒரே வகையான கல்வி ஏற்பாடு, கற்பித்தல் முறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதென்ற கருத்தினை ஏற்றுக் கொள்ள முடியாது. உயர்கல்விநிலையில் இருபாலாரும் சேர்ந்து கல்வி பயில்வது கூட கூட்டுக்கல்வி ஆகிவிடமுடியாது. ஒரே கல்வி

நிலையத்தில் ஆண்களும் பெண்களும் மாற்றல்முறை (Shift-system) யில் பயிலுதல், தனித்தனி வகுப்புகளில் தனித்தனி அறைகளில் ஆண்கள் ஆண் ஆசிரியர்களிடமும், பெண்கள் பெண் ஆசிரியர்களிடமும் பயிலுதல் போன்றன கூட்டுக்கல்வி ஆகிவிட முடியாது. கல்வி நிறுவனங்களில் இவர்களுக்குத் தனித்தனியே பொருத்தமான கல்வி ஏற்பாடும் கல்விச் செயல்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். இவர்கள் கல்வி, விளையாட்டு, மற்றும் பிற கல்வி சார்ந்த செயல்களில் கூட்டுறவு மனப்பான்மையுடன் இணைந்து செயற்படவேண்டும். மேலும் இவர்களது கல்விச் செயல்களில் இருபால் கலப்பு ஆசிரியர்களின் (Mixed staff) மேற்பார்வை அவசியம் இருக்கவேண்டும்.

பண்டைய இந்தியாவில் கூட்டுக்கல்வி

பண்டைய இந்தியாவில் இருபாலாரும் சமமாகக் கருதப்பட்டனர். இருபாலாருக்கும் கல்வி அடைதற்கெளிமையாக இருந்தது. வேதகாலத்தில் பெண்களுக்குக் கல்வி நுழைவுரிமை அளிக்கப்பட்டது. இருபாலாரும் ஆசிரமங்கள் மற்றும் குருகுலங்களில் ஒன்றாகவே கல்வி பயின்றனர். அதன் பிறகு சமயவாதிகள் கல்விப் பொறுப்பேற்ற பொழுது கூட்டுக்கல்வி பாதிக்கப்பட்டது. பௌத்தக் கல்வி முறையில் தொடக்கத்தில் பிக்குணிகளாகப் பணிபுரிய விரும்பும் பெண்களுக்குத் தனிப்பட்ட விஹாரப் பள்ளிகள் நிறுவப்பட்டன. காலப்போக்கில் பிராம்மணக் கல்வியாளர்கள் நினைத்தது போன்றே பௌத்தர்களும், பெண்கள் ஆண்களுக்குத் தாழ்ந்தவர்கள் எனக் கருதத் தொடங்கினர். பெண்களது சமூக மதிப்புநிலை குறையக் குறைய பௌத்தக் கல்வி முறையிலும் பெண்கள் கல்வி பாதிக்கப்பட்டது. பௌத்தக் கல்வியில் கூட்டுக்கல்வி அறவே புறக்கணிக்கப்படலாயிற்று. பண்டைய தமிழர் கல்விமுறையில் கூட்டுக் கல்வியைப் பொறுத்தவரை இருபாலாருக்கும் சிறந்த வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. இஸ்லாமியக் கல்வி முறையில் பெண்கல்வி முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டது. இஸ்லாமியர் காலத்தில் பெண்கள் முகத்திரை அணியும் பழக்கத்திற்கு உட்படுத்தப்பட்டதால் இவர்கள் ஆண்களோடு சேர்ந்து கல்வி பயில அனுமதிக்கப்படவில்லை. எனவே, இஸ்லாமியர்கள் கூட்டுக் கல்வியை அனுமதிக்கவில்லை என்றே கூறலாம்.

நீண்ட காலத்திற்குப் பின் 19ஆம் நூற்றாண்டில்தான் இராஜாராம் மோகன்ராய் போன்ற தேசியத் தலைவர்கள் முயற்சியால் சிலர் தங்கள் பெண்களை ஆண்கள் பள்ளிகளுக்கு அனுப்பு

அனுமதித்தனர். 1947ஆம் ஆண்டில் கலப்புப் பள்ளிகளில் கல்வி பயின்ற பெண்கள் 53% ஆவர். சுதந்திரத்துக்குப் பின்னும் கூட்டுக் கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கை பெருமளவு உயரவில்லை. சுதந்திரத்திற்குப் பின்னும் இந்தியாவில் கூட்டுக் கல்விக்குப் பொதுவாக ஆதரவு இல்லை என்றே குறிப்பிடலாம். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பொதுவாகவே மாற்றம் விழை யாதவர்களாக இருந்து வந்துள்ளனர். இன்றைய சமூக அமைப்பு பரம்பரை வழக்கங்கள், வைதிக மனப்பான்மைகள், சமூகக் கருத் துகள் போன்றவை கூட்டுக் கல்விக்கு ஆக்கம் அளிப்பனவாக அமையவில்லை. செகண்டரிக் கல்விக் குழுவின் கருத்துப்படி, பள்ளிகளில் கூட்டுக் கல்வியானது, அப்பள்ளிகள் செயற்படும் சமூக அமைப்பு, சமூகக் கருத்துகள் ஆகியவற்றினும் முன்னேறிய தாக இருக்க இயலாது.

இந்திய மாநிலங்களில் கூட்டுக்கல்வி

இந்திய மாநிலங்களில் பெரும்பாலானவற்றில் கூட்டுக்கல்வி நடைமுறையில் செயற்படவில்லை. தமிழ்நாட்டில் ஆண் களுக்கும் பெண்களுக்கும் தனித்தனிப் பள்ளிகள் இல்லாத இடங் களில் தவிர, மற்ற இடங்களில் இருபாலாரும் 12 வயதுக்குமேல் பள்ளிகளில் சேர்ந்து பயில அனுமதிக்கப்படுவதில்லை. இராஜஸ் தானில் ஆரம்பக் கல்வி நிலைவரை மட்டும் கூட்டுக்கல்வி அனும திக்கப்பட்டுள்ளது. உத்திரப் பிரதேசத்தில் பெண்கள் பள்ளிகள் இல்லாத இடங்களில், மாவட்ட அலுவலர்களின் அனுமதியுடன் ஆண்கள் பள்ளிகளில் சில பெண்கள் கல்வி பயில அனுமதிக்கப் படுகின்றனர். கேரளம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் எவ்விதக் கட்டுப்பாடுகளின்றிக் கூட்டுக்கல்வி நடைமுறையில் இருந்து வருகிறது. டெல்லியில் 20% பள்ளிகளில் கூட்டுக்கல்வி செயற்படுகிறது. பஞ்சாப்பில் உயர்நிலைப் பள்ளிகளில் கூட்டுக் கல்வி அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் கலப்புப் பள்ளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது.

வெளிநாடுகளில் கூட்டுக்கல்வி

மேற்கத்திய நாடுகள் பலவற்றில் கூட்டுக்கல்விக்கு ஆதரவு காணப்படுகிறது. ஆனால் குறிப்பிடத்தக்க வளர்ச்சியுற்ற நாடுகள் பல ஆண்களது கல்விக்கும் பெண்களது கல்விக்கும் தனிக் கல்வியினைச் செயற்படுத்துகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், ரஷ்யா, யூகோஸ்லேவியா, மேற்கு ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் கூட்டுக்கல்வி முன்னேறியுள்ளது. இங்கி லாந்து, பிரான்ஸ், ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் கூட்டுக்கல்வி ஆதரவின்றிக் காணப்படுகின்றது.

இந்தியாவில் இன்று தொடக்கப்பள்ளி உயர்நிலைப்பள்ளி, பல்கலைக்கழகம் ஆகிய மூன்று நிலைகளில் கூட்டுக்கல்வியைச் செயற்படுத்துவது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. 6—11 வயதினர் பயிலும் தொடக்கக்கல்வி நிலையில் கூட்டுக்கல்வி இருப்பது பற்றிக் கருத்து வேறுபாடு இல்லை. இதனை எவரும் மறுப்பதில்லை. வைதிகக் குடும்பத்தினர்கூட இந்நிலையில் கூட்டுக்கல்விக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது இல்லை. இது சிக்கனமானது; நிர்வாகப் பயன்கள் உள்ளது.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் கூட்டுக் கல்வி

இந்நிலையில் கூட்டுக்கல்வி இருப்பது உளவியல் அடிப்படையில் பல எதிர்மறை விளைவுகளைத் தோற்றுவிக்குமென்ற கருத்துப் பரவலாகக் காணப்படுகின்றது. முன் குமரப்பருவத்தில் கூட்டுக்கல்வி பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என்று ஸ்டன்லி ஹால் கருதுகிறார். குமரப்பருவம் சிக்கல்கள் மிகுந்த பருவமாகும். இது ஒரு நிர்ணயப் பருவமும் ஆகும். குமரப்பருவத்தினரிடத்தில் பாலுறுப்புகளின் வளர்ச்சி மற்றும் பாலுணர்ச்சி காரணமாக எதிர்பாலாரிடம் கவர்ச்சி எழுகிறது. சரியான முறையில் இவர்கள் கண்காணிக்கப்படாத பொழுது இவர்களிடம் நடத்தைப் பிறழ்ச்சியும் ஒழுக்கச் சிதைவும் ஏற்படுகின்றன. உளவியல் அறிஞர்கள் எல்லோரும் இக்கருத்துகளை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆகவே, குமரப்பருவத்தில் கூட்டுக்கல்விக்குப் பெரும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் தற்காலப் பள்ளிகளில் கூட்டுக் கல்வியைச் செயற்படுத்துவதில் பல சிரமங்களும் சிக்கல்களும் உள்ளன. இப்பள்ளிகளில் இடம் மற்றும் சுகாதார வசதிகள் கல்விச் செயல்களுக்குப் போதிய அளவு இல்லை. கூட்டுக்கல்வி செயற்படுவதை மேற்பார்வை செய்வதற்கேற்ற இருபால் ஆசிரியர்கள் இல்லை. பெண்களுக்கென நுண்கலைகள், மனையியல் பாடம் ஆகியவைகளுக்கான போதிய வசதிகளும் இல்லை. கூச்சமும் அச்சமும் மிகுந்த இப்பருவத்தின் காரணமாகப் பெண்கள் தங்களை வெளிக்காட்டிக் கொள்ள முடிவதில்லை. மேலும் சமூக நிலையில் ஆண்களும் பெண்களும் சரிசமமாகப் பழகுவதற்கான ஒரு சூழல் இன்னும் ஏற்படவில்லை.

உயர் கல்விநிலையில் கூட்டுக்கல்வி

உயர்கல்விநிலையில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் கல்வி பயில்வோர் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், ஒரு குறிப்பிட்ட அளவு முதிர்ச்சி பெற்றவர்களாகவும், நல்லெண்ணத்துடன் பழகும் மனப்பான்மை கொண்ட

வர்களாகவும் இருக்கின்றனர். ஆகவே, உயர்கல்வி நிலையில் கூட்டுக் கல்வியைச் செயற்படுத்துவதற்கு ஆதரவு உள்ளது. பெரும்பாலான கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கூட்டுக் கல்வி செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் பெண்கள் கல்லூரிகள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன. பெண்களுக்கெனத் தனிக்கல்லூரிகள் நிறுவப்படுவதினால் அதிகப் பொருட்செலவும் விரையமும் ஏற்படுகின்றன. உயர்கல்வி நிலையில் கூட்டுக்கல்வி பற்றிக் கருத்து மாறுபாடு எதுவுமில்லை.

கூட்டுக் கல்விக்கு ஆதரவான மற்றும் எதிரான கருத்துகளைப் பின்வரும் நான்கு தலைப்புகளில் எடுத்துரைக்கலாம்.

1. நிர்வாகக் கருத்துகள்
2. பொருளாதாரக் கருத்துகள்
3. சமூகக் கருத்துகள்
4. உளவியல் கருத்துகள்

1. நிர்வாகக் கருத்துகள்

ஆண்களும் பெண்களும் ஒரே வகுப்பில் சேர்ந்து பயிலுவதால் அவர்கள் நல்லமுறையில் நடந்துகொள்கின்றனர். எதிர் பாலாரிடம் தங்களுடையநல்ல நடத்தைக்கு அடையாளமாக மரியாதைக்குரிய மொழிச்சொற்களைப் பயன்படுத்துகின்றனர். நன்னடத்தையுடன் பழகுகின்றனர்.கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்கின்றனர்.இதனால் ஒழுங்குபற்றிய பிரச்சினை பெரும்பாலும் குறைகிறது. நிர்வாகிகளுக்கு இதனால் சிக்கல்கள் பெரும்பாலும் ஏற்படாவண்ணம் தவிர்க்கப்படுகின்றன. நிர்வாகப் பிரச்சினைகள் குறைகின்றன. இது திறமையான நிர்வாகத்திற்கு ஆக்கமளிக்கிறது. நல்ல நிர்வாகிகளை இது மேலும் ஊக்குவிக்கிறது. அறிவியல், கணிதம், வாணிபம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்குப் போதிய அளவு பெண் ஆசிரியர்களை நியமிப்பது விரும்பத்தக்கதாகும். இதே சமயத்தில் கூட்டுக்கல்வியில் சில நிர்வாகப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதனை மறுப்பதற்கில்லை. ஆசிரியர்கள் இடவசதி, ஆய்வக வசதி போன்றவற்றில் குறைபாடுகள் காணப்படுவதினால் பல நிர்வாகச் சிக்கல்கள் எழுகின்றன. இக்காரணங்களில் மாணாக்கரிடையே ஒழுங்கின்மை ஏற்படுகின்றது. அமைதியான சூழலில் கல்வி நிலையங்கள் செயற்பட முடிவதில்லை. கூட்டுக் கல்வியில் பெண்களுக்கென சுகாதாரவசதிகள், ஓய்வு அறை வசதிகள், நுண்கலைகள், மனையியல் பாடங்களுக்கான வசதிகள் போன்றன இல்லாதுபோனால் சில பிரச்சினைகள் தோன்று

கின்றன. கூட்டுக்கல்வி நிலையங்களில் பணிபுரியும் பல இளம் ஆண் ஆசிரியர்கள் போதிய மனப்பக்குவத்தினையும் சீரிய ஒழுக்கநிலையினையும் பெற்றவர்களாக இருப்பதில்லை. வகுப் பறைகளில் கூட்டம் அதிகமுள்ளதால் ஒழுங்கின்மை ஏற்படுகிறது. திறமை மிக்க தலைமையாசியர்கள், போதிய பொறுப்புள்ள முதிர்ச்சியடைந்த ஆசிரியர்கள் இல்லாததால் சீரிய மேற்பார் வையும், பாதுகாப்புக்கான கண்காணிப்பும் இருப்பதில்லை. இக்காரணங்களினால் பல நிர்வாகப் பிரச்சினைகளும் சிக்கல் களும் ஏற்படுகின்றன. கூட்டுக்கல்வியில் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருக்குமானால், கூச்சம் மிகுதியால் பெண்கள் தங்களை வெளிக்காட்டிக் கொள்ள முடிவதில்லை.

2. பொருளாதாரக் கருத்துகள்

பொருளாதாரக் கருத்துகளின் அடிப்படையில் கூட்டுக்கல்வி மிகவும் சிக்கனமானது. பெண்கள் கல்வியின் துரித வளர்ச்சிக்கு இது பெரிதும் உதவுகிறது. ஆண்களுக்குச் சமமாகப் பெண் களுக்கும் கல்வி வாய்ப்புகளை அளிக்கக் கூட்டுக்கல்வி உடனடிப் பயனுள்ளது. இதே கருத்தினைப் பெண்கள் கல்விக்கான தேசியக் கல்வி மன்றமும் வலியுறுத்தியுள்ளது. பெண்களுக்கெனத் தனி யாகப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றை ஏற்படுத்த உதவும் பொருளாதார நிலையினை நாம் அடையும்வரை பொறுத்திருப் போமேயானல் பெண்கள் கல்வியின் வளர்ச்சியும் முன்னேற்றமும் பெரிதும் பாதிக்கப்படும். அந்நிலைவரை பொறுத்திருப்பது நன்றன்று. பெண்கள் கல்வியின் துரித வளர்ச்சிக்குக் கூட்டுக் கல்வி பெரிதும் உதவும்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாகப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றினை நடத்துவதால் செலவு இருமடங்காக அதிகரிக்கிறது. பொருளாதார அடிப்படையில் பெண்களுக்கெனத் தனிப்பள்ளிகளும் கல்லூரிகளும் நடத்துவது விரும்பத்தக்கதாக இராது. மேலும் கிராமப்பகுதிகளில் போதிய எண்ணிக்கையில் பெண்கள் இல்லாததால் தனிப்பெண்கள் பள்ளிகளும் கல்லூரி களும் ஏற்படுத்துவது சிககனமற்றதாகிறது இருபாலாருக்கும் தனித்தனியாகப் பள்ளிகளும் கல்லூரிகளும் நடத்துவதால் சில முக்கிய சிக்கல் எழுகின்றன. கணிதம், அறிவியல், வாணிபம், போன்ற பாடங்களில் பெண் ஆசிரியர்கள் அரிதாக உள்ளனர். பெண்கள் கல்லூரிகளில் வாணிபம் கற்பிப்பதற்கு பெண் ஆசிரி யர்கள் கிடைப்பது மிகமிக அரிதாக உள்ளது. கலப்புக்கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றில் இச்சிக்கல் எளிதாகத் தீர்ந்து விடுகிறது.

பொதுப் பாடங்களைத் தவிரப் பெண்களுக்கென மனையியல், இசை, நுண்கலைகள் போன்ற பாடங்களைச் சேர்த்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

3. சமூகக் கருத்துகள்

ஆண்களும் பெண்களும் சரிசமமாகப் பழகுவதனை நமது சமுதாயம் அனுமதிப்பதில்லை. வாலிபப் பருவத்தில் வீடுகளில் சகோதரர்களும் சகோதரிகளும் கூடச் சரிசமமாகப் பழகுவது, கூடிவிளையாடுவது போன்றவற்றை அனுமதிப்பதில்லை. தீவிரக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டேதான் நடந்துகொள்ளவேண்டும். இதே பழக்க வழக்கங்கள் கல்வி நிலையங்களிலும் தொடர்ந்து காணப் படுகின்றன. பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பெண்களை ஆண்கள் பள்ளிகளுக்கு அனுப்ப விரும்புவதில்லை. ஆண்களும் பெண்களும் சரிசமமாகப் பழகுவதற்கான ஒரு சூழல் இன்னும் ஏற்படவில்லை. கூட்டுக்கல்விக்கு இன்னும் எதிர்ப்புத் தெரிவிக் கப்படுகிறது. கூட்டுக்கல்வி செயற்படுவதற்கு நிர்வாகிகள், ஆசிரி யர்கள், பெற்றோர்கள் ஆகியோரது ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாதனவாகும்.

4. உளவியல் கருத்துகள்

ஆண்களும் பெண்களும் சரிசமமாகப் பழகுவதனைக் கல்வி மற்றும் உளவியல் அடிப்படைகளில் உளவியல் அறிஞர்கள் பலர் ஆதரிக்கின்றனர். சரியான முறையில் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளக் கூட்டுக்கல்வி பெரிதும் உதவும் என்று இவர்கள் கருது கின்றனர். தனித்தனிக் கல்வி நிலையங்களில் பிரித்து வைப்பதால் எழுகின்ற ஆர்வம் கூட்டுக்கல்வியில் நெருங்கிப் பழகுவதால் குறைகிறது. இதன் விளைவாக இருபாலாரும் சாதாரண நிலையில் பழகக் கற்றுக்கொள்கிறார்கள். மேலும் எதிர்பாலாரைச் சந்தித்துப் பழகும் வாய்ப்புப் பிற்கால வாழ்க்கையில் சமநிலையை ஏற்படுத்தத் துணைபுரிகிறது. வீண் கற்பனைகள், தவறான எண்ணங்கள், தவறான பழக்கங்கள் போன்றவை பெருமளவு குறைகின்றன. கூட்டுக்கல்வியில் இருபாலாரும் தங்களிடமுள்ள குறைகளையும் நிறைகளையும் சரியானமுறையில் அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் ஒருவரை ஒருவர் மதிப்பதற்கும் சமநிலைப்பட்ட ஆளுமை வளர்ச்சி ஏற்படுவதற்கும் வாய்ப்புகள் உண்டாகின்றன.

இதே சமயத்தில் உளவியல் அடிப்படையில் கூட்டுக்கல்வி உயர்நிலைப்பள்ளி நிலையில் இருப்பது பல எதிர்மறை விளைவு

களைத் தோற்றுவிக்குமென்ற கருத்தும் பரவலாக உள்ளது. தம் வாழ்நாளில் பெரும் பகுதியினைக் குமரப்பருவம் பற்றிய ஆராய்ச்சி களில் செலவிட்ட உளவியல் அறிஞர் ஸ்டேன்லி ஹால் (Stanle. Hall) பின்வரும் கருத்தினைக் கூறுகிறார். "குமரப் பருவத்தின ரிடத்தில் துரித உடல்வளர்ச்சி முக்கியமாகப் பாலுறுப்புகளின் வளர்ச்சி, மற்றும் பாலுணர்ச்சி காரணமாக இசைவற்ற உணர்ச் சியும், எதிர்பாலாரிடம் கவர்ச்சியும் எழுவதனால் இருபாலாரும் நெருங்கிப் பழகுதல் கூடாது. சரியான முறையில் இவர்கள் கண் காணிக்கப்படாத பொழுது இவர்களிடம் நடத்தைப் பிறழ்ச்சியும் ஒழுக்கச் சிதைவும் ஏற்படுகின்றன. முன்குமரப் பருவத்தில் கூட்டுக்கல்வி பல சிக்கல்களைத் தோற்றுவிக்கிறது." கூட்டுக் கல்வி நிலையங்களில் பாலுணர்வுகள் நசுக்கப்படுகின்றன என்று பிராய்ட் (Freud) போன்றவர்கள் கருதுகின்றனர். இப்பருவத் தினர் அறநெறிப் பழக்கவழக்கங்களுக்கு உட்பட்டு நடக்க மறுக் கலாம். இன்றைய திரை உலகும், பாலுணர்ச்சியைத் தூண்டி விடும் கீழ்த்தரமான புத்தக வெளியீடுகளும் குமரப்பருவத்தினரின் கவனத்தைக் கவருவனவாக உள்ளன. இவற்றின் விளைவாக இவர்கள் எதிர்காலம் பெரிதும் பாதிக்கப்பட நேரிடும். குமரப் பருவத்தில் கூட்டுக்கல்வி நெறிகோணலுக்கு வழிவகுக்கும். இப் பருவத்தில் கூட்டுக்கல்வி பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும்; பல இன்னல்களை ஏற்படுத்தும்; விரும்பத்தகாத ஊடாடலுக்கு அடி கோலும். இப்பருவத்தில் முழுமையாகத் தூய்மை செய்தல் என்பது சாத்தியமற்றதாகும். சீரிய கல்வி நோக்கத்திற்காகப் பெண்கள் பூப்புநிலை எய்திய நிலையிலிருந்து இருபாலாரையும் தனிப்படுத்தல் ஏற்புடையது என்னும் கருத்தும் பண்டைய காலத் திலிருந்தே நிலவிக் காணப்படுகிறது.

செகண்டரிக் கல்விக் குழுவின் கருத்துகள்

1. கூட்டுக்கல்வி பற்றிக் கடினமான கொள்கைமுறை இருத்தல் கூடாது.
2. கல்விநிலையங்களில் பெண்களின் தேவைகள், வசதிகள் போதிய அளவில் பெண் ஆசிரியர்களை நியமித்தல் போன்ற நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தால் கூட்டுக் கல்விக்கு அனுமதி அளிக்கலாம்.
3. கூட்டுக் கல்விக்கான பள்ளிகளில் பெண்களுக்கு அதிகப் படியாக மனையியல் பாடத்தைக் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

4. தேவையுள்ள இடங்களில் பெண்கள் பள்ளிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.
5. கூட்டுக்கல்விக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத பெற்றோர்களின் பெண்கள், ஆண்கள் பள்ளிகளில் சேர்ந்து கூட்டுக் கல்விக்கான வசதிகளைப் பயன்படுத்திக் கல்வி பயில விரும்பினால் அவர்களை அவ்வாறு பயில அனுமதிக்க வேண்டும்.
6. கூட்டுக் கல்வி நிலையங்களில் பெண்களுக்குப் போதிய வசதிகள் செய்துதரப்படுவது வலியுறுத்தப்பட வேண்டும்.
7. கூட்டுக் கல்விக்கான பள்ளிகளில் போதிய அளவில் பெண் ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும்.

கொத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகள்

1. உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் கூட்டுக் கல்விக்கு இன்னும் பொது மக்களின் ஆதரவு இல்லை. ஆகவே, பெண்களுக்கெனத் தனிப் பள்ளிகள் நிறுவப்படுதல் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
2. சிற்றூர்ப் பகுதிகளில் பெண்களுக்கெனத் தனிப்பள்ளிகள் நிறுவ முடியாதபொழுது, ஆண்கள் பள்ளிகளிலேயே பெண்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆனால் இப்பள்ளிகளில் பெண் ஆசிரியர்களும் அவசியம் நியமிக்கப்படவேண்டும்.
3. பெண்களுக்கென மாணவியர் இல்லங்கள் ஏற்படுத்துவது ஊக்குவிக்கப்படவேண்டும்.
4. சாத்தியமானவிடத்து, அரசு உதவியுடன் பெண்களுக்கெனத் தனிப் போக்குவரத்து வசதிகள் செய்துதரப்படலாம்.
5. படிப்புதவிப் பணம் அளிக்கும் திட்டத்தில் பெண்களுக்கெனத் தனிச் சலுகைகள் அளிக்கப்படவேண்டும்.
6. கல்லூரிக் கல்வி நிலையில் பெண்களுக்கெனத் தனிக் கல்லூரியா அல்லது கூட்டுக் கல்விக்கான கல்லூரியா என்பதனை அந்தந்தப் பகுதிகளும் மாநிலங்களும்முடிவு செய்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் கூட்டுக் கல்விக்கான கல்லூரிகள் பொது மக்களால் விரும்பப்படாததால், தனிக் கல்லூரிகளே அதிகமாக உள்ளன.

எனினும், பெண்கள் குறைவாக உள்ள இடங்களில் தனிக் கல்லூரிகளை நடத்துவதைவிடக் கூட்டுக் கல்விக்கான கல்லூரிகளை நடத்துவதே பொருளாதார அடிப்படையில் சிக்கனமானதாகும்.

7. பட்ட மேற்படிப்பு நிலையில் கூட்டுக் கல்வியே செயற் படுத்தப்படவேண்டும்.

8. பெண்களுக்கெனப் பகுதி நேரக் கல்வித் திட்டம் உருவாக் கப்பட்டுச் செயற்படுத்தப்படவேண்டும்.

9. பெண்களுக்கெனத் தொழிற்கல்வித் திட்டம் உருவாக் கப்பட்டுச் செயற்படுத்தப்படவேண்டும். பெரும்பாலான பெண்கள் 14 வயதில் பள்ளிகளிலிருந்து படிப்பைவிட்டுச் செல்லுகின்றனர். இவர்களுக்குக் குறுகிய காலத் தொழிற் கல்வி மிகவும் பயனுள்ளதாக அமையும்.

கூட்டுக்கல்வி வெற்றிபெறச் சில வழிகள்

1. கூட்டுக் கல்விக்கான முயற்சிகள் செய்வதில் அவசரம் கூடாது. இதில் நிதானமான போக்கினைக் கடைப் பிடித்தல்வேண்டும். நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்பொழுது கூட்டுக் கல்விக்கு எப்பள்ளிகள் பொருத்தமானவையாக இருக்குமோ அவற்றை மட்டும் கூட்டுக் கல்விக்கான பள்ளிகளாக உயர்த்தவேண்டும்.

2. கூட்டுக் கல்வி தொடக்கப்பள்ளி வகுப்புகளிலிருந்தே தொடங்கப்படவேண்டும். கூட்டுக்கல்வியுள்ள தொடக் கப்பள்ளியில் படிக்கும் அதே மாணவ மாணவிகள் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் வரை செல்ல வேண்டும்.

3. கூட்டுக் கல்விக்கான சில சோதனைப் பள்ளிகள் தொடங் கப்படவேண்டும். இப்பள்ளிகள் எந்த அளவிற்கு வெற்றி கரமாகச் செயற்படுகின்றன என்பதை மதிப்பிடல் வேண்டும். அதன் பின் கூட்டுக் கல்விக்கான பள்ளிகள் மேலும் பல தொடங்கப்படடேண்டும்.

4. கூட்டுக் கல்வியினை ஏற்றுக்கொள்ளாத இடங்களில் மாற்றல் முறை (Shift System) செயற்படுத்தப்படலாம். அதே பள்ளியில் ஒரு வேளை ஆண்களும் மறுவேளை பெண்களும் மாற்றல் முறையில் பயில ஏற்பாடுகள் செய் யப்படலாம்.

5. கூட்டுக் கல்விப் பிரச்சினைகளைக் குமரப் பருவத்தினரின் உளவியல், கூட்டுக் கல்வியில் பயிலும் மாணவர்களிடம் நடந்து கொள்ளவேண்டிய முறை, கட்டுப்பாடு, ஒழுங்கு நிலை போன்றவற்றில் வழிகாட்டுவதற்காக ஆசிரியர் களுக்கு நெறிப்படுத்தல் பயிற்சி (Orientation Course) அளிக்கவேண்டும்.

6. வைதிகப் பெற்றோர்கள் கூட்டுக் கல்வியை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலையினை உருவாக்கவேண்டும்.

7. கூட்டுக்கல்விக்கான பள்ளிகள் சில முக்கியமான நிபந் தனைகளை நிறைவு செய்யவேண்டும். அவை பின்வருமாறு :—

(i) ஆண்களும் பெண்களும் மீக்கூட்டம் (Over Crowding) இன்றி வசதியாக அமர்ந்து கல்வி பயிலப் போதிய வகுப்பறைகள், ஆய்வகம், நூலகம், தொழிற்கூடம் போன்றவற்றில் தாராளமான இடவசதி இருக்க வேண்டும். வகுப்பறையில் ஆண்களும் பெண்களும் தனித்தனி நேர் வரிசைகளில் அமர்ந்து பயிலப் போதிய இருக்கை வசதிகள் செய்து தரப்படவேண்டும். வகுப் பறையில் அசம்பாவிதம் எதுவும் நடவாதிருக்க இரு பாலாரினையும் தனிப்படுத்தல் (Segregation) அவசியமாகும். மாணவிகளுக்கும் ஆசிரியைகளுக்கும் ஓய்வறைகள், ஒதுக்கிடங்கள், விளையாட்டிடம், குடி நீர் முதலிய தனி வசதிகள் அமைந்திருக்கவேண்டும்.

(ii) கூட்டுக் கல்விக்கான பள்ளிகளில் பெண் தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது விரும்பத்தக்கதாகும். இப்பள்ளிகளில் இருபால் ஆசிரியர்களும் பணிபுரிதல் வேண்டும். இருபது மாணவிகளுக்கு ஓர் ஆசிரியரை நியமிக்கவேண்டும். இப்பள்ளிகளில் கணவன், மனைவி இருவரும் ஆசிரியர்களாக இருப்பவர்கள் நியமிக்கப்படுதல், விரும்பத்தக்கதாகும். பெண்களின் நலம், விளையாட்டுகள் முதலியவற்றைக் கவனிக்கும் பணியினை ஒரு பெண் ஆசிரியர் பொறுப்பேற்க வேண்டும். பெண்களின் மேற்பார்வைப் படிப்புக் கான தனியாசான் பொறுப்பினைப் பெண் ஆசிரி யர்கள் மேற்கொள்ளவேண்டும்,

(iii) பெண்களின் உடல் நலப் பரிசோதனைக்காகப் பெண் மருத்துவர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும்.

(iv) இப்பள்ளிகளில் பெண்களுக்கென இசை, ஓவியம், நடனம், மனையியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப் படவேண்டும்.

(v) இப்பள்ளிகளில் தையற்கலை, சித்திரத்தையல் (Embroidery), பூ ஒப்பனை, தபால் தலை சேகரித் தல் போன்ற பயனுள்ள பல செயல்களையும் கற்பிக்க வேண்டும்.

(vi) பள்ளி வேலை நேரங்களில் கடுமையான ஒழுங்கு முறையினை நடைமுறையில் செயற்படுத்தவேண்டும். இடைவேளைகளில் மாணவ மாணவர்களின் போக்கு வரத்தினைக் கவனிக்க இருபால் ஆசிரியர்களையும் பணிக்கலாம். பல்வேறு பாடங்களுக்கான வகுப்பு களுக்குச் செல்லும்பொழுது ஆண்களும் பெண்களும் தனித்தனி வரிசைகளில் செல்லும் வரிசை முறை யினைப் பின்பற்றுதல் வேண்டும்.

(vii) மாணவர்கள் பெண்களிடம் நன்முறையில் நடந்து கொள்ளும் பழக்கத்தினை வலியுறுத்த வேண்டும். தவறு செய்பவர்களை அன்புடன் அறிவுரை கூறித் திருத்தவேண்டும். பல்வேறு வகைகளிலும் ஆசிரி யர்கள் வழிகாட்டிகளாக நடந்து கொள்ளவேண்டும்.

(viii) பெண்களுக்கெனத் தனி மாணவிகள் இல்லங்கள் நிறுவப்படவேண்டும். இவ்வில்லங்களுக்கெனப் பெண் விடுதிக் காப்பாளர்கள் நியமிக்கப்படவேண்டும்.

(ix) மாணவிகளுக்குத் தேவைப்படும் அறிவுரை பகர்தல், மற்றும் வழிகாட்டல் பணிகளுக்கென வசதிகள் செய் யப்படவேண்டும்.

(x) மாணவர் பேரவைகளில் பெண்களுக்குப் போதிய பிரதி நிதித்துவம் அளிக்கப்படவேண்டும்.

வினாக்கள்

1. இந்தியாவில் பெண்கள் கல்வியின் வளர்ச்சிக்கு இடை யூறுகளாக அமைவனவற்றைக் குறிப்பிடுக.

2. உயர்நிலைப்பள்ளி நிலையில் இருபால் கூட்டுக் கல்வி பயனுள்ளது என்போரது கருத்துக்கு ஏற்ப என்ன காரணங்கள் கூறப்படுகின்றன?

3. நம் நாட்டில் இதுவரை மாதர் கல்வி முன்னேற்றத்திற்குத் தடையாகவிருந்த காரணிகள் (Factors) யாவை?

4. நம் பள்ளிகளில் இருபால் கூட்டுக் கல்வி இருத்தலை நீவீர் விரும்புவீரா? உமது கருத்துக்கான மூன்று காரணங்களைக் கூறுக.

5. இந்தியாவில் பெண்களுக்கிடையே காணப்படும் எழுத்தறிவின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இருபாலார்க்குமான கூட்டுக் கல்வி எந்த அளவிற்கு உதவும் என்பது பற்றி ஆராய்க.

9. ஊனமுற்றோர் கல்வி

குடியாட்சியில் சாதாரணக் குழந்தைகள், குறைபாடுடைய குழந்தைகள் ஆகிய வகையினர்க்கான கல்வி வசதிகளை அமைத்தளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படுவது இன்றியமையாததாகும். சாதாரணக் குழந்தைகளுக்கான பொதுக் கல்வி வசதிகள் பரவலாக அமைத்தளிக்கப்பட்டுள்ளன. ஆனால் குறைபாடுடைய குழந்தைகளுக்கான கல்வி வசதிகள் அமைத்தளிப்பதில் இன்னும் பெருங் கவனம் செலுத்தப்படவில்லை. குறைபாடுடைய குழந்தைகள் எனப்படுவோருள் மூன்று பெரும் வகையினர் உள்ளனர்.

(1) உடற்குறைபாடுள்ளோர் (The Physically Handicapped) (2) உளக்குறைபாடுள்ளோர் (The Mentally Handicapped), மற்றும் (3) சமூகக் குறைபாடுள்ளோர் (The Socially Handicapped).

1. உடற்குறைபாடுள்ளோர்

(அ) பார்வையற்றோர்.

(ஆ) செவி கேளாதோர்.

(இ) ஊமையர்.

(ஈ) கை கால் ஊனமுற்றோர்.

(உ) பேச்சுக்குறைபாடுடையோர்.

2. உளக்குறைபாடுள்ளோர்

(அ) நுண்ணறிவு குறைவாகப் பெற்றுள்ளோர் (நு. ஈ. 80-க்குக் குறைவாக):

(i) முட்டாள்கள் (Idiots)	—நு. ஈ. 20-க்கும் கீழுள்ளோர்.
(ii) மூடர்கள் (Imbeciles)	—நு. ஈ. 20 முதல் 50 வரை பெற்றுள்ளோர்.
(iii) பேதையர் (Morons)	—நு. ஈ. 50 முதல் 70 வரை பெற்றுள்ளோர்.

(iv) கீழ்வரம்பிலுள்ளோர் (Border line cases) } நு. ஈ. 70 முதல் 80 வரை பெற்றுள்ளோர்.

(ஆ) நுண்ணறிவைச் சராசரிக்குக் குறைந்த அளவில் பெற்றுள்ளோர் (நு. ஈ. 80 முதல் 90 வரை.)

பிற்பட்டோர் அல்லது மெதுவாகக் கற்போர் (Backward or Slow learners) } —நு. ஈ. 80 முதல் 90 வரை பெற்றுள்ளோர்.

3. சமூகக் குறைபாடுள்ளோர்

(அ) நெறிபிறழ் நடத்தையுடையோர் (Delinquents)

(ஆ) அநாதைகள் (orphans)

(இ) தாய் தந்தையற்றோர் (Destitutes)

1. உடற்குறைபாடுள்ளோர்க்கான கல்வி : பார்வையற்றோர்

ஒவ்வொரு நாட்டிலும் கல்வி கற்கும் வயதுக் குழந்தைகளில் பார்வையற்றோரும் (Blind) பார்வைத் திறன் குறைந்தோரும் (Visually handicapped) 5% இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. இந்திய அரசு புள்ளி விவரத்தின்படி, இந்தியாவில் பார்வையற்றோர் 43.9 லட்சம் உள்ளனர். இவர்களுள் பள்ளி செல்லும் வயதுக் குழந்தைகள் 4·5 லட்சம் உள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தகையோர்க்கான கல்வி அமைப்பு இவர்களுக்கு ஏற்றதாகவும், இவர்களது வளர்ச்சிக்கு உதவக்கூடியதாகவும் அமைதல் வேண்டும். இக்குழந்தைகள் பிற திறன்களிலும் ஆற்றல்களிலும் சாதாரணமாகவோ மீத்திறன் பெற்றோ இருக்கலாம். எடுத்துக்காட்டாக ஹெலன் கெல்லர் அம்மையாரைக் குறிப்பிடலாம். பார்வையற்றோரது கல்வித் தேவைகள் புறக்கணிக்கப்பட்டால் இவர்களது நல்வளர்ச்சியும் வாழ்வும் தடைப்படுவதோடு சமூதாயத்திற்குப் பாரமாகவும் இவர்கள் இருப்பார்கள். இவர்களுக்கான கல்வி முறை புறக்கணிக்கப்பட்டால் இவர்களுள் திறன்மிக்கோரது பணியும் சமுதாயத்திற்குக் கிட்டாமற் போகக் கூடும். 18ஆம் நூற்றாண்டில்தான் பார்வையற்றோர்க்கான கல்விபற்றி முதன் முறையாகத் தனிக் கவனம் மேற்கொள்ளப் பட்டது. வாலண்டைன்ஹென்றி என்பவர் இத்துறையின் முதல் ஆசிரியர் என்று குறிப்பிடப்படுகின்றார். நம் நாட்டில் 1947-ல் பார்வையற்றோர்க்கான கல்வி நிலையங்கள் 50 இருந்தன. தற்போது இத்தகைய நிலையங்கள் 115 உள்ளன. இவற்றில் சுமார் 5,000 குழந்தைகள் மட்டுமே கல்வி கற்கின்றனர்.

போரில் பார்வை இழந்தோருக்காக 1943-ஆம் ஆண்டு டேராடூனில் செயின்ட்டன்ஸ்டன் விடுதி (St. Dunstan's Hostel) தொடங்கப்பட்டது. இதுவே இந்தியாவில் பார்வையற்றோர்க்கான கல்வியின் தொடக்க நிலை எனலாம். இவ்விடுதி பின்னர் 1950 ஆம் ஆண்டில் நடுநிலைப் பருவத்திலுள்ள பார்வையற்றோர்க்கான பயிற்சி நிலையமாக மத்திய அரசினால் மாற்றி அமைக்கப்பட்டது. எல்லா வசதிகளும் இலவசமாகவுள்ள இங்கு குடிசைத் தொழிலும் கைத்தொழிலும் இரண்டு ஆண்டுகள் பயிற்சியளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி நிலையத்துடன் ஒரு தொழிற்கூடம் இணைக்கப்பட்டுள்ளது. இங்கு பிரெயில் சாதனங்கள் தயாரிக்கப்படுகின்றன. பார்வையற்றோர்க்கான தேசியமையம் (National Centre for the Blind) ஒன்றும் டேராடூனில் மத்திய அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதோடு இணைந்துள்ள மத்திய பிரெயில் அச்சகத்தில் (Central Braille Press) பிரெயில் வாசிப்புச் சாதனங்கள் தயாரிக்கப்படுகின்றன. மாதிரிப் பள்ளி ஒன்றும் 1959 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மேலும் டேராடூனிலுள்ள தேசிய பிரெயில் நூலகத்தில் (National Braille Library) 10,000 பிரெயில் புத்தகங்கள் உள்ளன. குஜராத் மாநிலத்தில் பன்ஸா (Phansa) என்னுமிடத்தில் பார்வையற்றோர்க்கு விவசாயச் சிறு தொழிலில் பயிற்சியளிக்க ஒரு பயிற்சி நிலையம் (Tata Agriculture Training Centre for the Blind) மத்திய அரசின் நிதி உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்குள்ள மூன்று ஆசிரியப் பயிற்சி நிலையங்களில் 30 முதல் 40 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

மேலும் பார்வையற்றோர் உயர் கல்வி பெறுவதற்கும், தொழிற் கல்வி, தொழில் நுட்பக் கல்வி முதலியன கற்பதற்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவர்கட்கு வேலை தேடித் தருவதற்கென்று தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பார்வையற்றோர்க்கான தொடக்கப்பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் சென்னையிலும் வேறு சில நகரங்களிலும் தமிழ் நாட்டில் உள்ளன. இவை தவிர, தமிழ்நாட்டு அரசு பார்வையற்றோர்க்குக் கல்வி கற்பிக்க ஆசிரியப் பயிற்சிக்கான வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது.

பார்வையற்றோர் கல்வியின் நோக்கங்கள்

1. தங்கள் குறைபாட்டைப் பற்றித் தாழ்வுணர்ச்சியின்றித் தங்களது நிலைபற்றிய பயனுள்ள மனப்பான்மை

யையும் சமூகம் பற்றிய நல்ல மனப்பான்மையையும் ஏற்படுத்தல்.

2. சமூகப் பண்புகள், சமூக இயல்புகள், நற்குடிமக்கட் பண்புகள் ஆகியவற்றினை வளர்த்தல்.
3. தளரா நோக்குடைய வாழ்க்கைத் தத்துவத்தையும், மன வெழுச்சிச் சமநிலையையும், நல்ல பொருத்தப்பாட்டி னையும் பெற உதவுதல்.
4. தொழிற்கல்வியின் வாயிலாகப் பொருளாதாரக் காப் புணர்ச்சி பெறவும், தமது கைகளை நம்பி வாழவும் பயிற்சியளித்தல்.

பார்வையற்றோர்க்குக் கற்பித்தலில் செவி வழியே அறிவு புகட்டல் முதலிடம் பெறுகிறது. கண்களுக்குப் பதிலாக எந்த அளவுக்கு மற்றப் புலன்களைப் பயன்படுத்திச் சூழ்நிலையோடு தொடர்பு கொள்ளக் குழந்தை முற்படுகிறதோ அந்த அளவுக்கு அதன் கல்வி முன்னேற்றம் அமையும். எனவே, தொடுபுலனு ணர்ச்சியைப் பயன்படுத்தி பிரெயில் (Braille) எழுத்தறிவு பெறுதல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. படித்துணரபிரெயில் புத்தகங்கள், கேட்டுணரப் பேசும் நூல்கள் போன்றனவும், பிரெயில் எழுதுகோல், பிரெயில் தட்டெழுத்துப் பொறி போன் றனவும் பார்வையற்றோர் கல்வியில் பயன்படுத்தப்படுகின்றன. இன்று உயர்கல்விநிலை வரை இவர்கள் படித்துப் பட்டம் பெற வாய்ப்புகள் உருவாகியுள்ளன. எளிய இயந்திரங்களை இயக்கிப் பொருள்களை உற்பத்தி செய்வதிலும் பயிற்சி பெற வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. பார்வையற்றோர்க்கான தேசிய சங்கம் (National Association for the Blind) போன்ற இந்திய அமைப்புகளும், பல உலக அமைப்புகளும் இவர்களது கல்வியில் ஆர்வம் காட்டி உழைத்து வருகின்றன. இது பார்வை யற்றோரது தேவைகளில் சமுதாயத்தினரது கவனத்தை ஈர்க்கப் பெரிதும் உதவுகின்றது. மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் பார்வையற்றோர்க்கெனப் பல சலுகைகளை வழங்கி வருகின்றன. எனினும், மேற்கொண்டும் இத்துறையில் பல முயற்சிகள் தேவைப்படுகின்றன. இதற்கான வழிகளாவன:

1. கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் ஒரு கணிசமான பகுதி யைப் புலன் குறைபாடுகள் உள்ளோரது கல்விக்கென ஒதுக்குதல்,

2. மாவட்ட நிலையில் மேலும் பார்வையற்றோர் பள்ளிகள் அமைக்கப்படல்.
3. உயர்கல்விக்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் பெருக்குதல்.
4. படிப்பு முடிந்ததும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தல்.
5. பார்வையற்றோர்க்குக் கற்பித்தலில் ஆர்வமுள்ளோர்க்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்.
6. பிரெயில் நூல்கள் நாடாப் பதிவுகள் போன்ற கற்பித்தல் கருவிகளைத் தேவைக்கேற்பத் தயாரித்தல்.
7. தொழிற்கல்விப் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துவதுடன், இசை போன்ற வேறு பல துறைகளில் பயிற்சியளித்தல்.
8. பார்வையற்றோருள் சிறந்த மாணவர்கள் வெளிநாடு சென்று இத்துறையில் மேற்படிப்புப் பெற வழி செய்தல்.
9. தொடக்கப்பள்ளி நிலையிலேயே மருத்துவச் சோதனைக்கு ஏற்பாடு செய்து கண்பார்வை குறைந்தோர் நிலையைச் சீராக்க முன்னேற்பாடுகளைச் செய்தல்.
10. சமுதாயத்தில் பார்வையற்றோர்பால் பயனுள்ள மனப்பான்மையைத் தோற்றுவித்தல்.

டாக்டர் முதலியார் கல்விக் குழுவானது பார்வையற்றோர் பள்ளிகள் அதிகரிக்கப்படவேண்டும் என்றும், தீவிர நோயில் அவதிப்படுபவர்களுக்குத் தனிச் சிறப்புப் பள்ளிகள் தொடங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. பார்வையற்றோர் பள்ளிகள் உறை பள்ளிகளாக (Residential Schools) இருத்தல் வேண்டும் என்றும் வாழ்க்கைப் பயனுள்ள ஏதேனும் ஒரு தொழிலை மேற்கொள்ளும் வரையில் பார்வையற்றோர் இப்பள்ளிகளில் தங்கிக் கல்வி பெற வேண்டுமென்றும் இக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

செவி கேளாதோர் மற்றும் ஊமையர்

இந்தியாவில் இன்று சுமார் மூன்று லட்சம் செவிகேளாக் குழந்தைகள் உள்ளனர். இவர்களில் சுமார் 4,000 குழந்தைகள் மட்டுமே இவர்களுக்குரிய சிறப்புப் பள்ளிகளில் கல்வி கற்கின்றனர். முன்பு பிறவியிலேயே காது கேளாத குழந்தைகள் பல பொது நுண்ணறிவில் பிற்பட்டோராகக் கருதப்பட்டு வந்தனர். ஆனால் இன்று, இவர்களைப் பற்றிய உண்மைநிலை உணரப்

பட்டு இவர்களது கல்வியிலும் கவனம் செலுத்தப்படுகிறது. காது கேளாதோரில் இருவகையினர் உள்ளனர்.

1. பிறவிச் செவிடர்கள் அல்லது மொழி பேச்சு கற்பதற்கு முன் குழவிப்பருவத்திலேயே செவிடானோர்.
2. பேசக் கற்றபின் செவிடானோர்.

செவிட்டு நிலைக்கு மரபுநிலை மற்றும் பிறவிக் காரணங்கள் 50%க்கும், பிற நோய்கள் 50 %க்கும் காரணிகளாகும்.

சிறு வயதிலேயே இதற்கான மருத்துவ (Audiometer) சோதனையின் மூலம் காதுகேளாமையின் அளவினைக் கண்டறியலாம். ஒலியினை டெசிபெல் (Decibel) என்னும் அலகு கொண்டு குறிப்பிடுவர். மனிதனது செவியினால் பிரித்துணரக் கூடிய மிகக் குறைந்த அளவு ஒலி ஒரு டெசிபெல் எனப்படும். ஒரு குழந்தையின் செவியின் திறன் 50 டெசிபெல் அல்லது அதற்கு மேல் குறைபாடுள்ளதாக இருப்பின் அதன் கல்விக்குத் தனிச் சிறப்பு முறைகள் தேவை.

காது கேளாத குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்கு மிக்க பொறுமை தேவை. கற்பதற்கு மிகுந்த முயற்சியும் அதிகக் காலமும் தேவை. இத்தகையோரது கல்வியில் வாய்மொழி கற்பித்தல் மிக முக்கியமாகும். இவர்களது கல்வியில் பார்வையும் (ஒளித் தூண்டல்) தொடுபுலன் தூண்டலும் மிகுதியாகப் பயன்படுத்தப் படுகின்றன. குரல் நாண்களின் துடிப்பைத் தொட்டுணர்தல், ஒரு சொல்லை ஆசிரியர் உச்சரிக்கும் போது அவரது உதடுகளின் அமைப்பையும் அசைவையும் கவனித்தல் (Lip reading) கண்ணாடியில் பார்த்து உதடுகள், நா போன்றவற்றை ஒலிகளுக்கு ஏற்ப அமைத்து இயக்குதல் போன்றன யாவும் கையாளப்படுகின்றன. ஓரளவு காதுகேளாத குழந்தைகளை இளம் வயதிலேயே மருத்துவ சோதனையின் வழியே கண்டறிந்து அவரது நிலையைச் சீராக்க முயற்சி மேற்கொள்வது மிக்கப் பயனுள்ளதாகும். இம்மாதிரியான குழந்தைகள் தொடக்க நிலையிலேயே கேள்விக் கருவிகளை (Hearing Aids) பயன்படுத்த ஊக்குவிக்கப்பட வேண்டும். பார்வைக் குறைபாடுகளை அகற்ற மூக்குக் கண்ணாடி அணிவது போன்று செவிக் குறைபாடுகளைப் போக்கச் செவிக் கருவிகளை அணிவதுபற்றிக் குழந்தைகள் அவமானம் அடையத் தேவையில்லை என்னும் மனப்பான்மை இத்தகையோரிடம் தோற்றுவிக்கப்படவேண்டும்,

1947-ல் காது கேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகள் 35 இருந்தன. இன்று இப்பள்ளிகளின் எண்ணிக்கை 70 ஆக அதிக ரித்துள்ளது. இப்பள்ளியில் பொறியியல் தொழிலுக்கான முற்பயிற் சியும் பிற தொழில்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. மத்திய அரசு வயது வந்த செவிகேளாதோருக்கு ஹைதரா பாத்தில் ஒரு பயிற்சி நிலையம் ஏற்படுத்தியுள்ளது. இங்கு ஈராண்டுக் காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் 50 முதல் 60 ஆசிரியர்கள் பயிற்சி பெறும் பொருட்டு ஆறு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காது கேளாதோர்க்கு நிழற்படப்பள்ளி (School for photography for the Deaf) ஒன்றினைத் தொடங்கு வதற்கு அகில இந்திய காது கேளாதோர் அமைப்புக்கு மத்திய அரசு மானியம் அளித்துள்ளது.

கை கால் ஊனமுற்றோர்

1947-ல் கை கால் ஊனமுற்றோர்க்கெனத் தனிச் சிறப்புப் பள்ளிகள் இல்லை. ஆனால், இன்று இவர்களுக்கென 25 சிறப்புப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் சுமார் ஆயிரம் குழந்தைகள் கல்வி கற்கின்றனர். பெரும்பாலான குழந்தைகள் சாதாரணப் பள்ளிகளுக்குச் சென்று கல்வி கற்கின்றனர். அதனால் உடல் ஊனமுற்றோர்க்கெனத் தனி ஆசிரியர்கள் இல்லை. பிறவிக் குறைகள், பிறந்த பின் நோய் அல்லது விபத்துக்கள் காரணமாக ஏற்படும் ஊனங்களுக்குச் சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள முடநீக்கியல்துறை செயற்கை உறுப்புகளைத் தயாரித்து வழங்குகிறது. தொழில் மற்றும் வேலைவாய்ப்பு மத்திய அமைச்சகம் நடுநிலைப் பருவத்தினருக்கெனத் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றினை நடத்துகிறது.

பேச்சுக் குறைபாடுடையோர்

'பேச்சுக் குறைபாடு' என்பதனை விளக்க உடலியல் தொடர் புள்ள கருத்து ஒன்று இன்று சிலரால் வெளியிடப்பட்டுள்ளது. பிறழ்வின்றிப் பேச்சு நிகழ்வதற்குப் பெருமூளையின் ஒரு பாதிப் பகுதியே ஆதிக்கம் செலுத்த வேண்டுமெனப்படுகிறது. பேச்சுத் திறனைக் கட்டுப்படுத்தும் பெரும் மூளைப்பகுதி வலக்கையரிடம் இடதுமூளைப் பிரிவிலும், இடக்கையர்க்கு வலதுமூளைப் பிரி விலும் காணப்படுவதாகும். ஒரு பெருமூளைப் பகுதியின் இத்தகைய ஆதிக்கம் சில காரணிகளால் நிலையாக உருப் பெறாமல் போகலாம். இந்நிலையில் இரு பெருமூளைப் பிரிவு களுமே ஒன்றுடன் ஒன்று குறுக்கிடும் நரம்புத் துடிப்புகளைப்

பேச்சுறுப்புகளுக்கு அனுப்பக் கூடும். இதனால் பேசுவது தடைப் பட்டுத் தெற்றுதலாகிறது. இடக்கைக் குழந்தைகளைத் தண்டனை வழியே வலக்கையர்களாக மாற்ற முயலும்போது அவர்களில் சிலர் தெற்றுவாயர்களாக மாறுவதை இக்கருத்தினால் விளக்கலாம். நுண்ணறிவு மிகுந்து பெற்றுள்ள சில குழந்தைகளும் பேசும்போது தெற்றிப் பேசக்கூடும். பல பொருள்களில் இத்தகையோரிடம் ஆர்வம் மிகுந்து காணப்படுவதால் அவை பற்றி வெகு வேகமாகப் பேச முற்படுவர். அவர்கள் கூற முயலும் கருத்துகள் அவர்களது பேச்சாற்றலைக் காட்டிலும் மிகுந்திருத்தலின் விளைவாக அவர்கள் பேசும்போது நிறுத்தி நிறுத்திப் பேசுவர். இத்தகையோர் காலப்போக்கில் நன்றாகப் பேசும் திறனைப் பெறுவர். ஆனால் இவர்களைப் பிறர் கேலி செய்தாலோ அல்லது கண்டித்தாலோ மனவெழுச்சிச் சிக்கல் எழுந்து தொடர்ந்து தெற்றிப் பேசுபவர்களாக இத்தகையோர் மாறிவிடக்கூடும்.

தமிழ்நாட்டில் குறைபாடுள்ளோர்க்கான கல்வி

தமிழ்நாட்டில் இன்று பார்வையற்றோர்க்கென 18 சிறப்புப் பள்ளிகளும், செவிகேளாதோர் ஊமையர்களுக்கென 19 சிறப்புப் பள்ளிகளும் உடலூனமுற்றவருக்கென 3 பள்ளிகளும் நடத்தப் பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் கல்வி இலவசமாக அளிக்கப் படுகிறது. மேலும் இப்பள்ளிகளிலுள்ள மாணவர் இல்லங்களில் உணவும் உறையுளும் இலவசம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பள்ளிகளில் பொதுக்கல்வியுடன் தொழிற்கல்வியும் அளிக்கப் படுகின்றது. இப்பள்ளிகளில் தச்சுவேலை, பாய்முடைதல், நூல் நூற்றல், நெய்தல் போன்ற கைப்பணிகளும் பார்வையற்றோர்க் கான பள்ளிகள் தவிர ஏனைய பள்ளிகளில் பின்னல்வேலை, உடை தயாரித்தல் போன்றனவும் கற்பிக்கப்படுகின்றன.

2. உளக்குறைபாடுள்ளோர்க்கான கல்வி

உளவளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் சுமார் 20 லட்சம் பேர் இந்தியாவில் உள்ளனர். உளக்குறைபாடுள்ளோரிடம் நுண்ணறிவு வெகு குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. இந் நிலைக்கு அவர்களது மரபுநிலை காரணமாக இருக்கலாம் அல்லது பிறக்கும்போது மூளைக்கு ஏற்பட்ட சேதங்களினாலும் இந்நிலை தோன்றலாம். மன ஊனமுற்றோர் மூவகைப்படுவர். இவருள் நுண்ணறிவு ஈவு 20க்கும் குறைவாகப் பெற்றுள்ளோரை முட்டாள்கள் (Idiots) என்றும், நு.ஈ. 20 முதல் 50 வரை பெற்

றுள்ளோரை மூடர்கள் (Imbeciles) என்றும், நு.ஈ. 50 முதல் 70 வரை பெற்றிருப்போரை பேதையர் (Morons) என்றும் கூறுவர். சாதாரணமாகப் பள்ளி வகுப்புகளில் முட்டாள்களும், மூடர்களும் காணப்பட மாட்டார்கள். ஏனெனில், இவ்வளவு குறைந்த நு.ஈ. உள்ளவர்கள் பள்ளி செல்லும் வயது வரை வாழ்வதில்லை. வாழ்ந்தாலும், இவர்களது திறக்குறைவு வெளிப்படையாகவே எல்லோருக்கும் புலப்படும். பள்ளிக்கு இவர்கள் அனுப்பப்படவே மாட்டார்கள். கீழ் வகுப்புகளிலும் தொடக்க வகுப்புகளிலும் பேதையர் சில சமயம் காணப்படலாம். ஆனால், இவர்களும் தொடக்க வகுப்புக்கு மேல் முன்னேறாமல், பள்ளிப்படிப்பை சீக்கிரமே விட்டு விடுவர். தனித்தனியே கற்பிக்கப்படின் பேதையர்கள் ஓரளவு அடிப்படைக் கல்வியறிவினைப் பெறக்கூடும். அறிவு ஊனமுள்ள (Retarded) இத்தகைய குழந்தைகளுக்குச் சாதாரணப் பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வி முறையினால் ஒரு பயனும் ஏற்படாது. இத்தகையோருக்கெனச் சிறப்புக் கற்பித்தல் முறைகள் போன்றன தேவை.

1947-ல் மன ஊனமுற்றோர்க்கென இந்தியாவில் ஒரே ஒரு பள்ளி மட்டுமே இருந்தது. ஆனால் இன்று, இம்மாதிரியான 27 பள்ளிகள் நம் நாட்டில் உள்ளன. இவற்றில் சுமார் 2,000 குழந்தைகள் கல்வி கற்கின்றனர். இப்பள்ளிகளுக்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் கல்வி நிலையங்கள் இரண்டு உள்ளன. இவற்றில் 20 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. உளக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கென முன்மாதிரிப் பள்ளி ஒன்றினை மத்திய அரசு புதுடெல்லியில் ஏற்படுத்தியுள்ளது.

பிற்பட்ட குழந்தைகள் (Backward children) பள்ளிப் படிப்பில் பின்தங்கியவர்களாவார்கள். இவர்களை மெதுவாகக் கற்போர் (Slow learners) என்றும் குறிப்பிடலாம். ஒரு குழந்தை நுண்ணறிவு மிகக் குறைந்த முட்டாளாக இல்லாமல், தன் பள்ளி வாழ்வின் நடுநிலையில் (அதாவது சுமார் 10-11 வயதில்) தன் வயதுடைய பிற குழந்தைகள் சாதாரணமாக எந்த வகுப்புக்குரிய வேலைகளைத் திறம்படச் செய்கிறார்களோ அதற்கு அடுத்த கீழ் வகுப்புப் பாட வேலைகளையும் செய்ய முடியாத நிலையில் இருந்தால் அக்குழந்தையைப் பிற்பட்டதாகக் கருத வேண்டும் என்கிறார் ஸிரில் பர்ட் என்னும் உளவியலறிஞர். பள்ளிப் பாடங்களில் சாதாரண நிலையினின்றும் இரண்டு ஆண்டுகள் தாமதித்த (Retarded) நிலையிலிருக்கும் குழந்தைகளைப் பிற்பட்டவர்கள் எனலாம். பிற்பட்ட குழந்தைகளது கல்வி ஈவு (Educational Quo-

tient) 75க்கும் குறைவாக இருக்கும் என்றும் ஸிரில்பர்ட் குறிப்பிடுகிறார். பிற்பட்ட மாணாக்கரது நு. ஈ. பொதுவாக 70 முதல் 80 வரை இருக்கும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் நுண்ணறிவு ஈவு அதிகமுள்ள குழந்தைகளும் சூழ்நிலை ஏதுக்களின் காரணமாக வகுப்பில் பின்தங்கி விடுகிறார்கள் என்பதையும் இங்கு நினைவுப்படுத்திக் கொள்ளவேண்டும். பள்ளியில் படிக்கும் குழந்தைகளில் 8 % முதல் 10 % குழந்தைகள் பிற்பட்டவர்களாக இருக்கக்கூடும் என்று புள்ளி விவரங்களினின்றும் நாம் அறியலாம். நம் நாட்டில் ஆறு மிலியன் பிற்பட்ட அல்லது நுண்ணறிவுக் குறைபாடுள்ள குழந்தைகள் உள்ளனரென்றும், இவர்களுள் சிறு சதவிகிதத்தினருக்கே தனிப்பட்ட கல்வி வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

பிற்பட்ட குழந்தைக்ள் பிற குழந்தைகளைக் காட்டிலும் பொதுவாக உடல்வளர்ச்சி, அறிவுத்திறன், மனவெழுச்சிநிலை, சமூக முதிர்ச்சி ஆகியவற்றில் தாழ்ந்தே காணப்படுவர். வகுப்பிலுள்ள பிற்பட்ட குழந்தைகளை இளம் வயதிலேயே கண்டுபிடித்தால்தான், அவர்களது நிலையைச் சரிப்படுத்த ஆசிரியர் மேற்கொள்ளும் முயற்சிகளினால் பயன் கிட்டும். பிற்பட்ட குழந்தைகளின் நிலைக்குக் காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றை நீக்க முயல்வது ஆசிரியர்களால் மட்டும் இயலாது. அவர்களுக்கு இதற்குத் தேவைப்படும் காலமும் முறையான பயிற்சியும் இல்லை. ஆசிரியர்களுக்கும் பள்ளிகளுக்கும் இதில் உதவக் குழந்தையின் நல்வளர்ச்சிக்கு வழிகாட்டும் நிலையங்கள்(Child-guidance clinics) பள்ளிகளில் நிறுவப்படவேண்டும். இத்தகைய பல நிலையங்கள் மேலைநாடுகளில் ஆசிரியர்களுக்கும் பள்ளிகளுக்கும் பெரும் துணையாகச் செயற்படுகின்றன.

3. சமூகக் குறைபாடுள்ளோர்

ஏழைமை நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து வரும் பல குழந்தைகள் அறிவிருந்தும் பள்ளிப்படிப்பில் மந்தமாகக் காணப்படுகின்றனர். பட்டினி, படிக்க புத்தகங்களும் இடமும் இல்லாமை, படிப்பில் பெற்றோர் உதவி செய்ய இயலாத நிலை முதலியவைகளை ஏழைமை நிலை தோற்றுவித்து, குழந்தையைப் பிற்பட்டவனாக்குகிறது. மற்றும் இத்தகைய குடும்பங்களில் நிலவும் இடைவிடாப் பூசல்களும் சச்சரவுகளும் கொண்ட சூழ்நிலை மாணவனின் படிப்புக்கு ஊறு செய்யும். இத்தகைய குடும்பங்களில் பெற்றோர்கள் பெரும்பாலும் எழுத்தறிவற்றவர்களாக இருப்பர். கல்வியின் அவசியத்தையும் பயன்களையும் இவர்கள் உணரா

தவராதலின், தம் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் போதிய அக்கறை கொள்ளார். மேலும், சுற்றுப்புறமும் குழந்தையின் கல்வி முன்னேற்றத்தைத் தடைசெய்யக்கூடும். சுற்றுப்புறத்தில் பண்பற்ற சிறுவர்களும், தீமை பயக்கும் பொழுது போக்குச் சாதனங்களும் (Improper Recreational Facilities) இருந்தால் அங்கு வளரும் குழந்தை பள்ளிப்படிப்பில் ஆர்வம் குன்றிப் பின் தங்குவது எதிர்பார்க்கக் கூடியதே. தாழ்த்தப்பட்ட சமூகத்தினின்றும் சிறுபான்மைச் சமூகத்தினின்றும் வரும் குழந்தைகள் அவர்கள் வகுப்புத் தோழர்களால் ஏற்கப்படாமல் தனிப்படுத்தப்படலாம். இந்நிலை அவர்களிடம் பள்ளிச் செயல்களிலேயே ஒரு வெறுப்பைத் தோற்றுவித்து அவர்களைப் பள்ளிப் பாடங்களில் பிற்பட்டவர்களாகச் செய்யக்கூடும். இக்காரணங்களே சில குழந்தைகளிடம் பொருத்தப்பாடின்மையைத் (Mal-adjustment) தோற்றுவித்து, அவர்களை இடர்தரும் நடத்தையுடைய சிறுவர்களாகவோ நெறிபிறழ் சிறுவர்களாகவோ ஆக்குவதும் உண்டு.

இடர்தரும் குழந்தைகள், நெறிபிறழ் குழந்தைகள் ஆகியோர்களின் நடத்தையை உளவியல் முறைகளைப் பயன்படுத்திச் சீர்திருத்தலாம் என்னும் எண்ணம் முதன்முறையாக அமெரிக்காவில் எழுந்தது. நெறி பிறழ் குழந்தைகளை நெறிப்படுத்துவதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த ஹீலி (Healey) என்பாரின் முயற்சியின் பலனாக 1909-ஆம் ஆண்டில் சிகாகோ நகரில் "குழந்தைகள் உளநல மருத்துவ விடுதி" (Juvenile Psychopathic Institute) என்றொரு விடுதி நிறுவப்பட்டது. இதைத் தொடர்ந்து இதுபோன்ற பல விடுதிகள் அமெரிக்க நாடெங்கும் தோன்றலாயின. இங்கிலாந்து தேசத்தில் இத்தகைய விடுதி முதன் முதல் 1927 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இன்று இவ்வகை விடுதிகள் எல்லா மேலை நாடுகளிலும் ஏற்படுத்தப்பட்டு, குழந்தைகளின் உளநலத்தைப் பேணிக்காப்பதில் பெருந்தொண்டு ஆற்றி வருகின்றன. "தங்களது உளத் தேவைகள் நிறைவுறாததினாலோ அல்லது தங்களது சூழ்நிலையுடன் பொருத்தப்பாட்டினை அடையாததினாலோ வளர்ச்சி பிறழ்வுற்று தீய பழக்கங்களைப் பெற்றுப் பள்ளி, சமுதாயம் ஆகியவை எதிர்பார்க்கும் விதத்திலும் அளவிலும் செயற்படாமை போன்ற நடத்தைக் கோலங்களைப் பெற்று அவற்றால் இன்னலுற்றிருக்கும் குழந்தைகளின் வாழ்க்கையை வளமுறச் செய்ய சமுதாயத்தின் சக்திகளனைத்தையும் திரட்டிப் பயன்படுத்தும் முயற்சிகளே குழந்தைகளை நெறிப்படுத்தும் விடுதிகளாகும்" என்று ஸ்டீபன்ஸன் (Stevenson) என்பாரும், ஸ்மித் (Smith) என்பாரும்

கூறுகிறார்கள். இவ்விடுதிகள் இத்தகைய குழந்தைகளை நெறிப் படுத்தலில் அவர்கள் வாழும் சூழ்நிலையின் முழு அமைப்பையும் கருத்தில் கொண்டே செயற்படுகின்றன.

நம் நாட்டில் நெறிபிறழ் நடத்தையுடைய குழந்தைகள், இளங் குற்றவாளிகள் ஆகியோர்க்கான சீர்திருத்தப்பள்ளிகளும் அனாதைக் குழந்தைகளுக்கென அனாதைப் பள்ளிகளும், தாய் தந்தையற்றோர்க்கான இல்லங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றின் எண்ணிக்கை மிகக் குறைவு. இவ்வாறான குழந்தைகளைக் கவனிப்பதற்காக வழிகாட்டல் மற்றும் அறிவுரை பகர்தல் மையங்களும் குழந்தைகளுக்கு வழிகாட்டும் கூடங்களும் (Child Guidance clinics) ஒவ்வொரு பள்ளியிலும் நிறுவப்படுதல் வேண்டும். புதுடெல்லியில் இது போன்ற கூடம் (Child Guidance clinical, attached to the College of Nursing New Delhi) ஒன்று நெறிபிறழ்வு, உளப்பிரமையினால் எழும் நரம்புப்பிணி, மனவெழுச்சிப் பிரச்சினைகள் போன்றவற்றில் மாணாக்கர்களுக்கு அறிவுரை பகர்ந்து உளநோய் தீர்க்கும் பணி (Psychotherapeutic services to neurotics and delinquents) செய்து வருகிறது.

பல்வேறு சமூக-பொருளாதார நிலைகளிலுள்ள பெற்றோர் களுக்கும் தீவிரமான குறைபாடுடைய குழந்தைகள் பிறக்கக் கூடும். இவ்வகைக் குழந்தைகள் தமது குடும்பங்களில் பிறப்பது தமது மரபுக்கோ, மதிப்புக்கோ இழுக்கு என்று எவரும் கருதக் கூடாது. பிற்பட்ட குழந்தைகளோடு நெருங்கிப்பழகி, அவர் களோடு விளையாடும் குழந்தைகள் தாமும் பிற்பட்ட நிலையை அடையக்கூடும் என்னும் கருத்து தவறானதாகும். நுண்ணறிவு குறைந்து காணப்படும் குழந்தைகள் பிற குழந்தைகளுக்குத் தீமை பயக்கும் முறையில்தான் நடந்து கொள்வர் என்று எண்ணுவது தவறு. இவர்களும் பிறர்பால் அன்புடன் நடந்து கொள்வர். இத்தகையோரை உளநிறைவு பெறச்செய்வது மிக்க எளிதாகும். இவரும் இவ்வுள நிறைவினைப் பெற விரும்புவர். இவர்களுக்குக் கல்வி புகட்டுவது பிற குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதைக் காட்டிலும் கடினமானதன்று.

பிற்பட்ட மாணாக்கரின் கல்வியில் கவனம் செலுத்துவதுடன் பெருமூளை பால்வி (Cerebral palsy), இளம்பிள்ளைவாதம் (Poliomyelitis), வலிப்புகள் (Epilepsy), வாய்வுநிலையிலான இதயக் கோளாறுகள் (Rheumatic heart diseases) போன்ற வியாதிகளால்

தோன்றும் உடற்குறைபாடுகள் ஊனங்கள் (Physical Handicaps), மற்றும் புலன்குறைபாடுகள் (Sensory handicaps) ஆகியவை யுள்ள குழந்தைகளுக்கும் தகுந்த கல்வியளிக்கப்படல் வேண்டும். நூற்றுக்கு ஒரு குழந்தை உடற்குறைபாடுடன் பிறப்பதாக இங்கிலாந்தில் கிடைத்த புள்ளி விவரங்களிலிருந்து நமக்குத் தெரிய வருகிறது. நம் நாட்டிலும் இவ்விகிதத்தில் இத்தகைய குழந்தைகள் காணப்படலாம். பேச்சுக் குறைபாடு, காதுகேளாமை, பார்வைக் குறைபாடுகள், உடல் ஊனம் (Cripple), உடல் நலம் மிகக்குன்றிக் காணப்படல் (The delicate individual) போன்றன யாவும் இவ்வகைக் குறைபாடுகளுள் அடங்கும். ஒவ்வொரு வகைக் குழந்தையின் கல்வியிலும் தனிப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். இக்குறைபாடுகள் பெரும்பாலும் மரபுநிலைப் பட்டனவாகவோ, அல்லது தாயின் வயிற்றில் குழவி வளரும் போது ஏற்பட்ட சூழ்நிலைக் கோளாறுகளினின்றோ எழுபவை யாகும். உடற்குறைபாடுகளுள்ள குழந்தைகள் சிலர் நுண்ணறிவில் பிற சாதாரண மாணாக்கர்களைப் போலிருக்கக் கூடும். வேறு சிலர் நுண்ணறிவும் குறைந்து காணப்படுவர். இவ்வகைக் குழந்தைகளை இவர்களது பெற்றோர்களும் இகழ்ச்சியாகக் கருதுவதனால் இவர்களிடம் தாழ்வுணர்ச்சி பெருகுகிறது. இவ்வுணர்ச்சி இவர்களது உளநலத்தை வெகுவாகப் பாதிக்கிறது. இத்தகைய குழந்தைகளின் உடல் உள நலங்களிலும், கல்வி வளர்ச்சியிலும் இவர்களின் குடும்பத்தினருக்குச் சரியான ஒரு பொறுப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதில் இன்று இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகள் நம் நாட்டிலும் தேவை. இம்மாதிரியே பார்வையற்ற குழந்தைகள், செவிகேளாக் குழந்தைகள், ஊமைக் குழந்தைகள் ஆகியவர்களின் உடல் உள நலங்கள் பேணப்பட்டு இவர்களுக்குக் கல்வியளிக்கப்படுதலும் இன்றியமையாதது. புலன் குறைபாடுடைய குழந்தைகளுக்குக் கல்வி புகட்டத் தனிப்பட்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், தனிப் பள்ளிகளும் தேவை. இவ்வகைப் பள்ளிகள் சில நம் நாட்டிலும் நன்கு இயங்கி வருகின்றன. மேலும் பல பள்ளிகள் தேவை. குறைபாடுடைய குழந்தைகளின் கல்வித் தேவைகளைப் பற்றி யூனெஸ்கோ (Unesco) நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது. இதன் முயற்சியால் உலகின் பல பாகங்களிலும் இவ்வகைக் குழந்தைகளுக்கு நல்வாழ்வு அளிக்கத் தொடங்கப்படும் நிலையங்கள் எண்ணிக்கையில் பெருகும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துகள்

(1) இந்தியாவில் ஊன முற்றோர்க்கான கல்வி வசதிகள்

மிகக் குறைவாகவே உள்ளன. எனவே, இவர்களது கல்விக்கான வசதிகள் பெருக உடனடியாக ஆவன செய்ய வேண்டும். 1986 ஆம் ஆண்டுக்குள் பார்வையற்றோர், செவி கேளாதோர், கால் ஊனமுற்றோர் போன்ற குழந்தைகளில் 15 % குழந்தைகளுக்கும் உளக்குறைபாடுள்ள குழந்தைகளில் 5 % குழந்தைகளுக்கும் கல்வி வசதிகள் செய்து தரப்படவேண்டும். அதாவது, ஊனமுற்ற மொத்தக் குழந்தைகளில் 10 % குழந்தைகளுக்குக் கல்வி வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். ஊனமுற்றோர்க்கான கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கும் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊனமுற்றோர் கல்விக்கெனச் சிறந்த கல்வி நிலையம் ஒன்று அமைக்கப்படல் வேண்டும்.

(2) ஊனமுற்றோர் பள்ளிகளில் பணிபுரியத் தேவைப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சியில் போதிய கவனம் செலுத்துதல் வேண்டும். ஊனமுற்றோர் பள்ளிகளில் ஆசிரியர்—மாணவர் விகிதம் 1:10 என இருத்தல்வேண்டும். இவ்விகிதத்தில் கணக்கிட்டால் குறைபாடுடைய குழந்தைகளின் கல்விக்கென இன்னும் சுமார் 16,500 ஆசிரியர்கள் தேவை. எனவே, ஊனமுற்றோர் பள்ளிக்கான ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படல் வேண்டும்.

(3) ஊனமுற்றோரின் நல்வாழ்வில் அக்கறை கொண்டுள்ள மத்திய கல்வி அமைச்சகம், மத்திய சுகாதார அமைச்சகம், மத்திய சமூக நல வாரியம், தனியார் சமூக சேவை நிறுவனங்கள் ஆகிய துறையினர் ஒத்துழைத்து இணைந்து செயற்படல் வேண்டும்.

(4) ஊனமுற்றோர் கல்விப் பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்கெனத் தேவையான நிதி வசதிகளை மத்திய கல்வி அமைச்சகம் செய்து கொடுக்கவேண்டும். இவர்களைப்பற்றி ஆராய்ச்சிக்கென தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (NCERT) ஒரு தனிப் பிரிவு அமைக்கப்படல் வேண்டும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஊனமுற்றோர் கல்விபற்றிய ஆராய்ச்சி முடிவுகளையும் கருத்துகளையும் இத்தனிப்பிரிவு சேகரித்து ஆசிரியர்களுக்கு வழங்குதல் வேண்டும். இத்துடன் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் பொருள்களையும் இப்பிரிவு தயாரித்தளித்தல் வேண்டும்.

(5) பத்தாண்டுகளுக்கு ஒருமுறை ஊனமுற்றோர் கல்விப் பிரச்சினை மீண்டும் பரிசீலிக்கப்படல் வேண்டும்.

வினாக்கள்

1. கண்பார்வையற்ற குழந்தைகளது கல்விக்காகத் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளைச் சுருக்கி எழுதுக.
2. செவிகேளாதோர், ஊமையர் ஆகியோர்க்கான தனிப் பள்ளிகளை நிறுவுவதில் தமிழ்நாட்டு அரசின் முயற்சிகளை மதிப்பிடுக.
3. ஊனமுற்றோர் கல்வியில் தமிழ்நாடு இதுகாறும் மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை?
4. ஊனமுற்றோர் கல்விக்கான மாநில, மத்திய அரசுகள் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகள் யாவை?
5. இந்தப் பத்தாண்டுக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட குறைபாடுடையோர்க்கான கல்வி வசதிகள் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

10. பல்துறைப் பாடங்கள் மற்றும் பல்நோக்குப் பள்ளிகள்

கல்வியின் பல நிலைகளிலும் பாடங்களில் பல்வேறு துறை களை ஏற்படுத்தல் (Diversification of Studies at different Stages) இன்றியமையாததாகும். ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் உயர்நிலைப்பள்ளிக் கல்வியினை வளர்த்ததன் முக்கிய காரணம் அவர்களது நிர்வாகத்திற்கு உதவக்கூடிய எழுத்தர்கள், அலுவ லர்கள் ஆகியோரை உருவாக்குதல் என்பதாகும். இக் குறுகிய தவறான நோக்கம் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளிக் கல்வி அமைப்பில் பல காலமாகக் காணப்பட்டது. சுதந்திரம் பெற்ற பின்னரும் சிறிது காலம் இக்கல்வி நிலையின் நோக்கம் தெளி வானதாக அமையவில்லை. உயர் கல்வியின் நுழைவாயிலாக இது தவறாகக் கருதப்பட்டு வந்தது. இக்காலத்தில் உயர்நிலைப் பள்ளிக்கான கல்வி ஏற்பாடும், பாடத்திட்டங்களும் பயனுள்ள வையாகவும், மாறியும் வளர்ந்தும் வரும் சுதந்திர இந்தியாவின் தேவைகளுக்கு ஏற்றவாறும் அமைந்திருக்கவில்லை.

மேலும், இந்தியக் கல்வியமைப்பில் வெகு காலமாக உயர் நிலைப் பள்ளிக் கல்வியானது வாழ்க்கையுடன் தொடர்பு இல்லாமல் இருந்தது. கல்வி ஏற்பாடு குறுகிய நோக்கமுடைய தாகவும் வெறும் ஏட்டுக்கல்வியை அடிப்படையாகக் கொண்டும் இருந்தது. இதன் விளைவாக மாணாக்கர்களது ஆளுமையின் இசைந்த முழுமையான வளர்ச்சிக்கு அது உதவவில்லை. மாணாக் கர்கள் பழமையான பல செய்திகளைக் கற்றார்களே தவிர அவர் களுக்கு எந்த வாழ்க்கைத் தொழிலும் பயிற்றுவிக்கப்படவில்லை ஏட்டுக் கல்வி முடிந்தவுடன் வாழ்க்கையின் உண்மை நிலையைச் சந்திக்கும்பொழுது இவர்கள் பெரும் அதிர்ச்சிக்கும் பிரச்சினை களைத் தீர்க்க இயலாத துன்ப நிலைக்கும் ஆளாயினர். வாழ்க் கைத் தொழில் தொடர்பான கல்வியைப் பெறாததால் மாணாக் கர்கள் கவர்ச்சியற்ற வாழ்க்கையையும் வேலையின்மையையும் ஏற்க வேண்டியிருந்தது. மாணாக்கர்களின் நாட்டங்கள், மனப் போக்கு, அவாக்கள், தேவைகள் ஆகியவை புறக்கணிக்கப் பட்டதால் அவர்களின் உடல் வளர்ச்சி, அறநெறி வளர்ச்சி,

பண்பாட்டு வளர்ச்சி ஆகியன பாதிக்கப்பட்டன. இக்கல்வியானது இவர்களைச் சமூகப் பணிக்கோ, தலைமைப் பொறுப்பேற்கவோ ஆயத்தப்படுத்தவில்லை.

கல்வி அமைப்பிலுள்ள குறைபாடுகளை டாக்டர் ஏ. எல். முதலியார் கல்விக் குழு மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியது. இக்குறைபாடுகள் பின்வருமாறு :

1. உயர்நிலைப் பள்ளிக் கல்வியானது வாழ்க்கையுடன் தொடர்பற்றிருந்தது.
2. புத்தகத்தை நெட்டுருச் செய்யத் தூண்டும் வெறும் ஏட்டுக் கல்வியாக இருந்தது.
3. குறுகிய நோக்கமுடையதாகக் காணப்பட்டது.
4. சமூகப் பயனும் நடைமுறைப் பயனும் மிக்க பாடங்கள் கல்வி அமைப்பில் இடம் பெறவில்லை.
5. கற்பித்தல் முறைகள் கவர்ச்சியும் சுவையும் அற்றவை யாக இருந்தன.
6. கற்றலில் தன்னம்பிக்கை எழ இக்கற்பித்தல் முறைகள் மாணாக்கர்களுக்கு உதவுவதாக இல்லை.
7. நெட்டுருச் செய்தல், சிந்தனைத் திறனையும் கற்பனை யாற்றலையும் வளரவொட்டாமல் தடுத்தது.
8. தேர்வு முறைக்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
9. மாணாக்கர் எண்ணிக்கை மிகுந்து காணப்பட்டதால் ஆசிரியர் — மாணாக்கர்களிடையே நேர்முகத் தொடர்புகள் எழ வாய்ப்பில்லை. இதனால் மாணாக்கர் களது ஒழுக்க—மனப்பான்மை வளர்ச்சிகளில் ஆசிரியர் செல்வாக்குப் பெற இயலவில்லை. இது ஒழுங்கீனத்தைத் தோற்றுவிக்கத் துணை செய்தது.
10. ஆசிரியர்களது நிலை சிறப்பாக அமைந்திருக்கவில்லை இதனால் ஆசிரியத் தொழிலில் ஆர்வமும், நாட்டமும் கொண்டவர்களின் எண்ணிக்கை குறைந்து காணப் பட்டது.
11. மாணாக்கர்களது ஆளுமையின் இசைந்த முழுமையான வளர்ச்சிக்குப் பள்ளிக் கல்வியானது உதவவில்லை.
12. நாட்டின் தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் மாணாக்கர்கள் பங்கு கொள்வதற்குத்

> தேவைப்படும் தொழில்நுட்பப் பாடங்களோ வாழ்க்கைத் தொழில் தொடர்பான பாடங்களோ பள்ளிக் கல்வியில் இடம் பெறவில்லை.

இத்தகைய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய பின்னர் உயர்நிலைக்கல்வியின் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டுமென்பது பற்றிய கருத்துகளை இக்குழு தெரிவித்தது. நமது குடியாட்சி சமுதாயத்தில் மக்கள் ஆக்கத்திறனுள்ள சிறந்த குடிமக்களாக வாழ்க்கை நடத்தத் தேவைப்படும் அறிவையும் ஒழுக்கத்தையும் பெற்றவர்களாகவும், நாட்டின் தொழில்வளம் வாழ்க்கைநிலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் பாடுபடக்கூடிய செயல் திறனும் தலைமைப் பண்பும் உள்ளவர்களாகவும், நமது பண்பாட்டுக்கு ஏற்ற வகையில் சிறப்பான ஆளுமை வளர்ச்சி பெற உதவும் இலக்கியம், கலைகள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டவர்களாகவும் வளர நமது மாணாக்கர்களுக்குப் பயிற்சியளிப்பது இன்றைய கல்வியின் அடிப்படை நோக்கமாக அமையவேண்டும் என்பதனை முதலியார் குழுவின் அறிக்கை தெளிவுபடுத்தியது. உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் பல்நோக்குப் பள்ளிகளும் (Multi-Purpose Schools) இவற்றில் பல்துறைப்பாடங்களுக்கான (Diversified courses) வாய்ப்புகளும் இருத்தல் வேண்டும். இவை குமரப்பருவ மாணாக்கர்களது பலவகைப்பட்ட நோக்கங்கள், ஆற்றல்கள், நாட்டங்கள் ஆகியவற்றிற்கேற்ற பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் பயில அவர்களுக்கு உதவும். பல்துறைப்பாடங்களில் தேர்ச்சி பெற்ற உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்கள் மேலும் சிறப்புப் பயிற்சி பெறப் பல்தொழில் நுட்பப்பள்ளிகளிலும் (Poly-technics) தொழில்நுட்ப நிறுவனங்களிலும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். கிராமப்பள்ளிகளில் தோட்டக்கலை, குடிசைத் தொழில்கள், கால்நடை வளர்ப்பு போன்றவற்றிற்கும் முக்கியமாக விவசாயத்திற்கும் நடுவிடம் அளிக்கவேண்டும். தொழில்நுட்பப் பள்ளிகள் பல உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும். இவை தனிப்பட்டவையாகவோ பல்நோக்குப் பள்ளிகளின் பகுதியாகவோ இயங்கலாம். பெரிய நகரங்களில் பல்நோக்குப் பள்ளிகளுக்கு உதவக்கூடிய மையத்தொழில்நுட்பப்பள்ளிகள் ஆரம்பிக்கப்படலாம். தொழில் நுட்பப்பள்ளிகள் இயன்றவரையில் தொழிற்பகுதிகளில் நிறுவப்பட்டு, பல்வேறு தொழில்களுடன் இணைந்து செயற்படவேண்டும். தொழில்நுட்பக் கல்வியில் மாணாக்கர்களுக்கான தொழிற்பயிற்சியினை (Apprenticeship) அளிப்பது தொழிற்கூடங்களின் கடமையாக ஆக்கப்படவேண்டும். தொழில் நுட்பக்கல்வி வளர்ச்சிக்குத் திட்டமிடுதலில் தொழில்துறையினரும் வணிக வல்லுநர்களும் உதவுதலும் ஒத்துழைத்தலும்

பாடத்திட்டம் தயாரித்தலிலும் இவர்களது ஒத்துழைப்புத் தேவைப்படும்.

சுதந்திரத்திற்குப் பின்பு கல்வியாளர் நோக்கில் பெருத்த மாறுதல் ஏற்பட்டுள்ளது. பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள செய்திகள் வாழ்க்கையோடும், வாழ்க்கையின் தேவைகளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென இப்பொழுது உணரப்படுகிறது. ஏட்டுப்படிப்பைவிடத் தொழில்நுட்பப் பாடங் களுக்கு அதிக அளவில் கல்வி ஏற்பாட்டில் இடமளிக்க வேண்டியது அவசியமாகிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டு களில் உயர்நிலைப்பள்ளிக் கல்வியில் பல மாற்றங்கள் செய்யப்பட் டுள்ளன. நம் நாட்டில் மாணவர்களில் பெரும் பகுதியினருக்கு உயர்நிலைப் பள்ளிக் கல்வியே ஏட்டுக்கல்வியின் இறுதியாக அமைகிறது. அதன்பின் உண்மை வாழ்க்கையில் நுழைகின் றனர். எனவே உயர்நிலைப்பள்ளிக் கல்வியானது மாணவர் களிடம் ஒரு தன்னிறைவை ஏற்படுத்தவேண்டும். உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் மாணாக்கர்களுக்கு வாழ்க்கைக்குப் பயனளிக்கக் கூடிய ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தொழிலில் பயிற்சியளிக்க வேண்டும்.

நமது நாட்டின் வளர்ச்சிக்குரிய பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தப் பல்வேறு தொழில்களில் பயிற்சி பெற்றவர்கள் தேவைப்படுகின்றனர். ஆதலால் இப்போதுள்ள சாதாரணப் பள்ளிகள் பல்நோக்குப் பள்ளிகளாக மாற்றி அமைக்கப்படுவது அவசியமாகும். உயர்நிலைப்பள்ளிக் கல்வியில் தொழில் நுட்பப் பாடங்களும் சேர்க்கப்படவில்லையானால் மிகக் கடுமையான வேலையில்லாப் பிரச்சினை ஏற்படுமென்பது உறுதி.

நமது நாடு ஒரு விவசாய நாடு என்பது எல்லோரும் அறிந்த உண்மை. கிராமங்களிலிருந்து வந்து கல்வி கற்கும் பெரும் பாலான மாணாக்கர்கள் இதுவரை நகரங்களில் குடியேறி வந்துள் ளனர். அவர்கள் பெற்று வந்த கல்வி விவசாயத்திற்குப் பயன் படும்படி இல்லை. கிராமங்களில் அவர்கள் இருப்பது அர்த்தமற்ற தாகவும் பட்டது. இந்நிலை மாற உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் விவசாயப்பாடம் இடம்பெற வேண்டும் அல்லது தனிப்பட்ட விவசாயக் கல்வி நிலையத்தை அமைக்கலாம். தொடக்கக் கல்வியையும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் பின்னணி யாகக்கொண்டு, ஒரு தொழிலில் பயிற்சியையும், வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சியையும் பெற்ற தனித்திறன் பெற்றவர் களும், தனித்துறை நிபுணர்களும் தொழில்துறை நிபுணர்களும்

பல்வேறு வகைப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்காகப் பெருமளவில் தேவைப்படுகின்றனர். இவர்களை உயர்நிலைப் பள்ளிப் பருவத்தினரிடமிருந்து தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. எனவே இந்தியக் கல்வி நிபுணர்கள் உயர்நிலைப்பள்ளிக் கல்வி நிலையில் பல்துறைப்பாடங்கள் புகுத்தப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டனர். மாணாக்கர்கள் தங்களது தேவை, விருப்பம், நாட்டங்கள் ஆகியவற்றிற்கேற்பப் பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இக்குறிக்கோள் நிறைவு பெறுவதற்காகக் கல்வியில் கைப்பணிகளும் பல்துறைப்பாடங்களும் புகுத்தப்பட்டுள்ளன. பல்நோக்குப் பள்ளிகளும் தொழில்நுட்ப உயர்நிலைப்பள்ளிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அறிவியல் கற்பித்தலுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பல்துறைப்பாடங்களில் ஏட்டுக்கல்வி (Academic Course), பொறியியல் துறைக்கல்வி (Engineering Course), செயலாண்மைத்துறைக்கல்வி (Secretarial Course), வேளாண்மைத்துறைக் கல்வி (Agricultural Course), மனையியல் துறைக்கல்வி (Home Science) போன்றன யாவும் அடங்கியுள்ளன. 10-ஆம் வகுப்பிற்கு வந்தவுடன் தனது நாட்டங்கள், கவர்ச்சிகள் ஆகியவற்றிற்கேற்ப இவற்றுள் ஒரு துறைப் பாடத்தை மாணாக்கர் எடுத்துப் படிக்கலாம். பல்துறைப் பாடங்களில் போதனை மட்டுமன்றிச் செயல்களும் நடைமுறைப்பயிற்சியும் (Practical Activities) இணைந்து இடம் பெறுகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட பல்துறைப்பாடப் பிரிவுகளுக்கு வாய்ப்புள்ள பள்ளிகள் பல்நோக்குப் பள்ளிகள் (Multi-purpose Schools) எனப்படும். சாதாரணப்பள்ளிகளை இத்தகைய பல்நோக்குப் பள்ளிகளாக விரைவில் மாற்றவேண்டியதன் அவசியத்தை 1954 ஆம் ஆண்டிலேயே கல்விக்கான மைய ஆலோசனைக்குழு (Central Advisory Board of Education) வலியுறுத்தியுள்ளது. இத்தகைய பல்நோக்குப் பள்ளிகள் கிராமப்புறங்களில் அமைந்து காணப்பட்டால் அவற்றில் வேளாண்மைத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏட்டுக்கல்வி மட்டும் போதிக்கப்படும் சாதாரணப் பள்ளிகளைப் பல்நோக்குப்பள்ளிகளாக மாற்றி அமைப்பதற்குத் தேவைப்படும் பணச்செலவில் ஒரு பகுதியை மத்திய அரசு மாநில அரசுகளுக்குக் கொடுத்தும் உதவி வந்துள்ளது. ஏட்டுக்கல்வி தவிர்த்த பிற பல்துறைப்பாடங்களை மேற்பார்வையிடத் தொழில் நுட்பக்கல்வி அலுவலர் (Technical Education officer) ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். பல்நோக்குப் பள்ளிகள் மாணாக்கர்களுக்குத் தொழிலுக்கேற்ற மனப்பான்மை அதற்குதவும் அடிப்

படைத் திறன்கள் ஆகியவற்றைத் தருவனவாக அமைகின்றன. ஆனால் பல்தொழிற் பள்ளிகள் மாணாக்கர்களுக்குச் சிறப்புத் தொழிற்பயிற்சியளிக்கும் நிலையங்களாகச் செயற்பட்டு, தொழில் களுக்கெனச் சிறப்புப் பயிற்சியளிப்பனவாக அமைகின்றன.

பல்நோக்குப் பள்ளிகள் நல்லவையா அல்லது குறிப்பிட்ட ஒரு துறைக்குத் தனிப்பள்ளி இருப்பது நல்லதா என்னும் பிரச்சி னையும் சிலபோது எழக்கூடும். பல்நோக்குப் பள்ளிகள் நிறுவப் பொருட்செலவு அதிகமாகும். சில பாடத்துறைகளில் மிகக் குறைந்த மாணாக்கர்களே இருக்கக்கூடும் சில தலைமையாசிரி யர்கள் ஒரு பாடத்துறையில் மட்டும் ஆர்வம் மிகுதிகொண்டு பிற துறைகளின் வளர்ச்சிக்கும் தேவைகளுக்கும் போதிய அளவு உதவமாட்டார்கள். ஆகையால் தனிப்பள்ளிகள் இருத்தல் நலம் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், இவை தவிர்க்க முடியாத குறைபாடுகளல்ல. இவற்றைத் தவிர்த்து, பல்நோக்குப் பள்ளி களை நிறுவி நன்கு நடத்த முடியும். பல்நோக்குப் பள்ளி களில்தான் தனது ஆற்றல்கள், கவர்ச்சி ஆகியவற்றுக்கேற்ற பாடத்துறையினை மாணாக்கர் தேர்ந்தெடுக்க முடியும். ஒவ்வொரு துறைப்பாடத்துக்கும் ஒவ்வொரு பள்ளிக்குச் சென்று சேருவது என்பது நடைமுறையில் பல சிக்கல்களைத் தோற்று விப்பதாகும். பல்நோக்குப் பள்ளிகள் நன்கு செயற்பட இப்பள்ளி களிலேயே மாணாக்கர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் அறிவுரை பகர்தல் (Guidance and Counselling) வசதிகள் இருத்தல் வேண்டும். எத்துறைப் பாடத்தைத் தேர்ந்தெடுத்தால் தான் வெற்றியடையத் தேவைப்படும் நுண்ணறிவு, நாட்டம், கவர்ச்சி ஆகியன தன்னிடம் உள்ளனவா என்பது பற்றி மாணாக்கர் உணர்ந்து இவற்றுக்கு ஏற்ற பாடத்தினை அவன் தேர்ந்தெடுக்க இயலும். இத்தகைய உணர்வு எழுவதற்கான வழிகாட்டலின்றிப் பல்துறைப்பாடங்களில் ஏதோ ஒன்றினை மனம்போனபோக்கில் ஒரு மாணாக்கன் தேர்ந்தெடுத்துப் பயில முயல்வது அம்மாணாக் கனுக்கும் சமூகத்துக்கும் பயனற்றதாகவே அமையும். நுண்ணறிவுச் சோதனைகள், நாட்டச் சோதனைகள், ஆளுமைச் சோதனைகள், கவர்ச்சிச் சோதனைகள் போன்றவற்றைப் பயன் படுத்தி மாணாக்கர்களைப் பற்றிய பல்வேறு விவரங்களைத் திரட்டி திரள்பதிவுப் புத்தகங்களில் (Cumulative Record) தொகுத்து வைப்பது அவர்களுக்கு வழிகாட்ட இன்றியமையாத தாகும்.

பல்துறைப்பாடங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருத்தலோடு, ஏட்டுக்கல்வியில் குறிப்பிட்ட ஒரு பாடத்தை விருப்பப் பாடமாகத்

(Elective Subject) தேர்ந்தெடுத்து அதனை ஆழ்ந்து கற்கவும் உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்களுக்கு இன்று வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. இந்நூற்றாண்டில் அறிவு, முக்கியமாக அறிவியல் அறிவு, பெருமளவு பெருகிக் காணப்படுகிறது. நமது நாடு முன்னேற்றமடைந்துள்ள பிற உலக நாடுகளுடன் போட்டியிடக்கூடிய வளர்ச்சி நிலையை அடைவதற்கு இவ்விஞ்ஞான அறிவும், வளர்ச்சிக்குதவும் பிற துறை அறிவும் இங்கு மக்களிடையே வேகமாகப் பரவவேண்டும். இத்தகைய பணியினை ஆற்றத்தக்க கருவிகள் நமது கல்விக்கூடங்களேயாம். இத்தேவையை முன்னிட்டும், நமது மாணாக்கர்கள் பாடங்களிலே ஆழ்ந்த அறிவு பெற உதவுவதற்கும் உயர்நிலைப் பள்ளிக் கல்விக் கட்டத்தில் பத்தாம் வகுப்பில் தொடங்கி விருப்பப் பாடங்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதன் விளைவாகக் கணிதம், பௌதிகம், இரசாயனம், உயிரியல், வரலாறு, புவியியல் போன்றவற்றில் குறிப்பிட்ட ஒரு பாடத்தினை மாணாக்கன் தேர்ந்தெடுத்துக் கற்று, அதில் சிறப்பான அறிவு பெறக்கூடும். இப்பாடங்களில் ஒன்றினையோ அல்லது பொறியியல், செயலாண்மை, வேளாண்மை, மனையியல் போன்ற பல்துறைப் பாடங்களில் ஒன்றினையோ தன் விருப்பத்துக்கேற்ப ஒரு மாணாக்கன் தேர்ந்தெடுத்துப் பயிலலாம்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் விருப்பபாடங்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்துவது தேவையா என்பது பற்றிக் கல்வியாளர்களிடையே சிறிது கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. உயர்நிலைப்பள்ளிக் கல்வி பொதுக் கல்வியின் இறுதிக் கட்டமாகவே இருத்தல் வேண்டுமென்றும், எல்லா மாணாக்கர்களுக்கும் அவசியம் தேவைப்படும் அடிப்படை அறிவு, திறன்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றை அளிக்கக்கூடிய பொதுவான பாடங்களும் செயல்களுமே இந்நிலையிலும் கல்வி ஏற்பாட்டில் இடம் பெற வேண்டுமென்றும் சிலர் கூறுகின்றனர். விருப்பப் பாடங்களில் ஆழ்ந்த தேர்ச்சி பெறுவது கல்லூரிகளில் உயர்கல்விக் கட்டத்தில் இருத்தல் போதுமானது என்பதும் இத்தகையோரது கருத்தாகும். உயர்நிலைப்பள்ளி நிலையில் விருப்பப்பாடம் ஒன்றினை மாணாக்கர்கள் தேர்ந்தெடுத்துப் பயிலுவதில் சில சிக்கல்கள் எழக்கூடும். தனது ஆற்றலுக்கும் ஆர்வத்துக்கும் ஏற்ற பாடத்தைத்தான் ஒரு மாணாக்கன் விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுப்பான் என்று உறுதியாக நாம் கூற முடியாது. தனது மனம் போகும் போக்கிலோ, தனது நெருங்கிய நண்பர்கள் ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதனாலோ, தன்

பெற்றோர்களது வற்புறுத்தலினாலோ அல்லது ஒரு பாடத்தைப் படிப்பது பிற்காலத்தில் தனக்கு உதவக்கூடும் என்பதனாலோ, ஒரு பாடத்தை மாணாக்கன் தேர்ந்தெடுக்கலாம். இந்நிலையில் தங்களது திறன்கள், நிலையான கவர்ச்சிகள் ஆகியன பற்றிய உண்மையான முடிவு மாணாக்கர்களது உள்ளத்தில் எழுந்திருக்காது. இவற்றின் அடிப்படையில் மாணாக்கர்கள் விருப்பப் பாடங்களைத் தேர்ந்தெடுக்காமற் போவாராயின் அப்பாடங்களில் அவர்கள் போதிய தேர்ச்சியைப் பெறாமல் போவர். மேலும் பௌதிகப்பாடம், இரசாயனம் போன்ற விருப்பப் பாடங்களில் செய்முறைப்பயிற்சி இன்றியமையாத பகுதியாகும். இதற்கான ஆய்வுக்கூடங்கள் பல பள்ளிகளில் முக்கியமாக கிராமப்பகுதிகளில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் இரா. இப்பள்ளிகளில் வரலாறு போன்ற பாடங்களையே விருப்பப் பாடங்களாக மாணாக்கர்களுக்கு அளிப்பர். இதன் விளைவாக நகரப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்கள் அறிவியல் அறிவு மிகுந்து காணப்படுவதும், கிராமப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களிடத்து அறிவியல் அறிவு குறைந்து காணப்படுவதுமான நிலை எழக்கூடும். இது விரும்பத்தக்கதன்று. ஒரு விருப்பப் பாடத்துக்குப் பதில், இரு இணைந்த விருப்பப்பாடங்களை மாணாக்கர் பயிலுவதே சிறந்தது என்பதும் சிலரது கருத்தாகும். எடுத்துக் காட்டாக கணிதமும் பௌதிகமும், பௌதிகமும் இரசாயனமும், வரலாறும் புவியியலும் என்று இணைந்த இரு பாடங்களை மாணாக்கர்கள் தமது விருப்பப் பாடங்களாகத் தேர்ந்தெடுத்திருப்பராயின் ஒன்றில் பெறும் பொருளறிவும் முறையறிவும் மற்றதை நன்கு கற்க உதவும் எனப்படுகிறது.

பல்நோக்குப் பள்ளிகள பற்றி டாக்டர் கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துகள், டாக்டர் முதலியார் கல்விக் குழுவின் கருத்துகளுக்கு மாறுபட்டவையாகும். *10, 11* ஆம் வகுப்புகளில் பல்துறைப் பாடங்களுக்கு (Diversified courses) வாய்ப்பு ஏற்படுத்தப் படவேண்டுமென்று குறிப்பிட்டது. இவ்வகுப்புகளில் தங்களது விருப்பப் பாடங்களின் அடிப்படையில் மாணாக்கர்கள் பல பகுதியினராகப் பிரிக்கப்பட்டனர். இப்பிரிவுகளின் அடிப்படையிலே அவர்களது கல்வியின் எதிர்காலம் பெருமளவு மாற்ற இயலாத முறையில் அமைந்தது. பல்துறைப் பாடங்கள் உயர்நிலைப் பள்ளிகளில் செயற்பட்டபோது சில குறைபாடுகள் எழுந்தன. பல்வேறு காரணங்களின் விளைவாகப் பெரும்பான்மையான மாணாக்கர்கள் கல்லூரிக் கல்வியை விரும்புகின்றனர். இதற்கான பாடங்களையே உயர்நிலைப் பள்ளிகளில் மாணாக்கர்கள் பயில

முற்படுகின்றனர். எனவே பல்துறைப் பாடங்கள் பலரைக் கவராததுடன், திறனற்ற ஒருசில மாணாக்கர்கள் குவிந்திருக்கும் பகுதிகளாகப் பிறர் கருதக்கூடிய நிலை தோன்றியது. கல்விக் கென நிதி வசதி குறைந்த இந்நாளில் சிறு சிறு பிரிவினருக்காகப் பள்ளிகளில் பல்துறைப் பாட வகுப்புகளை நடத்துவது சிக்கனம் மற்றது. பல்நோக்குப் பள்ளிகள் எனப்பட்ட பெரும்பான்மை யான பள்ளிகளிலும் ஓரிரு பாடப்பிரிவுகளுக்கு மட்டுமே வாய்ப் புகள் இருந்தன. இத்தகைய பள்ளிகள் பல்துறைப் பாடங்கள் புகுத்தப்பட்ட நோக்கத்தினை மாணாக்கர்கள் எய்த உதவுவன வாக இல்லை. 9 ஆவது வகுப்பு மாணாக்கர்கள் இவ்விள வயதில் தங்களது எதிர்காலம் பற்றிச் சிந்தித்துத் திட்டவட்டமான முடிவு களை எடுத்து, இவற்றுக்கேற்ற பாடப் பிரிவைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் தவறு. இவ்வாறு இவர்கள் தேர்ந்தெடுத்தலுக்கு உதவும் வழிகாட்டுதல் (Guidance) திட்டமும் பள்ளிகளில் செயற்படுத்தப்படவில்லை. எனவே டாக்டர் கொத்தாரிக் கல்விக் குழு பொதுக்கல்வியினையே உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் இறுதி ஆண்டு வரை வலியுறுத் தியது. பொதுக்கல்வி தேவைப்படாதோர்க்குத் தனியாகத் தொழிற்கல்வி வாய்ப்புகள் ஏற்படுத்துவதை இந்தக் கல்விக் குழு ஆதரித்துள்ளது. உயர்நிலைப் பள்ளிக்கல்வி நிலையில் 20 % மாணாக்கர்களுக்குப் பொதுக் கல்விக்குப் பதில் தொழிற்பயிற்சி யளிப்பது தேவை. இதனைத் தொழிற்பயிற்சிப் பள்ளிகளிலும் தொழில் நுட்பப் பள்ளிகளிலும் (Industrial training Insttutes and Technical Schools) அளிக்கலாம் என்பதனையும் கொத்தாரிக் கல்விக் குழு தெரிவித்துள்ளது.

தொழில் நுட்பக் கல்வியும் தொழிற் கல்வியும் (Technical and Vocational Education) நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான தேவையாகும். இக்கல்விப் பிரிவுகளின் வளர்ச்சி தடைப்பட்டால் நாட்டின் முன்னேற்றமும் தடைப்படும் என்பது தெளிவு. இதனைக் கருதியே டாக்டர் கொத்தாரிக் கல்விக்குழு தனது அறிக்கையில் 1986 ஆம் ஆண்டிற்குள் உயர்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களில். 20 % ஆவது பகுதி நேர அல்லது முழு நேரத் தொழிற் கல்விப் பிரிவுகளில் சேர்ந்து பயில்வதற்கான வர்ய்ப்புகள் அரசினால் ஏற்படுத்தித் தரப்படவேண்டுமெனக் கருத்துத் தெரிவித்துள்ளது. முன்பு உயர்நிலைப் பள்ளிகளில் காணப்பட்ட பல்துறைப் பாடங்கள் தொழிற்பயிற்சி நிலையங் களிலும் பல்தொழில் நுட்பப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படவேண்டும் 1986-ஆம் ஆண்டிற்குள் உயர் செகண்டரி கல்வி நிலையில் 50%

மாணவர்க்குத் தொழிற்கல்வி வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும். தொழிற்கல்விக்குப் பல்தொழில் நுட்பப்பள்ளிகளுடன் பகுதி நேரப் பயிற்சி, அஞ்சல் வழியே பயிற்சி போன்றன தேவை. பொதுச் சுகாதாரம், வாணிபம், தொழில் நிர்வாகம் போன்றவற்றிலும் புதிய பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படவேண்டும். இத்தகைய பயிற்சியின் இறுதியில் கற்ற தொழிலை மேற்கொண்டு வாழ்க்கை நடத்தத் தேவைப்படும் தரத்தினை மாணாக்கர்கள் பெற வேண்டும் என்றும் கொத்தாரிக் கல்விக்குழு கருத்துத் தெரிவித் துள்ளது. இதே சமயம் தொழிற்கல்வி பெற்றுள்ள ஒருசில ஆர்வ மிக்க மாணாக்கர்கள் தொடர்ந்து பொதுக்கல்விப் படிப்பை மேற் கொள்ள விரும்பினுல் அதற்கான வாய்ப்புகளும் கல்வி அமைப்பில் இருத்தல் வேண்டும் என்பதும் இக்குழுவின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் பல்தொழில் நுட்பப் பள்ளிகளும் (Polytechnics) தொழிற் பயிற்சி நிலையங்களும் (Industrial Training Institutes) மேலும் அதிக எண்ணிக்கையில் தொடங்கப்பெற வேண்டுமென்பதனை கொத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. இவை பொதுவாக, தொழிற்சாலைகள் மிகுந்துள்ள பகுதிகளிலேயே நிறுவப்படும். கிராமப்பகுதிகளில் நிறுவப்படும் தொழிற்பள்ளிகளில் வேளாண்மையுடன் இணைந்த தொழிற்பாடங்களுக்கான வாய்ப் புகள் ஏற்படுத்தப்படவேண்டும். தொழில்நுட்பக் கல்வியில் செய் முறைப் பயிற்சியும் செயல் திட்டங்களும் முக்கிய இடம்பெற வேண்டும். தொழிற்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் தமது பயிற்சிக் காலத்திலேயே தொழில் அனுபவங்களைப் பெறக்கூடிய வாய்ப்புகள் அமைத்துத் தரப்படுதல் தேவையாகும் என்ப தனையும் கொத்தாரிக் கல்விக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பல்தொழில் கல்வி நிலையங்களுக்கான ஆசிரியர்கள் தொழில் துறையினின்றும் அதிக அளவில் தேர்ந்தெடுக்கப்படுவது ஒவ்வொரு பல்தொழிற்பள்ளியிலும் பலதிறப்பட்ட பாடப்பிரிவு களில் பயிற்சிக்கு வகைசெய்வது நாட்டின் தேவைகளைக் கருத்தில்கொண்டு தொழிற் கல்வி, தொழில் நுட்பக்கல்வி போன்ற வற்றுக்குத் திட்டமிடுவது ஆகியவற்றையும் இக்குழு குறிப்பிட் டுள்ளது.

தொழிற்கல்வி, பொறியியற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி ஆகிய வற்றின் வளர்ச்சிக்குத் திட்டமிடும்போது நாட்டின் இன்றைய எதிர்காலத் தேவைகள் கருத்தில் கொள்ளப்படுவதன் அவசியத் தையும் கொத்தாரிக் கல்விக்குழு வலியுறுத்தியுள்ளது. பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்பப்பள்ளிகள் போன்றவற்றில் கற்பிக்கும்

ஆசிரியர்களுக்கும் ஆசிரியப்பயிற்சி தேவை என்பது இன்று உணரப்பட்டுள்ளது. பல்தொழிற் பள்ளிக்கான ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்க உதவும் வகையில் தொழில்நுட்ப ஆசிரியப் பயிற்சி நிலையங்கள் (Tcchnical Teacher's Training Institutes) இப்போது நம் நாட்டின் பல பகுதிகளில் செயற்படுகின்றன.

தொழில்நுட்பக் கல்வியில் கற்பித்தல், தொழிற்பயிற்சி ஆகிய வற்றினிடையே இணைந்த படிப்பு முறையைப் (Sandwich-Course) பயன்படுத்துவது சிறந்தது என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது. இவ்வகைப்பட்ட இணைந்த பயிற்சியைப் பெறும் மாணாக்கர்கள் கற்கும் கருத்துகளுக்கும் நடைமுறை அனுபவங் களுக்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பினை நன்கு உணர்ந்து கல்வியின் மூலம் சிறந்த பயனைப் பெறுவர். தொழில் துறையில் திட்டமிடல், உற்பத்தி, இயந்திரங்களை அமைத்தல், அவற்றை நன்கு பராமரித்தல் போன்றவற்றில் ஈடுபடமுடியும். இணைப்புமுறையிலான தொழில்நுட்பக் கல்வியில் கற்றல் தொழிற்பயிற்சி ஆகியவற்றில் சிறிதுகாலம் மாறிமாறி ஈடுபடுவர். இம்முறை மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகப் படுத்தவும் உதவும்.

கொத்தாரிக் கல்விக்குழுவின் பல பரிந்துரைகளைத் தொழில் நுட்பக் கல்விக்கான அனைத்திந்தியக் கழகம் (All India Council for Technical Education) ஏற்று, இவற்றை நடைமுறையில் செய லாக்கப் பல திட்டங்களைத் தற்போது வகுத்து வருவது குறிப் பிடத்தக்கது. இக்கழகம் தொழில்நுட்பக் கல்வி பற்றிய முக்கிய முடிவுகள் சிலவற்றை எடுத்துள்ளது. பொறியியற் கல்லூரிகளில் சேர விரும்புவோர்க்கான குறைந்தபட்ச வயது பற்றிய விதி தளர்த் தப்படவேண்டுமென்றும், 16 வயதுக்குக் குறைந்த வயது மாணாக் கர்களும் போதிய திறனும் நாட்டமும் பெற்றிருப்பின் இக்கல்லூரி களில் சேர்த்துக் கொள்ளப்படலாமென்றும் இக்கழகம் முடிவெடுத் துள்ளது. நம் நாட்டில் பொறியியல் கல்வியின் இன்றைய நிலையை ஆராய்ந்து மதிப்பிடப் பொறியியல் வல்லுநர்கள், தொழில்துறைப் பிரதிநிதிகள் ஆகியோர்களைக் கொண்ட உயர் மட்டக்குழு ஒன்று நிறுவப்படவேண்டுமென்றும், இக்குழு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான தேவைகள் பற்றி விரிவாக ஆராய வேண்டுமென்றும் இக்கழகம் குறிப்பிட்டுள்ளது. தொமில்நுட்பக் கல்லூரிகள் வெறும் கல்வி நிலையங்களாக மட்டும் விளங்காமல், இன்று பொறியியல் பட்டம் பெற்றோரிடம் காணப்படும் வேலை யின்மைப் பிரச்சினையைப் போக்க உதவும் வகையில் அவர்கள்

சிறுதொழில்கள் போன்றவற்றில் தாமே பங்கு கொள்ளக்கூடிய தன்நம்பிக்கை மிகுந்தவர்களாக்கப் பயிற்சியளிக்கும் நிலையங்களாகவும் செயற்படவேண்டும். இதற்கு உதவும் வகையில் சிறு தொழிலதிபர்கள், பொதுத்துறை நிறுவனங்கள், மற்றத் தொழில் துறை அலுவலர்கள் போன்றோர்களைக் கொண்டு நடத்தப்படும் பல கருத்தரங்குகளில் பொறியியல், தொழில்நுட்ப மாணாக்கர்கள் பங்கு பெறவேண்டும். பொறியியல், தொழில்நுட்பக் கல்விக்கான கல்வி ஏற்பாடு புதுப்பிக்கப்பட்டுப் பல புதிய கருத்துக்களும் செயல்முறைகளும் இதில் இடம்பெற வேண்டும். இப்பிரிவுக் கல்விக்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் மறுபயிற்சியும் அளிக்கப் பல பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டு, ஆண்டொன்றுக்கு 5000 ஆசிரியர்களாவது பயிற்சி பெற முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். மற்றும், தொழில்நுட்பக் கல்விக்குத் தேவைப்படும் பாடநூல்கள், துணைநூல்கள், கருவிகள் போன்றனவும் எளிதில் நம் நாட்டிலேயே கிடைக்கப் பெறுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதனை இக்கழகம் வலியுறுத்தியுள்ளது.

திறம்மிக்க பணியாளருக்கான முழுநேரத் தொழில்நுட்பக் கல்வி தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் அளிக்கப்படுகின்றது. உயர்தொடக்கநிலைக்குப்பின் 3 அல்லது 4 ஆண்டுகள் பயிற்சியளிக்கப்படுகிறது. இவற்றில் மாணாக்கர்களுக்குப் பொதுக் கல்வியும், தொழில்நுட்பக் கல்வியில் பயிற்சியும், தொழிற்கூட அனுபவமும் அளிக்கப்படுகிறது. தொழிற்பயிற்சி நிறுவனங்களில் (Industrial Training Institutes) தொழில் திறமைக்கான பயிற்சி வாய்ப்புகள் அதிகரிக்கப்படும். இந்நிறுவனங்களில் சேருவதற்கான குறைந்தபட்ச சேர்க்கை வயது 14 ஆக இருத்தல் வேண்டும். தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும் தொழிற்பள்ளிகளிலும் உற்பத்தி அடிப்படையில் (Production oriented) பயிற்சி அளிக்கப்படும். செயல்திறனுடைய பணியாளருக்கான (skilled-workers) பயிற்சிக்குக் குறைந்தபட்சத் தகுதி 10 ஆம் வகுப்பாகும். பள்ளிகளிலிருந்து நீங்கி, தொழிலை மேற்கொள்பவர்களுக்கு, வாழ்க்கை சார்ந்த தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி வசதிகள் பகுதிநேரப் பயிற்சி, அஞ்சல்வழிப் பயிற்சி, குறுகிய தீவிரப் பயிற்சி, தொழில்நுட்பக் கல்வியில் கற்பித்தல்-தொழிற் பயிற்சி ஆகியவற்றிடையே இணைந்த படிப்புமுறை (Sandwich-course) போன்றவற்றின் மூலம் மிகுதியாக்கப்படவேண்டும்.

விவசாயப் பல்தொழில் பள்ளிகள்

இப்பள்ளிகள் உயர்செகண்டரி நிலையில் செயற்படும்

தொடக்கக் கல்வி நிலையில் விவசாயத்தை ஒரு கைப்பணியாகக் கொண்டு உத்திரப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் ஆதாரக்கல்வியைச் செயற்படுத்தி வந்துள்ளனர். கீழ் உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் விவசாயத் தொழிலில் அறிவும் அனுபவமும் அளிப்பதற்காக விவசாயிகளின் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. வேறு சில பள்ளிகளில் பள்ளி இறுதியாண்டுத் தேர்வுக்குத் தகுதியாக்கிக் கொள்ள ஒரு கைப்பணியைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும்பொழுது விவசாயத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர். மேலும், பல்நோக்குப் பள்ளிகளிலும் விவசாயம் ஒரு விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

கொத்தாரிக் கல்விக் குழு இவற்றை ஆராய்ந்து தனது பரிந்துரைகளைத் தெரிவித்துள்ளது. தொடக்க நிலையிலோ, கீழ் செகண்டரி நிலையிலோ விவசாயக் கல்வி அளிப்பது நம் குறிக்கோளை நிறைவு செய்வதற்குப் பயன்படாது. விவசாயப் பண்ணையில் 12 முதல் 16 வயது மாணாக்கர்களுக்குப் பயிற்சியளிப்பது சரியானதல்ல. ஏனெனில், உடலாலும் மனத்தாலும் அவர்கள் ஆயத்தமற்றிருக்கிறார்கள். ஆகவே, இப்பருவத்தினர் குறிப்பாகக் கணிதத்திலும் அறிவியல் பாடத்திலும் ஆழமான அறிவைப் பெற அவர்களுக்கு நல்ல பொதுக் கல்வி அளிக்கப்பட வேண்டும். அதேபோது எல்லா நிலைகளிலும் மாணாக்கர்கள் விவசாயம் மற்றும் நாட்டு வாழ்க்கையின் முக்கியத்துவத்தை உணரும்படியாகவும், அதிலுள்ள பல்வேறு சிக்கல்களை அறியும் படியாகவும் பல செய்திகளைப் பொதுக் கல்வியோடு இணைத்துக் கற்பிக்கவேண்டும். வேலையனுபவத்தின் முக்கியக் கூறாக விவசாயம் அமையும்.

வேலைச் சார்புள்ளதாகக் கல்வியை மாற்றியமைத்தல் (Vocationalization of Education) பற்றி கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துகள்.

செகண்டரிக் கல்வி நிலையில் கல்வியை வேலை சார்புள்ளதாக மாற்றியமைத்தல் பணி விரும்பத்தக்க வேகத்தில் விரிவுபடுத்தப்பட வேண்டும். கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துப்படி செகண்டரிக் கல்வி நிலையில் தொழிற்கல்வி அளிப்பது பின் வருமாறு மேற்கொள்ளப்பட வேண்டும்.

செகண்டரிக் கல்வி நிலையில் தொழிற்கல்வி

ஆண்டு	தொழிற்கல்வியில்சேர்க்கை (ஆயிரங்களில்)			மொத்த சேர்க்கையில் தொழிற் கல்வியில் சேர்க்கையின் விழுக்காடு		
	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
வகுப்புகள் VIII—X						
1950—51	29	18	47	2·2	8.8	3.1
1955—56	39	32	71	2.0	7.9	3.0
1960—61	65	35	100	2.2	4.7	2.7
1965—66	90	47	137	1.9	3.3	2,2
1970—71	222	113	335	3.4	5.0	3.8
1975—76	546	272	818	6.0	7.6	6.4
1980—81	1344	655	1999	11.0	12.4	11.4
1985—86	3305	1568	4873	20.0	¿0.0	20.0
வகுப்புகள் XI—XII						
1950—51	105	20	125	42 7	53.6	44.2
1955—56	179	35	214	41.6	49.4	42.7
1960—61	299	59	358	41.7	44.9	42.2
1965—66	477	87	564	40.7	38.5	40.3
1970—71	721	157	878	42.5	40.2	42.1
1975—76	1089	284	1373	46.3	44.5	45.9
1980—81	1645	514	2159	48.1	47.2	47.9
1985—86	2502	934	3436	50.0	50.0	50.0

கீழ் செகண்டரி நிலை

1950-51 ஆம் ஆண்டில் கீழ் செகண்டரி நிலையில் 3% மாணாக்கர்களுக்குத் தொழிற்கல்வியில் பயிற்சி கொடுக்கப்பட்டது. பொதுக்கல்விக்கான வசதிகள் பெருமளவு அதிகரித்ததின் விளைவாக 1965—66 ஆம் ஆண்டில் மாணாக்கர்கள் தொழிற் கல்வியில் பயிற்சி பெறுவது 2% ஆகக் குறைந்தது. 1986 ஆம் ஆண்டுக்குள் கீழ் செகண்டரி பள்ளியில் 20% மாணாக்கர்களுக்கு முழு நேர அல்லது பகுதி நேர வாழ்க்கைத் தொழில் சார்ந்த பாடத்திலும், தொழிற் கல்வியிலும் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

உயர் செகண்டரி நிலை

தற்போது 10 ஆம் வகுப்பிற்குமேல் 40% மாணாக்கர்களுக்குத் தொழிற்கல்வியில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. 1986 ஆம் ஆண்டுக்குள் உயர் செகண்டரி நிலையில் 50% மாணாக்கர்களுக்கு முழு நேர அல்லது பகுதி நேர வாழ்க்கைத்தொழில் சார்ந்த பாடத்திலும் தொழிற்கல்வியிலும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். உயர் செகண்டரிக் கல்வியை வேலை சார்புள்ளதாக மாற்றியமைத்தலில் (Vocationalization) இது ஒரு முக்கிய சீர்திருத்தமாக அமையும். எல்லோரும் உயர் செகண்டரிப் பள்ளிகளில் பொதுக் கல்வி பெறத் தேவையில்லை. தொழிற் கல்விக்குப் பல்தொழில் நுட்பப் பள்ளிகளுடன் (polytechnics) பகுதி நேரப் பயிற்சி (Part-time training) வாய்ப்புகளும் பயன்படுத்தப்படவேண்டும். தொழிற்கல்வியில் பொதுச் சுகாதாரம், வாணிபம், தொழில் நிர்வாகம் போன்ற புதுத் துறைகளில் பயிற்சி அளிக்கப்படுதலும் இன்று தேவைப்படுவதாகும். விவசாயத் தொழில் நுட்பப் பள்ளிகளும் ஏற்கெனவே தொழிலை மேற்கொண்டவர்களுக்கு, அவர்களது செயல் திறன்களைப் பெருக்கிக் கொள்வதற்குக் குறுகிய கால மறு பயிற்சித் திட்டங்களைச் செயற்படுத்தவேண்டும். இதனைத் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் தொழிற் பள்ளிகளிலும் அளிக்கலாம். திறன்மிக்க பணியாளருக்கான முழு நேரத் தொழில் நுட்பக் கல்வி, தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளிகளில் அளிக்கப்படுகின்றது. தொடக்க நிலைக்குப் பின் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் பயிற்சியளிக்கப்படும். இவற்றில் மாணாக்கர்களுக்குப் பொதுக்கல்வியும், தொழில்நுட்பக் கல்வியில் பயிற்சியும் தொழிற்கூட அனுபவமும் அளிக்கப்படும். இப்போதுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தொழில் திறமைக்கான பயிற்சி வாய்ப்பு அதிகரிக்கப்படும். குறைந்த பட்ச சேர்க்கை

வயது 14 ஆகக் குறைக்கப்படும். பள்ளியிலிருந்து நீங்கி, தொழிலை மேற்கொள்பவர்களுக்கு வாழ்க்கை சார்ந்த தொழில் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி வசதிகள் மிகுதியாக்கப்படவேண்டும்.

பகுதி நேரத்தொழிற் கல்வி (Part-time Vocational Education)

உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் பகுதிநேரக் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமானதாகும்.

தொடக்கப்பள்ளிக் கல்வியை முடித்த பின்னர் மேற்கொண்டு தொடர்ந்து கல்வி கற்க இயலாதவர்கள் பத்தாவது வகுப்பு முடிய கல்வி அறிவு பெற்று உயர்நிலைப் பள்ளிப் பொதுத் தேர்வு எழுத விரும்பலாம். இவர்களுக்குப் பகுதி நேரக் கல்வி வசதிகள் செய்து தரப்படவேண்டும். முழு நேரப் பள்ளிகளிலுள்ள இட வசதிகள் மற்றும் பிற வசதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களால் இவர்களுக்கும் கல்வி கற்பிக்கலாம். இவ்வாசிரியர்களுக்கு அதிகப்படி ஊதியம் அளிக்கப்படவேண்டும். இம்மாதிரியான கல்விப் பயிற்சிகளினுல் பயன் பெறுபவர்கள் ஏற்கெனவே அவர்கள் மேற்கொண்டுள்ள வாழ்க்கைத் தொழில் சார்ந்த பாடத்திலும், தொழிற்கல்வியிலும் சிறந்த தேர்ச்சி பெறும் வகையில் அமைதல் வேண்டும். இவர்களது கல்வி வேலை சார்புள்ளதாக அமைதல் இன்றியமையாததாகும்.

ஆரம்பப் பள்ளிகளிலிருந்து நீங்கி விவசாயத் தொழிலை மேற்கொண்டுள்ளவர்களுக்குப் பகுதி நேர விவசாயக் கல்வி அளிக்கப்படவேண்டும். விவசாயத்தில் புதிய முறைகளை மேற்கொள்ளுதல். உற்பத்திப் பெருக்கம் ஆசியவற்றினை வலியுறுத்தும் தொழில் கல்வியும் பொதுக் கல்வியும் இவர்களுக்கு அளிக்கப்படும் பகுதி நேரக் கல்வியின் முக்கிய நோக்கங்களாக அமைதல் வேண்டும். விவசாயத் தொழில் நுட்பப் பள்ளிகளில் இக்கல்வி அளிக்கப்படவேண்டும்.

ஆரம்பப் பள்ளிகளிலிருந்து நீங்கும் பெண்களது கல்வியிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். இவர்களுக்கும் பகுதி நேரக் கல்வி வாய்ப்புகள் அமைத்துத்தருதல் வேண்டும். மனையியல் தையல் வேலை, கைப்பணிகள், கோழி வளர்ப்பு, பால்வளம் பெருக்குதல் போன்றவற்றில் பகுதி நேரப் பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும். இம்மாதிரியான சிறுதொழிற் பயிற்சிகள் பெண்களுக்கு வாழ்க்கைப் பயன் மிக்கவையாகும்.

உயர் செகண்டரிக் கல்வி நிலையில் பகுதி நேரக் கல்வித் திட்டங்கள் முக்கியமானவையாகும். உயர் செகண்டரிக் கல்வி பொதுத் தேர்வு எழுத விரும்புவோர்க்கு அதற்கெனப் பகுதி நேரக் கல்வி வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும். விவசாயத்தை வாழ்க்கைத் தொழிலாக மேற்கொண்டுள்ளவர்களுக்குப் பகுதி நேரப் பயிற்சியின் மூலம் நவீன விவசாயக் கல்வி அளிக்கப்படவேண்டும். பல்வேறு உற்பத்தித் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர்க்கு அவர்களது தொழில்களின் அடிப்படையில் பகுதி நேரத் தொழிற் கல்வி அளிக்கப்படவேண்டும். ஏற்கனவே உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட பகுதி நேரக் கல்வி வசதிகள், உயர் செகண்டரிக் கல்வி நிலையிலும் அவர்களுக்கு மேலும் தொடர்ந்து அளிக்கப்படவேண்டும். ஆனால் இந் நிலையில் அளிக்கப்படும் தொழிற் கல்வி மற்றும் பொதுக் கல்வி ஆகியவற்றின் தரம் உயர்ந்ததாக இருத்தல் வேண்டும். தாமே சொந்தமாகத் தொழில் செய்பவர்களுக்கும் பகுதி நேரக் கல்வி வசதிகள் அளிக்கப்படவேண்டும்.

உயர் கல்வியில் தொழிற் கல்வி

சூழ்நிலை, காலம் ஆகியவற்றின் தேவைக்கேற்பப் பல்கலைக் கழகக் கல்வியிலும் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியம். பல்வேறு துறைகளுக்குத் தேவைப்படும் அலுவலர்களையும் பணியாளர்களையும் உருவாக்கித் தருவது உயர் கல்வியின் நோக்கங்களில் ஒன்றாகும். தேசியச் சீரமைப்புத் திட்டங்களையும் வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் பணியாளர்களையும் உருவாக்கித் தருவது பல்கலைக் கழகங்களின் கடமையாகும். தேசியக் கட்டமைப்பிற்குத் தேவைப்படும் திறன் மிக்க ஆசிரியர்கள், மேலாண்மையாளர்கள், தலைவர்கள், பொறியியல் வல்லுநர்கள், மருத்துவ வல்லுநர்கள், பொருளாதார வல்லுநர்கள், அறிவியல் அறிஞர்கள் போன்றவர்களை உருவாக்கி அளிக்க வேண்டியதும் பல்கலைக் கழகங்களின் பொறுப்பாகும். ஆனால் இன்றைய நிலையில் இப் பணிகள் யாவற்றையும் பல்கலைக் கழகங்கள் நிறைவு செய்ய இயலவில்லை. உயர்நிலைப் பள்ளிக் கல்வி போன்றே பல்கலைக் கழகக் கல்வியும் வாழ்க்கைச் செயல் முறைக்குப் பயன்படவில்லை. உயர் கல்வியை முடித்த பின்பு சமுதாய வளர்ச்சிக்குரிய செயல்களில் பங்கு பெற இயலாதபோது மாணாக்கர்கள் உயர்கல்வியின் பயனற்ற தன்மையை உணருகின்றனர். உயர் கல்வி கற்றோரிடத்திலும் வேலையில்லாத் திண்டாட்டம் பரவலாகக் காணப்படுகிறது.

உயர் கல்வியில் தொழிற் கல்வி பற்றி டாக்டர் இராதா கிருஷ்ணன் கல்விக் குழு பயன் மிக்க பல பரிந்துரைகளைச் செய்துள்ளது. இக் கல்விக் குழுவின் பரிந்துரைகளின்படி :

1. பல்கலைக் கழகத்திற்கான கல்வி ஏற்பாட்டின் பொதுக் கல்வி, சுதந்திரப் போக்கும் திறனாய்வுத் தன்மையும் கொண்ட முற்போக்குக் கல்வி, வாழ்க்கைத் தொழிற் கல்வி ஆகிய மூன்று நோக்கங்களையும் அடைய உதவும் பாடங்களும் செயல்களும் இடம் பெற வேண்டும்.

2. தனது அறிவையும் பொருளறிவையும் ஆழப்படுத்திக் கொள்வதற்கும் விரிவடையச் செய்வதற்கும் பொதுக் கல்வி துணை புரியும்.

3. தாமாகச் சிந்தித்தல், ஆக்கச் சிந்தனை, திறனாய்வு அடிப்படையில் தீர்வு காணல் போன்றவற்றை முற்போக்குக் கல்வி மாணவர்களிடம் தூண்டி விடும். பாடத்திட்டத்தில் தத்துவம், பொருளாதாரம், உளவியல், சமூகவியல், சட்டம் போன்ற பாடங்களைச் சேர்க்கலாம்.

4. பல்கலைக் கழகங்களில் தொழிற் கல்வியைப் புகுத்த வேண்டும். தொழிற்கல்வி மாணாக்கர்களை வாழ்க்கைக்குத் தகுதியுள்ளவர்களாக உருவாக்குவது, தொழில் நுட்பத் திறனை வளர்ப்பது மட்டும் தொழிற் கல்வியின் நோக்கமன்று. சமூக, மனித மதிப்புகளை மதித்தல், உண்மை நிகழ்ச்சிகளை அறிவு நுட்பத்துடனும் நடுநிலையோடும் நோக்குதல் போன்ற பண்புகளையும் தொழிற் கல்வி மாணாக்கர்களிடம் வளர்க்க வேண்டும். தொழிற் கல்வி ஒரு மனிதனை ஒரு தொழிலுக்காக மட்டும் தயார் படுத்துவதாக இருக்கக் கூடாது. நம் குடியரசு சமுதாயத்தை உருவாக்குவதற்குத் தேவைப்படும் சமூகப் பொறுப்புகளைப் பற்றிய உணர்வையும் கடமைகளையும் உணரும்படிச் செய்ய வேண்டும். தொழிற் கல்வியில் விவசாயக் கல்வி, பொறியியற் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, வாணிபக் கல்வி, சட்டக் கல்வி மருத்துவக் கல்வி போன்றன அடங்கும்.

அனைத்துலகக் கல்விக்குழுவின் (1972) கருத்துகள்

தொழில் நுட்பவியல் கல்வி பற்றிய தனது முக்கிய கருத்துகளை அனைத்துலகக் கல்விக்குழு (International commission on Education, 1972) வாழக் கற்றல் (Learning to be) என்ற தலைப்புடன் வெளியிட்ட தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. அவை பின்வருமாறு.

1. நவீன உலகில் தொழில் நுட்பவியல் பற்றிப் புரிந்து கொள்ளல் இன்றியமையாததாகும். இது ஒவ்வொரு மனிதனின் அடிப்படைக் கல்வியிலும் ஒரு பகுதியாக அமைதல் வேண்டும்.

2. பெரும்பாலான மக்கள் தொழில்நுட்பவியலினால் பல நன்மைகளைப் பெறுகின்றனர். ஆனால் அவர்கள் அதனைக் கட்டுப்படுத்தவியலாது.

3. பல்வேறு பாடங்களைக் கற்பித்தலில் மேற்கொள்ளப்படும் முறைகளுக்கிடையே காணப்படும் வளையாத, இறுக்கமான தனிப் போக்கு அகற்றப்படல் வேண்டும்.

4. மொழிப்பாடம், வரலாறு, புவியியல், சமூகவியல், சமூக வாழ்க்கை ஆகியவற்றோடு தொழில்நுட்பவியல் கல்விக்கும் முக்கிய இடம் அளிக்கப் படல் வேண்டும்.

5. வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளின் அடிப்படையில்-தொழில் நுட்பவியலும் வேலையும், தொழில் நுட்பவியலும் ஓய்வு நேரமும், தொழில் நுட்பவியலும் சமூக அமைப்பும், தொழில்நுட்ப வியலும் செய்திப் போக்குவரத்தும், தொழில் நுட்பவியலும் சூழ்நிலையும் போன்றவற்றின் அடிப்படையில் பல்வேறு தொழில் நுட்பவியல் பிரச்சினைகளை அணுகி அவற்றிற்குத் தீர்வு காணல் வேண்டும்.

விவசாயக் கல்வி

1. இந்தியா ஒரு விவசாய நாடு என்பதால் விவசாயக் கல்வி நாட்டுப் பிரச்சினையாகக் கவனிக்கப்பட்டு, இதற்குத் தொடக்கக் கல்வி நிலை, உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலை, உயர் கல்வி நிலை ஆகிய நிலைகளின் பாடத் திட்டங்கள் யாவற்றிலும் முக்கிய இடம் அளிக்கப்படல் வேண்டும்.

2. விவசாயக் கல்வி, விவசாய ஆராய்ச்சி, விவசாயத் தொழிற்கொள்கை போன்ற பொறுப்புகள் இத் துறையில் அறிவும், அனுபவமும் பெற்றுள்ள வல்லுநர்களிடம் ஒப்படைக்கப் படல் வேண்டும்.

3. வேளாண்மைக் கல்லூரிகளில் செயல்முறைப் பயிற்சியும் ஆராய்ச்சியும் முக்கிய இடம் பெற வேண்டும்.

4. வேளாண்மைக் கல்லூரிகள் கிராமப்புறங்களில் அமைக்கப் பட்டுக் கிராமப் பல்கலைக் கழகங்களுடன் (Rural Universities) இணைக்கப்பட வேண்டும்.

5. வேளாண்மைக் கல்வி வளர்ச்சிக்குதவ விவசாயப் பண்ணைகள், ஆய்வுக் கூடங்கள், ஆராய்ச்சி மையங்கள் போன்றன அமைக்கப்படுவதுடன், ஏற்கெனவே செயற்பட்டுக் கொண்டிருப்பவை நன்முறையில் வளர்ச்சிபெறல் வேண்டும்.

6. விவசாய ஆராய்ச்சிக்கான இந்தியக் கழகம் (Indian council of Agricultural Research) சிறந்த முறையில் வளர்ச்சி பெறல் வேண்டும்.

பொறியியல் தொழில் நுட்பக் கல்வி

1. பொறியியல் நிறுவனங்களையும், தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களையும் நாட்டின் முதலீடாகக் கொண்டு இவற்றின் பயன்களை அதிகரிப்பதற்கு முயல வேண்டும்.

2. பல்வேறு நிலைகளில் பொறியியற் பள்ளிகள் தொடங்கப் பெற வேண்டும். இங்கு பல்வேறு தொழில்களுக்கான மேற்பார்வை யாளர் (Foreman), பணியாளர் (Craftsman), நுணுக்கப்படம் வரைவோர் (Draftsman), கண்காணிப்பாளர் (Overseer) போன்றோர்க்குப் பயிற்சியளிக்கலாம்.

3. பொறியியற் படிப்பில் பொதுக் கல்வியும் இடம் பெற வேண்டும்.

4. ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரிகளது தரத்தினை உயர்த்தலோடு மேலும் இத்தகைய புதிய கல்லூரிகள், உடனடியாகத் தேவைப்படும் பொறியியற் பணிகளை (Engineering services) அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்படவேண்டும்.

5. மாணாக்கர்கள் புத்தக அறிவைப் பெறுவதோடு தொழிற் சாலையில் செயல்முறை அறிவைப் பெறவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

6. இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்பப் பொறியியற் கல்வியின் பாடத் திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படுவது தேவை.

7. உயர் கல்விக்கான மத்திய ஆராய்ச்சித்துறை ஒன்றினை அமைத்திடுதல் வேண்டும்.

வாணிபக் கல்வி (Commercial Education)

1. வாணிபக் கல்வி பெறும் மாணாக்கர்கள் புத்தக அறிவு பெறுவதுடன் சில நிறுவனங்களில் செயலாற்றிப் பயிற்சி பெறுதல் வேண்டும்.

2. பட்டம் பெற்றபின் ஒருசில மாணாக்கர்கள் வாணிபத்தின் பல்வேறு துறைகளில் சிறப்புப் பயிற்சி பெறலாம்.

3. இவற்றில் போதிக்கப்படும் கல்வி புத்தகக் கல்வியாக இருத்தல் பயனற்றது. இவற்றுக்கான பாடத் திட்டத்தினைப் புதுப்பித்தலோடு, செய்முறைப் பயிற்சிக்கு முதலிடம் தருவது அவசியமாகும்.

வழி காட்டுதல் பற்றும் அறிவுரை பகர்தல்

மாணாக்கர்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு தங்களது எதிர்காலத்தைத் திட்டமிட வழி காட்டுதலும் அறிவுரை பகர்தலும் (Guidance and counselling) அவர்களுக்குத் தேவைப்படுவதாகும்.

முற்காலப் பள்ளிகளில்

மாணாக்கர்களுக்குத் தேவைப்படும் வழிகாட்டலும் அறிவுரை பகர்தலும் தமது பணிகளுள் அடங்கியுள்ளனவாக முற்காலப்பள்ளிகளது தலைமை ஆசிரியர்களும் பிற ஆசிரியர்களும் பொதுவாகக் கருதவில்லை. கல்விபற்றி ஓரளவு குறுகிய கருத்து அன்று பரவிக் காணப்பட்டது. கல்வி ஏற்பாடும் எல்லா வகைப் பட்ட மாணாக்கர்களுக்கும் ஒரே தன்மையதாக அமைந்திருந்தது. ஆனால் வழிகாட்டலும் அதனுடன் இணைந்த அறிவுரை பகர்தலும் இன்றைய கல்வி அமைப்பில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. இதன் விளைவாக ஆசிரியர்களது பணிகள் பொறுப்புகள் ஆகியவை பற்றிப் புதுக் கருத்துகள் எழுந்துள்ளன. முற்காலப் பள்ளிகளது முக்கிய நோக்கம், மாணாக்கர் யாவரும் பள்ளிக் கல்வியில் குறிப்பிட்ட ஓர் அளவேனும் தேர்ச்சியினைப் பெற அவர்களைத் தூண்டுவதாக அமைந்திருந்தது. இத்தேர்ச்சி அளவினை எவ்வாறு அவர்கள் அடைந்தனர் என்பது பற்றிப் பொதுவாக அன்றைய ஆசிரியர்கள் கவலைப்படவில்லை. தேர்ச்சிக்கான அளவை நிர்ணயிப்பதிலும் மாணாக்கர்களிடையே நுண்ணறிவு நாட்டங்கள் கவர்ச்சிகள் போன்றவற்றில் காணப் பட்ட தனியாள் வேற்றுமைகள் அவர்கள் கருத்தில் கொள்ள வில்லை. பள்ளிக் கல்வியில் குறிப்பிட்ட இத்தேர்ச்சித் தரத் தினை எட்ட முடியாத மாணாக்கர்கள் தண்டிக்கப்பட்டனர். இத்தேர்ச்சித் தரம் பெறாத இம்மாணவர்களை அவ்வகுப்பிலேயே அடுத்த ஆண்டும் நிறுத்தி வைக்கப்படுவது பொதுவாக மேற் கொள்ளப்பட்டது. சிலபோது இத்தகைய மாணாக்கர்கள் பள்ளியைவிட்டு நீக்கப்படுவதும் உண்டு. எக்காரணங்களினால்

சில மாணாக்கர்கள் பள்ளிக் கல்வியில் போதிய தேர்ச்சியினை அடையவில்லை என்பதனை அன்றைய ஆசிரியர்களில் பலர் கண்டுபிடிக்க முயலவில்லை. இம்மாணாக்கர்களது நிலையின் பின்னமைந்துள்ள காரணங்களைக் கண்டு பிடித்து அவற்றை நீக்குவதன் வழியே அம்மாணாக்கர்களுக்கு வழி காட்டி உதவுவது தங்களது பொறுப்புகளில் ஒன்றென்பதனையும் அவர்கள் பொதுவாக ஏற்கவில்லை, முற்காலப் பள்ளிகளில் எல்லா மாணாக்கர்களுக்கும் ஏட்டுக்கல்விக்கான வாய்ப்பு மட்டுமே அளிக்கப்பட்டது. ஏட்டுக் கல்வியில் அடங்கிய பாடங்கள் எல்லாமே எல்லோர்க்கும் கட்டாயப் பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன. எனவே பல்துறைப் பாடங்களில் தனது ஆற்றலுக்கும் கவர்ச்சிக்கும் ஏற்ற ஒன்றினைத் தேர்ந்தெடுத்தலில் மாணாக்கர்களுக்கு ஆசிரியர் வழிகாட்டல் என்னும் பிரச்சினை முற்காலப் பள்ளிகளில் அன்று எழவில்லை. கல்வியின் இறுதி நோக்கம் மாணாக்கர்களது உள்ளங்களைப் பண்படுத்துவதும், பரந்த வாழ்க்கை நோக்கினை (Liberal outlook) அவர்கள் பெற உதவுதலும் ஆகும் என்று கருதப்பட்டதன் விளைவாக அவர்களுக்குத் தொழில் தேர்வில் வழி காட்டுவதற்கான (Vocational Guidance) தேவையும் முற்காலப் பள்ளிகளில் எழவில்லை. மற்றும், பள்ளிக் கல்விக்குப் புறம்பான, மாணாக்கர்களது தனிப்பட்ட பிரச்சினைகள் (Personal problems) பற்றியும், அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் வழி காட்டுதல் (Personal Guidance) பற்றியும் அக்காலப் பள்ளி ஆசிரியர்கள் கவனம் செலுத்தவில்லை. பள்ளிக்கும் இப் பிரச்சினைகளுக்கும் தொடர்பு ஏதுமில்லை என்றே இப் பள்ளி ஆசிரியர்கள் கருதினர். இவை மாணாக்கர்களது உள நலத்தைக் கெடுத்து அவர்களது நல் வளர்ச்சியில் குறுக்கிட்டு, அவர்களது கல்வித் தேர்ச்சியினைப் பாதிக்கக் கூடும் என்பதனையும், சில போது இப் பிரச்சினைகள் அம் மாணாக்கர்களை நெறி பிறழ் நடத்தையில் ஈடுபடுத்தவும் கூடும் என்பதனையும், அக் காலப் பள்ளி ஆசிரியர்கள் பலர் போதிய அளவு உணர்ந்திருக்கவில்லை என்றே தோன்றுகிறது.

இன்றைய பள்ளிகளில்

இன்று கல்வியின் இயல்பு, நோக்கங்கள் ஆகியன பற்றிக் கல்வியாளர்களிடையே பல புதிய கருத்துகள் எழுந்துள்ளன. மாணாக்கர்களது ஆளுமை, இசைவு பெற்ற முழு வளர்ச்சியினைப் பெற வாய்ப்புகளை அமைத்துத் தருவது பள்ளிக் கல்வியின் இறுதி நோக்கமாகும் என்பது இப்போது யாவராலும் ஏற்றுக்

கொள்ளப்பட்டுள்ளது. மாணாக்கர்களது உடல், அறிவு, செய் திறன்கள், நல்லொழுக்கம், அழகுணர்ச்சி சமூகவியல்பு ஆகிய யாவற்றின் வளர்ச்சிக்கும் பள்ளிக் கல்வி உதவ வேண்டும் மற்றும், எல்லா மாணாக்கர்களுக்கும் ஒரே வகைப்பட்ட கல்வி பயனற்றது என்பதும் இன்று தெளிவாக உணரப்பட்டுள்ளது. இன்றைய கல்வி அமைப்பில் மாணாக்கர்களது பலதிறப்பட்ட கவர்ச்சிகளுக்கும் திறன்களுக்கும் ஏற்பப் பல நோக்கங்களை யுடைய பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப் பட்டு வருகின்றன. இவற்றுள் எதனைத் தேர்ந்தெடுப்பது என்னும் பிரச்சினைக்குச் சரியான விடையினைக் காண மாணாக் கர்களுக்கு வழி காட்டல் தேவைப்படுகிறது.

பள்ளிக் கல்வியின் அடிப்படையே தொழில் நோக்கமாகும் என்ற தீவிரமான கருத்தினை நாம் ஏற்றுக்கொள்ள இயலா தெனினும், பிற்கால வாழ்க்கைக்கு உதவக் கூடிய தொழில் திறன்களை உயர்நிலைப் பள்ளிகளில் இறுதியாண்டுகளில் மாணாக்கர்களிடையே வளர்க்க வேண்டிய தேவையை நாம் முழுமையாகப் புறக்கணிக்க முடியாது. இதனால் தொழில் தேர்வுக்கான வழி காட்டல் (Vocational Guidance) இந் நிலையில் தேவைப்படுவதாகும். தங்களுக்கு ஏற்ற பாடங்களையும் பிற்கால வாழ்க்கைத் தொழில்களையும் தேர்ந்தெடுத்தல் மாணாக்கர் களுக்கு மன நிறைவை அளிப்பதோடு அவர்களது காலமும் சக்தியும் பயனற்று வீணாவதையும் இது தடுக்கவல்லது. மாணாக் கர்களது வாழ்க்கையில் எழக்கூடிய தனிப்பட்ட பல சிக்கல் களையும் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்ள அவர்களுக்கு உதவுதலும் பள்ளிகளின் பொறுப்பாகும் என்பதும் இன்று உணரப்பட்டுள்ளது. இத்தகைய பிரச்சினைகளும் சிக்கல்களும் ஏழ்மை நிலை பெற்றோர்களது தவறான மனப்பான்மைகள், தீய குடும்பச் சூழ்நிலை மன அலைப்பைத் தரக்கூடிய சுற்றுப்புற நிலை போன்றவற்றின் விளைவாக எழக்கூடும். இவை மாணாக்கர்களது கல்வி முன்னேற்றத்தில் குறுக்கிடு வதுடன் அவர்களது உள்ளத்தில் மனமுறிவுகளைத் தோற்று வித்து, அவர்களிடையே தாழ்வு மனப்பான்மையினைத் தோற்று விக்கக் கூடும். மாணாக்கர்களது வளர்ச்சிக்கான அவர்களது குடும்பப் பணிகளில் உதவுவது, மாணாக்கர்களது சூழ்நிலையில் காணப்படக் கூடிய குறைபாடுகளைக் களைவது போன்றனவும் இன்று பள்ளிகளது பொறுப்புகளில் இடம் பெற்றுள்ளன. இத்துறை களில் வழிகாட்டல் தேவைப்படுவதாகும். ஆகவே பள்ளிக் கல்வியின் தொடக்கநிலை முதற்கொண்டு இறுதி நிலை வரை

வழி காட்டல் கல்வி அமைப்பின் இன்றியமையாப் பகுதியாகக் காணப்படுகிறது. கல்வி நிலையில் ஏதாவது ஒரு கட்டத்தில் வழி காட்டல் புறக்கணிக்கப்படுமாயின் அது அடுத்து எழும் வளர்ச்சி யினைப் பாதிக்கும்.

இன்று பள்ளிகளில் கல்வியில் வழிகாட்டல் (Educational Guidance), தொழில் தேர்வில் வழிகாட்டல் (Vocational Guidance) வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் வழிகாட்டல் (Personal Guidance) ஆகியவற்றுக்கான வாய்ப்புகளின் இன்றி யமையாமை நன்கு உணரப்பட்டுள்ளது. இத் துறைகளில் மாணாக்கர்களுக்கு வழிகாட்டி உதவ முற்படும் ஆசிரியர் பின்வரும் கருத்துகளை மனதில் கொள்ள வேண்டும்.

1. வழிகாட்டலில் மாணாக்கர்களிடையே காணப்படும் தனியாள் வேற்றுமைகள் உணரப்பட்டு அவற்றிற்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

2. உயர் கல்விக்கான பல்வேறு வாய்ப்புகள், இவற்றை அளிக்கும் கல்வி நிலையங்கள், பலவகைப்பட்ட வாழ்க்கைத் தொழில்கள் ஆகியன பற்றிய திருத்தமான முழு விவரங்கள் மாணாக்கர்களுக்குத் தொடர்ச்சியாக அளிக்கப்படவேண்டும்.

3. கல்வியில் வழிகாட்டல், தொழில் தேர்வில் வழிகாட்டல், வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதில் வழிகாட்டல் ஆகியன மாணாக்கர்களது வளர்ச்சி நிலைகள் யாவற்றிலுமே அளிக்கப்படவேண்டும்.

4. மாணாக்கர்களது பொருளாதாரநிலை, நாட்டங்கள், கவர்ச்சிகள் போன்றவற்றில் தொடர்ந்து மாற்றங்கள்நிகழக்கூடும். இவற்றிற்கு ஏற்ப வழிகாட்டலும் அவ்வப்போது மாறுதல்கள் செய்யப்படுதல் இன்றியமையாததாகும்.

5. வழிகாட்டல் பயனற்றுப் போகும் வகையில் காலம் தள்ளி அளிக்கப்படுவதோ அல்லது தேவைக்கு வெகுமுன்னரே அது அளிக்கப்படுவதோ தவறாகும்.

தங்களது ஆற்றல்கள், கவர்ச்சிகள், நாட்டங்கள், ஆளுமைத் தேவைகள் ஆகியவற்றுடன் தொடர்புடையனவும் அவற்றுக்குப் பொருத்தமானவையுமான பாடப் பொருள்களையும், கல்விச் செயல்களையும் தேர்ந்தெடுத்தலில் கல்வித் தேர்வில் வழிகாட்டல் மாணாக்கர்களுக்கு உதவுவதாகும். இதற்கு மாணாக்கர்களது திறன்களையும், நாட்டங்களையும் உணர்வது அடிப்படையாகும்.

உள அளவியல் (Psychometry) முறைகளைப் பயன்படுத்தி இவற்றினின்றும் பெறப்படும் விவரங்களைப் பதிவு செய்து வைத்தல் இதற்குத் தேவைப்படும். பெற்றோர்களுடன் தொடர்பு கொண்டு மாணாக்கர்களது குடும்பச் சூழ்நிலையின் தன்மையை உணர்தலும் இதற்கு அவசியமானதாகும். கல்வித் தேர்வில் மாணாக்கர்களுக்கு வழிகாட்டுவதற்கென்று பள்ளிகளில் சிறப்புப் பயிற்சி பெற்ற அறிவுரை பகர்வோர் (Counsellors) இருத்தல் மிக்கப் பயனுள்ளதாகும். பல்துறைப் பாடங்களுக்கான வாய்ப்புகள் மாணாக்கர்களுக்குப் பயனுள்ள வகையில் செயற்பட இத்தகைய வழிகாட்டல் இன்றியமையாததாகும்.

கல்வியில் வழிகாட்டல் (Educational Guidance)

கல்வியின் எல்லா நிலைகளிலுமே வழிகாட்டல் தேவைப்படுவதாகும். தொடக்கக் கல்வி நிலையில் நற்பழக்கங்கள், நன்மனப்பான்மைகள் ஆகியவற்றைப் பெறுவதில் குழந்தைகளுக்குப் பயிற்சியளித்தல் இந்நிலைக்கான கல்வி வழிகாட்டுதலாக அமையும். தனது ஆற்றல்களை ஓரளவு உணர்ந்து, விரிவடையும் சூழ்நிலையுடன் பொருத்தப்பாட்டினைப் பெறுவதற்கான பயிற்சியும் இதனுள் அடங்கும். வழிகாட்டலுக்கான அடிப்படைகள் இந்நிலையில் நன்கு அமைக்கப்படின் அடுத்து வரும் கல்வி நிலைகளில் பிரச்சினைகளும் சிக்கல்களும் அதிக அளவில் எழமாட்டா. தொடக்கநிலையில் கல்விக்கான வழிகாட்டலில் மூன்று முக்கிய இலக்குகள் உள்ளன. கல்வி வளர்ச்சிக்கான நல்ல அடிப்படைகளை ஒவ்வொரு குழந்தைக்கும் அளித்தல் முதல் இலக்காகும். பள்ளிக் கல்வியின் தொடக்க வகுப்புகளுடன் நம் நாட்டில் பல குழந்தைகள் தமது படிப்பை நிறுத்தி விடுகின்றனர். மேலும் தொடர்ந்து படிக்க இவர்களை ஊக்குவிக்கும் ஏதுக்கள் இவர்களைப் பொறுத்தவரையில் செயற்படுவதில்லை. தமது நல்வாழ்வுக்கு முழுமையான சிறந்த கல்வி எவ்வாறு இன்றியமையாதது. கல்வி எவ்வாறு தமது பிற்காலத்தை வளம்பெறச் செய்யும் என்பன பற்றிய உணர்வு இவர்களுக்கு இருப்பதில்லை. குழந்தைகளது உள்ளத்தில் இத்தகைய உணர்வினைத் தோற்றுவித்து தொடக்கப் பள்ளிகளில் எழும் தேக்கத்தையும் வீணாதலையும் தவிர்க்க உதவுவது தொடக்க நிலையில் கல்வி வழிகாட்டலின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் தமது திறன்களுக்கும், கவர்ச்சிகளுக்கும் ஏற்ற பாடங்களைத் தேர்ந்தெடுக்க உதவும் ஆயத்தப் பயிற்சியும் தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகளுக்கும் அளிக்கப்பெறுதல் வேண்டும். மற்றும் பள்ளிக்கல்வியின்

முழுப்பயனைப் பெறக் குழந்தைகளுக்கு உதவுதலும் வழி காட்டலின் ஓர் இலக்காக இந்நிலையில் அமைகிறது. இதில் குறையறிதலும் குறைதீர் கற்பித்தலும் அடங்கும்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் வழிகாட்டல் மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் நோக்கங்களைப் பற்றிய அறிவினை ஒவ்வோர் உயர்நிலைப் பள்ளி மாணாக்கனும் பெறவேண்டும். அடிப்படையில் எல்லோருக்கும் பயனுள்ள பொதுக்கல்வி, பலருக்கு வேலை பெறுவதற்கு உதவும் தொழிற் கல்விப் பயிற்சி, சிலருக்கு உயர் கல்விக்கான ஆயத்தப் பயிற்சி ஆகியன இந்நோக்கங்களாக அமைகின்றன. சிறிய வகுப்புச் சொற்பொழிவுகளின் வழியே இந்நோக்கங்களைப் பற்றிய அறிவு தொடர்ச்சியாக மாணாக்கர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். கற்றலிலும் பிற்கால வாழ்க்கைக்கும் நன்கு சிந்தித்துத் திட்டமிடுதலின் இன்றியமையாமை மாணாக்கர்களுக்குத் தெளிவு படுத்தப்படவேண்டும். வளர்ச்சி பெற்றுள்ள தமது திறன்கள், நாட்டங்கள், கவர்ச்சிகள், தமது பொருளாதார நிலை ஆகியவற்றுக்கு ஏற்ற முறையில் பாடங்களைத் தேர்ந்தெடுக்கவும் மாணாக்கர்களுக்கு இந்நிலையில் வழிகாட்டுதல் உதவவேண்டும். இதற்கு அடிப்படையாகத் திரள்பதிவுகள் (Cumulative Records) தொகுக்கப்படுதல் இன்றியமையாதது. பல்வேறு பாடங்களின் தன்மை பற்றியும் இவற்றோடு இணைந்துள்ள வேலைவாய்ப்புகளைப் பற்றியும், தொழிற் பள்ளிகள், உயர்கல்வி நிலையங்கள் போன்றவை பற்றியும் மாணாக்கர்களுக்குப் போதிய விவரங்கள் தரப்படவேண்டும். மற்றும், நன்கு படிக்கும் ஆற்றலை மாணாக்கர்களிடையே வளர்ப்பதும் இந்நிலைக்கான கல்வி வழிகாட்டலில் அடங்கும்.

கல்லூரிக் கல்வி நிலையிலும் வழிகாட்டல் அவசியமாகும். குறிப்பிட்ட நோக்கம் ஏதுமின்றிக் கல்லூரிகளில் சேர்ந்து திகைக்கும் மாணாக்கர்களுக்கு உதவுதல் இதில் ஒரு பகுதியாக அமையும். உயர்நிலைப் பள்ளிக் கட்டத்திலேயே வழிகாட்டல் திட்டம் நன்கு செயற்படுத்தப்பட்டால் கல்லூரிப் படிப்பினால் பயன் பெற முடியாதோர் பயனுள்ள வேறு துறைகளில் செல்வர். கல்லூரிக் கல்விக்கு ஏற்ற திறனும் ஆர்வமும் உள்ளோர் அதனின்றும் முழுப் பயனைப் பெற உதவுதல், கல்லூரி வகுப்புகளில் ஏற்ற பாடங்களைத் தேர்ந்தெடுத்தலில் அவர்களுக்கு உதவுதல், நூலக வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தலில் அவர்களுக்கு உதவுதல், படித்துக் குறிப்புக்களை எடுத்தலில் அவர்களுக்குப் பயிற்சியளித்தல் போன்ற யாவும் கல்லூரி மாணாக்கர்களுக்கான கல்வி வழி காட்டலில் அடங்கும்.

தொழில் தேர்வில் வழிகாட்டடல் (Vocational Guidauce)

தொழில் தேர்வில் வழிகாட்டடல் எனப்படுவது ஓரளவு கல்வியில் வழிகாட்டுதலுடன் இணைந்ததாகும். தொழில் தேர்வில் வழிகாட்டடல் பின்வரும் காரணங்களினுல் தேவைப்படுவ தாகும்.

1. உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்குப்பின் பலர் கல்லூரிக்குச் செல்லாமல் தொழில்களை நாடுகின்றனர்.

2. தமது திறன்களுக்கேற்ற தொழிலைத் தாமாகவே சிந்தித்துத் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் குமரப் பருவத்தினரிடம் போதிய அளவு இருப்பதாகக் கூறமுடியாது.

3. உள நலத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்க்கையில் விளங்க ஒவ்வொருவரும் தனக்கேற்ற தொழிலைத் தேர்ந்தெடுத் தலுடன் அதில் வெற்றி பெறுவதற்கான ஆயத்தத்தையும்,பயிற்சி யினையம் பள்ளிக் காலத்திலேயே பெற வேண்டியது அவசியமாகும்.

தொழில் தேர்வில் வழிகாட்டடலில் நாட்டச் சோதனைகள் நடுவிடம் பெறுகின்றன. பெரிய உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் தேர்வுக்கு உதவும் சிறப்பாசிரியர்கள் (Career Masters) நியமிக்கப்படுகின்றனர். தொழில் தேர்வில் வழி காட்டலுக்கும் திரள் பதிவுகள் தொகுக்கப்படுதல் இன்றியமையாததாகும். மத்திய அரசும் மாநில அரசுகளும் இன்று பொருத்தமான வாழ்க்கைத் தொழில்களை மாணாக்கர்கள் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு உதவப் பல வழிகளையும் முறைகளையும் கையாளு கின்றன. பல்வேறு தொழில்களின் இயல்பு இவற்றுக்கான வாய்ப்புகளின் எண்ணிக்கை, இவற்றினைத் தேர்ந்தெடுக்கத் தேவைப்படும் முற்பயிற்சி எத்தகையது போன்றன பற்றிய பல விவரங்கள் அடங்கிய சிறு நூல்கள் அரசினரால் வெளியிடப் படுகின்றன. இவற்றைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பயன் படுத்தலாம். தொழில் தேர்வில் வழி காட்டடல் தொழில் துறையில் பணியாட்களைத் தேர்ந்தெடுத்தலோடு (Vocational Selection) தொடர்புடையதாகும். தொழில் தேர்வுக்கு வழிகாட்டடல் என்பது குறிப்பிட்ட ஒரு தொழிலுக்குத்தான் ஒரு மாணாக்கன் ஏற்றவன் என்று அவனை வழிப்படுத்துவதன்று. தொடர்புடைய பல வேலைகளை உள்ளடக்கிய தொழில் பரப்புகளில் (Broad Vocational Areas) ஒன்றில் அடங்கிய தொழில்களையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பரப்புக்களில் அடங்கியுள்ள

தொழில்களையோ மாணாக்கன் மேற்கொள்வதற்கு உதவுவதாகவே தொழில் தேர்வில் வழிகாட்டல் அமையும்.

வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் வழிகாட்டல்

தனிப்பட்ட வாழ்க்கையில் மாணாக்கர்களுக்கு எழும் பல பிரச்சினைகளையும், சிக்கல்களையும் தீர்ப்பதில் அவர்களுக்கு வழிகாட்டல் (Personal Guidance) இன்று அவசியமாகும். இதன் தேவைக்குப் பல காரணங்கள் உள்ளன.

1. இன்றைய வாழ்க்கை சிக்கல் மிகுந்தும் பிரச்சினைகள் நிறைந்தும் காணப்படுகிறது. இவற்றை எதிர்த்து வெற்றி பெற குமரப் பருவத்தினருக்கு அறிவுரை பகர்தலும் (Counselling) வழிகாட்டுதலும் தேவைப்படுகின்றன.

2. பல மாணாக்கர்களது குடும்பச் சூழ்நிலையும் அவர்களது சமுதாயச் சூழ்நிலையும் நன்கு அமையாதிருத்தலின் விளைவாக அவர்களது வாழ்க்கையில் பல பிரச்சினைகள் எழுகின்றன. காப்புணர்ச்சியினைப் பெற்றிராமை, அன்பும் பரிவும் இல்லாமை போன்றனவும் மாணாக்கர்களிடையே பொருத்தப்பாடின்மையைத் (Maladjustment) தோற்றுவித்து, அவர்களது உள நலத்தினைக் கெடுக்கக் கூடும். இதனைத் தவிர்ப்பதற்கு அறிவுரை பகர்தலும் வழிகாட்டுதலும் (Counselling and Guidance) அவர்களுக்குத் தேவை.

3. குமரப்பருவ மாணாக்கர்களிடம் பாலுணர்ச்சி (Sex urge) பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. தகுந்த வழி காட்டுதலின்றி இவை மாணாக்கர்களைக் குழப்பத்திலும், கவலையிலும், மனவெழுச்சி சிக்கல்களிலும் ஆழ்த்தக் கூடும். இப் பிரச்சினைகளின் காரணங்களைக் கண்டு பிடித்து அகற்றி, மாணாக்கர்கள் மனவெழுச்சிச் சமநிலையும் உள நலமும் எய்தலில் வாழ்க்கை வழிகாட்டுதலும் அறிவுரை பகர்தலும் உதவுகின்றன.

இவ் வகை வழிகாட்டலின் அடிப்படையாக உள நலவியல் (Mental Hygiene) அமைகிறது. இவ்வகை வழிகாட்டல் முக்கியமானது; அதேபோது கடினமானது. இதில் ஆசிரியரது சிறப்புமிக்க வாழ்க்கையும் மாணாக்கர்களது நலனில் அவர்கொண்டுள்ள அன்பும் பரிவும் முக்கிய பங்கினைப் பெறுவனவாம்.

பொதுவாக வழிகாட்டல் செயல் முறையில் நான்கு படிகள் அடங்கியுள்ளன. இவை பின்வருமாறு.

1. தன்னைத்தானே உணர்தல், தனது திறன்கள் கவர்ச்சிகள் ஆகியன பற்றிய அறிவினைப் பெறல் (Appraisal and self-understanding).
2. தனது திறன்கள், கவர்ச்சிகள் ஆகியவற்றுக்கு ஏற்பத் தனது வாழ்க்கையைத் திசைப்படுத்திக் கொள்ளல் (Orientation).
3. தனது சூழ்நிலையுடன் சிறப்பான பொருத்தப் பாட்டினைப் பெறல் (Adjustment).
4. இதன் விளைவாக நல்ல வளர்ச்சியைப் பெறுதல் (Development).

இந் நான்கு படிகளிலும் வழிகாட்டியின் துணை மாணாக்கர் களுக்குத் தேவைப்படும். வழி காட்டுதல் திட்டம் பள்ளிகளில் நன்கு செயற்படுதலின் பயனாக மாணாக்கர்கள் நல் வளர்ச்சி பெறுவர்; கல்வித் தரம் உயரும். சமூகமும் சிறப்பான முன்னேற்றத்தினை அடையும்.

பள்ளிகளில் மாணாக்கர்களுக்குப் பல்வேறு துறைகளில் அறிவுரைகளை வழங்கி அவர்களுக்கு வழி காட்டுவோரிடம் பின் வரும் பண்புகள் காணப்படல் வேண்டும்.

1. மாணாக்கர்களது இயல்புகள் பற்றியும் அவர்கள் எதிரே தோன்றும் பலவகைப் பிரச்சினைகளின் தன்மைகள் பற்றியும் இவர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

2. அறிவுரை பகர்தலில் பயன்படுத்தப்படும் நுண்முறைகள் உள நலவியல் கருத்துகள், உள அளவியல், சமூக அளவியல் முறைகள், சோதனைகளினின்றும் பெறப்பட்ட முடிவுகளைப் பதிவு செய்து ஆராயும் முறைகள் ஆகியவற்றில் இவர்கள் சிறப்புப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

3. பல்வேறு தொழில்களுக்கான வாய்ப்புகள் இவற்றிற்கான பயிற்சியின் இயல்புகள் (Occupational Opportunities and requirements) ஆகியன பற்றிய பரந்த அறிவினை இவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

4. மாணாக்கர்கள், பிற ஆசிரியர்கள், பெற்றோர்கள், தொழில் துறையினர் போன்ற பலருடன் ஒத்துழைத்துச் செயற் படத் தேவையான காலமும் மனப்பாங்கும் இவர்களிடம் காணப்படவேண்டும்.

5. திரைப்படங்கள் தொழில்களைப் பற்றித் துண்டு வெளியீடுகள் (Pamphlets) போன்ற பலவற்றை வழி காட்டலில் நன்கு பயன்படுத்தக் கூடிய திறனும் இத்தகையோர் பெற்றிருத்தல் வேண்டும்.

மாணாக்கர்களுக்கு நல் வழி காட்டி அவர்களது நடத்தையினை நெறிப்படுத்தி அவர்கள் உடல் நலத்துடனும் உளநலத்துடனும் சிறப்பான வளர்ச்சி பெற உதவும் ஆசிரியர்கள் தமது வாழ்க்கையினையும் சிறப்பாக அமைத்துக் கொண்டு நலனுடன் செயலாற்றுதல் இன்றியமையாததாகும். ஆசிரியர்கள் சிறந்த பொருத்தப்பாட்டினைப் பெற்று உள நலத்துடன் வாழ டாக்டர் மெனிங்கர் (W. C. Menninger) என்னும் உள மருத்துவ அறிஞர் குறிப்பிடும் பின்வரும் கருத்துகள் பயனுள்ளனவாகும்.

1. வாழ்க்கையில் பிரச்சினைகளே எழாமல் இருத்தலின் விளைவாகத்தான் உள நலம் பெறவியலும் என்று ஆசிரியர்கள் எண்ணக் கூடாது.

2 வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் பிரச்சினைகளும் போராட்ட நிலைமைகளும் எழத்தான் செய்யும். இவற்றை எதிர் நோக்கித் தீர்ப்பதிலேதான் உளநலம் அமைவதாகும்.

3. பிறரோடு நட்பு முறையில் பழகுவதை ஆசிரியர்கள் விரும்ப வேண்டும்.

4. தமது தொழில் வாழ்க்கையில் மகிழ்ச்சியுடன் சலிப்பின்றிச் செயலாற்றுவதில் ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

5. தமது மனச்சோர்வுக்குத் தாமே சிலபோது காரணமாக இருக்கக்கூடும் என்பதனை ஆசிரியர்கள் மறத்தல் கூடாது.

6. தமது நடத்தையின் பின்னமைந்துள்ள காரணிகளை அவ்வப்போது ஆராய்தல் ஆசிரியர்களுக்குப் பயனுள்ளதாகும். இதற்கு உளவியலறிவு துணை செய்வதாகும்.

7. புதிய கருத்துகளையும் செயல்முறைகளையும் பள்ளியில் ஆசிரியர்கள் பயன்படுத்த முற்படுவதும், தமது கற்பித்தல் செயலைத் திட்டமிட்டு மேலும் பயனுடையதாக அமைக்க முயலுவதும் ஆசிரியர்களுக்கு வாழ்க்கையில் புது உற்சாகத்தையும் புதிய நோக்கத்தினையும் அளித்து அவர்களது உளநலனுக்கு உதவும்.

8. தமது தொழிலுக்குப் புறம்பான பொழுதுபோக்கு, செயல்களை ஓய்வு நேரத்தில் பயிலுதல் ஆசிரியர்களுக்குப் பயனுள்ளதாகும்.

9. பிற தொழில் உறுப்பினர்களான நண்பர்களைப் பெற்றிருத்தல் விரும்பத்தக்கதாகும்.

10. மனவெழுச்சி முதிர்ச்சி பெற முயலுதல் ஆசிரியர்கள் உள நலம் பெறுவதற்கு உதவும்.

டாக்டர் ஏ. எல் முதலியார் கல்விக் குழு

கல்வியில் பல்துறைப் பாடங்களை அறிமுகம் செய்தபின் மாணாக்கர்கள் தமது ஆற்றலுக்கும் கவர்ச்சிகளுக்கும் ஏற்பத் தேர்ந்தெடுக்க வேண்டிய பாடத்தைப் பற்றியும் தொழிலைப் பற்றியும் வழி காட்டவும் அறிவுரை பகரவும் வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களை வந்தடைகிறது. தமது திறன்களைப் பற்றியும் நாட்டங்களைப் பற்றியும் மாணாக்கர்கள் உணர்வதோடு, அவர்கள் சரியானமுறையில் பயிற்றுவிக்கப்பட்டு பொருத்தமான தொழிலைத் தேர்ந்தெடுப்பதும், சமூகப் பொருத்தப்பாட்டைப் பெறுவதும் அவசியமாகும். மாணாக்கர்கள் தங்களது உள்ளார்ந்த சக்தியினையும், திறன்களையும், கவர்ச்சிகள் நாட்டங்கள் மற்றும் ஆளுமைப் பண்புகளையும் அறிந்து கொள்ள வழிகாட்டல் உதவுகிறது. மேலும் பல்வேறு கல்வி வாய்ப்புகள் பற்றிய அறிவையும், வேலை வாய்ப்புகளைப் பற்றியும் மாணாக்கர்கள் அறிந்து கொள்ளத் துணை புரிகிறது. தங்களுக்குப் பொருத்தமான கல்வியையும், தொழிலையும் மாணாக்கர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடிகிறது. சுற்றுப்புற, சமூக, கல்வி, தொழில் தொடர்பான சூழ்நிலைகளைப் பற்றி ஆராய்ந்தறிந்து அவற்றிற் கேற்பத் தமது நடத்தையைப்பொருத்தி அமைத்துக் கொள்ளவும் மாணாக்கர்களுக்கு வழிகாட்டல் உதவுகிறது.

வழிகாட்டல் என்பது மாணவ, மாணவியர் தம் வருங் காலத்தைப் புத்திசாலித்தனமாகத் திட்டமிட்டுக் கொள்ள உதவு வதாகும். வழிகாட்டல் இல்லாதபோது மாணாக்கர்கள் அறியாமல் தமது இயல்புக்கும் திறமைக்கும் பொருத்தமற்ற பணிகளைத் தேர்ந்தெடுத்து அதில் வெற்றி காண இயலாமல், இதன் விளைவாக மனச்சோர்வையும், தோல்வியையும், பொருத்தப் பாடற்ற தன்மையையும் பெற நேரிடும். இது தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் பெரிய இழப்பாகும். கல்வியிலும், சமுதாய நோக் கிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பல மாற்றங்களைப்பற்றி மாணாக்கர்கள் அறிந்து கொள்ள வழிகாட்டல் அவசியமாகும்.

பல்வேறு தொழில்கள், வேலைகள் போன்றவற்றின் தன்மை பரப்பு இவற்றுக்கான பண்புகள், தேவைப்படும் பயிற்சி போன்ற வற்றைப் பற்றி உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்களுக்குத் திரைப் படங்கள், விளக்கவுரைகள், சிறு நூல்கள் தொழில் நிறுவனங் களைப் பார்வையிடல் போன்ற வழியே அறிவு அளிக்கப்பட வேண்டும். எல்லாப் பள்ளிகளிலும் பயிற்சி பெற்ற வழிகாட்டும் அலுவலர்களும் (Guidance Officers) தொழில் தேர்வுக்கு அறிவுரை கூறும் சிறப்பாசிரியர்களும் (Career Masters) நியமிக்கப்பட வேண்டும். இத்தகையோரது பயிற்சிக்கான மையங்களைத் திறப்பது மத்திய அரசின் பொறுப்பாக இருத்தல் வேண்டும். இப்பயிற்சி நிலையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்படுத் தப்படவேண்டும்.

டாக்டர் கொத்தாரிக் கல்விக்குழு

கல்வியின் எல்லா நிலைகளிலும் வழிகாட்டுதலும் அறிவுரை பகர்தலும் (Guidance and Counselling) தேவைப்படுகின்றன. கல்வி அமைப்பின் இன்றியமையாத பகுதிகளாக இவை கருதப் படவேண்டும்.

தொடக்கக் கல்வி நிலையில்

1. குறையறி சோதனைகளைப் பயன்படுத்துதல், தனியாள் வேற்றுமைகள் பற்றி உணர்தல் ஆகியன வழியே தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் வழிகாட்டலுக்கு அறிமுகப்படுத்தப்படவேண்டும்.
2. தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி யின் மூலமாக வழிகாட்டல் பற்றிய அறிவு அளிக்கப்பட வேண்டும்.
3. பல்வேறு தொழில்களைப் பற்றிய சிறு விளக்க நூல் களைத் தயாரித்து வெளியிடுதல் வேண்டும்.
4. மேலும், எத்தகைய கல்வியை நாடலாம் என்பது பற்றி மாணாக்கர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உதவுதல் வேண்டும்.

உயர்நிலைப்பள்ளிக் கல்வி நிலையில்

1. உயர்நிலைப்பள்ளி நிலையில் ஒவ்வொரு மாணாக்கனது ஆற்றல்களையும், கவர்ச்சிகளையும் கண்டுபிடிப்பதிலும் இவற்றை வளர்ப்பதிலும் வழிகாட்டல் துணைபுரிய வேண்டும்.

2. எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் பயிற்சி பெற்ற அறிவுரை பகர்வோரது மேற்பார்வையில் வழிகாட்டல் சேவை எல்லா மாணாக்கர்களுக்கும் கிடைக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. பொருளாதாரநிலை காரணமாக எல்லாப் பள்ளிகளுக்கும் வழிகாட்டல் சேவை கிடைப்பதற்காகப் பத்துப் பள்ளிகளுக்கு ஓர் அறிவுரை பகர்வோர் நியமிக்கப்படவேண்டும் பள்ளிகளைப் பார்வையிடும் இவருக்குப் பயிற்சி பெற்ற அப்பள்ளி ஆசிரியர் ஒருவர் துணைபுரிய வேண்டும்.

4. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பள்ளியை மாதிரியாகத் தேர்ந்தெடுத்து அதில் விரிவான வழிகாட்டல் திட்டத்தினைச் செயற்படுத்த வேண்டும்.

5. இத்திட்டத்தை மேற்பார்வையிட மாநில வழிகாட்டல் செயலகத்தில் (State Bureau of Guidance) மேற்பார்வை அலுவலர்கள் நியமிக்கப்படவேண்டும்.

6. வழிகாட்டல் பணிக்கான அலுவலர்களுக்குப் போதிய பயிற்சியை மாநில வழிகாட்டல் நிலையமும் பயிற்சிக் கல்லூரிகளும் அளிக்க வேண்டும். மேற்பயிற்சிக்குத் தேசிய நிலையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

7. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சியின் மூலமாக வழிகாட்டல் பற்றிய அறிவை அளிக்க வேண்டும். இதற்குப் போதிய வசதியைப் பயிற்சிக் கல்லூரிகள் அளிக்க வேண்டும்.

8. வழிகாட்டலுக்கான கை ஏடுகளை வெளியிடுவது போன்றவை துணைச் செயல்களாக அமைதல் வேண்டும்.

9. மீத்திற (Gifted) மாணாக்கர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கேற்ற கல்வியை அளிக்க வேண்டும்.

10. பிற்பட்ட மாணாக்கர்களது குறைகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்கி, அவர்களது முன்னேற்றத்துக்கு உதவவேண்டும்.

11. மெதுவாகக் கற்போர் திறன் இருந்தும் சில நேரங்களில் பிற்பட்டுக் காணப்படுவர். இவர்கள் படிப்பை இடையிலேயே நிறுத்திவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவர்களது பிற்போக்குத் தன்மைக்குரிய காரணங்களைக் கண்டுபிடித்துக் குறை போக்கும் முறையில் கல்வி அளிக்கலாம்.

12. பாட சம்பந்தமான வீட்டுவேலைகள், வீட்டுப்படிப்பு ஆகியவற்றிற்குத் தங்களது வீடுகளில் போதிய வசதியற்ற மாணாக்கர்களுக்குப் படிப்பதற்கான விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வினாக்கள்

1. உயர்நிலைப் பள்ளிக் கல்வி மட்டத்தில் 'பல்துறைப் பாடங்களுக்கான வாய்ப்புகளை' ஏற்படுத்துவதன் தேவைகளை விளக்குக.
2. செகண்டரி கல்விக் கட்டத்தில் தொழிற் கல்விக்கு வாய்ப் பளிப்பதற்கான தேவை யாது?
3. 'வழிகாட்டல்' பற்றி கொத்தாரிக் குழுவின் பரிந்துரை களைக் குறிப்பிடுக.
4. குமரப்பருவத்தினரின் திறமைகளையும் ஆர்வங்களையும் கண்டறிவதிலும் வளர்ப்பதிலும் 'வழிகாட்டல்' எவ்வெவ் வழிகளில் உதவும் என விவரிக்க.
5. பள்ளிகளில் கல்வி வழிகாட்டு முறை, தொழிற் வழிகாட்டு முறை இவைகளின் பங்கை விளக்கவும்.
6. 'வழிகாட்டுதல்', 'அறிவுரை பகர்தல்' ஆகியன கல்வியில் ஏன் இடம் பெறவேண்டும்? இவற்றுக்கான வாய்ப்புகள் யாவை?
7. உயர்நிலைக் கல்விக் கட்டத்தில் விருப்பப் பாடங்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்துதல் பற்றி உமது கருத்தினைக் காரணங்களுடன் விளக்குக.
8. உயர்நிலைக் கல்விக் கட்டத்தில் பல்துறைப் பாடங் களின் இன்றியமையாமை பற்றி ஆராய்க.
9. கல்வி ஏற்பாடு சீர்திருத்தம் பற்றி கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துகள் யாவை?
10. கல்வி ஏற்பாட்டின் குறைபாடுகள் பற்றி டாக்டர் முதலியார் கல்விக் குழுவின் கருத்துகள் யாவை?

11. மதிப்பீடு மற்றும் தேர்வுகள்

பள்ளிக் கல்வியின் விளைவாக மாணாக்கர்கள் அடையும் முழுமையான வளர்ச்சியினை அறிதல் 'மதிப்பீடு' (Evaluation) எனப்படும். மதிப்பீட்டுச் செயல்முறையில் கல்வி இலக்குகள் (Educational objectives), கற்றல் அனுபவங்கள் (Learning experiences), மதிப்பீட்டுக் கருவிகள் (Evaluation Tools) ஆகியன யாவும் அடங்கும். தேர்வுகள் (Examinations) மதிப்பீட்டில் ஒரு பகுதியாகும். எனினும் இவை கல்வியில் தொடர்ந்து நடுவிடம் பெற்று வருகின்றன.

கல்வியின் இறுதிக் குறிக்கோள் மாணாக்கனின் முழுமையான நல்வளர்ச்சியாகும். கல்வி கற்பிக்கும் ஆசிரியர் மாணாக்கனுக்கு அறிவு, செய்திறன்கள், சீரிய மனப்பான்மைகள், நல்லொழுக்கம் போன்றவற்றைப் புகட்டி, மாணாக்கனின் நல்வளர்ச்சிக்கு ஆக்கம் தருகின்றார். பள்ளிப்பாடங்கள், பள்ளிச்செயல்கள், பாடப்புறச் செயல்கள் ஆகியவை யாவும் இத்தகைய முழு வளர்ச்சிக்கு உதவும் கருவிகளேயாகும். இவற்றையெல்லாம் உள்ளடக்கிய பள்ளி, மாணாக்கனின் முழுமையான நல்வளர்ச்சிக்குத் தகுந்த வாய்ப்புகளை அளிக்கும் ஒரு சிறந்த சூழ்நிலையாகும். பள்ளியில் பெறும் கல்வியினின்று மாணாக்கர்கள் எத்தகைய பயன்களைப் பெறுகின்றனர் என்பதனை அப்போதைக்கப்போது ஆசிரியர் அளந்தறிவது கற்பித்தலில் இன்றியமையாத ஒரு செயலாகும். பள்ளியில் நடைபெறும் கற்பித்தல்-கற்றல் செயல்முறையினின்றும் எழும் பயன்களை மதிப்பீடு செய்தலே கல்வியில் மதிப்பீடு (Educational Evaluation) எனப்படுகிறது. இவ்வகை மதிப்பீடு ஆசிரியர்களின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாகும். மதிப்பீட்டில் அளவிடல் (Measurement) முறைகள் அடங்கியுள்ளனவெனினும், இவற்றிற்கிடையே வேறுபாடு உள்ளது. அளவிடல் என்பது ஒரு நிலைமையின் இயல்பினைத் திட்டமாக விவரித்தலைக் குறிக்கும். ஆனால், மதிப்பீடு என்பது இந் நிலைமையின் உண்மைப் பயன்களை ஆராய்ந்து முடிவுக்கு வருதலைக் குறிப்பதாகும். எடுத்துக் காட்டாக, அடைவுச் சோதனை (Achievement test) ஒன்றில் மாணாக்கன் ஒருவன் 60 மதிப்பெண்களைப் பெற்றி

ருக்கிறான் என்பது அளவீடாகும். இம் மாணாக்கனது மதிப் பெண்ணைப் பிற மாணாக்கரது மதிப்பெண்களுடன் ஒப்புநோக்கி அவனது அடைவினைப் பற்றி ஒரு முடிவுக்கு வருதல் மதிப்பீடு எனலாம்.

கல்விச் செயல்முறையில் காணப்படும் அளவிடலின் தன்மையும், இயல்புகளும் கல்வியின் நோக்கங்கள், இலக்குகள், குறிக்கோள்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையவை. சமுதாயத்தில் தோன்றும் மாறுதல்களால் கல்வி நோக்கங்களும், கல்வி முறையும் அவ்வப்போது மாறுதலடைகின்றன. கல்வியின் நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் மாறுபடின் கல்வித் திட்டமும், கற்பித்தல் முறைகளும் மாறுபடும். இதனால் அளவிடல் முறைகளும், மதிப்பீட்டு முறைகளும் மாறுபடும். கல்வியின் இலக்குகளை அடைவதில் எத்துணையளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதனை அளந்தறியும் கருவிகளே மதிப்பீட்டு முறைகள். மதிப்பீடு எனப்படுவது முன்னர் வழக்கத்திலிருந்த தேர்வுகள் (Examinations) என்பதனைக் காட்டிலும் பரந்த பொருள் கொண்டது. இன்று கல்வியின் நோக்கங்கள் விரிவடைந்துள்ளன. இன்றைய கல்வி அளவிடலில் கல்வித் திட்டம் பாடத்திட்டம் ஆகியவற்றின் இறுதி இலக்குகளாகக் கருதப்படுவன யாவும் மதிப்பிடப்படுகின்றன.

பழைய கல்வி முறையில் காணப்படும் தேர்வு முறைகளுக்கும், இன்றைய கல்வி முறையில் காணப்படும் மதிப்பீட்டு முறைகளுக்குமிடையே சில வேற்றுமைகள் உள்ளன. பழைய கல்வி முறையில் மதிப்பீடு என்ற சொல்லே பயன்படுத்தப் படவில்லை. தேர்வுகள் என்னும் சொல்லையே அதில் நாம் காணக்கூடும். ஏனெனில் அக் காலக் கல்விமுறை ஓரளவு குறுகிய நோக்கத்தினைக் கொண்டதாக இருந்தது. மாணாக் கனின் பொருளறிவைப் பெருக்குவதற்காகவே கல்வி அமைந்த தாகக் கருதப்பட்டது. அவனது வளர்ச்சியின் பிற கூறுகள் கல்வியின் நோக்கங்களுக்குப் புறம்பானவைகளாகவே கருதப் பட்டன. ஆகவே, பள்ளியில் மாணாக்கர்கள் கல்வியின் வழியே பெற்ற பாடப் பொருளறிவு மட்டுமே தேர்வுகளின் மூலம் அளவிடப் பட்டது. பள்ளித் தேர்வில் மாணாக்கர்கள் பெறும் மதிப் பெண்களைக் கொண்டு அவரது கல்வி முன்னேற்றத்தை அளவிடுவது என்பதனைக் காட்டிலும் மதிப்பீடு (Evaluation) என்னும் சொல் பரந்த பொருள் கொண்டதாகும். மதிப்பிடுதல் மாணாக்கனது பள்ளி வாழ்க்கை முழுவதுமே தொடர்ந்து நிகழும்

செயல்முறையாகும். பள்ளிக் கல்வியினால் மாணாக்கனிடம் ஏற்படும் பொருளறிவு வளர்ச்சியை அளவிடுவதோடு, கல்வியின் பிற முக்கிய விளைவுகளான செய்திறன்கள், நல்ல மனப் பான்மைகள் சீரிய ஒழுக்கம், நற்பழக்கங்கள், அழகுணர் ஆற்றல் போன்றவற்றின் வளர்ச்சியினை ஆராய்வதும் மதிப்பீட்டில் அடங்குவதாகும்.

மாணாக்கர்களது அறிவு வளர்ச்சியை மதிப்பிடுவதற்குத் தேர்வுகள் பயன்படுத்தப்படுகின்றன. தேர்வுகளின் குறைபாடுகள் இன்று யாவராலும் நன்கு உணரப்பட்டிருப்பினும், இவற்றை முழுமையாக அகற்றுவது இயலாது என்று தோன்றுகிறது. இவற்றை 'அவசியமான தீமைகள்' (Necessary Evils) எனலாம் இதேபோது தேர்வு முறையின் குறைபாடுகளை முடிந்த அளவுக்கு அகற்றி, தேர்வுகளின் ஏற்புடைமை (validity), நம்பகம் (Reliability), புறவயப் பண்பு (objectivity) ஆகியவற்றை உயர்த்துவது அவசியமாகும்.

தேர்வுகளின் தேவையும் முக்கியத்துவமும்

பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் முன்னேற்றத்தினை அளந்து அறிதல் என்பது பழங்காலம் முதற்கொண்டே ஆசிரியர் களது கடமைகளில் ஒன்றாக இருந்து வருகின்றது. அவ்வாறு மாணாக்கர்களின் வளர்ச்சியினை அளந்து அறிவதற்காகவே தேர்வுகள் நடத்தப்படுகின்றன. பழங்காலத்தில் சிறந்து விளங்கிய சீனா, கிரேக்கம், ரோம் ஆகிய தேசங்களிலும் ஒரு வகையான தேர்வு முறை கையாளப்பட்டு வந்தது என்பதனை வரலாற்றின் வாயிலாக நாம் அறிகின்றோம். மாணாக்கர்களுடைய திறன் களையும், கற்பித்தல்-கற்றல் செயல்முறையின் மூலம் அவர்கள் அடைந்துள்ள தரத்தினையும் கண்டு அறியவும், அவர்களுடைய பாடப் பொருளறிவினைத் தெரிந்து வகைப்படுத்தவும் தேர்வுகள் தேவைப்படுகின்றன. 'தேர்வுகளை முழுமையாக அகற்ற முயலுவது என்பது சைத்தானின் குடியாட்டத் திருவிழாவுக்குப் பச்சைக்கொடி காட்டுவதனை ஒக்கும்' என்று 1917ஆம் ஆண்டில் கல்கத்தா பல்கலைக் கழகக் குழுவின் (The Calcutta University Commission of 1917) தலைவராக இருந்த சர். மைக்கேல் ஸேட்லர் (Sir Michael Sadler) குறிப்பிட்டுள்ளார். அறிஞர் எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells Utopia) அவர்களின் கற்பனையான லட்சிய நாட்டில் கூடத் தேர்வுகள் முக்கிய இடம் பெறுகின்றன என்று ஜே. சி. மத்தூர் என்னும் கல்வியாளர் கூறுகின்றார். இக் கருத்துகள் தேர்வுகளின் முக்கியத்துவத்தினை நமக்கு வலியுறுத்துவனவாக

அமைந்துள்ளன. 'எந்த ஒரு கல்வி முறையிலும் புறத்தேர்வுகள் உரிய இடம் பெறுகின்றன. கல்வியின் நோக்கங்கள், இலட்சியங்கள், தரம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் மாணாக்கர்கள், ஆசிரியர்கள் ஆகிய இருவருக்குமே தூண்டல்களாகத் தேர்வுகள் அமைகின்றன. கல்வியின் தரம், தன்மை ஆகியவற்றில் எல்லோர்க்கும் பொதுவான அளவுகோலாகப் புறத்தேர்வுகள் அமைகின்றன' என்று டாக்டர் முதலியார் கல்விக்குழு தேர்வுகளின் தேவையினை எடுத்துக் கூறியுள்ளது.

தேர்வு இன்று ஓர் அறிவியற் கலையாகக் கருதப்படுகிறது. இன்று தேர்வுகள் மாணாக்கர்கள் கற்றலின் மூலம் பெறுகின்ற பொது அறிவினை அளந்தறிவதற்குப் பயன்படுவதோடு, அவர்களுடைய திறன்கள், விருப்பங்கள், ஆளுமையின் பல்வேறு கூறுகள் ஆகியவற்றை அறியவும் உதவுகின்றன. கல்வியில் இன்று சோதனைகள் (Tests), தேர்வுகள் (Examinations) என்ற சொற்களுக்குப் பதிலாக மதிப்பீடு (Evalua'icn) என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. மதிப்பீடு எனப்படுவது தேர்வுகள் எனப்படுவதனைக் காட்டிலும் பரந்த பொருள் கொண்டதாகும்.

தேர்வுகளின் நோக்கங்கள்

1. கல்வி இலக்குகளும், கற்பித்தல் முறைகளும் எந்த அளவுக்கு நடைமுறைப் பயனளித்துள்ளன என்பதனைச் சோதித்துணரத் தேர்வுகள் உதவுகின்றன.
2. மாணாக்கர்களுடைய திறன்களையும், கற்பித்தல்-கற்றல் செயல்முறைகள் மூலம் அவர்கள் அடைந்துள்ள தரத்தினையும் கண்டு அறியவும், அவர்களுடைய பாடப் பொருளறிவினைத் தெரிந்து வகைப்படுத்தவும் தேர்வுகள் பயன்படுகின்றன.
3. மாணாக்கர்கள் நிலையறிந்து கல்வித் திட்டத்தில் புதிய பகுதிகளைச் சேர்த்தல், விளங்காத பகுதிகளை விட்டு விடுதல் போன்ற தேவையான மாறுதல்களைச் செய்யவும் தேர்வுகள் உதவுகின்றன.
4. தேர்வு முறையினால் கற்பித்தல்-கற்றல் செயல் முறையின் மூலம் எந்த அளவுக்கு மாணாக்கர்களது திறனை வளர்க்க முடியும் என ஆசிரியர்கள் அறிந்து கொள்ளுதல் சாத்தியமாகிறது.
5. மாணாக்கர்கள் கற்றுள்ள அளவினை அறியவும், அவர்களுள் மீத்திற மாணாக்கர்களையும் பிற்போக்கான

மாணாக்கர்களையும் கண்டறிந்து, அவர்களைத் தகுந்த முறையில் முன்னேற்றமடையச் செய்வதற்குத் தேர்வுகள் உதவுகின்றன.

6. கற்பித்தல் முறைகளைத் தரமாக்கிச் சிறப்பாக்கவும் தேர்வுகள் பயன்படுகின்றன.

7. தேர்வில் வெற்றி பெறுவது மாணாக்கன் மேலும் ஊக்கம் கொள்ளவும் உயர் குறிக்கோள் கொண்டு உழைக்கவும் தூண்டுகிறது.

8. பெற்றோர்களுக்குத் தமது பிள்ளைகளது கல்வி வளர்ச்சி பற்றி அறிவிக்கவும் தேர்வுகள் பயன்படுகின்றன.

9. மாணாக்கர்களிடம் இயல்பாகக் காணப்படும் போட்டி மனப்பான்மையைப் பயன்படுத்தி, மாணாக்கர்கள் கற்கவேண்டியவற்றை அவர்களே முயன்று கற்கத் தேர்வுகள் வழியமைக்கின்றன.

10. ஆசிரியர்கள் பின்பற்றும் கற்பித்தல் முறைகள் சிறந்தவைதானா என்பதனை அறியவும், பள்ளியின் தரத்தை உணரவும் தேர்வுமுறை உரைகல்லாக அமைந்துள்ளது.

11. மாணாக்கர்களின் சிந்தனையாற்றலை வளர்த்தல், எண்ணுகின்றவற்றை ஒழுங்குபெறக் கூறச்செய்தல் போன்றவற்றில் பயிற்சியளித்தலும் தேர்வுகள் நடத்துவதன் நோக்கமாயுள்ளன.

12. வகுப்புத் தேர்ச்சியை முடிவு செய்யவும், பரிசுகள் மற்றும் பாராட்டுகள் வழங்கவும் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

மதிப்பீட்டின் அடிப்படைக் கோலங்கள்

இன்று முற்போக்குப் பள்ளிகளில் செயற்படுத்தப்படும் மதிப்பீட்டில் சில அடிப்படைக் கோட்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு :

1. கற்பித்தலின் விளைவாக மாணாக்கர்களிடையே எழக் கூடிய பல்வேறு விளைவுகளுக்கும் ஆசிரியர்கள் பொறுப் பேற்க வேண்டும். இவ் விளைவுகளில் பலவற்றை அளவிடுதல், பொருளறிவு, செய்திறன்கள் போன்ற வற்றை அளவிடுதல் போன்று அவ்வளவு எளிதன்று.

2. தொடர்பற்ற அல்லது தனிப்பட்ட பல விவரங்களை மாணாக்கர்கள் கற்பதைக் காட்டிலும், இவ்விவரங்களின் உண்மைப் பொருளைப் புரிந்துகொண்டு, இவற்றைப்

புதிய நிலைமைகளில் பயன்படுத்தும் திறனை அவர்கள் பெறுவது பள்ளிகளில் வலியுறுத்தப்படவேண்டும்.

3. தரப்படுத்தப்பட்ட சோதனைகளோடு தமது வகுப்பு நிலைமைகளுக்கேற்ப ஆசிரியர்களால் உருவாக்கப்படும் சோதனைகளும் பள்ளிகளில் பெருமளவு பயன்படுத்தப் படுவது இன்றியமையாததாகும்.

4. உளத் திறன்களை மதிப்பிடுவதில் இவற்றின் தன்மை பற்றி இன்று நடத்தப்பட்டுவரும் பல்வேறு ஆராய்ச்சிகள் கல்வியாளர்களுக்குப் பெருமளவு உதவியுள்ளன.

5. புறத்தேற்று நுண்முறைகள் (Projective Techniques), சமூக அளவியல் முறைகள் போன்றன மதிப்பீட்டி னின்றும் ஆசிரியர்கள் பெறக்கூடிய பயன்களை மேலும் சிறப்பாக உயர்த்த உதவியுள்ளன.

6. கல்வி மதிப்பீட்டு முறைகளில் பல போதிய அளவு திட்ப மற்றவை என்பதனையும் ஆசிரியர்கள் கவனத்தில் கொள்வது அவசியம். எனவே, இவற்றைப் பயன் படுத்திப் பெறப்பட்ட முடிவுகளைக் கருதுகோள்களாக (Hypotheses) ஆசிரியர்கள் ஏற்க வேண்டுமேயன்றி, முழுமையாக நிரூபிக்கப்பட்ட உண்மைகளாகக் கருதுவது தவறு.

7. மாணாக்கர்களைப் பற்றி அறிய சிக்கல் மிகுந்த மதிப்பீட்டு முறைகள் தாம் உதவக்கூடியன என்று ஆசிரியர்கள் எண்ணக்கூடாது. ஓரளவு எளிய மதிப்பீட்டு முறைகளெனப்படும் வாழ்க்கைத் துணுக்குகள் (Anecdotes), உற்றுநோக்கல் (Observation) போன்றனவும் இதற்கு உதவும்.

8. ஒரு சோதனை அல்லது மதிப்பீட்டு முறை எவ்வளவு சிக்கலான அமைப்பைப் பெற்றுள்ளதோ அந்த அளவுக்கு அதனை நன்கு பயன்படுத்துவதற்குச் சிறப்புத் திறனும் பயிற்சியும் தேவைப்படுவதாகும் என்பதனை ஆசிரியர்கள் மறக்கக்கூடாது.

9. நன்கு திட்டமிட்டுச் சிறப்பாகச் செயற்படுத்தப்படும் மதிப்பீடு பரவலான (Comprehensive) தன்மையைப் பெற்றிருக்கும். நடத்தை மாற்றங்கள் (Behavioural Changes) இதன் அடிப்படையாக அமைந்திருக்கும்.

10. மதிப்பீடு தொடர்ந்து நடைபெறும் முடிவுகளும் மாணாக் கர்களுக்குப் பயனுள்ள முறையில் ஆராயப்படும்.

மதிப்பீட்டின் பயன்கள்

பல வகையான மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி ஆசிரியர் பெறும் விவரங்கள், முடிவுகள் ஆகியவற்றினின்றும் எழக்கூடிய பயன்கள் பின்வருமாறு.

1. **கற்பித்தல் பயன்கள் :** கல்வியின் இறுதி நோக்கங்களை எய்துவதில் ஒரு மாணாக்கன் எட்டியுள்ள நிலை அல்லது குறிப்பிட்ட ஒரு வகுப்பு எட்டியுள்ள நிலை போன்றவற்றைக் கண்டறிதல்.

கற்பித்தல் முறைகள், கற்பித்தலில் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருள்கள் ஆகியவற்றின் பயன்களை மதிப்பிட்டு, இவற்றில் தேவைப்படும் மாறுதல்களைச் செய்தல்.

கற்பித்தலுக்குச் சிறு குழுக்களாக வகுப்பு மாணாக்கர்களை அமைத்தல்.

பொருத்தப்பாடு குன்றிச் செயற்படும் மாணாக்கர்களைக் கண்டுபிடித்து அவர்களது நடத்தைக்கான காரணங்களை உணர்தல்.

மாணாக்கர்களது சமூக வளர்ச்சிக்கு உதவுதல்.

2. **கல்வித் தேர்வு மற்றும் தொழில் தேர்வுப் பயன்கள் :** கல்வித் தேர்வு, தொழில் தேர்வு போன்றவற்றில் மாணாக்கர்களுக்கு வழிகாட்டுதலுக்கும் மதிப்பீடு பயன்படுத்தப்படுதல்.

3. **ஆராய்ச்சிப் பயன்கள் :** கல்வி ஏற்பாட்டினை மேலும் சிறப்பாக்குதல், கற்பித்தல் முறைகளின் பயன்களை மதிப்பிடுதல். கற்பித்தல் முறைகளில் புதுமையை தோற்றுவித்தல்.

4. **நிர்வாகப் பயன்கள் :** மாணாக்கர்களது வளர்ச்சி பற்றிய குறிப்புகளைக் கொடுத்து வைத்தல்.

மாணாக்கர்களது பெற்றோர்களுக்குப் பல்வேறு விவரங்களைத் தெரிவித்தல்.

வேறு பள்ளிகளின்றும் வரும் மாணாக்கர்கள் எந்தெந்த வகுப்புகளில் சேரத் தகுதியுள்ளவர்கள் என்பதனை நிர்ணயித்தல்.

பள்ளியின் வளர்ச்சி, முன்னேற்றம், கல்வித்தொண்டு ஆகியவை பற்றிய விவரங்களைச் சமுதாயத்தினருக்கு அறிவித்தல்.

சிறந்த மதிப்பீட்டு முறையின் பண்புகள் :

இன்றைய கல்வியில், மதிப்பீட்டில் பல்வேறு வகைப்பட்ட சோதனைகள் கையாளப்படுகின்றன. பல்வகைச் சோதனைகளைக் கையாளும் ஆசிரியர், சோதனைகளையும் தேர்வுகளையும் அமைத்தல் பற்றிய கொள்கைகளைப் பற்றித் தெளிவான கருத்துகளைக் கொண்டவராக இருத்தல்வேண்டும். ஒரு சிறந்த அளவீட்டு முறை அல்லது மதிப்பீட்டு முறையின் பண்புகள் யாவை என்றும், தேவையாயின் தரப்படுத்தப்பட்ட சோதனையை எவ்வாறு அமைத்தல் வேண்டுமெனவும் ஆசிரியர் அறிதல் கல்விப் பயன் மிக்கதாகும்.

ஒரு சிறந்த அளவீட்டு முறை அல்லது மதிப்பீட்டு முறை பின்வரும் இன்றியமையாத பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. ஏற்புடைமை (Validity)
2. நம்பகத் தன்மை (Reliability)
3. புறவயத் தன்மை (Objectivity)
4. கையாளுமை அல்லது செயற்பாட்டுடைமை (Practicability).

மற்றும் சிறந்த மதிப்பீட்டு முறைகளோடு இணைந்து தரங்களும் (Norms) தேவைப்படுகின்றன. இவை தவிர, சோதனை கையாளுவதற்குப் பொருட்செலவைப் பொறுத்தவரை சிக்கனமானதாகவும், எளிமையாகக் கையாளக்கூடியதாகவும், மாணாக்கர்கள் விருப்பத்துடன் ஈடுபடும் தன்மை வாய்ந்ததாகவும் அமைதல் வேண்டும்.

ஏற்புடைமை

குறிப்பிட்ட ஒரு திறனையோ, பண்பினையோ மதிப்பிட்டு அறிவதற்காகவே ஒரு சோதனை உருவாக்கப்படுகிறது. சோதனை எதனை அளந்தறிவதற்காகத் திட்டமிடப்பட்டதோ அதனை அளந்தறிந்தால் அதனை ஏற்புடையதாகக் கூறலாம். ஆனால், மதிப்பிட முற்படும் பண்பினைச் சோதிக்காமல், அதற்குப் புறம்பான வேறொன்றினைச் சோதிப்பதாக அது அமையுமாயின், அச்சோதனை ஏற்புடைமையற்றது எனப்படும். ஏற்புடைமை பெற்ற சோதனையானது சோதிக்கப்படும் பண்பினைத் தவிர வேறு எப் பண்பினையும் அளவிடாது. எடுத்துக்காட்டாக, மாணாக்கர்களது சிந்தனைத்திறனை அளந்தறிய

ஆசிரியர் சில சோதனைகளைப் பயன்படுத்துகிறார் என்று வைத்துக் கொள்வோம். இவை மாணாக்கர்களது ஆய்வு அல்லது சிந்தனைத்திறனை மட்டுமே சோதிப்பனவாயின் இவை ஏற்புடைமை பெற்றனவாகும். இவ்வாறின்றித் தமது மொழித் திறன், நினைவாற்றல் போன்றவற்றின் உதவிகொண்டு இச்சோதனைகளில் காணப்படும் வினாக்களுக்கு மாணாக்கர்கள் சரியான விடைகளை அளிக்கக்கூடுமாயின், இச்சோதனைகள் சிந்தனைத் திறனை அளக்கும் கருவிகளாக அமையா. இவற்றைப் பயன்படுத்தி மாணாக்கர்களது ஆய்வுத்திறன் பற்றிய உண்மையான முடிவுகளை ஆசிரியரால் பெறவியலாது. ஒரு சோதனையின் ஏற்புடைமையின் அளவு, மதிப்பிடப்படவேண்டிய பண்பினை எந்த அளவுக்கு மதிப்பிட அச்சோதனை உதவுகிறது என்பதைப் பொறுத்ததாகும். ஒரு சோதனை அது இயற்ற வேண்டிய பணியினை எத்துணைச் சிறப்பாகச் செய்கிறது என்பதனை அதன் ஏற்புடைமை குறிக்கின்றது. ஏற்புடைமை என்பது முழுமை பெற்ற (Absolute) ஒரு பண்பன்று. ஒரு சோதனையைப் பயன்படுத்துவோனது நோக்கத்தைச் சார்ந்தே அது அமைவதாகும். எனவே, ஒரு சோதனையின் ஏற்புடைமையை ஆராயும்போது அதன் நோக்கத்துடன் இணைத்தே இவ்வாராய்ச்சி செய்யப்படவேண்டும்.

ஏற்புடைமையை வரையறுத்துக் கூறுவது ஒரு சிக்கலான வேலையாகும். பொதுவாக, புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு சோதனையின் ஏற்புடைமையைத் திருத்தமாக நிர்ணயிப்பதும் கடினமாகும். சோதனைகளின் ஏற்புடைமையை நிர்ணயித்தலில் (Validation of Tests) பல முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. சோதனைகளது முடிவுகளை வேறு திட்டமான அளவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தல் என்பதே இம்முறைகள் யாவற்றிற்கும் அடிப்படையாகும். பின்வரும் குறிப்புகள் தேர்வின் ஏற்புடைமையை அறிந்து கொள்ள உதவும்.

1. பாடப்புத்தகத்தினை நன்கு ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். அத்துடன் மாணாக்கர்கள் பெறும் அடைவு அல்லது சாதனையின் தரம், தேர்வுகளில் அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்கள் ஆகியவற்றினைத் தொடர்புபடுத்திக் கவனித்தல் வேண்டும்.

2. திறமை மிகுந்த ஆசிரியர்கள் பிற வல்லுநர்கள் ஆகியோரது கருத்துகளை ஒன்று திரட்டி ஆராய்தல் வேண்டும்.

3. ஏற்கனவே ஏற்புடைமையுள்ளவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பிற சோதனைகளினின்றும் பெறப்பட்ட முடிவுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்தல் வேண்டும்.

4. பல்வேறு வகுப்புகளிலும், வேறுபட்ட வயதினருக்கும் பொருந்தியதாக அமைந்து, தேர்வு மேன்மேலும் தகுந்த முடிவுகளைத் தருவதாக இருக்கின்றதா என ஆராய்தல் வேண்டும்.

5. தேர்வின் ஒவ்வொரு பிரிவின் ஏற்புடைமையையும் அறிதல் நன்று. ஒவ்வொரு மாணாக்கனும் ஒவ்வொரு பிரிவுக்கும் எவ்வாறு விடையளித்துள்ளான் என்று ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.

இவ்வாறு பல்வேறு கூறுகளையும் ஆராய்ந்துதான் தேர்வுகள் ஏற்புடைமை உடையனவா, இல்லையா என முடிவு செய்தல் வேண்டும்.

ஏற்புடைமையின் வகைகள்

உருவாக்கப்பட்ட சோதனையின் நோக்கத்தைப் பொறுத்து ஏற்புடைமை பலவகைகளாகப் பிரிக்கப்படுகிறது. ஏற்புடைமையானது அனுபவம் சார் ஏற்புடைமையாகவோ (Empirical Validity), அறிவு சார் ஏற்புடைமையாகவோ (Rational Validity) இருக்கக் கூடும். பிற சோதனை முடிவுகள், எதிர்காலத்தில் மாணாக்கன் பெறும் அடைவு, பின்னர் அவன் பெறும் மதிப்பெண்கள் போன்றவற்றோடு ஒரு சோதனையின் முடிவுகள் பெறும் உடன்பாட்டைப் பொறுத்து, அதன் ஏற்புடைமை கணிக்கப்படுமாகில் அது அனுபவம் சார் ஏற்புடைமை எனப்படும். அனுபவம் சார் ஏற்புடைமையினுள் முற்கூற்று ஏற்புடைமை (Predictive Validity), உடனிகழ் ஏற்புடைமை (Concurrent or Status Validity) ஆகியன அடங்கும். உருவாக்கப்பட்ட சோதனையின் முடிவுக்கும், எதிர்காலத்தில் பிற சோதனைகள், மதிப்பீடுகள் ஆகியவற்றின் முடிவுகளுக்குமிடையே காணப்படும் தொடர்பின் அளவினைப் பொறுத்து முற்கூற்று ஏற்புடைமை அமையும். பொதுவாக, நுண்ணறிவுச் சோதனைகள், கல்வி நாட்டச் சோதனைகள் போன்றவற்றின் ஏற்புடைமை இவ்வாறு நிர்ணயிக்கப்படும். உருவாக்கப்பட்ட சோதனையின் முடிவுகளுக்கும், சோதிக்கப்பட்டோரது அப்போதைய நடத்தைக்குமிடையே காணப்படும் ஒப்புமையின் தன்மை அல்லது அளவினைப் பொறுத்து உடனிகழ் ஏற்புடைமை அமையும். எடுத்துக்காட்டாக, முன்னறிவோடு இணைத்தறி சோதனையின் (Thematic Apperception

Test) முடிவுகளுக்கும் சோதிக்கப்பட்டவனிடம் அப்போது காணப்படும் ஆளுமை அல்லது மனவெழுச்சிச் சிக்கல்களுக்கிடையே காணப்படும் தொடர்பினின்றும் அச் சோதனையின் ஏற்புடைமையை நிர்ணயித்தல் உடனிகழ் ஏற்புடைமை எனப்படும். முற்கூற்று ஏற்புடைமை, உடனிகழ் ஏற்புடைமை ஆகியவற்றுக்கிடையே காணப்படும் வேறுபாடு பெருமளவு காலத்தைப் பொறுத்ததாகும்.

ஒரு சோதனை உருவாக்கப்பட்டதன் நோக்கம் ஈடேறும் வகையில் எந்த அளவுக்கு அச் சோதனையின் பல்வேறு பகுதிகளும் அவற்றில் காணப்படும் உருப்படிகளும் (Test Items) அமைந்து காணப்படுகின்றன என்பதனை அச் சோதனையைப் பகுத்தாராய்ந்து அதன் ஏற்புடைமையை நிர்ணயித்தல் அறிவு சார் ஏற்புடைமை எனப்படும். இதில் பொருள் ஏற்புடைமை (Content Validity), அமைப்பு ஏற்புடைமை (Construct Validity) என்னும் இரண்டும் அடங்கும். பொருள் ஏற்புடைமை என்பது, உருவாக்கப்பட்டுள்ள சோதனையில் காணப்படும் உருப்படிகளுக்கும் சோதிக்கப்படும் பாடப்பொருள் அல்லது செய்முறையின் விவரங்கள், கூறுகள் ஆகியவற்றிற்குமிடையே காணப்படும் ஒப்புமையைப் பொறுத்ததாகும். எடுத்துக்காட்டாக, வரலாற்றுப் பாடத்துக்கான அடைவு சோதனையின் (Achievement Test) உருப்படிகளை வரலாற்றுப் பாடத்திட்டத்திலும் பாடநூல்களிலும் காணப்படும் விவரங்கள், தலைப்புகள் ஆகியவற்றோடு ஒப்பு நோக்கி, அச் சோதனையின் ஏற்புடைமையை நிர்ணயிக்கலாம். ஒரு தொழிலுக்கான செயற்சோதனையின் (Performance Test) ஏற்புடைமையை நிர்ணயிக்க, அத் தொழிலின் செயல்முறையைப் பகுத்தாராய்ந்து (Job Analyses) சோதனை உருப்படிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். உருவாக்கப்பட்ட சோதனையின் முடிவுகளுக்கும், அச் சோதனையினால் மதிப்பிடப்படும் பண்பின் பல்வேறு வெளிப்பாடுகளுக்குமிடையே (Other Indicators of the Characteristic measured) காணப்படும் ஒற்றுமை அமைப்பு ஏற்புடைமையில் கவனிக்கப்படும்.

நம்பகத் தன்மை

நம்பகத் தன்மை அல்லது தொடர்ச்சியாக ஒரே முடிவைத் தருதல் என்பது தேர்வின் சிறந்த பண்பாகும். குறிப்பிட்ட மாணாக்கனுக்கு ஒரே ஆசிரியர், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முறைகள் ஒரு குறிப்பிட்ட தேர்வை வெவ்வேறு சமயங்களில் நடத்துவதால் கிடைக்கும் முடிவுகளுக்குமிடையேயுள்ள

பொருத்தப்பாட்டின் அளவே நம்பகத் தன்மையாகும். இம் முடிவுகள் முரண்பாடின்றி ஒரே மாதிரியாக இருப்பின், நடத்தப் பட்ட தேர்வு நம்பகமானதாகும். இவ்வாறன்றி, மாறுபட்ட முடிவுகளை அச் சோதனை அடுத்தடுத்து அளிப்பின் அது நம்பக மற்றதாகும். ஒரு சோதனை ஏற்புடைமையின்றி நம்பக மானதாக இருக்கமுடியும். எடுத்துக்காட்டாக, தவறாகப் பகுக்கப் பட்ட ஒரு மீட்டர் அளவுகோல் (Meter Scale) ஒரு பொருளின் நீளம் பற்றி உண்மையான முடிவுகளைத் தராது. அதற்கு ஏற்புடைமை இல்லை. ஆனால், அது ஒரு பொருளின் நீளத்தைக் கண்டறிய அடுத்தடுத்துப் பயன்படுத்தப்பட்டால் ஒரே முடிவைத்தரும். எனவே, அது நம்பகமானது எனலாம். நம்பகம் என்பது ஒரு சாதனையின் திட்பத்தைக் (Accuracy) குறிப்பதாகும். ஒரு சோதனையின் நம்பகத்தின் அளவினை நம்பகக் குணகம் அல்லது நம்பகக்கெழு (Co-efficient of Reliability) என்னும் கருத்துக்கொண்டு புள்ளி இயல் வல்லுநர் விளக்குவர். இதனைத் தரப்பிழை (Standard Error) என்றும் குறிப்பிடுவர். ஒரு சோதனையினை எதேச்சையாகப் பாதிக்கும் காரணிகளினால் அதன் முடிவுகள் எந்த அளவுக்குப் பாதிக்கப் படும் என்பதனை இக் கருத்து குறிப்பிடும்.

தேர்வுகளின் நம்பகத்தன்மையை மதிப்பிடப் பின்வரும் முறைகள் கையாளப் பெறுகின்றன.

1. ஒரே தன்மையான இரு சோதனைகளை ஒருவருக்கு இருவேறு சமயங்களில் அளித்து, பெறப்பட்ட முடிவுகளுக் கிடையே காணப்படும் ஒற்றுமையினை ஆராய்தல் (Parallel Test) ஒரு முறையாகும். இம்முறையினைப் பயன்படுத்திப் பெறப்படும் நம்பகக் கெழு சமமதிப்புக் கெழு (Co-efficient of Equivalence) எனப்படும்.

2. ஒரே சோதனையை ஒருவருக்கு அடுத்தடுத்து வெவ்வேறு நாட்களில் அளித்து இவ்விரு தடவைகளிலும் பெறப் பட்ட முடிவுகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமையினை ஆராய்தல் (Test- Retest Method) மற்றொரு முறையாகும். இதனின்றும் பெறப்படும் நம்பகக்கெழுவினை, நித்தத்தன்மைக் கெழு (Co-efficient of Stability) என்பர்.

3. ஒரு தேர்வை இரு பகுதிகளாகப் பிரித்து, இவ்விரு பகுதி களுக்கான மதிப்பெண்களுக்கிடையே (Scores) காணப்படும் இணைப்பினை ஆராய்தல் (Split-half test) வழியே பெறப்படும் நம்பகக் குணகம், முரணாமைக் குணகம் (Internal Consistency Co-efficient) எனப்படும்.

முழு அளவில் நம்பகத் தன்மையுள்ள கல்விச் சோதனை முறைகளை உருவாக்குவது கடினமாகும். ஏனெனில்:

1. அளவிடப்படவேண்டிய உளப்பண்புகளின் அமைப்பிலும் தன்மையிலும் மாணாக்கர்களிடையே குறிப்பிடத்தக்க தனியாள் வேற்றுமைகள் காணப்படுகின்றன.

2. சோதனைக்கான குறிப்புகளைப் புரிந்து கொள்ளுதலில் எழக்கூடிய வேறுபாடுகள், தேர்வின் வினாக்களிலுள்ள சிக்கல், அடுத்தடுத்து சோதிக்கப்படுவதின்றும் எழும் பயிற்சியின் விளைவில் காணப்படும் தனியாள் வேற்றுமைகள் ஆகியனவும் சோதனையின் நம்பகத்தைப் பாதிக்கும்.

3. சோதிக்கப்படுவோனது அப்போதைய நிலையில் காணப்படக்கூடிய சில ஏதுக்களும் அவனது சாதனையைப் பாதிக்கவல்லன. உடல்நலநிலை, உடற்சக்தியின் அளவு, களைப்பு, மனவெழுச்சி விறைப்புநிலை (Emotional tension) சோதனைக்கான ஊக்குவித்தலின் அளவு போன்றன இவ்வேதுக் களாகும்.

4. தற்செயலாக அவ்வப்போது எழும் காரணிகளாலும், சோதனையின் முடிவுகளில் மாற்றங்கள் எழும். இக்காரணிகளுள் ஊகம், நினைவாற்றல், ஒருவனது சாதனையின் பல்வேறு காலங்களிலும் நிலைமைகளிலும் இயல்பாகவே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் போன்றன அடங்கும்.

5. தேர்வு நடத்தப்படும் சூழ்நிலையோடு தொடர்புடைய சில காரணிகளும் சோதனையின் முடிவுகளில் சிலபோது வேறு பாடுகளைத் தோற்றுவிக்கும். தட்பவெப்பநிலை, வெளிச்சத்தின் அளவு, காற்றோட்டம், சத்தம், கவனச்சிதைவினைத் தோற்று விக்கும் அல்லது கவனத்தில் குறுக்கிடும் தூண்டல்கள் போன்றன இக்காரணிகளாகும்.

புறவயத்தன்மை: உண்மையான ஒரு சோதனையைப் பயன்படுத்தலின் வழியே பெறப்படும் முடிவுகள் ஆசிரியரின் மன நிலைக்கு ஏற்றவாறு மாறுபடா; தேர்வின் முடிவுகள் ஆளுக்கேற்ற படி மாறுபடா. இம்மாறுபடாத தன்மையினைப் புறவயத்தன்மை என்கிறோம். ஒருவனைப் பற்றிய புறவயத்தன்மையுள்ள சோத னைகளின் முடிவுகள், இவை பல்வேறு சோதனையாளர்கள் அல்லது மதிப்பிடுவோர்களால் பெறப்பட்டவையாகவிருப்பினும், ஒன்றினின்று ஒன்று வேறுபடமாட்டா. புறவயத்தன்மையினைப் பெற்றுள்ள சோதனைகளுக்கான விடைகளை மதிப்பிடுதல் சோதனையாளரது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களினால் பாதிக்கப்படமாட்டாது. ஆனால், உளப்பண்புகளையும் திறன்

களையும் அளந்தறிய இன்றுவரை அமைக்கப்பட்டுள்ள பல்வேறு சோதனைகள் முழுவதும் புறவயப்பட்டவை என்று நாம் கூற முடியாது. குறையறிதற்காக உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப் படும் சோதனைகளில் (Diagnestic Tests) புறவயத்தன்மை பிற நோக்கங்களையுடைய சோதனைகளைப் போன்று அவ்வளவு அதிகமாக வலியுறுத்தப்படாது. குறையறிதற்கான சோத னைகள் ஓரளவு நெகிழ்ச்சி பெற்றவையாக இருக்கும்.

செயற்பாடுடைமை: ஒரு நல்ல தேர்வு நடைமுறையில் எளிதிலும், சிக்கனமான முறையிலும்செயற்படுத்தப்படக்கூடியதாக அமைதல் வேண்டும். நடைமுறைச் செயற்பாடுடைமை எனப் படுவதில், ஒரு சோதனையை அமைக்கவும் அளிக்கவும் தேவைப்படும் பொருள், காலம் ஆகியவற்றில் சிக்கனம், விடைகளைச் சரிபார்த்து மதிப்பெண்களை அளிக்கத் தேவைப் படும் நேரத்தில் சிக்கனம், மதிப்பெண்களை ஆராய்ந்து முடிவுக்கு வருவதற்கு உதவும் முறைகளில் எளிமை போன்ற யாவும் அடங்கும். ஒரு சோதனை எவ்வளவு நம்பகமானதாகவும் புறவயப்பட்டதாகவும் இருப்பினும், அதனை செயற்படுத்தத் தேவைப்படும் பொருட்செலவு, காலம், முறையறிவு ஆகியவை மிகவும் அதிகமாக இருப்பின் அச் சோதனை ஆசிரியர்களைப் பொறுத்தவரை பயனற்றதாகும். செயற்பாடுடைமையுள்ள சோதனைகளுக்கு இணைச் சோதனைகளும் (Equivalent Tests) இருக்கும்.

தரங்கள்: பல்வேறு சோதனைகளினின்றும் பெறப்பட்ட முடிவுகளை நன்கு ஆராய்ந்து இவற்றின் உண்மைப்பொருள் உணரப்படவேண்டுமாயின், தரங்கள் (Norms) தேவைப்படு கின்றன. ஒரு சோதனையை ஒருவனுக்கு அளித்து அவனது சாதனைக்கேற்ற மதிப்பெண்களை (Scores) அளிப்பது மட்டும் பயனற்றது. இம் மதிப்பெண்களைப் பிறரது சாதனைகளுக்கான மதிப்பெண்களுடனோ அல்லது பல்வேறு வகைப்பட்ட குழுக் களின் சராசரி சாதனைகளுக்கான மதிப்பெண்களுடனோ ஒப்பிட்டுப் பார்த்தால்தான் இவை பொருளும் பயனும் உடையன வாக அமையும். இவ்வாறு செய்வதற்குத் தரங்கள் ஆசிரியர் களுக்கு உதவுகின்றன. தரங்கள் பல வகைப்படும். பல்வேறு வயதுக்கான தரங்கள் (Age Norms), பல்வேறு வகுப்புகளுக்கான தரங்கள் (Class Norms), கல்வியில் செலவிடப்பட்ட ஆண்டு களுக்கான தரங்கள் (Norms for years of Study), குறிப்பிட்ட வட்டாரங்களுக்கான தரங்கள் (Regional Norms), நாட்டிற்குப் பொதுவான தரங்கள் (National Norms) போன்றன இவற்றுள்

சிலவாம். எடுத்துக்காட்டாக, வயதுக்கான தரங்கள், ஒரு மாணாக்கனது மதிப்பெண்களை அதே வயதுடைய பல மாணாக்கர்களிடம் பொதுவாகக் காணப்படும் தரத்துடனோ அல்லது அவர்களால் பெறப்பட்டுள்ள மதிப்பெண்களுடனோ தொடர்பு படுத்தி ஒப்பிட்டுப்பார்க்க ஆசிரியர்களுக்கு உதவுகின்றன. மனவயது, கல்வி வயது படித்தலுக்கான தரங்கள் போன்றன வயதுக்கான தரங்களாகும். வகுப்புக்கான தரங்கள், குறிப்பிட்ட வகுப்புகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களிடையே பொதுவாகக் காணப்படும் அடைவு அல்லது சாதனையின் அளவினைக் குறிப்பனவாகும். பல்வேறு பாடங்களுக்கான தரங்கள் பொதுவான கல்வி முன்னேற்றம் பற்றிய தரங்கள் போன்றன இத்தகையன. இப்போது நூற்றுமானத் தரங்கள் (Percentile Norms) எனப் படுவன பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட வயது அல்லது வகுப்பு மாணாக்கர்களைக் கொண்ட குழுக்களது சாதனைகளை நூற்றுமான வரிசைப்படுத்திக் குறிப்பிட்ட ஒரு மாணாக்கனது சாதனையை இவ் வரிசைப் பட்டியலோடு ஒப்பிட்டுப் பார்க்க இவ்வகைத் தரம் ஆசிரியர்களுக்கு உதவுகிறது

பல்வேறு சோதனைகளுடன் இணைக்கப்பட்ட தரங்களைப் பயன்படுத்துவதினின்றும் ஆசிரியர்கள் பின்வரும் பயன்களைப் பெறவியலும்.

1. குறிப்பிட்ட ஒரு வகுபபின் சாதனையை அவ் வகுப்புக் கேற்ற அல்லது அவ் வட்டாரத்துக்கான அல்லது நாட்டுக்கே பொதுவான தரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அவ் வகுப்பின் சாதனையை மதிப்பிடலாம்.

2. தனிப்பட்ட மாணாக்கர்களது சாதனையை மதிப்பிடவும் தரங்கள் உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு கல்வி அடைவுச் சோதனையில் மாணாக்கன் ஒருவன் பெறும் மதிப் பெண்ணை, அவனது இயற்கை அறிவுத் திறனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் அது பொருளுள்ளதாக அமையும். பிற்பட்ட மாணாக்கன் ஒருவன் தனது முழுமையான அறிவாற்ற லையும் பயன்படுத்திப் பள்ளியில் செயற்படக் கூடும். அதேபோது ஒரு மீத்திற மாணாக்கனின் ஆற்றலோடு ஒப்பிட்டு நோக்கும் போது அவனது கல்வி அடைவு மிகக் குறைந்த அளவினதாக அமைந்திருக்கலாம்.

3. மாணாக்கர்களது குடும்ப-பண்பாட்டுப் பின்னணிகளை மதிப்பிடவும் தரங்கள் ஆசிரியர்களுக்கு உதவும். ஏனெனில், ஒரு மாணாக்கனது கல்வி முன்னேற்றம் அவனது சமூகப் பொருளா

தாரப் பின்னணி, அவனுக்குக் கிடைத்துள்ள வாய்ப்புகள் ஆகிய வற்றோடு தொடர்புடையதாகும்.

4. கல்வி ஏற்பாட்டின் பின்னமைந்துள்ள நோக்கங்களை மதிப்பிடுதலிலும் தரங்கள் ஆசிரியர்களுக்கு உதவுகின்றன.

5. மாணாக்கர்களிடையே காணப்படும் தனியாள் வேற்று மைகளின் தன்மையினை மதிப்பிடவும் தரங்கள் உதவுகின்றன.

மதிப்பீட்டில் எழும் நிர்வாகப் பிரச்சினைகள்

மதிப்பீட்டுத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவதில் நிர்வாகப் பிரச்சினைகள் சில எழக்கூடும். பள்ளியின் தேவை களுக்கு ஏற்ப, அப் பள்ளியின் தலைமையாசிரியர், பிற ஆசிரியர் ஆகியோர்களால் மதிப்பீட்டிற்கான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு உருவாக்கிச் செயற்படுத்துவதில் சம்பந்தப் பட்ட ஆய்வாளரது கருத்துகளையும் கோரிப் பெறுவது பயனுள்ள தாகும். மதிப்பீட்டுத் திட்டத்தில் பல்வேறு கூறுகள் சிறிது சிறிதாகவே பள்ளிகளில் புகுத்தப்படவேண்டும். பல சோதனை களை ஒரே சமயத்தில் பயன்படுத்த வேண்டிய நிலை இதனால் எழாது. ஆசிரியர்களது வேலைப்பளுவும் இதன் விளைவாக அதிக அளவில் அதிகரிக்காது. பள்ளியில் பயன்படுத்தப்பட வேண்டிய சோதனைகள் ஆசிரியர்களாலேயே உருவாக்கப்படு வதாயின் அவை நன்கு தயாரிக்கப்படவேண்டும். புதிய மதிப் பீட்டுச் சோதனைகளையும், நுண்முறைகளையும் பயனுள்ள முறையில் கையாளத் தேவைப்படும் புதுப்பயிற்சியினைப் பள்ளி ஆசிரியர்கள் பெறுவதும் அவசியமாகும். சோதனைகளை உருவாக்கவும், பயன்படுத்தவும் உதவும் பல்வேறு நூல்கள், மாதிரிக்கான சோதனைத்தாள்கள், படிகள் எடுக்கும் இயந் திரங்கள் (Duplicators) சோதனை உருப்படிகளை முறைப்படி தொகுத்து வைக்க உதவும் சாதனங்கள் (Filing Cabinets) போன்ற எல்லா வசதிகளும் பள்ளியில் இருத்தல் வேண்டும். மதிப் பீட்டிற்கான திட்டங்களை உருவாக்குகையில் ஆசிரியர்களது முழு ஒத்துழைப்பினைப் பெறும்வகையில் தலைமையாசிரியர் அவர்களைக் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில், பள்ளிக்கான மதிப்பீட்டுத் திட்டங்கள் நன்கு செயற்படுதலின் ஆசிரியர்களது ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

மதிப்பீட்டுத் திட்டத்தினை உருவாக்கிச் செயற்படுத்துவதில் நான்கு முக்கிய கூறுகள் உள்ளன. அவை பின்வருமாறு:

1. பயன்படுத்தப்படவேண்டிய சோதனைகளைத் தேர்ந்

தெடுத்தல் அல்லது தேவைக்கேற்பப் புதிய சோத னைகளை உருவாக்குதல் (Selection or Construction of Suitable Test).

2. இச்சோதனைகளை வகுப்பறையில் மாணாக்கர்களுக்கு அளித்தல் (Administration of the Test)

3. விடைகளை மதிப்பிட்டு, ஏற்ற மதிப்பெண்களை அளித்தல் (Scoring)

4. மதிப்பெண்களுக்குப் பொருள் காணல் (Interpretation of test results)

ஒரு மாணாக்கன் சோதனையில் பெற்ற மதிப்பெண்களுக்குப் பொருள் காணும்போது சோதனையின் நோக்கத்தினை ஆசிரியர் கருத்தில் கொள்வது அவசியமாகும். பொருள்காணல், மாணாக் கர்களைக் குறைகூறுவதாக அமையாமல் ஆக்க நிலைப்பட்டதாக (Constructive and Positive) அமைதல் வேண்டும். பொருள் காணல், பெறப்பட்ட மதிப்பெண்கள் அல்லது விவரங்களின்அடிப் படையில் அமையவேண்டுமே தவிர, ஆசிரியர்களது விருப்பு வெறுப்புகளின் அடிப்படையிலோ அல்லது மனவெழுச்சிக் குறுக் கீடுகளால் பாதிக்கப்படும் விதத்திலோ அமையக்கூடாது.

மதிப்பெண்களுக்குப் பொருள் காண்பதில் புள்ளியியல் (Statistics) முறைகள் ஆசிரியர்களுக்கு உதவுகின்றன.

(அ) மதிப்பெண்கள் எவ்வாறு பரவிக் காணப்படுகின்றன என்பதற்கு அலைவெண் பரவல் (Frequency Distribution) அவற்றை ஒரு செவ்வக உருவப்படமாக (Histogram) அமைத்தல் ஆகியன விடைகளாக அமையும்.

(ஆ) சோதிக்கப்பட்ட மாணாக்கர்களது மதிப்பெண்களுள் எம்மதிப்பெண் அவர்கள் யாவர்க்கும் பொதுவாக அமைகிறது. அவ்வகுப்பின் சாதனையின் மையமாக எம்மதிப்பெண் அமைகிறது என்னும் வினாக்களுக்குச் சராசரி (Average), மையநிலை (Median), 50ஆவது நூற்றுமானம் (50th Precentile) போன்றன விடைகளாக அமைகின்றன.

(இ) தரவிலக்கம் (Standard Deviation) என்னும் கருத்து, வகுப்பு மாணாக்கர்கள் ஒரு சோதனையில் பெற்றுள்ள மதிப்பெண்கள் எவ்வளவு பரவலாகச் சிதறிக் காணப்படு கின்றன என்பதனைத் தெளிவாக்கும்.

(ஈ) நூற்றுமான வரிசையும் (Percentile) தரமதிப்பெண்ணும் (Standard Score) ஒரு மாணாக்கன் பெற்றுள்ள மதிப்பெண் உயர்ந்ததா அல்லது தாழ்ந்ததா என்பதைக் குறிக்க உதவும்.

(உ) வெவ்வேறு சோதனைகளில் மாணாக்கர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களுக்கிடையே எந்த அளவுக்கு இணைப்பும் தொடர்பும் காணப்படுகின்றன. ஒரே மாணாக்கனது பல்வேறு சோதனை மதிப்பெண்களுக்கிடையே எத்தகைய தொடர்பு காணப்படுகின்றது என்பதனை இணைப்புக்கெழு(Correlation Co-efficient)தெளிவாக்கும்.

சோதனைகளை வகுப்பறைகளிலேயே நடத்துவது பொதுவாக விரும்பத்தக்கது. சோதனைகளைத் திறம்பட நடத்துவதற்கான பயிற்சி ஒவ்வோர் ஆசிரியர்க்கும் அளிக்கப்பட வேண்டும்.

மதிப்பெண்களும் தரச்சின்னங்களும்

மதிப்பெண்களும் (Marks) தரச்சின்னங்களும் (Grades) ஒருவரைப் பற்றி வேறொருவரது தீர்மானங்களே (Judgements) ஆகும். மாணாக்கர்களுக்கு சோதனைகளில் அளிக்கப்படும் மதிப்பெண்களைப்பற்றிய அறிவு பலருக்குத் தேவைப்படும். இவ்வறிவு மாணாக்கர்களது கற்றலை ஊக்குவிக்கவும், துரிதப்படுத்தவும், கல்வி வளர்ச்சியைத் திசைப்படுத்தவும், எதிர்காலத்துக்கான கல்வி, தொழில் ஆகியவைபற்றித் திட்டமிடவும் தேவைப்படுவதாகும். மதிப்பெண்களைப் பற்றிய விவரங்கள் பள்ளிகள், பெற்றோர்கள், வேலை அளிப்போர் போன்ற பலருக்கு உதவும். இப்போது கல்வி நிலையங்களில் தரச்சின்னங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு பாடத்திலும் மாணாக்கன் பெற்ற சாதனைக்குத் தரச்சின்னம் அளிப்பதை விட எல்லாப் பாடங்களின் சாதனைகளுக்கும் முழுமையாக இணைந்த வகையில் தரச்சின்னமளிப்பது சிறந்ததாகும். தரச்சின்னங்களும் முழுமை பெற்றவையல்ல. இவை பழக்கத்தினின்று எழுகின்றன. A, B+, B, C+, C போன்ற தரச்சின்னங்களின் பொருள் தெளிவாக்கப்படவேண்டும். பல நிலைகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்குப் பல்வேறு தரவிளக்கங்கள் இருத்தல் விரும்பத்தக்கது. மதிப்பெண்கள், தரச்சின்னங்கள் ஆகியவற்றை மாணாக்கர்களுக்கு அளிக்கும் போது இவற்றோடு தொடர்புடைய குறைபாடுகள் எழாவண்ணம் ஆசிரியர்கள் முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

பண்டைய தேர்வுகளும் இன்றைய மதிப்பீட்டு முறைகளும்

பண்டைய தேர்வுகள் பொருளறிவு வளர்ச்சியினை மட்டுமே அளந்தறியத் தோன்றியவை. அதனையும் அக்காலத் தேர்வு முறைகளால் சரிவர அளந்தறிய இயலாமற் போயிற்று. இன்றைய மதிப்பீட்டு அல்லது அளவிடல் முறைகளில் மாணாக்கர்களது பொருளறிவை நன்கு ஆராய்ந்தறியத் தேவைப்படும் தேர்வுகளைத் தவிர, கல்வியின் பிற இலக்குகளை அடைவதில் மாணக்கர்களது முன்னேற்றத்தை அளவிட உதவும் பல நுண் முறைகளும் அடங்கியுள்ளன. நுண்ணறிவுச் சோதனைகள் (Intelligence Tests)', நாட்டச் சோதனைகள் (Aptitude Tests), மனப்பான்மைச் சோதனைகள் (Attitude Tests), கவர்ச்சிச் சோதனைகள் (Interest Inventories), ஆளுமைச் சோதனைகள் (Personality Tests), சமூக முதிர்ச்சி அளவீடுகள் (Social Maturity-Scales), அடைவுச் சோதனைகள் (Achievement Tests) போன்ற பல சோதனைகளை இன்று பல்வேறு துறைகளில் மாணாக்கனின் வளர்ச்சியை மதிப்பிடுதலில் ஆசிரியர் பயன்படுத்துகிறார். இத்தகைய உளவியல்-கல்வி மதிப்பீட்டு முறைகள் யாவும் திட்டமான முழுவதும் உண்மையான முடிவுகளைக் கொடுக்கக் கூடிய அளவுக்கு வளர்ச்சி பெறவில்லை என்பதனை இம் முறைகளைப் பயன்படுத்தும் ஆசிரியர் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, இவற்றைப் பயன்படுத்துதலின் மூலம் எழும் முடிவுகளை மாணாக்கனின் வளர்ச்சிபற்றிக் கூறும் கருதுகோள் களாகவே கொள்ளுதல் வேண்டும். மேலும், மாணாக்கர்களது பிற்கால வாழ்க்கை வளமுற ஆசிரியர் இம்முடிவுகளை ஆராய்ந்து அவர்களுக்கு வழிகாட்டுதலும், அறிவுரை பகர்தலும் வேண்டும்.

மதிப்பீடு செய்யும் முறை அல்லது முறைகள் மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். மதிப்பீட்டின் மூலம் கிடைக்கும் குறிப்புகளை அகவயப்படாது உணர்ந்தறிதல் வேண்டும். எக்குறிக்கோளுடன் அம்மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டதோ அதனை நன்கு அறிந்து மதிப்பீட்டின் மூலம் கிடைத்த குறிப்புகளை அதற்குப் பயன்படுத்துதல் வேண்டும். கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குப் பயன்படுவதே மதிப்பீடு செய்வதின் பொதுவான குறிக்கோளாகும். திறமையான ஆசிரியர் தாம் கண்டறிகின்றவற்றையும் சோதனைகள் மூலம் தேர்ந்தறிகின்ற வற்றையும் தம் மேற்பார்வையிலுள்ள கற்பித்தல் செயல் திட்டத்தில் பயன்படுத்துதல் வேண்டும். கல்வியின் தரத்தினை உயர்த்துவதே பொது நோக்கமாக அமைதல் வேண்டும்.

கல்வியில் மதிப்பீட்டின் பரப்பு

மதிப்பிடப்படவேண்டிய கல்வி விளைவுகள் ஒவ்வொன்றும் சிக்கலானது ; பல பகுதிகளையும் கூறுகளையும் கொண்டது. எனவே, இவற்றை மதிப்பிட, இவை ஒவ்வொன்றும் ஆராயப்பட்டு, இவற்றின் தன்மைக்கேற்பப் பல உட்பிரிவுகளைக் கொண்ட மதிப்பீட்டு முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மாணாக்கர்களை மதிப்பீடு செய்கின்ற பொழுது அவர்களுடைய பல்வேறு திறமைகளையும் தேவைகளையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். இவற்றுள் இன்றியமையாதன பின்வருமாறு:

1. மாணாக்கனின் அறிவுத்திறன் எவ்வாறு உள்ளது? அவனுடைய தனிப்பட்ட மனப்பான்மை எவ்வாறு உள்ளது என்பனவற்றை அறிதல் வேண்டும்.
2. கற்றலின்போது மாணாக்கன் பெற்றுள்ள அறிவுத்திறன், பொருளுணரும் அல்லது புரிந்துக்கொள்ளும் திறன், செய்திறன்கள், கோட்பாடுகளைப் பல்வேறு புதிய நிலைமைகளுக்குப் பயன்படுத்தும் திறன் ஆகியவற்றில் அவன் அடைந்த தேர்ச்சியளவையும் மதிப்பீட்டின் மூலம் அறிதல் வேண்டும்.
3. மாணாக்கனுடைய சூழ்நிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதனையும், மாணாக்கனிடம் பொருந்தியுள்ள நற்பண்புகளுக்கு அல்லது தீய விளைவுகளுக்குக் காரணமாயுள்ள சூழ்நிலைக்கூறுகள் யாவை என்பதனையும் ஆசிரியர் மதிப்பீட்டின் மூலம் அறிதல் வேண்டும்.
4. தனிப்பட்ட மாணாக்கனாக அவனுடைய இயல்புகளையும், சமூகத்தில் ஓர் உறுப்பினனாக அவனுடைய இயல்புகளையும் மதிப்பீட்டின் மூலம் கண்டறிதல் வேண்டும்.
5. மாணாக்கனுடைய உடல்நலத்திற்குரிய தேவைகள் யாவை? உளநலத்திற்குரிய தேவைகள் யாவை என்பவற்றினை மதிப்பீட்டின் மூலம் அறிதல் வேண்டும்.

மேற்கண்டவற்றை மதிப்பீடு செய்கின்ற பொழுது ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளிப் பருவத்தில் கீழ்வருவனவற்றைத் தமது குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும்.

1. திறமையாகச் சிந்திக்கும் ஆற்றலை மாணாக்கர்களிடம் வளர்த்தல்,

2. நல்ல படிப்புத்திறன்களையும், பயன்தரக் கூடிய வேலைப் பழக்கங்களையும் மாணாக்கர்கள் பெறுதல்.
3. சமூக மனப்பான்மைகளை மாணாக்கர்கள் பெறுவதுடன், குறிப்பிட்ட செய்திகளைப் பற்றிய பரந்த அறிவினையும் அவர்கள் பெறுதல்.
4. தகுந்த சமூக உணர்வினைப் பெறுவதுடன், சமூகத்துடன் சிறந்த பொருத்தப்பாட்டினை மாணாக்கர்கள் பெறுவதற்கேற்ற வாய்ப்பு அளித்தல்.
5. மாணாக்கனது உடல்நலத்தைப் பேணி, இன்றியமையாது தேவைப்படும் செய்திகளை மாணாக்கன் அறியச் செய்து, மாறுபடாத ஒரேபடியான வாழ்க்கைத் தத்துவத்தினை உணர்ந்து அவனை வாழச் செய்தல்.
6. இசை, கலை, இலக்கியம் ஆகிய நுண்கலைகளையும், இவை போன்ற பிற கலையனுபவங்களையும் சுவையுணர்ந்து போற்றும் திறனை மாணாக்கர்கள் பெறுதல்.

பள்ளித் தேர்வுகளும் இன்றைய மதிப்பீட்டு முறைகளும்

பள்ளிகளில் இன்று பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு முறைகள் (Evaluation Devices) பலவகைப் பட்டனவாம். இவற்றுள் எழுத்துத் தேர்வு, வாய்மொழித் தேர்வு, செய்முறைத் தேர்வு, மாணாக்கனது நடத்தையை உற்றுநோக்கி, அவனுடன் உரையாடி அவனது கவர்ச்சிகளை உணர்தல், வினா வரிசைகளைப் பயன்படுத்துதல், நுண்ணறிவு, ஆளுமைக் கூறுகள் போன்ற உளப்பண்புகளை அளவிடுதல் போன்ற யாவும் மதிப்பீட்டில் அடங்கும். இவற்றில் எதனைப் பயன் படுத்துவது என்பது, மாணாக்கனது நடத்தை முறையில் கற்றலினால் எழும் எந்த ஒரு குறிப்பிட்ட மாறுதலை ஆசிரியர் ஆராய்ந்து அளவிட விரும்புகிறார் என்பதனைப் பொறுத்ததாகும். இத்தகைய மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்துவதால் மாணாக்கர்கள் திறம்படக் கற்க முடிகிறது. மாணாக்கர்களைப் பற்றிய திறன் பதிவுகளைத் தொகுப்பதற்கும் இவற்றில் குறிக்கப் பட்டுள்ள விவரங்களைப் பயன்படுத்தி அவர்களது கல்வி முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவதற்கும் மதிப்பீட்டு முறைகள் ஆசிரியர்களுக்குத் தேவைப்படுவதாகும். மேலும், பயனற்ற பாடப்பொருள்களை நீக்கிக் கல்வி ஏற்பாட்டில் விரும்பத்தக்க மாறுதல்களைச் செய்வதற்கும் இம் மதிப்பீட்டு முறைகள் உதவுகின்றன.

பள்ளிகளில் மாணாக்கர்களைச் சோதித்துணரக் கட்டுரைத் தேர்வு முறையினையே பல்லாண்டுகள் பயன்படுத்தி வந்துள்ளோம். கல்வி ஏற்பாடு, கற்பித்தல் முறைகள் ஆகிய வற்றில் எந்த அளவிற்குச் சிக்கல்கள் உண்டோ அந்த அளவிற்குத் தேர்வு முறையிலும் சிக்கல்கள் நிறைந்துள்ளன. கட்டுரைத் தேர்வில் பல குறைபாடுகள் உள்ளன. பொதுவாக, தேர்வுகளின் குறைபாடுகள் இன்று எல்லோராலும் நன்கு உணரப் பட்டுள்ளன. மேலும், இன்று பின்பற்றப்படும் தேர்வுகளில் நன்மைகளைக் காட்டிலும் தீமைகள் மிகுந்துள்ளன என்னும் கருத்தினைப் பல கல்விக் குழுக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

தேர்வு முறையின் குறைபாடுகள்

1. மாணாக்கர்கள் ஓராண்டு முழுவதும் படித்தவற்றைச் சில மணி நேரத்தில் சோதிப்பதால், மொத்தப் பாடப் பொருளில் கால் பங்கினை மட்டுமே சோதிக்க முடியும்; பெரும்பகுதியைச் சோதிக்க முடிவதில்லை.
2. இன்று பின்பற்றப்படும் தேர்வுகள் நினைவாற்றலை மட்டுமே வலியுறுத்துகின்றன.
3. எழுத்தாற்றல் மிகுந்துள்ளோர் பிற ஆற்றல்களைக் குறைவாகப் பெற்றிருப்பினும் தேர்வுகளில் அதிக மதிப் பெண்களைப் பெறமுடியும்.
4. மாணாக்கர்கள் பெற்றுள்ள அறிவுப் பரப்பின் சிறு பகுதிகளை மட்டுமே தேர்வுகளால் சோதிக்க முடியும்.
5. மாணாக்கர்களின் மதிநுட்பம், கவர்ச்சிகள், நாட்டங்கள், ஆளுமைப் பண்புகள் போன்றவைகளைத் தேர்வுகள் மதிப்பீடு செய்வதில்லை.
6. தேர்வுகள் எதனை அல்லது எவற்றை அளந்தறிவதற் காகத் திட்டமிடப்பட்டனவோ அதனை அல்லது அவற்றை அளந்தறிந்தால் தேர்வுகளை ஏற்புடையன வாகக் கூறலாம். தேர்வுகள் இவ்வாறாக அமைந்திருப்ப தில்லை. எனவே தேர்வுகள் ஏற்புடைமைத் தன்மை குறைந்து காணப்படுகின்றன.
7. கேள்விகளைத் தேர்ந்தெடுத்தல், தேர்வை நடத்துதல், விடைத்தாள்களைத் திருத்தல் போன்ற தேர்வு நிலைகளில் ஆசிரியரின் மனநிலை, உடல்நிலை, சூழ்நிலை போன்றவைகள் மதிப்பெண்களைப் பாதிக் கின்றன. அதனால் ஒரே விடைத்தாளை இரு ஆசிரி

யர்கள் தனித்தனியே திருத்தினால் மதிப்பெண்கள் வேறு படுகின்றன. ஒரே விடைத்தாளை வெவ்வேறு சமயங்களில் அதே ஆசிரியர் திருத்தினாலும்—எடுத்துக் காட்டாக, சாப்பாட்டுக்கு முன் திருத்துவதைக் காட்டிலும் சாப்பாட்டிற்குப்பின் திருத்துதல்—மதிப்பெண்கள் வேறு படுகின்றன. இது மட்டுமன்றி, சில சமயங்களில் தேர்வில் வெற்றி பெற வேண்டிய கெட்டிக்கார மாணாக்கன் தோல்வி ஆகிவிடுதலும், தோல்வி பெறக் கூடிய மாணாக்கன் வெற்றி பெற்றுவிடுதலும் போன்ற அதிசயங்கள்கூட நடைபெறுவது உண்டு. எனவே, இத் தேர்வுகள் நம்பகத் தன்மை குறைந்து காணப் படுகின்றன.

8. தேர்வு புறவயப்பட்டதாயிருத்தல் வேண்டுமென்பதைத் தேர்வின் இன்றியமையாத இயல்புகளில் ஒன்றெனக் குறிப்பிடலாம். தேர்வின் முடிவு ஆளுக்கேற்றபடி மாறுவதாயிருத்தல் கூடாது. திருத்துகின்ற ஆசிரியரின் மனநிலை தேர்வின் முடிவைப் பாதிப்பதாக இருத்தல் கூடாது. ஆனால் தேர்வுகள் இவ்வாறாக அமைந்திருப்ப தில்லை. எனவே தேர்வுகள் புறவயப் பண்பு குறைந்து காணப்படுகின்றன.

9. தேர்வு முறை கற்பித்தலுக்கு ஒரு குறுகிய நோக்கத்தை அளித்து, கற்றலைக் கவர்ச்சியற்றதாக மாற்றி, தேர்வில் வெற்றி பெறுதல் ஒன்றே கல்வியின் நோக்கம் என்ற தவறான கருத்தினை மாணாக்கர்கள், ஆசிரியர்கள் ஆகியோரது உள்ளங்களில் தோற்றுவிக்கின்றது.

10. இதனால் மாணாக்கர்கள் சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறனை இழந்துவிடுகிறார்கள். கல்வித் தரக் குறைவுக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

11. பெற்றோர்கள் தம் மக்கள் படிப்பதில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டுமென விரும்புவதால் இவர்கள் பாட இணைச் செயல்களிலும் பாடப்புறச் செயல்களிலும் ஈடுபடுவதனை அனுமதிப்பதில்லை. இதனால் மாணாக் கர்களின் ஆளுமை வளர்ச்சி பெருமளவு பாதிக்கப் படுகிறது.

12. தேர்வுகள் மாணாக்கர்களிடையே அச்சம், மனச்சோர்வு நரம்புத் தளர்ச்சி, தற்கொலை செய்ய முயலுதல், வீணான கவலைகள், பிற உளக் கிளர்ச்சிகள் போன்ற,

வற்றைத் தோற்றுவித்து அவர்களது உளநலத்தைப் பாதிக்கின்றன.

13. மாணாக்கர்கள் எப்படியாவது தேர்வுகளில் வெற்றி பெற வேண்டுமென்பதற்காகத் தேர்வு வினாக்களைத் தெரிந்து கொள்ளல், தேர்வுகளில் புத்தகங்களைப் பார்த்து எழுதுதல், தேர்வு நாளன்று வெளி நடப்புச் செய்தல், தேர்வு மேற்பார்வையாளர்களுக்குத் தீங்கு விளை வித்தல், வேலைநிறுத்தம் செய்தல் போன்ற சமூக விரோத நடத்தைகளிலும் வன்முறைச் செயல்களிலும் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

14. தனியார் துறை நிறுவனங்களின் நிர்வாகிகளும் பல்வேறு அலுவலர்களும் பணித் தேர்வின்போது மாணாக்கர்களின் மதிப்பெண்களை மட்டும் கவனித்துப் பணியாட்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

15. கல்வி அலுவலர்கள் கூடத் தேர்வின் அடைவை வைத்தே ஆசிரியர்களின் திறமையையும் பணியையும் மதிப்பிடு கிறார்கள்.

தேர்வு (Examination) அடைமொழிகள்

1. உண்மைக் கல்வியின் பகைவன்.
2. ஓர் அவசியமான தீமை.
3. மானிட அறியாமையை அளவிடுதலுக்கான ஓர் ஆணவ மிக்க முயற்சி.
4. கற்றலுக்கு ஒரு தடங்கல்.
5. ஒரு கொடிய கனவு.
6. ஞாபகத்தினைப் போற்றும் ஒரு செயல்.
7. தொல்லை மற்றும் பூசலின் காரணகர்த்தா.
8. கல்வித் திட்டத்தில் ஒரு நச்சுப்பை.
9. ஓர் இரத்தம் உறிஞ்சி.
10. ஒரு வளரும் கொடுங்கோன்மை.

தேர்வு முறையில் சீர்திருத்தங்கள்

தேர்வு முறையில் குறைபாடுகள் இருந்தபோதிலும் தேர்வை முழுமையாக நீக்கிவிட முடியாது. மாறாக, இத்தேர்வு முறையில் தேவையான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். தேர்வின்

ஏற்புடைமையையும் நம்பகத் தன்மையையும் உயர்த்துவது உடனடித் தேவையாகும். இதற்காக இன்று நம் நாட்டுத் தேர்வு முறைகளில் கட்டுரைத் தேர்வுக்குப் பதிலாக புது முறை வினாக் களைக் கொண்ட தேர்வுகள் (New type Tests) பயன்படுத்தப் படுகின்றன. இப்புதுமுறைச் சோதனைகளில் குறிப்பிட்ட காலத்திற்குள் அதிகமான சிறு விடைச் சோதனை வினாக்களைப் பயன்படுத்த முடியுமாதலால் மொத்தப் பாடப் பொருளையும் சோதிக்க முடியும். மேலும் இம்முறையில் பல தேர்வாளர்கள் மதிப்பீடு செய்தாலும் மதிப்பெண் ஒரே மாதிரியாகவே கிடைக்கும். தேர்வாளர்களின் அகவயப்பட்ட காரணிகளால் தேர்வின் முடிவுகள் பாதிக்கப்படுவதில்லை. இச்சோதனைகளின் வழியாக மாணாக்கர்கள் தங்களது தவறுகளை எளிதாகக் கண்டுபிடித்துப் போக்கிக் கொள்ள முடியும். மாணாக்கர்களது கற்றலைச் சோதிக்கும் இறுதிச் சோதனைகளாகவும் இச்சோதனைகளை ஆசிரியர் பயன்படுத்தலாம். புது முறை வினாக்களைக் கொண்ட இத்தேர்வுகள் பெருமளவு நம்பகமானவை ; இவற்றின் முடிவுகள் உண்மையானவை ; ஏற்கக் கூடியவை.

புது முறைத் தேர்வுகள்

புதிய முறைத் தேர்வுகளைச் சிறு விடைச் சோதனைகள் (Short Answer Tests) என்றும் குறிப்பிடுவர். இவை பல வகைப் படும். இவற்றுள் பல்விடையில் தேர்வு (Multiple Choice), மெய்-பொய் வினாக்கள் (True False Items), முடித்தற்சோதனைகள் (Completion Tests), இணைத்தற் சோதனைகள் (Matching Items) போன்ற யாவும் அடங்கும். இவற்றுக்குத் தொடர்புள்ள பல கருத்துகளைக் கொண்ட நீண்ட விடைகள் எழுதத் தேவை யில்லை. இவற்றிற்கான விடைகளும் திட்டவட்டமானவை.

புது முறைச் சோதனைகளின் நல்லியல்புகள்

1. புது முறைச் சோதனைகளுக்குப் புறவயத்தன்மை மிகுதி. தேர்வாளர்கள் பலர் இருப்பினும் மதிப்பீட்டில் ஒற்றுமை காணப்படும்.
2. விடைகளுக்கு மதிப்பெண்களை அளிப்பது நம்பகம் அதிகமுள்ள செயல்முறையாக அமையும்.
3. விடைத்தாள்களை விரைவாகத் திருத்த முடியும். காலம் வீணாவதில்லை. மாணாக்கர்களேகூட விடைத் தாள்களைத் திருத்தலாம். அவ்வாறு திருத்துவதன் மூலமும் அவர்கள் கல்வி வளர்ச்சி பெறுகின்றனர்.

4. குறிப்பிட்ட காலத்திற்குள் எண்ணிக்கையில் அதிகமான சிறுவிடைச் சோதனை உருப்படிகளைப் பயன்படுத்த முடியுமாகையால், பாடப்பொருளின் எல்லாப் பகுதி களிலும் எவற்றையும் விட்டுவிடாமல் நல்ல முறையில் தேர்ந்தறிவதற்கு சாத்தியமாகின்றது.

5. தேர்வு என்றால் நீண்ட நேரம் எழுத வேண்டியதின்றிக் குறைந்த நேரத்தில் அதிகமாகச் சிந்தித்துச் சிறிதளவே எழுதவேண்டியுள்ளது. எனவே இம்மாதிரியான வினாக்களை மாணாக்கர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

6. சோதனைக்குப் புறம்பான மொழித்திறன், எடுத்துக் கூறும் திறன் போன்றவற்றால் தேர்ந்தறிதலில் தவறு ஏற்பட இம்முறையில் வழியில்லை.

7. மனப்பாடம் செய்யும் திறன் வாய்ந்தோர், பொருள் விளங்காமல் படித்து எழுதுவோர் போன்றோர் உண்மை விடை தெரிந்துள்ளோர் போல் நடித்துத் தேர்வாளர் களைச் சிலபோது ஏமாற்றுவது இத்தேர்வு முறையில் செய்ய இயலாது.

8. இப்புது முறைச் சோதனைகளைக் கொண்டு மாணாக்கர் களிடம் காணப்படும் குறைகளை எளிதில் கண்டுபிடிக்க இயலும். அவர்கள் செய்யும் தவறுகளை ஆராய்வதும் எளிதாகும்.

9. தரப்படுத்தப்பட்ட புதுமுறைத் தேர்வுகளை ஒப்பு நோக்கி அதனதன் நிலை யுணர்ந்து கொள்ளுதல் முடியும்.

இப்புது முறையிலுள்ள சில குறைகள்

1. இத்தகைய வினாக்களை நல்ல முறையில் தயாரித்தல் கடினமாகும். இவ்வினாக்களை அமைப்பதற்கு நீண்ட நேரமும் திறனும் தேவை.

2. புது முறை வினாக்களைப் படிகளெடுக்கப் பணச்செலவு அதிகமாகும்.

3. வினாக்களுக்கு விடையெழுதும் பொழுது மாணக்கர்கள் சிந்தனை செய்யாமல் தமது ஊகத்தின் துணை கொண்டு சரியான விடைகளைக் குறிப்பிடக் கூடும். மாணாக்கர்கள் எப்பொழுது சிந்தனை செய்யாது, உண்மை விடைகளை அறிந்திராத போதும், ஊகித்து எழுதுகின்றனர் என்று கண்டுபிடித்தலும் அரிதாகும்.

4. வாய்மொழியாகப் புதுமுறை வினாக்களை வகுப்பறையில் பயன்படுத்துவது கடினம்.

5. இம்முறையிலும் பாடப்பொருளறிவையே தேர்ந்தறிதல் முடியும். கருத்துகளை வினாக்களாகக் கேட்க முடியாது. பாடப்பொருளை ஒழுங்காக அமைக்கும் முறையையும், தொடர்ச்சியாகக் கூறும் திறனையும் இம்முறை தேர்ந்தறிவதில்லை.

6. குறிப்பிட்ட செய்திகளை மாணாக்கர்கள் நினைவில் வைத்திருக்கின்றனரா என்று அறிய உதவுமேயன்றி, ஆய்வுத்திறன், பாட அறிவைப் பயன்படுத்திச் சிக்கல் களைத் தீர்த்தல் ஆகியவற்றை அறிய இம்முறை பல போது பயன்படாது.

7. மாணாக்கர்களுடைய மனப்பான்மைகள் சுவையுணர் திறன், ஆர்வம், குறிக்கோள் போன்றவற்றைப் புதிய முறைத் தேர்வுகளால் அறிதல் கடினம்.

புது முறைத் தேர்வு வகைகள்

புது முறைத் தேர்வுகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். (1) நினைந்து அறிதல் வகை (2) நினைவுக்குக் கொண்டு வருதல் வகை

1. நினைந்து அறிதல் வகை

இவ்வகையில் வினாக்களும் அவைகட்குரிய விடைகளும் கொடுக்கப்பட்டிருக்கும். மாணாக்கர்கள் சரியானவிடையைக் கண்டு அறிந்து எழுத வேண்டும்.

(i) பல்விடையில் தேர்வு (Multiple Choice)

(அ) ஒரு வினாவுக்குப் பல விடைகளைக் கொடுத்து, வினாவுக்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுக்கச் செய்தல்.

(ஆ) முற்றுப்பெறாத தொடரை முற்றுவிக்கப் பல சொறகளைத் தந்து அவற்றில் ஒன்றைத் தேர்ந் தெடுக்கச் செய்தல்.

கொடுக்கப்பட்டுள்ள பல விடைகளில் ஒரு வினாவுக்குப் பொருத்தமான விடையாக எது அமையும் என்பதனை இவ்வகை வினாக்களில் மாணாக்கன் குறிப்பிட வேண்டும். அதாவது ஒரு

வினாவுக்குப் பல விடைகளைக் கொடுத்து வினாவுக்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுக்கச் செய்தலாகும். சிலபோது வினாக்களுக்குப் பதில் ஒரு வாக்கியத்தை முடிப்பதற்கு ஏற்ற சொல்லைப் பல சொற்களினின்றும் மாணாக்கன் தேர்ந்தெடுக்க வேண்டும். இது மீட்டுணர்தலைச் (Recognition) சோதிக்கிறது. சிக்கலான கருத்துகள் பற்றிய அறிவு, பொருள் காணும் திறன் போன்றவற்றை மதிப்பிட இவ்வகைச் சோதனை சிறந்தது. பல்விடையில் தேர்வு உருப்படிகளில் ஒரு வினா அல்லது வாக்கியத்தோடு (Stem of the test item) 4 அல்லது 5 மாற்று விடைகள் (Responses காணப்படும். இவற்றுள் ஒன்றைத் தவிர பிற யாவும் தவறானவையாகவோ அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவோ இருக்கும். இவை முழுமையாக முட்டாள்தனமாக அமைக்கப் படக்கூடாது. மாணாக்கர்கள் பொதுவாக எத்தகைய தவறுகளைச் செய்வார்களோ அவற்றைப் பிரதிபலிப்பனவாக இவ் விடைகள் அமைய வேண்டும்.

(ii) இணைத்தற் சோதனைகள் (Matching Items)

இரண்டு பத்திகளாக (Columns) உருப்படிகளைக் கொடுத்து ஒரு பத்தியிலுள்ள ஓர் உருப்படிக்கு அடுத்த பத்தியிலுள்ள ஏற்ற உருப்படியைப் பொருத்தும்படி (Matching) செய்யலாம்.

இவ்வகைச் சோதனைகளில் சொற்கள், சொற்றொடர்கள், அல்லது வாக்கியங்கள் இரு பத்திகளில் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு பத்தியிலுள்ளவற்றை அவற்றோடு தொடர்புடைய மற்றொரு பத்தியிலுள்ளவற்றோடு மாணாக்கர்கள் இணைக்க வேண்டும். சரியாக இணைக்கப்பட்ட ஒவ்வொரு சோடிக்கும் தனி மதிப்பெண் அளிக்கப்பட வேண்டும். இச் சோடிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை; ஏனெனில், தவறாக ஒரு சோடி இணைக்கப்பட்டால் இறுதியில் சரியாக இணைக்க ஒரு சோடியில் ஒரு பகுதி குறையும். எனவே, கொடுக்கப்பட்டுள்ள இரு பத்திகளில் ஒன்று மற்றதைவிடச் சிறிது நீண்டிருத்தல் வேண்டும். மற்றும் 2 அல்லது 3 சிறிய இணைத்தற் சோதனை உருப்படிகள் ஒரு நீண்ட இணைத்தற்சோதனையைக் காட்டிலும் சிறந்தது. சிக்கலான கருத்துகளை இவ்வகைச் சோதனைகளின் வழியே சோதிக்க முடியாது.

2. நினைவுக்குக் கொண்டு வருதல் வகை

இவ்வகையில், கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு மாணாக்கர்கள் விடையை நினைவுக்குக் கொண்டு வந்து எழுதுதல் வேண்டும்.

(i) ஒரு சொல் அல்லது ஒரு வாக்கியத்தை விடையாக எதிர்பார்க்கும் சிறு வினாக்களாக இருத்தல்.

(எடுத்துக்காட்டு) : காந்தியடிகள் தோற்றுவித்த கல்வி முறை யாது ?

(ii) முற்றுப் பெறாத ஒரு தொடரில் ஏற்ற சொல்லை யமைத்து முற்றுவிக்கும்படி கூறுதல் (Completion Tests) :

கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் விடுபட்டுள்ள ஒரு சொல்லையோ அல்லது சொற்றொடரையோ மாணாக்கன் கண்டு பிடித்து எழுத வேண்டும். பிற சிறு விடை வினாக்களைக் காட்டிலும் இவ்வகை வினாக்களுக்கு விடைகளையெழுத நேரம் சிறிது அதிகம் தேவைப்படும். ஏனெனில், இவற்றுக்கு விடையளிக்க, சரியான விடைகளை மாணாக்கர்கள் தமது உள்ளத்திலே சிந்தித்து உறுதி செய்துகொள்ள வேண்டும். திட்டமான விவரங்களைக் கொண்ட பாடப்பொருள் பற்றிய மாணாக்கர்களது அறிவினைச் சோதிக்க இவ் வகை வினாக்கள் சிறந்தவை.

இவை தவிர, புதுமுறை வினாக்களில் வேறு பல வகைகளும் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மெய்-பொய் வினாக்களைக் (True-False Items) கூறலாம். இவ் வகைச் சோதனையில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு வாக்கியத்தின் கருத்து மெய்யா அல்லது பொய்யா என்பதனை மாணாக்கர் வாக்கியத்தில் பக்கத்தில் குறிக்க வேண்டும். மெய்-பொய் என்பதற்குப் பதில் ஆம்-இல்லை (Yes-No) என்றும் மாணாக்கர் குறிப்பிடலாம். எளிய விவரங்கள், கருத்துகள், பொதுவிதிகள் போன்றன பற்றி மாணாக்கர்களது அறிவைச் சோதிக்க இவ்வகை வினாக்கள் பயன்படும். இவ்வகைச் சோதனையில் தரப்பட்டுள்ள கருத்து களுக்குச் சிலபோது விதிவிலக்குகள் இருக்கக்கூடும். இதனால் இவற்றை முழுமையாக மெய்யென்றோ அல்லது பொய்யென்றோ கூற இயலாது போகக்கூடும். இவ் வகைக் கூற்றுகள் தவிர்க்கப்பட வேண்டும். இத்தகைய உருப்படிகள் இருப்பின், மெய்-பொய் என்பதுடன் ''நிச்சயமாகக் கூறவியலாது'' என்ற மூன்றாவது விடையும் இருப்பது நல்லது. மெய்-பொய் சோதனை உருப்படி களில் மெய்யான கூற்றுகளும் பொய்யான கூற்றுகளும் எண்ணிக் கையில் சமமாக இருத்தல் வேண்டும்.

புதுமுறைச் சோதனைகளைத் தயாரிப்பதற்கான திட்டமிடல்

இத்திட்டமிடலில் கீழ்க்கண்ட படிகள் (Steps) பொதுவாகக் காணப்படும்.

1. சோதனையின் நோக்கங்களை வரிசைப்படுத்தி இந் நோக்கங்களை மாணாக்கர்களது நடத்தையில் எழக் கூடிய மாற்றங்களின் (Behavioural changes) அடிப் படையில் வரையறை செய்தல்.

2. சோதனைக்கான பொருளடக்கத்தினைத் தயாரித்தல். பொருள், விவரங்கள், பொதுவிதிகள், பயன்படுத்தல், சோதனையில் ஒவ்வொரு பிரிவுக்கும் அளிக்கப்பட வேண்டிய இடம் (Weigh'age) ஆகியவை பொருளடக் கத்தில் காணப்படும். இம்மாதிரியே பல்வேறு புதுமுறை வினாக்கள் ஒவ்வொன்றும் சோதனையில் பெற வேண்டிய இடம் பற்றியும் ஒரு குறிப்பினைத் தயாரித்துக் கொள்ளலாம். இவற்றை 'Out line' அல்லது 'Blue Print' என்பர்.

3. மாணாக்கர்கள் சோதனையில் பெற்ற மதிப்பெண்களைச் சோதனையின் ஒவ்வொரு பகுதிக்காகப் பிரித்துக் குறித்தல்.

இது குறை தீரக் கற்பித்தலைத் திட்டமிடுவதற்குப் பெரிதும் உதவும்; மேலும் தமது கல்வி முன்னேற்றத்தை மாணாக்கர்கள் தாமே உணர்வதற்கும் இது உதவும்

பள்ளித் தேர்வுகளில் கட்டுரைத் தேர்வு

பள்ளிகளில் மாணாக்கர்களுக்கான தேர்வு முறை, கட்டுரைத் தேர்வாகவே (Essay Examination) பல்லாண்டுகள் இருந்து வந்தது. இவ் வகைத் தேர்வில் பள்ளிப்பாடத்தைப் பற்றிக் குறைந்த எண்ணிக்கையுள்ள சில வினாக்களே தரப்பட்டிருக்கும். இவ் வினாக்களுக்குக் கட்டுரைகள் மூலம் மாணாக்கர்கள் விடையளிக்க வேண்டும்.

கட்டுரைத் தேர்வில் எல்லோரும் அறிந்த ஒரு சில குறை களைத் தவிர, இத்தேர்வு நடத்துவதில் பல நன்மைகளும் உள்ளன. எனவே, அத்தேர்வு முறையினை அறவே விட்டு விடுவதற்கில்லை. சிறப்பாக, மொழிப்பாடங்களைப் பொறுத்த வரை கட்டுரைத் தேர்வுகள் இன்றியமையாதன என்றுகூடக் கூறலாம். கட்டுரைத் தேர்வு முறையினைப் புறவயப்பட்டதாகவும் நம்பகத் தன்மையுள்ளதாகவும் ஆக்குவதற்கு இன்று பல கருத் துகள் கூறப்படுகின்றன. அக்கருத்துகளுள் முக்கியமானவை பின்வருமாறு:

1. கட்டுரைத் தேர்வின் குறைபாடுகள் பலவற்றிற்குக் காரணம், இத்தேர்வுகளுக்கான வினாக்கள் போதிய சிந்தனையும் கவனமும் இன்றி வினாத்தாள் அமைப்பாளர்களால் குறிக்கப்படுவதேயாகும். இந்நிலை மாற்றப் படுவது அவசியமாகும்.

2. குறிப்பிட்ட வரம்புக்குள் அடங்கும் தெளிவான விடைகளை வருவிக்கக்கூடிய வகையில் கட்டுரை வினாக்கள் அமைக்கப்பட வேண்டும்.

3. கேட்கப்படும் வினாவின் நோக்கம் மாணாக்கர்களுக்குத் தெளிவாக விளங்கும் மொழியில் குறிக்கப்பட வேண்டும். விடைகளை மதிப்பிடும்போது எழக்கூடிய அகவயப் பண்பினை (Subjectivity) குறைக்கும் வகையில் வினா திட்டமாகக் குறிக்கப்பட வேண்டும்.

4. குறிப்பிட்ட சில கல்வி இலக்குகளை மதிப்பிட உதவும் நம்பகமான புதுமுறை வினாக்கள் இல்லாதபோது இவ்விலக்குகளை மதிப்பிடக் கட்டுரை வினாக்களைப் பயன் படுத்தலாம்.

5. கட்டுரைத் தேர்வில் கொடுக்கப்படும் வினாக்களில் எவையேனும் சிலவற்றுக்கு மட்டும் மாணாக்கர்கள் விடையளித்தல் போதுமென்று (choice) குறிப்பிடுவது விரும்பத்தக்கதன்று. இவ்வாறு சலுகையளிப்பது மாணாக்கர்களது தேர்ச்சித் தரத்தை ஒப்பிட்டு மதிப்பிட உதவும் பொது அடிப்படையின் (Common denominator) அளவைக் குறைக்கும். மதிப்பீட்டின் அகவயப் பண்பினையும் மாறுபடும் தன்மையினையும் இது அதிகரிக்கும். மேலும் வினாத்தாளில் காணப்படும் எல்லா வினாக்களையும் ஒரே தரப்பட்டனவாக அமைப்பதும் கடினம்.

6. ஒவ்வொரு கட்டுரை வினாவுக்கும் விடை தயாரிக்கப்படுவதோடு இவ்விடையினைப் பல்வேறு பகுதிகளுக்கு எத்தனை மதிப்பெண்கள் அளிக்கப்பட வேண்டும் என்பதும் தொடக்கத்திலேயே நிர்ணயிக்கப்பட வேண்டும். தரமாகக் கருதப்படும் இவ்விடைகளோடு மாணாக்கர்களது விடைகள் ஒப்பிடப்பட்டு மதிப்பிடப்படுவது சிறந்தது.

7. அத்துடன், மாணாக்கர்கள் அளிக்கக்கூடிய மாற்று விடைகளையும் மதிப்பிட வழி வகுக்கப்படுதல் வேண்டும்.

புத்தகங்களை வைத்துக்கொண்டு அவற்றைப் பார்த்து மாணாக்கர்கள் வினாக்களுக்கு விடையெழுத அனுமதிக்கப்படும் கட்டுரைத் தேர்வு முறை (Open Book Essay Examination) இன்று சில போது பயன்படுத்தப்படுகிறது. கட்டுரைத் தேர்வில் எழக் கூடிய சில குறைபாடுகளை நீக்க இம்முறை உதவுகிறது. இதில் பாடநூல்கள், பிற குறிப்புகள், மேற்கோள் நூல்கள் ஆகிய வற்றைப் பார்த்து. அவற்றிலுள்ள அடிப்படை விவரங்களை மாணாக்கர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். விவரங்கள் மீண்டும் நினைவில் கொணர்தற்கான முயற்சியும் காலமும் இவ் வகைத் தேர்வுகளில் குறையும். தேவைப்படும் விவரங்களைத் தேர்ந்தெடுத்தல், இவற்றைப் புதிய நிலைமைகளுக்குப் பயன் படுத்தல் போன்ற திறன்கள் இவ்வகைத் தேர்வில் வலியுறுத்தப் படுகின்றன. மற்றும், தேர்வின் போது எழக்கூடிய மன அலைப்பு, அமைதியின்மை போன்றன இதில் மிகக் குறைவு. மாணாக் கர்கள் தன்நம்பிக்கையோடு செயற்பட உதவும் சூழ்நிலை யினைத் தோற்றுவிக்கவும் இது உதவுகிறது.

பள்ளித் தேர்வுகளில் பழைய முறைச் சோதனைகளும் புதுமுறைச் சோதனைகளும்

கட்டுரை வினாக்கள், புது முறை வினாக்கள் ஆகிய இரண்டுமே இன்று பள்ளித்தேர்வுகளில் இணைந்து பயன்படுத்தப் படுகின்றன. ஏனெனில், இவ்விருவகை வினாக்களிலும், ஒன்றில் காணப்படாத அனுகூலங்கள் மற்றதில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மாணாக்கர்களின் மீட்டுக் கொணரும் திறன், வினாவுக்குப் பொருத்தமான செய்திகளைப் பொறுக்கி எடுக்கும் திறன் இவற்றைக் கோவையாக, தெளிவான மொழி வழியே எடுத்துக் கூறும் திறன் போன்றவற்றை அளவிடக் கட்டுரைத் தேர்வு சாலச் சிறந்தது. இவ்வாறே, புதுமுறைக் கேள்விகளைக் கொண்ட தேர்வுகளில், கட்டுரைத் தேர்வில் காணப்படாத சில சிறப்புகளைக் காணலாம். தேர்வில் அளவிடப்படவேண்டிய வற்றின் தன்மையைப்பொறுத்துக் கட்டுரைத் தேர்வு முறையையோ, புதுமுறை வினாக்களையோ, அல்லது இவையிரண்டும் கலந்த தேர்வு முறையையோ ஆசிரியர்கள் கையாளலாம்.

மாணாக்கன் தேர்ச்சி பற்றிய பதிவேடுகள்

அறிவு வளர்ச்சி, திறன் வளர்ச்சி போன்றவற்றில் மாணாக்க னுடைய தேர்ச்சியை ஆசிரியர் பதிவு செய்தல் வேண்டும். இப் பதிவுகள் மாணாக்கனுக்குத் தன் தேர்ச்சியை அறிந்து கொள்ள உதவுவதுடன், பெற்றோரும் ஆசிரியர்களும் மாணாக்கனின் தேர்ச்சியை அறிய உதவும்.

மதிப்பெண் பட்டியல் (Marks Register)

ஒவ்வொரு தேர்விலும் மாணவன் என்னென்ன மதிப்பெண்கள் பெற்றான் என்பது இப்பட்டியலில் பதிவு செய்யப்படும். இதில் பகுதித் தேர்வுகளில் மாணாக்கன் பெறும் மதிப்பெண்களையும் பதிவு செய்தல் அல்லது மாணாக்கன் தொடர்ச்சியாகக் கற்று வருகின்றானா என்பதையும் அறிய இப்பட்டியல் உதவும்.

தேர்ச்சி அறிக்கைகள் (Progress Reports)

காலாண்டுத்தேர்வு முடிந்த பின் ஒரு தடவையும், அரையாண்டுத் தேர்வு முடிந்த பின் ஒரு தடவையும் தேர்ச்சி அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். இவற்றில் மாதத்தேர்வில் பெற்ற மதிப்பெண்களையும் பதிவு செய்தல் வேண்டும். பள்ளி வேலை நாட்கள்,மாணாக்கர் வருகை நாட்கள்,மாணாக்கர்களைப் பற்றிய சிறப்புக் குறிப்புகள் ஆகியவை தேர்ச்சி அறிக்கைகளில் இடம்பெறுதல் வேண்டும். வகுப்பாசிரியர் மற்றும் தலைமை ஆசிரியர் கையொப்பத்துடன் அவற்றைப் பெற்றோர்களுக்கு அனுப்பி, அவர்கள் கையொப்பத்தினைப் பெற்றுவரச்செய்தல் வேண்டும். இவ்வறிக்கைகளின் மூலம் பெற்றோர்கள் தமது குழந்தைகளின் முன்னேற்றத்தினை அறிய முடிகிறது.

திரள்பதிவுகள் (Cumulative Records)

மாணாக்கன் பள்ளியில் சேர்ந்த நாள் முதல் அவன் பள்ளியை விட்டு நீங்கும் வரை ஒவ்வோர் ஆண்டும் தொடர்ச்சியாக ஆசிரியர் மாணாக்கனைப் பற்றிய பல்வகைக் குறிப்புகளையும் செய்து வருதல் திரள் பதிவாகும். இதில் மாணாக்கர்களிடம் ஏற்பட்ட வளர்ச்சியின் இயல்பு, அளவு ஆகியவை பதிவு செய்யப்படும். மாணாக்கனைப் பற்றிய முழுமையான அறிவு பெறத் திரள் பதிவுகள் ஆசிரியர்களுக்கு உதவுகின்றன. மேலும், இத் திரள் பதிவுகளில் உள்ள குறிப்புகளைப் பார்த்து, மாணாக்கன் எத் தொழிலில் மிகுந்த விருப்பமுடையவன் என்பதனை அறிந்து, அவனுக்கு வழிகாட்டுதலுக்கு இயலும். தவறான மனப் பான்மைகள் தோன்றுகின்ற காலத்தே, அவற்றை யறிந்து மாணாக்கரைத் திருத்தவும் இவை உதவும். பள்ளிப் பாடங்களில் தேர்ச்சி பற்றியவை, தொழில் பற்றியவை, மனப்பான்மை பற்றியவை, துப்புரவு, உடல்நலம் பேணுதல் பற்றியவை போன்ற பல்வகையான தலைப்புகளில் மாணாக்கனைப் பற்றிய செய்திகளையும் குறிப்புகளையும் குறித்து வைத்து, திரள் பதிவுகளை நன் முறையில் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆச்சார்ய நரேந்திர தேவ் குழு

உத்திரப் பிரதேச மாநிலத்தில் ஆச்சார்ய நரேந்திர தேவ் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு 1953ஆம் ஆண்டு தேர்வு முறையின் சீர்திருத்தம் பற்றிச் சில கருத்துகளைத் தெரிவித்தது. அவை பின்வருமாறு:

1. வெளித் தேர்வுகளுக்குப் பதிலாக ஆசிரியர்களே சோதனைகளைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யலாம்.

2. மாணாக்கனின் திறனைத் தீர்மானிக்கும் பொழுது ஆண்டிறுதித் தேர்வு மதிப்பெண்களுடன் மாதாந்திரத் தேர்வு, காலாண்டுத் தேர்வு, அரையாண்டுத் தேர்வு ஆகியவற்றின் மதிப்பெண்களையும் சேர்த்துக் கணக்கெடுத்தல் வேண்டும்.

3. ஒரு குறிப்பிட்ட பாடத்தில் ஓர் ஆசிரியர் அப்பாடத்திற்கு அளிக்கும் மதிப்பெண்களை மற்றொரு நிறுவனத்தின் ஆசிரியர் அப்பாடத்திற்கு அளிக்கும் மதிப்பெண்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.

இன்று பல பள்ளிகளில் பாட அறிவிற்கு மட்டுமல்லாது ஒழுங்கு, காலந்தவறாமை, சாரணரியக்கம், தேசிய மாணவர் படை, சமூக சேவை போன்ற பல செயல்களுக்கும் ஆளுமைப் பண்புகளுக்கும் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு ஆண்டிறுதித்தேர்வு மதிப்பெண்களுடன் சேர்த்துக் கணக்கெடுக்கப்படுகின்றன.

டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக்குழு

தேர்வு முறையினை முழுமையாக மாற்றியமைத்தலின் இன்றியமையாமையை இக்கல்விக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. பல்கலைக் கழகச் சீர்திருத்தம் பற்றி ஏதாகிலும் ஒரே ஒரு கருத்து மட்டும் குறிப்பிடப்படவேண்டுமென்றால் அது தேர்வு முறையைப் பற்றியதாகத்தான் இருக்க வேண்டும் என்று இக்குழு கூறியுள்ளது.

1. கட்டுரை வினாக்களுடன் புறவயத்தன்மை பெற்ற சிறு விடை வினாக்களும் தேர்வுகளில் பயன்படுத்தப்பட வேண்டும்.

2. வகுப்பறையில் மாணாக்கனது தேர்ச்சியும் தொடர்ந்து மதிப்பிடப்பட்டு, இறுதித்தேர்வின் மதிப்பெண்களில் மூன்றில் ஒரு பங்கு இம்மதிப்பீட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும்.

3. மூன்றாண்டுப் பட்டப்படிப்பின் ஒவ்வோர் ஆண்டின் இறுதியில் சில பாடங்களில் தேர்வு நடத்தப்படவேண்டும். இதற்கேற்ற முறையில் பாடத்திட்டங்கள் உருவாக்கப் படவேண்டும்.

4. தேர்வாளர்கள் நல்ல முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவர்கள் குறைந்தது ஐந்தாண்டுகள் கற்பித்தல் அனுபவமேனும் பெற்றிருக்க வேண்டும். இவர்கள் தொடர்ந்து மூன்றாண்டுகள் தேர்வாளர்களாகப் பணிபுரியலாம்.

5. தேர்வில் வெற்றிபெற்றோர் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்படலாம். 70%ம் அதற்கு மேலும்—I வகுப்பு; 55%—69%—II வகுப்பு; 40%—54%—III வகுப்பு.

6. பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு ஆகியவற்றுக்கான தேர்வுகளில் பரிவு மதிப்பெண்கள் (Grace Marks) அளிப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

7. தொழிற் கல்விக்கான தேர்வுகளில் வாய்மொழித் தேர்வும் (Viva voice) இடம் பெறவேண்டும்.

டாக்டர் முதலியார் கல்விக்குழு

தேர்வு முறை, மதிப்பீட்டு முறைகள் ஆகியன கல்வியில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. மாணாக்கர்களது அடைவு நிலை (Level of Achievement) என்ன, அவர்களது முன்னேற்றம் எவ்வாறு காணப்படுகிறது என்பன பற்றி அவர்கள் பெற்றோர் களும் ஆசிரியர்களும் அவ்வப்போது தெரிந்து கொள்ள வேண்டும் தற்போதைய தேர்வு முறையினைச் சீர்திருத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

1. உயர்நிலைப்பள்ளிக் கல்வியில் புறத்தேர்வுகளின் (External Examination) எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப் படவேண்டும்.

2. வினாக்களின் அமைப்பை மாற்றுவதன் மூலமும், புறவயத் தன்மையுள்ள புதுமுறை வினாக்கள் புகுத்தப்படுவதன் மூலமும் கட்டுரை வினாக்களின் அகவயத்தன்மை குறைக்கப்படவேண்டும்.

3. மாணாக்கர்களது முன்னேற்றம் பற்றிய அறிக்கைகள் பள்ளியில் நல்ல முறையில் தொகுத்து வைக்கத் 'திரள் பதிவுகள்' இருத்தல் வேண்டும்.

4. பள்ளியின் ஆண்டு இறுதித் தேர்வு முடிவுகளுடன் பள்ளி யாண்டில் வகுப்பில் நடத்தப்பட்ட பல்வேறு தேர்வு முடிவுகளும் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.
5. மதிப்பெண்களை அளிப்பதைக் காட்டிலும் தரச் சின்னங்கள் அல்லது தரக் குறியீடுகளைப் பயன் படுத்தலாம்.
6. உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் இறுதியில் ஒரு பொதுத் தேர்வு மட்டுமே இருக்கவேண்டும்.
7. பொதுத் தேர்வில் பகுதித் தேர்வுகள் முறை (The System of Compartmental Examinations) புகுத்தப்பட வேண்டும்.

டாக்டர் கொத்தாரிக் கல்விக்குழு

மதிப்பீடும் தேர்வுகளும் கல்வியமைப்பின் இன்றியமையாப் பகுதிகளாகும். இவற்றினைப் பயன்படுத்தி மாணாக்கர்களது கல்விச் சாதனையை அளவிட்டறிதலோடு, அதனை மேலும் உயர்த்த உதவவும் இயலும். மாணாக்கர்களது படிப்புப் பழக்கங்கள், ஆசிரியர்களது கற்பித்தல் முறைகள் ஆகிய வற்றினை நன்கு மாற்றியமைத்தலுக்கும் இவை உதவுவனவாம்.

1. எழுத்துத் தேர்வுகள் மேலும் ஏற்புடைமையுள்ளன வாகவும் நம்பகமானவையாகவும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
2. தொடக்க நிலையில் தேர்வினைப் பொறுத்தவரை முதல் நான்கு வகுப்புகளையும் பிரிக்கப்படாத ஒரு முழுமை யாகக் கருதலாம். தேவைப்பட்டால் 1, 2ஆம் வகுப்புகள் ஒரு பிரிவாகவும், 3, 4ஆம் வகுப்புகள் மற்றொன்றாகவும் பிரிக்கப்படலாம். இவற்றில் வேக மாகக் கற்போர், மெதுவாகக் கற்போர் ஆகியோர்க்கான இரு பிரிவுகள் இருத்தல் விரும்பத்தக்கது.
3. உயர் தொடக்க நிலையில் எழுத்துத் தேர்வுடன் வாய் மொழித் தேர்வும் தேவைப்படும்.
4. பள்ளிகளில் அகத்தேர்வு (Internal Assessment) வலியுறுத் தப்படவேண்டும்.
5. மாணாக்கர்களது கல்வி வளர்ச்சியினை மதிப் பிடுகையில் பாட அறிவோடு, கல்வியின் பிற கூறுகளின் வளர்ச்சியும் கருத்தில் கொள்ளப்பட்டு இவையும் மதிப்பிடப்படுதல் வேண்டும்.

6. மாணாக்கர்களது ஆளுமை வளர்ச்சியின் பிற கூறுகளை மதிப்பிடுதலும் தேவைப்படுவதாகும்.

7. குறையறி சோதனைகளைப் (Diagnostic Tests) பயன்படுத்தி மாணாக்கர்களது கல்வி வளர்ச்சியில் குறுக்கிடும் தடைகளை நீக்குவதும் தேவைப்படுவதாகும்.

8. பள்ளிகளில் மாணாக்கர்களது வளர்ச்சியினைத் தொடர்ச்சியாகத் தொகுத்து வைப்பதற்கான திரள்பதிவுகள் (Cumulative Records) வைக்கப்படுதல் வேண்டும்.

9. தொடக்கக் கல்வியின் இறுதியில் மாவட்ட நிலையில் பொதுத்தேர்வு ஒன்று வைக்கப்படலாம்.

10. உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் இறுதியில் ஒரு பொதுத் தேர்வு நடத்தப்படவேண்டும்.

11. அகத்தேர்வுகள், புறத்தேர்வுகள் ஆகியவற்றில் மாணாக்கர்கள் பெற்ற மதிப்பெண்கள் தனித்தனியே குறித்து வைக்கப்படுதல் வேண்டும்.

12. தங்களது மாணாக்கர்களது தரத்தினைத் தாங்களே மதிப்பிட்டுச் சான்றிதழ் வழங்கும் உரிமை சில சிறப்பான பள்ளிகளுக்கு (Experimental Schools) அளிக்கப்படலாம்.

பல்கலைக் கழக மானியக் குழு

பல்கலைக் கழகக் கல்விக் குழுவின் பரிந்துரைக்கிணங்க மத்திய அரசினால் 1953ஆம் ஆண்டு பல்கலைக் கழக மானியக் குழு (University grants Commission) அமைக்கப்பட்டது இக் குழு இந்தியப் பல்கலைக் கழகங்களுடன் கலந்துரையாடி உயர் கல்வி வளர்ச்சிக்காகவும் கற்பித்தல் முறைகள், தேர்வுகள், ஆராய்ச்சி போன்றவற்றில் முன்னேற்றம் ஏற்படுத்துவதற்காகவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இக் குழு புதிய தேர்வு முறை பின்வரும் கருத்துகளின் அடிப்படையில் அமைய வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

1. கற்பிப்பவர்களே தேர்வாளர்களாக இருக்கவேண்டும். இதற்கு அகத்தேர்வு அவசியமாகும்.

2. அடைவுச் சோதனைகள், பருவத்தேர்வுகள் போன்றவற்றின் மூலமாக அளவிட முடியாத சில பண்புகளை— கடின உழைப்புத் திறன், ஆர்வம், கற்பனைத் திறன், கைத் திறன், குழு உணர்வு, தலைமைப்பண்பு போன்ற

வற்றினை, தொடர்ச்சி மதிப்பீட்டு முறையில்(Continuous Assessment) அளவிடுவதால், இவை மதிப்பெண்கள் பட்டியலில் இடம் பெறவேண்டும்.

3. பல்வேறு பாடங்களில் மாணாக்கர்களது செயல் முடிவைச் சான்றிதழாக அல்லது பட்டமாக அளிக்க வேண்டி இருப்பதால், பல்வேறு பாடங்களின் மதிப்பீடுகள் ஒன்றோடொன்று இணைக்கப்படக் கூடாது; தனித்தனியாகவே மதிப்பிடவேண்டும். ஒரு பாடத்தில் தோல்வியடைவதால் இன்னொன்றும் பாதிக்கப்படக் கூடாது. மாணாக்கன் ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொரு நிறுவனத்திற்குச் சென்று படிப்பதற்கும் வேறு பாடத்தைத் தேர்ந்தெடுத்துப் படிக்கவும் இது வாய்ப் பளிக்கும்.

4. தேர்வின் பொழுதும் மதிப்பிடும் பொழுதும் மதிப்பெண் களுக்குப் பதிலாக தரச்சின்னங்கள் அளிக்கப்பட வேண்டும்.

5. கல்வி நிறுவனங்களின் தரம் கல்வியின் தரத்தைச் சார்ந் திருப்பதால் மாணாக்கர்களது கல்விச் சான்றிதழ்களில் கல்லூரி அல்லது பல்கலைக் கழகத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கவேண்டும்.

6. எந்தக் கல்வி நிறுவனத்திலும் சேர்வதற்கு இடம் கிடைக் காதவர்கள் அஞ்சல் வழியாகக் கல்வி பெறுவதற்குத் திறந்த பல்கலைக் கழகம் (Open Universitv) ஏற்பாடு செய்யவேண்டும்.

7. தேர்வு நடத்தும் பொறுப்பினை அந்தந்த கல்லூரிகள் ஏற்றுக் கொள்ளவேண்டும். பல்கலைக்கழகம் மேற் பார்வை செய்து சில ஆலோசனைகளைக் கூறும். ஆனால் தேர்வு பற்றிய விவரங்களையும், மாணாக்கர் களின் செயல்கள் பற்றிய புள்ளிவிவரங்களையும் பல்கலைக் கழகம் வைத்திருக்க வேண்டும்.

8. பல்கலைக் கழகப் பாடக் குழுக்கள் பாடத் திட்டங்களை உருவாக்குவதோடு பல்வேறு பாடங்களில் வினாக்கள் அடங்கிய வங்கியினையும் உருவாக்கித் தரவேண்டும்.

9. கல்லூரிகள், அக் கல்லூரிகளின் ஆசிரியர்களின் மேற் பார்வையில் தேர்வுகளை நடத்தலாம். வினா வங்கி யிலிருந்து வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

வினாத் தாள்கள் அமைப்பு, மதிப்பீட்டு முறை ஆகிய வற்றைப் பல்கலைக் கழகம் அறிவிக்கவேண்டும்.

10. பல்கலைக் கழகம் நிர்ணயிக்கும் தரத்தினைப் பெற்ற மாணாக்கர்களுக்குப் பட்டம் வழங்கப்படும்.

அகத்தேர்வு

பள்ளிகளில் அகத்தேர்வு வலியுறுத்தப்பட வேண்டும். பள்ளிகளில் நடத்தப்படும் எழுத்துத் தேர்வுகளில், புறத்தேர்விற்குக் குறிப்பிட்டபடி, சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். அகத் தேர்வுகளில் முன்னேற்றம் ஏற்படுத்த மதிப்பீட்டு நுண்முறை களில் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றைப் பயன் படுத்தலாம். இச் சோதனைகளைப் பயன்படுத்துவதற்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

புறத்தேர்வின் மூலமாக மாணாக்கர்களின் பல்வேறு வளர்ச்சி களை மதிப்பீடு செய்வதோடு அகத்தேர்வின் மூலமாக மாணாக் கர்களின் ஆளுமைப் பண்புகள், கவர்ச்சிகள், மனப்பான்மைகள் ஆகியவற்றை மதிப்பிடவேண்டும். அகமதிப்பீடு கல்விச் செயலின் முழுமை வடிவமாக மாறி மாணாக்கனின் அடைவு அளவில் முன்னேற்றம் ஏற்பட உதவ வேண்டும்.

அக மதிப்பீட்டில், சில பள்ளிகள் தங்கள் மாணாக்கர்களை மிகை மதிப்பீடு செய்து விடுகிறார்கள். இக்குறையை நீக்குதல் அவசியமாகும். அகத்தேர்வு முடிவுகளையும் புறத் தேர்வு முடிவு களையும் தனித்தனியே குறிக்க வேண்டும். இவற்றை ஒன்றாக இணைக்கக் கூடாது. இவ்விரு தேர்வுகளின் முடிவுகளைப் பள்ளிச் சான்றிதழ்களிலும் தனித் தனியாக குறிக்க வேண்டும். கல்வி அலு வலர்கள் பள்ளிகளைப் பார்வையிடும்பொழுது அகமதிப்பீட்டிற்கும் புறமதிப்பீட்டிற்கும் உள்ள தொடர்பை ஆராய்தல் வேண்டும். மிகை மதிப்பீடு தொடர்ந்து காணப்படுமாயின் இம்மாதிரி மிகை மதிப்பீடு செய்யும் பள்ளிகள் பலவீனமுள்ள பள்ளிகள் எனக் குறிப் பிடப்பட்டு அறிவுரை வழங்கப்பட வேண்டும்.

புறத்தேர்வு

உயர்நிலைப்பள்ளிக் கல்வியின் இறுதியாண்டில் மாணாக்கர் களுக்கான பொதுத் தேர்வினை மாநில உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் நடத்துகின்றது. கல்லூரி வகுப்புகளுக்கான புறத் தேர்வுகளைப் பல்கலைக்கழகம் நடத்துகின்றது. புறத்தேர்வு

களுக்கான வினாத் தாள்கள் தயாரிப்பதற்காக நியமிக்கப்படு வோரில் வெகு சிலரே நம்பகத் தன்மையும் ஏற்புடைமையும் உள்ள சோதனைகளை உருவாக்குவதில் அறிவும் திறனும் பெற்றுள் ளார்கள். வெளித் தேர்வில் போதிய அளவில் சீர்திருத்தத்தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்துதல் இன்றியமையாததாகும்.

1. மாநிலக் கல்வி வாரியங்கள் சிறந்த பயிற்சித் திட்டங் களை வகுத்து தேர்வாளர்களுக்குப் பயிற்சி அளித்து வினாத்தாள்கள் தயாரிப்பதற்கான தொழில் நுணுக்கத் திறனை உயர்த்தவேண்டும்.
2. வினாக்களின் தன்மையில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும்.
3. வினாத்தாள்கள் மாணாக்கர்களது பொருளறிவினைச் சோதிப்பதோடு பொருளறிவைப் பயன்படுத்தும் திறனையும், புதிர் தீர்த்தல் திறன் வளர்ச்சியினையும் சோதிப்பதற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட வேண்டும்.
4. வினாக்களிலும், வினாத்தாள்களிலும் முன்னேற்றம் ஏற் படுத்துவதோடு பல்வேறு முறைகளை அறிவியல் அடிப் படையிலும் முறையாகவும் அமைக்க வேண்டும்.
5. மதிப்பெண்கள் அளிக்கும் முறை அறிவியல் அடிப் படையில் அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் மதிப்பீடு, புறவயத் தன்மையுள்ளதாகவும் நம்பகத் தன்மை மிக்கதாகவும் இருக்க முடியும்.
6. பள்ளி இறுதித் தேர்வு எழுதும் மாணாக்கர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளமையால், குறிப்பிட்ட காலத்திற்குள் விடைத்தாள்களைத் திருத்தி, முடிவுகளை வெளியிடுவது மிகவும் சிரமமாக உள்ளது. ஆகவே, விடைத்தாள்களை மதிப்பிடல், முடிவுகளைத் தயாரித்தல் போன்றவற்றை இயந்திரமயமாக்குதல் வேண்டும்.

பள்ளி இறுதித் தேர்வில் ஒரு மாணாக்கன் குறிப்பிட்ட ஒரு பாடத்தில் தோல்வியடைவதனாலேயே அவன் தேர்வில் வெற்றி யடையவில்லை என்று அறிவிப்பது பொருளற்றதாகும். பள்ளி இறுதி ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகளைப் பார்த்தால் 50% க்கு மேல் மாணாக்கர்கள் தோல்வியடைவது தெளிவாகும். புறத் தேர்வுகளின் முன்னேற்றத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் ஓரளவு இத்தோல்வி விகிதத்தினைக் குறைக்க

உதவும். பொதுத் தேர்வில் பகுதித்தேர்வு முறை புகுத்தப்பட வேண்டும்.

கொத்தாரிக் கல்விக் குழுவின் கருத்துப்படி எல்லா மாணாக்கர்களுக்கும் புறத்தேர்வைக் கட்டாயப் படுத்தத் தேவையில்லை. 10, 11 அல்லது 12 ஆம் வகுப்பு முடிந்தவுடன் புறத்தேர்வுக்குச் செல்லாமலே ஒரு மாணாக்கன் பள்ளிச் சான்றிதழுடன் வேலை தேடிக்கொள்ளலாம். மேற்கொண்டு படிப்பைத் தொடர விரும்பினால் கல்வி நிர்வாகத்தினர் குறிப்பிடும் தகுதித்தேவையைப் பெற அம்மாணாக்கன் தேர்வு எழுதிக் கொள்ளலாம்.

வினா வங்கி

பல்வேறு பாடங்களில் மாணாக்கர்கள் பெற்றுள்ள அடைவினைத் தேர்வு சோதிப்பதாகும். ஆனால் தேர்வுகள் மாணாக்கர்களிடையே வீணான கவலைகளையும் உள்ளக் கிளர்ச்சியினையும் தோற்றுவித்து அவர்களது உளநலத்தைக் கெடுக்கும்படி அமையக்கூடாது. மாணாக்கர்கள் திகைப்படையும் வகையிலோ அதிர்ச்சிக்குள்ளாகும் படியாகவோ தேர்வுகளும் வினாக்களும் அமைய வேண்டிய தேவை இல்லை. பாடத்தின் எல்லாப் பகுதிகளிலும் வினாக்கள் கேட்கப்படும் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். வினாக்கள் பெரும்பாலும் புதுமுறை வினாக்களாக இருத்தல் வேண்டும். இவற்றுடன் கட்டுரை வினாக்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். புதுமுறை வினாக்களைக் கொண்ட தேர்வுகள் பெருமளவு நம்பகமானவை; இவற்றின் முடிவுகள் உண்மையானவை; ஏற்கக் கூடியவை. மற்றும், இவை பயன்படுத்தப்படுகையில் தேர்வாளர்களின் அகவயப்பட்ட காரணிகளால் தேர்வு முடிவுகள் பாதிக்கப்படுவதில்லை. வினாக்கள் பாடம் முழுவதும் பரவுவதோடு ஒரே மாதிரி தரம் கொண்டிருக்கவேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் இம் மாதிரியான வினாக்கள் தயாரிக்கப்படவேண்டும். இவ் வினாக்கள் யாவும் சேகரிக்கப்பட்டு, அவற்றைக் கொண்டு வினா வங்கி (Question Bank) உருவாக்கப்படுகிறது. இவ் வினாக்கள் யாவும் சேர்ந்தே வினா வங்கி ஆகிறது.

ஒவ்வோர் ஆண்டும் இவ் வினா வங்கியிலுள்ள வினாக்களை மாற்றவோ அல்லது மாற்றி அமைக்கவோ செய்யலாம். ஆசிரியர்கள் மேலும் புதிய வினாக்களைக் கேள்வித்தாளில் சேர்க்கலாம். இம் முறையின்படி எல்லா வினாத் தாள்களிலும் ஒரே மாதிரியான தரம் காணப்படும். இன்றையத் தேர்வுகளுக்கான வினாத்தாள்

தயாரிப்பில் உள்ள குறைபாடுகளை அகற்ற வினா வங்கி முறை பெரிதும் உதவும்.

ஆசிரியர்களும் மாணாக்கர்களும் வினா வங்கியினை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் வினா வங்கியைப் பயன்படுத்தி ஒரே தரம் வாய்ந்த பல வினாத் தாள்களை உருவாக்கலாம். இவ்வாறு எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வினாத்தாள்களை உருவாக்கலாம். எம் மாதிரியான வினாக்கள் கேட்கப்படும் என்பதனை மாணாக்கர்கள் முன்பே அறிந்திருப்பதால் வினாத் தாள்கள் எவ்வித அதிர்ச்சியையும் வியப்பையும் ஏற்படுத்தாது. வினா வங்கியிலுள்ள வினாக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால் எவ்வினாக்கள் தேர்விற்கு வருமென்பதை முன் கூட்டியே அறிய முடியாது; ஊகித்துத் தெரிந்து கொள்ளவும் இயலாது. இதனால் வினாத் தாள்கள் வெளியாதல் என்ற பிரச்சினை எழ வாய்ப்பு இராது.

பாடத் திட்டங்கள் மாற்றப்படாவிடினும், வினா வங்கியில் ஒவ்வோர் ஆண்டும் புதிய வினாக்களைச் சேர்த்துச் சிறப்பாக்குதல் பயனுள்ளதாகும். இதனால் மேலும் சிறந்த முறையில் வினாக்களை உருவாக்கவும், வினாத் தாள்களைத் தயாரிக்கவும் சாத்தியமாகும்.

செமஸ்டர் முறை

மேற்கத்திய நாடுகளில் செமஸ்டர் முறை (Semester System) சிறந்த முறையில் செயற்பட்டு வருகிறது. ஆறு மாத கால அளவுள்ள எந்தப் படிப்பையும் செமஸ்டர் முறையிலுள்ள படிப்பு எனக் கூறலாம். ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் இரண்டு புறத் தேர்வுகள் நடைபெறும். ஒவ்வொரு செமஸ்டரிலும் 90 வேலை நாட்கள் உண்டு. 6 செமஸ்டர்களைக் கொண்ட மூன்றாண்டு பட்டப் படிப்புக்கான கால அளவு பின்வருமாறு.

செமஸ்டர்	காலவரை
I, III, V	— ஜுலை—அக்டோபர்
II, IV, VI	— டிசம்பர்—மார்ச்சு

படிப்புக் காலம்: 15—16 வாரங்கள்.

செமஸ்டர் முறையின் சிறப்புக் கூறுகள் :

1. ஆக்கமிக்க கற்றலில் மாணாக்கர்கள் ஈடுபடுவதற்கு இம்முறை வசதியானது; மற்றும் பலனுள்ளது.
2. வழக்கத்திலிருந்த ஆண்டு முறையினைக் காட்டிலும் புதிய செமஸ்டர் முறையானது கற்றல் தொடர்ந்து நடை பெறுவதனைத் தூண்டுகிறது.
3. மாணாக்கர்களது உண்மையான நண்பராகவும் வழி காட்டியாகவும் ஆசிரியர் செயலாற்றுவதற்கு இம்முறை வாய்ப்பு அளிக்கிறது.
4. மாணாக்கர்களது படிப்பைச் செமஸ்டர் முறை எளிதாக்கு கிறது. மாணாக்கர்களிடையே வீணான கவலை களையும் உள்ளக் கிளர்ச்சியினையும் தேர்வுகள் தோற்று விப்பதில்லை ; உளநலம் பாதிக்கப்படுவதில்லை.
5. செமஸ்டர் முறையில் அகமதிப்பீடு ஒரு முக்கிய பங்கு பெறுகிறது. இதனால் மாணாக்கர்கள் அதிக மதிப் பெண்கள் பெற இம்முறை உதவுகிறது.
6. செமஸ்டர் முறையில் மாணாக்கர்கள் ஆசிரியர்களோடு தொடர்பு கொள்ள அதிக வாய்ப்புகள் உள்ளன. இதனால் மாணாக்கர்களிடத்தில் தன்னம்பிக்கை பிரச் சினைகளுக்குத் தீர்வுகாணல் போன்றவை வளர்ச்சி யடைய இயலும்.
7. ஒரு தடவை தேர்வில் வெற்றி அல்லது தோல்வி என்ப தற்குப் பதிலாக ஒழுங்கு முறையான படிப்பு, படிப்புக் காலம் முழுவதிலும் ஒரே சீராக சுறுசுறுப்பாக இருத்தல், தன் முனைப்பான படிப்பு ஆகியவைகளுக்கு செமஸ்டர் முறை இடமளிக்கிறது. இதில் மாணாக்கர்கள் தேர்வு எழுதுவதையும் படிப்பின் ஒரு பகுதியாகக் கருதும் நிலை உருவாகிறது.
8. தேர்வில் தோற்றவர் என்று எவரையும் குறிப்பிடு வதில்லை. ஒரு குறிப்பிட்ட பாடத்தில் தேர்வுக்கான மதிப்பெண்கள் பெறாத மாணாக்கன் மீண்டும் அடுத்த செமஸ்டரில் அந்தக் குறிப்பிட்ட பாடத்தில் தேர்வு எழுதித் தேர்ச்சிக்கான மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி யடையலாம்.

9. இம் முறையில் மாணாக்கர்கள் நூலகங்களை அதிக அளவில் பயன்படுத்திப் பலனடைகின்றனர்.

10. சமூக சேவைக்கென 100 மதிப்பெண்கள் ஒதுக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு மாணாக்கனும் சமூக நலத் திட்டங்களில் ஈடுபாடு கொண்டு சமூக சேவையில் பங்கு கொள்ள இம் முறையில் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் சென்னை, மற்றும் மதுரைப் பல்கலைக் கழகங்களில் பொறியியல் கல்லூரிகளில் செமஸ்டர் முறை கடந்த பல ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1976-77 கல்வி ஆண்டில் 40 கல்லூரிகள் செமஸ்டர் முறையினைச் செயற்படுத்தத் தொடங்கின. 1977-78 கல்வி ஆண்டிலிருந்து சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள எல்லாக் கல்லூரிகளும் செமஸ்டர் முறையினை நடைமுறையில் செயற்படுத்தத் தொடங்கியுள்ளன.

வினாக்கள்

1. உயர் கல்வியின் தரங்கள் குறைவதற்குத் தேர்வு முறை எந்த அளவுக்குப் பொறுப்பு எனப்படுகிறது?

2. கல்வி ஆண்டினைப் பகுத்து, ஒவ்வொரு பகுதியிலும் ஒரு சில பாடங்களைக் கற்று முடிக்கும் முறை (Semester System) என்பது பற்றிக் குறிப்பு வரைக.

2. அக மதிப்பீட்டு முறையினை (Internal Assessment Scheme) எல்லோரும் வரவேற்கச் செய்யும் முயற்சியில் கல்வி நிர்வாகிகளுக்கு ஏற்பட்ட மூன்று இடையூறுகளைக் குறிப்பிடுக.

4. மாணவர்களின் முன்னேற்றத்தைப் பரீட்சிக்கும் பள்ளி உள் ஆய்வு முறை (Internal Assessment), தொடர்ந்து வருடம் பூராவும் இருக்க வேண்டியது ஏன்?

5. ஒரு நல்ல தேர்வின் அம்சங்கள் யாவை?

6. உயர்நிலைப் பள்ளிகளில் மதிப்பீடு, தேர்வுகள் ஆகியவற்றைச் சீர்திருத்தலில் உதவக்கூடிய கருத்துகளுள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

7. கொத்தாரி ஆய்வுக் குழு குறிப்பிட்டுள்ள அகமதிப்பீட்டு (Internal Assessment) முறைகளுள் முக்கியமான மூன்றினைச் சுட்டிக் காட்டுக.

12. தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி மற்றும் புதிய கல்வி அமைப்பு

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு தமிழ் நாட்டில் பெரிய அளவில் கல்வி முன்னேற்றம் ஏற்பட்டது. கல்விக்கான செலவுத் தொகை பொதுவாக ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து சீராக உயர்ந்து கொண்டே வந்துள்ளது. சிறப்பாக, பள்ளிக் கல்விக்கான செலவினத்தொகை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்திருக்கின்றது. *1951-52*-ல் பள்ளிக் கல்விக்கான செலவுத் தொகை ரூ. *12* கோடியாக இருந்தது. இது *1977-78*-ல் ரூ. *134.48* கோடியாக உயர்ந்தது. இத்தொகை *1978-79*-ல் ரூ. *141* கோடியாக மேலும் உயர்ந்துள்ளது.

பல்வேறு வகைகளுக்கான கல்விச் செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகின்றது என்பது பின்வருவனவற்றி னின்றும் தெரியவரும்.

	திட்டம் மற்றும் திட்டத்தின் கீழ்வராத இனங்களில் மொத்தச் செலவுத் தொகை (ரூபாய் கோடிக்கணக்கில்)
முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (*1951-56*)	*58.98*
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (*1956-61*)	*76.52*
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (*1961-66*)	*134.00*
ஆண்டுத்திட்டங்கள் (*1966-69*)	*140.73*
நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (*1969-74*)	*340.00*

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

1974-75	97•82
1975-76	104.67
1976-77	121.79
1977-78	134.48
1978-79	141.00

தமிழ்நாட்டில் 1977-78 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வியின் பல்வேறு துறைகளின் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் 201 கோடியாக இருந்தது. 1978-79 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 222 கோடியாக இருக்கும். அரசினர் தமது மொத்த வருவாய்க் கணக்கில் தோராயமாக 25 விழுக்காட்டினை கல்விக்காக நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றனர். கல்வி வளர்ச்சியில் அரசினர் கொண்டுள்ள ஆர்வத்தினையே இந்நிதி ஒதுக்கீடு எடுத்துக் காட்டுகிறது.

இந்நிதி ஒதுக்கீட்டின் விவரங்கள் பின்வருமாறு:

	திட்டம் மற்றும் திட்டத்தின் கீழ் வராத இனங்களில் மொத்தச் செலவுத் தொகை (ரூபாய்-கோடிக்கணக்கில்) ஆண்டுக்கு	
	1977-78	1978-79
1. பொதுக்கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி	170.00	187.00
2. அரிசனங்கள் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப்பள்ளிகள், விடுதிகள், அரிசனங்கள், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் & சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறு வனங்கள்	22·00	25·00

(தொடர்ச்சி)

3. மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி & கால்நடை மருத்துவக்கல்வி (அந்தந்தத் துறைகளின் கீழ் வரவு-செலவுத் திட்டத்தில் தனித்தனியாக ஒதுக்கப் பட்டுள்ள நிதி).	9.00	10·00
	201.00	2220.0

1956-ஆம் ஆண்டு மாநிலச் சீரமைப்புக்குப் பின் தமிழ்நாட்டில் கல்வித் துறையில் கடந்த இருபது ஆண்டுகளில் வேகமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1957 ல் மாநில அளவில் கல்விக் கணக் கெடுப்பு மதிப்பீட்டின் பிறகு அப்போதுள்ள வசதிகள், கல்வித் தேவைகள், நிர்ணயிக்கப்பட்டு, அதன் பின் வந்த ஆண்டுகளில் பள்ளிகள் இல்லாத இடங்களில் மாணவர்களுக்கு ஒரு மைல் சுற்றள வுக்குள் தொடக்கக் கல்வியும், 5 மைல் சுற்றளவுக்குள் உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் கிடைக்க வேண்டும் என்ற கொள்கைப்படி பள்ளிகள் திறக்கப்பட்டன. தேவையான இடங்களில் அப்போ திருந்த பள்ளிகளின் நிலை உயர்த்தப்பட்டது. 2.10 1960 முதல் ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டு, அவை தொடக்கக் கல்விக்கு முக்கியப் பொறுப்பாக்கப்பட்டன.

பின்வரும் புள்ளி விவரங்கள் தமிழ் நாட்டில் விரைவான கல்வி வளர்ச்சியினை எடுத்துக்காட்டும்.

	பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை. 1956–57	1976-77
1. தொடக்கப்பள்ளிகள்	22,608	27,306
2. நடுநிலைப்பள்ளிகள்	64	5,730
3. உயர்நிலைப்பள்ளிகள்	894	2,874
4. கல்லூரிகள் (கலை, அறிவியல் மற்றும் வணிகவியல்)	56	188

தொடக்கத்தில், ஐந்தாவது வகுப்பு வரையும் பிறகு படிப் படியாகப் பல்கலைக் கழக புகுமுக வகுப்பு வரையும் கல்வி இலவச மாக்கப்பட்டது.

1, தொடக்கக் கல்வி

6–11 வயதுத் தொகுதிச் சிறார்களில் 93.4 விழுக்காட்டினரும், 11-14 வயதுத் தொகுதியினரில் 56.8 விழுக்காட்டினரும் இதுவரைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1977-78 ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளிகளில் படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 65.85 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை, 1, 79,978 ஆகும். ஆசிரியர்களின் மாணவர் விகிதம் 1:37 ஆகும்.

தொடக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பில் சேரும் மாணவர்களுள் 58 விழுக்காட்டினரே 5ஆம் வகுப்பு வரை தொடர்ந்து படிக்கின்றனர். மீதி 42 விழுக்காட்டினர் இடையிலேயே பள்ளிகளை விட்டு நின்று விடுகின்றனர். தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், இலவச புத்தகங்கள் மற்றும் சிலேட்டுகள் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்பதை நோக்கமாகக் கொண்டவை. இவற்றோடு, கல்வி வல்லுநர்கள் கருத்தைப் பின்பற்றி, தொடக்கப்பள்ளிகளில் முதல் சில வகுப்புகளிலாவது ஆண்டிறுதித் தேர்வில் மாணவர்கள் எவரையும் தோல்வியுறச் செய்யாமலிருப்பதும் ஓரளவு பரிகாரமாகும். ஆந்திரப்பிரதேசம், கேரளம் முதலிய மாநிலங்களில் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே முதல் சில வகுப்புகளில் மாணவர்களைத் தோல்வியுறச் செய்யக்கூடாது. என்ற நிலை செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1977-78 முதல் தமிழ் நாட்டிலும் 1-3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்புகளுக்கனுப்பும் முறையைத் தமிழக அரசு செயல்படுத்தியுள்ளது. அதே நேரத்தில் கல்வியின் தரம் நல்லமுறையில் இருக்கும்படி பார்த்துக் கொள்ள தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொடக்கப் பள்ளிகளில், அறிவியல் போதனையை மேம்படுத்தும் பொருட்டுப் பாடத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அறிவியல் சாதனங்கள் வாங்குதற் பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாயும், ஒவ்வோர் உயர் தொடக்கப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

நண்பகல் உணவுத் திட்டம்

அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் நடைமுறையில் உள்ள நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்துவதிலும், மாணவர் தொடர்ந்து பள்ளிக்கு

வரும்படி செய்வதிலும் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இப்பள்ளிகளில் பயில்கின்ற மாணவர் தொகையில் மூன்றில் ஒரு பங்காகிய—மிகவும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இத் திட்டத்தால் பயன் பெறுகின்றனர். நண்பகல் உணவுத் திட்டத்திற்காக 1978-79 ஆம் ஆண்டில் சுமார் ஐந்து கோடி ரூபாய் செலவிடப்படும். இத் திட்டத்திற்காக மாநில அரசு ஒரு மாணவனுக்கு நாளைக்கு 10 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு நாளைக்கு 5காசு வீதம் ஆண்டுக்கு 200நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. 'கேர்' (Care) நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிட்டும் சுமார் 20,000 டன் உணவைத் தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது.

நவீன அடுப்புகளில் சுகாதார முறைப்படி சமைக்கப்பெற்றுச் சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகளுக்கு மூடப்பட்ட வண்டிகளில் உணவு எடுத்துச் சென்று வழங்கும் மையச் சமையற் கூடத் திட்டம் (Central Kitchen Programme) செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இம் மாவட்டங்களில் இயங்கி வரும் 97சமையற் கூடங்களும் கேர் நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். சுமார் 4 இலட்சம் மாணவர்கட்கு அவை நண்பகல் உணவு வழங்கி வருகின்றன. மையச் சமையற் கூடங்களிலிருந்து பள்ளிகட்கு உணவை எடுத்துச் சென்று வழங்க 224 உந்துவண்டிகளையும் 'கேர்' நிறுவனம் வழங்கியுள்ளது. நண்பகல் உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சீராகச் சேமித்து அவ்வப்பொழுது வழங்கிட 'கேர்' நிறுவன உதவியுடன் சுமார் 3 இலட்சம் ரூபாய் செலவில் வட்டாரக் கிடங்குகள் எட்டும், அடையாற்றில் மையக் கிடங்கு ஒன்றும் கட்டப்பட்டுள்ளன.

இலவச புத்தகங்கள் வழங்குதல்

1 முதல் 3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும் சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 12 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். 1972-73 ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் வழங்குவதற்கு ஆகும் செலவினைத் தமிழ் நாட்டுப்

பாடநூல் நிறுவனம் தனது நிதியிலிருந்தே ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்காகப் பாடநூல் நிறுவனம் ஆண்டுதோறும் ரூ. 25 இலட்சம் செலவிட்டு வருகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்குச் சிலேட்டுகள் இலவசமாக வழங்கும் வகையில் 1978-79-ல் ரூ. 3 இலட்சத்தை மாநில அரசு செலவிட்டது.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி

1947-ல் சென்னை மாநிலத்தில் இருந்த 440 உயர்நிலைப் பள்ளிகளில் 2.36 இலட்சம் மாணவர்கள் இருந்தனர். 1977–78-ல் தமிழ் நாட்டில் 14-17 வயதுத் தொகுதியினர் 23.80 இலட்சம் பேர்கள் இருந்தனர். இவர்களுள் 33.4 விழுக்காடாகிய 7.93 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9-11 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1977-78ல் இம் மாநிலத்தில் இருந்த 3,058 உயர்நிலைப் பள்ளிகளில் 18.31 இலட்சம் மாணவர்கள் இருந்தனர்.

அறிவியல் கல்வி

புதிய பாடத் திட்டத்தின் கீழ் ஆறாம் வகுப்பிலிருந்தே இயல்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவை தனித்தனிப் பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக் கருவிகள் வாங்குவதற்கும் கூடங்களை அமைப்பதற்கும் நிதியுதவி அளிக்கும் திட்டத்தின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வோர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் ரூ. 55,000 செலவிடப்படுகிறது—ஆய்வுக்கூடக் கட்டிடத்திற்காக ரூபாய் 37,000மும், கருவிகளுக்காக ரூபாய் 18,000மும், தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றும் பெறும் மானியம் ரூ. 40,200 ஆகும். இதில் ரூ. 18,000 கருவிகளுக்காகும். இவற்றைப் பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி வழங்குகிறார். எஞ்சிய ரூ. 22,200 ஆய்வுக் கூடக் கட்டிடத்திற்காகும். கட்டிடத்திற்கான செலவில் 60% அல்லது ரூ. 22,200 இதில் எது குறைவோ அது என்ற அடிப்படையில் ஆய்வுக்கூடக் கட்டிட மானியம் வழங்கப்படுகிறது 1977-78 முடிய 943 உயர்நிலைப் பள்ளிகள் ஆய்வுக்கூட நிதியுதவி பெற்றிருந்தன, 1978-79ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கு ரூ. 26 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் தற்போது 42 நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வண்டிகள் (Mobile Science Laboratory Vans) உள்ளன.

இதனால், தற்போதுள்ள 48 கல்வி மாவட்டங்களுள் 42 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் ஆய்வுக்கூட வண்டி பணி புரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

விளையாட்டுக்கள் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி

அனைத்துப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயமாகும். எந்தெந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனரோ அந்தந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் 6-8 வகுப்புகளிலும் அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் 6-9 வகுப்புகளிலும் உடற்பயிற்சிக் கல்வி தேர்வுக்கான பாடங்களில் ஒன்றாகும். இந்தப் பள்ளிகள் அனைத்திலும் 6-9 வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் உடற்பயிற்சிக் கல்வியில் பெறும் மதிப் பெண்கள், அடுத்த உயர் வகுப்பிற்கு அனுப்புவதற்கான கொள்கைகளை வகுக்கும்போது கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

மாநில விளையாட்டுக் குழுவும் (State Sports Council) மாவட்ட விளையாட்டுக் குழுக்களும் (District Sports Councils) மாணவர்களிடையே மட்டுமின்றிப் பொதுமக்கள் இடையேயும் விளையாட்டுப் போட்டிகளையும், விளையாட்டுகளையும் நன்கு பரப்பிடப் பணி செய்து வருகின்றன. மாநில விளையாட்டுக் குழுவிற்கு 1975-76ல் சுமார் ரூ. 12 இலட்சம் மட்டுமே மானியம் வழங்கப்பட்டது. 1977-78ல் மானியத் தொகை ரூ. 16 இலட்சமாக உயர்த்தப்பட்டது. கூடுதல் மானியத்தைக் கொண்டு கிராமங்களிலுள்ள மாணவர்களல்லாத இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டிகளையும், உடற்பயிற்சியையும் தீவிரமாகப் பரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

மாணவர்களுக்கு உடற்பயிற்சி அளிப்பதற்கு என உடற் பயிற்சிக் களரிகளை (Gymnasia) கல்வி நிலையங்களில் தொடங்கவும் ஏற்பளிக்கப்பட இருக்கிறது.

இம் மாநிலத்தில் விளையாட்டுகளையும், உடற்பயிற்சியையும் பேணி வளர்க்கும் நோக்கத்துடன் விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் போற்றி அவர்களுக்கு ஆதரவும் பாராட்டும் அளித்திட தமிழக அரசு கருதியுள்ளது. தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோருள் முதுமைக் காலத்தில் வறுமையால் வாடுபவர்களுக்கு (மாத வருமானம் ரூ. 150க்குக் குறைவாக உள்ளவர்களுக்கு (மாதம் ரூ. 75 வீதம்

உதவிப்பணம் கொடுக்கும் திட்டமொன்று 1978-79 முதல் தொடங்க இருக்கிறது. அவ்வாண்டில் 25 பேருக்கு இந்த உதவிப் பணம் தரப்படும்.

சாரண, சாரணியர் இயக்கம்

தமிழ்நாட்டுச் சாரணர் கழகம் 1976-77ல் மொத்தம் 1,05 281 சாரணர்களையும் சாரணியர்களையும் கொண்டிருந்தது. 1977-78ல் சாரண சாரணியர்களின் எண்ணிக்கை மொத்தம் 1,25,000 ஆக உயர்ந்தது. 1977ஆம் ஆண்டில் குடியரசு தலைவரின் சான்றிதழ், பரிசு வில்லைகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்ள 650 சாரணர், சாரணியர்களை அனுப்பிய பெருமை தமிழ்நாட்டுச் சாரண சாரணியர் கழகத்தையே சாரும்.

பாரத் சாரண சாரணியர் அமைப்பின் எட்டாவது தேசிய விழாவை சென்னையில் 1979 ஜனவரியில் கொண்டாட தமிழக அரசு இசைந்துள்ளது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அண்டை நாடுகள் சிலவற்றிலிருந்தும் சுமார் இருபதாயிரம் சாரண சாரணியர் அவ் விழாவில் கலந்து கொள்வர்.

நடமாடும் மருத்துவ வண்டிகள்

சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர் நிலைப் பள்ளி மாணவர்களின் மருத்துவச் சோதனைக்கென நடமாடும் மருத்துவ வண்டிகள் (Mobile Medical Vans) இயங்கி வருகின்றன.

படிப்பு உதவித் தொகைகள்

தமிழ் நாட்டில் பள்ளிக்கல்வி எல்லா நிலைகளிலும் இலவச மாகும். கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களும் கல்வியில் சிறந்து விளங்குகிறவர்களுமான மாணவர்களுக்கு, 1971-72 முதல் படிப்பு உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 374 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு மாணவர் களுக்கு ஆண்டுதோறும் உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஒரு முறை உதவித்தொகை பெற்ற மாணவர் பள்ளிக்கல்வியை முடித்து வெளிவரும்வரை இவ்வுதவித் தொகையைப் பெறுவர். இத்திட்டத் திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகளில் மாணவர் படிப்பதாய் இருந் தால், உணவுவிடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1000-மும், விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்துசென்று படிக்கின்ற மாணவருக்கு ஆண்டொன்றுக்கு

ரூ. 500-ம் உதவித்தொகை வழங்கப்படும். இவ்வுதவித்தொகை பெறும் மாணவர்களுள் தம் விருப்பப்படி சாதாரணப் பள்ளிகளில் சேர்ந்து படிப்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150/= மட்டும் வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை ஆண்டுதோறும் (புதியதாகப் பெறுவோர் உட்பட) சுமார் 2,000 ஆகும். கிராமப்புற வளர்ச்சிக்கு முதன்மையளிக்க வேண்டுமென்னும் கொள்கைக்கேற்ப இந்தப் படிப்புதவித்தொகை களின் எண்ணிக்கையை 1978–79 முதல் இருமடங்காகப் பெருக் கிடத் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. அதாவது, ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆண்டுதோறும் இனி நான்கு மாணவர்கள் புதிதாக இப்படிப்புதவித் தொகையைப் பெறுவார்கள்.

இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணு வத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கும் தாராளமாக கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

பள்ளிச் சீரமைப்பு இயக்கம்

உள்ளூர்ப் பொதுமக்கள் தாமாக முன்வந்து அளிக்கும் பணம் அல்லது பொருள் உதவியால் பள்ளிகளின் தேவைகளை நிறை வேற்றல் என்ற புதிய கருத்து 1958–ல் ஓர் இயக்கமாக ஏற்படுத்தப் பட்டது. இது பொது மக்கள் இயக்கமாக மாறி நம் நாட்டிலுள்ள மற்ற அரசுகளின் கவனத்தையும் பாராட்டுதலையும் பெற்ற தோடல்லாமல் அயல் நாட்டுப் பிரமுகர்களையும் கவர்ந்தது.

15–4–1959-ல் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஏ. தெக்கூர் என்ற இடத்தில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு பாரத பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. 16-4-59-ல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாகலாபுரம் என்ற இடத்தில் நடைபெற்ற மாநாட்டில் அவர் உரையாற்றினார். 12-8-1960 ல் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வேலூரில் நடை பெற்ற மாநாட்டை இந்தியக் குடியரசுத்தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் தொடக்கிவைத்தார்கள்.

ஏழை மாணவர்களுக்குப் பள்ளிச்சீருடை இலவசமாக வழங்கும் திட்டம் 1930ல் துவங்கியது. இத்திட்டம் பள்ளிச் சீரமைப்பு இயக்கத்துடன் இணைந்தது. 1976-77 முடிய 561 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடந்துள்ளன ; 14.15 கோடி ரூபாய் பெறுமானமுள்ள

உதவியைப் பள்ளிகள் பொதுமக்களிடமிருந்து பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இப்பொழுது அறிவியல் - நூல்நிலைய மேம்பாட்டிற்கான வசதிகளைப் பெறுவதில் நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களின் நன்கொடையைக் கொண்டு 1976-77 வரை ரூ. 3 கோடி செலவில் 41 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களை ஊக்குவித்தல்

ஆசிரியர்கள் மிகவும் சிறந்த முறையில் செயல்பட, நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து பல ஊக்குவிப்புகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. ஆசிரியர்களின் சம்பள விகிதமும், ஊழிய நிலைகளும் சீர்திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அவர்கள், தங்கள் பணியில் மிகுந்த ஈடுபாடு காட்ட இது உதவும். அரசல்லாத பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி 1-4-1955 முதல் ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1959-ல் இந்திய அரசு, ஆசிரியர்களுக்குத் தேசிய விருதுகளை அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 1961-ல் தமிழக அரசு ஆசிரியர்களுக்கு மாநில விருது அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

ஆசிரியர் இல்லங்கள்

ஆசிரியர்களின் நலன் கருதி ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஆசிரியர் இல்லங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் முதன் முதலில் 1970 ஆம் ஆண்டு வேலூரில் ஓர் ஆசிரியர் இல்லம் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மதுரை மாவட்டத்திற்கென கொடைக்கானலிலும், நீலகிரி மாவட்டத்திற்கென உதகமண்டலத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கென மதுரையிலும் ஆசிரியர் இல்லங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. ஆசிரியர் நல தேசியநிதி பணத்திலிருந்து சென்னையில் ரூபாய் 10 இலட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் ஒன்றைக் கட்டவும் தமிழக அரசு ஏற்பளித்துள்ளது.

ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் தமிழக அரசு மாநில விருதுகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. விருது பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளிப் பதக்கமும் ஒரு சான்றிதழும், ரொக்கப்பணம் ரூ. 200-ம் அளிக்கப்படுகின்றன.

முதியோர் கல்வி மற்றும் பள்ளி சாராக்கல்வி

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி தமிழ் நாட்டில் 39.39 விழுக்காட்டினர் (ஆண்களில் 51.68 விழுக்காட்டினரும், பெண்களில் 26.83 விழுக்காட்டினரும்) எழுதப் படிக்கத் தெரிந்து இருந்தனர். அக் கணக்கின்படி அனைத்திந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் விழுக்காடு 29.34 ஆகும். (ஆண்கள் 39.51%, பெண்கள் 18.44%). தமிழ் நாட்டில் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி இருந்த 4.12 கோடி மக்களுள், 1.63 கோடி மக்களே எழுதப்படிக்கத் தெரிந்து இருந்தனர்.

14 வயதுக்குக் குறைந்த அனைத்துச் சிறுவர் சிறுமியர்களையும் பள்ளிகளில் சேர்த்தாகவேண்டும் என்னும் முயற்சியில் ஈடுபடும் அதே நேரத்தில், நம் மக்களில் வயது வந்தவர்களுக்கும் கல்வி வசதிகள் அளித்து அவர்கள் ஆற்றலை வளர்த்துக்கொள்ள வழி செய்யவேண்டும் என்பதில் மத்திய அரசும், மாநில அரசும் மிகவும் அக்கறை கொண்டுள்ளன. இந்நாடு முழுவதிலும் வரும் ஐந்து ஆண்டுகளில் 15-35 வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களுள் எழுதப்படிக்கத் தெரியாமலிருக்கும் சுமார் 10 கோடிப் பேர்களுக்கு குறைந்த அளவு எழுதப் படிக்கவாவது கற்றுக்கொடுக்கவேண்டும் என்பது மத்திய அரசின் நோக்கமாகும். அவர்களுக்கு அளிக்கப் படும் முதியோர் கல்வியின் மூலம் அவர்கள் மேற்கொண்டு தாமாகவே படிப்பறிவை வளர்த்துக் கொள்ளும் திறனைப் பெற்றுத் தமது வளர்ச்சிக்கும் தம்மைச் சுற்றியுள்ள சமுதாய வளர்ச்சிக்கும் தன்னம்பிக்கையுடன் தீவிரமாகப் பாடுபட இயலும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை வரும் 5 ஆண்டுகளில் 15-35 வயதுத் தொகுதியில் எழுத்தறிவில்லாமலிருப்பவர்கள் 65 இலட்சம் பேருக்கு எழுத்தறிவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1978-79-ல் முதியோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் மொத்தம் ரூ. 39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது தேசிய மாணவர் படையினர், "தேசியப் பணித்திட்டத்தைச்" சேர்ந்த கல்லூரி மாணவர்கள் ஆகியோரும், நேரு இளைஞர் மன்றப் பணியாளர்களும் எழுத்தறிவிப்புப் பணியில் பயன்படுத்தப் படுகின்றனர். கல்வியின் பயன், கிராம முன்னேற்றத்திற்குத் தூண்டு கோலாக அமைய, எழுத்தறிவு பெறுவோர்க்கு, வேளாண்மை, கிராமக் குடிசைத்தொழில்கள், கூட்டுறவு இயக்கம், சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலத்திட்டம், கால்நடைப் பராமரிப்பு போன்றவற்றைப்பற்றிய எளிய நடையில் புத்தகங்கள் தயாரித்து வழங்கப் படும்.

"வேளாண்மைத் தொழிலோடு இணைந்த எழுத்தறிவுத் திட்டம்" என்னும் மைய அரசு பண உதவித்திட்டம் எட்டு மாவட்டங்களில் மொத்தம் சுமார் 600 நிலையங்களில் செயல்படுகிறது.

பள்ளிசாராக் கல்வியில் மற்றும் ஒரு மத்திய அரசு பண உதவித் திட்டமும் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 15-25 வயதுத் தொகுதியினருக்குக் கல்வி கற்பிக்கப்படும். திருச்சி, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தருமபுரி, கோயமுத்தூர், திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 100 இடங்களில் இத்திட்டம் செயல்படுகிறது. பாதி மாவட்டங்களில் செலவை மத்திய அரசும் பாதியில் மாநில அரசும் ஏற்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூபாய் ஓர் இலட்சம் செலவாகின்றது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு தோறும் சுமார் 45,000 மாணவர்கள் பயனடைகின்றனர்.

பள்ளிப்படிப்பைப் பாதியில் விட்டுவிடுபவர்கள், பள்ளிக்கே செல்லாதவர்கள் ஆகிய இருவகையினரிலும் 6-11, 11-14 வயதுத் தொகுதியினருக்கும் பள்ளி சாராக்கல்வி அளிக்கும் திட்டம் ஒன்றையும் மாநில அரசு தனது செலவிலேயே செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 374 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் 1976-77 ஆம் ஆண்டில் ஓர் இடத்திலும் 1977-78 ல் இரண்டாவதாக மற்றோர் இடத்திலும் இவ்வகுப்புகள் தொடங்கப்பட்டன. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களில் இவ்வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50/— மதிப்பூதியம் பெறுகின்றனர். இத்திட்டத்தில் 1977-78ல் 25,000 பேர் பயில்கின்றனர். 1978-79ல் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் இரண்டு புதிய இடங்கள் என மொத்தம் 748 இடங்களில் இக்கல்விமுறை விரிவு செய்யப்படும்.

ஏழ்மைக் குடும்பங்களைச் சார்ந்தவர்களும் எட்டாம் வகுப்புடன் பள்ளிப்படிப்பை விட்டுவிட்டவர்களுமான இளைஞர்களுக்கு 11 வது வகுப்புத்தரத்தில் கல்வி கற்பிக்க மைலாப்பூர் செயிண்ட் தாமஸ் கான்வென்டில் 1975 ஆம் ஆண்டு முதல் மாலை நேரங்களில் பள்ளிசாராக்கல்வி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கு அரசு ஆண்டுக்கு சுமார் ரூபாய் 25 000 மானியம் வழங்குகிறது, இத்தகைய வகுப்புகள் கோட்டூர்புரத்தில் இரண்டாவதாக ஒரு மையத்திலும் தொடங்கப்பட்டுள்ளன.

நேருஇளைஞர் நிலையங்கள்

நேரு இளைஞர் நிலையங்கள் கடலூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், கோயமுத்தூர், புதுக்கோட்டை ஆகிய ஏழு இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் ஐந்தைத் தொடங்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இவை குறிப்பாக, பள்ளிசாராக் கல்வித்துறையில் பயனுள்ள பணிகளைச் செய்கின்றன. பள்ளி சாராக் கல்வி எல்லா இளைஞர்களுக்கும் கிட்டச் செய்வதும் இளைஞர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதும், பாடல்கள், நாடகங்கள் மூலமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு வசதி செய்வதும், போட்டி விளையாட்டுகள், உடற்பயிற்சிக் கல்வி ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்வதும் இந்நிலையங்களின் பணியாகும்.

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு

கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக்கான மாநிலக் குழு (SCERT) பள்ளிக் கல்வி நிலையில் ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறது.

பிரிட்டிஷ் கவுன்சிலின் உடனுழைப்புடனும் உதவியுடனும் இக்குழு சென்னை, மதுரை, திருச்சி, கோயமுத்தூர் ஆகிய இடங்களில் ஆசிரியர்கள் நிலையங்களை நிறுவியுள்ளது. கல்விப் பிரச்சினைகள் குறித்து ஆசிரியர்கள் ஒன்றாகக்கூடி விவாதிப்பதற்கும், கருத்துப்பரிமாற்றம் செய்துகொள்வதற்கும் ஏற்ற பொது மன்றங்களாக இந்நிலையங்கள் திகழ்கின்றன.

யுனிசெப் (UNICEF) உதவியுடன், இக்குழு சோதனைத் திட்டங்கள் இரண்டை நடத்திவருகின்றது. ஒன்று 'தொடக்கக் கல்விப் பாடத்திட்டத்தைப் புதுப்பிக்கும் திட்டம்' (Primary Education Curriculum Renewal Project). இதன்கீழ் புதிய பாடத் திட்டம் ஒன்று சில பள்ளிகளில் செயல்படுகிறது. மற்றொன்று, 'சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி நடவடிக்கைகள்' (Developmental Activities in Community Education and Participation). இதன்கீழ் பள்ளிக்கல்வி, இளஞ்சிறார் பள்ளிக்கல்வி, பள்ளிசாராக் கல்வி ஆகிய மூன்றும் இணைந்த கல்வி முப்பது தொடக்கப் பள்ளிகளில் வழங்கப்படுகிறது.

1978 ஜனவரியிலிருந்து இக்குழுவில் 'தேர்வுமுறை சீர்திருத்தப் பிரிவு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பள்ளித் தேர்வுகளில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் பற்றியும், 'வினாவங்கிகள்' போன்றவை பற்றியும் அப்பிரிவு ஆய்வுகள் செய்யும்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

தேசிய மயமாக்கப்பட்ட பாடநூல்களை வெளியிட்டு வினியோகிக்கும் பணியைத் தமிழ்நாட்டில் 1970ல் நிறுவப்பட்ட தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. தரமான பாடநூல்களை உருவாக்குவதிலும், அவற்றை மலிவு விலையில் விற்பதிலும் அந்நிறுவனம் நற்பணியாற்றி வருகிறது. 1977-78ல் அந்நிறுவனம் ரூபாய் மூன்றரைக்கோடி விலையுள்ள சுமார் 2½ கோடி எண்ணிக்கை பாடநூல் படிகளை அச்சிட்டு வழங்கியது.

இந்நிறுவனப் புத்தகங்கள், 47 மொத்த விற்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட 1,600 சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் மாநிலம் முழுவதும் விற்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மை மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் உருது ஆகியவற்றிலும் முக்கிய நூல்கள் இந்நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றன.

தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 800 பாட நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இவ்வெளியீடுகளில் பலவற்றைப் பாட நூல்களாகவும், குறிப்புப் புத்தகங்களாகவும் மாணவர்கள் பயன்படுத்திட பல்கலைக் கழகங்கள் பரிந்துரை செய்துள்ளன.

கல்லூரிக் கல்வி

தமிழ் நாட்டில் 1947 ஆம் ஆண்டில் 24 ஆக இருந்த கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1977-78 ஆம் ஆண்டில் 188 ஆக உயர்ந்துள்ளது. 1947 ம் ஆண்டில் கல்லூரிகளில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 17,000 என இருந்தது. இது 1977-78 ஆம் ஆண்டில் 2,09,000 ஆக உயர்ந்துள்ளது.

மொத்தமுள்ள 188 கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளில் 110 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும், 77 கல்லூரிகள் மதுரைப் பல்கலைக் கழகத்துடனும், ஒன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்தவை. பல்கலைக் கழகம் ஒன்றுடன் 30 அல்லது 40 க்கு மேற்பட்ட கல்லூரிகள் இணைப்புப் பெற்றிருத்தல் கூடாது எனப் பல்கலைக் கழகங்கள்பற்றிய டாக்டர் கஜேந்திர கட்கர் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே, தமிழ் நாட்டில் மேலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுவது இன்றியமையாதது என்பது தெளிவாகும்.

தன்னுரிமையுள்ள கல்லூரிகள்

ஒவ்வொரு பல்கலைக் கழகத்தின் கீழும் உள்ள கல்லூரிகளில் நன்கு நடக்கும் கல்லூரிகள் ஒரு சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்கு சுயாட்சி உரிமை கொடுத்தால் கல்லூரிக் கல்வித் தரம் உயருமென்று கருதிப் பல்கலைக்கழக மானியக்குழு அதற்காகத் திட்டமொன்று வகுத்தது. இதனை சென்னை, மதுரைப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் செயல்படுத்த வகை செய்து பல்கலைக்கழகச் சட்டங்கள் 1977 டிசம்பரில் திருத்தப்பட்டுள்ளன எனவே, அவ்வாறு சுய ஆட்சி உரிமை பெறும் கல்லூரிகள் பாடத் திட்டங்கள் வகுக்கவும், தேர்வு நடத்தவும் தாம்தாமே வல்லுநர் குழுக்கள் அமைத்து, கல்வித்தரம் உயரக் கூடிய வகையில் செயல் பட வாய்ப்புண்டு.

தொடர் கல்வி

தொடர் கல்வி அளிப்பதில் மாலைவேளைக் கல்லூரிகளும், அஞ்சல் வழிக் கல்வித்திட்டங்களும் மிகவும் பயனளிக்கும் முறையில் விளங்குகின்றன. 1977-78 ஆம் ஆண்டில் 45 கல்லூரிகளில் மாலை வேளை வகுப்புகள் நடத்தப்பெற்றன. அவற்றில் 10,000 மாணவர்கள் படித்தனர். மதுரைப் பல்கலைக் கழகம் பி யு. சி. பி. ஏ., பி. காம்., எம். ஏ., எம். காம். வகுப்புக்களுக்குப் பயிற்றுவிப்பதற்காக அஞ்சல் வழிக் கல்வித் திட்டத்தை நடத்தி வருகிறது மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரிடையே இவை மிகவும் போற்றி வரவேற்கப்படுகின்றன.

படிப்புதவித் தொகை

புகுமுக வகுப்பில் கற்பிப்புக் கட்டணங்கள் எவையும் வசூலிக்கப்படுவதில்லை. இலவச புகுமுக வகுப்புக் கல்வித் திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூ, 2 கோடியாகும். 1974-75 ஆம் ஆண்டிலிருந்து தேசியப் படிப்புதவித் தொகை, பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் தேசியப் படிப்புதவித்தொகை ஆகிய இரண்டுக்கும் ஆகும் செலவை மாநில அரசே ஏற்று வருகின்றது. உடல் ஊனமுற்றவர்கள், பாதுகாப்புப் பணியாளரது குழந்தைகள், விடுதலைப் போர்வீரர்களின் குழந்தைகள், மற்றும் பர்மா, இலங்கை அகதிகளின் குழந்தைகள் போன்றவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டங்களும் உள்ளன. தாழ்த்தப்பட்ட இனங்கள், பழங்குடிகள், மற்றும் பின்தங்கிய வகுப்புகளைச் சார்ந்த மாணவர்கள் அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளிலிருந்தும் படிப்புதவித் தொகைகள் பெற்று வருகின்றனர்.

தேசிய மாணவர் படை

தமிழ் நாட்டில் தேசிய மாணவர் படையில் தற்போது 22,000 மாணவ-மாணவியர்களைக் கொண்ட 48 முது நிலைப் பிரிவுகளும் 67 000 மாணவ-மாணவியர்களைக்கொண்ட 675 இளநிலைப் பிரிவுகளும் உள்ளன. இவற்றில் 3,000 மாணவியரைக்கொண்ட முதுநிலைப் பிரிவுகள் 5ம், 5,300 மாணவியரைக்கொண்ட இளநிலைப் பிரிவுகள் 53 ம் அடங்கும் தேசிய மாணவர் படைக்கு தமிழக அரசு 1978-79 ஆம் ஆண்டில் செலவிட்ட தொகை ரூ. 113 இலட்சமாகும்.

1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் டில்லியில் நடைபெற்ற குடியரசு விழாவில் தமிழ்நாட்டுத் தேசிய மாணவர் படைப்பிரிவு பல மாநிலங்களும் அடைய விரும்பும் அனைத்திந்திய விருதைத் தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தந்துள்ளது. இந்த விருதை வழங்கத் தொடங்கி எட்டு ஆண்டுகள் ஆகின்றன. 1976 ல் தவிர மற்ற ஏழு ஆண்டுகளிலும் அதனைத் தமிழ் நாடே பெற்று வந்துள்ளது.

தேசியப் பணித் திட்டம்

தேசியப்பணிப் பிரிவானது கல்லூரி மாணவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை நாட்டுப் பணியில் குறிப்பாகக் கல்விப்பணியில் ஈடுபடுத்துவதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் தொடக்கப் பட்டது. இத்திட்டத்தைச் செயற்படுத்த, பல்கலைக் கழகங்கள் மாணவர் ஒருவருக்கு ரூ 60/—. என்ற கணக்கில் மானியம் பெறுகின்றன மேற்கண்ட தொகையில் ரூ 35 ஐ இந்திய அரசும் ரூ 25/—ஐ மாநில அரசும் அளிக்கின்றன. இத்திட்டத்தில் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருள் விருப்பமுள்ளோர் பங்கு கொள்கின்றனர் இத்திட்டத்தில் பங்குகொண்ட மாணவர் எண்ணிக்கை 1976-77ல் 20,000 ஆக இருந்தது, 1977-78ல் 40,000 ஆக உயர்ந்தது. ஆண்டுதோறும் இத்திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களில் பாதிப் பேர் விடுமுறைக் காலங்களில் சுமார் 10 நாள் அளவுக்கு கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி, கிராமப்புற வளர்ச்சிப் பணிகளை, குறிப்பாக எழுத்தறிவிக்கும் பணியைச் செய்கின்றனர். இத்திட்டத்திற்கு, தமிழக அரசினால், 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக் கல்வி

[Technical Education]

தமிழ் நாட்டில் தொழில் நுட்பப் பட்டப் படிப்புக் கல்லூரிகள் (Engineering Colleges) தொடக்க காலத்தில் பொதுக்கல்வி

இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் இருந்தன. பல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (Polytechnics) கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வந்தன.

அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவின் ஆலோசனைக்கிணங்க இந்திய அரசு செய்த பரிந்துரையை ஏற்று, தமிழ் நாட்டு அரசு தொழில்நுட்பக் கல்விக்கெனத் தனியாக ஒரு தொழில் நுட்பக் கல்வி வாரியத்தையும் ஓர் இயக்குநரையும் நியமித்து 1957 முதல் தொழில் நுட்பக் கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை இவரின் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வந்தது. அது முதல், இத்துறை பல வழிகளிலும் முன்னேறிச் சிறந்த தொண்டாற்றி வருகின்றது.

இத்துறையின்கீழ் 7 பொறியியல் கல்லூரிகளும் 39 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் [மூன்று மகளிர் பயிலகங்களும், ஆறு தனித் தொழில் டிப்ளமா கல்வியகங்களும், மூன்று கலை-கைத்திறன் கல்வியகங்களும் உட்பட] 14 தொழில் நுட்ப உயர் நிலைப்பள்ளிகளும் உள்ளன. தற்போது ஆண்டுதோறும், பொறியியல் கல்லூரிகளில் பட்டப்படிப்பிற்காக 1,422 + மாணவர்களும், பல்தொழில் நுட்பப்பயிலகங்களில் பட்டப் (டிப்ளமா) படிப்பிற்காக 5,125 மாணவர்களும், தொழில்நுட்ப உயர்நிலைப்பள்ளிகளில் 840 மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர்.

மேற்சொன்ன ஏழு பொறியியல் கல்லூரிகள் தவிர கிண்டியிலுள்ள டாக்டர் அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரி மற்றும் இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கல்வியகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பவியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி ஆகிய ஐந்து பொறியியல் கல்லூரிகளும் இம்மாநிலத்தில் உள்ளன. அவை பல்கலைக் கழகங்களைச் சார்ந்தவை; அல்லது தன்னாட்சி உரிமை பெற்றவை ஆகும்.

தொழில் நுட்பக் கல்விக்காக 1978-79 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 7 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் புதிய கல்வி அமைப்பு

தமிழ் நாட்டில் பள்ளிக்கல்வி 11 ஆண்டு, கல்லூரிகளில் புகுமுக வகுப்பு ஓராண்டு, பட்டப்படிப்பு 3 ஆண்டு என்ற கல்வி

அமைப்பு முன்னர் இருந்தது. கொத்தாரிக் கல்விக்குழு (1964-66), இந்தியா முழுவதும் 10 ஆண்டு பள்ளிக்கல்வி, பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் 2 ஆண்டு உயர் செகண்டரி வகுப்பு, 3 ஆண்டு பட்டப்படிப்பு என்ற ஒரே சீரான கல்வி அமைப்பைக் கொண்டு வரவேண்டுமெனப் பரிந்துரை செய்தது. 1968 செப்டம்பரில் 'தேசியக் கல்விக் கொள்கை' என்ற பெயரில் நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானமும் அக்கல்வி முறையை ஏற்கலாமெனப் பரிந்துரை செய்தது. தமிழ்நாட்டில் '11+1+3' கல்வி அமைப்பினை மாற்றி '10+2+3' என்ற புதிய அமைப்பைக் கொணர்வது பொருத்தமானதா என்பது குறித்துப் பரிந்துரைக்க 1975 ஜனவரியில் தமிழக அரசு குழு ஒன்றை அமைத்தது. '10+2+3' கல்வி முறையைக் கொண்டுவரப் பரிந்துரைத்து அக்குழு தனது அறிக்கையை 1975 நவம்பர்த் திங்களில் கொடுத்தது.

பத்தாண்டுப் பள்ளிப்படிப்பு அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்ட, தரம் உயர்த்தப்பட்ட பாடத்திட்டங்களும், அப் பாடத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பாடப்புத்தகங்களும் 1972-73 ஆம் ஆண்டிலிருந்தே படிப்படியாகக் கொண்டுவரப்பட்டு, 1977-78 ஆம் ஆண்டுடன் 1-10 வகுப்புகளில் அமலுக்கு வந்து விட்டன.

பின்வரும் கால அட்டவணைப்படி, தமிழ்நாட்டில் புதிய பத்தாண்டுப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

வகுப்புகள்	அறிமுகப்படுத்திய ஆண்டு
1—5	1972-73
6	1973-74
7	1974-75
8	1975-76
9	1976-77
10	1977-78

புதிய 10+2+3 ஆண்டுப் படிப்பு முறையில் + 2 நிலையைப் பள்ளிகளில் வைப்பதே நல்லதென்பது தமிழக அரசின் கருத்து. தமிழ்நாட்டில் 1978—79 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்ட உயர் செகண்டரிவகுப்பை உயர்நிலைப்பள்ளிகளிலேயே வைத்திடத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இயன்றவரை, ஊராட்சி ஒன்றியப்பகுதி ஒவ்வொன்றிலும் ஓர் உயர் செகண்டரிப் பள்ளி யாவது இருக்கும் என அரசு அறிவித்துள்ளது.

1977-1978 ஆம் ஆண்டில் *10* ஆவது வகுப்பில் படித்த மாணவர்கள், கீழ்வகுப்புகளிலிருந்தே புதிய பாடத்தின்படி பயின்றவ ராதலால் அவர்கள் *1978* ஏப்ரல் திங்களில் பத்தாண்டு எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதியுள்ளனர். *1978* ஏப்ரல் திங்களில் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதியுள்ள மாணவர்களில் தேர்ச்சி பெற்றவர் (பத்தாண்டுப் பள்ளிப்படிப்பின் முதல் தொகுதியினர்) *1978-80*-ல் உயர் செகண்டரிக்கல்வி பயின்று *1980* மார்ச் திங்களில் உயர் செகண்டரிக் கல்வியின் இறுதித் தேர்வை எழுதினர்.

+ 2 நிலையின் முதல் ஆண்டு முடிவில், ஒரே ஓர் அகத்தேர்வு (Internal Examination) மட்டும் நடைபெறும். இரண்டாம் ஆண்டில் படித்த பகுதிகளை மட்டும் தழுவி, இரண்டாம் ஆண்டின் முடிவில் ஒரு பொதுத்தேர்வு நடைபெறும்.

1 — 10 வகுப்புகளில் பொதுக்கல்வி

ஒன்று முதல் பத்து வகுப்புவரை ஒவ்வொரு குழந்தைக்கும் பொதுக்கல்வி அளிப்பது அரசின் கடமையாகும். மொழிகள், அறிவியல், கணக்கு, வரலாறு, புவியியல், உடற்கல்வி, கலை, கைத்தொழில், அறக்கல்வி ஆகியவை அடங்கிய பொதுக்கல்வி ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கவேண்டும். புதிய கல்வி அமைப்பின் முதல் பத்தாண்டுகளில் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் இத்தகைய பொதுக்கல்வி பெறுவர்.

+ 2 நிலையில் சிறப்புப் பயிற்சி

சிறப்புப் பயிற்சி என்பது *10* ஆம் வகுப்பிற்குப்பின், + 2 நிலையில் எழுகிறது. உயர் செகண்டரிப்பள்ளி வகுப்பில் பகுதி Iஇன்கீழ் ஒவ்வொரு மாணவனும் தமிழ் அல்லது வேறு *12* மொழிகளுள் யாதேனும் ஒரு மொழி, படிக்கவேண்டும். பகுதி II-ன் கீழ் ஆங்கிலம் பயிலவேண்டும். பகுதி III-ன் கீழ்ப் பொதுவான பாடங்களைப் (Academic Stream) பயில்பவர்கள் அறிவியல் பாடங்கள், அல்லது கலைப்பாடங்களில் ஏதாவது நான்கை எடுத்துப் பயிலவேண்டும். பகுதி III-ன் கீழ்த் தொழில் பாடங்களைப் (Vocational Stream) பயில்பவர்கள் தொழில் பாடம் ஒன்றைப் பயில்வதோடு அத் தொழிலோடு தொடர்புடையதாக அறிவியல்அல்லது கலைப்பாடங்களில் இருந்து ஒரு பாடத்தையும் தேர்ந்தெடுத்துப் பயிலவேண்டும்.

உற்பத்தி அல்லது ஆக்க வேலைகளுடன் கல்வியைத் தொடர்பு படுத்துதல் வேண்டும். மக்கள் பெருக்கத்தினால் இது தவிர்க்க

முடியாததாகும். 1—10 வகுப்புவரை வேலை அனுபவத்தை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக, உற்பத்திக்கும் கல்விக்கும் இணைப்பு ஏற்படுத்த முடியும். + 2 நிலையில் புதிய 11, 12 வகுப்புகளில் தொழில் பாடங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாகவும் உற்பத்தியுடன் கல்வியை இணைத்தல் இயலும்.

மாணவர்களைச் சேர்த்தல்

உயர் செகண்டரிப்பள்ளிகளில் எல்லா மாணவர்களும் சேர்வதற்குரிய வாய்ப்பு உண்டு. தாழ்த்தப்பட்ட சாதியினர், பின் தங்கிய வகுப்பினர் ஆகியோர்க்கு ஒதுக்கப்பட்ட இடங்களை அளிப்பது, ஒழுங்காகப் பின்பற்றப்படும்.

புதிய அமைப்பின் + 2 நிலை தொடக்கம்

தமிழ்நாட்டில் 10+2+3 என்ற புதிய கல்வி அமைப்பின் +2 நிலை, 1978 ஜூன் திங்கள் முதல் தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் புதிய கல்வி அமைப்பின் வெற்றியானது, மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் இதன் குறிக்கோள்களையும், பாடப்பொருளையும், பயன்களையும் உணர்ந்து, ஆதரவு நல்குதலைப் பொறுத்து அமைவதாகும்.

வினாக்கள்

1. கல்வி வளர்ச்சிக்குத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களை விளக்குக.
2. எத்தகைய தொழில் சம்பந்தமான திட்டங்களை + 2 நிலையில் நீவீர் கொணரலாம் என்று நினைக்கிறீர் ?
3. அரிசனங்கள் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் கல்வியில் தமிழ்நாடு இதுகாறும் மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை ?
4. பள்ளி சாராக் கல்வித் திட்டங்கள் ஆரம்பக் கல்வி நிலையில் காணப்படும் கழிவினைக் குறைப்பதில் எந்த அளவு வெற்றி பெறக்கூடும் என நிர்ணயிக்கவும்.
5. தமிழ்நாட்டில் பள்ளிகளில் உடற் கல்வியைக் கட்டாயப் பாடமாக்கிய கல்வித்துறையின் செயல் சரியானதெனக் காட்டவும்.
6. இடைநிலைக் கல்வியின் தர உயர்வினுக்குத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள மூன்று செயல்முறைகளைக் குறிப்பிடவும்.

மேற்கோள் நூல்கள்

(Bibliography)

Aggarwal, J. C. — 1. The Progress of Education in India.
2. Recent Developments in Indian Education.

Altekar, A S — Education in Ancient India.

Arunachalam, M — Education in Ancient Tamilnadu.

Basu, A. N. — Education in Modern India.

Biswas, A & J. C. Aggarwal — Education in India.

Bossing, N. L. — Principles of Secondary Education.

Broudy, H. S. — Building a Philosophy of Education.

Central Advisory Board of Education — Report on Examinations.

Charters, W. W. — Curriculum Construction.

Chelliah, K. A. — இந்தியக் கல்வியின் இன்றைய பிரச்சினைகள்—சிறப்புப் பிரச்சினைகள்.

Chaube, S P. — A History of Education in India.

Dikshit, S. S. — Current Problems in Indian Education.

Gaind, D. N. & R. P. Sharma — Educational Theories and Modern Trends.

Gandhi Mahatma — Basic Education.

Jayagopal, R. — அறிவுரை பகர்தலும் வழிகாட்டுதலும்

Jaya Kothai Pillai — Educational System of The Ancient Tamils.

Jones, A. — Principles of Guidance.

Keay, F. E. — Education in India and Pakistan.

Kochhar, S. K. — Educational and Vocational guidance in Secondary Schools,

Kohli, V. K. — Current Problems of Indian Education.

Madras University — 1. Hand Book on Question Banking.
2. The Semester Pattern for the Under Graduate Courses:A Guide.

Mallick, K. N. — Current Problems of our Education.

Ministry of Education, Govt. of India — 1. The Report of the University Commission(Dr.S.Radhakrishnan)
2. The Report of the Secondary Education Commission (Dr. A.L. Mudaliar).
3. Report of the Education Commission—Education and National Development (Dr. D.S. Kothari).
4. Report of the Committee on Religious and Moral Instruction.

Mukherjee, S. N. — 1. History of Education in India.
2. Education in India : Today and Tomorrow.

Naik, J. P. — Educational Planning in India.

N. C. E. R. T. — 1. Concept of Evaluation in Education.
2. Improving Examinations.

Nunn, T. P. — Education Data and First Principles.

Pandey, R. S. — Principles of Education.

Paul Verghese, T. — School Organisation.

Rawat, P. L. — History of Indian Education.

Raymont, T. — Modern Education : Aims and Methods.

Reeder, W. G. — A First Course in Education.

Ryburn, W. M — Principles of Education.

Safaya, R N. — Current Problems in Indian Education.

Salamatullah — Examinations in India.

Santhanam, S. — 1. கல்விக் கோட்பாடுகளும் தத்து வங்களும்.
2. இந்தியக் கல்வி வரலாறு.
3. கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும்.
4. வாழக் கற்றல் (Learning to be) என்ற யுனெஸ்கோ அறிக்கை மொழிபெயர்ப்பு)

Santhanam, S. & A. S. Durai Singh — பள்ளி நிருவாக அமைப்பு.

Siqueira, T. N. — Modern Indian Education.

Sita Ram Jayaswal — Guidance and Counselling.

The Indian year Book of Education — I, II, III, & IV.

University Grants Commission — Report on Examination Reform.

Vakil & S. Natarajan — Education in India.

Whitehead, A. N. — The Aims of Education.

கலைச்சொற்கள்

அ

அஞ்சல்வழிக் கல்வி	—	Correspondence Course
அடிப்படைப் பாடங்கள்	—	Core Subjects
அடைவு	—	Achievement
அலுவலர்	—	Officer
அழகுணர்ச்சி	—	Appreciation
அவை (மன்றம்)	—	Council
அளவீடு	—	Measurement
அறநெறி	—	Morality
அறிவியல்	—	Science
அறிக்கை	—	Report, Notice
அறிக்கைப் பலகை	—	Notice Board
அறிவுரை பகர்தல்	—	Counselling
அனுபவம்	—	Experience

ஆ

ஆக்கத்திறன்	—	Creativity
ஆசிரியர்	—	Teacher
ஆதாரக்கல்வி	—	Basic Education
ஆயத்தம்	—	Preparation
ஆய்குழு	—	Commission
ஆய்வகம்	—	Laboratory
ஆளுமை	—	Personality
ஆற்றல்	—	Ability

இ

இணைப்பு	—	Correlation
இயல்பு	—	Characteristic
இயற்கை	—	Nature
இலக்கியம்	—	Literature
இலக்கு	—	Objective
இலட்சியம்	—	Ideal

ஈ

ஈவு — Quotient

உ

உடலுழைப்பு — Manual work
உடல் நலவியல் — Hygiene
உடற்கல்வி — Physical Education
உடற்பயிற்சி நிலையம் — Gymnasium
உயிரியல் — Biology
உளவியல் — Psychology
உளநலவியல் — Mental Hygiene
உற்பத்தித் தொழில் — Productive Craft
உற்றுநோக்கல் — Observation

ஊ

ஊக்குவித்தல் — Motivation

எ

எடுத்துக் கூறல் — Presentation
எடுத்துக்காட்டு — Illustration
எழில் — Beauty
எழுத்தறிவு — Literacy
எளிதியக்கம் — Mobility

ஏ

ஏட்டுக்கல்வி — Academic Education
ஏது — Factor
ஏற்புடைமை — Validity

ஒ

ஒத்துணர்வு — Sympathy
ஒத்துழைப்பு — Co-operation
ஒப்படைப்பு — Assignment
ஒருபுறச் சாய்வின்மை — Impartiality
ஒருமைப்பாடு — Unity
ஒலிபரப்பு — Broadcast
ஒழுக்கம் — Character
ஒழுங்கின்மை — Indiscipline
ஒழுங்கு — Discipline

ஓ

ஓய்வு — Leisure

க

கட்டுப்பாடு — Discipline
கண்காட்சி — Exhibition
கருத்து — Opinion
கருத்தரங்கு — Seminar
கருத்துப்படம் — Chart
கரும்பலகை — Black board
கருவி — Tool
கல்லூரிகளின் இணைப்புத் திட்டம் — College Complex
கல்வி — Education
கல்வி அமைப்பு — Educational Structure
கல்வி ஏணி — Educational ladder
கல்வி ஏற்பாடு — Curriculum
கல்வியியல் — Science of Education
கல்விப் பயணம் — Excursion
கல்வியில் வழிகாட்டுதல் — Educational guidance
கலை — Art
கவர்ச்சி — Interest
கற்பித்தல் — Teaching
கற்றல் — Learning

கா

காட்சிக் கேள்விக் கருவிகள் — Audio-Visual Aids
காப்புணர்ச்சி — Security
காரணி — Factor
கால அட்டவணை — Time Table

கு

குடிமகன் — Citizen
குடிமை — Citizenship
குடிமைப் பயிற்சி — Citizenship Training
குடிமை நூல் — Civics
குடியாட்சி — Democracy
குழவிப் பூங்கா — Kindergarten
குழு — Group, Panel
குறிக்கோள் — Ideal

கூ

கூட்டுக் கல்வி — Co-education
கூறு — Aspect

கை

கைப்பணி — Craft
கையாளுமை — Practicablity

கொ

கொள்கை — Principle

கோ

கோட்பாடு — Theory

ச

சங்கம் — Association
சஞ்சிகை — Magazine
சட்டம் — Law, Rule
சதவீதம் — Percentage
சமயச் சார்பற்ற — Secular
சமயம் — Religion
சமுதாயம் — Community
சமூகக் கல்வி — Social Education
சமூக மரபுரிமை — Social heritage
சமூகம் — Society
சமூகத் தொண்டு — Social Service
சமூக நிலையம் — Social Institution
சமூகவியல் — Sociology

சா

சாரணியக்கம் — Scouting
சார்பெண்ணம் — Prejudice
சான்றிதழ் — Certificate

சி

சிறப்பாக்கல் — Enrichment
சிறப்பாசிரியர் — Specialist Teacher
சிறப்புப் பயிற்சி — Specialization
சிறுதொலைப் பயணம் — Field trip

சீ

சீருடை — Uniform

சு

சுகாதார ஏற்பாடுகள் — Sanitation
சுதந்திரம் — Freedom
சுய ஆட்சி — Self Government

சூ

சூழ்நிலை	—	Environment

செ

செஞ்சிலுவைச் சங்கம்	—	Redcross Society
செயல்	—	Activity
செயல்திட்டம்	—	Project
செயல்முறை	—	Process
செய்திப் பலகை	—	News Board
செய்திறன்	—	Skill
செய்து கற்றல்	—	Learning by doing
செய்து காட்டல்	—	Demonstration
செல்வாக்கு	—	Influence

சே

சேதம்	—	Wastage
சேர்க்கை	—	Admission

சோ

சோதனை	—	Experiment
சோதனை உருப்படி	—	Test item

த

தரப்படுத்தல்	—	Standardization
தரம்	—	Standard, Norm
தருக்கம்	—	Logic
தளரா நோக்கு	—	Optimism
தலைமை	—	Leadership
தலைமையாசிரியர்	—	Headmaster
தனித்தன்மை	—	Individuality
தனிமனிதன்	—	Individual
தனியாள் வேற்றுமைகள்	—	Individual differences

தா

தானே கற்றல்	—	Auto-Education
தான் தொடங்காற்றல்	—	Initiative

தி

திட்டமான	—	Definite
திட்டம்	—	Plan
திரள் பதிவு	—	Cumulative Record
திரைப்படம்	—	Film
திரைப்படத் துண்டு	—	Film strip

துா

துணைக்கருவிகள் — Aids

தூ

தூண்டல் — Stimulus
தூய்மை — Goodness

தே

தேக்கம் — Stagnation
தேர்வு — Examination
தேவை — Need

தொ

தொடக்கக் கல்வி — Elementary Education
தொடக்கம் — Inaguration
தொடர்வேலை — Follow-up Work
தொழில் — Vocation
தொழில் சார்புடையதாகி அமைத்தல் — Vocationalization
தொழில் தேர்வுக்கான வழி காட்டல் — Vocational guidance
தொழில் தேர்வுக்குதவும் சிறப்பாசிரியர் — Career Master

ந

நடைமுறைப் பயனுள்ள — Utilitarian
நம்பகம் — Reliability
நயத்திறன் — Tact

நா

நாகரிகம் — Civilization
நாடகம் — Drama
நாடாப்பதிவுக் கருவி — Tape recorder
நாட் குறிப்பேடு — Calendar
நாட்டம் — Aptitude
நாட்டுப்பற்று — Patriotism
நாட்டுப்புற — Rural

நி

நிருவாக அமைப்பு — Organisation
நிலப்படம் — Map
நிலையம் — Institution
நிறுவனங்கள் — Agencies

நு

நுண்ணறிவு — Intelligence
நுண்முறை — Technique

நூ

நூலகம் — Library
நூற்றுமானம் — Percentile

நெ

நெறிப்படுத்தல் — Orientation
நெறிபிறழ் நடத்தை — Delinquency

நே

நேர் அனுபவம் — Direct experience
நேர்மை — Sincerity

நோ

நோக்கம் — Aim, Purpose

ப

படமெறி கருவி — Projector
படித்தல் — Reading
படைப்பாற்றல் — Creativity
பண்பாடு — Culture
பண்புக்கூறு — Characteristic
பணியிடைப் பயிற்சி — In-Service Training
பதிவுப் புத்தகம் — Register
பத்திரிகை — Magazine, Periodical
பயணம் — Journey
பயிற்சி — Exercise
பயிற்றுமொழி — Medium of Instruction
பரிந்துரை — Recommendation
பரிவு — Sympathy
பலகை — Board
பல்துறைப் பாடங்கள் — Diversified Course
பல்தொழிற்பள்ளி — Polytechnic
பல்நோக்குப் பள்ளி — Multipurpose School
பள்ளி — School
பள்ளிகளின் இணைப்புத் திட்டம் — School Complex
பள்ளிசாராக் கல்வி — Non-Formal Education
பள்ளி நிருவாக அமைப்பு — School Organisation
பற்று — Sentiment

பா

பாட இணைச்செயல் — Co-curriculur activity
பாட ஏற்பாடு (கல்வி ஏற்பாடு) — Curriculum
பாடத்திட்டம் — Syllabus
பாடநூல் — Text Book
பாடப் புறச் செயல் — Extra-curriculur activity
பாடப்பொருள் — Subject matter
பாட வேளை — Period
பாடி வாழ்க்கை — Camp life
பார்த்துச் செய்தல் — Imitation

பி

பிரச்சினை — Problem
பிரிவு — Section
பிற்பட்ட — Backward
பின்பற்றல் — Imitation

பு

புதியன புனைதல் — Originality
புலப்பயிற்சி — Sense training
புவியியல் — Geography
புள்ளி இயல் — Statistics
புறவயம் — Objectivity

பே

பேட்டி — Interview

பொ

பொதுமைக் கருத்து — Concept
பொதுமொழி — Lingua Franca
பொருட்காட்சி நிலையம் — Museum
பொருத்தப்பாடு — Adjustment
பொருத்தப்பாடின்மை — Maladjustment
பொருளறிவு — Knowledge

போ

போதனைக் கருவிகள் — Teaching Aids

ம

மக்களாட்சி — Democracy
மதிப்பீடு — Evaluation
மதிப்பு — Value

மதிப்பெண்கள் — Marks, Scores
மதிய உணவுத் திட்டம் — Midday Meals Scheme
மனப்பான்மை — Attitude
மன்றம் — Council
மறுபயிற்சி — Retraining, Refresher Course
மனவுறுதி — Will
மனநிறைவு — Satisfaction

மா

மாணவரில்லம் — Hostel
மாதிரிப் பொருள் — Model
மாற்றல் முறை — Shift System
மானியத் தொகை — Grant

மீ

மீத்திறக் குழந்தை — Gifted child
மீள்நோக்கு — Review

மு

முடிவான — Ultimate
முதலுதவி — First Aid
முதியோர் கல்வி — Adult Education
முதிர்ச்சி — Maturity
முயற்சி — Effort
முரணாமை — Consistency
முழுமை — Perfection
முறைப்பட்ட — Formal
முற்கோள் — Postulate
முற்போக்குக் கல்வி — Progressive Education
முன்மாதிரி — Model
முன்னேற்ற அறிக்கை — Progress Report
முன்னுரிமை — Preference, Priority

மெ

மெய்-பொய்ச் சோதனை — True-False Test

மே

மேற்கோள் நூல்கள் — Reference Books
மேற்பார்வைப் படிப்பு — Supervised Study

மை

மையம் (உட்கரு) — Core
மையப் பாடங்கள் — Core Subjects

ர

ரசனை (அழகுணர்தல்) — Appreciation, Taste

வ

வரலாறு — History
வரிசை — Rank
வரையறை — Definition
வளர்ச்சி — Development

வா

வானவியல் — Astronomy
வானொலி — Radio

வி

விஞ்ஞான நோக்கு — Scientific attitude
விஞ்ஞானம் — Science
விதி — Rule, Law
விநாடி வினா — Quiz
விருப்பச் செயல் — Hobby
விருப்பப் பாடம் — Elective subject
விளக்கம் — Explanation
விளையாட்டு — Play
வினா வரிசை — Questionnaire

வீ

வீட்டு வேலை — Home work
வீணாதல் — Wastage

வெ

வெகுமதி — Prize
வெளியீடு — Expression

வே

வேலை — Work
வேலை அனுபவம் — Work experience
வேலை நிறுத்தங்கள் — Strikes
வேலையூடே பயிற்சி — In-Service Training
வேலை விவரம் — Job description
வேளாண்மை — Agriculture

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை-600 031

✻

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்
(Tamil Medium Books for Colleges)

1980 ஏப்ரல் முடிய 899 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

✻

மேலும் விரைவில் வெளிவருபவை

அகராதியியல்	—	1	நூல்
இயற்பியல்	—	3	,,
கணிதவியல்	—	1	,,
கல்வியியல்	—	2	,,
தாவரவியல்	—	1	,,
புவியியல்	—	1	,,
பொருளியல்	—	2	,,
மருத்துவவியல்	—	1	,,
வணிகவியல்	—	1	,,
வானியல்	—	1	,,

கிடைக்குமிடங்கள் :

1. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு
விக்ரம் சாராபாய் மின்னணு வளாகம்,
பலகை வாராவதி, திருவான்மியூர்,
சென்னை-600 041.

2. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
62, ஸ்பர்டாங்க்சாலை, சேத்துப்பட்டு,
சென்னை-600 031.

கிடங்கில் வாங்குவோர்க்கு 20% கழிவு வழங்கப்படும்
பாடநூல் நிறுவனத்தில் ,, 10% ,, ,,